பரிநாமம்

(Evolution of God)

10

தீர்ப்பான் இருளைப் பேர்ப்பான் கலியை
ஆர்ப்பாரமரர் பார்ப்பார் தவமே

பேரா.க.கிருஷ்ணமூர்த்தி

யாம் யார்

பேரா.க.கிருஷ்ணமூர்த்தி

கோயம்புத்தூர் - 18

காப்பு

காப்பு மறந்தறியேன் கண்ணனே என்றிருப்பன்
ஆப்பங் கொழியவும் பல்லுயிர்க்கும் - ஆக்கை
கொடுத்தளித்த கோனே! குணபரனே! உன்னை
விடத்துணியார் மெய் தெளிந்தார் தாம்.

தாய் தந்தை மலர்ப்பாதங்கள் சென்னி சூடுகிறோம்

சிவன், பிரம்மன், விஷ்ணு

எனும்

பெருந்தந்தையர் திருவடிகள் வணங்குகிறோம்

மலைமகள், கலைமகள், அலைமகள்

எனும்

பெருந்தாயார்கள் மலரடிகள் பணிகிறோம்

போற்றி!

தமிழ்த்தாய்

காவிரித்தாய்

இந்தியத்தாய்

பூமித்தாய்

மண்ணகத்தாய்

விண்ணகத்தாய்

பண்ணகத்தாய்

பூமியில் பாயும் புண்ணிய நதிகளே - உங்கள்

புகழ் பெருகட்டும்! பூமி செழிக்கட்டும்!

தமிழ்மொழி வாழ்த்து

1. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே.

2. வான மளந்த தனைத்து மளந்திடு
வண்மொழி வாழியவே.

3. ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
யிசைகொண்டு வாழி யவே.

4. எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே.

5. சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி யோங்கத்
துலங்குக வையகமே.

6. தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே.

7. வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே.

8. வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே.

குரு தாள் போற்றி!

ஸ்ரீராகவேந்திரர்

ஸ்ரீஅரவிந்தர்

ஸ்ரீரமணர்

தந்தையராய் பெருமிதமும் பெருமகிழ்வும் கொள்கிறோம்

மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி

ஜவஹர்லால் நேரு

பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கார்

மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்

சார்லஸ் டார்வின்

கார்ல் மார்க்ஸ்

இராமசாமி பெரியார்

சிறப்புத் தந்தையர்

லியோ தால்ஸ்தாய்

ரவீந்த்ரநாத் தாகூர்

வரதராசனார்

பொற்பாதங்கள் பணிகிறோம்

துப்புரவு எனும் பெரும்சேவை செய்யும்
அருந்ததிய சொந்தங்கள்!

உலகினைப் பொதுவாக்க அரும்பாடுபடும்
பொதுவுடைமைத் தோழர்கள்!

தமிழின் உயர்வுக்கும்
தமிழர் நல்வாழ்வுக்கும் அருந்தொண்டாற்றும்
தமிழ்த்தெய்வங்கள்!

மானுட மேன்மைக்கும்
மனிதகுல நன்மைக்கும்
மக்களின் வளமைக்கும்
உயிர்களின் செழுமைக்கும்
உலகின் அமைதிக்கும்
அரும்பணி ஆற்றும்
மனிதக்கடவுள்கள்!

சுதந்திரப் பள்ளு

ஆடுவோமே - பளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட் டோமென்று
(ஆடுவோமே)

எங்கும் சுதந்திர மென்பதேபேச்சு - நாம்
எல்லோருஞ் சமமென்ப துறுதியாச்சு
சங்குகொண் டேவெற்றி யூதுவோமே - இதைத்
தரணிக்கெல் லாமெடுத் தோது வோமே
(ஆடுவோமே)

நன்றி

திரு. நல்லகண்ணு

திரு. குமரி அனந்தன்

திரு. மருத்துவர் ராமதாசு

சிறப்பு நன்றி

திரு. கோபால்சாமி

நன்றி

திரு. ஸ்டாலின்

மருத்துவர். கிருஷ்ணசாமி

திரு. திருமாவளவன்

சிறப்பு நன்றி

திருமதி.சிவகாமி

திருமதி. பிரேமலதா

நன்றி

திரு. இளையராஜா

திரு. ரஜினிகாந்த்

திரு. கமல்ஹாசன்

சிறப்பு நன்றி

திரு. வைரமுத்து

நன்றி

திரு. பூமணி

திரு. ஜெயமோகன்

திரு. ராமகிருஷ்ணன்

சிறப்பு நன்றி

திரு. ஜோடி குருஸ்

நன்றி

தினமலர்

ஜுனியர் விகடன்

இந்தியா டுடே - தமிழ்

காலச்சுவடு

தீராநதி

தடம்

சொல்வனம் இணைய இதழ்

சிறப்பு நன்றி

தினத்தந்தி

தினமணி

ஆனந்த விகடன்

குமுதம்

பாக்யா

உஷா

ஹிந்து - தமிழ்

நன்றி

திரு. இரா. பாலகிருஷ்ணன், தலைமை ஆசிரியர். **திருமதி. கமல சரஸ்வதி,** ஆசிரியர், கே. என். நடுநிலைப் பள்ளி, தொப்பலாக்கரை.

திரு. பி. எஸ். பாலசுப்ரமணியன், பேராசிரியர், விலங்கியல் துறை, சைவ பானு ஷத்ரியர் கல்லூரி, அருப்புக்கோட்டை.

திரு. கே. சம்பத், பேராசிரியர், விலங்கியல் துறை, வ. உ. சிதம்பரனார் கல்லூரி, தூத்துக்குடி.

திருமதி. சி. எஸ். சியாமளா தேவி, பேராசிரியர், உயிர் வேதியியல் துறை, கிண்டி வளாகம், சென்னை பல்கலைக் கழகம்.

திரு. ச. சரவணன், தொப்பலாக்கரை.

திரு. என். கதிர்வேல், தாமரா எக்ஸ்போர்ட், மைலாப்பூர்.

திரு. எஸ். பலராமன், முதுநிலை ஆய்வுக்கூட உதவியாளர், உயிரியல் துறை, திருவண்ணாமலை.

நன்றி

அன்புத் தெய்வங்கள் திரு. மு. கருப்பையா, திருமதி. க. பொன்னம்மாள் மற்றும் உறவுமுறைச் சொந்தங்கள்.

அன்னையாக அன்பு காட்டும் அக்கா திருமதி. வி.செல்வி, தந்தை என அன்பு பாராட்டும் மச்சான் திரு. மு. விக்ரபாண்டி மற்றும் குடும்பத்தார்.

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய மாமா திரு. கு. பாலகிருஷ்ணன் மற்றும் குடும்பத்தார்.

பாசம் நிறைந்த அண்ணன் திரு. க. கணேசமூர்த்தி மற்றும் குடும்பத்தார்.

அன்பு நிறைந்த அண்ணன் க. ராஜபாண்டி மற்றும் குடும்பத்தார்.

அன்புள்ளம் கொண்ட அண்ணன் திரு. இ. முனியசாமி மற்றும் குடும்பத்தார்.

அன்பு நிறைந்த தம்பி க. பாண்டி மற்றும் குடும்பத்தார்.

அன்பும் பாசமும் நிறைந்த பெருமதிப்பிற்குரிய மாமா ஆலம்பட்டி திரு.வ. பாண்டியன், அத்தை திருமதி. பா. அம்சவள்ளி.

அன்பு மைத்துனர் திரு. பா. மணி குடும்பத்தார் மற்றும் உறவுவழிச் சொந்தங்கள்.

அன்பு மனைவி தமிழரசி. அன்பு மகன் அச்சுதன். அன்பு மகள் அக்ஷயா. அன்பு அனுஷ்யா.

தேவேந்திரகுல உறவின்முறைச் சொந்தங்கள்.

தொப்பலாக்கரை வாழ் சொந்தங்கள்.

திருமலைபுரம் வாழ் சொந்தங்கள்.

இராஜகோபாலபுரம் வாழ் சொந்தங்கள்.

வடபாதிமங்கலம்

பரளச்சி, அருப்புக்கோட்டை, தூத்துக்குடி, சென்னை.

தருமபுரி, காரைக்குடி, திருவண்ணாமலை, கோயம்புத்தூர்

சிறப்பு நன்றி - திருவில்லிபுத்தூர்.

முன்னத்தி ஏர்களான இலக்கியப் பிரும்மாக்களின் சுட்டு விரல் பற்றி உடன் நடப்பதில் அளவில்லாப் பெருமை.

சமர்ப்பணம்

அன்னையிலும் சிறந்த அன்னையான
தந்தையிலும் சிறந்த தந்தையான
மன்னனிலும் சிறந்த மன்னனான

அச்சுதக் கண்ணனுக்கு
வாசுதேவக் கண்ணனுக்கு
மயிலிறகுக் கண்ணனுக்கு
குழலிசைக் கண்ணனுக்கு

பிருந்தாவனக் கண்ணனுக்கு
வெண்ணெய் திருடிய கண்ணனுக்கு
கோபியர் கண்ணனுக்கு
கோவர்தனக் கண்ணனுக்கு

யசோதைக் கண்ணனுக்கு
ருக்மிணீ கண்ணனுக்கு
சுத்யபாமா கண்ணனுக்கு

கமலக் கண்ணனுக்கு
செல்லக் கண்ணனுக்கு
மாயக் கண்ணனுக்கு...

தர்ம நெறி வளரக் கண்ணன் துணை - மனிதர்

தன்னலம் மறந்திருக்கக் கண்ணன் துணை

கர்மங்கள் சீர்மை பெறக் கண்ணன் துணை - யோகம்

காணாதார் கண்டுகொள்ள கண்ணன் துணை

ஸ்ரீராமாய ராமபத்ராய ராமச் சந்த்ராய வேதஸே

ரகுநாதாய நாதாய சீதாய பதயே நமஹ!!

இன்று இனிய நாள். உலகத் தமிழர்களின் நன்னாள். வாழ்வின் பொன்னாள். சித்திரை ஒன்று. தமிழ் வருடப் பிறப்பின் துவக்க நாள். அனைவர் உள்ளங்களிலும், இல்லங்களிலும் மகிழ்ச்சி பொங்கும் திருநாள்.

மழை நாளும் கூட. பூமி குளிர்ந்தது எனச் சொல்ல முடியாவிட்டாலும் ஓரளவிற்கு நல்ல மழைதான். கோடையின் வெப்பம் சற்றேனும் குறையும். எங்கள் ஊர் மக்கள் இது நல்ல தொடக்கம் என முகமலர்ச்சி அடைந்ததோடு இந்த வருடம் நன்றாக இருக்கும் என்றும் பேசிக் கொண்டார்கள். அவர்களின் நம்பிக்கை இந்த ஜெய வருடத்தில் ஜெயிக்கட்டும்.

எங்கள் ஊரின் தற்போதைய பெயர் தொப்பலாக்கரை. பெயருக்கு என்ன அர்த்தம் என்று தெரியவில்லை. பரளச்சியில் மேல்நிலை படிக்கும் போது மாட்டுச்சாணம் அதிகம் இருக்கும் ஊர் என்று தமிழய்யா ஒருமுறை சொன்னார். உண்மைதான். நாங்கள் சிறுவர்களாக இருந்தபோது ஏராளமான மாடுகள் இருந்தன.

அழகிய ஊர். பிறந்து வளர்ந்த ஊரை குறைத்துச் சொல்ல யாருக்குத்தான் மனம் வரும். ஊரில் நிறையக் குளங்கள் இருக்கின்றன. ஊரின் நடுவே கொஞ்சம் பெரிய ஊரணி உள்ளது.

நல்ல மனிதர்கள் வாழ்ந்த, வாழும் எங்கள் ஊர், விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டத்திலும், திருச்சுழி சட்டமன்றத் தொகுதியிலும், இராமநாதபுரம் பாராளுமன்றத் தொகுதிக்குள்ளும் வருகிறது. பல சாதனையாளர்களையும், புனித ஆத்மாக்களையும் ஈன்றெடுத்த மண் என்ற பெருமை எங்களின் மாவட்டத்துக்கு உண்டு.

தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று யாம் ஊரில் இருந்து ஆண்டுகள் பலவாகிவிட்டன. பாராளுமன்றத் தேர்தல் காரணமாக முன்கூட்டியே எங்கள் கல்லூரியின் பணிநாட்கள் முடிந்து விட்டதால் இந்த வருடப் புத்தாண்டிற்கு ஊருக்கு வருவது சாத்தியமானது. யாம் கோயமுத்தூரிலுள்ள அரசு கலைக் கல்லூரியில் விலங்கியல் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றுகிறோம்.

எமக்கு நாற்பது வயது. சிறுவனாக, வாலிபனாக இருந்த போது மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டோட நாங்கள் கொண்டாடிய தமிழ் புத்தாண்டிற்கும், இப்போதைய புத்தாண்டு தினக் கொண்டாட்டத்திற்கும் மலைக்கும் மடுவுக்குமான வேறுபாடு போல் தெரிகிறது. உண்மையில் இந்த வருடம் இங்கு தமிழ் புத்தாண்டு கொண்டாடினார்களா என்பதே பெரிய கேள்விக் குறிதான். இன்பங்கள் கொடுக்கும், மங்கலங்கள் சேர்க்கும், நல்லன எல்லாம் தரும் இனிய தமிழ் புத்தாண்டு இன்று தான் என்றாவது தெரியுமா என்பது கூட சந்தேகமே. அப்படியும் சொல்ல முடியாது. அனைத்து வீடுகளிலும் தொலைகாட்சிப் பெட்டி இருப்பதால் ஒரு வேளை தெரிந்து வைத்திருப்பார்கள். மேலும் உலகத் தொலைக்காட்சி வரலாற்றில் முதல் முறையாக புதுபடங்கள் போடும் போதும், புத்தாண்டு சிறப்பு நிகழ்ச்சிகள் என்று போடும் போதும் புரியாமலா போகும்.

நமது நாட்டில் புதிய பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்படும் காலமது. தெருவில் எங்கள் வீட்டில் மட்டுமே தொலைக்காட்சி பெட்டி இருந்தது. அதனால் எம்மை டி.வி. தம்பி என நண்பர்கள் அழைப்பார்கள். அக்கா வீட்டு தொலைக்காட்சியை எங்கள் வீட்டில் வைத்திருந்தார்கள். வெள்ளிக்கிழமை ஒலியும் ஒளியும் காணவும், ஞாயிறு படம் பார்க்கவும் எங்கள் தெரு என்றில்லாமல் பக்கத்து தெரு ஆட்களும் கூடுவார்கள். அதிலும் எம்.ஜி.ஆர். படம் போட்டால் தொலைக்காட்சிப் பெட்டி தெருவில்தான் இருக்கும். ஜனங்கள் முகத்திலும், பேச்சிலும் மகிழ்ச்சி வெள்ளம் நிரம்பி வழியும். அது ஒரு வெள்ளந்தியான காலம் போலும். இப்போது எவ்வளவு விவரமாகி விட்டார்கள். தேர்தல் சமயங்களில் வரும் அரசியல்வாதிகளிடம் ஆரத்தி எடுத்த காசு வாங்குவதற்கே கூச்சப்பட்டவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர் தேர்தலுக்கு ஒரு ஓட்டுக்கு இரண்டாயிரம் ரூபாய் பணம் வாங்குகிறார்கள் என்றால் விவரமானவர்கள் தானே.

நாம் அரசியல் பேச வேண்டாம். நெஞ்சை அள்ளும் நம் தமிழ்ப் புத்தாண்டுக்கு வருவோம். அன்றைக்கெல்லாம் முதல் நாள் இரவே எல்லோர் வீடுகளிலும் பிதுக்குப்பயிறு ஊற வைத்து விடுவார்கள். மொச்சைப் பயறை இப்படிச் சொல்வதுதான் எங்கள் ஊர் வழக்கம். ஊற வைத்து, உறையைப் பிதுக்கி, பருப்பை மட்டும் எடுப்பதால் இப்படியான பெயர் வந்திருக்கலாம். எங்கள் அம்மா காலையிலேயே பெரிய மண் பானையில் சேமியா, ஜவ்வரிசி, தேங்காய் சேர்த்த தித்திப்பான பாயாசம் செய்து விடுவார்கள். பெரும்பாலும் யார் வீடும் பாக்கி இல்லாமல் பாயாசம் தயாராகிவிடும்.

புத்தாண்டுகளில் காலையில் தோசையும் இருக்கும். இட்லி எல்லாம் அவிக்க மாட்டார்கள். தோசைக்கு போட்டால் எல்லோரும் பேசிவைத்துக் கொண்டு போடுவார்கள். இல்லையேல் பங்கு கொடுத்து மாளாது. எல்லோரும் தோசை செய்தாலும் ஒவ்வொரு வீட்டுக்கும் கொடுத்து விடுவார்கள். எங்களைப் போன்ற சிறுவர்கள் ஓடி ஓடிச் சென்று கொடுத்து வருவோம். அங்கிருந்தும் இங்கு வரும். சுடத் தெரியாமல் தோசை கல்லைத் திட்டுவதும், மற்றவர்களிடம் வந்து புலம்புவதும் வேடிக்கையாக இருக்கும். சில வீடுகளில் இது கூடத் தெரியாதா என அடிதடியும் நடப்பதுண்டு. பெரும்பாலான வீடுகளில் தோசை சுடுவது ஆண்களாக இருப்பார்கள். வடை சுடுவதெல்லாம் நினைத்துப் பார்க்கவே முடியாது.

எங்களைப் போன்ற சிறுவர்கள், நாளைக்கு எங்கள் வீட்டில் தோசை என்று எல்லோரிடமும் சொல்லிச் சொல்லித் திரிவோம். தோசைக்கு ஆட்டுவது அதைச் செய்வதை விடக் குதூகலமாக இருக்கும். ஒன்றிரண்டு வீடுகளிலேயே ஆட்டு உரல் இருக்கும். தெருவின் மையத்தில் ஒரு பெரிய உரல் கிடந்தது. மதியத்தில் ஆரம்பித்து விடிய விடிய ஆட்டுவார்கள். மாவைத் தள்ளிவிடத் தெரியாமல் கையை நசுக்கிக் கொள்பவர்கள் இருப்பார்கள். பெரும்பாலும் இளவட்டங்கள் ஆட்டுவார்கள். முறைப் பெண்கள் மாவைத் தள்ளிவிட்டால் யார் அதிக நேரம் ஆட்டுவது என்று பெரிய போட்டியே நடக்கும்.

ஆட்டி முடித்த பின் ஆட்டுக்கல் மாவோடு ஒட்டியிருப்பதால் எளிதில் தூக்க வராது. படுவேகமாகச் சுற்றி லாவகமாக எடுக்க வேண்டும். வேகமாகச் சுற்றாமல் அப்படியே தூக்குவதற்கும் போட்டி நடக்கும். யாமெல்லாம் இந்தப் போட்டியில் குதித்ததுண்டு. குத்து உரலும் அருகிலேயே கிடக்கும். மாவாட்டும் சத்தமும், கம்பரிசி இடிக்கும் சத்தமும் காதில் விழுந்துக் கொண்டே இருக்கும். மாவாட்டும் இடத்தில் கேலிப் பேச்சும் ரகளையுமாகப் பொழுது போகும். காலையில் சட்னிக்கு ஆட்டுவது அதைவிடக் கூத்தாக இருக்கும்.

எங்கள் வீட்டில் முதல் தோசையை யார் சாப்பிடுவது என்ற பந்தயம் உண்டு. எங்கள் வீடு என்றால் அப்பா கருப்பையா, அம்மா பொன்னம்மாள், அக்கா செல்வி, அண்ணன் கணேசமூர்த்தி மற்றும் யாம் கிருஷ்ணமூர்த்தி. தோசை சுட நேரமாகி விட்டது என்று கோழி கூவும் முன்பே அம்மாவை எழுப்புவது யாமாகத்தான் இருக்கும். இரவெல்லாம் தூங்கினால் தானே.. விடியும் முன்பே நான்கைந்து தோசைகளை சாப்பிட்ட பின் சுகமாய்த் தூங்குவோம்.

விடிந்து, தேங்காய் சட்னியுடன் பல கருப்பு, வெள்ளை தோசைகளை உள்ளே தள்ளியபின் பிதுக்குப் பயிறு வேலை ஆரம்பமாகும். வேண்டுமென்றே அடுத்தவர் மேல் பிதுக்கிவிட்டு விளையாடுவதுண்டு. பருப்பை மஞ்சள் சேர்த்து துணியில் கட்டி தொங்கவிட்டு விடுவார்கள். ஊர் முழுக்க பயிறு வாசம் மணக்கும். தோலை அள்ளி மாட்டு ஊறலில் போட்டு விடுவார்கள். குழம்பு வைத்தபின் சூடாகக் குடிக்கவும் தருவார்கள்.

பெரும்பாலான புத்தாண்டுகளில் புதுத் துணிகள் போட்டதாக ஞாபகம். ஊரில் நிறைய காளை மாடுகள், மாட்டு வண்டிகள் இருக்கும். இப்போதுபோல் டிராக்டர் எல்லாம் வராத காலம். எமக்குத் தெரிந்து திருமலை ஐயங்கார் வீட்டில் நடவுத் தொழிலுக்கு ஒரு இயந்திரம் இருக்கும். சேறும் சகதியுமாக இருக்கும் நிலத்தில் அவரே அதை ஓட்டுவார்.

புத்தாண்டு தினத்தன்று மத்தியானத்திற்குமேல் ஊரிலுள்ள காளை மாடுகளையெல்லாம் ஏர்பூட்டி, ஊருக்கு வடக்கே வயலில் சிறிது நேரம் உழுவார்கள். ஊரின் கிழக்கிலுள்ள சோலைமேட்டிலும் உழுது யாம் பார்த்திருக்கிறோம். இதற்காக மாடுகளைத் தேய்த்துக் குளிப்பாட்டி, கொம்புகளில் வண்ண மைய் பூசி அலங்கரிப்பார்கள். கழுத்தில் பெரிய பெரிய மணிகள் பூட்டப்பட்டிருக்கும். மஞ்சனத்திக் குச்சியினால் ஆன தார்க்குச்சி செய்வதற்கு அன்று தச்சு ஆசாரிகளுக்குப் போதும் போதுமென்றாகி விடும். இருந்தாலும் பொறுமையாகச் செய்து கொடுப்பார்கள். அதில் மஞ்சள் தடவி எல்லோருக்கும் ஒன்று தருவார்கள். மாடுகள் இல்லாத எம்மைப் போன்ற சிறுவர்களெல்லாம் தெருவில் இருக்கும் மற்றவர் மாடுகளுடன் சேர்ந்து தார்க்குச்சி வைத்துக் கொண்டு வீரர்கள் போல ஏர்பூட்டச் செல்வோம்.

ஏர்பூட்டி இரண்டு மூன்று சால் உழுதபின் மாடுகளை அவிழ்த்து ஊரை நோக்கி விரட்டிக் கொண்டு ஓடி வருவார்கள். யார் வீட்டு மாடுகள் முதலில் வருகிறதென்று போட்டி. மாடுகளை விரட்டிக் கொண்டு ஓடி வரும் காளையர்களைப் பார்த்தால் யாருக்கும் வீரம் பொத்துக் கொண்டு வரும். மாடுகளுடன் ஓடி வரும் போது கீழே விழும் வீரர்கள், வருடம் முழுக்க கேலிப் பேச்சுக்கு ஆளாவார்கள்.

மாடு விரட்டு முடிந்தவுடன் ஆரத்தி எடுப்பது நிகழும். சிறுவர்கள், இளைஞர்கள் முதல் பெரியவர்கள் வரை யாரெல்லாம் முறைப் பையன் வருமோ அவர்களுக்கு முறைப் பெண்கள் குலவை இட்டு ஆரத்தி எடுப்பார்கள். ஆரத்தி

எடுத்தால் தட்டில் காசு போட வேண்டும். காசு என்றால் ஐந்து பைசா, பத்து பைசா, இருபத்தைந்து பைசா. ஐம்பது பைசா போடுவது அதிசயம். மாடு விரட்டு முடிந்து வரும் போதே தெருவில் தயாராக இருப்பார்கள். எமக்கெல்லாம் ஓரிருவரைத் தவிர அனைவரும் முறைப் பெண்கள்தான். காசு போடும் வரை விடமாட்டார்கள். ஓடி ஒளிந்து தப்பிக்க இயலாது. சாயங்காலம் ஆரம்பித்து இரவு வரை ஆண்களும் பெண்களும் ஓடிக்கொண்டும் ஒளிந்து கொண்டும் திரிவார்கள். எமது அம்மா, புத்தாண்டு ஆரத்திக் காசுகளை, நாத்து நட்ட காசு பிரிக்கும் போது கூட மறக்காமல் தருவதுண்டு.

இப்படியாக, புத்தாண்டை பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை மகிழ்ச்சியாகவும், கலகலப்பாகவும் கொண்டாடினார்களே தவிர, இப்போது போல் நல்லது கெட்டதுகளுக்கு சரக்கை அடித்து விட்டு சலம்புவதும் மட்டையாவதும் நடந்ததே இல்லை.

இன்றைக்கெல்லாம் வீடுகளில் மாடுகள் இல்லை. காளைமாடு என்றில்லை. பசுமாடு, எருமை மாடு என எந்த மாடும் இல்லை. ஒன்றிரண்டு பேர் வைத்திருக்கிறார்கள். பாலை நிறுவனத்தார் வந்து வாங்கிச் செல்கிறார்கள். ஊர் மக்கள், கடைகளில் வந்து பாக்கட் பால் வாங்குகிறார்கள்.

நாங்கள் சிறுவர்களாக இருந்த போது பள்ளிக் கூடம் விட்டு வந்தவுடன் ஒரு கூடை மாட்டுச் சாணமாவது அள்ளி குப்பையில் போட்டு விட்டே விளையாட முடியும். அவ்வளவு மாடுகள் இருந்தன. எவ்வளவு கவனமாக நடந்தாலும் மாட்டுச் சாணத்தில் கால் பட்டு விடும். இரவில் சொல்லவே வேண்டாம். எல்லோர் வீடுகளிலும் குறைந்தது ஒரு எருமை மாடாவது இருக்கும். நாங்களே பொன்னம்மாள் மகளிர் கூட்டுறவு பால்ப் பண்ணை என்ற பெயரில் ஒரு பண்ணை வைத்திருந்தோம். பண்ணையில் நிறைய மாடுகள் இருந்தன. அப்பா தான் கவனித்துக் கொண்டார் என்றாலும் கையெழுத்துப் போடுவதற்காக அம்மாவை தயாாப்படுத்தியது பசுமரத்தாணியாக மனதில் இருக்கிறது. அம்மாவுக்கு, சிலேட்டில் கையைப் பிடித்து எழுதச் சொல்லிக் கொடுத்தோம். தலைவர் என்ற முறையில் கணக்குப் புத்தகங்களில் கையெழுத்துப் போடும் போது, முகத்தில் ஒரு மகிழ்ச்சிப் புன்னகை தெரியும். படிக்காதவர் என்றாலும் மனக் கணக்காய் பல கூட்டல் கழித்தல்களைப் போட்டு விடுவார்.

தேவேந்திரர் வீட்டுப் பெண்கள்தான் நாற்று நடுவார்கள். எங்கள் ஊரில் குடும்பன், குடும்பமார் என்று சொல்வார்கள். சாதிச் சான்றிதழ்களில் பள்ளன் என்றிருக்கும். எமது அப்பாவை குடும்பா என்று கூப்பிடுவதுண்டு. வயதில் பெரியவர்கள், அந்தக் காலத்து ஆட்களென்றால் கருப்பு என்றுதான் அழைப்பார்கள். கருப்பையா என்று கூப்பிட்டால் ஐயா என்று வந்துவிடுமில்லையா. அட்டவணை இனத்தவரை ஐயா என்று கூப்பிட முடியுமா. அம்மாவை பொன்னம்மா என்று கூப்பிட மாட்டார்கள். பெரும்பாலும் பொன்னுதான். இவர்களைத்தான் மற்றவர்கள் ஐயா என்று சொல்லமாட்டார்களே தவிர, இவர்கள் மற்ற மேல் சாதி சிறுபையன்களைக் கூட ஐயா என்றுதான் அழைப்பார்கள். தேவர் வீட்டுப் பெண்களை ஆத்தா என்றும், மற்ற சாதிப் பெண்களென்றால் அம்மா என்றும் அழைப்பார்கள். ஆதிதிராவிடர்களும், தேவேந்திரர்களும் வயதில் பெரியவர்களை அண்ணன், அக்கா என அழைத்துக் கொள்வார்கள். அருந்ததியர்களை பெயரை சொல்லிக் கூப்பிடுவார்கள்.

எமது அப்பா கட்டிடக் கொத்தனார் வேலை செய்வார். மழைக் காலங்களில் கட்டிட வேலை இருக்காது என்பதால் நெல் வயல்களிலும், கரிசல் காடுகளிலும் மதிப்புக் களை பிடிப்பார். மதிப்புக் களையில் ஒரு குறுக்கம் களை எடுப்பதற்கு இத்தனை ஆள் என்று பேசிக் கொள்வார்கள். கடினமாக வேலை செய்து குறைந்த ஆட்களிலேயே களை எடுத்து விட்டால் அன்றைய கூலி அதிகமாகக் கிடைக்கும.

இப்படித்தான் நாங்கள் ஒருமுறை நெல் வயலில் களையெடுத்துக் கொண்டிருந்த போது யாரோ ஒருவர் சோலை மேட்டுப் பாதையிலிருந்து அழுது கொண்டே இந்திரா காந்தியை சுட்டுட்டாங்களாம் என்று கத்தினார். ஆணும் பெண்ணும் அழுது கொண்டே வீட்டிற்கு ஓடிவந்து விட்டார்கள். தெருவெல்லாம் அழுகை. எம்.ஜி.யாருக்காக எப்படியெல்லாம் அழுதார்கள் என்று சொல்லித்தான் தெரிய வேண்டுமா.

அப்பா மதிப்புக்களை கொத்தனாராகவும், அம்மா நடவுக் கொத்தனாராகவும் இருந்ததால் மழைக்காலங்களில் சம்சாரிகள் எங்கள் வீட்டிற்கு வந்துகொண்டே இருப்பார்கள். அருகிலிருக்கும் அகரத்துப்பட்டி, இராசலபட்டி ஊர்களிலிருந்தும் வருவார்கள். இதில் பால் பண்ணை ஆட்கள் வேறு. எங்கள் வீடு எப்போதும் கலகலவென்றிருக்கும்.

அது எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள் முதல்வராக இருந்த காலம். ஏழை எளிய மக்களெல்லாம் அவர் மேல் அளப்பரிய அன்பு வைத்திருந்தார்கள். அவர் அரியணை ஏறிய பின்புதான் கறவை மாடுகள் திட்டம் கொண்டு வந்ததாகத் தெரிகிறது. ஊரில் அகமுடையாரான திரு.கருணாவதரன் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தார். மனைவி பாப்பாத்தாள் அம்மையார். அப்போது தி.மு.க.வில் கூட்டுறவுத்துறை அமைச்சராக இருந்த தங்கப்பாண்டியன் அவர்களுக்கு சொந்தக்காரர் என பேசிக் கொள்வார்கள். இவரது மகன் இராசதுரையும் யாமும் ஒரே வகுப்பு. இருவரும் இனிய தோழர்கள். கருணாவதரன் அவர்களின் கையொப்பம் பூவு வரைந்தது போல் அழகாக இருக்கும். அமைதியானவராக இருப்பார். ஊரில் பெரிய பால்பண்ணை வைத்திருந்தார். மக்கள் அதிகாலையிலேயே எழுந்து விடுவார்கள். கறவை மாடுகளை பேருந்து நிறுத்தப் பகுதிக்கு ஒட்டிச் செல்வார்கள். பால் கறக்கும் முன் கறவைச் சட்டியை தலைகீழாகக் கவிழ்த்து பார்த்துக்கோங்க, பால் சட்டியில ஒண்ணுமில்ல என்று உரக்கக் சொல்வார்கள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் சொர் சொர் எனும் சத்தம் எல்லா இடங்களிலிருந்தும் வரும். இதேபோல் மாலையும் நடக்கும். பால்மாடுகளும் பால் பண்ணையும் வந்த பின்புதான் ஊர் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தது என்று சொன்னால் மிகை இல்லை. அதற்குமுன் களையெடுத்தால்தான் கஞ்சி என்ற நிலைதான். தோட்டம் வைத்திருந்த சில சம்சாரிகளைத் தவிர, அனைத்துச் சாதியினருக்குமே இது பொருந்தும்.

அன்று ஊரில் பெரிய வீடு என்றால் இராமச்சந்திரத் தலவர் வீடுதான். கருணாவதரன் அவர்களின் அண்ணன். இருவருமே உருவத்தில் பெரிய ஆட்களாக இருப்பார்கள். மனைவி சீனியாத்தாள் அம்மையார். இவர்களை சேர்வை, அம்பலக்காரர் என்றும் சொல்வார்கள். வீட்டின் மதில் சுவரே அரை பனைமரம் அளவுக்கு இருக்கும். கைப்பனியன் அணிந்து வீட்டின் நடுவே மரநாற்காலியில் அமர்ந்திருப்பார். மாந்த்ரீகமெல்லாம் தெரியும் என்பார்கள். மாடுகள் நிறைய இருக்கும். ஊரில் பாதிப்பேர் இவர்களின் நிலங்களிலும், தோட்டங்களிலும், வீடுகளிலும் தான் வேலை செய்வார்கள். இவர்கள் வீட்டின் முற்றத்தில் வண்டி வண்டியாக வெங்காயம் குவித்துக் கிடக்கும். வெங்காய வேரையும், தண்டையும் அரிவாள்மனை கொண்டு நறுக்க வேண்டும். சிறுவர்களான நாங்களெல்லாம் எத்தனையோ இரவுகள் வெங்காயம் வெட்டியிருக்கிறோம். வெட்டியதில் ஒரு பங்கு

நமக்குக் கொடுப்பார்கள். மல்லி மிதிப்பதும், கொண்டல் பயிறு, கடலை பிடுங்குவதும் இப்படியே நடக்கும்.

எம்மைப் போன்ற சிறுவர்களுக்குக் கடலை பிடுங்குகிறார்களென்றால் மிகவும் மகிழ்ச்சி. காட்டுக்குக் கடலை ஆயப்போனால் எவ்வளவு வேண்டுமானாலும் திங்கலாம். யாரும் ஒன்றுமே சொல்ல மாட்டார்கள். கூடுதலாக தட்டைப் பயறும் கிடைக்கும். இரண்டையும் பச்சையாகச் சாப்பிடுவதுதான் ருசியாக இருக்கும். தங்கர்பச்சான் அவர்களின் அழகி படத்தில் வருவதுபோல் காதில் கடலைத் தோடுகளையெல்லாம் போட்டுக் கொண்டு திரிந்திருக்கிறோம். அழகி படத்தின் பாடல் தொலைகாட்சியில் வந்தாலே எமது மனைவி கிண்டல் சிரிப்புடன் எம்மைப் பார்ப்பதுண்டு. அவரும் விலங்கியல் பேராசிரியர்தான். பெயர் தமிழரசி. எங்களுக்கு இரு குழந்தைகள். அச்சுதன் ஆறாவதும், அக்ஷயா ஐந்தாவதும் நடுவண் அரசுப் பள்ளியில் படிக்கிறார்கள். அங்கு தமிழ் கற்றுக் கொடுப்பதில்லை.

முப்பது வருடங்களுக்குமுன், எங்கள் ஊர் மண்ணில் விளைந்த எல்லாமே ருசியாக இருக்கும். யாம் ஐந்தாவது படிக்கும் போதிலிருந்தே அம்மாவுடன் சேர்ந்து களையெடுக்க, கத்திரிக்காய், வெண்டைக்காய், தக்காளி, மற்றும் மிளகாய் பறிக்கும் வேலைகளுக்குச் செல்வதுண்டு. அன்றைய தக்காளி அவ்வளவு சுவையாக இருக்கும். மதியச் சாப்பாட்டுக்கு தண்ணிக் கஞ்சி. வெஞ்சனம் இருக்காது. காட்டிலேயே கிடைக்கும் தக்காளி, வெங்காயம், மிளகாய் சேர்த்து கொஞ்சம் உப்பு போட்டு பிசைந்தால் வெஞ்சனம் தயார். தூத்துக்குடி வ.உ. சிதம்பரனார் கல்லூரியில் முதுநிலை படிக்கும் போது மதியத்துக்கு என்ன வெஞ்சனம் என்று ஒருமுறை நண்பிகளிடம் கேட்டு விட்டோம். திருதிருவென்று முழித்துக் கொண்டு அப்படியென்றால் என்னவென்று கேட்டார்கள்.

எங்கள் வீட்டில் பெரும்பாலும் குருணைச் சோறுதான். அரிசி விலை அதிகம் என்பதால் நல்லநாளுக்கு மட்டும்தான் அரிசிச் சோறு. கம்மங்கூழ், கேழ்வரகக் கூழ் எப்போதாவது இருக்கும். கேப்பங்கழியும் உண்டு. பனைமட்டையை வைத்துக் கிண்டுவார்கள். மட்டையோடு ஒட்டி இருக்கும் கழியை சூடாக பிய்த்துத் தின்பது அவ்வளவு சுகம். தொட்டுக் கொள்ள இனிப்பும், புளிப்பும் சேர்த்த ரசம் செய்வார்கள். சூடை கருவாட்டுக் குழம்பு வைத்தால் வயிறு புடைத்து விடும். எங்கள் வீடாவது பரவாயில்லை. மாமா வீட்டில் இரவுக்கும் கம்மங்கூழ்தான். பெயர் பாலகிருஷ்ணன். மாமா பிறந்தபோது என்ன பெயர் வைக்கலாமென்று

யோசித்தார்களாம். அன்று வீட்டில் பசுமாடும் கன்று போட்டிருந்ததால் பாலகிருஷ்ணன் என்று பெயர் வைத்தார்களாம்.

அம்மாவும் மாமாவும், அத்தையும், அப்பாவும் உடன் பிறந்தவர்கள். அன்றைய கால கட்டங்களில் நெருங்கிய சொந்தங்களுக்குள்தான் திருமணங்கள் நடந்திருக்கின்றன. மாமாவுக்கு நான்கு பெண்கள். ஒரு பையன். பெயர் கருணாமூர்த்தி.

எங்களின் குலதெய்வம் கருப்பசாமி என்பதால் எல்லோர் பெயருமே கருப்பசாமி என்றோ குருசாமி என்றோதான் இருக்கும். அப்பா கருப்பையா. பெரியப்பா பெரிய கருப்பையா. சித்தப்பா சின்னக் கருப்பையா. அப்பாவோடு பிறந்த அத்தைகள் குருவம்மாள், பெரிய கருப்பாயி, சின்னக் கருப்பாயி. அப்பாவின் பெற்றோர் முனியன், குருவம்மாள். அம்மாவைப் பெற்றவர்கள் குருசாமி, கருப்பாயி. பெரியம்மாவின் பெயரும் கருப்பாயி. முனியன் தாத்தாவின் அப்பா கருப்பணன். அவருக்கு முன் பெயர் தெரியவில்லை. கூரை வீட்டை இடித்து விட்டு ஓட்டு வீடு போடும் போது அப்பத்தா இறந்தார். யாம் ஐந்தாவது படித்துக் கொண்டிருந்தோம். அப்பத்தா பூர்வீகம் கமுதி பக்கமிருக்கும் மண்டலமாணிக்கம்.

ஒரு தலைமுறை இடைவெளியில் எங்கள் பெயர்கள் எத்தனை மாறி விட்டது கவனித்தீர்களா. இப்படியா பிள்ளைகளுக்குப் பெயர் வைப்பது என்று தாத்தாவை நாங்கள் கேலி பேசுவதுண்டு. அவருக்கு அசைக்க முடியாத சாமி பக்தி இருந்திருக்க வேணடும்.

எங்கள் ஊரில் எத்தனை சாமிகள் இருக்கிறார்கள் தெரியுமா. சாமிகள் இருக்கட்டும். அதற்கு முன்னால் எங்கள் ஊரின் சாதிகளைச் சொல்லி விட்டால் ஊரின் சாமிகளை நம்மால் மறக்க முடியாது.

தமிழ் நாட்டில் சாதிகளைப் பற்றிப் பேச முடியுமா. இங்கே ஒவ்வொரு நாளும் சாதியின் பெயரால் ஒரு சங்கம் ஆரம்பிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஒன்றுக்கும் உதவாத சிறு விஷயத்தைக் கூட ஊதி ஊதிப் பெரிதாக்கி குளிர்காய்பவர்கள் நிறைந்திருப்பதாகவும் கேள்விப்படுகிறோம். அதற்காக பேச வேண்டியதை பேச வேண்டிய நேரத்தில் பேச வேண்டிய இடத்தில் பேசாமல் இருக்க முடியுமா. நாம் கவனமாகப் பேசுவோம்.

இப்போதைக்கு எங்கிருந்து ஆரம்பிப்பது என்றுதான் தவிப்பாக இருக்கிறது. ஊரின் வடக்கிலிருந்து தெற்கா அல்லது தெற்கிலிருந்து வடக்காக ஆரம்பிப்போமா

என்று குழப்பம். இலக்கியங்களில் யாம் படித்திருக்கிறோம். பாதாதி கேச வருணனைகளை. நமது திருப்பாணாழ்வார் கூட ஸ்ரீரங்கநாதரை பாதத்திலிருந்துதான் வர்ணிக்கிறார்.

கருணை ஒளி மிக்கவனாய், பரிசுத்தனாய், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பேதமின்றி அனைவரையும் காப்பவனாய், உயர்ந்த மதில்களையுடைய திருவரங்கத்திலே கண்வளரும் எம்பெருமானின் திருவடித் தாமரைகளைக் காணும்போது அவை எம் விழிகளுக்குள் புகுந்ததுபோல் தோன்றியது என்றும் அண்டங்களுக்கெல்லாம் அரசனை, பூவுலகுக்கு அலங்காரமான ஸ்ரீரங்கத்தில் உறைபவனை, எமக்கு அமிர்தமாயிருப்பவனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாது என்றும் திருப்பாதங்களில் ஆரம்பித்து திருக்கண்களில் முடிக்கிறார். உடையவர் ஸ்ரீராமாநுஜருக்குப் பிரியமானவரும், பாணர் குலத்தில் பிறந்தவருமான நமது ஆழ்வார், ரங்கனை எப்படித் தரிசித்தார் என்பது தனிக்கதை. கதை இருக்கட்டும்.

வைணவர்களின் முதல் பதியான பெரிய பெருமாளும் தெற்கு நோக்கித் தான் கண் வளர்கிறார். சைவர்களின் பெரும் பதியான தில்லை நடராஜரும் தெற்கு நோக்கித்தான் பார்க்கிறார். தெற்கே அப்படி என்ன சிறப்போ தெரியவில்லை. ஒரு வேளை வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது என்பதற்காக, தெற்கை வாழ்வாங்கு வாழ வைக்க இருவரும் பார்க்கிறார்களோ. அவர்கள் பார்வை பட்டுத்தான் தெற்கில் பெரும் எழுத்தாளர்கள் அவதரித்திருப்பார்களோ.

தாம் எழுதிய சில நூல்கள் மட்டும் வெளிவந்து விட்டால் தமிழர்கள் தெளிவு பெற்று விடுவார்கள் என்றும், தமிழ்நாடே மாறிப்போய் விடும் என்றும் உறுதியாக நம்பிய மொழிஞாயிறு தேவநேயப் பாவணர் போன்ற தமிழறிஞர்கள் உறுதிப்படுத்தும் தெற்கில் இருந்த இலெமூரியா என்ற ஆதிமாந்தர்கள் தோன்றிய குமரிக் கண்டம் ஏன் அழிந்தது என்ற ஆழ்ந்த யோசனையில் தெற்கை நோக்குகிறார்களோ என்னவோ.

அவர்கள் எதற்கு வேண்டுமானாலும் நோக்கட்டும். நீண்ட நேரமாக இராஜகோபாலபுரத்திலிருந்து விடுதலைச் சிறுத்தைகளின் பாடல்கள் கேட்டுக் கொண்டே இருக்கின்றன. முதலிலேயே யாம் சொல்வதற்கு மறந்து விட்டோம். இன்று சட்ட மாமேதை அம்பேத்கார் அவர்களின் பிறந்த நாளும் அல்லவா. இந்த அற்புதமான புனிதர் மட்டும் தன்னலம் கருதாமல் உழைத்திருக்காவிட்டால்

இந்தியாவின் மக்கள் தொகையில் நான்கில் ஒரு பகுதியினரான அட்டவணை இனத்தவர் மற்றும் பழங்குடியினர் நிலைமை எப்படி இருந்திருக்கும் என்ற நினைப்பே நெஞ்சை வாட்டுகிறது.

இந்திய மக்களின் ஆட்சி உரிமையைப் பிரதிபலிப்பதும், இந்தியாவில் சனநாயகம் நிலைபெறப் பெரிதும் உதவுதுமான அரசியல் சாசனத்தைத் தலைமையேற்றுப் படைத்தது அண்ணலன்றோ. நல்ல நாளில்தான் பிறந்திருக்கிறார்.

அங்கே நாயக்கரும், ஆதிதிராவிடரும் இருப்பதால் சிறுத்தைகளால் பாட்டெல்லாம் போடமுடிகிறது. எங்கள் ஊரில் இப்படித் தைரியமாகப் போடமுடியாது. அப்புறம் சிங்கங்களுக்குப் பயந்து கரும்புக் காட்டுக்குள்ளும் நாடார் வீடுகளுக்குள்ளும், குழந்தைகளும், பெண்களும் ஓடி ஒளிய வேண்டியதிருக்கும்.

அந்த ஆண்டவன்மேல் பாரத்தைப் போட்டுவிட்டு நாம் தெற்கிலிருந்தே ஆரம்பிப்போம். எங்கள் ஊரில் தெற்கில்தான் அன்பானவர்கள் வாழ்கிறார்கள். படித்தவர்களும், அறிவானவர்களும், வீரமானவர்களும் நிச்சயம் சாக்கடையைச் சுத்தம் செய்ய மாட்டார்களில்லையா. மலத்தை ஒரு போதும் அள்ள மாட்டார்களல்லவா.

தேசப்பிதா காந்தி கழிவறையைச் சுத்தம் செய்வாராம். அறிவானவராக இருந்திருந்தால் தென்னாப்பிரிக்காவில் புகழ்பெற்ற வழக்கறிஞராகி, பல தங்க வைர சுரங்கங்களை வாங்கிப் போட்டிருப்பார். அவரது குழந்தைகளும், பேரக் குழந்தைகளும், அவர்களின் அனேகத் தலைமுறைகளும் உல்லாச வாழ்க்கையை அனுபவித்திருப்பார்கள். யாம் தேசப்பிதா எனத் தவறாகச் சொல்லி விட்டோமோ. யாரோ ஒருவர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் கேட்டதற்கு, அப்படி ஒன்றும் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கவில்லை என இந்திய அரசு பதில் சொன்னதாம். நமது மாண்புமிகு ஆட்சியாளர்களால் அவர் இப்பூவுலகின் பிதா என அறிவிக்கும் காலம் விரைவில் வரும்.

தெற்கில் மட்டும்தான் அன்பானவர்கள் இருக்கிறார்களா. எமக்கென்னவோ கிழக்கிலும் அப்படித்தான் என்று தோன்றுகிறது. கோயமுத்தூரின் பல உணவு விடுதிகளிலும் சாப்பாட்டு மேஜையைத் துடைப்பது, சாப்பிட்ட தட்டுகளை எடுப்பது, தரையை சுத்தம் செய்வது போன்ற வேலைகளைக் செய்வதெல்லாம் வடகிழக்கு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்தான். பெண்கள் அழகு நிலையங்களில் வேலை

செய்கின்றனர். அவர்கள் முகத்தில் அப்படி ஒரு அமைதி. அதிர்ந்து கூடப் பேசமாட்டார்கள் போலத் தெரிகிறது. தமிழர்கள் இத்தனை அறிவானவர்களா. சுத்த அறிவே சிவம் என்று சொல்லும் தமிழர்களால் இது போன்ற கீழ்த்தரமான வேலைகளைச் செய்ய முடியுமா. தமிழர்கள் உயர்வற உயர்மதி படைத்தவர்களன்றோ.

எங்கள் ஊரின் தெற்குக் கடைசியில்தான் அருந்ததியர்கள் குடியிருப்பு உள்ளது. நாங்கள் சிறுவர்களாக இருந்த போது ஊரில் இப்போது இருக்கும் சாக்கடைக் கால்வாய்கள் இல்லை. கால்வாய் வந்தவுடன் அதை சுத்தப்படுத்தும் பணியை இவர்களுக்குத்தான் கொடுத்திருக்கிறார்கள். நிலவில் தண்ணீர் இருக்கிறதென்று கண்டுபிடித்த விஞ்ஞானி மயில்சாமி அண்ணாத்துரை அவர்களின் புண்ணியத்தால் தமிழர்கள் நிலவுக்குச் செல்லும் போது இவர்களையும் மறக்காமல் கூட்டிச் செல்வார்கள். அங்கேயும் சுத்தம் பண்ண ஆள் வேண்டுமே. ரோபோக்களைக் காட்டிலும் இவர்களுக்கு செலவு கம்மி. தமிழர்கள் அறிவில் மட்டும் சிறந்தவர்களில்லை. பொருளாதாரத்திலும் புலிகள்தான். தமிழர்களே விழித்திருங்கள், பண்பாட்டைப் பேணுங்கள், தாய்மொழியைக் காப்பாற்றுங்கள் என்று சிலபேர் கரடியாய் கத்தி விட்டுப் போய்விட்டார்கள். விலங்கியல் பேராசிரியரென்பதால் சிங்கம், புலி, கரடி பற்றிப் பேசி விட்டோம். தவறாக நினைக்க வேண்டாம். அன்று அம்மணமாய் அலைந்து திரிந்த ஆதி குரங்கு பற்றியும் யாம் அலச இருக்கிறோம்.

நிலவில் தண்ணீரைக் கண்டு பிடித்த விஞ்ஞானிகள் எங்கள் ஊருக்கு வந்தால் திகைத்துப் போவார்கள். திகைப்பு எதற்கா. நிலவைத் தாண்டி வேறு புதிய கிரகம் எதற்காவது வந்து இறங்கி விட்டோமோ என்றுதான்.

அக்னி நட்சத்திரம் இன்னும் ஆரம்பிக்கவே இல்லை. அதற்குள் வெயில் கொளுத்துகிறது. மின்சாரம் வேறு பெரும் தொல்லை. ஒருமணி நேரம் உண்டு, ஒருமணி நேரம் இல்லை. உண்டு உண்டு. இல்லை இல்லை. இரவெல்லாம் விவசாயிகள் திட்டிக்கொண்டே பம்ப்செட் போடச் செல்கிறார்கள். வேறு வழி தெரியாத ஒன்றிரண்டு பேர் இன்னும் விவசாயத்தைக் கட்டி அழுகிறார்கள். வெளிநாடு போனோமா செட்டிலானோமா என்றில்லாமல் இதென்ன பிழைப்பு. ஒரு நாளைக்கு அரைக் குறுக்கம்கூட தண்ணீர் பாய்வதில்லையாம். அங்கலாய்க்கிறார்கள். அல்லாடுகிறார்கள்.

அவனை அடிக்கணும் இவனை உதைக்கணும் என்று பேசுகிறார்களேயொழியே வேறு ஒன்றும் அவர்களால் செய்ய முடிவதில்லை. பகலிலும் வேலை செய்து இரவெல்லாம் தூங்காமல் அலைந்து திரிவது பெரும் வேதனை. ஆலைபேசி மூலம் வீட்டிலிருந்தே மோட்டாரை இயக்கி அணைக்கும் தொழில் நுட்பம் எங்கள் கிராமத்திற்கு சீக்கிரம் வந்தால் நல்லதுதான். எதற்கும் அடுத்த சட்டசபை தேர்தல் வரை காத்திருப்பது நன்மை. இலவசமாய்க் கொடுத்தாலும் கொடுப்பார்கள்.

எமக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. கோடை வெப்பத்துக்கு நாங்களெல்லாம் கிணற்றிலேயே கிடப்போம். பதினோரு மணிக்குப் போனோமென்றால் திரும்பிவர எப்படியும் மூன்றுமணிக்கு மேலாகி விடும். நண்பர்களுடன் சேர்ந்து எத்தனை விதமான நீச்சல்கள், பல்ட்டிகள், வித்தைகள். தெருவுக்குக் கிழக்கே பாலம்மா கிணறு என்றிருக்கும். கிணறு முழுக்க நீர் நிரம்பிக் காணப்படும். மற்றதொரு பையன்கள் வரமாட்டார்கள். அவர்கள் ஊரணியில் ஆட்டம் போடுவார்கள். எங்கள் தெருக்காரர்கள் குளிப்பதற்கு ஊரணியின் கிழக்கே தனி படித்துறை இருக்கும். நாங்கள் அங்கே செல்வதில்லை.

தண்ணீர் இறைக்க மின்சார இயந்திரங்கள் வராத காலத்தில், இரண்டு பெரிய தூண் கற்களை கமலை இறைக்க வைத்திருப்பார்கள். அதில் ஏறி நீருக்குள் குதிப்பது, முன்பல்டி, பின்பல்டி, அப்படியே உக்கார்ந்து பத்மாசனத்தோடு இரு கால் பெரு விரல்களையும் பிடித்துக் கொண்டு விழுவது, ஓடிவந்து யார் அதிக தூரம் தாண்டுவது என்ற போட்டி, காக்காக் கம்பு விளையாட்டு, தொட்டுப் பிடித்து விளையாடுவது, தரைக்குப் போய் மண் அள்ளி வருவது, இரு அணிகளாகப் பிரிந்து கொண்டு போட்டிகள் வைப்பது, அதிக நேரம் யார் மூச்சுப் பிடிக்கிறார்கள் என்று பார்ப்பது, குதிக்கும்போது யாருக்கு தண்ணீர் மேலேயுள்ள தரையில் தெரிக்கின்றது என்ற போட்டி, யார் சத்தமேயில்லாமல் குதிக்கிறார்கள் என்று எத்தனை எத்தனை விதமான போட்டிகள். இவை போக திடீரென நண்பர்கள் பிடித்துத் தள்ளி விடுவது, தண்ணீரில் மிதப்பது, வண்ணத்துப் பூச்சி நீச்சல், பின்னோக்கி நீச்சல், லுங்கியை காற்று பலூன் போல் வைத்து மிதப்பது இப்படி.. ஒரு கிணற்றில் இல்லை. பல கிணறுகளிலும்.

சில கிணறுகளில் மோட்டார் அறைகள் கட்டி இருப்பார்கள். தோட்டக்காரர்கள் இல்லையென்றால் அதன் அறைக்கு மேல் ஏறிக் கிணற்றுக்குள்

குதிப்போம். பெரும்பாலும் யாரும் குதிப்பதற்குப் பயப்படுவதில்லை. பெண்களும் குதிப்பார்கள். யாமும் அக்காவும் திருமலைபுரம் டாக்டர் கிணற்றின் மாடியிலிருந்து சுமார் நாற்பதடி ஆழத்தில் கைகளை கோர்த்துக் கொண்டே குதித்திருக்கிறோம். அது ஒரு குதிக்கும் காலம்.

இப்போதும் அந்தக் கிணறுகளெல்லாம் இருக்கின்றன. குதித்தால் என்னாகும் தெரியுமா. ஒரு எலும்பு கூட மிஞ்சாது. ஓவ்வொரு கிணறும் அறுபதடி, எண்பதடி ஆழம். எட்டிப் பார்த்தாலே தலை சுற்றும்.

அப்போது கோடையிலும் கண்மாய்களில் தண்ணீர் இருக்கும். ஊரணியில் எப்போதும் நீர் இருந்து கொண்டே இருக்கும். யாம் பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் வரை இருமுறை மட்டுமே ஊரணி அழிந்திருக்கிறது. அருகாமை ஊர்களிலிருந்தும் மீன் பிடிக்க வருவார்கள். எங்கள் ஊரில் கண்மாய்களுக்கும் சாதிப் பெயர்கள்தான் வைத்திருக்கிறார்கள். பெயர்களைச் சொல்வதற்கு எமக்கு கூச்சமாக இருக்கிறது. உங்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காக ஒருமுறை சொல்வதில் தப்பில்லைதானே.

சக்கிலியன் கண்மாய் (கிழக்கு), வண்ணான் கண்மாய் (மேற்கு), ஐயர் கண்மாய் (வடகிழக்கு), செவக் கண்மாய் (வடமேற்கு) சடையன் கண்மாய் (தெற்கு) என்று எங்களூர் கம்மாய்களுக்குப் பெயர். செவக் கண்மாய் என்ற பெரிய கண்மாய்தான் ஊரின் முக்கிய நெல் பாசனப் பகுதி. இப்போதும் வயல்கள் இருக்கின்றன. நெல் பயிரிடத்தான் ஆட்களைக் காணோம். கண்மாயில் தண்ணீர் இல்லாமல் நெல் எப்படி விளையும்.

பெரிய கண்மாயிலும், வடக்குக் கண்மாயிலும் கெழுத்தி மீன்கள் அதிகமாக இருக்கும். மேற்குக் கண்மாயில் குரவை, அயிரை மீன்கள். ஊரணியில் ஜிலேபிக் கெண்டை பெரிதாகக் கிடைக்கும். கிழக்குக் கண்மாயில் பால் கெண்டைகள் துள்ளும். பாறைகளும், பொத்தல்களும் அதிகமிருப்பதால் கண்மாய் வற்றும் போது விலாங்கு மீன்களும் சிக்கும். எமக்கு எப்படித் தெரியுமா. நேரங்காலம் தெரியாமல் யார் தூண்டில் போட்டு மீன் பிடித்துத் திரிந்ததாம்.

தண்ணீரில் ஆட்டம் போட்டதைச் சொல்வதா, மீன்பிடித்துத் திரிந்ததை, கொளுத்தும் வெயிலில் மட்டைப்பந்து விளையாடியதை, மாடு மேய்த்ததை, விறகு பொறுக்கியதை, பருத்தி எடுத்து மகிழ்ந்ததை எதைச் சொல்லி எதை விடுவது.

எங்கள் கிராமம் தான் எத்தனை அழகானது. எத்துணை நல்ல மனிதர்கள் வாழ்ந்த மண் இது. எளிய மனிதர்கள். இனிய வாழ்க்கை.

சில நாட்களுக்கு முன் தெருவில் இரண்டு பெண்களுக்கிடையே சண்டை. வாய்த் தகராறு முற்றி, தலைமயிரை பிடித்து உருண்டு புரண்டு சண்டை. ஒருவர்கூட இவர்கள் கட்டிப்பிடி சண்டையை விலக்கவில்லை. வீட்டு வாசலில் நிற்பவர்கள் பக்கத்தில்கூட போகவில்லை. இதே போன்ற சண்டைகள் எமது சிறுவயதிலும் வந்திருக்கின்றன. கணவன் மனைவி சண்டை என்றால்கூட அத்தனை பேரும் ஓடி வந்து விடுவார்கள். கோலவர்ணத் தாத்தா, இருளப் பெரியப்பா போன்றவர்கள் யாராவது சண்டைபோட்டால் தாங்கமாட்டார்கள். பக்குவமாகச் சொல்லி சமாதானப் படுத்துவார்கள். அப்போதிருந்தவர்களும் உமெக்கெல்லாம் என்ன தெரியும் என்றோ உம் வேலையைப் பார்த்துக் கொண்டு போம் என்றோ அக்கிரமாகப் பேசவும் மாட்டார்கள்.

ஆசையாக இருக்கிறது. எங்கள் ஊர் மீன்களைப் பற்றி மட்டும் கொஞ்சம் கூடுதலாகச் சொல்லிக் கொள்ளட்டுமா. தவிரவும், எங்கள் ஊர் பழம் பெரும் பாண்டி நாட்டைச் சேர்ந்ததல்லவா. ஊரில் அனைத்துச் சாதியிலும் பாண்டி, பாண்டியம்மாள், முத்து, முத்துச்சாமி, முத்தம்மாள், மீனா, மீனம்மாள் போன்ற பெயர்கள் இருக்கின்றன. எனினும் தேவேந்திரர்கள் இன்றும் இப்பெயர்களை அதிகமாக வைத்திருக்கிறார்கள் போல் தெரிகிறது.

நடுவண் அரசுப் பள்ளி பாடப்புத்தகத்தில் நாடார்கள் பற்றிய சர்ச்சையில் நமது முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டதை நாம் மறந்திருக்க மாட்டோம். நாடார்கள் ஆண்ட பரம்பரையென்றும், மூவேந்தர்களின் வழித் தோன்றல்கள் அவர்கள்தானென்றும் நீள்கிறது அறிக்கை. நாடார்களே இந்த நாட்டை ஆண்டிருக்கட்டும், இனியும் அவர்களே ஆளட்டும்.

நிச்சியமாக அப்போதிருந்த தமிழர்களை மொகலாயர்களோ, நாயக்கர்களோ, மராத்தியர்களோ, ஆங்கிலேயர்களோ, அரசாண்டிருக்க முடியாது. ஆரியர்கள் எதாவது அரசாண்டு தொலைத்திருந்தால்தான் உண்டு. அதுவும் வீரத்தால் அல்லாமல் சூழ்ச்சி செய்தே நம்மை ஆண்டிருப்பார்கள். ஆரியச் சூழச்சி.

கிரேக்கர்கள், ரோமானியர்கள், எகிப்தியர்கள், அராபியர்கள் வந்திருப்பதற்கான வாய்ப்புக்களும் உண்டு. நம் பழந்தமிழ் நாட்டோடு இவர்கள் வணிக உறவு கொண்டிருந்ததை, இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், நாணயங்கள்

இன்றும் நமக்கு ஆதாரங்களாகச் சுட்டுகின்றன. வணிகம் செய்ய வந்தவர்கள் எப்படி நாடாண்டார்கள் என்பதும் நமது நேற்றைய சரித்திரம்.

நம் தலைமுறை மக்களே இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டால் என்ன என்ற மனநிலையில் இருக்கும் போது பழங்காலத்தில் நம்மை யார் ஆண்டார்கள் என்ற சர்ச்சை நமக்கெதற்கு.

எமது வருத்தமெல்லாம் தேவர்கள் மீதுதான். எங்கள் சிறுவயது முதலே நாங்கள் கேட்டு வளர்கிறோம். மூவேந்தர்களுமே இவர்கள்தான் என்று விடாமல் பாடல்கள் போடுகிறார்கள். இவர்கள் வீட்டு முக்கிய நாட்களிலும், திருவிழாக்களிலும், சினிமாப் பாடல்களை விட இப்படியான பாடல்களே அதிகம். அதிலும் தேவருக்கு ஊரணிக்குள் சிலை வைத்தபின் வேறு பாடல்களே போடுவதில்லை. வள்ளி திருமணம் நாடகம் போடும் போது முருகனையே தேவர் பாடல்கள் பாடவைப்பார்கள். தம் சாதிப் பெருமை பற்றி, மூவேந்தர்களாய் தமிழினத்தை ஆண்டதை, வீரத்தை பறை சாற்றும் பாடல்கள். முக்கியமாக முத்துராமலிங்கத் தேவரின் அருமை பெருமைகள்.

நாடார்களே இந்த மண்ணையும் மக்களையும் ஆண்டவர்கள் என்று சொன்னபோது எப்படிச் சொல்லாமென்று கொதித்தெழுவார்கள் என்று பார்த்தால் ஒன்றையும் காணோம். அம்மா சொன்னதால் சும்மா இருந்தார்களா அல்லது அம்மா ஆதாரமில்லாமல் சொல்லமாட்டார்கள் என்று நினைத்தார்களோ தெரியவில்லை. அம்மாவின் கண்ணசைவிற்கு எவ்வளவு மரியாதை கொடுப்பார்கள் என்பதும் நாடறிந்த உண்மையாயிற்றே.

ஒரு வேளை மூவேந்தர்களும் தேவேந்திரர்கள் என்று சொல்லி இருந்தால்.. நிச்சயம் எதிர்ப்பு வலுத்திருக்கும். இரண்டு மாதங்களுக்கு முன் மாசித் திருவிழாவின் போது தேவேந்திரர்கள், தியாகி இமானுவேல் சேகரன் பாடல்கள் போட்டிருக்கிறார்கள். இரண்டு பாட்டுகளுக்குள்ளாகவே தேவர் ஆட்கள் ஒலி பெருக்கி போடும் இடத்திற்கே வந்து விட்டார்களாம். யாருடா போடச் சொன்னது என்று அதட்டியிருக்கிறார்கள். இருந்த இளவட்டங்கள் பயந்து விட்டார்கள். பிறகென்ன. அத்தோடு ஒலிபெருக்கியே போடவில்லை.

இதற்கு இரண்டு மாதங்களுக்கு முன், தேவேந்திரர் குல பெருமை சொல்லும் பனியனை அணிந்த பையன் ஊருக்குள் சென்றிருக்கிறான். தேவர் சிலை தாண்டித்தான் பேருந்து நிறுத்தம் செல்ல வேண்டும். இப்படியான பனியன் அணிந்து

இந்தப் பக்கம் வரக்கூடாது என்று எச்சரித்திருக்கிறார்கள். மறுபடியும் இந்தப் பையன் அந்தப் பனியனோடு சென்றிருக்கிறான். அடித்து உதைத்திருக்கிறார்கள். அதிலும் படித்த, படித்துக் கொண்டிருக்கும் சிறு பையன்கள்தான் அடித்திருக்கிறார்கள். தேவர்கள் அதிகமாகவும் தேவேந்திரர்கள் குறைந்த எண்ணிக்கையிலும் இருப்பதால் அவர்களைப் பகைத்துக் கொண்டு ஊரில் தொடர்ந்து வாழ முடியாதல்லவா. காவல் நிலையத்தில் சமாதானம் முடிந்து விட்டது. வழக்கு, வம்பு ஒன்றும் இல்லை.

அனைத்து அரசியல் கட்சிகளிலும் அவர்கள் ஆட்களே இருப்பதாகவும், போன்போட்டே காரியத்தைச் சாதித்து கொள்கிறார்களென்றும், காவல் நிலையங்களில் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்றும் வருத்தப்பட்டார்கள். அது உண்மையும் கூட.

இது போன்றதொரு சாதிச் சண்டையில் யாமும் ஒருமுறை சிக்கிக் கொண்டு தவித்தோம். அதில் அடிப்பட்ட எமது இனிய நணபர் வேதநாயகம் சில வருடங்களுக்கு முன்பு மாரடைப்பால் இறந்து விட்டார்.

யாம், அருப்புக்கோட்டை சைவ பானு ஷத்திரிய நாடார் கல்லூரியில் படித்த போது காந்திபுரத்தில் இருந்த அரசினர் மாணவர் விடுதியில் தங்கி இருந்தோம். அவை என்றும் மறவா இனிய நாட்கள். சிறப்பான கல்லூரி, தகுதிமிக்கப் பேராசிரியர்கள், கலகலப்பான விடுதி. இன்று பள்ளிக்கூட மாணவர்களுக்கான விடுதிக் கட்டிடமே ஓரளவிற்கு சிறப்பாக இருக்கிறது. அன்று எங்கள் விடுதி இரண்டு பெரிய அறையும் ஒரு சிறிய அறையும் கொண்ட ஆஸ்பெஸ்டாஸ் தகடு போட்ட கொஞ்சம் பெரிய வீடு. தேவாங்கர் கல்லூரி மாணவர்களும் இருப்பார்கள். எல்லோரிடமும் கல்லூரி சென்று வர மிதிவண்டிகள் இருக்கும். விடுதியில் ஐம்பது மாணவர்கள் இருந்தோம். அட்டவணையினருக்கான விடுதி என்பதால் மற்ற சாதி மாணவர்கள் குறைவாகவே இருப்பார்கள். சிலர் அறை எடுத்துத் தங்கிக் கொண்டு சாப்பிட மட்டும் வருவார்கள். இறுதியாண்டில் வேதநாயகமும் இந்த விடுதியில் தங்கினார்.

எங்கள் ஊரிலிருந்து நான்கு பேர் விடுதியில் இருந்தோம். யாம், எமது உறவினரான ரத்தினசபாபதி விலங்கியலும், தேவரினத்தைச் சேர்ந்த கண்ணன் வரலாறும், விஸ்வகர்மாவான விவேகானந்தன் கணிதமும் படித்தோம்.

இதில் கண்ணனும் யாமும் சிறு வயதிலிருந்தே நல்ல நண்பர்கள். எங்கள் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து எத்தனையோ நாட்கள் இருவரும் படித்திருக்கிறோம். இயற்பியல் தேர்வுக்கு இரவெல்லாம் படித்தோம். மட்டை பந்து விளையாட ஆரம்பித்த பின் ஒன்றாகவே திரிவோம். அவர்கள் வீட்டுக்கும் யாம் செல்வதுண்டு. அன்பு பாராட்டுவார்கள். நிறைய மாடுகள் இருக்கும். அப்பா குருசாமித் தேவர். சுண்டக்காத் தேவர் எனக் கூப்பிடுவார்கள். அம்மாவின் பெயர் பூச்செண்டு. கண்ணனும், கிருஷ்ணனும் மாடு மேய்ந்துத் திரிந்தோம்.

எங்கள் ஊரின் வடக்கு எல்லையில் இறங்கு முத்தம்மன் கோவில் இருக்கிறது. இக்கோயிலின் திருவிழாவை ஆடி மாதக் கடைசி செவ்வாயன்று சிறப்பாகக் கொண்டாடுவார்கள். அதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே முளைப்பாரி போட்டு விடுவார்கள். எமது அம்மா இரண்டு வருடங்களுக்குமுன், இது போன்றதொரு முளைப்பாரி போடும் நாளில்தான் இறந்தார். கணையக் கல்லீரல் புற்று நோய்.

ஊரார் எல்லோரும் சேர்ந்து ஆடித் திருவிழா கொண்டாடினாலும் அருந்ததியர், ஆதி திராவிடர், தேவேந்திரர், நாடார் மற்றும் நாயக்கர் சமூகங்களைச் சேர்க்க மாட்டார்கள். எங்கள் ஊரில் பல சாதிகள் உண்டு. கொண்டயண்கோட்டை மறவர் என தங்களைச் சொல்லிக் கொள்ளும் மறவர், அகமுடையார், பிள்ளைமார், ஐயர், தச்சு, இரும்பு ஆசாரிகள், தெலுங்கு பொற்கொல்லர், பூசாரிகள் போன்றவர் மற்ற சாதியர். பெருமாள் கோவில் பூசாரியாக கன்னடம் பேசும் கவுண்டர் குடும்பத்தார் இருக்கிறார்கள். செட்டியார்கள் முன்பு இருந்ததாகச் சொல்வார்கள். தற்போது ஊரில் இல்லை. வெளியூர்களில் தங்கியிருக்கும் செட்டியார்கள் இறங்கு முத்தம்மன் கோவிலில் சிறப்பாக திருவிழாக் கொண்டாடுவார்கள். படங்கள் போட்டும் பார்த்திருக்கிறோம். வெளியூரிலிருந்து வந்து தங்கிய கோனார்கள் குடும்பமும் சில வருடங்கள் இருந்தது.

முஸ்லிம்கள் இல்லை. யாம் சிறுவனாக இருந்தபோது, எங்கள் வீட்டில் அபிராமம் பாத்திமா டீச்சர் தங்கி இருந்தார். இப்போது நினைத்தாலும் ஆச்சரியமாக இருக்கிறது. கிராமப்புற பெண்கள் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கோரைப்பாய் முடையக் கற்றுக் கொடுக்க வந்தார். அம்மாவை பிடித்துப்போக, எங்களுடனேயே ஒன்றாகத் தங்கினார். எப்போதும் சிரித்த முகமாய் இருப்பார். சிவப்பாக கொஞ்சம் குண்டாக இருப்பார். எம்மை டீச்சருக்கு நிரம்பப் பிடிக்கும். கறி

சமைத்துக் கொடுப்பார். ஆனால் சாப்பிட மாட்டார். பரோட்டவெல்லாம் செய்து கொடுத்திருக்கிறார். டீச்சர் எமக்குக் கொடுத்த முப்பரிமாணத்தில் மெக்கா மசூதி தெரியும் கண்ணாடி ஸ்கேல் அத்தனை அழகு. எமது பெற்றோர்களை அபிராமம் அழைத்து சிறப்பாகக் கவனித்து அனுப்பி இருக்கிறார்கள். அவர்கள் வீடு பெரிய வீடாம். எப்படித்தான் இங்கு தங்கி நம் சாப்பாட்டை சாப்பிட்டார்களோ என்று ஒரே வியப்பு. எம்மை அழைத்துச் செல்லாததற்கு கோபப்பட்டார்களாம்.

ஊரில் திருமலைச்சாமி, கோபால்சாமி, மணிச்சாமி, சீனிச்சாமி மற்றும் கோவிந்தசாமி என ஐயங்கார் குடும்பங்கள் இருந்தன. எல்லோருக்கும் தோட்டங்கள், நிலங்கள் இருக்கும். அப்பணசாமி ஐயங்காரிடம் எமது மாமா குத்தகைக்குத் தோட்டம் பார்த்தார். கம்பரிசி வயலில் குருவி விரட்ட நாங்கள் செல்வோம். ஒரு மரத்தில் தூக்கணாங் குருவிகள் மரம் கொள்ளாத அளவிற்கு கூடுகள் கட்டி இருக்கும்.

எங்கள் ஊர் அந்தணர்கள் நம்மாழ்வார் பிறந்த ஆழ்வார் திருநகரியிலிருந்து வந்தவர்கள் என சமீபத்தில் எமது தந்தை சொன்னார். திருமலைச்சாமி ஐயங்கார் வைணவ நாமம் போட்டிருப்பார்கள். மாமாவோடு சேர்ந்து இவர்கள் வீட்டிற்கு பல முறை சென்றதுண்டு. ஐயங்கார் வீட்டோடு மாமா நெருக்கமாக இருப்பார். பலகாலம் இவர்கள் வீட்டில்தான் வேலை பார்த்தார். நேரக்கணக்கெல்லாம் இருக்காது. இரவில் காவல் பணியும் தொடரும். ஐயங்காருக்கு ஏராளமான நெல் வயல்கள் இருக்கும். எமது அம்மாவை பொன்னு என்றும் பொன்னிக் கிழவி என்றும் கூப்பிடுவார். இவரது மூத்தமகன் அப்பணசாமி ஐயங்கார். டாக்டர் என்பார்கள். ஊசி போடுவார். சித்த பிரமை பிடித்தவர்களையெல்லாம் குணப்படுத்துவார். ஊரணியில் நீர் இறைத்து குடம், குடமாகத் தலையில் தொடர்ந்து ஊற்றிக் கொண்டே இருப்பார்கள். தலையில் பச்சிலைகளைத் தேய்த்து சில பேரைக் கட்டியெல்லாம் போட்டிருப்பார்கள். இளைய பையன் இராமர் சாமி. திடீரென்று குடுமி வைப்பார். மொட்டை போடுவார். எல்லோரையும் மிகவும் மரியாதையாகப் பேசுவார். எம்மை ஒரு முறை மதுரை பெரியார் பேருந்து நிலையத்தில் பார்த்து விட்டு அக்கறையோடு விசாரித்தார். பேருந்து நடத்துனராக இருக்கிறார். அப்பணசாமி ஐயங்கார் மகன் மாதவன். ஒரு தங்கையும் தம்பியும் இருந்தார்கள்.

திருவேங்கடமணி என்ற மணிச்சாமி ஐயங்கார் பரளச்சியில் ஆசிரியராக இருந்தார். இவரது பையன் ஸ்ரீதர் எங்கள் வயதென்பதால் கலகலப்பாகப் பேசுவார்.

மணிச்சாமி மனைவி லட்சுமி அம்மையார். இவர்களது பெண் பூமா, மருத்துவ நலப் பணியாளராக இருந்தார். கர்ப்பிணிப் பெண்களுக்கு ஊசி போடுவார். சித்ரா, ராணி, ராதிகா எனப் பெண்கள் இருந்தார்கள்.

கோபால்சாமி எனும் கோபாலகிருஷ்ண ஐயங்கார் வங்கி மேலாளர். இவரை மாமரத்துச் சாமி என்பார்கள். தோட்டத்தில் பெரிய மாமரம் இருக்கும். இவரின் மகள் தான் எங்களது நான்காம் வகுப்பு ஆண்டாள் டீச்சர். இவரது மகன் சேஷாத்ரி அவர்கள் ஒப்பந்தப் பணிதாரராக இருக்கிறார்.

சீனிச்சாமி ஐயங்கார் புரோகிதம் செய்வார். எல்லோரிடமும் சகஜமாக பழகுவார். திருச்செந்தூர் முருக பக்தர்களுடன் சேர்ந்து ஆட்டம் பாட்டம் என்று தூள் கிளப்புவார். சீனிச்சாமி மனைவி பெயர் கோதை நாச்சியார். இவர்களுக்கு இரண்டு பெண்களும் ரவி என ஒரு மகனும் உண்டு.

ஊரின் கிழக்கே இவர்களது வீடுகள் இருக்கும். நீளமான வீடுகள். இப்போது ஊரில் ஒரு குடும்பமும் இல்லை. அப்பண்ணசாமி அவர்களைத் தவிர மற்றவர்கள் வீடு, தோட்டங்களை விற்று விட்டதாகத் தெரிகிறது. தேவர்கள் குடியிருக்கிறார்கள்.

கோபால்சாமி ஐயங்கார் பெண்ணை தேவரினத்தைச் சேர்ந்த மலைராஜன் அவர்கள் காதல் மணம் செய்திருக்கிறார். கணவன், மனைவி இருவருமே ஊராட்சி மன்றத் தலைவர்களானது பெருமைக்குரியது. முன்பு சுதாவாக இருந்தவர் தற்போது லெட்சுமியாகப் பெயர் மாற்றம் பெற்றுள்ளார்.

இந்த காதல் ஜோடியைப் போல் நாங்கள் எங்களூர் பள்ளியில் படிக்கும் போது இன்னொரு ஜோடி காதல் புறாக்களையும் பார்த்து சிரித்துக் கொள்வோம். காலையில் பள்ளிக்குப் போனபின் எல்லோரும் வராண்டாவில் உட்கார்ந்து வாய்ப்பாடு சொல்ல வேண்டும். இது கட்டாயம். அதன் பின் தான் காலை வணக்கம் தொடங்கும்.

எங்கள் பள்ளி காமராஜர் காலத்துக்கு முன்பிருந்தே இருக்கிறது. முதலில் ஐந்தாவது வரையிலும் இருந்திருக்கிறது. தற்போது எட்டாம் வகுப்பு வரையிலும் உள்ளது. யாம் படித்தே நாற்பது வருடங்களாகிறது. அரைநூற்றாண்டு தாண்டியும், இன்றுவரை எட்டாவதிலேயே இருப்பது உலகத்திலேயே எங்களூர் பள்ளி மட்டுமாகத்தான் இருக்கும். தான் வளராவிட்டாலும் பள்ளிக்கூடத்தில் படித்த நாங்களெல்லாம் வளர்வது பள்ளிக்கும் பெருமைதானே.

எமது வாழ்வை வளமாக்கிய எங்கள் பள்ளியின் அனைத்து ஆசிரியப் பெருமக்களின் பாதம் தொட்டு வணங்குகிறோம். பாலகிருஷ்ணன் சார், கமல சரஸ்வதி டீச்சர் தம்பதிகள் எம்மீது பேரன்பு கொண்டவர்கள். ஆசிரியர் கற்றுத் தந்த ஆங்கிலம் சிறப்பானது. தினமும் இருபது புதிய வார்த்தைகளை எழுதிக் காண்பிக்க வேண்டும். படிப்பு விசயத்தில் கண்டிப்பானவர். வகுப்பெடுக்கும் போது மகிழ்ச்சியான மனநிலையில் இருப்பார். காலை வணக்கத்தின் போது மாணவர்களை ஊக்குவிக்கும் விதமாகப் பேசுவார். எட்டாம் வகுப்பில் மாணவர்களை வீட்டிற்குக் கூட்டிப் போய் தொலைக்காட்சியில் மட்டைப் பந்து போட்டியையும் காண்பித்தார். முதன் முதலாகப் பார்த்த அந்த மட்டைப் பந்து போட்டியும் அந்தச் சத்தமும் மறக்க முடியாதவை.

டீச்சர் அமைதியானவர். கணிதம் அருமையாகச் சொல்லிக் கொடுப்பார்கள். யாம் பாடங்களை மனப்பாடமாக ஒப்பிக்கும் போது சிரமப்படும் சமயங்களில் மிகுந்த பரிவுடனும், தாயுள்ளத்துடனும் எம்மை ஊக்குவிப்பார். யாம் ஒன்பதாம் வகுப்பில் சேர்ந்து கொஞ்சம் நாட்களிலேயே பள்ளிக்குச் செல்ல மறுத்து விட்டோம். எம்மை வீட்டிற்கு அழைத்து, யாம் எதிர்காலத்தில் மிகச் சிறப்பாக வருவோம் என இருவரும் ஆலோசனைகள் வழங்கினார்கள். ஆசிரியர்களது இளைய மகன் சுகுமார் அவர்கள், பள்ளியின் தற்போதைய தலைமையாசிரியர். மிகச் சிறப்பான அர்ப்பணிப்பு உணர்வோடு மாணவர்களுக்கு வழிகாட்டுவதாக ஊரில் பேசிக் கொள்கிறார்கள்.

முதன் முதலில் அஆ சொல்லிக் கொடுத்தவர் மேரி டீச்சர். முதல் வகுப்பு ஆசிரியர். சொந்த ஊர் முடிமன்னார்கோட்டை. எங்கள் தெருவில் குடியிருந்தார்கள். மிகவும் அன்பான ஆசிரியர். கைகளைப் பிடித்துக் கொண்டு ஒவ்வொருவருக்கும் எழுத கற்றுக் கொடுத்தார். தெருவில் டீச்சருக்கு நல்ல மரியாதை கொடுப்பார்கள். மகன் ரோபி எமது வயதென்பதால் ஒன்றாகச் சேர்ந்து விளையாடுவோம்.

இரண்டாம் வகுப்பிற்கு இராஜா சார். பொறுமையாக சொல்லிக் கொடுப்பார். தரையில் எழுத்துக்கள் எழுதி அதன் மேலேயே புளியமுத்துக்களை அடுக்குவோம். வகுப்பறையின் ஓரத்தில் மணலும் குவிக்கப்பட்டிருக்கும். அதிலும் எழுதிப் பார்ப்போம். ஆசிரியர் இறந்ததால் கிரேஸ் அன்னபாக்கியம் டீச்சர் வந்தார்கள். டீச்சர் அன்பாகவும், மிகுந்த கண்டிப்புடனும் இருப்பார்.

மூன்றாம் வகுப்பு டீச்சர் பள்ளி உள்ளேயே இருந்த வீட்டில் வசித்தார். சிறப்பாக சொல்லிக் கொடுப்பார். ஊசியும் போடுவார். இவரது சாரும் ஊசி போட்டு யாம் பார்த்திருக்கிறோம். வீட்டின் முன் நிறைய பூச்செடிகள் வைத்திருப்பார்கள். வீட்டின் அருகே அழகிய முருகன் கோவில் இருக்கும். யாம் படிக்கும் காலத்தில் பெரும்பாலும் பூட்டயே இருந்தது.

அனைத்து மாணவர்களுக்கும் பிடித்தவர் நான்காம் வகுப்பு நளினி டீச்சர். எல்லோருக்கும் தெரிந்த பெயர் ஆண்டாள் டீச்சர். கைத்தொழில் ஆசிரியர். வயர் கூடை பின்னுவதற்கு சொல்லிக் கொடுத்தார். பலரும் பெரிய பெரிய கூடைகளாகப் பின்னி வைத்திருப்பார்கள். அதில் தான் புத்தகங்களைக் கொண்டு வருவார்கள். யாமும் நன்கு கூடை பின்னக் கற்றிருந்தோம். நூலில் வேலைப்பாடுகள் செய்வதற்கும் கற்றுத் தந்தார். கைக்குட்டைத் துணிகளில் அழகழகான வடிவங்களில் பூக்கள் தைத்தோம். சட்டைகளிலும் பல நிற பூக்கள் வைத்துக் கொண்டோம். காசுகளில் வெவ்வேறு வண்ணங்களில் வயர் மோதிரம் செய்யவும் கற்றிருந்தோம். பத்துப் பைசாவில் பின்னிப் போட்டால் விரல் தெரியாத அளவிற்குப் பெரியதாக இருக்கும்.

டீச்சர் அனைவரிடமும் அன்பாக இருப்பார். இனிமையாகப் பேசுவார். வகுப்பு நடத்துவதும், சிறப்பாக இருக்கும். நான்காம் வகுப்பில் உட்காருவதற்கு சிறிய மரப்பலகைள் போட்டிருப்பார்கள். சேட்டைக்கார மாணவர்கள் மேல் கோபம் வந்தால், ஸ்கேலைத் தூக்கி அடித்து விடுவோம் என மிரட்டுவாரே தவிர அடிக்க மாட்டார். பெரிய அளவில் கோபமும் படமாட்டார். மிகுந்த சேட்டைக்கார மாணவர்களென்றால் முட்டி போடுவதுதான் தண்டனை. ஆண்டு விழாக்களுக்கு மாணவர்களை நன்கு தயார்படுத்துவார். எங்கள் வீடு அருகே இருக்கும் பாதை வழியாக தினமும் பள்ளிக்குச் சென்று வருவார்.

பொன்ராஜ் சாருக்கு மாணவர்கள் பயப்படுவார்கள். காதைப் பிடித்துக் திருக ஆரம்பித்தால் லேசில் விட மாட்டார். தலையில் குட்டும் விழும். கண்டிப்பான ஆசிரியர். கணிதத்தை புரியும்படி எளிமையாகச் சொல்லிக் கொடுப்பார். மதியம் மாணவர்கள் தூங்க முடியாது. தூங்கினால் ஆலமரத்தைப் போய் தொட்டுவிட்டு வர வேண்டும்.

சொந்த ஊர் கோவிலாங்குளம் என்பார்கள். வார விடுமுறைக்கே ஊருக்குச் செல்வார். பேருந்து நிலையம் அருகே இருந்த ஓட்டு வீட்டின் சிறிய அறையில்

தங்கியிருந்தார். கதைகள் எழுதுவார் என்றும் சொல்வார்கள். பள்ளியின் ஆண்டு விழாவில் போரஸ் என்ற புருஷோத்தமன் நாடகத்தை அரங்கேற்றினார். உணர்ச்சி கொந்தளிப்பான நாடகமாக அமைந்தது. மிகச் சிறப்பான வசனங்கள் அமைத்திருந்தார். நாடகத்திற்குத் தேவையான கீரிடம் மற்றும் பிற அலங்காரப் பொருட்களை ஆசிரியரே வடிவமைத்து தயார் செய்தார். நாங்களெல்லாம் ஆசிரியருக்கு உதவி செய்தோம்.

விவேகானந்தன் போரஸாகவும், கணேசன் அலெக்ஸாண்டராகவும் அருமையான வசனங்கள் பேசி நடித்தார்கள். இரத்தின சபாபதி போரஸின் மனைவியாக நடித்தார். சிறப்பு விருந்தினர்களும், ஊர்க்காரர்களும் ஆசிரியரை மிகவும் பாராட்டினார்கள். யாம் இந்த ஆண்டு விழாவில், அதோ அந்தப் பறவை போல வாழ வேண்டும் என்ற ஆயிரத்தில் ஒருவன் படப் பாடலுக்கு குழுவாக நடனமாடினோம்.

இராஜகோபாலபுரத்தைச் சேர்ந்த இராஜாராம் சார், சத்துணவு அமைப்பாளராக இருந்தார். பாடங்களும் சொல்லிக் கொடுத்ததுண்டு. ஆசிரியர் வந்த பின் சத்துணவின் தரம் நன்றாக இருந்தது. அனைவருக்கும் தட்டில் உணவு பரிமாறியவுடன் ‘‘பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை’’ குறளை எல்லோரும் சேர்ந்து சொல்லிய பின்பே உணவு உட்கொள்ள வேண்டும். மாணவர்களிடம் நெருக்கமாக இருப்பார். எம்மீது பாசமாக இருப்பர். எட்டாம் வகுப்பு முடிக்கும் போதே எம்மை அரசு உதவித் தொகை கிடைப்பதற்கான தேர்வு எழுதுமாறு வலியுறுத்துவார். ஆசிரியர் திருமண விருந்திலும் யாம் கலந்து கொண்டோம். ஆசிரியர் மிதிவண்டியில் சென்றால்கூட வழியில் எம்மைப் பார்த்தால் இறங்கி, கிருஷ்ணமூர்த்தி நல்லாப் படிக்கிறியா எனக் கேட்பார். எத்தனை பேரன்பு கொண்ட ஆசிரியர்.

உணவு சமைக்கும் பணியை பள்ளியின் அருகேயிருந்த முத்தையா பூசாரி குடும்பத்தார் கவனித்துக் கொண்டார்கள். அனைவரும் உருவத்தில் கொஞ்சம் குறைவாக இருப்பார்கள். நன்றாகச் சமைப்பார்கள். பேரன்பு கொண்டவர்கள். எங்கள் குடும்பத்தோடு மிகுந்த நட்பு பாராட்டுவார்கள்.

அன்று சுற்றுவட்டாரத்தில் பெரிய பள்ளிக்கூடமென்றால் அது எங்கள் ஊர் பள்ளிதான். அகரத்துப்பட்டி, இராசலபட்டி, சுத்தமடம், போத்தம்பட்டி, கஞ்சம்பட்டி போன்ற சுற்று வட்டார ஊர்களிலிருந்தெல்லாம் மாணவர்கள் வருவார்கள்.

பள்ளியின் தலைமையாசிரியராக எங்கள் ஊரின் பாலகிருஷ்ணன் ஆசிரியர் இருந்தார். யாம் கல்லூரியில் படிக்கும் காலத்தில் கூட எங்கள் ஆசிரியர் எதிரே வந்தால் இறங்கி விடுவோம். சிரித்துக் கொண்டே நன்றாகப் படிக்கணும் என்று சொல்வார்.

இப்போது நினைத்துப் பார்த்தால், ஆசிரியராகப் பணியாற்றும் எமக்கே மலைப்பாக இருக்கிறது. கிராமத்துப் பள்ளியான எங்கள் பள்ளியின் ஆசிரியர்கள் எவ்வளவு அர்ப்பணிப்பு உணர்வுடன் எங்களை வழி நடத்தியிருக்கிறார்கள். செய்தித்தாள்களில் படிப்பது போல் பள்ளிக்கு வராமல் யாரும் இருந்தது இல்லை. எல்லோரும் எங்கள் ஊரிலேயே தங்கினார்கள். சரியான நேரத்திற்கு பள்ளி ஆரம்பிக்கும். எல்லோரும் பாடங்கள் சொல்லிக் கொடுத்துக் கொண்டுதான் இருந்தார்கள். ஏனோ, தானோ என்று வகுப்பு எடுக்கவில்லை. யாம் அறிவோம்.

எமது அக்கா ஐந்தாம் வகுப்பு வரையிலும், அண்ணன் எட்டாம் வகுப்பு வரையிலும் படித்திருக்கிறார்கள். சகோதரியை தொடர்ந்து படிக்க வைக்க இயலவில்லை போலும். அண்ணன் அவராகவே போதுமென்று சொன்னதாக அப்பா சொல்வார். அகரத்துப்பட்டியில் எங்களது மூத்த அண்ணன் குடும்பம் இருக்கிறது. எங்களூலிருந்து மிகவும் பக்கம். பெரிய கண்மாயின் மறுகரையில் ஊர். இந்த ஊரை அகரத்துப்பட்டி என்று தான் சிறுவயதில் அழைப்போம். இப்போது திருமலைபுரம்.

மாமா இளையவர். பெரியம்மாவை இங்குதான் அவர்களது தாய்மாமா பையனுக்கு கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். பெரியப்பா இறந்து விடவே அவரது தம்பிக்கு மறுமணம் செய்திருக்கிறார்கள். அதனால் நாங்கள் சித்தப்பா என்று தான் அழைப்போம். பெயர் இருதயமுத்து.

பெரியம்மா குடும்பம் எங்களது சிறுவயதில் வசதியாக இருந்தது. மாரியம்மாள், தங்கம்மாள், முனியசாமி, பாண்டியம்மாள், கந்தசாமி, முத்துக்கிருஷ்ணன் மற்றும் ராஜ மாணிக்கம் பிள்ளைகள்.

முனியசாமி அண்ணன் எங்கள் ஊர் பள்ளியில் படிக்கும் போது, யாம் இரண்டாவது படித்தோம். இளவட்டப் பிள்ளைகள் போன்று பெரிய பெரிய ஆட்களாக இருப்பார்கள். நாடகத்திலெல்லாம் நடித்திருக்கிறார். விவசாயி வேடம். மதிய உணவாக உப்புமா கொடுப்பார்கள். எமக்கு மட்டும் கொஞ்சம் அதிகம் போட்டு விட்டுச் செல்வார். இன்றும் எம்மீது பாசம் மாறாத பண்பாளர்.

பெரிய வாத்தியார் என்பவரைப் பற்றி எமது அப்பா, மாமாவெல்லாம் மிகவும் புகழ்ந்து பேசுவார்கள். பெயர் தேவதாஸ் வாத்தியார். கோவில்பட்டி பக்கமிருந்து வந்த கிறிஸ்துவ நாடார் என்பார்கள். திறமையானவர், மிகுந்த இரக்ககுணம் கொண்டவர் என்றும் சான்றளிக்கிறார்கள். எமது மாமாவை அவர்தான் படிக்க வைத்திருக்கிறார். காவல் பணியில் சேர்த்து விட முயன்றவரை, ஒரே பையன் என அம்மாயி தடுத்து விட்டாராம். அப்போது ஐந்தாம் வகுப்பு வரையிலும் தான் பள்ளி இருந்திருக்கிறது.

எமது அப்பா இரண்டாம் வகுப்பு படித்த போது, முனியன் தாத்தா வீட்டுப் பாடம் சொல்லிக் கொடுப்பாராம். தாத்தாவும் இதே பள்ளில் படித்திருக்கிறார் எனத் தெரிகிறது. எங்கள் ஊரிலேயே ஆறாம் வகுப்பைத் தொடர்வதற்கு அப்போது தனியாக ஒரு பள்ளியை பெரிய வீட்டுக்காரர்கள் நடத்தி இருக்கிறார்கள். தொடர்ந்து நடத்த இயலாமல் போனதால் நாடார்களே ஆறிலிருந்து எட்டு வரை கொண்டு வந்துவிட்டார்களாம்.

எங்கள் சிறுவயதில் நிறைய பேர் ஒன்று, இரண்டாம் வகுப்புகளில் படித்தோம். ஐந்தாம் வகுப்பு வரையிலும் கூட அதிகமாகத்தான் இருந்தோம். பின்னர் அப்படியே குறைந்து விட்டது. கொஞ்சம் பேர்தான் எட்டாம் வகுப்பு முடித்தோம். கணேசமூர்த்தி அண்ணன் இரண்டு வயது மூத்தவர். அவரோடு ஆனந்தன், அண்ணாத்துரை, காங்கேயன், சுப்ரமணி, தங்கம், இருளப்பன் போன்றவர்கள் படித்தார்கள். இதில் ஆனந்தன் ஒன்பதாம் வகுப்பில் எம்மோடு பரளச்சியில் சேர்ந்து கொண்டார்.

தரையில் தமிழ் எழுத்துக்கள் எழுதி புளியமுத்து அடுக்கியதெல்லாம் நினைவிருக்கிறது. புளியைக் கரைத்து வீடுகளுக்கு முன் ஊற்றியிருப்பார்கள். அதைப் பொறுக்கித் திரிவோம். சில வீடுகளில் புளியம்பழத்திலிருந்து விதையை எடுத்து வைத்திருப்பார்கள். புளியங்கொட்டையை ஊற வைத்து அவித்தும் தின்றிருக்கிறோம். கால்சட்டைப் பைக்குள் நிறைய புளியங்கொட்டைகளை வைத்துக் கொண்டு ஒத்தையா, ரெட்டையா விளையாடி மகிழ்ந்த காலங்கள் மகிழ்ச்சியானவை.

வேல்முருகன், மணிகண்டன், தங்கப்பாண்டியன், இராமகிருஷ்ணன் போன்றவர்கள் எம் தெரு தோழர்கள். யாம், வேல்முருகன், மணிகண்டன் மிகவும் நெருக்கம். ஒன்றாகவே திரிவோம். இருவரும் ஐந்தாம் வகுப்பு வரைக்குமே படித்தார்கள். இதில் வேல்முருகன் கொஞ்சம் பெரிய பையனாக இருந்ததால், மற்ற

மாணவர்கள் பயப்படுவார்கள். யாரையாவது அடித்து விட்டு, தொடையில் நறுக்கென்று கிள்ளிவிட்டு இவர் பின்னால் ஒளிந்து கொள்வதுண்டு. எப்போதும் பென்சிலை கூராக சீவி வைத்திருப்பார். அதைக் காட்டியே மற்றவர்களை மடக்கி விடுவார். தற்போது லாரி ஓட்டுனராக தூத்துக்குடியில் பணியாற்றுகிறார். மணிகண்டன் மதுரையில் தங்கி விட்டார். தங்கப்பாண்டியன் கொத்தனார். எங்களின் புது வீட்டை இவர் தான் கட்டிக் கொடுத்தார். ஆடு மேய்த்துத் திரிந்த ராமகிருஷ்ணன் இன்று அரேபியாவில் உணவு விடுதியில் பணியாற்றுகிறார்.

எட்டாம் வகுப்பில் விவேகானந்தன், சரவணன், பூமிநாதன், தங்கராஜ், கண்ணன், மாரிமுத்து என்று எங்களூரிலிருந்தும், திருமலைபுரத்திலிருந்து சந்திரன், கணேசன், பத்மாவதி, பாக்கியவதி மற்றும் இராஜகோபாலபுரத்திலிருந்து இராஜாராமும் ஒன்றாகப் படித்தோம்.

எல்லோரும் இனிய நண்பர்கள். விவேகானந்தன் சுருக்கமாக வேகா. யாம் கிட்னா. இதில் கிட்னாவுக்கும் வேகாவுக்கும் தான் படிப்பில் போட்டி. காலாண்டு, அரையாண்டு, முழு ஆண்டு தேர்வுகள் முதல் சிறு சிறு தேர்வுகள் வரை போட்டிப் போட்டுப் படிப்போம். விடைத்தாள்களை வாங்கி அடுத்தவர் மதிப்பெண்களைத்தான் முதலில் கேட்போம். எட்டாவது வரை அவர்தான் முதல் மாணவர். வேகாவுக்கு கணக்கு நன்கு வரும். எமக்கு கணக்கு கொஞ்சம் தடுமாறும். இந்தப் போட்டி பரளச்சியிலும் தொடர்ந்தது. பத்தாவதில் அவர் முதலாவது. யாம் இரண்டாவது.

பதினோறாம் வகுப்பில் கணிதப் பிரிவில்தான் யாம் சேர்ந்தோம். நெருங்கிய நண்பர்களெல்லாம் அறிவியல் பிரிவு சேர்ந்தவுடன் யாமும் மாறிக்கொண்டோம். யாம் கணக்கிற்குப் பயந்து கொண்டோ அல்லது கணிதப் பிரிவில் பெண்களே இல்லையென்பதாலோ தான் அறிவியலுக்கு மாறியதாக நினைத்தாலும் பரவாயில்லை. ஒரு வழியாக பன்னிரெண்டாம் வகுப்பில்தான் யாம் வேகாவை வெற்றி கொண்டோம். யாம் முதலாவது. சொம்மொழி நத்தம் வேல்முருகன் இரண்டாவது.

எட்டாம் வகுப்பிற்கு தலைமையாசிரியர் என்பதால், அலுவலக வேலை இருந்தாலோ வெளியூர் சென்றாலோ நாங்கள், எட்டாம் வகுப்பு பக்கத்திலிருக்கும் வராண்தாவில் படித்துக் கொண்டும், பேசிக்கொண்டும் இருப்போம். எங்களில் கணேசன் சினிமாப் பாட்டு புத்தகங்களை வைத்துக் கொண்டு அழகாகப் பாடுவார்.

புன்னகை மன்னன் படத்தில் வரும் பூவெடுத்து வைக்கணும் பின்னாலே அவருக்குப் பிடித்தமான பாடல்.

இப்படியான சமயங்களில் இப்போதைய கணவன், மனைவியும் அப்போதைய காதலர்களுமான குருசாமி - சுப்புலட்சுமியின் காதல் பார்வைகளை வேடிக்கை பார்க்கத் தவறமாட்டோம்.

வழியில் ஒருவரும் இல்லாத போதும் அவர்கள் வீடு அருகில் வந்தவுடன் இவர் மிதிவண்டி மணியை அடிப்பார். உடனே அவர் வந்து எட்டிப் பார்ப்பார். சைக்கிள் பாஷை வைத்திருப்பார்கள்போல. சுப்புலட்சுமி வீட்டு முற்றத்திற்கு வந்தாலே நாங்களெல்லாம் பேசிக் கொள்வோம். கொஞ்ச நேரத்தில் அவர் வருவார் பார் என்று. சொன்னதே நடக்கும். சுப்புலட்சுமி அவர்கள் இன்றைய எங்கள் ஊராட்சி மன்றத் தலைவர். குருசாமி அவர்கள் ஊராட்சி மன்றத் தலைவராகவும், பின்னர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றியக் கவுன்சிலராகவும் இருந்தார். சமீபத்தில் இவர்களது அழகான வீட்டைத் திறந்துவைக்க கட்சியின் மாநிலச் செயலர் த. பாண்டியன் அவர்கள் வந்திருந்தார். அன்றுதான் எங்கள் புதுவீட்டைத் தச்சு செய்தோம். வரவேற்பு பதாகைகளைப் பார்த்து ஊரில் இத்தனை பொதுவுடைமைத் தோழர்கள் இருக்கிறார்களா என வியப்பாக இருந்தது.

யாம் தொப்பலாக்கரையில் படித்த காலத்தில் எங்கள் வீட்டில் கொஞ்சம் வறுமைதான். அப்பாவும் ஏதேதோ வேலைகள் செய்து பார்த்தார். நெல் நாற்று பிடுங்கச் செல்வார். மிதிவண்டியில் ஊர் ஊராகச் சென்று கருவாடு விற்று வருவார். பின்பு புளி, கத்திரிக்காய் என வியாபாரம் தொடர்ந்தது. கரூர் பக்கமிருந்து கோரைப் புல் வாங்கி வந்து வீட்டுத் திண்ணையிலேயே தறி வைத்து அம்மாவோடு சேர்ந்து பாய் முடைந்தார். விளையாட்டுக்கு யாமும் கொஞ்ச நேரம் பாய் பின்னுவதுண்டு. மீன்வலை பின்னி அதை காசுக்கு விற்பார். கூடை பின்னுவார். இதற்குப் பயன்படும் ஒருவகைக் கொடி எங்கள் ஊர் காடுகளிலேயே கிடைக்கும். பின்னர் பால்பண்ணையும் இருந்தது. கூடவே கட்டிடக் கொத்தனார் வேலையும்.

அம்மாவை காதலித்து திருமணம் செய்திருக்கிறார். கொஞ்ச நாள் ஒப்பந்தப் பணியாளராக மின்சார வாரியப் பணியில் இருந்தாராம். அப்போதுதான் ஊர் ஊருக்கு மின்சாரக் கம்பங்கள் நட்டிருக்கிறார்கள். மின்சாரத்திற்கு பயந்து அம்மா தடுத்து விட்டாராம். அன்று இவள் பேச்சை மட்டும் கேட்காமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருப்போம் என்று வேடிக்கைக்காக எங்களிடம் சொல்வதுண்டு.

மின்சாரத்தைக் கண்டு மக்கள் பயந்திருக்கிறார்கள். காவலர்களைக் கண்டால் தெரித்து ஓடுவார்களாம். சிறு வயதில் அப்பத்தா ஊரான மண்டலமாணிக்கத்தில் தாய்மாமா வீட்டில் ஆடு மேய்த்து திரிந்திருக்கிறார். ஊரில் உள்ள அனைவரும் பல ஊர்களுக்கும் கூலி வேலைக்குச் சென்றிருக்கிறார்கள். திருமணத்திற்கு முன் ஆழியாறு அணையில் ஊர்க்காரர்களோடு மண் தோண்டும் வேலை பார்த்திருக்கிறார். அதற்கும்முன் பொள்ளாச்சி டாப்சிலிப் தாண்டி மலைகளில் கல் உடைக்கும் வேலையும் செய்தாராம். அப்பகுதியில் புதிதாக சாலை போட்டார்களாம். எமது அம்மாவோ அகரத்துப்பட்டியில் அவர்களது மாமா வீட்டில் மாடு மேய்த்தாராம். விவசாயத்தை மட்டுமே நம்பி இருந்த காலம். ஓரிரு வருடங்கள் மழை பொய்த்து விட்டாலும் ஜனங்கள் பாடு திண்டாட்டம்தான்.

முனியன் தாத்தா ஓரளவிற்கு வசதியாகவே வாழ்ந்திருக்கிறார். கமுதி சென்று ஓடு மரமெல்லாம் வாங்கி வந்து அந்தக் காலத்திலேயே ஓட்டுவீடு போட்டிருக்கிறார். புயல் வந்த காலமெல்லாம் தெருக்காரர்கள் இங்கு வந்து அடைந்து கொள்வார்களாம். தோட்டம் வைத்திருந்திருக்கிறார். விவசாய பூமியும் ஓரளவிற்கு இருந்திருக்கிறது.

எமது அப்பா கரிசல்காடு, செவல்காடு, வயல்காடு எல்லாவற்றையும் மாமாவிற்கு விற்றிருக்கிறார். ஓரளவிற்கு விவரமான காலத்திலேயே தாத்தா இறந்ததால் தங்கைகளைக் கட்டிக் கொடுத்து அப்பாதான் குடும்பத்தைச் சுமந்திருக்கிறார். திருவாரூர் பக்கம் கரும்பு வயல்களில் நிறைய ஆட்களை வைத்து ஒப்பந்த அடிப்படையில் வேலை பார்த்திருக்கிறார். கையில் கட்டுக் கட்டாக பணம் இருக்கும் என்பார். நண்பர்களோடு சேர்ந்து பொறுப்பில்லாமல் செலவு செய்ததாகப் பின்னாட்களில் வருத்தப்பட்டார். மூன்றாவது வரை படித்திருக்கிறார். நன்றாக எழுதப் படிக்கத் தெரியும். இன்று வரை கண்ணாடி போடாமல் பொத்தகங்களைப் படிக்கிறார். எமது சிறுவயதில் சில நேரங்களில் சாராயம் குடித்து விட்டு கலாட்டா செய்ததுண்டு. கடும் உழைப்பாளி. நல்ல மனிதர். யாம் வேலைக்கு வந்ததிலிருந்து அவருக்கு ஓய்வு. தற்போது முட்டி வலியால் அவதிப்படுகிறார். கொத்தனாரென்றால் நின்று கொண்டே வேலை பார்த்தாக வேண்டுமல்லவா.

எமக்கு விவரம் தெரிந்து ஒரு முறை விவசாயம் பொய்த்து விட்டது. அம்மாவோடு சேர்ந்து எறும்புகள் சேர்த்து வைத்திருக்கும் வெட்டுப்புல்லை வரப்புகளிலிருந்து வெட்டியெடுத்து, அதை மண் நீக்கிப் புடைத்து அரைத்து, அதை

கூழ்கிண்டி குடித்திருக்கிறோம். அம்மாவும் யாமும் தான் வெட்டுப்புல் வெட்டப் போவோம்.

வயலில் விளைந்த நெற்பயிரை அறுத்து, சுமக்கக்கூடிய அளவிற்கு பெரிய கட்டுக்களாகக் கட்டி களத்திற்கு சுமந்து வருவார்கள். பெண்கள் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துப் போட அதை ஆண்கள் தரையிலோ, முக்காலியிலோ இரண்டு மூன்று முறை அடித்து நெல் மணிகளை உதிர்ப்பார்கள். பின் அதை பரப்பி மாடுகளை வைத்து மிதிக்க வைப்பார்கள். மாடுகள் நடக்கும்போது அடித்ததில் உதிராமல் இருந்த மணிகளும் பிரிந்து விடும். இதை சூடடிப்பது என்று சொல்வார்கள். இதுதான் மாடுகளின் உணவான வைக்கோல்.

மாடுகள் கிடைக்கவில்லையென்றால் சூடடிக்காமல் படப்பு போன்று அடுக்கி விட்டு பின்னொரு நாள் மாடுகளை வைத்து மிதிக்க விடுவார்கள். இப்படி சூடடிக்காமல் அடுக்கி இருக்கும் படப்பு அருகே நெல் மணிகள் சிதறிக் கிடக்கும். இதைக் கூட அம்மா, முறம் வைத்து புடைத்தெடுத்ததை யாம் பார்த்திருக்கிறோம்.

பஞ்சத்தில் சாணக்கிழங்கு ரொட்டி, கமலக்கஞ்சி, புளிச்சிக்கீரை சாப்பிட்டு எப்படியோ பிழைத்துக் கொண்டோம். பல செடிகளின் வேர்களை வெட்டி விற்றிருக்கிறோம். கைகளில் துணிகளைச் சுற்றிக் கொண்டு நெருஞ்சி முள் பொறுக்கியதுண்டு. ஒரு முறை கோயமுத்தூரில் தற்போது உடன் பணிபுரிபவர்கள் சில பேரிடம் இப்படி ஒரு பஞ்சம் இருந்ததே தெரியுமா என்று கேட்டதற்கு பஞ்சமா என்று பதில் கேள்வி கேட்டார்கள். பஞ்சமே தெரியாமல் வாழ்ந்தவர்கள் புண்ணியம் செய்தவர்கள்தான். அப்படி ஒரு கடுமையான சாப்பாட்டுப் பஞ்சத்திலும் மக்கள் ஒருவரை விட்டு ஒருவர் சாப்பிட்டதாகத் தெரியவில்லை. மகிழ்ச்சியாகத் தான் இருந்தார்கள். இப்போது அனைவர் வீடுகளிலும் எவ்வளவோ வசதிகள். மூஞ்சியைத்தான் உம்மென்று தூக்கி வைத்துக் கொண்டு யாருடனும் பேசாமல் திரிகிறார்கள்.

பஞ்சமென்றால் பால்பவுடர் வராமல் இருக்குமா. திருமலைபுரத்தில் தேவேந்திரரும், எண்ணிக்கையில் கொஞ்சம் கூடுதலாக தேவரும் இருந்தார்கள். இரண்டு ஐயர் வீடுகளும் இருந்தன. தேவர்கள் கொண்டாடும் சித்திரைத் திருவிழாவிற்கும் தேவேந்திரர்கள் கொண்டாடும் மாசித் திருவிழாவிற்கும், அண்ணன் வீட்டிலிருந்து எங்களெல்லோருக்கும் அழைப்பு வரும். நாங்களும், மாமா வீட்டிலிருந்து அனந்தம்மாள், பால்தங்கம், கருணாமூர்த்தி, ஜெயலட்சுமி,

குருவுத்தாய் போன்றவர்களும் செல்வோம். சிலநேரங்களில் மாமா வீட்டிலிருந்து பிள்ளைகள் வரமாட்டார்கள். அண்ணன் வீட்டில் ஆடு வெட்டி, கறியை அள்ளி அள்ளி வைப்பார்கள். பந்தி போன்று சாப்பிடுவோம். நல்லா சாப்புடுப்பே என பெரியம்மா ஓயாமல் சொல்லுவார். இப்டிதேன் சாப்ரதாக்கும் என தங்கக்கா சடைத்துக் கொள்வார்.

அப்போது முடியப்பன் தாத்தா இருந்தார். கம்பு ஊன்றி நடப்பார். அப்பத்தா பெயர் அன்னம்மாள். மூன்று வீடுகள் இருந்தன. தோட்டத்தில் பெரிய மாமரம் இருந்தது. வற்றாத சுவையான நீர் நிரம்பிய ஆழமான கிணற்றிலிருந்து தண்ணீர் கொட்டிக்கோண்டே இருக்கும். இளநீர் வெட்டிக் கொடுப்பார்கள். மாங்காய், நெல்லிக்காய், கொய்யாக்காய், நார்த்தங்காய், கடலை என வயிறு நிறையத் திங்கலாம். தோட்டம் பக்கத்திலேயே கருப்பசாமி கோவில். பெரிய மீசையோடு கருப்பணசாமி சிலை இருப்பதால் சிறு வயதில் பார்க்கவே பயப்படுவோம். மாசிக்களரிக்கு கிடா வெட்டுவார்கள். இராவெல்லாம் கொட்டடிப்பார்கள். வேதமுத்து சித்தப்பா பெரிய அருவாள் வைத்து ஒரே வெட்டாக தலையை வெட்டுவார். எங்கள் ஊர் இராமலிங்க மாமாவும் கிடா வெட்டிப் பார்த்திருக்கிறோம். மாசிக்களரிக்கென்றே கிடாய் நேர்ந்துவிட்டு தனிக்கவனமுடன் வளர்ப்பார்கள். தலையில் மஞ்சள் தண்ணீர் ஊற்றி, திருநீறு பூசி, கழுத்தில் மாலை போட்டு சாமி சிலைக்கு முன்னே நிறுத்தி வெட்டுவார்கள். தலையை மூன்று முறையாவது ஆட்ட வேண்டும். தலையாட்டும் வரை காத்திருக்க வேண்டும். சித்தப்பா பூசாரி. பலருக்கும் சாமி வந்து குதியாட்டம் போடும். உம் மக்களைக் காக்க வேணுமப்பா என்று கருப்பரிடம் இறைஞ்சுவார்கள்.

மரியராஜ் பெரியப்பா, சடைச்சிப் பெரியாத்தா வீட்டுக்கும் தவறாமல் செல்வோம். பெரியப்பா எங்கள் வீட்டோடு அளவுகடந்த பாசமாக இருப்பார். மிகுந்த பொறுமைசாலி. பெரியாத்தா இருமிக்கொண்டே பேசுவார். பார்வதி அக்கா அன்பாக இருப்பார். இராமலட்சுமி அக்கா, இராமநாதன் அண்ணன் அன்போடு வரவேற்பார்கள். பார்வதி அக்காவுக்கு அருப்புக்கோட்டை ரங்கசாமி மச்சானைத் திருமணம் செய்தார்கள். மச்சான் எம்மீது மிகவும் அன்பு பாராட்டுவார். இவர்களது பெண் கருப்பாயி எங்கள் ஊர் இராமகிருஷ்ணனை திருமணம் செய்திருக்கிறார்.

மாரியம்மாள் அக்காவுக்கு சித்திரன் மாமா மகன் மாரிமுத்து மச்சானை மணம் முடித்திருக்கிறார்கள். அக்காவின் வீட்டிற்கும் தவறாமல் செல்வதுண்டு.

அண்ணன் வீட்டில் சாப்பிட்டிருந்தாலும் அக்காவும் தன் பங்குக்கும் சாப்பிடச் சொல்வார். குழந்தைகள் மிகுந்த பாசமாக இருப்பார்கள். முனியம்மாவுக்கு அருப்புக்கோட்டை மாப்பிள்ளை. தச்சு வேலை செய்கிறார். முனியசாமி கோயம்புத்தூரில் மில் வேலை பார்க்கும் போது ஒரு பெண்ணைக் காதலித்து திருமணம் செய்து கொண்டார். மணிமுத்து நெல்லை செயிண்ட் சேவியர் கல்லூரியில் விலங்கியல் முனைவர் பட்ட ஆய்வு செய்கிறார். கருப்பசாமி வணிகவியலில் ஆய்வு இளைஞர் பட்டம் பெற்று சென்னையில் தனியார் நிதிநிறுவன மேலாளராகப் பணியாற்றுகிறார். எம்மீது மிகுந்த மரியாதை வைத்திருப்பார். அக்காவும் மச்சானும் மரம் வெட்டியே இவர்களை இந்த அளவிற்குப் படிக்க வைத்தது ஆச்சரியம்.

சித்திர மாமா அப்பாவின் நலம் விசாரிக்கத் தவறமாட்டார். அத்தையும் பாசமாக இருப்பார். இன்னொரு மகன் முனியசாமி மிலிடரியில் இருந்தார். எம்மோடு நன்றாகப் பேசுவார்.

கலுங்கு அப்பத்தா வீட்டிற்கும் மறக்காமல் செல்வோம். அப்பத்தாவுக்கு கையும் ஓடாது. காலும் ஓடாது. நிறையப் பேசுவார். கடுங்காப்பி போட்டுக் கொடுப்பார். மூக்கையா சித்தப்பா சிவகாசியில் இருக்கிறார். பேரன் அரசகுமாரும் கருணாமூர்த்தியும் நெருங்கிய தோழர்கள்.

ரோட்டுக்கார கருப்பையா தாத்தா மற்றும் அவரது மகன் இருவரும் சாலைகளைச் செப்பனிடும் வேலை செய்தார்கள். சாலையின் ஓரத்திலேயே தார் பேரல் கிடக்கும். குண்டு, குழிகளை அடைப்பதற்கு தார் காய்ச்சுவார்கள். வெயில் காலங்களில் சாலையிலேயே தார் உருகிக் கிடக்கும். சிறுவர்கள் எடுத்து விளையாடுவதுண்டு. தாத்தா சிலம்பு வாத்தியார். எங்கள் ஊரில் கற்றுக் கொடுத்த போது யாமும் சில நாட்கள் கம்பு சுற்றியிருக்கிறோம்.

தேவேந்திரர் தெருவில் அழகானதொரு தேவாலயம் இருந்தது. ரோமன் கத்தோலிக்கப் பிரிவு என நினைக்கிறோம். ஏசுநாதர் சிலை அழகாக இருக்கும். எமது ஊர் பள்ளிக்கூட நாட்களில் கிறிஸ்துவ அமைப்பினர், இயேசு பற்றிய சிறு புத்தகங்களை வண்ணப் படங்களுடன் அனுப்புவார்கள். ஒரு தபால் அட்டையில் நமது முகவரியை எழுதி அனுப்பினால் மறு வாரத்திலிருந்து தொடர்ச்சியாக புத்தகங்கள் வரும். பெரும்பாலான மாணவர்கள் இவ்வாறு வரும் புத்தகங்களை ஆர்வமாயப் படித்தோம்.

தேவாலயம் பக்கத்திலேயே தண்ணீர் கிணறு. ஆண்களும் பெண்களும் தண்ணீர் இறைத்துக் கொண்டே இருப்பார்கள். தேவர் ஆட்களும் வருவார்கள். இப்போது போல் குழாய்த் தண்ணீர் வராத காலம். குடிக்க, குளிக்க, ஆடு மாடுகளுக்கென்று தண்ணீரின் தேவை இருந்து கொண்டே இருக்கும்.

பஞ்சம் வந்தபோது தேவாலயம் சார்பாக ஊரில் அனைவருக்கும் உணவுப் பொருட்கள் கொடுத்திருக்கிறார்கள். அண்ணன் வீட்டிலிருந்து பால் பவுடர், எண்ணெய் போன்றவற்றைக் கொடுத்து விடுவார்கள். பால் கட்டிகட்டியாக இருக்கும். காய்ச்சி குடிப்பதற்கு சுவையாக இருக்காது. தண்ணீர் போன்று இருக்கும். அமெரிக்காவிலிருந்து அகரத்துப்பட்டிக்கு வந்து சேர்ந்த பால்பவுடரை அப்படியே வாயில் அள்ளிப் போட்டு தின்று திரிந்தது அதிசயம்தான்.

இன்னொரு ஆச்சரியமாக யாம் பிறந்த போது அப்பா கிறித்துவ மிசனரியில் காவல்காரராக இருந்தாராம். அருப்புக்கோட்டை சாலையில் எங்கள் ஊர் செவல்காட்டு பாதை சேருமிடத்தில் மருத்துவமனை கட்ட கிறித்துவ நிறுவன அமைப்பினர் ஆயத்தமாகியிருக்கிறார்கள். அதற்காக கூடாரம் அமைத்து பொருட்களை எல்லாம் கொண்டு வந்து இறக்கியிருக்கிறார்கள். அங்குதான் சில மாதங்கள் இரவு பகலாகக் காவல் இருந்திருக்கிறார். எங்கள் ஊரிலிருந்து தகுந்த ஒத்துழைப்புச் கிடைக்காததால் சில மாதங்களிலேயே மருத்துவமனை கட்டும் திட்டத்தை கைவிட்டிருக்கிறார்கள். யாம் இரவு பிறந்ததால், காலையில் வந்து எம்மைப் பார்த்தாராம். ஹேப்பி பர்த்டே சொன்னாரா எனத் தெரியவில்லை.

தமிழர்களுக்கு எப்போதும் சாதிதான் முக்கியமே தவிர மதமில்லை. கருப்பசாமியை தெருக்காரர்கள் எல்லோரும் சேர்ந்து கும்பிடுவார்கள். சர்ச்சுக்கும் பேதமில்லாமல் செல்வார்கள். சில பேர்தான் கிறித்தவர்களாக இருந்தார்கள். சந்திரன் வீட்டுக்கும் தவறாமல் செல்வதுண்டு. இவரின் அப்பா பெயர் ஞானப்பிரகாசம். சாப்பிடச் சொல்லி கெஞ்சுவார்கள். அம்மா எம்மீது பாசமாக இருப்பார்கள். பாக்யவதியோடு அவ்வளவாகப் பேசியதில்லை. அந்த காலத்தில் நாங்கள் எங்கே பேசினோம். அவ்வளவு வெட்கம். இந்த வெட்கம் யாம் வேலைக்கு வரும் வரை தொடர்ந்தது தான் பெரிய ஆச்சரியம். எல்லோரிடமும் நன்றாகப் பேசி மகிழ்ந்து இன்னும் நட்பாக இருந்திருக்கலாம்.

இருளப்பன் அண்ணனை மறக்கமுடியாது. எம்மை மிகவும் பிடிக்கும். கபடி சிறப்பாக விளையாடுவார். எல்லோர் மீதும் பாசமாக இருப்பார். கோவையில்

விமானப் படையில் பணியாற்றினார். சமீபத்தில் தவறுதலாக வீட்டு மாடியிலிருந்து விழுந்து தவறிவிட்டார். இவரது தம்பி அந்தோணி ஊரில் பல சரக்குக் கடை வைத்திருக்கிறார். இவர்களது தந்தை அருளானந்தப் பெரியப்பா எம்மைப் பார்த்தால் அன்புடன் நலம் விசாரிப்பார்.

சேசு பெரியப்பாவும் எப்போது எம்மைப் பார்த்தாலும் கையைப் பிடித்துக் கொண்டு என்னப்பே, நல்லா இருக்கியா எனக் கேட்பார். நல்ல மனிதர். இவரது பையன்கள் ரெட்டியபட்டியில் ஆட்டோ ஓட்டுகிறார்கள். முத்துராயர் தாத்தா மகன்கள் முடியப்ப சித்தப்பா, பிளவேந்திரன் சித்தப்பா, இவர்களது தோட்டம், வீடு அண்ணன் தோட்டத்திற்கு வடக்கே இருந்தது. எம்மோடு படித்த பாக்யவதியின் அண்ணன்கள்.

தர்மர் சித்தப்பாவோடு அதிகம் பேசியதில்லை. இவருக்குத்தான் எமது அம்மாவை மணம் முடிக்க மாமா விரும்பினாராம். செல்லவடிவு சித்தப்பா அப்பாவுக்குப் பங்காளி. நல்ல பாசக்காரர். வீட்டிற்குப் போனால் அந்தக் காலத்துலே என ஆரம்பித்து விடுவார். சித்தப்பாவின் அண்ணன் கருப்பசாமியை தேவவேந்திரர்களுக்குள் நடந்த சண்டையில் வெட்டிவிட்டார்களாம். கருப்பசாமி பெரியப்பாவின் மகன் அபிமன்யு அண்ணன் எமது அப்பாவோடு பாசமாக இருப்பார். அதே சண்டையில் பாக்யவதியின் அம்மா ஞானாம்பாள் அம்மையாரும் இறந்து விட்டாராம். இரண்டு பேரைப் பலிவாங்கிய இந்த சண்டையைப் பற்றி பல கதைகள் சொல்வார்கள். தற்போது ஒற்றுமையாக உள்ளார்கள்.

ஜோதி சித்தப்பா கனத்த ஆளாக இருப்பார். எம்மைப் பார்த்தால் நல்லாப் படிக்கிறியா என்பார். இவரது மகன் ஜெயராஜ் அண்ணன். இன்னொரு பையன் மைக்கேல் இராணுவத்திலிருக்கிறார். குருசாமி அவர்களை ஆட்டுக்காரர் என அழைப்பார்கள். நிறைய ஆடுகள் வைத்திருந்தார்.

சவரிமுத்துப் பெரியப்பா பெரிய மீசை வைத்திருப்பார். இவரது பையன்கள் பால்ராஜ். முத்துராயர். மாணிக்கம் அவர்கள் எங்கள் ஊர் முத்துமாமா அவர்களின் மகளை மணம் முடித்திருந்தார்.

தேவர்கள் பதினெட்டாம்படிக் கருப்பசாமி திருவிழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடுவார்கள். சுற்றுச் சுவரோடு கூடிய பீடத்தில் அருவாள்கள் நட்டு வைத்திருப்பார்கள். திருவிழாவின் போது ஊரே களைகட்டும்.

இரு சாதி ஆட்களும் மிகவும் சகஜமாகப் பழகுவார்கள். எங்கள் ஊரை விட மிகவும் யதார்த்தமாக, அந்யோன்யமாக இருப்பார்கள்.

சாயல்குடி ரேடியோதான் அப்போது பிரபலம். பெரிய பெரிய ஸ்பீக்கர்களை அலற வைப்பார்கள். அதைவிட அவர்களது விளக்குத் தோரணங்கள் கலக்கலாக இருக்கும். இதைப் பார்க்கவென்றே ஜனங்கள் கூடுவார்கள். முதன் முதலில் யானை நீரிறைத்து ஊற்றுவதைப் பார்த்து பிரமித்ததுண்டு. கணேசன் பார்த்தால் கையைப் பிடித்துக் கொண்டு சாப்பிடவா என்று அன்போடு அழைப்பார். பத்மாவதியை பார்க்கும் சந்தர்ப்பம் நேரிட்டால் புண்னகையுடன் சிரிப்பார்.

வள்ளி திருமணம் நாடகம் நடக்கும். சித்தப்பா வீட்டாரோடு சேர்ந்து ஒன்றாக உட்கார்ந்து கொள்வோம். ஊரிலிருந்து அப்பா, அம்மா மற்ற சொந்தக்காரர்களெல்லாம் நாடகம் பார்க்க வந்து விடுவார்கள். சாப்பிட காராச்சேவு. சீனி மிட்டாய், பொட்டுக்கடலை, கடலை மிட்டாய் என்று வாங்கிக் கொடுப்பார்கள். உருட்டுக் கட்டை சூதாட்டம் நடக்கும். எங்கள் ஊரைப்போல் நாடகத்தின் போது அதிகமாக தேவர் பாடல்கள் பாடமாட்டார்கள்.

சிறு வயதில் யாமெல்லாம் பபூன் டான்ஸ் பார்த்த உடனேயே தூங்கி விடுவோம். நாடகத்தில் காலை வரையிலும் கூட வள்ளியும் முருகனும் சண்டை போட்டுக் கொண்டுடிருப்பார்கள். சில நேரங்களில் ஊர்க்காரர்கள் சமாதானம் செய்துதான் திருமணம் இனிதாக நடைபெறும்.

இவர்கள் திருவிழாவின் போது காலையில் ஊர்ப்பந்தி வைப்பார்கள். சுற்றுப்பகுதி கிராமத்தார்கள் சாப்பிடச் செல்வார்கள். மிக நன்றாகக் கவனிப்பார்கள் என்று சொல்வதுண்டு. தேவர் சமூகத்தில் கோவிந்தராஜ் அவர்கள் வழக்கறிஞராக இருந்தார். இவரது சொந்த ஊர் முதுகுளத்தூர் பக்கம் என்பார்கள். கருப்பசாமி என்பவர் பொதுவுடமைக் கட்சியில் இருந்தார். தேநீர்க் கடை விவாதங்களில் ஆக்ரோசமாகப் பேசிப் பார்த்திருக்கிறோம். என்ன தம்பி நல்லா படிக்கிறீங்களா என எம்மை பார்த்து பேசியது நினைவிலுள்ளது.

திருமலைபுரத்திலும் ஊரின் வடக்கேயிருக்கும் செம்மண்ணில் பெரிய கண்மாய் உள்ளது. இங்கு நெல் பாசனம் நடக்கும். தெற்கே கரிசல் காடுகள். சிறிய ஊரென்றாலும் காடுகள் அதிகம். குமுளாங்குளம் காடு என்பார்கள். பெரியம்மாவின் கரிகல் காடுகளுக்கு சிலமுறை களைக்குச் சென்றிருக்கிறோம். கரிசல் கண்மாய்க்கு இருமுறை மீன் பிடிக்கவும் சென்றதுண்டு.

யாம் சொல்வதெல்லாம் தொன்னுறுகளுக்கு முன்பு. தேவேந்திரர் சமூகத்தில் இரத்தினம் ஐயா நன்கு படித்து மருத்துவராகி இருந்தார். உயரமாக கருப்பாக கொஞ்சம் குண்டாக இருப்பார். இவரது தந்தை ஊர் பச்சேரி. ஐயாவுக்கு இரண்டு மகன்கள். ஊரில் செழிப்பான தோட்டங்கள் வைத்திருந்தார். தோட்டத்தில் கினி கோழி கானான் கோழி என விதவிதமான கோழிகள் வளர்த்தார்கள். யாம் பலமுறை களை எடுக்க, கடலை பிடுங்கச் சென்றிருக்கிறோம். எமது திருமணத்தை மருத்துவரய்யாவும், சம்பத் சாரும் தலைமையேற்று நடத்திக் கொடுத்தார்கள். திருமணப் பரிசாக எமக்கு ஐயாவின் அன்பு முத்தம் கிடைத்தது.

தொன்னூறுகளுக்குப் பின்பு தேவேந்திரர்கள் தனியாக ஊருக்குக் கிழக்கே தொகுப்பு வீடுகளுக்கு வந்து விட்டார்கள். முன்பு இவர்கள் ஊருக்குப் பேருந்து கிடையாது. கடைகள் இருக்காது. காலையில் எழுந்தவுடன் தேநீர் அருந்த எங்கள் ஊருக்குதான் வருவார்கள். இரண்டு ஊருக்கும் ஆட்கள் நடந்துக் கொண்டே இருப்பார்கள். தற்போது அரசுப் பேருந்து வருகிறது.

இந்த ஊரைப் பற்றிப் பேசும் போது புற்றுக்கோவிலை யாராலும் மறக்க முடியாது. திடீரென அவ்வளவு பிரபலம் அடைந்த கோயில் இது. யாம் அப்போது ஐந்தாவதோ, ஆறாவதோ படித்ததாக நினைவிருக்கிறது. அகரத்துப்பட்டிக்கு வடக்கே அருப்புக்கோட்டை சாலைக்கு அருகாமையில் புற்றில் அம்மன் இறங்கியதாக தேவர் வீட்டுப் பெண்ணுக்கு அருள் வாக்கு கிடைத்திருக்கிறது. அதற்கேற்றாற்போல் அந்த பகுதி முழுவதும் சுவையான தண்ணீர் ஊற்றாகப் பீறிட்டுக் கிளம்பியது. பல ஊர்களிலிருந்தும் மக்கள் வந்து குவிந்து விட்டார்கள். அப்போதிருந்த பாண்டியன் போக்குவரத்துக் கழகம் புதிதாக அங்கேயே பேருந்து நிலையம் அமைத்தார்கள் எனில் கூட்டத்தை கணக்கிட்டுக் கொள்ளலாம். மதுரையிலிருந்தெல்லாம் சிறப்புப் பேருந்துகள் வந்து சென்றன. நாங்கள் புற்றுக்குப் பக்கத்தில் தேங்காய்க் கடை போட்டிருந்தோம். நல்ல வியாபாரம். அம்மன் அருள் என்ற புத்தகத்தை இரண்டு ரூபாய்க்கு வாங்கி மூன்று ரூபாய்க்கு யாமெல்லாம் கூவிக் கூவி விற்றுத் திரிந்தோம். புட்டி புட்டியாக மக்கள் தண்ணீரை அள்ளிச் சென்றார்கள். தேவர்களும், தேவேந்திரர்களும் பூசாரிகளாக இருந்தார்கள். பெரிய உண்டியலும் வந்து விட்டது. ஆறு மாத காலங்களில் கூட்டம் படிப்படியாகக் குறைந்து விட்டது.

இப்போது புற்று பிரம்மாண்டமாக வளர்ந்து நிற்கிறது. அருள் வாக்குச் சொன்ன பெண் இன்று அதே கோவிலில் சாமியாரினியாக இருக்கிறார். சமீபத்தில் யாம் குடும்பத்தோடு சென்றிருந்தபோது, திருப்பாவையின் ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி பாடலைப் அழகாகச் சொல்லி ஆரத்தி காண்பித்தார். சமற்கிருத சுலோகங்களும் கற்றிருக்கிறார்.

எங்கள் ஊர் பள்ளி நடுநிலைப்பள்ளி என்பதால், எட்டாம் வகுப்பு இறுதித் தேர்வெழுத மேலப் பரளச்சி அரசினர் பள்ளிக்குச் செல்ல வேண்டும். அன்றைக்கு பேருந்து வசதி குறைவு என்பதால் நடந்தே சென்று வருவோம். பாலகிருஷ்ணன் சார் பேருந்தில் வருவார்.

உயர்நிலை, மேல்நிலை படிக்க வேண்டுமென்றால் மேலப் பரளச்சி, எம். ரெட்டியபட்டி, முத்துராமலிங்கபுரம், கல்லூரணி போன்ற ஊர்களுக்குச் போக வேண்டும். வசதியுள்ளவர்கள் பெரும்பாலும் ரெட்டியபட்டி அல்லது கல்லூரணிக்கு அனுப்புவார்கள்.

மேலப் பரளச்சி எங்கள் ஊரிலிருந்து கிழக்கே நான்கு கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. சற்று பெரிய கிராமம். அதற்கு அடுத்து பரளச்சி. பரளச்சியில் தான் காவல் நிலையம் இருந்தது. இங்கு தேவேந்திரகுல வேளாளர்கள் அதிகமாக வசிக்கிறார்கள். நான்கைந்து தேவர் வீடுகளும் இருந்தன. பெரும்பாலும் கிறித்தவர்கள். வேத நாயகம் இந்த ஊர் தான். ஒன்பதாம் வகுப்பில் யாம் அ பிரிவு. வேதநாயகம் ஆ-பிரிவு. எங்கள் வகுப்பு வழியாகத்தான் ஆ-பிரிவுக்குச் செல்ல முடியும்.

எங்கள் ஊரியிலிருந்து அப்போது நிறைய பேர் பரளச்சியில் படித்தோம். சரவணன், விவேகானந்தன் மற்றும் ஆனந்தன் எமது வகுப்புத் தோழர்கள். அண்ணாத்துரை, காங்கேயன், சுப்பிரமணி, ஸ்ரீதர் எமக்கு மூத்தவர்கள்.

சரவணன் பிள்ளைமார் சமூகம். அவர்கள் தெருவில் சில வீடுகளே இருந்தன. சரவணனின் அப்பா சங்கரன் பிள்ளை. அம்மா மீனாம்பாள் அம்மையார். இவர்களது பிள்ளைகள் சண்முகம், முருகன், தமிழரசி, தேவி, சுப்பிரமணி மற்றும் ரமேஷ். செவக்காட்டு தோட்டத்தில் இனிப்பான கொய்யா மரங்கள் இருக்கும். தோட்டத்தில் பெரும்பாலும் கடலை போட்டியிருப்பார்கள்.

மேல்நிலை படிக்கும்போது சரவணன் வீட்டிற்கு யாம் அவ்வப்போது செல்வதுண்டு. வீட்டில் நிறையப் புத்தகங்கள் இருக்கும். ஆனந்த விகடன் தீபாவளி

மலர் பார்த்து யாம் வியந்திருக்கிறோம். மீனாம்பாள் அம்மா மிகுந்த அன்புடையவர். எம்மேல் பேரன்பு கொண்டவர். எம்மை அக்கறையோடு நலம் விசாரிக்கத் தவறமாட்டார். வீட்டிற்கு செல்லும் போதெல்லாம் எம்மை மிகுந்த அன்போடு வரவேற்பார்கள்.

சங்கரன் பிள்ளையின் தம்பி நாகராஜ் பிள்ளை. இவருக்கு அமுதா, காங்கேயன், பரமேஸ்வரி, சிவகுருநாதன் மற்றும் பிரபா எனப் பிள்ளைகள். அமுதா நன்றாகப் படிப்பவர் என ஊரார் பேசிக் கேட்டிருக்கிறோம். காங்கயேன் எமக்கு நல்ல நண்பர். யாம் சென்னையில் இருந்த காலங்களில் நிறைய உதவிகள் செய்திருக்கிறார். காங்கேயனின் அம்மா நவரத்தினம் அம்மையார். நல்ல குணமுள்ளவர். எம்மைப் பார்த்தால், நின்று இரண்டொரு வார்த்தை பேசாமல் செல்லமாட்டார். ஜானகியம்மாள் ஆச்சி மிகவும் கலகலப்பானவர். வீட்டிற்குச் சென்றால் இன்றைக்காவது எங்கள் வீட்டில் சாப்பிட்டுச் செல்ல வேண்டும் என்பார். சிவகுருநாதன் இராணுவத்தில் இருக்கிறார். எம் மீது மிகவும் மரியாதை காட்டுவார். இவர்கள் தோட்டம் சுத்தமடம் செல்லும் சாலையில் இருந்தது. கிணற்றில் தண்ணீர் கொஞ்சம் உப்பாக இருக்கும். கத்தரிக்காய், நாட்டுப் பருத்தி, கடலை போன்றவை பயிரிட்டிருப்பார்கள். இவர்கள் திருமலைபுரத்தில் கடன்வாங்கி அதை அடைக்க முடியாமல் மிகவும் சிரமப்பட்டதை ஊரில் அனைவரும் அறிவார்கள். சிவகுருநாதன் இராணுவத்திற்குச் சென்ற பின்னரே ஓரளவிற்கு குடும்பம் பழைய நிலைக்கு வந்தது.

ஊரில் தபால் பட்டுவாடா செய்பவராக சங்கரநாராயணப்பிள்ளை இருந்தார். நல்ல சத்தமாகப் பேசுவார். காக்கிச் சீருடை போட்டிருப்பார். மணி கட்டிய நீளமான தடி வைத்திருப்பார். இவரது மனைவி சிந்தாமணி ஆச்சி, பனியாரம் சுட்டு விற்றது நினைவிலிருக்கிறது. சில சமயம் பேரன், பேத்திகள் கொண்டு வந்து விற்பார்கள். இவர் பணியின் போது இறந்து விடவே, மகன் சோலையப்பன் தபால் அதிகாரியானார். வீட்டிலேயே தபால் நிலையம் இயங்கியது. தபால் நிலையம் செல்லும்போது சோலையப்பன் பிள்ளை எம்மோடு நன்றாகப் பேசுவார். இவரது சோலை மேட்டுத் தோட்டத்தில் நீர் சுவையாக இருக்கும். இந்த வீட்டுப் பையன் மணிமாறன் ஊரை விட்டுச் சென்று என்ன ஆனார் எனத் தெரியாமல் இருப்பதாகச் சொல்வர்கள். இவர்கள் வீட்டில் இரண்டு பெண் பிள்ளைகள் இருந்தார்கள்.

இராமநாதன் பிள்ளையின் மகன் பாஸ்கரன் பிள்ளை. ரெட்டியப்பட்டியில் பஞ்சாயத்து வளர்ச்சி அலுவலகத்தில் பணிபுரிந்ததாகத் தெரிகிறது.

சங்கரநாராயணன் பிள்ளை மகள் சோலைஈஸ்வரி அம்மையாரைத் திருமணம் செய்திருக்கிறார். நல்ல தம்பதிகளாக இருப்பார்கள். எம்மைப் பார்த்தால் கிருஷ்ணமூர்த்தி சௌக்யமா என இருவரும் அன்போடு நலம் விசாரிப்பார்கள். இவர்களது பையன்கள் சரவணக்குமார், முத்துக்குமார். இருவரும் எமக்கு நல்ல நண்பர்கள். முத்துக்குமார் வேகாவோடும் எம்மோடும் சிறப்பான நட்புக் கொண்டிருந்தார். அனைத்து நண்பர்களும் சேர்ந்து விட்டால் அந்த இடமே மகிழ்ச்சியானதாக மாறிவிடும். நண்பரை எளிதாகக் கோபப்படுத்தி விடுவார்கள். எங்களோடு மட்டைப் பந்து விளையாடவும் அவ்வப்போது வருவார். நாகலட்சுமி, மஞ்சுளா என்ற பெண் பிள்ளைகளும் இருந்தார்கள்.

குருசாமி பிள்ளை எங்கள் வீட்டோடு மிகுந்த நட்பு பாராட்டுவார். அப்பாவோடு நெருக்கமாக இருப்பார். எம்மைப் பார்க்கும் போதெல்லாம் புன்சிரிப்போடு நல்லாயிருக்கியா என நலம் விசாரிப்பார். குருச்சந்திரன் பிள்ளை என்றே சொல்வார்கள். இவரது மனைவி சக்கம்மாள் அம்மையார். அங்கன்வாடியில் பணி புரிந்தார். அமைதியானவராக இருப்பார். பிள்ளைகளுக்கு சத்து உருண்டைகள் கொடுத்து யாம் பார்திருக்கிறோம். கர்ப்பிணிகளுக்கு கொடுப்பார்கள். எமது அக்கா வீட்டிற்கு கொஞ்சம் அதிகமாகவே கொடுப்பதுண்டு. சத்துருண்டை சுவையோடு நல்ல மணமாகவும் இருக்கும்.

இவர்களது பையன்கள் ராஜரத்தினம், காளிதாஸ் மற்றும் குட்டி என்ற விவேகானந்தன். ராஜரத்தினம் எப்போதும் சிரித்த பையனாக இருப்பார். எல்லோருடனும் மிகுந்த மரியாதையோடு பேசுவார். மட்டைப் பந்து விளையாட்டுக்கு தவறாது வந்து விடுவார். துரதிஷ்டவசமாக விடுமுறைக்குப்பின் இராணுவப் பணிக்குச் செல்லும் போது வாகன விபத்தில் இறந்து விட்டார். காளிதாஸ் இராணுவத்திலிருக்கிறார். சமீபமாக ஊரில் வணிக வளாகம் கட்டி வாடகைக்கு விட்டிருக்கிறார்கள். குட்டி புகைப்பட ஸ்டுடியோ வைத்திருக்கிறார்.

சுப்பிரமணிய பிள்ளை இராஜகோபாலபுரத்தில் கணக்குப் பிள்ளையாக இருந்தார். சமயங்களில் எங்கள் ஊரிலும் வரி வசூலித்துப் பார்த்திருக்கிறோம். இவரது பையன் காளி, கலை இலக்கிய இரவில் இருந்தார். சத்தமாக பேசுவார். திடீரென ஒரு நாள் பெரிய கண்மாய் தண்ணீரில் செத்து மிதந்ததாகச் சொன்னார்கள். பாரதி, சண்முகம் இருவரும் ஒன்றாகவே இருப்பார்கள். சென்னையில் மளிகைக் கடை வைத்திருந்தார்கள். சண்முகம் அவர்கள் தலைமுடி

சுருள் சுருளாக இருக்கும். சிலமுறை மட்டைப் பந்து சேர்த்து விளையாடியிருக்கிறோம்.

பர்மா ஆயி என்று இருந்தார். இவர்கள் வீட்டில் துணிகள் தைத்துப் பார்த்திருக்கிறோம். எல்லோருடனும் கலகலப்பாக பேசுவார். காரவீட்டுக்கார மாமா வீட்டிற்கு அடிக்கடி வருவார். ஊரணிக்கரையருகே ஆறுமுகம் பிள்ளை வீடு இருந்தது. பில்லாக் குட்டி வீடு என்பார்கள். பெண் பிள்ளைகள் இருப்பார்கள். இவர்கள் வீட்டில் ஒரு முறை இடி விழுந்து வீடே தீப்பற்றி எரிந்தது. பால் கறந்து கொண்டிருந்தவர்கள் ஓடிச் சென்று வேடிக்கை பார்த்தோம். பட்டறை அருகில் சுப்புலட்சுமி என்பவர் இருந்தார்.

சுத்தமடத்தைச் சேர்ந்த முத்துப் பிள்ளை பேருந்து நிலையம் அருகே களப்புக் கடை வைத்திருந்தார். மதியம் சாப்பாடு கிடைக்கும். பொன்ராஜ் சார் வழக்கமாக இங்குதான் சாப்பிடுவார். வீட்டிற்கு விருந்தினர் வந்து ஓரிரு முறை யாம் சென்று சாப்பாடு வாங்கியிருக்கிறோம். நாடகங்களிலும் நடித்தார். தயிர் வாங்கலையோ, மோர் வாங்கலையோ என கட்டபொம்மன் நாடகத்தில் பெண் வேடமிட்டு ஊர்ககாரர்களை சிரிக்க வைத்திருக்கிறார்.

பிள்ளைம்மார் தெருவில் சங்கரம் பிள்ளை வகையறாக்களுக்கு, குருசாமி பிள்ளை வகையறாக்களுக்கு என இரண்டு காளியம்மன்கள் இருக்கிறார்கள். பீடம் கட்டி புற்று போன்று வைத்திருக்கிறார்கள். இவர்களது பூர்வீகம் நெல்லைப் பக்கமென்றும் கார்காத்த பிள்ளைமாரெனவும் கேள்விப்படுகிறோம்.

வேகாவின் வீட்டிற்கும் யாம் அடிக்கடி செல்வோம். வீட்டில் தெலுங்கு பேசுவார்கள். அப்பா திருமால் ஆசாரி. டெல்லியில் நகை வேலை செய்த காலங்களில், இவர்களது குடும்பம் வசதியாக இருக்கும். டெல்லியில் இந்திரா காந்தி அம்மையார் சுடப்பட்ட கலவரத்தில் இவரது கடையும் பாதிக்கப்பட்டதாகச் சொல்வார்கள். அதன்பின் இவர் டெல்லி செல்லாமல் ஊரிலேயே தங்கி விட்டார். திருமால் ஆசாரி தாயம் விளையாட்டில் கெட்டிக்காரர் என்பார்கள். ஆசாரியார் தாயக்கட்டையை தூக்கியெறிவதை சுற்றிலும் நின்று வேடிக்கை பார்ப்பார்கள். யாம் மேல்நிலை படிக்கும்போது இவர்கள் வீட்டிற்கு தொலைக்காட்சியில் மட்டைப்பந்து பார்க்க அடிக்கடி செல்வோம்.

நண்பர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து மட்டை பந்து பார்க்கும்போது உற்சாகத்தில் சில நேரங்களில் அதிகமாக சத்தம் போடுவதுண்டு. வேகாவின்

அம்மா சரோஜா அம்மையார் அவ்வாறான சமயங்களில்கூட ஒன்றுமே சொல்லியதில்லை. மிகுந்த அன்பானவர். எம்மை நன்றாகப் படிக்க வேண்டுமென வலியுறுத்துவார். ராஜேஸ்வரி, தனலெட்சுமி என இரண்டு அக்காக்கள் இருந்தார்கள். இருவரும் நன்றாகப் படிப்பார்கள். அண்ணாத்துரை அன்பானவராகவும், பொறுமையுள்ளவராகவும் இருப்பார். தற்போது கோயமுத்தூரில் அரசுப் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றுகிறார். இளைய பையன் இராமர் கோயமுத்தூரில் நகை வேலை செய்கிறார். எம்மீது மிகுந்த அன்பு பாராட்டுவார்.

எட்டாம் வகுப்பு விடுமுறையில்தான் யாம் மிதிவண்டி ஓட்டக் கற்றுக் கொண்டோம். அதன்போது கீழே விழுந்து மிதிவண்டியின் மக்காடு வெட்டி காலில் பெரிய காயம் பட்டது. கணபதி நாடார் மிதவண்டிக் கடை வைத்திருந்தார். நிறைய மிதிவண்டிகள் வைத்திருந்தார். அமைதியானவராக இருப்பார். சிறுவர்களுக்கு மிதிவண்டி கொடுக்க மாட்டார். பெரியவர்கள் வந்து சொன்னால் தான் கிடைக்கும். ஒருமணி நேர வாடகைக்கு மிதிவண்டி எடுத்து நண்பர்கள் அனைவரும் ஓட்டித் திரிவோம். அதன்பின் மேல்நிலை வரை மிதிவண்டிப் பயணம்.

படிக்கப் போவதற்கு முன்பே பரளச்சி எமக்கு மிகவும் அறிமுகமான ஊர். நெல் அரைக்க, மசாலை, கேப்பை மாவு அரைக்க அங்கு தான் செல்ல வேண்டும். எங்களூரிலிருந்து கிளம்பினால் அடுத்து இராஜலபட்டி. ஊருக்குள் செல்லாமல் கண்மாய்க் கரையிலேயே சென்று விடலாம். இடையில் பாலம்மா கிணறு அருகே இருக்கும் நாயக்கர்களின் சாமிக்கு மறக்காமல் இரண்டு சீனிக்கல் போட வேண்டும். பரிட்சை சமயங்களில் யாருமே சீனிக்கல் போடாமல் செல்ல மாட்டோம். தேர்வுகளின் போது பாதையின் அருகே இருக்கும் ஆதிதிராவிடர்களின் நடுகல் பெண் தெய்வத்தையும் வணங்குவது வழக்கம். பொம்மநாயக்கன்பட்டி ஊரின் எல்லையில் பெரிய ஆலமரம் இருக்கும். ஊரில் தலைச்சுமை வைத்தால் இங்குதான் இறக்கி வைப்பது. அடுத்து மேலப்பரளச்சி தான்.

அரிசி ஆலைக்கு பலமுறை அக்காவுடன், மற்றவர்களுடன் சென்றதுண்டு, நாடார் அரிசி ஆலையில் மாவுக்கும், மசாலைக்கும் தனித்தனி இயந்திரம் இருக்காது. மாவு அரைத்தால் சில நேரங்களில் காரமாக இருக்கும். இதற்காக சற்றுத் தள்ளி இருக்கும் ஆசாரி ஆலைக்குச் செல்வதுண்டு. இது கொஞ்சம் நவீனமாக இருக்கும். பள்ளிக்கு மிதிவண்டியில் போக ஆரம்பித்த பின் தெருக்காரர்கள் அரைக்க கொடுத்து விடுவார்கள்.

எங்கள் ஊரின் வடக்கே இருக்கும் இராமசாமிப்பட்டியிலும் அரவை மில் இருந்தது. அங்கும் சென்றதுண்டு. இங்கு நெல்லிருந்து கல்லைத் தனியாகப் பிரித்த பின் அரைப்பார்கள். அரவை ஆலைகளில் காசுக்குப் பதிலாக தவிட்டை கொடுத்தால் போதும். தவிட்டை அள்ளி குமியில் போடச் சொல்வார்கள். மாடுகளுக்குப் போட தவிட்டைக் கொண்டு வருவதும் உண்டு. தற்போது எங்கள் ஊரிலேயே அரவை மில் வந்துவிட்டது. மருத்துவர் ரத்தினம் ஐயா வைத்திருக்கிறார். அரவை ஆலையை மாமா கவனித்துக்கொள்கிறார்.

பரளச்சி பள்ளியில் தமிழ் பயிற்று வித்தவர் ஓமனா டீச்சர். கேரளா என்பதால் தமிழ் உச்சரிப்பும், பேசுவதும் வித்தியாசமாக இருக்கும். செய்யுள் மனப்பாடமாகக் சொல்ல வில்லையென்றால் கையை நீட்டச் சொல்லி ஸ்கேலால் அடிப்பார். யாமெல்லாம் அடி வாங்கியிருக்கிறோம். ஒருமுறை மாணவர் ஒருவருக்கு கால் சட்டை கிழிந்திருந்ததால் எல்லோரிடம் வசூல் பண்ணி புதிதாக வாங்கிக் கொடுத்தார். வகுப்பில் கண்டிப்பாக இருப்பார். அன்பு நிறைந்தவர். குடை பிடித்துக் கொண்டே நடப்பார். அருகே இருந்த புல்லாபட்டியில் தங்கியிருந்தார்.

ஆ-பிரிவிற்கு தமிழ் கற்றுக் கொடுத்தவர் பாண்டி ஐயா. உயரம் குறைவாக இருப்பார். கண்கள் பிதுங்கியிருக்கும். கோபம் வந்தால் அடி பின்னி விடுவார். காலைவணக்கக் கூட்டத்தின் போது யாராவது பேசினால் பக்கத்திலிருக்கும் எல்லோருக்கும் அடி விழும்.

சூர்ய பிரபா டீச்சர் வந்தால் பலருக்கும் மகழ்ச்சி. ஆங்கிலம் தகராறு என்பதால் பலரும் கவனிக்கமாட்டார்கள். டீச்சருக்கும் பெரிதாகக் கோபம் வராது. மாதத் தேர்வில் யாம் ஒருமுறை ஆங்கிலம் காப்பி அடித்து மாட்டிக்கொண்டோம். ஒளியத் தெரியாதவர் தலையாரி வீட்டில் ஒளிந்ததுபோல் யாராவது முதல் பெஞ்சில் உட்கார்ந்துகொண்டு புத்தகத்தைப் பார்த்து எழுதுவார்களோ. பின்பு வந்த காலங்களில் ஒரு போதும் இத்தவறைச் செய்ததில்லை.

காந்திமதி டீச்சர் சமூக அறிவியல் கற்றுத் தந்தார். சேட்டை மாணவர்களை படிக்காதவர்களை அட மண்டு எனச் சொல்வது வழக்கம். பொறுமையாகச் சொல்லிக் கொடுப்பார். யாம் சமூக அறிவியல் நன்றாகப் படித்ததால் எம்மை அக்கறையோடு கவனித்துக் கொள்வார்.

பத்தாவது படிக்கும் போது சமூக அறிவியலில் யாம் மாநிலத்திலேயே முதல் மாணவராக வருவோம் என்று கணேசன் சார் சொன்னார். ஆசிரியர் குறி, சோதிடம்

சொல்லுபவர். சோதிடத்தில் தெரிந்ததாம். டீச்சரும் எம்மை உற்சாகப்படுத்தினார். யாம் எண்பத்தி ஒன்பது மதிப்பெண்கள் பெற்றோம்.

கணிதத்திற்கு இராமச்சந்திரன் சார். அர்ப்பணிப்பு உணர்வோடு வகுப்பெடுப்பார். மாணவர்கள் சந்தேகம் கேட்டால் மறுபடியும் சொல்லிக் கொடுப்பார்.

தெற்கு நத்தம் மணி சார் விளையாட்டு ஆசிரியர். கபடி, கோகோ, பேஸ் பால் மற்றும் பூப்பந்து விளையாடினோம். பேஸ் பால் எமக்குப் பிடித்தமான விளையாட்டு. அனைவரும் பேஸ்பால் ஆர்வமாக விளையாடி மகிழ்ந்தோம். நண்பர்களோடு விளையாடிய நாட்கள் மகிழ்சியானவை. கோகோ விளையாட்டில் எங்களது பள்ளி பல முறை கோப்பை பெற்றுள்ளது. ராஜகோபாலபுரம் கென்னடி மிகச் சிறப்பாக கோ கோ விளையாடுவார். பள்ளிக் கூடம் விட்டும் சில நேரங்கள் நாங்கள் கோ கோ ஆடுவதுண்டு. குண்டெறிதல், வட்டெறிதல், நீளம் தாண்டுதல் போன்றவற்றிலும் பலரும் பங்கேற்றோம். ஆசிரியரும் மாணவர்களை நன்கு ஊக்குவிப்பார். மேல் சட்டையை கழற்றிவிட்டு கைபனியன் அணிந்து விளையாடுவதற்கு மாணவர்கள் தயங்குவார்கள். பனியன் அணிந்து வராதவர்களுக்கு அடியும் விழுந்திருக்கிறது..

வேதநாயகம் எம்மைப் போலவே குட்டிப் பையனாக இருப்பான். நாங்களெல்லாம் பழைய மிதிவண்டியில் செல்வோம். இவரது அப்பா வெளிநாட்டில் இருந்ததால் புது வண்டியில் வருவான். எல்லோரிடமும் கலகலப்பாகப் பேசுவான். பரளச்சியிலிருந்து அதிக மாணவர்கள் படிப்பார்கள்.

செங்குளம், மணக்குளம், வடக்குநத்தம், தெற்குநத்தம், செம்மொழிநத்தம் வாகைக்குளம், செட்டிகுளம், கணக்கி, முத்தூரணி போன்ற சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து நண்பர்கள் படித்தார்கள்.

ஒன்பதாம் வகுப்பிலேயே பலரும் உருவத்தில் பெரிய மாணவர்களாக இருப்பார்கள். மணக்குளம் படிகுளத்தான். கருப்பையா இருவரும் அருகருகே அமர்ந்திருப்பார்கள். இராமருக்கு உரக்கடை இருந்தது. பத்தாவது வரை படித்து வெளிநாடு சென்று வந்தார். ஊர் நண்பர்கள் அனைவரிடமும் இனிமையாகப் பேசுவார். செந்தூர் பாண்டியன் படிப்பில் அக்கறையாக இருப்பார். எம்மோடு நெருக்கமாக நட்பு பாராட்டுவார். செங்குளம் பரசுராமன் அவரது அண்ணனோடு ஒன்றாகப் படித்தார்.

பள்ளிக்கூடம் அருகிலிருந்து குமரேசன் வருவார். நல்ல நண்பர். எல்லோரிடமும் அன்பாக இருப்பார். மணிகண்டன் மட்டைப்பந்து பற்றிய தகவல்களை விரல் நுனியில் வைத்திருப்பார். ரிச்சட்ஸ்சன், கேரி சோபர்ஸ் எனப் பெயர்களைச் சொல்லும் போது எமக்கெல்லாம் ஒன்றுமே புரியாது.

பெரும்பாலான மாணவிகள் உள்ளூர்க்காரர்கள். கயல்விழி என்பவரது கண்கள் பெயருக்கேற்றவாறு மிகவும் அழகாக இருக்கும். ஒரு சில பையன்கள் தவிர பெரும்பாலும் மாணவிகளோடு பேச மாட்டார்கள். யாமும் பேசாதவர்கள் பட்டியலில் அடங்குவோம்.

தேர்வுக் காலங்களில் பலரும் ஆலமரத்து நிழலில் படிப்பார்கள். பள்ளிக்கு மிக அருகிலேயே பெரியதொரு கண்மாய் இருந்தது. அதன் கரையிலிருந்த ஆலமரம் விழுதுகளோடு பரந்து நிழல் கொடுத்து நிற்கும். கண்மாயில் தண்ணீர் இல்லையெனில் கண்மாய்க்குள்ளே இருக்கும் கருவேல மர நிழலில் நண்பர்களோடு படிப்போம். பள்ளிக் கூடம் அருகேயிருந்த கோவில் உள்ளே உட்கார்ந்தும் முழு மூச்சாகப் படிப்பதுண்டு. மத்தியானப் பரிச்சை என்றால் காலையிலேயே கோவிலுக்குள் சென்றுவிடுவோம். மத்தியானம் வரை ஒரே படிப்புதான்.

மிதி வண்டி பழுதென்றால் பேருந்து நிலையம் அருகேயிருக்கும் பாஸ்கரன் பிள்ளையின் கடையில் சரி செய்வோம். பிள்ளையவர்கள் பேசிக்கொண்டே இருப்பார். பையன்கள் சரவணன் மற்றும் செல்வம். இருவரும் பம்பரமாகச் சுழன்று மிதி வண்டிகளைச் சரிசெய்வார்கள். எமக்கு வாங்கியது பழைய மிதி வண்டியென்பதால் அடிக்கடி பழுதாகிவிடும். ஆரம்பத்தில் எமது அப்பாவே வந்து சரி செய்து கொடுப்பார். பலநேரங்களில் கடையிலேயே மிதி வண்டியை நிறுத்திவிட்டு நடந்தே செல்வொம்.

வேல்முருகனும் யாமும் நான்கு வருடங்களும் உற்ற தோழர்கள். சொந்த ஊர் செம்மொழி நத்தம் என்ற போதிலும், பொம்மநாயக்கன்பட்டி அருகில் தோட்டம் வைத்திருந்தார்கள். நாங்கள் இருவரும் பத்தாம் வகுப்பு வரை பள்ளியின் இலவச உணவு சாப்பிட்டோம். எங்கள் ஊரின் மற்ற நண்பர்கள் சாப்பிடமாட்டார்கள். மேல் நிலையில் இலவச மதிய உணவு இல்லாததால், இருவரும் மதியம் உணவு விடுதிக்குச் செல்வோம். ஒரு ரூபாய்க்கு நான்கு இட்லிகள் கொடுப்பார்கள். இட்லி கொஞ்சம் சிறியதாக இருக்கும். சட்னி, சாம்பார் நிறைய விட்டு மதியச் சாப்பாடு

முடிந்து விடும். யாம் மேனிலை படிக்கும்போது, புதிதாக ஒரு சாப்பாட்டுக் கடை வந்தது. மூன்று ருபாய்க்கு கோழிச் சால்னாவோடு இரண்டு பரோட்டோ கொடுப்பார்கள். ருசி அருமையாக இருக்கும். ஒரு முறை எமது அம்மாயி கால் முறிவுக்கு வேல்முருகனின் அய்யா வந்து வைத்தியம் பார்த்தார். பன்னிரெண்டு முடித்து விட்டு பாலிடெக்னிக்கில் சேர்ந்தார்.

ஒன்பதாம் வகுப்பில் சில மாணவர்கள் தேர்ச்சியடையவில்லை. பத்தாம் வகுப்பிலும் பலர் வெற்றி பெறவில்லை. எங்கள் ஊர் நண்பர்கள் தேர்வாகி மேல்நிலைக்குச் சென்றோம். நாங்கள் படித்தபோதுதான் மேனிலைக்கு ஆய்வுக் கூடம் கட்டினார்கள். யாம் பனிரெண்டாம் வகுப்பு படிக்கும்போது, எங்கள் தெருவிலிருந்து இரத்தினசபாபதி பதினொன்றும், மாரிமுத்து பத்தாம் வகுப்பும் படித்தனர்.

பதினொன்றாம் வகுப்பில் புது தலைமையாசிரியராக தனலட்சுமி மேடம் வந்தார்கள். திருமணம் ஆகாதவர் எனச் சொல்வார்கள். மிகவும் கண்டிப்புடன் இருப்பார். வெள்ளை முடியில், பெரிய கருப்புக் கொண்டை போட்டிருப்பார். தமிழ் வகுப்பெடுப்பார். மாணவர்களை வாசிக்கச் சொல்வார். தவறாமல் வகுப்பிற்கு வருவதுண்டு. மாணவர்கள் பலரும் முழுக்கை சட்டை போட்டிருந்தோம். அரைக்கை சட்டை மட்டும்தான் போட வேண்டும் எனச் சுற்றறிக்கை வந்தது.

யாம் எம்மிடமிருந்த இரண்டு வெள்ளைச் சட்டையும் முழுக்கையாகவே தைத்திருந்தோம். முழுக்கையாகப் போடாமல் சுருட்டி மடித்து முக்கால் கைக்கு வைத்திருப்பது எமக்குப் பிடிக்கும். டீச்சர் எம்மிடம் பலமுறை சொன்னார். உடனேயே அரைக்கை தைக்க முடியவில்லை. கையை வெட்டித் தைத்து வருமாறு ஒருமுறை கடுமை காட்டி, நாளைக்கும் வந்தால் யாமே வெட்டி விடுவோம் எனவும் சொல்லி அனுப்பினார். அடுத்த நாள் யாம் வசமாக மாட்டிக் கொண்டோம். கத்தரி வைத்து ஓரமாக வெட்டி அனுப்பினார். வெட்டும் முன்னர் இறுதி வாய்ப்பாக நாளைக்கு நீயே வெட்டி தச்சிட்டு வந்துருவியா எனக் கேட்டார். யாம் அமைதியாக நின்று கொண்டிருந்தோம்.

சட்டைகள் ஓரங்களில் கிழிந்தால் தைத்துக் கொள்ளலாம். நடுவில் தைத்தால் அசிங்கமாக இருக்குமல்லவா. அன்று அதற்கும் ஒரு மாற்றைக் கண்டு பிடித்தார்கள். பல்வேறு நிறங்களில், சிறு ஒட்டும் துணிப் பூக்கள் கடைகளில் கிடைக்கும். கிழிந்த இடத்தில் வைத்து இஸ்திரி போடும்போது தேய்த்துவிட்டால்

நன்றாக ஒட்டிக் கொள்ளும். பள்ளியில் இப்படியும் பல பூப்போட்ட சட்டை மாணவர்கள் இருந்தோம். இன்னும் சிலர் எம்ப்ராய்டரி மூலம் பூக்கள் தைத்துக் கொள்வார்கள். மேல்சட்டைகளை விட, கால்சட்டை பின்புறங்களில்தான் பல வகையான பூக்களும் வைக்க வேண்டியதிருக்கும்.

விலங்கியல் மல்லையா சார் சினிமாவில் வரும் கதாநாயகன் போன்று இருப்பார். கூலிங்கிளாசும் ஸ்டைலான தோல்பையும் அணிந்திருப்பார். நன்றாக சொல்லிக் கொடுப்பார். பன்னிரென்டாம் வகுப்பில் வேதநாயகம் இவரிடம் மாட்டிக் கொண்டு செம அடி வாங்கினார். நோட்டில் வேதநாயகம் பள்ளன் என்று எழுதி இருக்கிறார். எல்லோரிடம் நோட்டு வாங்கிப் பார்க்கும்போது மாட்டிக்கொண்டார். அடித்த அடியில் கைக்கடிகாரம் தெறித்து விழுந்தது. அப்படியும் விடவில்லை. அடுத்து பிரம்பு. அடுத்த நாள் ஊரிலிருந்து ஆட்கள் வந்து வாத்தியாரை அடிக்கப் போகிறார்களென்று நாங்களெல்லாம் பயந்துகொண்டே இருந்தோம். ஆனால் அவர் மேல் தான் தப்பு என்றும் வாத்தியார் அடித்தது சரிதானதென்றும் அவர்கள் வீட்டில் சொல்லி விட்டதாக மறுநாள் நண்பர்கள் சொன்னார்கள். அது போல் தேர்வு முடிந்து விடைத்தாள் கொடுக்கும்போதும் குறைந்தது இரண்டு குச்சிகளாவது உடையும். யாம் தான் உடற்கல்வி ஆசிரியரிடம் சென்று குச்சி வாங்கி வரவேண்டும். புளியங்குச்சிகள் நிறைய வைத்திருப்பார். நன்றாகப் படித்ததால் யாம் அடி வாங்காமல் தப்பித்தோம்.

மாயாண்டி சார் தாவரவியல் ஆசிரியர். வரிசையாக ஒவ்வொருவராக புத்தகத்தை வாசிக்கச் சொல்வார். ஜாலியாக வகுப்பு செல்லும். ஆர்வம் இருந்தால் மிக அற்புதமாக வகுப்பெடுப்பார்.

இயற்பியல் இராஜேந்திரன் சார் அர்ப்பணிப்பு உணர்வோடு வகுப்பு நடத்துவார். மாணவர்களிடம் சகஜமாய்ப் பழகுவார். செய்முறை வகுப்பு சிறப்பாக இருக்கும். ஆங்கில ஆசிரியர் சாப்பிட்ட பாத்திரம் கழுவும்போது தண்ணீர் ஊற்றுவதற்கு எம்மைத்தான் கூப்பிடுவார். ஆசிரியர்கள் அறையில் எம்மை நல்ல பையன் என்று மற்றவர்களிடம் சொல்லுவார்.

வேதியியல் ருக்மணி டீச்சர் பொறுமையாக சொல்லிக் கொடுப்பார். மாணவர்களிடம் கடுமையாக நடந்து கொள்ளமாட்டார். இயற்பியல், வேதியியல் மற்றும் ஆங்கில ஆசிரியர்கள் காலாண்டுத் தேர்வு சமயத்திலேயே பணிமாறுதல் பெற்றுச் சென்று விட்டார்கள். மாதக்கணக்காய் ஆசிரியர்கள் இல்லாமல்

சோதனைக் கூடம் பின்பக்கம் உட்கார்ந்து அரட்யைடித்துக் கொண்டிருந்தோம். பின்னர் இயற்பியலுக்கு வந்த டீச்சர் மிக இளவயதினராக இருந்தார். மாணவர்களோ பெரியவர்கள் போன்று இருந்தார்கள். செய்முறை வகுப்பில் மாணவர்கள் மிகவும் விளையாட்டுத்தனமாக இருப்பார்கள்.

மணிராஜ், வேதநாயகம், ஆசைத்தம்பி, அய்யாத்துரை, முருகன், மாரிச்சாமி, யூ. முருகன், ராஜாராம், மாரிமுத்து, கே. முருகன், கருப்பையா, ராமமூர்த்தி, குருஞானமூர்த்தி, முத்துமகாலிங்கம், கோவிந்தன், விவேகானந்தன், சரவணன், ஆனந்தன், இரவிச்சந்திரன், வேல்முருகன், முனியசாமி மற்றும் மனோகரதாஸ் என இனிய மேல்நிலை நண்பர்கள் படித்தோம்.

பெண்களில் வசந்தி, முருகேஸ்வரி, ஏ. முருகேஸ்வரி, நாகம்மாள், ஈஸ்வரி, செல்வராணி, செல்வி, ராமலட்சுமி மற்றும் குணசீலி சுகிர்தா ராணி போன்றோர் உடன் படித்த தோழிகள்.

ஆசைத்தம்பியும் அய்யாத்துரையும் நல்ல நண்பர்களாக இருப்பார்கள். எம்மீதும் அன்பு பாராட்டுவார்கள். மணிராஜ் கணிதம் நன்றாகப் போடுவார். ராஜாராம் இனிய தோழர். எம்மீது அன்பாக இருப்பார். குருஞானமூர்த்தி அமைதியான பையனாக இருப்பார். நன்றாகவும் படிப்பார். முத்துமகாலிங்கம் நல்ல உயரமாக இருப்பார். பரளச்சி சுகிர்தா ராணி ஒல்லியான பெண்ணாக இருப்பார். அவர்கள் ஊர் நணபர்களோடு நன்றாகப் பேசுவார். யாம் நன்றாகப் படிக்கும் பையன் என்பதால் எல்லோரும் எம்மீது நல்ல மரியாதை வைத்திருப்பார்கள்.

பரளச்சியில் படிக்கும்போது காமிக்ஸ் புத்தகங்கள் படிக்க எமக்கு மிகவும் பிடிக்கும். வெள்ளைக்கார குதிரை சாகசக்காரர்களுக்காக எமக்கு கிடைக்கும் சிறு தொகைக்கும், தின்பண்டங்கள் வாங்காமல் புத்தகம் வாங்கிப் படித்தோம். பொது நூலகத்தில் கிடைக்கும் அம்புலிமாமா கதைகளை ரசித்துப் படித்தோம். ராணி, தேவி, கல்கி புத்தகங்களும் வாசிப்பதுண்டு.

ஏப்ரல் ஒன்றாம் தேதியை மாணவர்கள் சிறப்பாகக் கொண்டாடுவார்கள். ஏதேனும் ஒரு பொய்யைச் சொல்லி ஏமாற்றி விடுவார்கள். சட்டைகளில் பேனா மையை அடிப்பதும் நல்லதொரு வேடிக்கை விளையாட்டாக இருக்கும். ஒருவருக்கொருவர் விரட்டிக் கொண்டு திரிவார்கள். இத்தினூண்டு மட்டும் அடிச்சுக்கோ என அனுமதிப்பவர்களும் இருப்பார்கள்.

பத்து மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வு என்பதால், தேர்வெழுத ரெட்டியபட்டிக்குச் செல்ல வேண்டும். பத்தாம் வகுப்பு கடைசித் தேர்வு எழுதிய பின் மாணவர்கள் அனைவரும் சூரியகுமாரி டீச்சர் வீட்டிற்குச் சென்று கொய்யப் பழங்கள் பறித்துத் தின்றது இனிய அனுபவம்.

பன்னிரண்டாம் வகுப்பு பொது தேர்வில் முப்பத்து இரண்டு பேரில் கிருஷ்ணமூர்த்தி, வேல்முருகன், விவேகானந்தன், குருமூர்த்தி மற்றும் நாகம்மாள் என ஐந்து பேர்தான் தேறியிருந்தோம்.

பொதுத் தேர்வு சமயங்களில் எங்கள் ஊர் முருக பக்தர்கள் படிப்பதற்கு கொஞ்சம் தொல்லை கொடுப்பார்கள். பின்னிரவு வரை ஒலிபெருக்கியில் பக்திப் பாடல்கள் பாடிக் கொண்டே இருப்பார்கள். நாங்கள் நிறையப் பேர் படித்ததால் பெரியவர்களிடம் சொல்லிப் பார்த்தோம். பகலிலேயே நன்றாகப் படித்துக் கொள்ளுங்கள் எனச் சொல்லி விட்டார்கள்.

எங்கள் ஊருக்குக் கிழக்கே அழகிய பிள்ளையார் கோவில் இருக்கிறது. இங்கு தான் மாலை போடுவது, பஜனை பாடுவது எல்லாம் நடக்கும். இந்த கோவிலைக் கட்டியது பெரிய வீட்டுக்காரர்கள். இவர்கள் வீட்டில் இராதாகிருஷ்ணன், இராமகிருஷ்ணன் மற்றும் போஸ் என்று அண்ணன் தம்பிகள் இருந்தார்கள். இராதாகிருஷ்ணன் இராமச்சந்திர தலவர் மகள் சிவானந்த சரஸ்வதியை மணம் புரிந்தார். இராமகிருஷ்ணன் மற்றும் போஸ் இருவரும் கர்ணாவதரன் தலவர் பிள்ளைகளான சுந்தரி, முத்துலெட்சுமியை மணமுடித்தார்கள். அவரது முத்த பெண் இந்திராவை நிறைமதி என்னும் ஊரில் மணமுடித்திருந்தார்.

இதில் இராமகிருஷ்ணன் அவர்கள் சபரி மலைக்கு மாலை போட்டுச் செல்வார். அப்போது தான் பிள்ளையார் கோவிலினுள்ளே ஐயப்பனுக்கு வெங்கலச் சிலை வைத்ததாக ஞாபகம். பதினெட்டுப் படிக்கு மேலே மணிகண்டன் மிகவும் சாந்தமாகவும் அழகுடனும் அமர்ந்திருப்பார்.

எமது பள்ளிக் காலத்தில்தான் திருச்செந்தூர் முருகனுக்கு நடை பயணம் ஆரம்பித்தது. பங்குனி உத்தரத்திற்கு நற்பத்தியெட்டு நாட்கள் மாலை போடுவார்கள். பொதுத் தேர்வுகளும் இந்த காலத்தில்தான் நடக்கும். அதற்குமுன் எங்கள் ஊரின் வழியாக மாலை போட்ட வெளியூர் சாமிகள் நடந்து செல்வதைப் பார்த்திருக்கிறோம். வினைதீர்த்தான் ஆசாரி தான் குருசாமி. பாஸ்கரன் பிள்ளை

கணக்கு பிள்ளையாக இருப்பார். முதல் வருடம் ஊரில் நிறையப் பேர் மாலை போட்டு இருந்தார்கள். எங்கள் தெருவிலிருந்து எமது அப்பா, நல்ல தம்பி மச்சான் என பலரும் சாமிகளாக ஆகியிருந்தார்கள். இதில் நல்லதம்பி மிகவும் ஜாலியான பேர்வழி.

பத்தாவது வரை படித்திருக்கிறார். மனைவி மாரியம்மாள் அக்கா. காதல் திருமணம் என்று சொல்வார்கள். ரேடியா செட் வைத்திருந்தார். இவர் பெயரே சவுண்டுதான். கிராமபோன் எனும் இசைத்தட்டு சுற்றுவதை கண் கொட்டாமல் வேடிக்கை பார்த்திருக்கிறோம். எங்கள் வீடு அப்போது கூறை வீடு. மின்சாரம் இருந்ததால் எங்கள் வீட்டில் வைத்துத்தான் இசைத்தட்டுகள் போடுவார். இரவெல்லாம் கூட சில நேரம் எம்.ஜி.ஆர். பாடல்கள் பாடும். எம்மை ஒன்பதாம் வகுப்பு சேர்ப்பதற்கு அப்பாவுடன் வந்திருந்தார். அப்பாவோடு நெருக்கமாக இருப்பார். அ.தி.மு.க பற்றாளர். நல்ல மனிதர்.

ஊரில் புதிதாக மாலைபோட்ட உற்சாகத்தில் சாமம்வரை போட்டி போட்டுக்கொண்டு பாடல்கள் பாடுவார்கள். ஓடிவா முருகய்யா ஓடிவா அய்யா, ஒம் என்ற மந்திரத்தில் ஓடிவா ஐயா.. எனப் பாட ஆரம்பித்தால் எளிதில் நிறுத்தமாட்டார்கள். வேடிக்கை பார்க்க பெண்கள், சிறுவர்கள் என்று கோவிலில் இடம் கொள்ளாது. பின்னர் வெளியில் உட்கார்ந்து பாடினார்கள். சுப்பையா தலவர், பெருமாள் தலவர், சீனிச்சாமி ஐயங்கார் போன்றோர்தான் பெரும்பாலும் பஜனை பாடுவார்கள். கைதட்டுதல் காதைப் பிளக்கும்.

ஒருமுறை சாதி வித்தியாசம் பாக்கிறார்கள் என்று சொல்லி எங்கள் தெருக்காரர்கள் அங்கு செல்லாமல் தெருவிலேயே ஒலிபெருக்கி கட்டி மைக்கில் பாட ஆரம்பித்து விட்டார்கள். பாடத் தெரியாமல் ஒருசில பாடல்களையே திரும்பத் திரும்ப பாடுவார்கள். பின்னர் ஊர்க்காரர்கள் சமாதானம் செய்து ஒன்றாகப் பஜனை நடந்தது.

யாம் பத்தாவது படிக்கும்போது ரெட்டியாபட்டியில் தேர்வு முடிந்து அங்கேயே உடைகள் மாற்றி தனியாக பேருந்தில் திருச்செந்தூருக்குப் போனது இன்றும் பசுமையாக நினைவில் இருக்கிறது. மற்றவர்களெல்லாம் முதலிலேயே சென்று விட்டார்கள். அன்று தான் முதன் முதலில் முழுக்கால் சட்டை போட்டோம். அதுவும் இராஜபாண்டியன் அண்ணன் கொடுத்தது. பெரியதாக இருந்ததால் கீழே மடித்து

ஊக்குகள் மாட்டிக் கொண்டோம். முழுக்கால் சட்டை போட்டுக் கொண்டு முகம் முழுக்க சிரிப்போடு முருகனைப் பார்க்கவா யாம் போனோம்?

பெரியப்பா பையன் தான் இந்த இராஜபாண்டி அண்ணன். பெரியப்பா சுதந்திர போராட்ட தியாகி என்று சொல்வார். அப்பாவுக்கு பங்காளி முறை. தேர்தல் சமயங்களில் காங்கிரஸ்காரர்களைச் கூட்டி வருவார். குமரி அனந்தனின் கா.கா.தே.க விற்கு அதாவது காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ்சுக்கு ஓட்டுக் கேட்டதெல்லாம் நினைவிருக்கிறது. ஏர் உழவன் சின்னத்திற்கும் வாக்கு சேகரித்திருக்கிறார். சுவரொட்டிகளை எம்மிடம் ஒட்டச் சொல்லி நிறையக் கொடுப்பார்.

பெரியப்பாவை தொளக்காது கருப்பையா எனக் கூப்பிடுவதைக் கவனித்திருக்கிறோம். காதில் பெரிய துளை இருக்கும். கடுக்கன் போட்டிருந்திருப்பார் போல. கல்லுக்காளை, காண்ட்ராக்ட் கருப்பையா என்று கூப்பிடுவார்கள். டோபிக்கு போட்ட ஆடைகள்தான் அணிவார். பார்க்கும்போது பெரிய மனிதத் தோரணை இருக்கும். பழக்கமெல்லாம் தேவர் வீட்டு ஆட்களோடுதான். மூன்று வீடுகள் வைத்திருந்தார். மேற்குக் கண்மாய் அருகேயிருந்த தோட்டத்தை நாயக்கருக்கு விற்றதாகச் சொல்வார்கள். மாட்டுத்தரகராகவும் இருந்தார். வீட்டில் தங்குவது அரிது. கடன் வாங்கி அதைக் கொடுக்கவில்லையென தண்டட்டி போட்ட ஒரு பெண் கமுதி பக்கமிருந்து அடிக்கடி வீட்டிற்கு வருவார். இன்னிக்கு மட்டும் வரட்டும், சேதி தெரியும் என வீட்டு தாழ்வாரத்தில் உட்கார்ந்திருப்பார். பெரியாத்தா பாடுதான் திண்டாட்டமாக இருக்கும்.

வசதியாக வாழ்ந்தவர் பின்னாட்களில் குடியாலும் கடனாலும் அவதிப்பட்டார். கடைசிக் காலங்களில் தியாகி பென்சன் வாங்குவதற்கு நடையாய் நடந்தார். வாழப்பாடி இராமமூர்த்தி அவர்களை நன்கு தெரியும் என்பார். நன்றாகப் படிக்குமாறும், வாழப்பாடியாரிடம் சொல்லி நல்ல வேலை வாங்கித் தருவதாவும் எம்மை தட்டிக் கொடுத்து உற்சாகப் படுத்துவார். சின்னவன் நல்லாப் படிக்கிறாண்டா, பெரிய ஆளா வருவான், எவ்ளோ செலவானாலும் பரவால்லே படிக்கப் போட்ரு என அப்பாவிடம் சொல்லி பெருமைப்படுவார். எம்மீது மிகுந்த பாசமாக இருப்பார்.

பெரியாத்தா பெயர் சின்னத்தாய். பெருநாழி பக்கமிருக்கம் சின்னூரைச் சேர்ந்தவர். பெரியாத்தா சமைப்பது தண்ணிரகம். தெருவில் கேலி பேசுவார்கள். குழந்தையம்மாள், ஞானசுந்தரி, ராஜ பாண்டியன், முருகேசன் மற்றும் மணி பிள்ளைகள்.

ராஜபாண்டி அண்ணன் அருப்புக்கோட்டை என்.பி.கே.கல்லூரியில் படித்திருக்கிறார். அப்போது சாதி ரீதியிலான பிரச்சினை ஏற்பட்டு மாணவர்களிடையே கலவரம் வந்திருக்கிறது. இவர் அதில் ஈடுபட்டார் என்று பாதியிலேயே நீக்கிவிட்டார்கள். நல்ல புத்திசாலி. படித்திருந்தால் சிறப்பாக வந்திருப்பார். ஊரில் சரியான வேலை கிடைக்காமல் இருந்தார். வானொலி சரி செய்து கொடுப்பார். எலெக்ட்ரிக்கல் வேலைகள் பார்த்தார். மும்பை சென்று வந்தார். இந்தி நன்றாகப் பேசுவார். இவரை பார்க்க வெளியூர் நண்பர்கள் வந்தால் எங்கள் வீட்டில்தான் சாப்பாடு நடக்கும். பின்னர் தாமதமாக பச்சேரியில் திருமணம் நடந்து தற்பொழுது கேரளாவில் இருக்கிறார்.

குழந்தையம்மாள் அக்கா நன்கு படித்து, கோயமுத்தூரில் தொலைபேசித் துறையில் வேலை பார்ததார். ஊருக்கு வரும்போது எம்மை நன்றாகப் படிக்கணும் சாமி என்று பாசமாகக் சொல்வார். மாமா பரளச்சி. பெயர் நடராஜன். ஒரு பையன், நிர்மலா மற்றும் அமுதா எனக் குழந்தைகள். பிள்ளைகள் ஊருக்கு வரும்போது இராஜபாண்டி அண்ணனோடு இங்கிலீஷ் பேசுவதைப் பார்த்து யாமெல்லாம் கொஞ்சம் பயந்திருக்கிறோம். நிர்மலா வீட்டிற்கு வந்து அம்மாவோடு பேசிக்கொண்டிருப்பார்.

முருகேசன் அண்ணனும் தற்போது கோயம்புத்தூரில் இருக்கிறார். எங்கள் பால்பண்ணையில் பால் வாங்கும் வேலை பார்த்தார். சரியாக பாலக் கேனை கழுவாமல் பால் கெட்டுப்போய் திரும்ப வரும்போது அப்பாவிடமிருந்து திட்டு விழும். பால் ஊற்றுபவர்கள் சிறிய நோட்டு வைத்திருப்பார்கள். அந்த நோட்டில் எத்தனை லிட்டர் என்று குறித்துக் கொடுக்க வேண்டும். அதிகாலையில் தூக்கக் கலக்கத்தில் எம்மை எழுப்பும்போது சில நாட்கள் யாம் போகமாட்டோம். மழை நாட்களில் குடைபிடித்துக் கொண்டு விளக்கு வெளிச்சத்தில் எழுத வேண்டும். இப்படியான நாட்களில் அப்பாவே எழுதி விடுவார். மாதக் கடைசியில் மொத்தக் கணக்கு பார்க்க வேண்டும். சிலபேர் இடையிடையே முன்பணம் வாங்கியிருப்பார்கள். அந்த கணக்கும் பால் சிட்டையில் எழுதி இருக்கும்.

மணி அக்கா அருப்புக்கோட்டை காந்தி நகரில் இருக்கிறார். எட்டாவது வரை படித்திருக்கிறார். யாம் விடுதியில் இருந்தபோது இனிப்புகள் செய்து கொடுத்து விடுவார்கள். பெரும்பாலும் சபாபதி வாங்கி வருவார். பெரியப்பா வந்தால் எம்மைப் பார்க்க மறக்காமல் விடுதிக்கு வருவார். செலவுக்கு பணமும் கொடுப்பார். அக்காவின் கணவர் பெயர் சுப்பையா. ஓரிருமுறை பேசியிருக்கிறோம். இவர்களது பையன்கள் வேல்முருகன் மற்றும் ராம்குமார்.

எங்கள் வீட்டிற்கு எதிர் வீட்டில் சித்தப்பா இருக்கிறார். இது தாத்தா வாழ்ந்த வீடு. சிறுவயதில் பெரிய வீட்டில் மாடு மேய்த்திருக்கிறார். படிக்காதவர். அதிகமாகப் பேசமாட்டார். வேலை பார்க்குமிடத்தில் விளையாட்டாகப் பலரும் கிண்டல் செய்வார்கள். எமது சிறுவயதில் எங்கள் இரு வீட்டாருக்கும் சிறு சிறு சண்டைகள் வந்ததால் யாம் அதிகம் பேசியது இல்லை.

முதலில் அகரத்துப்பட்டியை சேர்ந்த பாலம்மாள் சித்தியைக் கட்டியிருக்கிறார். மகன் பாண்டி பிறந்தபின் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்து விட்டார்கள். பின் குருவம்மாள் அத்தையின் முத்த பெண் பஞ்சவர்ணத்தை திருமணம் செய்து கொண்டார். இவர்களது பெண் வளர்மதி. கொஞ்சம் படித்திருக்கிறார். அத்தையின் இளைய பெண் லட்சுமி, முருகேசன் அண்ணனுக்கு வாக்கப்பட்டிருக்கிறார்.

குருவம்மாள் அத்தையை தும்முசினம்பட்டியில் திருமணம் செய்திருக்கிறார்கள். மாமா இறந்தபின் எங்கள் ஊரிலேயே இருந்து விட்டார். மகன் காளிமுத்து மச்சான். மண்டலமாணிக்கத்தில் திருமணம் நடந்து அவ்வூரிலேயே தங்கி விட்டார். இவரது பையன் கருப்பையாவிற்கு வளர்மதியை மணம் முடித்திருக்கிறார்கள். கருப்பையா, சந்திரா பேருந்து பயணச்சீட்டு கண்காணிப்பாளராக இருக்கிறார்.

யாம் மேனிலை இறுதியாண்டு படிக்கும்போது, கணேசமூர்த்தி அண்ணனும் நல்லதம்பி அவர்களின் பெண் பாண்டியம்மாளும் காதலித்து ஊரை விட்டு ஓடிப்போகும் போது மாட்டிக் கொண்டார்கள். வீட்டில் பெரியவர்களிடம் சொல்லியிருந்தால் பேசி முடித்து நல்லபடியாகவே திருமணம் செய்து வைத்திருப்பார்கள். என்னதான் சொந்தக்காரர்கள் என்றாலும் பெண்ணைக் கூட்டிச் செல்வதை அவமானமாகக் கருதி, பெண்ணின் அப்பாவும் மாமன்களும் ஆயுதங்களோடு இவர்களை விரட்டியிருக்கிறார்கள். அண்ணன் தப்பி விட்டார்.

அண்ணனைக் காப்பாற்றப் போன அப்பாவுக்கு நிறைய இடங்களில் அருவாள் வெட்டு. முருகேசன் அண்ணனுக்கும் காயம்.

நல்ல வேளையாக ஆழமான வெட்டு இல்லை. அப்பா மிகவும் தைரியமானவர். அருப்புக்கோட்டை தர்மாஸ்பத்திரியில் கொஞ்சநாள் இருந்தார். அண்ணன் சென்னையில் இருந்த அக்கா வீட்டிற்குச் சென்று விட்டார். ஒரு வருடம் கழித்து பரளச்சியில் பஞ்சாயத்து நடந்து சமாதானம் முடிந்தது. பின்னர் அருப்புக் கோட்டை செட்டியார்கள் சிவன் கோவிலில் இனிதாகத் திருமணம். அப்பா மட்டும் தான் சென்றார். நாங்களெல்லாம் செல்லவில்லை.

பரளச்சியில் பஞ்சவர்ணம் ஐயா மற்றும் பால்ராஜ் ஐயா என இரண்டு பெரிய மனிதர்கள் இருந்தார்கள். அவர்கள் தான் பல பஞ்சாயத்துக்களைத் தீர்ப்பார்கள். எங்கள் தெருவிலேயே பொதுப்பணத்தை முன்னிட்டு வாய் தகராறு முற்றி, அடிதடி சண்டையெல்லாம் நடந்தது. இரத்த சொந்தங்களே இரண்டு தரப்பாகப் பிரிந்து சண்டை போட்டுக் கொண்டார்கள். தெருவில் நடந்த பஞ்சாயத்துக்களை நாங்களெல்லாம் வேடிக்கை பார்த்திருக்கிறோம். மிக வீராப்பாக பேசுவார்கள். மற்ற சமூகத்தவரை விட தேவேந்திரர்களிடையே ஒற்றுமையுணர்வு குறைவு என்பது எமது கணிப்பு. நாங்கள் ஒரு கோஷ்டி. நல்லதம்பி அவர்கள் எதிர்க் கோஷ்டி. இப்போது தெரிந்திருக்குமே எதற்கு ஓடி போனார்கள் என்று.

அக்காவின் கணவர் விக்கிரபாண்டி. முத்துசாமி மாமா மற்றும் பார்வதி அத்தை இவரது பெற்றோர். பாண்டியம்மாள். தங்கப்பாண்டி, முத்துராமலிங்கம், சோலையப்பன் மற்றும் கருப்பசாமி மற்ற பிள்ளைகள். இதில் கருப்பசாமி எஸ்.பி.கே.யில் விலங்கியல் படித்தார். பின்பு உடற்கல்வி முடித்து தற்போது கமுதியில் ஒரு முஸ்லீம் தாளாளர் நடத்தும் பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராகப் பணிபுரிகிறார்.

அக்காவின் திருமணம் யாம் பதினொன்றாம் வகுப்பு படிக்கும்போது நடந்தது. அதற்குமுன் மச்சான் சென்னை திருவொற்றியூரில் உள்ள ஒரு நிறுவனத்தில் பணியில் இருந்தார். திருமணத்திற்கு முன்பிருந்தே எம்மிடம் அன்பாக இருப்பார். ஊருக்கு வந்தால் சென்னையைப் பற்றி நிறையச் சொல்வார். சினிமாக் கதைகள் எல்லாம் அப்படியே விவரிப்பார். கிழக்குக் கண்மாய்க் கரையிலும் சங்கமடத்திலுமாக மனிதன் திரைப்படத்தின் முழுக் கதையையும் எம்மிடம் சொன்னதுண்டு. திருமணமாகி இரண்டு வருடங்கள் கழித்து ஊருக்கே

வந்துவிட்டார். மிகுந்த திறமைசாலி. தெரியாத வேலைகளே இல்லை என்று சொல்லலாம். இடையில் இருமுறை துபாய் சென்று வந்தார். தற்போது கோயம்புத்தூரில் கம்பி கட்டும் வேலையை மகிழ்ச்சியாகச் செய்து வருகிறார்.

அருப்புக்கோட்டை சைவ பானு ஷத்திரிய கலை அறிவியல் கல்லூரியில் மூன்று வருடக் கல்லூரிப் படிப்பு. இந்தக் கல்லூரிக்கு மட்டுமே யாம் விண்ணப்பம் செய்திருந்தோம். விலங்கியல்தான் எமக்கு விருப்பப் பாடமாக இருந்தது. பன்னிரண்டாம் வகுப்பில் எழுநூற்றி அறுபத்தைந்து மதிப்பெண்கள். அதிகபட்சமாக விலங்கியலில் நூற்றி ஐம்பத்தி ஐந்து. இயற்பியலில் யாம் அதிக மதிப்பெண்களை எதிர்பார்த்தோம். அண்ணாதுரை அருப்புக்கோட்டை தேவாங்கர் கல்லூரியில் இயற்பியல் படித்ததால், எங்களுக்கு சிறப்புப் பயிற்சியும் அளித்தார். இராஜகோபாலபுரத்தைச் சேர்ந்தவர் இயற்பியல் முடித்து பள்ளி அருகேயே அறை எடுத்து மாணவர்களுக்கு சிறப்பு வகுப்பெடுத்தார். சிறிது நாட்கள் அங்கு சென்றும் படித்தோம்.

கல்லூரியில் இருந்து யாம் தேர்வாகி இருப்பதாகவும், இரண்டு ரூபாய் கட்டணம் கட்ட வேண்டும் எனவும் தேர்வுக் கடிதம் வந்தது. பள்ளிக் கல்விவரை எமது அப்பா படிப்பைப் பற்றி ஒன்றுமே சொல்லியது இல்லை. ஆனால் கல்லூரியில் சேர்ந்தபின் பேருந்து நிலையத்திற்கு நடந்து வரும்வரை நிறைய பேசிக் கொண்டு வந்தார். யாமும் காதல் அது இது வென்று கவனத்தைத் திருப்பாமல் நன்றாகப் படிக்க வேண்டும் என்று உறுதியெடுத்துக் கொண்டோம்.

முதல்நாள் கல்லூரிக்குக் கொஞ்சம் பயந்து கொண்டுதான் சென்றோம். வாராந்தாவிலேயே மைதீனைப் பார்த்துவிட்டோம். அதற்கு முன்னரே ரெட்டியபட்டியில் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வெழுதும்போது, குருமூர்த்தி இந்த மைதீன்கானை எமக்கு அறிமுகம் செய்திருந்தார். அவர்கள் இருவரும் பெருநாழியில் படித்த பள்ளித் தோழர்கள்.

நண்பரைக கண்டபின் மகிழ்ச்சியைக் கேட்கவும் வேண்டுமோ. மாற்றி மாற்றி மச்சான் அழைப்புகள். இருவரும் அருகருகே அமர்ந்து கொண்டோம். தமிழ்வழியில் படித்ததால், பேராசிரியர்கள் ஆங்கிலத்தில் பாடம் நடத்தும்போது இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வோம். பின்னர் நண்பர்கள் கூடி விட்டோம்.

மைதீன் நல்ல உயரம். தேர்வுகளின்போது பயங்கர டென்சன் வரும். எவ்வளவு படித்திருந்தாலும், படிக்கலையே மச்சான், கேள்வி எப்டி இருக்குமோ எனப்

பதற்றமடைவார். அறைக்குள் நுழைவதுவரை புத்தகத்தை புரட்டிக்கொண்டே இருப்பார். ஏழு மணி ஸ்ரீராமுக்கு ஊருக்குப் போகும்போது விடுதியிலிருந்து பேருந்து நிலையத்திற்கு மிதிவண்டியில் கூட்டிச் செல்வோம். மச்சான் சொன்ன நேரத்துக்கு வந்துடுவேல்ல என பலமுறை நினைவூட்டுவார். பேருந்து மறையும்வரை கைகாட்டுவார். கடைசியாக அவரது நிஹ்ஹாவில் பார்த்தோம். உள்ளம் நிறைந்த அன்பு மச்சானுக்கு நன்றி.

ராஜேஷ் எமக்குப் பங்காளி. மைதீனுக்கு மச்சான். தீவிரமான ரஜினி ரசிகர். அப்பா இன்னாசிமுத்து மற்றும் அம்மா இருவரும் ஆசிரியர்கள். சொந்த ஊர் முடிமான்னார்கோட்டை. சொக்கலிங்கபுரத்தில் வீடு. பல முறை சென்றிருக்கிறோம். வீட்டில் இருந்த டேப்ரெக்கார்டரில் பாடல்கள் கேட்டு உட்கார்ந்திருப்போம். எஜமானின் பாடல்கள் சரியில்லையென்று நண்பர் வருந்தினார். படம் நன்றாக ஓடுமா ஓடாதா என்பதில் எங்களுக்கு அவ்வளவு கவலை. கிறிஸ்துமஸ் விழாவிற்கு சிறப்பான ஏற்பாடுகள் செய்திருப்பார். படிப்பு முடிந்த பின்பும் எமக்கு தவறாமல் அழைப்பு வரும். யாம் இருமுறை இரவிலும் ராஜேஷ் வீட்டில் தங்கியதுண்டு. நலம் விசாரிப்பதோடு எமது படிப்பு குறித்தும் சார் அக்கறையோடு கேட்பார். அம்மா இன்முகத்தோடு வரவேற்பார்கள். அக்கா மற்றும் தம்பிகள் எம்மீது மிகுந்த பாசம் காட்டுவார்கள். அன்புள்ளம் கொண்ட பங்காளிக்கு நன்றி.

மாதவன் ஆரம்பத்தில் கொஞ்சம் முரடாக இருந்ததால் ஒட்ட மாட்டோம். தேசிய மாணவர் படையில் இருந்தார். கரேத்தேயும் பழகியிருந்தார். இரண்டாம் ஆண்டிலிருந்து இருவருக்கும் நெருக்கம் அதிகமாகியது. அதன் பின்னர் மச்சான்ஸ் வார்த்தைகள்தான். சொந்த ஊர் சாத்தூர் பக்கமிருக்கும் வீரக்குடும்பன்பட்டி. மூன்றாம் ஆண்டில் கல்லூரி விளையாட்டுப் போட்டியின்போது கரேத்தா சாகசங்கள் செய்து காட்டினார். நெருப்பு எரியும் ஓடுகளை தலையால் முட்டி உடைத்தார். ஆணிப்படுக்கையில் படுத்துக்கொள்ள கனகவேல் சாரும் இன்னொருவரும் வயிற்றில் புல்லட்டில் ஏறி இறங்கினார்கள். இந்தப் புகைப்படம் ஆண்டு மலரிலும் வெளிவந்தது. யாம் கைதட்டி உற்சாகப்படுத்திக் கொண்டிருப்போம். பின்னர் வந்த காலங்களில் மாதவன் எமக்கு எவ்வளவோ உதவிகள் செய்திருக்கிறார். மச்சானுக்கு மனப்பூர்வமான நன்றிகள்.

பாலசுப்ரமணியன் பெயரில் மூன்று நண்பர்கள் படித்தார்கள். எல்லோருக்கும் பிடித்த நண்பர் பாலசுப்பிரமணியன். எப்பொழுதும் சிரித்த முகத்துடன் வலம்

வருவார். இனிமையாகப் பேசுவார். ஒருமுறை இவர் வாலைவளத்தம்மனுக்கு அக்கினிச்சட்டி எடுத்தார். நாங்களும் கூடவே சென்று வந்தோம். எம்மை நண்பருக்கு மிகவும் பிடிக்கும். அன்பு நண்பருக்கு நன்றி. நெசவாளர் குடியிருப்பிலிருந்து சுப்பிரமணியம் வருவார். இவர் எதையும் எளிதாக எடுத்துக் கொண்டு பதற்றமில்லாமல் இருப்பார்.

நரிக்குடிப் பக்கமிருந்து பாலசுப்பரமணியன் மற்றும் ஆதாம் மஸ்தான் வருவார்கள். இருவரும் இணைபிரியாத நண்பர்கள். முதுகுளத்தூரிலிருந்து குமரேசன் மற்றும் மகாராணி பயின்றார்கள். படிப்பு முடிந்து மகாராணி வீட்டிற்கு யாமும் நண்பர் மைதீனும் ஒருமுறை சென்று வந்தோம். சுவையான மீன் குழம்போடு சோறு சாப்பிட்டோம். கண்மாய்த் தண்ணீரைக் குடிக்கச் கொடுத்தபோது யாம் மிரண்டு விட்டோம்.

கல்லூரி அருகேயிருந்து பாண்டி படித்தார். அமைதியான நல்ல நண்பர். எம்மீது பெருமதிப்பு வைத்திருந்தார். கிரண்குமார் அதிகம் பேசமாட்டார். நன்கு படிப்பார். அழகாக எழுதுவார். உமாபதி, முருகேசன் நெருங்கிய நண்பர்கள். யாம் முதுநிலை படித்தபோது எம்மைப் பார்க்க முருகேசன் வந்திருந்தார். இருவரும் கணபதி தியேட்டரில் இரவுக் காட்சி படம் பார்த்து மகிழ்ந்தோம்.

செட்டி குறிச்சி பக்கமிருந்து படித்த விஜயகுமாரும் மாதவனும் நெருக்கமாக இருப்பார்கள். தேசீய மாணவர் படை வீரர்கள். விஜயகுமார் பெங்களூருவில் இருந்தபோது எமக்கு கடிதங்கள் எழுதுவார்.

ரங்கன் கொஞ்சம் பெரிய பையனாக இருப்பார். மரக்கடை நிறுத்தம் அருகே மருந்துக் கடை வைத்திருந்தார்கள். கல்லூரிக்கு இருசக்கர வாகனத்தில் வந்து செல்வார்.

சுகந்திராணி, வெண்ணிலா ரூபராணி, ஆனந்தவள்ளி, விஜயா, அம்பிகா, கிருஷ்ண பூங்கோதை, வனிதா, உமாதேவி, செல்வகுமாரி, ஜெயலட்சுமி போன்றோர் உடன் படித்த அன்புத் தோழிகள்.

சுகந்திராணியுடன் கொஞ்சம் உரிமையுடன் பேசிக்கொள்வோம். நண்பர் ராம்குமாருக்கு வேண்டியவர்களென்பதால் வீட்டிற்கும் சென்றதுண்டு. எமது திருமணத்திற்கு அவசியம் வருவோம் என்ற உறுதியை நிறைவேற்றி எம்மை அன்போடு வாழ்த்தினார். அன்பிற்கினிய தோழி.

செல்வகுமாரி அமைதியானவர். சுகந்தியோடு நட்பாக இருப்பார். அம்பிகா ஆசிரியர் பயிற்சிக்குச் சென்றதால் எல்லோருக்கும் அவர்கள் வீட்டில் விருந்து வைத்தார். பேராசிரியரிடம் அனுமதி வாங்காமல் சென்றதற்காக விசாரணையெல்லாம் நடந்தது. வனிதாவின் தந்தை எமது கல்லூரியிலேயே வரலாற்றுத் துறைப் பேராசிரியராகப் பணியாற்றினார். விஜயா, ஆனந்தவள்ளி நன்றாகப் படிப்பார்கள். முதல் பருவத் தேர்வில் இருவரும் வாங்கிய மதிப்பெண்களைப் பார்த்து யாம் ஆச்சரியப்பட்டோம். ஜெயலட்சுமி எல்லோருடனும் அன்பாகப் பேசுவார். அக்கா என அழைப்பார்கள்.

வேதியியல் படித்த விஜயகுமார் மாதவனின் உறவினர். விலங்கியல் மாணவர்களோடு கலகலப்பாக பேசுவார். பழகுவதற்கு இனிய நண்பர். மாதவனை செமத்தியாகக் கிண்டலடிப்பார்.

விடுதியிலிருந்து கல்லூரிக்குச் சென்று வர மிதிவண்டி. இப்போது போல் சுழற்சி முறையில் வகுப்புகள் இல்லை. காலையில் பத்திலிருந்து ஒரு மணி வரையும், மதியம் இரண்டிலிருந்து நான்கு மணி வரையிலும் கல்லூரி நேரம். இயந்திரத்தனமில்லாமல் நாங்கள் ரசித்துப் படித்தோம். மதியம் விடுதிக்கு வந்து சாப்பிட்டு விட்டு கல்லூரிக்குத் திரும்ப வேண்டும்.

விடுதி மிகவும் கலகலப்பாக இருக்கும். தேர்வு சமயங்கள் தவிர ஓய்வு நேரங்களில் பெரும்பாலும் விளையாட்டுதான். இட்லி கல் போன்று இருக்கும். எத்தனை மாணவர்கள் இருக்கிறார்களோ அத்தனை தட்டுக்களை வைத்து சாப்பாட்டைப் பரிமாறுவார்கள். வராத மாணவர்கள் தட்டை மற்றவர்கள் வாங்கி பகிர்ந்து கொள்வார்கள். மூத்த மாணவர்கள் இதையெல்லாம் பார்த்துக்கொள்வார்கள்.

யாம் முதலாண்டு படித்தபோது மூன்றாமாண்டில் தெற்குநத்தம் ஜெய்சங்கர் அண்ணன் இருந்தார். தேவாங்கர் கல்லூரியில் பொருளாதாரம் படித்தார். எம்மீது மிகுந்த அக்கறை காட்டுவார். அண்ணனின் நண்பர்களெல்லாம் எம்மை நன்றாகக் கவனித்துக் கொள்வார்கள். சாத்தூர் திருவிருந்தான்பட்டி வேலாண்டி அண்ணன் விடுதித் தலைவராக இருந்தார். சிவகாசியிலிருந்து செல்வக்குமார் அண்ணன் மற்றும் இராமநதியிலிருந்து அருள் அண்ணன் படித்தார்கள். அனைவரும் எம்மீது அளவுகடந்த பாசம் காட்டுவார்கள். இவர்கள் பின்னர் மதுரை காமராஜர் பல்கலையில் முதுகலை பயின்றார்கள்.

எல்லோருடனும் பேசிப் பழகினாலும் நாங்கள் சில பேர் படிப்பு சார்ந்து நெருக்கமாக இருப்போம். யாம், தங்கமணி, சேசுதாசன், தங்கராஜ், ரவி மற்றும் ஜகதீசன் நன்கு படிப்போம். படிப்பதைப் பற்றி அக்கறையாகப் பேசிக் கொள்வோம். ஆங்கிலம் தகராறு என்பதால் யாம் மற்றவர்களுக்கும் சிறிது உதவுவோம். சாயந்தரமானால் வெளியில் படிக்கக் கிளம்பி விடுவோம். காடு, கரை, கிணறு, வாய்க்கால், மரம், தோப்பு, ரோடு என கிடைக்கும் இடங்களிலெல்லாம் படிப்போம். பெரும்பாலும் நடந்துகொண்டே படிப்பார்கள். விடுதியிலிந்து சற்று தூரத்திலிருந்த ஒரு கிணறு அருகே யாம் வழக்கமாகப் படிப்போம். தேர்வு நாட்களில் தூரத்தில் பயன்பாடில்லாமலிருந்த ஒரு தறிக்கூடத்தில் உட்கார்ந்து படிப்பதுண்டு.

மிதிவண்டி இருப்பதால் தொலை தூரங்களுக்குப்போய் அமைதியான இடமாகப் பார்த்துப் படிப்பதும் உண்டு. மூன்றாமாண்டு பயிலும்போது இரவு உணவிற்குப்பின் கல்லூரிக்கே வந்து விடுவோம். வராண்டாவில் அமர்ந்து கொள்வோம். திரும்பிச் செல்ல பன்னிரண்டு மணிக்குமேல் ஆகும். இது போன்று தேவாங்கச் செட்டியார் பள்ளிக்கும் படிப்பதற்காக பலரும் இரவு நேரங்களில் சென்றிருக்கிறோம். இரவு வெகுநேரம் படிப்போம்.

சில நேரங்களில் இரவில் கோஷ்டியாக சைக்கிளை எடுத்துக் கொண்டு பூக் கடைவீதி அருகே இருக்கும் கடைக்கு தேநீர் குடிக்கச் செல்வதுண்டு. பன்னும் அருமையாக இருக்கும். இரண்டு பன், ஒரு பால் சாப்பிட்டால் வயிறு நிரம்பி விடும். இரவு நெடுநேரம் வரை கடை திறந்திருப்பார்கள்.

வேதியியல் படித்த தங்கமணி எம்மீது மிகுந்த மரியாதை வைத்திருப்பார். ஊர் குப்பம்பட்டி. நன்றாகப் படிப்பார். விவேகானந்தர் மேல் பற்றுக் கொண்டவர். இனிய நண்பர். எம்மை இன்றுள்ள காந்தி என்று சொல்லுமளவிற்கு எம்மீது பேரன்பு கொண்டவர் சேசுதாசன். சொந்த ஊர் பனைக்குடி. வழக்குரைஞராக ஆகவேண்டுமென விருப்பம் கொண்டிருந்தார். நல்ல நண்பர்.

கல்லூரி என்னும் கவின்மிகு பூங்காவிலும், விடுதி என்னும் மலர்த்தோட்டத்திலும் பாடித்திருந்த பறவைகளாய் இருந்த நாட்கள் அழகானவை. என்றும் இனியவை.

விடுதியில் எந்நேரமும் பேச்சும், சிரிப்பும், விளையாட்டுமாக இருக்கும். தண்ணீர் அதிக உப்பாக இருந்ததால் குளிப்பதற்கு வெளியே செல்வோம். விடுதி மாணவர்கள் குளிக்கச் செல்வது வேடிக்கையாக இருக்கும். இன்னொருவர் துணை

வேண்டும். சுற்றுச் சாலையில் சற்று தள்ளி இருந்த செங்கல் சூளை அருகே அடிகுழாய் இருந்தது. ஒருவர் அடிக்கும் போது இன்னொருவர் உட்கார்ந்து குளிக்க வேண்டும். வாளி வாங்கி வைத்தால் ஆளாளுக்கு எடுத்துச் செல்வார்கள். சில நாட்களிலேயே உடைந்துவிடும். யாரும் வாங்கமாட்டார்கள். ஊர்க்காரர்கள் மிதி வண்டிகளில் வந்து பிளாஸ்டிக் குடங்களில் இங்கிருந்து தண்ணீர் எடுத்துச் செல்வார்கள். விடுமுறை நாட்களில் செங்கல் சூளை அருகே இருந்த இடுகாட்டு அடிகுழாயில் துணிகளைத் துவைப்போம்.

அம்மன்குளத்திலிருந்து பாண்டி அண்ணன் படித்தார். நல்ல குணமுள்ளவராக இருப்பார். ரங்கசாமி அண்ணன் எல்லோரையும் அரவணைத்துச் செல்வார். எங்கள் கல்லூரியில் முதுநிலை வணிகவியல் பயின்றார். விடுதித் தலைவராக இருந்தபோது நன்றாக நிர்வகித்தார். இவரது அண்ணன் குழந்தைகளை சில சமயம் விடுதிக்குத் தூக்கி வருவார்.

சின்னசெட்டிகுறிச்சியிலிருந்து பல பேர் விடுதியிலிருந்தார்கள். பாண்டி அண்ணன் தடாலடியாகப் பேசுவார். சீட்டாட்டத்தில் இவரை வெல்வது மிகவும் அரிது. முதுநிலை வணிகவியல் படித்தார்.

விடுதியில் சிலரைத் தவிர எல்லோரும் அட்டவணை இனமாக இருப்பதால் உரிமையோடு பேசிப் பழகுவார்கள். ஆடைகளை மாற்றி போட்டுக் கொள்வதுண்டு. புதிதாக ஒரு ஆடை எடுத்தால், பல சுற்று முடிந்தே நம்மிடம் திரும்பும். வேதநாயகம் மூன்றாம் ஆண்டில் விடுதிக்கு வந்தார். அருகருகே இருப்போம். இருவரும் ஒரே மாதிரி இருப்பதால் ஆடைகளை மாற்றிப் போட்டுக் கொள்வோம்.

மழைக்காலங்களில் அனைவர் மிதிவண்டிகளுக்கும் விடுதி அறைக்குள் வந்து விடும். தூங்குவதற்கு இடமில்லாமல் இருக்கும்போது மிதிவண்டியையும் உள்ளே வைத்துக் கொள்வார்கள். விடுதியை முறைவைத்து மாணவர்கள் பெருக்கி சுத்தம் செய்வோம். விடுதிக் கண்காணிப்பாளர் இருக்கமாட்டார். என்றேனும் ஒரு நாள் வந்து கொஞ்ச நேரத்தில் சென்று விடுவார். வேறு பல விடுதிகளும் பார்த்தார் என நினைக்கிறோம்.

விடுதியில் எமக்கு மூத்தவராக விலங்கியல் முத்துச்சாமி அண்ணன் இருந்தார். அவருடைய புத்தகங்களை எமக்குக் கொடுத்து விடுவார். எம்மை நன்கு படிக்குமாறு மிகவும் ஊக்கமூட்டுவார். காரியபட்டி அருகேயிருக்கும் அண்ணனது ஊரான கடமங்குளத்திற்கு ஒருமுறை புத்தகம் வாங்கச்

சென்றிருந்தோம். அன்று அவர்கள் ஊரில் கண்மாய் அழிந்திருந்தது. அயிரை மீன் குழம்பும் ரேஷன் அரிசிச் சாப்பாடும் அவ்வளவு ருசி. விடுதியிலிருந்த குமார் அண்ணனும் பக்கத்து ஊரில் இருந்தார். மூவரும் காரியாபட்டியில் திரைப்படம் பார்த்தோம்.

கனகனேந்தல் மாரியப்பன் அண்ணன் மறக்க முடியாதவர். இவரது தோழர்கள் இவரை செமத்தையாகச் கிண்டலடிப்பார்கள். எல்லோரையும் சமாளித்து வீடுவார். குறிப்பாக பரமக்குடி பக்கமிருந்து வந்த லட்சுமணன் அண்ணன் இவரை கலாய்த்துக் கொண்டேயிருப்பார். எமது கல்லூரியில் வணிகவியல் பயின்றார். பியர்லெஸ் காப்பீட்டு நிறுவத்தில் தரகராகவும் பணியாற்றினார். ஒரு முறை ஊர் திருவிழாவிற்கு எங்களை அழைத்துச் சென்றார். கல்குறிச்சியில் இறக்கி சிறுது தூரம் நடந்தோம். ஆற்றின் மறுகரையில் தோட்டத்தோடு வீடு. எங்களுக்காகவே ஒரு ஆட்டை அறுத்திருந்தார்கள். காரமான கறி விருந்து நடந்தது. சூலக்கரையைச் சேர்ந்த சந்திரன் அண்ணனும் எம்மீது நட்பாக இருப்பார்.

மூன்றாமாண்டு மாணவராக யாம் விடுதியிலிருந்தபோது இளைய மாணவர்கள் எம்மீது மிகுந்த அன்புடனும், நட்புடனும் இருப்பார்கள். எம்மை விடுதித் தலைவராக்க விரும்பினார்கள். யாம் படிப்புக் கெடுமென்று மறுத்துவிட்டோம். பின்னர் பூலாங்கால் பகுதியைச் சேர்ந்த கண்ணதாசன் விடுதித் தலைவரானார்.

காலையில் முதல்வேளையாக நணபர்களோடு சேர்ந்து டீக்கடைக்குச் சென்றுவிடுவோம். சில நேரங்களில் டீக்கு போலாமா சார் என சபாபதி கூப்பிடுவார். சூடான சுவையான தேநீரைப் பருகியபடியே தினசரிகளைப் படித்துவிடுவோம். தேர்வு நேரமெனில் அப்படியே படிக்கக் கிளம்பிவிடுவோம்.

இரத்தினசபாபதி கலகலப்பான, எதையும் எளிதாக எடுத்துக் கொள்ளும் பையனாக இருந்தார். விடுதியில் எமக்கு முன்னால் பீடி குடிக்க மாட்டார். ஆங்கில கட்டுரைகளுக்கு தமிழில் அர்த்தம் கேட்டு எப்படியோ எழுதி விடுவார். நிலத்தில் வேலை இருக்குமென்பதால், ஊரில் மட்டை பந்து விளையாடுவதற்கு பெரும்பாலும் வரமாட்டார். விடுதி ஆண்டு விழாக்களில் நண்பர்களோடு சேர்ந்து விடிய விடிய நடனம் ஆடி ஜாலியாக இருப்பார். எப்போதும் சிரித்த முகத்துடன் அனைவரோடும் நன்றாக பழகக் கூடியவராக இருப்பார்.

திருச்சுழி பகுதியிலிருந்து ஏராளமானோர் விடுதியில் தங்கியிருந்தார்கள். நல்லுக்குறிச்சி பழனிக்குமார் எல்லோரிடமும் நன்றாகப் பேசுவார். இராமு, முருகன், சங்கிலி, மருதன், பரமசிவம் மற்றும் சின்னத்தம்பி ஆகியோர் எம்மோடு நட்பு பாராட்டுவார்கள்.

சுந்தரமகாலிங்கம் பழகுவதற்கு இனிமையானவர். ஏம்மீது பேரன்பு கொண்டிருந்தார். குடும்ப விவகாரங்களைப் பேசிக் கொள்ளும் அளவிற்கு நெருக்கமாக இருந்தோம்.

அரசகுளம் முத்து சிறந்த நண்பர். படிப்பு சார்ந்து அதிகமாக விவாதிப்போம். எம்மோடு அளப்பரிய அன்பு வைத்திருந்தார். யாம் பணிக்கு வந்த பின்பும் கூட கடிதப் போக்குவரத்து வைத்திருந்தோம்.

முதுகுளத்தூர் பக்கமிருந்து துரை, லிங்கம், பூமிநாதன் போன்றவர்கள் இருந்தார்கள். நாங்கூர் வேல்முருகன் சிரித்த முகத்துடன் இருப்பார். தேவாங்கரில் வரலாறு படித்தார். அனைவரிடமும் மிகுந்த மரியாதையோடு பழகுவார். இவரும் முத்துக் குமாரும் செய்தித்தாள்கள் விநியோகிக்க அதிகாலையிலேயே செல்வார்கள்.

ஆனந்திபாபா செல்லப் பிள்ளை. சொந்த ஊர் வால்பாறை அக்காமலை. மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டும் விளையாடிக் கொண்டும் இருப்பார். புளியங்குடி ராஜா நன்றாகப் படித்து முன்னேற வேண்டுமென்று அடிக்கடி பேசுவார்.

சூரம்பட்டி கருப்பையா, பண்ணை மூன்றடைப்பு சின்னத்தம்பி, முக்குளம் துரைச்சாமி பாண்டியன், கரையாந்தல் முருகன், வதுவார்பட்டி சீனிவாசன், நத்தத்துப்பட்டி ஈசுவரன், போத்திரெட்டிபட்டி சந்திரன், அம்மன்கோவில் தெரு மணிகண்டன், சடையனேரி பூமினாதன், ஒட்டன்சத்திரம் சீனிவாசகன், செட்டிகுறிச்சி செல்வம், பிருதிவிராஜன் உட்பட ஏராளமான நண்பர்கள் எம்மீது அன்பு பாராட்டினார்கள்.

ஒருமுறை விடுதி மாணவர்கள், கஞ்சநாயக்கன்பட்டியைச் சேர்ந்த பெண்களை மில் வேலைக்குச் செல்லும்போது கேலி பேசினார்கள் என்று தகராறு வந்துவிட்டது. அவர்கள் ஊரிலிருந்து பலரும் வந்து விட்டார்கள். விடுதியில் அடுப்பெரிக்க பெரிய பெரிய உருட்டுக் கட்டைகள் வைத்திருப்பார்கள். மாணவர்கள் அவற்றை எடுத்துக் கொண்டு நின்றார்கள். காவல்கார அண்ணன்,

சமையல்கார அண்ணன்கள் மற்றும் எம்மைப் போன்ற மாணவர்கள் சமாதானம் பேசியதில் தகராறு தீர்ந்தது.

விடுதியின் ஆண்டு விழா சிறப்பாக இருக்கும். ஒலிபெருக்கி வைத்து ஆட்டம், பாட்டமென்று மாணவர்கள் தூள் கிளப்புவார்கள். சிலபேரைக் தவிர மற்றவர்கள் மது அருந்தியதில்லை. இரவு வி.சி.டி.யில் படம் பார்க்கும்போது ஒருவரும் தூங்கமாட்டார்கள். மறுநாள் கேலி, கிண்டல் பேச்சுகளால் விடுதி கலகலக்கும்.

ஐந்தாவது பருவத் தேர்வு சமயத்தில் மழை கொட்டுகொட்டென கொட்டித் தீர்த்தது. தேர்வுகளை பத்து நாட்கள் தள்ளி வைத்தார்களெனில் எவ்வளவு மழை பெய்திருக்கும் என அறியலாம். வைகையாற்றில் வெள்ளம் கரைபுரண்டு தெருக்களுக்குள் நுழைந்து விட்டதாக பரபரப்பான செய்திகள் வந்தன. கடைகளிலிருந்த பாத்திரங்கள் போன்ற பொருட்களெல்லாம் வெள்ளநீரில் மிதந்ததாக செய்தித் தாள்களில் படித்த நினைவிருக்கிறது.

இறுதி வருடம் படித்தபோது, வெள்ளிக்கிழமைகளில் யாம் பெத்தம்மா கோயிலுக்கு மிதிவண்டியில் சென்று வருவோம். துடியான அம்மனென்று சொல்வார்கள். சூடம், பத்தி வாங்கிச செல்வோம். கண்களில் வெள்ளிக் கவசம், மஞ்சள், சந்தனம் ஏற்று அம்மன் அருள்பாலிப்பார். எமக்கு தனிப்பட்ட வேண்டுதல் எப்பவும் இருந்ததில்லை. வேறு கோவில்களுக்கு யாம் சென்றதில்லை.

ஒருமுறை ஆடி வெள்ளிக்கிழமையின்போது, கோவிலருகே பள்ளி மாணவர்களுக்கு கூல் ஊற்றியிருக்கிறார்கள். கோவில் சாலை அருகேயிருந்ததால் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து கூட்டத்துள் புகுந்துவிட்டது. பல மாணவர்கள் இறந்து போனார்கள். யாம் பள்ளியில் படிக்கும் போது இச்சம்பவம் நிகழ்ந்தது.

அருப்புக்கோட்டையில், நாடார்களின் மாரியம்மன் திருவிழாவும் பொருட்காட்சியும் புகழ் பெற்றவை. ஆயிரக்கணக்கானோர் அக்கினிச் சட்டி எடுப்பார்கள். பூச்சாட்டுதலும் நடக்கும். விழாவின் முக்கிய நிகழச்சியான பூமிதி வைபவம் நடக்கும். அன்று எங்கு பார்த்தாலும் மஞ்சள் நிற ஆடைகளும், வேப்பிலை கொத்துக்களுமாகத் தெரியும்.

நாடார் வீட்டுப் பெண்கள், அலங்காரம் செய்துகொண்டு அவரவர் வீடுகளின் முன் பேச்சும், சிரிப்புமாக அமர்ந்திருப்பார்கள். மாப்பிள்ளை வீட்டார் பிடித்தமான பெண்ணைத் தேர்ந்தெடுப்பதற்காக இந்த நடைமுறை. நல்ல ஏற்பாடுதான்.

எஸ்.பி.கே.பள்ளி மைதானத்தில் நடக்கும் பொருட்காட்சி பல நாட்கள் நீடிக்கும். இது போன்ற பொருட்காட்சியை விடுதி மாணவர்கள் பார்த்திருக்க வாய்ப்பில்லையென்பதால் அனைத்து மாணவர்களும் மிதிவண்டிகளை எடுத்துக் கொண்டு கிளம்பிவிடுவோம். கூட்டம் அலை மோதும். நிறைய வேடிக்கை, விளையாட்டுக்கள் நடக்கும். ராட்சத ராட்டினம் வைத்திருப்பார்கள். சொற்பொழிவு, பட்டிமன்றம் நிகழ்ச்சிகளும் கேட்கலாம். திரைப்படங்களும் போடுவார்கள்.

செட்டியார்களும் சௌடாம்பிகையம்மன் திருவிழாவிற்கு தேவாங்கர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பொருட்காட்சி வைப்பார்கள். இரண்டு ருபாய் கட்டணம் செலுத்தி தூரமாக நின்று கணினியைக் கண்டு களித்தார்கள். அன்று கணினி சாதனம் அவ்வளவு அரிதாக இருந்தது. இருபது வருடங்களுக்குள்ளாக அறிவியல் உலகம் எவ்வளவு மாறிவிட்டது.

எங்கள் ஊருக்குப் பக்கத்தில் இருக்கும் கஞ்சம்பட்டியில் இருந்து ஈசாக் என்ற ராம்குமார், ராஜாராம் மற்றும் முருகன் விடுதியில் இருந்தார்கள். இதில் ஈசாக் மிகவும் ஜாலியாக இருப்பார். எங்கள் கல்லூரியில் வேதியியல் படித்தார். மட்டைப்பந்து சிறப்பாக விளையாடுவார். கையெழுத்து அழகாக இருக்கும். டீ.வி. தம்பி பெயர் சூட்டியவர் இவர்தான். விடுதியில் எமக்கு மிகவும் ஆதரவாக இருப்பார். எங்கள் ஊருக்குப் பக்கத்து ஊர் என்பதால் மேல்நிலையிலிருந்து மட்டைப் பந்து சேர்ந்தே விளையாடுவோம். பயங்கர வேகத்தில் பந்து வீசுவார். அவர்கள் ஊர் அணி எங்கள் ஊருக்கு வந்து விடும். அவர்கள் ஊர் கரிசல்காடு என்பதால் மைதானம் இருக்காது. ஆனாலும் காட்டுக்குள் ஒரு மைதானம் தயார்செய்து விளையாடுவதுண்டு. கருவேல முட்கள் நிறையக் குத்தும். கோடையில் அவர்கள் ஊர் குளம் வற்றும்போது குளத்துக்குள்ளும் போட்டிகள் நடக்கும். எம்மை வீட்டிற்கு அழைத்துச் சென்று அன்பு பாராட்டுவார். எங்கள் வீட்டினருக்கும் அவரை நன்கு தெரியும்.

சென்னையில் வழக்கறிஞராக இருந்த கஞ்சம்பட்டிக்காரர், நிறைய மாணவர்களைப் படிக்க வைத்தார். மாணவர்கள் அவர்மீது மிகுந்த மரியாதை வைத்திருப்பார்கள். எங்கள் ஊர் பள்ளிக்கூடத்திற்கெல்லாம் நோட்டுப் புத்தகங்கள் கொடுத்திருக்கிறார். இவ்விழாவிற்கான மட்டைப் பந்து போட்டியில் நான்கு ஊர் கலந்து கொண்டதில் எங்கள் ஊரே பட்டம் வென்றது. இறுதிப் போட்டியில் யாம்

அதிக ஓட்டங்கள் எடுத்தோம். விடுதியிலும் நாங்கள் ஒரு மட்டைப்பந்து அணி வைத்திருந்தோம். மாலை நேரங்களில் விளையாடுவதுண்டு.

விடுதி மாணவர்களோடு சேர்ந்து மட்டைப்பந்து விளையாட உள்ளூர் நண்பர்களும் வருவார்கள். தற்போதைய தேவாங்கர் கல்லூரி அன்று காலி இடமாகக் கிடந்தது. அங்கே சில போட்டிகள் நடைபெற்றன. தொலைகாட்சியில் மட்டைப் பந்து விளையாட்டு பார்க்க ஆவலாகத் திரிந்ததுண்டு. அதிலும் உலகக் கோப்பை என்றால் சொல்லவும் வேண்டுமோ. சிவன் கோவிலருகே இருந்த தேவாங்கர் கல்லூரி மாணவர்களின் முக்கிய விடுதிக்கு நண்பர்களோடு சென்று விடுவோம். முக்கியமான ஆட்டமெனில் பார்ப்பதற்கு இடம் கிடைக்காது. சாக்கடை நாற்றத்தில் இருக்கிறீர்கள் என நண்பர்களை கிண்டல் செய்தாலும் அங்கேதான் போட்டிகள் பார்க்கச் செல்ல நேரிடும். இராமசாமிபுரத்தில் இருந்த ஜெயவிலாஸ் மில் தொழிலாளர்கள் ஓய்வெடுக்கும் அறையில் தொலைக்காட்சி இருக்கும். அங்கே சென்றால் ஆட்டம் முடியும்வரை உட்கார்ந்து பொறுமையாகப் பார்க்கலாம். நண்பர்கள் அனைவரும் மிதிவண்டிகளில் பறந்து விடுவோம். தொன்னூற்று இரண்டாமாண்டில் நடந்த உலகக்கோப்பை போட்டிகள் நன்றாக நினைவிலுள்ளன. தென்னாப்ரிக்கா தோற்ற ஒரு அரையிறுதியில் குளூஸ்னருக்கு செம டோஸ் விழுந்தது. லாரா, சச்சின், வார்ன் போன்றவர்கள் ஜாம்பவான்களாக மாறிக்கோண்டிருந்த காலமது.

மட்டைப் பந்தில் எமக்கு கபில் தேவையே நிரம்பப் பிடிக்கும். ஒடிவந்து இடது கையை கழுத்துக்கு அருகே கொண்டு வந்து ஸ்டைலாகப் பந்து வீசுவார். யாமும் அவரைப் போலவே பந்து வீசப் பயிற்சி செய்திருக்கிறோம். துவக்க வீரராகக் களமிறங்கும் ஸ்ரீகாந்தின் பேட்டிங் கலக்கலாக இருக்கும். ரவி சாஸ்திரி கொஞ்சம் பந்துகளை வீணடிப்பார். நிலைத்து ஆடினாரென்றால் ஆட்டம் அருமையாக இருக்கும். இம்ரான்கான் நேர்த்தியாக பந்து வீசுவார். வாசிம் அக்ரமின் பந்து வீச்சு துல்லியமாக இருக்கும். டேவிட் பூனை அவுட்டாக்குவதற்குத் திணறுவார்கள். ஆலன் பார்டர், மார்க் டைலர், ஸ்டீவ் வாக் பேட்டிங் சிறப்பாக இருக்கும். ஆன்டி பிளவர் ஒற்றை ஆளாகப் போராடுவார். மைக்கேல் பெவன், ஹஸ்பர், ரணதுங்கா போன்றவர்கள் அவுட்டாகவே மாட்டார்களோ என நினைக்க வைப்பார்கள். ஆம்புரோஸ் மிக ஆக்ரோசமானவர். வால்ஸின் முகத்தில் தெரியும் அமைதி பந்து வீச்சில் தெரியாது. மார்ட்டின் குரோ, கிரகாம் கூச், ஹான்சி குரோனியே, அசாருதீன் போன்றோரின் கேப்டன்சி அபாரமாக இருக்கும்.

ஒருமுறை கல்லூரி ஆண்டு விழாவில் நடனமாடுவதற்காக விடுதி மாணவர்கள் ஒத்திகை பார்த்தார்கள். எமக்கு நன்றாக நடனம் வருகிறது என்று எம்மையும் சேர்த்துக் கொண்டார்கள். அந்த வருடம் அண்ணனுக்கு அண்ணன்மாரே பாடல். அடுத்தாண்டு ஐய் லவ் இந்தியா படத்தில் வரும் குறுக்குப் பாதையிலே பாடலுக்கு நண்பர்களோடு ஆடினோம்.

யாம் இரண்டாமாண்டின் இறுதியில்தான் அவரைப் பார்த்தோம். கல்லூரி நடன ஒத்திகையில் அருகே பார்த்த அந்த நொடியில் மனதை நிறைத்துவிட்டார். மிகவும் அழகிய பெண். கண்ணுக்கு அஞ்சு லட்சமோ, பத்து லட்சமோ தருவதாகப் பாடுகிறார்களில்லையா, இந்தப் பெண்ணின் சிரிப்பிற்கு கோடி கோடியாய்க் கொடுக்கலாம். அப்படி ஒரு மனதை மயக்கும் சிரிப்பு. எப்போதும் தோழிகள் புடைசூழ வருவார். எம்மைப் பார்க்கும்போது நிச்சயம் ஒரு அழகிய புன்சிரிப்பு கிடைக்கும். மதியம் உணவு இடைவேளையின்போது எங்கள் வகுப்பு வழியாக மாணவியர் அறைக்குச் செல்வார். வரும்வரை வராந்தாவில் நின்று காத்துக் கொண்டிருப்போம். மிதிவண்டியில்தான் கல்லூரிக்கு வந்து செல்வார். பின்தொடர்ந்தெல்லாம் யாம் சென்றதில்லை. நேரில் பேச வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஏனோ தயக்கம். கடைசி வரையிலும் பேசவே இல்லை. மூன்றாமாண்டு நெருங்க நெருங்க ஏதோ ஒருவித தவிப்பு மனதில் இருந்துகொண்டே இருந்தது. எப்படியோ சமாளித்து படிப்பில் கவனம் வைத்து அந்தச் சிரிப்பை எமது மனதிற்குள்ளேயே அடக்கிக் கொண்டோம். அந்தச் சமயத்தில்தான் இதயம் படம் வந்தது. நல்ல வேளை, அதன் கதாநாயகனுக்குப்போல் எமக்கு இதயத்திலெல்லாம் பாதிப்பு இல்லை.

கல்லூரி முதல்வர் ஆறுமுகச்சாமி சார். எங்கள் துறை என்பதால் வாரத்திற்கு ஒரு வகுப்பு வருவார். நன்றாக வகுப்பெடுப்பார். சாந்த குணமாக இருப்பார். அத்தனை அலுவல்கள் மத்தியிலும் பேராசிரியர் தவறாமல் வகுப்பு எடுத்தது ஆச்சரியம்தான்.

முனைவர் கனகவேல் ராஜன் சார் துறைத் தலைவராக இருந்தார். தேசிய மாணவர் படை மேஜர். மிகவும் கண்டிப்பானவர். புரியும்படி பொறுமையாக சொல்லிக் கொடுப்பார். கரும்பலகையில் படங்கள் அருமையாக வரைவார். கையெழுத்தும் அழகாக இருக்கும். புல்லட் சத்தம் கேட்டாலே போதும். வராந்தாவிலிருக்கும் மாணவர்கள் வகுப்புக்குள் போய்விடுவார்கள்.

குப்புசாமி சார் வகுப்பிற்கு யாருமே தாமதமாகச் செல்ல முடியாது. பேராசிரியர் விடமாட்டார். முதல் பருவத்தில் இவரது வகுப்பு என்றால் கொஞ்சம் உதறலாக இருந்தது. முழுக்க முழுக்க ஆங்கிலத்திலேயே வகுப்பெடுப்பார். பேசவோ, சிரிக்கவோ முடியாது. பின் வந்த பருவங்களில் ஆச்சரியப்படுமளவிற்கு வகுப்பு நன்றாக இருந்தது.

பிரபாகர் ஜோசப் சார் வகுப்பு கொஞ்சம் ஜாலியாக இருக்கும். கரும்பலகை முழுவதும் சிறிதும் இடமில்லாமல் எழுதுவார். விலங்குகளை அறுவை செய்து காண்பிப்பது நேர்த்தியாக இருக்கும். பேராசிரியரின் ஆங்கிலம் எங்களுக்கு எளிதில் புரியும் வண்ணம் இருக்கும். சிறுசிறு வார்த்தைகளாகக் கூறுவார். பாடங்களை அருமையாக விளக்குவார்.

பாலசுப்பிரமணியன் சார் தான் மாணவர்களின் விருப்பமான பேராசிரியர். எல்லோரிடமும் இன்முகத்துடன் பேசுவார். நிதானமாக வகுப்பெடுப்பார். பாடம் தவிர்த்தும் சில நேரங்களில் பேசுவார். தனிப்பட்ட முறையில் எம்மை மிகவும் ஊக்குவிப்பார். மூத்த மாணவர்களான அர்ஜுனன் மற்றும் உமாமகேஸ்வரி பல்கலைக்கழக தரவரிசை பெற்றார்கள். எம்மாலும் அது முடியும் என்று அடிக்கடி உற்சாகப்படுத்துவார்.

முத்தையா சார் தாவரவியல் சிறப்பாக சொல்லிக் கொடுப்பார். மாணவர்களோடு நெருக்கமாக இருப்பார். செய்முறை வகுப்பில் மாணவர்கள் மகிழ்ச்சியாக இருப்பார்கள். வேர்களின் குறுக்கு வெட்டுத் தோற்றம் நறுக்குவதற்கு கேரட் கொடுப்பார். கேரட்டைத் தின்றுவிட்டு மறுபடியும் கேட்பார்கள். மாணவர்கள் கவனிக்கவில்லையெனில் வகுப்பெடுப்பதை நிறுத்தி விடுவார். அனைவரிடமும் அன்பு பாராட்டுவார். பேராசிரியரும், பாலு சாரும் எமது திருமணத்திற்கு வந்து சிறப்பித்தார்கள்.

வேதியியல் பேராசிரியர்களும் அக்கறையோடு வகுப்பெடுத்தார்கள். செய்முறை வகுப்புகளும் சிறப்பாக இருக்கும். டேனியல் சார் பாடத்தை விளக்கும் முறையும், ஆங்கிலமும் அருமையாக இருக்கும். யாம் வேதியியலில் அதிக மதிப்பெண்கள் பெற்றுவிடுவோம். சத்தியக்குமார் சார் மிகவும் கலகலப்பானவர். மாணவர்களுடன் பேசும் போது கேலியும், கிண்டலும் நிரம்பி வழியும். செய்முறை வகுப்புகளின்போது பேராசிரியர் மட்டைப்பந்து வர்ணனையாளர் போல் பேசி அனைவரையும் சிரிக்க வைப்பார். குடுவைய எடுத்துக் கொள்ளுங்க, இந்த

அமிலத்த ஊத்தி நல்லா குலுக்குங்க எனச் சொல்லும் போது மாணவர்களுக்கு சிரிப்பை அடக்க முடியாது. சார் இப்படியா சார் குலுக்கணும் எனச் கேட்கும் குறும்புக்கார நண்பர்களும் இருந்தார்கள். இதக்கூட குலுக்கத் தெரியல, நாளைக்கு கல்யாணம் பண்ணி... எல்லோரும் வாயைப் பொத்திக்கொண்டு சிரிப்பார்கள்.

தமிழ் துறையில் மாடசாமி சார் மிகவும் ஆர்வமாகச் சொல்லிக் கொடுத்தார். பின்னர் அறிவொளி இயக்கத்திற்கு சென்று விட்டார். கணேசன் சாரின் உச்சரிப்பு அருமையாக இருக்கும். இரண்டாமாண்டில் செல்லத்தாய் மேடம் வந்தார்கள். எல்லோரிடமும் அன்பாக இருப்பார். ஆங்கிலம் ராஜேந்திரன் சார் இன்முகத்துடன் பாடம் நடத்துவார். இலக்கணம் அருமையாகச் சொல்லிக் கொடுத்தார்.

ஒரு முறை கல்லூரி நாட்டு நலப்பணி சார்பாக மரம் நடுவிழா நடத்தினார்கள். மாணவர்கள் அனைவரும் ஆர்வமாக மரக்கன்றுகளை ஊன்றினோம். காந்தி நகரில் ஆரம்பித்து ஆத்திபட்டி வரை சாலையில் இரு ஓரங்களிலும் நூற்றுக் கணக்கான கன்றுகளை நட்டுவிட்டோம். நண்பர்களோடு சேர்ந்து அரட்டையடித்துக் கொண்டே வேலைகள் பார்த்தது இன்றும் பசுமையாக நினைவிலுள்ளது.

கல்லூரி இறுதியாண்டில், எமது துறை சார்ந்த வழியனுப்பு விழாவில், யாம் பேச நினைப்பதெல்லாம் படத்தில் இடம் பெற்ற பூங்குயில் ராகமே, புதுமலர் வாசமே, நாளை நம் வானிலே நாளும் புது ஊர்வலம் என்ற பாடலைப் பாடி யாம் விடைபெற்றோம்.

பேராசிரியர்களின் திறமையாலும், பெற்றோர்களின் ஆசீர்வாதத்தாலும், கல்லூரி, விடுதி நண்பர்களின் ஊக்குவிப்பாலும் யாம் வகுப்பில் முதல் மாணவராகவும், காமராசர் பல்கலைக்கழக அளவில் ஏழாவதாகவும் வெற்றி பெற்றோம். பாலு சார் மிகவும் மகிழ்ந்தார். உடன் படித்த விஜயா பல்கலை அளவில் பத்தாம் இடம் பெற்றிருந்தார்.

மூன்றாமாண்டு படிக்கும் போதுதான் யாமும், சபாபதியும், சில விடுதி நண்பர்களை ஊரின் ஆடித்திருவிழாவிற்கு அழைத்து வந்தோம். எமது தெருவைச் சேர்ந்த ஜெயபால் மச்சான், செட்டிகுறிஞ்சியைச் சேர்ந்த லெட்சுமி அக்காவைப் பெண்ணெடுத்து, அங்கே மளிகைக் கடை வைத்திருந்தார். அந்த வகையில் அவ்வூர் மாணவர்கள் நெருக்கமாக இருப்பார்கள். செட்டிகுறிஞ்சி நண்பர்களும் வந்திருந்தார்கள்.

எமது சிறு வயதுகளில் ஆடித்திருவிழா சிறப்பாக நடக்கும். எங்கள் தெருக்காரர்களைச் சேர்க்க மாட்டார்கள் என்ற போதிலும் எங்கள் வீடுகளிலும் புதுத் துணிகள் போடுவார்கள். பலகாரங்களும் உணடு. ஒரு வாரத்திற்கு முன்பே முளைப்பாரி போட்டு ஒலிபெருக்கி கட்டுவார்கள். தினமும் ஆண்களும், பெண்களும் கும்மியடிப்பார்கள். ஊரின் நடுவே மொளக்கொட்டுத் திண்ணை இருக்கிறது. வேப்பமரத்தைச் சுற்றிலும் பெரிய திண்டு கட்டி இருப்பார்கள். கும்மியும் ஊர்ப் பஞ்சாயத்தும் இங்குதான் நடக்கும. கும்மி முடிந்தவுடன் கபடி. யாமெல்லாம் கபடி விளையாடி இருக்கிறோம். அப்போது இறங்கு முத்தம்மன் கோவிலைச் சுற்றி இலந்தி முள் வேலி போட்டிருப்பார்கள்.

ஆசாரி தெருவில் பஜனைக்கூடம் ஒன்று இருக்கிறது. ஒவ்வொரு திங்கட்கிழமையும் பஜனை பாடுவார்கள். எமது சிறுவயதில் நிறைய மக்கள் கூடி இதைக் கேட்பார்கள். பின்னர் அது படிப்படியாகக் குறைந்துவிட்டது. இந்த மடத்தின் சுவற்றில் வரையப்பட்டுள்ள சித்திரங்கள் சிறப்பாக இருக்கும். எமது அப்பா சிறு வயதாக இருந்தபோது இந்த மடம் கட்டியதாகத் தெரிகிறது. சிறு வயதில் மடத்திற்கு அருகே தான் மண்பாண்டம் விற்பவர்கள் வந்து இறங்குவார்கள். விதவிதமான மண் சட்டிகள். ஊர்க்காரர்கள் போட்டி போட்டுக் கொண்டு வாங்குவார்கள். பெரும்பாலும பணம் கொடுத்து வாங்க மாட்டார்கள். நெல்லோ, தானியங்களோ அல்லது பருத்தியோ பண்டமாற்றாக இருக்கும். அது போல் உப்பு வண்டி, வெள்ளரிப் பழ வண்டி வந்தாலும் இங்கு தான் இறக்குவார்கள்.

ஆசாரி மடத்திலிருந்து முளைப்பாரி ஊர்வலம் துவங்கும். மயில்வாகனத்தை சப்பரத்தில் வைத்து எடுத்து வருவார்கள். மயில்வாகனம் என்பது கல்லாலான ஒரு மயில் சிலை. அதன் மீது முருகன் போட்டோ வைத்திருப்பார்கள். இந்த மயில் வாகனம், முன்னர் ஊருக்கு மேற்கே இருந்த குமரய்யா கோவிலிலிருந்து வந்ததாகச் சொல்கிறார்கள். அக்கோவிலின் தொடர்ச்சியாகவே இன்றும் இவ்வூர்வலம் நடப்பதாகத் தெரிகிறது.

மாட்டுவண்டியில் ஜெனரேட்டர் இருக்கும். பெட்டோமாஸ் விளக்குகளை அருந்ததியர்கள் தலையில் சுமந்து வருவார்கள். அகமுடையார் தெருவிலிருந்து கரகம் எடுப்பார்கள். மொளக்கொட்டு திண்ணை வந்த பின் முளைப்பாரியை இறக்கி வைத்து பெண்கள் சுற்றி வந்து கும்மியடிப்பார்கள். இந்தக் கும்மியடிப்பு இறங்கு முத்தம்மன் கோவிலிலும் பின்னர் விநாயகர் கோவில், பெருமாள் கோவிலிலும்

தொடரும். ஒவ்வொரு தெருவிலும் ஊர்வலம் நிற்கும். எங்கள் வீடு அருகே நிற்கும் போது வீடு தவறாமல் தெருக்காரர்கள் தேங்காய் உடைத்து திருநீறு பெற்றுக் கொள்வார்கள். எமது அம்மா உட்பட பலருக்கும் சாமி வரும். சிறுவயதில் அம்மா இப்படி சாமியாடுவதைப் பார்த்து நாங்கள் வெட்கப்படுவோம். சில நேரம் கேலி பேசுவோம். ஊர்வலம் கூடவே சில நேரங்களில் செல்வதுண்டு. ஒரு முறை யாமும் மணிகண்டனும் முளைப்பாரியொடு சேர்ந்து அம்மன் கோவிலுக்குள்ளும் சென்று விட்டோம். ஒருவர் எங்களைப் பார்த்து நீங்களெல்லாம் வரக்கூடாது, வெளியே போங்கள் என்று விரட்டினார். அதன்பின் சென்றதில்லை.

ஆடித் திருவிழாவிற்கு மொளக்கொட்டு திண்னை அருகே கட்டபொம்மன் நாடகம் போடுவார்கள். அதில் வெள்ளையத் தேவன் பாத்திரம் பிரதானமாக இருக்கும். பின்னர் ஊரணிக்கரை அருகே அரிச்சந்திர மயான காண்டம் நடத்தினார்கள். பின்னர் வள்ளி திருமணம் நாடகம். சுகுணா எனும் டான்ஸ் ஆடுபவருக்கு ஊரில் ரசிகர் மன்றமே வைத்திருந்திருந்தார்கள்.

எண்பதுகளின் இறுதி வரை தான் இப்படி. பின்னர் ஊர்வலத்தில் முருகன் போட்டோவை மறைக்கும் விதமாக தேவர் போட்டோ வைத்தார்கள். தேவேந்திரர் மற்றும் நாடார் தெரு வரும் போது அதிர் வேட்டுகள் போட ஆரம்பித்தார்கள். ஒரு முறை எமது அப்பா ஓரமாகப் போடுங்கள் என்று சொன்னதற்கு வாக்குவாதம் வந்து சண்டை போடுமளவிற்கு ஆகிவிட்டது. நல்லவேளையாகப் பெரியவர்கள் சமாதானப்படுத்தி விட்டார்கள். தேவர்கள் தெருவிலிருக்கும் ஒருவர் இதில் முனைப்பாக இருப்பார். இன்றும் தண்ணி அடித்துவிட்டு மிகமிக கொச்சையான வசவுப் பேச்சுக்களில் பேசித் திரிகிறார்.

தேவர் படம், தேவர் பேரவை வந்த பின்பு தேவேந்திரர்கள் தேங்காய் உடைப்பதை, சாமி கும்பிடுவதை நிறுத்தி விட்டார்கள். இப்போது முன்னைவிட விமர்சையாகக் கொண்டாடுகிறார்கள். முன்பிருந்த அந்த நம்ம ஊர்த் திருவிழா என்ற மகிழ்ச்சி இன்றில்லை.

நண்பர்களோடு கறிக்குழம்பு சாப்பிட்டு விட்டு வள்ளி திருமணம் நாடகம் பார்த்துக் கொண்டிருந்தோம். திருவிழாவின்போது எங்கள் ஊரில் வேப்பங்குளத்தைச் சேர்ந்த தேவர் ஒருவர் கள்ளச் சாராயம் விற்றிருக்கிறார். பள்ளிக்கூடம் அருகில் உள்ள புதரில் இவர் வழக்கமாக விற்பார். யாமே சிலமுறை பார்த்திருக்கிறோம். பரளச்சி சாராயக் கடையை ஏலத்தில் எடுத்தவர் தேவேந்திரர்.

எனவே கள்ளச் சாராயத்தால் விற்பனை குறைகிறது என்று அவர்களுக்குள் சண்டை நடந்து அதில் கள்ளச்சாராயம் விற்ற தேவரை தேவேந்திரர்கள் அடித்து விட்டார்கள் போலும். இதற்குப் பழிவாங்குவதற்காக எங்கள் ஊர் தேவர்கள் இருந்திருக்கிறார்கள்.

நாடகம் பார்க்க வந்த வேதநாயகம், கண்ணன் மற்றும் இன்னொரு நண்பர் எங்கள் வீட்டில்தான் மிதிவண்டிகளை வைத்திருந்தார்கள். பரளச்சியிலிருந்து மற்றவர்களும் நாடகம் பார்க்க வந்திருப்பார்கள் போல. எம்மோடு பரளச்சியில் படித்த செங்குளத்தைச் சேர்ந்த தேவர் சமுதாய நண்பர் இராமமூர்த்தி, பரளச்சி ஆட்களை அடிக்கணும் என்று பேசுகிறார்கள், வேதநாயகத்தை ஊருக்கு அனுப்பி வைத்து விடு என்று எம்மிடம் ரகசியம் சொன்னார். ராமமூர்த்தி சொன்னவுடனே வேதநாயகத்திடம் நாம் சென்று விடுவோம் என்று சொன்னோம். அவர்தான் நாம் என்ன செய்தோம், நம்மை ஒன்றும் செய்ய மாட்டார்கள் எனச் சொல்லிவிட்டார்.

சாமத்தில் நாங்கள் வீட்டிற்குக் கிளம்பினோம். எங்கள் ஊர் தேவர்கள், எங்களை கவனித்துக் கொண்டே இருந்திருப்பார்கள்போல. நிறையப் பேர் பின்னாடியே உருட்டுக் கட்டைகளோடு வேகமாக வந்தார்கள். நம்மைத்தான் அடிக்க வருகிறார்கள் ஓடி விடுவோம் என்று சொன்னதற்கு அப்போதும் கேட்கவில்லை. முன்னாடி உருட்டுக் கட்டையோடு ஓடி வந்தவரைப் பார்த்து, நம்மோடு கிரிக்கெட் விளையாடும் அவர்தான் வருகிறார், நம்மை அடிக்க மாட்டார் என்று பேசினார்கள்.

ஆனால் அவர்கள் சுப்பையா தலவர் கடை அருகில் ஓடி வந்து மடக்கிக் கொண்டார்கள். மூன்று பேரையும் பெரிய பெரிய கம்புகளால் அடிக்கிறார்கள். எம்மை அடிக்கவில்லை. அந்த நேரத்தில் யாம் காப்பாற்றவும் முயற்சிக்க முடியவில்லை. யாம் சற்று தள்ளி நின்று பார்த்துக் கொண்டிருக்கிறோம். விட்ருங்கண்ணா விட்ருங்கண்ணா என்று மூன்று பேரும் அலறுகிறார்கள். மிக மிகக் கொடுமையான தருணம். திடீரென்று இவன்தான் கூட்டி வந்தான், இவனையும் அடிங்கடா என்று சொல்லி ஒருவர் எம்மை அடிக்க ஓடி வந்தார். யாம் ஓடி வந்து முனியாண்டித் தலவர் தேநீர் கடையருகே நின்று கொண்டோம். அடிக்க வந்தவர் பின் தொடரவில்லை.

பெரியவர்களைக் கூட்டி வரலாம் என்று வீட்டிற்கு ஓடிப்போய் எமது அப்பாவிடம் சொன்னோம். தெருவில் ஒரே பதற்றமாகிவிட்டார்கள். பக்கத்து வீடுகளில் தெரிந்து நான்கைந்துபேர் கிளம்பும்போது நண்பர்களே அழுதுகொண்டு

வீட்டிற்கு ஓடி வந்து விட்டார்கள். அவர்களை ஆசுவாசப்படுத்தி, ஒத்தடம் கொடுத்து விடியும்வரை வைத்திருந்தார்கள். விடிந்த பின்னர் பரளச்சியில் விட்டு வந்தார்கள். இதற்கிடையில் நாடகம் பார்த்த பரளச்சியைச் சேர்ந்த பலருக்கும் அடி விழுந்திருக்கிறது. சிலருக்கு மண்டை உடைந்ததாகப் பேசிக் கொண்டார்கள்.

எமக்கோ மிகவும் சங்கடமாகிவிட்டது. அடி வாங்கும்போது நண்பர்கள் அலறியது மிகவும் கொடுமை. அதைவிட அவர்களை முன்னின்று அடித்தவரை நினைத்தால் மகாக் கேவலம். மட்டைப் பந்து விளையாட்டுக்களில் நன்கு பழகுவார். எல்லோரிடமும் இனிமையாகப் பேசுவார். பரளச்சி சென்று அவர்களோடு விளையாடி இருக்கிறோம். அவர்களும் இங்கே வந்து விளையாடினார்கள். இவர் இப்படியொரு சாதி வெறியராக இருப்பார் என நினைத்துக் கூடப் பார்த்ததில்லை.

அந்த ஊர்க்காரர்கள் இதை அவமானமாகக் கருதி காவல் நிலையத்தில் புகார் கொடுக்வில்லையெனத் தெரிகிறது. பல நாட்கள் கழித்து எங்கள் ஊர் தேவரொருவர் அங்கே அரிசி ஆலைக்குச் சென்று அவர்களிடம் மாட்டிக் கொண்டார். தேவரை கடுமையாக அடித்திருக்கிறார்கள்.

விஷயம் தெரிந்து தேவர் சாதிக்காரர்கள் பரளச்சிக்குக் கிளம்பியிருக்கிறார்கள். பெரியவர்கள் வழிமறித்து திருப்பி அழைத்து வரும்போது எங்கள் தெருமேல் கோபம் திரும்பியிருக்கிறது. கம்பு, அருவாள், வாள் ஏந்தி வந்தவர்களைப் பார்த்து பெண்களும், குழந்தைகளும் அலறியடித்து ஓடி இருக்கிறார்கள். தெருவில் வயதான சில பேரும், ஒரு சில ஆண்களும் மட்டுமே இருந்திருக்கிறார்கள். தேவர்களிலும் நல்லவர்கள் இருப்பார்களில்லையா. எப்படியோ சமாதானம் பண்ணி அவர்கள் தெருவிற்கு கூட்டிப் போய்விட்டார்களாம். இந்தச் சம்பவத்தையொட்டி சாதுவாக இருந்தவர்கள், எல்லோரிடம் நன்றாகப் பழகுபவர்களெல்லாம் சாதிவெறி வந்தால் எப்படியெல்லாம் நடந்து கொள்வார்களென்று இன்றும் தெருவில் பேசிக் கொள்வார்கள்.

வேதநாயகம் ஜாலியான பையன். ஆனால் வாழ்க்கை வேறுமாதிரி அமைந்து விட்டது. விடுதியில் இருக்கும்போது இவர் தம்பி லாரி மோதி விபத்தில் இறந்தார். விடுதியிலிருந்து நாங்களெல்லாம் மதுரைக்கு சென்று பார்த்தோம். அதன்பின் அவரது தந்தை இறந்து விட்டார். சிலமுறை அவரது வீட்டிற்கு யாம் சென்றிருக்கிறோம். அம்மா மிகவும் அன்பாகப் பேசுவார். ஒரு தங்கை இருந்தார். அருகே இருந்த வயல்களில் இருவரும் பந்து வீசி விளையாடியிருக்கிறோம். நண்பர்

அண்ணாமலைப் பல்கலையில் முதுகலை வரலாறு படித்தார். காதல் திருமணம் செய்து கள்ளக்குறிச்சியில் தனியார் பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். எமக்குக் கடிதம் எழுதி வீட்டிற்கு வரவேண்டும் என்று அன்புக் கட்டளை இட்டிருந்தார். பின்னர் ஒருமுறை அம்மாவை பூலாங்கால் செல்லும் பேருந்தில் பார்த்து வேதா எப்படி இருக்கிறான் அம்மா என்று கேட்டதற்கு தேம்பி தேம்பி அழுதார். மாரடைப்பால் திடீரென மறைந்துவிட்டதாகச் சொன்னார்கள். மனம் கவர்ந்த அன்புத் தோழர் என்றும் மறக்க முடியாதவர்.

எங்கள் ஊரின் ஆடித்திருவிழா போன்றே மாசிக் களரியும் களை கட்டும். மாசிக் களறிக்கு அனைவர் வீடுகளிலும் மொச்சைப்பயிறு, தடடாம்பயிறு அவித்துக் கொடுப்பார்கள். சீனிக் கிழங்கும் அவிப்பது வழக்கம். மாசி மாத அமாவாசையன்று பெரும்பாலான சாதியினர் அவரவர் குலதெய்வங்களைக் கும்பிடுவார்கள். பெருமாள் கோவில் அருகே சக்தி பாண்டி கோவில் இருக்கிறது. எமது சிறுவயதில் தான் கட்டிடம் கட்டினார்கள். கருப்பசாமி சிலையும் வைத்திருந்தார்கள். இந்தச் சிலையை பெரிய வீட்டு இராதாகிருஷ்ணன் அவர்கள் கடற்பாறையால் அடித்து கையை உடைத்து விட்டார் . வெகுநாட்கள் உடைந்த கையொடு சிலை இருந்தது.

மாசிக் களரிக்கு சாமியாடித் தேவர் இரவில் சாமியாட்டம் ஆடி வருவார். கொண்டை போட்டிருப்பார். ஊரிலிலுள்ள பேய்களையும், பக்கத்து ஊர் பேய்களையும் ஓட்டுவது இவர்தான். எங்கள் தெரு பெரிய பாஞ்சாலி பாட்டி இவர் வீட்டில் இருப்பார். சிறு வயதில் அம்மாவிற்கு பேய் பிடித்திருப்பதாகச் சொல்லி ஒரிரு முறை இவரது வீட்டிற்குச் சென்றிருக்கிறோம். மாசிக்களரி அன்று இரவெல்லாம் சாமியாட்டம் நடக்கும். காலையில் ஒவ்வொரு வீட்டிலும் காலில் மஞ்சள் தண்ணீர் ஊற்றி பெண்கள் வணங்குவார்கள். எங்கள் தெருவிற்கும் வருவார்.

நாடார் தெருவிலும் மாசிக்களரி சிறப்பாக நடக்கும். இரண்டு, மூன்று கோவில்களில் கொண்டாடுவார்கள். எம்முடன் பள்ளியில் படித்த தங்கராஜ் வீட்டின் முன் உள்ள பீடத்தை மலர்களால் அழகாக அலங்கரித்திருப்பார்கள். பெரிய மீசை, அகலமான கண்கள் வைத்து மாடசாமி இருப்பார். இரவில் மாடன் ஓடி வரும் போது எதிரில் யாரும் இருக்கக்கூடாது என்பார்கள். முட்டையும், எலுமிச்சையும் எறிந்து காவு கொடுப்பார்கள். சில வீட்டுக்காரர்கள் காமாட்சியம்மனையும் சிறப்பாக வழிபடுவார்கள்.

நாடார்களின் உஜ்ஜயினி மாகாளியம்மன் கோவில் கோபுரம் அழகாக இருக்கும். நாங்கள் ஐந்தாவது படிக்கும் போது கோபுரத்தைப் பதுப்பித்துக் கட்டினார்கள். அழகிய சுதை பொம்மைகள் வைத்தார்கள். குறவன், குறத்தி பொம்மைகள் நேர்த்தியாக இருக்கும். காளியம்மன் அழகாக சாந்தமாக இருப்பார். தினமும் தவறாமல் பூஜை வழிபாடுகள் செய்கிறார்கள்.

எங்களூர் நாடார்களில் எப்போதும் வென்றான் ஊரிலிருக்கும் சோலையப்ப சுவாமியைக் குலதெய்வமாகக் கொண்டவர்களும் உண்டு. நண்பர் ஆனந்தன் மற்றும் அவர்களது பங்காளிகள் வருடம் தோறும் சென்று வருவார்கள். ஆனந்தனின் தாத்தா இராமசாமி நாடார். இவருக்கு பெருமாள் நாடார், செல்லையா நாடார், இராமலிங்க நாடார், காசி நாடார், பாலகிருஷ்ணன் சார் மற்றும் சங்கரபாண்டிய நாடார் எனக் குழந்தைகள். காசி நாடார் தோட்டம் வைத்திருந்தார். மற்றவர்கள் ஊரில் மளிகைக் கடை வைத்திருந்தார்கள்.

பெருமாள் நாடார் மொத்தமாக விளைபொருட்களை வாங்கி விற்பார். பருத்தி, மல்லி, கம்பு போன்றவற்றை மற்ற வியாபாரிகளோடு சேர்ந்து வாங்குவார். இடைத்தரகர் என்று சொல்லலாம். பெருமாள் நாடார் மனைவி வேல்தங்கம். பெருமாள் நாடாருக்கு சோலையப்பன், ஆத்தியப்பன், பூமிநாதன் மற்றும் ஜோதி எனப் பிள்ளைகள் இருந்தார்கள். பெருமாள் நாடாரின் இரண்டாவது மனைவி, முகம் முழுவதும் மஞ்சள் பூசி, சிரித்த முகத்துடன் இருப்பார். எல்லோருடனும் சகஜமாகப் பேசவும் செய்வார். பூமிநாதன் வகுப்புத் தோழர் என்பதால், சில சமயங்களில் நண்பர்கள் சேர்ந்து தண்ணீர் குடிக்கச் செல்வோம். பூமியை நல்லாப் படிக்கச் சொல்லுங்க என எங்களிடம் சொல்வார்.

செல்லைய நாடாரும், இராமலிங்க நாடாரும் நாடார்களின் மகிமைக் கட்டிடத்தில் அருகருகே கடைகள் வைத்திருந்தார்கள். செல்லையா நாடார், கடைக்கு வரும் எல்லோரையும் கிண்டல் செய்து பேசவார். கடைக்கு சாமான் வாங்கப் போனால் கேலிப் பேச்சு வாங்காமல் திரும்ப முடியாது. இவர் அதி தீவிரமான காற்று ஸ்பெசலிஸ்ட். இதற்குப் பயந்து கொண்டே சிறுவர்கள் போக மாட்டோம். மனைவி இறந்து விட்டார் போல. செல்லையா நாடாருக்கு சீதையம்மாள், பால்தங்கம், ஆவடைத்தங்கம் மற்றும் வேல்தங்கம் என பெண்பிள்ளைகள் இருந்தார்கள். பேத்தி சுப்புலட்சுமியோடு வசித்தார். பெருமாள் நாடார் வீடு அருகே இவரது வீடு இருந்தது.

இராமலிங்க நாடார் அமைதியானவர். எம்மீது மிகுந்த அன்பு பாராட்டுவார். மனைவி பாப்பாத்தியம்மாள். பூபதி, சோலைராஜன் மற்றும் ஆனந்தன் இவர்களது குழந்தைகள். பூபதியை வலையபூக்குளத்தில் திருமணம் செய்திருந்தார்கள். சோலைராஜாதான் மளிகைக் கடையில் அதிகம் இருப்பார். ஒன்பதாவிலிருந்து ஆனந்தன் எமக்கு நண்பரானார். கூட்டம் இல்லாத நேரங்களில் போனால் இராமலிங்க நாடார் எம்மோடு சிரிக்கச் சிரிக்க பேசிக் கொண்டிருப்பார். நம்மாள கொஞ்சம் நல்லா படிக்கச் சொல்லக்கூடாது என்பார். ஆனந்தன் சிரித்துக் கொண்டே சும்மா இருங்கய்யா எனச் சொல்வார். ஊரில் ஒரு சிலர்தான் அப்பா எனச் சொல்வார்கள். பெரும்பாலானவர்கள் அய்யா என்றுதான் கூப்பிடுவார்கள். சென்னைக்கு சென்று தங்கியபின், அங்கும் சிலமுறை அவரோடு பேசியிருக்கிறோம். ஊரைப் பற்றியே அதிகம் பேசுவார். பேச்சிலிருந்து சென்னை பிடிக்காமல்தான் அங்கே தங்கியிருக்கிறார் எனத் தெரியும். பாப்பாத்தியம்மாவும் பாசமாக இருப்பார். வீட்டிற்குச் சென்றால் காப்பி குடிக்காமல் அனுப்பமாட்டார். ஆனந்தனைப் பற்றி கொஞ்சம் கவலைப்படுவார். நல்லா படிச்சாதானய்யா பெரிய ஆளா வர முடியும் என்பார்.

பாலகிருஷ்ணன் சார் மற்றும் கமல சரசுவதி டீச்சர் குழந்தைகள் ராமதாஸ், அசோகன், சுகுமார் மற்றும் ஜெயந்தி. அனைவரும் நன்றாகப் படித்திருக்கிறார்கள். அசோகன் அவர்கள் மதுரை நாடார் மகாஜன சங்கத்தில் பணிபுரிகிறார்.

சங்கரபாண்டிய நாடாரை ஆவடை நாடார் என்றால்தான் எல்லோருக்கும் தெரியும். நல்ல உழைப்பாளி. பொறுமையானவர். சிறிய கடைதான் என்றாலும் அனைத்து விதமான சரக்குகளும் வைத்திருப்பார். கடையில் கூட்டம் மொய்க்கும். பண்டிகை நாட்களில் சரக்கு கொடுத்து மாளாது. மனைவி மீனாட்சி அம்மாள். இரு பெண் பிள்ளைகள் மற்றும் ஒரு மகன். மகன் இராஜாராம் அப்பாவின் பணியைத் தொடர்கிறார்.

பள்ளிக்கூடம் அருகே சின்னசாமி நாடார் இருந்தார். போத்தம்பட்டியில் பள்ளி ஆசிரியராக வேலை பார்த்தார். அமைதியானவராக இருப்பார். ஒரு முறை எமது அப்பா இந்த ஊரில் தங்கி வேலை செய்யும் போது பணம் வாங்கி வரச் சென்றோம். அப்போது இந்தப் பள்ளிக் கூடத்தை வேடிக்கை பார்த்திருக்கிறோம். மனைவி சரோஜா அம்மையார். எல்லோருடனும் மரியாதையாகவும் அன்புடனும் பேசுவார். எம்மைக் கண்டால் இப்போ எந்த ஊர்ல வேலை பார்கறாப்ல என விசாரிக்கத்

தவறமாட்டார். மகன் பூமிராஜ் எம்மோடு நட்பாக இருப்பார். முத்துராமலிங்கபுரம் அரசு பள்ளியின் அலுவலகத்தில் பணியாற்றுகிறார்.

கோவில் அருகே போஸ் நாடார், பூர்ணம் அம்மையார் குடும்பம் இருந்தது. கணேசன், முருகன் மற்றும் இரு பெண் பிள்ளைகள் இருந்தார்கள். உயரமான வீடு. படிக்கட்டுகள் நிறைய இருக்கும். கணேசன் எம்மோடு நட்பாக இருப்பார். போஸ் நாடார் வெளியூரில் பாத்திர வியாபாரம் பார்த்தார். பூர்ணம் அம்மையார் உயரமாக இருப்பார். காடுகளைக் கவனித்துக் கொண்டார். திண்ணையில் ஒரு பாட்டி படுத்திருப்பார். பள்ளிப் படிப்பு முடிந்த சில வருடங்களில் குடும்பமே வெளியூருக்குப் போய்விட்டது.

இவர்களது வீட்டை ஒட்டி கணபதி நாடார் வீடு இருக்கும். வேலம்மாள் அம்மையார் வயதானவராக திண்ணையில் உட்கார்ந்திருப்பார். பள்ளிக்கூடம் போகும் போதும், வரும் போதும் பலமுறை பார்த்திருக்கிறோம். கணபதி நாடார்தான் முதலில் கடை வைத்திருந்தாராம். இவர்களது பிள்ளைகள் இளைய பெருமாள், சண்முகம், மற்றும் மீனாட்சியம்மாள். மகன்கள் வெளியூர்களில் கடைகள் வைத்திருந்தார்கள்.

சின்னச்சாமி நாடாருக்கு மாடசாமி, முருகேசன், விஜயன், ராமலிங்கம் என மகன்கள் இருந்தார்கள். வீட்டின் தாழ்வாரத்தில் அழகிய மரத்தூண்கள் இருக்கும். மாடசாமி நாடாருக்கு தங்கராஜ் மற்றும் சில பிள்ளைகள் இருந்தார்கள். தங்கராஜ் எம்மீது மிகுந்த அன்பு வைத்திருப்பார்.

வள்ளிமுத்து நாடார் படித்திருக்கிறார். நன்றாக விவசாயம் செய்வார். தோட்டம் எப்போதும் செழுமையாக இருக்கும். கடலை, மிளகாய் களைக்குச் சென்றிருக்கிறோம். கல்லூரி படிப்பின் போது சேனைக்கிழங்கு போட்டிருந்ததைக் கவனித்திக்கிறோம். பச்சைப் பசேல் என வளர்ந்திருக்கும். பெரிய பெரிய கிழங்குகளாக வெட்டியெடுப்பார்கள். மரவள்ளிக் கிழங்கும் வைத்தார்கள். கோவிலருகே இருந்த இவரது வீட்டின் பின்பக்க வராந்தாவில் உட்கார்ந்து பள்ளி நாட்களில் படித்திருக்கிறோம். பெரும்பாலும் கல்லூரணியில் இருப்பார். மனைவி ஜெயலட்சுமி. பிள்ளைகள் செந்தில் மற்றும் திலகவதி.

அய்யம்பெருமாளின் அப்பா மாரியப்ப நாடார் அமைதியானவராக இருப்பார். இவரது அம்மா லட்சுமி அம்மையார் எங்கள் வீட்டோடு நெருக்கமாக இருப்பார். யாம் மேனிலை முடிக்கும் வரை எமது அம்மாவோடு நெருங்கிப் பழகியது

நினைவிருக்கிறது. ஒன்றாக வேலைகளுக்குச் செல்வார்கள். எங்களோடும் அன்பாக இருப்பார். அய்யம் பெருமாள் தம்பி கருப்பசாமி. தற்போது நாடார்கள் மகிமைக் கட்டிடத்தில் கடை வைத்திருக்கிறார்கள்.

கீரைக்கார நாடாரைத் தெரியாதவர்கள் இருக்கமாட்டார்கள். பெயர் கருப்பசாமி. இவரது அண்ணன் வீடும் அருகே இருந்தது. சத்தமாகப் பேசுவார். பேசுகிறாரா அல்லது சண்டை போடுகிறாரா எனக் குழப்பமாக இருக்கும். ஆடும் வெட்டுவதுண்டு. ஓடை அருகே கீரைத் தோட்டம் வைத்திருந்தார்கள். கமலை இறைப்பதை பலமுறை பார்த்திருக்கிறோம். பாட்டுப்பாடிக் கொண்டே கமலையில் நடப்பார். சிறு, சிறு பாத்திகளில் கீரை பயிரிட்டிருப்பார். ஓடைக்கரையில் கருவச் செடிகள் செழிப்பாக இருப்பதால், பலரும் வெட்டி விடுவார்கள். அதனால் அந்தப் பக்கம் போனலே சில நேரங்களில் சத்தம் போடுவார். இவரது பையன் பொண்ணுப்பாண்டி.

முத்தம்மாள் அம்மையார் வீட்டில் பசு மாடுகள் நிறைய இருக்கும். யாம் படிக்கும் காலத்தில் பள்ளிக் கூடம் போகும் வழியில் புது வீடு கட்டினார்கள். அம்மாவோடு நன்றாகப் பேசுவார்கள். இவரது மகன் தில்லை நடராஜன் அமைதியானவராக இருப்பார். மகளும் கூடவே இருந்தார்.

முத்துச்சாமி நாடாரை கருவாட்டு நாடார் என்பார்கள். கருவாடு வியாபாரம் செய்தார். மிதிவண்டியில் பல ஊர்களுக்கும் சென்று வருவார். வீட்டு முற்றத்தில் கருவாடுகளை காயப் போட்டிருப்பார்கள். வீடு அருகே பெரியதொரு வேப்பமரம் இருக்கும். பக்கத்தில் ஆழமான பள்ளம் கிடந்தது. முன்னர் கிணறாக இருந்ததாகச் சொல்வார்கள். படிக்கட்டெல்லாம் இருந்தது. மழைக்காலத்தில் தண்ணீர் நிரம்பி இருக்கும். இவரது மனைவி லட்சுமி அம்மையார். இவர்களுக்கு பாலமுருகன், சரவணன் மற்றும் காமாட்சியம்மாள் என பிள்ளைகள் இருந்தார்கள்

மாடசாமி நாடார் கரிசல் காட்டில் தோட்டம் பார்த்தார். பிள்ளைகள் மணி மற்றும் தங்கபாண்டி. தங்கப்பாண்டி, தற்போது ஊரில் மிதிவண்டி சரிசெய்யும் கடை வைத்திருக்கிறார்.

செண்டியம்மாள் அனைவரிடம் அன்பாகப் பழகுவார். கரிசல் காட்டில் தோட்டம் வைத்திருந்தார். இவரது மகன்கள் ராஜா மற்றும் விஜயன். பூச்செண்டு என்ற பெயரில் மகள் இருந்தார். இவர்களிடமிருந்து வாங்கிய நிலத்தில் தான் எமது அக்கா வீடு கட்டியிருக்கிறார். ராஜா அவர்கள் சென்னையில் வேலையில்

இருக்கிறார். சரவணன் வீட்டுத் திருமணங்களில் பார்த்துப் பேசியிருக்கிறோம். வில்லுப்பாட்டு மேடை இவர்கள் வீடு அருகில் தான் போட்டிருப்பார்கள். இவர்கள் வீட்டிற்கு வடக்கே பாலம்மாள் என்பவர் இருந்தார்.

அருணாச்சல நாடார் பையன்கள் நாகராஜ் மற்றும் நேரு. எமக்கு விவரம் தெரிந்து நேரு கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். நாகராஜ் அவர்கள் பெருமாள் கோவில் அருகே தோட்டம் வைத்திருந்தார். குளிப்பதற்கு, துணி துவைக்க, பல முறை இங்கு சென்றுருக்கிறோம். செழிப்பான தோட்டமாக இருந்தது. தற்போது வேறு யாருக்கோ விற்று விட்டார்கள் எனத் தெரிகிறது.

சேர்மக்கனி நாடார் கனத்த ஆளாக இருப்பார். மனைவி கருப்பம்மாள். மாடசாமி, மணிகண்டன், அருணாச்சலம் மற்றும் மகாலட்சமி என்று பிள்ளைகள் இருந்தார்கள். மணிகண்டனோடு பரளச்சியில் படிக்கும் போது, ஓரளவிற்குப் பேசிப் பழகியிருக்கிறோம். நன்றாகப் படிப்பார். முன்பு வீட்டின் முன், மளிகை கடை வைத்திருந்தார்கள். சேர்மக்கனி நாடார் சாமியாடுவார். பிள்ளைகள் அனைவரும் வெளியூர்களில் தங்கியிருக்கிறார்கள்.

ஏரல் அருணாச்சல சேர்மன்சாமி பிரபலமாகிக் கொண்டிருந்த காலமது. ஊரிலிருந்து சேர்மக்கனி நாடார் அடிக்கடி அங்கு போய் வருவதை அறிந்து அம்மாவும் சிலமுறை அங்கு சென்று வந்தார். புற்று போன்ற ஒன்றிலிருந்து மண்ணை எடுத்து பிரசாதமாகக் கொடுப்பார்களாம். இந்த மண் பிரசாதத்தைக் கொண்டு வந்து நீரோடு கலக்கி எமக்கும் கொடுத்திருக்கிறார். யாம் குடிக்காமல் தயங்கினோமானால் பரவாயில்ல சாமி பேரைச் சொல்லி குடி என அம்மா கெஞ்சுவதுண்டு.

முத்து நாடார் உயரமாக இருப்பார். மண் வெட்டு வேலைகளுக்கு எமது தெருக்காரர்களோடு சேர்ந்து செல்வார். மனைவி தெய்வஜோதி அம்மையார். இவர்களது பிள்ளைகள் காத்தலிங்கம், தங்கம், காமாட்சி மற்றும் வெள்ளைசாமி. பிள்ளைகள் தற்போது பட்டுக்கோட்டைப் பக்கம் இருக்கிறார்கள்.

ஆத்தியப்ப நாடார் எமது மாமாவோடு நட்பாக இருப்பார். இவரது மனைவி பாக்கியம்மாள். எப்போதும் சிரித்த முகத்துடன் இருப்பார். பையன் ஆத்தியப்பன். ஓடை அருகே தோட்டம் வைத்திருந்தார்கள். இவரது மகள் குழந்தைப் பேற்றின் போது இறந்து விட்டார். பேத்தி பிழைத்துக் கொண்டார். பேத்தியை கூடவே கூட்டிச் செல்வார்கள். வீட்டை ஒட்டிய கொட்டகையில் தோல்களாக அடுக்கி

வைத்திருப்பார். நல்ல உழைப்பாளி. இரவெல்லாம் தோட்டத்திற்கு நடந்து கொண்டிருப்பார். மின்சாரம் வந்து வந்து போகுமில்லையா. இவர்கள் வீட்டில் இன்று ஆசாரி குடியிருக்கிறார்.

அருணாச்சல நாடார், பூவே உனக்காக படத்தில் வரும் மீசைக்கார தாத்தா போல் இருப்பார். பெரிய வீடாகக் கட்டினார். அந்த வீட்டை தேவேந்திரர்கள் வாங்கி பொது மடமாகப் பயன்படுத்துகிறார்கள். ராட்டை சுற்றும் மில் நடத்தினார். தீப்பெட்டி குச்சித் தொழிலும் பார்த்தார். யாமெல்லாம் தீப்பெட்டி ஒட்டி குச்சிகளையும் அடுக்கியிருக்கிறோம். பின்னர் வெளியூரில் தங்கிவிட்டார்.

ஆனந்தன் வீடு அருகே ஒரு வீடு இருந்தது. இந்த வீட்டில் ஒரு பெண் இருந்தார். பெயர் பொன்மணி என நினைக்கிறோம். காளியம்மன் கோபுரம் கட்டும் போது இந்தப் பெண் அங்கே வேலை பார்ப்பார். தைரியமாக சாரத்தில் ஏறி இறங்குவது ஆச்சரியமாக இருக்கும்.

காசி நாடார், வீட்டின் தாழ்வாரத்தில் கட்டில் போட்டு இராமாயணம், மகாபாரதம் போன்றவற்றை இராகம் போட்டு படித்துக் கொண்டிருப்பார். அருகே காசியம்மாள் அம்மையார் கேட்டுக் கொண்டிருப்பார். இருவரும் கருத்தொருமித்த தம்பதிகளாக இருப்பார்கள். அம்மையார் எப்போதும் இன்முகத்துடன் இருப்பார். மேற்குக் கண்மாய் அருகே தோட்டம் வைத்திருந்தார்கள். கீரை, கத்தரிக்காய், சீனியாரக்காய் போன்றவற்றை விற்கும் போது காசு கொடுக்காதவர்களிடம் கூட, நாளைக்கு வாங்கிக் கொள்கிறோம் என்பார்.

குருசாமி நாடார் அனந்தம்மாள் என்று இருந்தார்கள். இவர்களின் தோட்டத்தை எமது மாமா கொஞ்ச காலம் பயிர் செய்தார். இவர்களின் இரண்டு ஏக்கர் கரிசல் காட்டை நாங்கள் ஒத்திக்கு வாங்கி பல வருடங்கள் பருத்தி, மல்லி போட்டோம்.

நாடார்களில் பெரும்பாலும் எல்லோருக்கும் நிலம் இருந்தது. ஒரு முறை ஓட்டுப் பதிவின் போது பெருமாள் நாடார் வகையறாக்களுக்கும் வெள்ளைச்சாமித் தேவர் வகையறாக்களுக்கும் சண்டை வந்து அடிதடியாகிவிட்டது. பல பேருக்கும் காயம். நாடார் மகாஜன சங்கத்தின் மூலம் வழக்குத் தொடுத்து பல வருடங்கள் இந்த வழக்கு நடந்தது.

சிறுவயதில் வில்லுப்பாட்டு பார்த்திருக்கிறோம். பின்னர் திரைப்படம் போட்டார்கள். அப்போதெல்லாம் சாதிப் பாடல்கள் போடமாட்டார்கள். பின்னர்

காமராஜர் பாடல்கள். அப்புறம் ராமராஜன் பாடல்களாகப் போட்டார்கள். படமும் ராமராஜன் படம்தான். அதன் பின்னர் சரத்குமார் பாடல்களும் படமும். அடுத்து யார் வருவாரோ.

எங்கள் ஊர்க்காரர்கள் மேலப்பரளச்சி அருகிலிருக்கும் புல்லாபட்டியை மறக்க முடியாது. ஊரில் படிக்கும்போது வினாடி வினாப் போட்டிக்கு ஒருமுறை புல்லாபட்டி பள்ளிக்கு வந்தோம். இங்கு வைகாசி மாதம் நாடார்களின் காளியம்மன் திருவிழாவிற்கு திரைப்படங்கள் போடுவார்கள். ஊரில் ஒருவரும் இருக்கமாட்டார்கள். எம்.ஜி.ஆரின் அனேகப் படங்கள் இங்கு பார்த்ததுதான். ரஜினியின் படிக்காதவன், பாக்யராஜின் முந்தானை முடிச்சு, தூறல் நின்னு போச்சு என நிறையப் படங்கள். ஆர்வமாகப் படம் பார்த்துக் கொண்டிருக்கும் போது திடீரென பாம்பு என்று கத்திக் கொண்டு கூட்டம் கலையும். அனைவரும் அலறியடித்துக் கொண்டு ஓடுவார்கள். வயல்களில் தான் திரைப்படம் நடக்கும். ஓடும் போது வரப்புத் தட்டி விழுந்தவர்கள் நிறையப் பேர். பின்னர் ஒலிபெருக்கியில் ஒன்றுமில்லை என அறிவிப்புச் செய்து படத்தைத் தொடர்வார்கள்.

படம் பார்க்க அடம்பிடித்து யாமும் சென்று விடுவோம். முத்து மாமா எமக்காகப் பேசி கூட்டிச் செல்வார். மாமா, எங்கள் வீட்டுத் திண்ணையில்தான் இரவில் தூங்குவார். இராணுவத்தில் இருந்தவர். இரண்டாம் உலகப் போரில் அஸ்ஸாம் காடுகளில் பிரிட்டிஷ் இராணுவத்திற்காக சண்டையிட்டதாகச் சொல்வார். ஊரில் வலுக்கட்டாயமாக வந்து கூட்டிச் சென்றார்களாம். இரவில் தூங்கும் போது அந்தக் கதைகளெல்லாம் ஆர்வத்துடன் சொல்வார். பல நேரங்களில் இராமாயண, மகாபாரதக் கதைகள் சொல்வார். இராகம் போட்டுப் படிக்கவும் செய்வார். அத்தை பெயர் அருளாயி. ஜெபமணி, பூச்செண்டு, பாப்பா, மேரி, செல்வி என பெண்பிள்ளைகளும் ஜோதி மச்சானும் பிள்ளைகள். இரண்டாவதாக பாப்பா அக்காவைத் திருமணம் செய்திருந்தார்.

எமது அப்பா காலத்தில் ரெட்டியபட்டியில் இருக்கும் டூரிங் டாக்கீசுக்குப் படம் பார்க்கச் செல்வார்களாம். சில நேரங்களில் எம்.ஜி.ஆரின் புதுப்படங்கள் பார்க்க அருப்புக்கோட்டைக்கு நடந்தே வந்து படம் பார்த்துச் சென்றிருக்கிறார்கள். கழுதிக்கும் போனதுண்டாம். அம்மாவும் உடன் சென்றிருக்கிறார்.

எமது பெற்றோர் செவல்காட்டில் கொள்ளிப்பாவையை பார்த்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். இருவரும் ரெட்டியாபட்டியில் படம் பார்த்து விட்டு காட்டு

சாலையில் நடந்து வரும் போது திடீரென சாலையில் பிரகாசமான நெருப்பு எரிந்ததாம். இவர்கள் அருகே வரவர அந்நெருப்பு அணைந்து விட்டதாம். கொள்ளிப்பாவை என்றால் நெருப்பாக எரியும் பேய் போல. வீடு வரும் வரை அப்பாவின் கையை அம்மா இறுக்கமாக பற்றிக் கொண்டாராம். நல்ல கொள்ளிப் பேய் தான் போங்கள்.

யாம் பரளச்சியில் படிக்கும் காலத்தில் தீபாவளி, பொங்கலுக்கு பகல் காட்சிக்கு நண்பர்களோடு ரெட்டியபட்டி தியேட்டருக்குப் படம் பார்க்கச் சென்றதுண்டு. மணல் குவிந்து கிடக்கும். சேரில் உட்காருவதற்கு அதிக கட்டணம். எட்டாவது படிக்கும் போது இங்கு படம் பார்க்க பள்ளியிலிருந்து அனைவரும் வந்தோம். மனிதக் குரங்கு படம் காட்டினார்கள். மதியம் ஐஸ் தொழிற்சாலையைச் சுற்றிப் பார்த்து ஊர் திரும்பினோம். பொட்டலங்கள் கட்டிக் கொண்டு போய் நண்பர்களோடு சாப்பிட்ட இந்த முதல் சுற்றுலா இனிமையானது. அந்தக் காலக்கட்டங்களில் தான் தொலைக்காட்சி பரவலாகியது. கேசட் வைத்துப் புதுப்புதுப் படங்களைப் போடுவார்கள். ஒரு இரவில் நான்கு படங்கள் கூடக் காட்டுவார்கள். சிறுவர்கள் எல்லோரும் மறக்காமல் சென்று விடுவோம்.

முதன்முதலில் தியேட்டரில் படம் பார்த்தது கமுதியில் தான். வாழ்வே மாயம் படம். எமது அம்மாவுக்கு முடியாமல் கமுதியில் உள்ள ஒரு தர்ஹாவில் நாற்பத்தியெட்டு நாட்கள் தங்கி இருந்தார். வெள்ளையபுரத்தில் இருந்தவர்கள் நன்றாகப் பார்த்துக் கொண்டார்கள். அம்மாவைப் பார்க்க ஒருமுறை சென்று அங்கேயே தங்க வேண்டி இருந்தது. அன்று இரவு படம் பார்த்தோம். அக்கா எம்மை இடுப்பில் தூக்கிவைத்துக் கொண்டார். இல்லையென்றால் பெரிய பையன் என்று சீட்டு கேட்பார்களாம். எமக்கு ஒரே வெட்கம். இதைச் சொல்லி சொல்லி கேலி பேசிச் சிரிப்பார்கள்.

யாம் ஆறாவது படிக்கும்போது ஒருமுறை படிப்புக்கு இடையூறு வந்தது. எங்கள் ஊரில் வேலை இல்லாமல் முதுகுளத்தூரில் நெல் அறுவடை செய்வதற்கு அப்பா ஒப்பந்தம் பேசி இருந்தார். தெருவில் நிறையப் பேர் சென்று விட்டார்கள். அக்கா மட்டும் இருந்தார். பின் அம்மாயியிடம் எம்மைப் பார்த்துக் கொள்ளுமாறு சொல்லிவிட்டு அக்காவும் சென்றுவிட்டார்.

யாமோ இரண்டு நாட்களுக்குள்ளாகவே இருக்க மாட்டோம் என்று சொல்லி அழுது அடம் பிடித்து விட்டோம். எங்கள் வீட்டின் முன் உள்ள சமையலறையில் பாதி

அளவு கட்டிய சுவர் இருக்கும். அதில் ஏறி உட்கார்ந்து கொண்டோம். காசு கொடுத்தால் தனியாகப் போய்விடுவோம் என்று சொல்லி ஒரே பிடிவாதம். கமுதியில் பூச்சாண்டி இருப்பான், பிடித்துக் கொள்வான் என்றெல்லாம் பயம் காட்டிப் பார்த்தார்கள். எம்மை மாற்ற முடியவில்லை. ஏற்கனவே ஒருமுறை அக்காவோடு சென்று வந்திருந்ததால் வழி நினைவிலிருந்தது.

எங்கள் ஊருக்கு மாலை ஆறு முப்பதுக்கு கமுதி செல்லும் பேருந்து வரும். அதில் தனியாக ஏற்றி விட்டார்கள். அது பல ஊர்களுக்கும் சென்று தாமதமாகத்தான் கமுதி போய்ச் சேரும். கமுதியில் பரோட்டோ சாப்பிட்டு விட்டு முதுகுளத்தூர் செல்லும் பேருந்து ஏறி, சரியான நிறுத்தத்தில் இறங்கி நடந்தே தெருக்காரர்கள் தங்கி இருந்த வீடு போய் சேர்ந்து விட்டோம். எல்லோருக்கும் ஆச்சர்யம். தனியாக வந்ததற்கு திட்டு விழுந்தது. அங்கேயே ஒரு மாதத்திற்கும் மேல் இருந்து விட்டோம்.

நெல் கதிர்களை அறுத்து கட்டிக் கொண்டு போனபின் நெல் வயல்களில் சிதறிக் கிடக்கும் கதிர்களைச் சேகரித்து நெல்லை உருவி வைத்துக் கொள்வது எமது பணி. அந்த வருடம் நெல் அமோகமாக விளைந்திருந்தது. பாதி வயல்கள் நீரில் மூழ்கிக் கிடந்தன. முதுகுளத்தூரில் இனிப்பு போண்டா அவ்வளவு சுவையாக இருக்கும். தினமும் எமக்கு வாங்கிக் கொடுப்பார்கள். சில நேரங்களில் யாமே சென்று வாங்கி வருவோம். பின்னர் படிப்பு போய்விடும் என்று அக்காவுடன் எம்மை அனுப்பிவிட்டார்கள்.

எங்களின் குலதெய்வமான கருப்பசாமி தேவேந்திரர்களின் பொதுவான சாமி. மாமாவிற்கு குலதெய்வம் எப்போதும் வென்றான் சோலைசாமி. தெரு முழுக்கவே அப்பா மற்றும் அம்மாவோடு இரத்த உறவுள்ளவர்களே. பச்சேரியிலிருந்து வந்து இங்கேயே தங்கியவர்களும், தும்முசினம்பட்டி, அகரத்துப்பட்டி போன்ற ஊர்களிலிருந்து வந்து தங்கியவர்களும் உண்டு.

அம்மாவிற்கு நிறைய அண்ணன்கள் இருந்தார்கள். பெருமாள் குடும்பன், அனந்தக் குடும்பன், குருசாமிக் குடும்பன் என பங்காளிகள் இருந்திருக்கிறார்கள். குருசாமித் தாத்தா வாரிசுகள்தான் மாமா, பெரியம்மா, எமது அம்மா. பெருமாள் தாத்தா வாரிசுகளான காரவீட்டு கருப்பையா, லட்சுமணன், இராமலிங்கம், வெள்ளைச்சாமி எமக்கு மாமாக்கள். காரவீட்டு கருப்பையா மாமா வசதியாக இருப்பார். நிறையக் காடுகள் வைத்திருந்தார். இவர்களது பிள்ளைகள்

சோலையம்மாள், ஜெயபால், தனபால் மற்றும் கோபால். தனபால் இளவட்ட வயதில் இறந்து போனார். ஜெயபால் தெருவில் மளிகைக்கடை வைத்திருந்தார். இரண்டாவதாக காளியம்மாள் அத்தை. பின்னர் இவரும் இறந்து பாண்டியம்மாள் அத்தையை முன்றாவதாகத் திருமணம் செய்தார். இவர் சிறு பெண்ணாக இருந்தார். பெத்தம்மாள், அமுதா என இரட்டைக் குழந்தைகள் பிறந்தார்கள்.

மாமா மீசை வரையும் அழகே தனி. வெகுநேரம் கண்ணாடி பார்த்து மீசைக்கு கருப்பு மைய் தடவினால் ஊருக்குப் போகிறார் என அறிந்து கொள்ளலாம். சமயங்களில் எங்கள் வீட்டில் வந்து மைய் டப்பா வாங்கிச் செல்வார். அம்மா மீது மிகுந்த அன்பு வைத்திருப்பார்.

லட்சுமணன் மாமா மட்டுமே அப்போது தி.மு.க. வில் இருப்பார். யாம் நன்றாகப் படிப்பதால் மாமா எம்மீது பிரியமாக இருப்பார். மனைவி காந்தி அத்தை. இவர்கள் பிள்ளைகள் சரோஜா, தியாகராஜன், நவநீதம் மற்றும் இரத்தின சபாபதி. இராமலிங்க மாமா வண்டி மாடு வைத்திருந்தார். இருவரும் ஒரே வீட்டில் இருப்பார்கள். சரோஜா மதனியை ஆனைக்குளம் சங்கிலி அண்ணன் கட்டினார். அண்ணன் எமது பெற்றோர் மேல் பாசமாக இருப்பார். நவநீதம் முதுகுளத்தூர் செல்லும் வழியில் இருக்கும் ஆனையூரில் வாக்கப்பட்டார். அங்கிருந்து காளியம்மாளை தியாகராஜனுக்கு மணமுடித்தார்கள். பெருநாழி சண்முகபுரத்தைச் சேர்ந்த வியாகுலமேரியை சபாபதி திருமணம் புரிந்தார்.

வெள்ளைச்சாமி மாமா ஆர்.எஸ்.மங்கலம் அருகே ஆசிரியராகப் பணியாற்றினார். எமது சிறுவயதில் ஊரில் வீடு கட்டினார். சிறுவர்களான நாங்கள் கல் எடுத்துக் கொடுப்போம். ஐஸ் வரும் போது வாங்கிக் கொடுப்பார். மாமா வீட்டு மொட்டை மாடியில் நண்பர்களோடு சேர்ந்து உறங்குவதுண்டு. பேச்சும் சிரிப்பும் களைகட்டும். குழந்தை இல்லாமல் ஒரு பையனை தத்தெடுத்து வளர்த்தார்கள். ஊருக்கு வந்தால் அத்தையும் எலலோருடனும் கலகலப்பாகப் பேசுவார்.

அனந்தன் தாத்தா வகையறாக்களான கருப்பையா, ஆட்டுக்கார முனியாண்டி, சோலையப்பன், முத்துசாமி எமக்கு மாமாக்கள். ஆட்டுக்கார முனியாண்டி மாமா அப்பாவின் தங்கை கருப்பாயி அத்தையை கட்டி இருக்கிறார். இவரது குழந்தைகள் வெள்ளைச்சாமி. ஆசைத்தம்பி, இராமகிருஷ்ணன், தங்கப்பொண்ணு மற்றும் பால முருகன். வெள்ளைச்சாமி மச்சான் நல்ல குணமுள்ளவர். எம் மீது பாசமாக இருப்பார். காதல் என்ற பெயரில் தற்கொலை செய்து கொண்டார். அசைத்தம்பி

தஞ்சாவூர் பக்கம் பல வருடங்கள் இருந்தார். பாலமுருகன் பட்டப் படிப்பு படித்திருக்கிறார். சோலையப்பன் மாமா வடபாதி மங்களத்தில் தங்கியிருந்தார்.

கருப்பையா மாமா, சின்னத்தாய் அத்தை பிள்ளைகள் முனியசாமி மற்றும் பாண்டி. முனிசாமி மச்சானை கீக்கோ என்று சொல்லுவார்கள். காதல் மன்னன். பல திருமணங்கள். பாண்டி மச்சானை அவுட் பாண்டி என அழைப்பார்கள். சிறுவயதில் மிகவும் கஷ்டப்பட்டவர் தற்போது நிலக்கிழாராக இருக்கிறார். சித்தப்பா பெண் பாண்டியம்மாள் அக்காவை திருமணம் செய்திருக்கிறார். பிள்ளைகள் ஜெயஸ்ரீ, சோலைசாமி, கீதாஞ்சலி மற்றும் பாலகுருநாதன். இவர்களில் ஜெயஸ்ரீ திருவில்லிபூத்தூர் கிருஷ்ணன் கோவில் அருகே மணமுடித்திருக்கிறார். சோலைசாமி மணமுடித்திருப்பது முதுகுளத்தூர் பக்கம்.

குருசாமி மாமா இராமாயி அத்தையின் பிள்ளைகள் செல்லச்சாமி, மாரியம்மாள், கணேசன், விஜயன் மற்றும் முனியம்மாள். செல்லச்சாமி அவர்கள் ஓடை ஓரம் தோட்டம் வைத்திருந்தார். வெங்காய வேர் வெட்டுவதற்கு வீட்டில் குவித்துப் போடுவார்கள். பாப்பா அக்கா நல்ல குணமுள்ளவராக இருப்பார். இராமச்சந்திரன், இராஜாத்தி, பாலமுருகன், பிச்சைமாரி இவர்களது குழந்தைகள். ராஜாத்தியை நல்லதம்பி அவர்கள் மகன் கருப்பசாமிக்கு கட்டி கொடுத்தார்கள். யாம் கல்லூரி படிக்கும் காலத்தில் பல்லடம் பக்கம் வந்து தோட்டம் பார்த்தார்கள். பல ஆண்டுகளுக்குப் பின் ஊருக்கு வந்து பாலம்மாள் கிணற்றுத் தோட்டத்தை விலைக்கு வாங்கி விவசாயம் செய்கிறார். மகன்கள் முத்தூரணி சாமி தோட்டத்தை குத்தகைக்குப் பார்க்கிறார்கள்.

சக்கணப் பெரியப்பா மற்றும் அவரது தங்கை மலைக்கார மாரியம்மா பெரியாத்தா இருந்தார்கள். எங்கள் வீட்டிற்குப் பக்கத்து வீடு. சக்கணன் மாமா பிள்ளைகள் பாண்டி, தருமர் மற்றும் மாரியம்மாள். இதில் தருமர் அண்ணன் வீட்டில் பெரிய வானொலிப் பொட்டி இருந்தது. காலையிலேயே சத்தமாக இலங்கை வானொலி வைத்து விடுவார்கள். பாட்டுக்கள் கேட்டுக் கொண்டே இருக்கும். தேர்தல் சமயங்களில் முடிவுகளுக்காக விடிய விடிய உட்கார்ந்திருப்பார்கள். செய்திகள் வாசிப்பது சரோஜ் நாராயணன் சுவாமி எனும் வார்த்தை கேட்டவுடன் அனைவருக்கும் சுதாரிப்பு வந்துவிடும்.

மலைக்கார மாரியம்மா பெரியாத்தா கதைகள் நிறையச் சொல்லுவார். கேரளாவில் மலைத் தோட்டங்களில் இருந்ததால் இந்தப் பெயர். களையெடுக்கும்

நாட்களில் காலையில் ஆரம்பித்து வீடு வந்து சேரும்வரை ஒரே கதையைச் சொல்லிக் கொண்டிருப்பார். அபாரமான ஞாபக சக்தி. தாலாட்டுப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் அருமையாகப் பாடுவார். ஐந்தாம் வகுப்பு படிக்கும்போது எங்களது கூரை வீட்டை இடித்து வங்கிக் கடனில் ஓட்டுவீடு போட்டபோது பெரியாத்தா வீட்டில்தான் பல மாதங்கள் தங்கி இருந்தோம்.

பாண்டி அண்ணன் ஆசிரியருக்குப் படித்துவிட்டு பல வருடங்கள் வேலை இல்லாமல் இருந்தார். பின்னர் வேலை கிடைத்து அருப்புக்கோட்டையில் தங்கி விட்டார். காட்டு வேலைகள் செய்துகொண்டிருந்த தர்மர் அண்ணன் பின்னர் கொத்தனாராகிவிட்டார். மனைவி செல்லம்மாள். மதினியின் சொந்த ஊர் பெருநாழி பக்கமிருக்கும் சின்னூர். மாமா பெயர் கருப்பையா. ஊருக்கு வரும் போது எங்கள் குடும்பத்தோடு நட்பாக இருப்பார்.

பொன்னன் எனும் பொன்னுப் பெரியப்பாவும் மூக்கம்மா பெரியம்மாவும் அருமையான தம்பதிகளாக இருப்பார்கள். மகள் முனியம்மாள். பெரியப்பா மிகவும் அமைதியான மனிதர். வேலைக்குச் சென்று யாம் பார்த்ததில்லை. அகரத்துப்பட்டியில் நிறைய நிலம் இருந்திருக்கிறது. தாத்தா அங்கு பெரிய மனிதராக வாழ்ந்தாராம். பெரியப்பா பாரதம் அருமையாகப் படிப்பார். இராமாயணம், மகாபாரதம் போன்றவை உரைநடையோடு கூடிய செய்யுள் வடிவில் வைத்திருந்தார். பரளச்சியில் படிக்கும் போது யாம் வாங்கி ஆர்வம் பொங்க வாசித்திருக்கிறோம். சண்டைக் காட்சிகளில் வரும் காட்சிச் சித்தரிப்புகளை விருப்பமாகப் படித்தோம்.

எமது சிறு வயதில் மாமா வீட்டிலிருந்த இரும்பு பெட்டியில் வேறெதையோ தேடியபோது காந்தியின் சத்திய சோதனை புத்தகம் கிடைத்தது. சத்திய சோதனையை ஒரே மூச்சாகப் படித்து முடித்தோம். சிறு வயதிலிருந்தே எம்மை தீவிர வாசிப்புப் பழக்கம் தொற்றிக் கொண்டது ஆச்சரியம்தான்.

கோடங்கிக் குடும்பன் மாமா இருந்திருக்கிறார். இவரது பையன்கள் போஸ், நல்லதம்பி, ஆறுமுகம் மற்றும் வேல்முருகன், இதில் போஸ் மச்சானுக்கு அடிக்கடி ஜன்னி வரும். நல்லதம்பி மச்சான் எமது அப்பாவோடு நட்பாக இருப்பார். இவர்கள் வீட்டின் அருகே குருசாமிப் பெரியப்பா இருந்தார். பெரிய துருத்தி என்பார்கள். வெளியூர்களில் இருந்துவிட்டு தாமதமாகவே ஊரில் வந்து தங்கினார். மாடுகள் வைத்திருந்தார். பெரியம்மா பெயர் முத்தம்மாள். அழகம்மாள் அக்காவை

பரளச்சியில் கட்டிக்கொடுத்தார்கள். ஆத்தா பள்ளன், அம்மா பள்ளன் எனும் வேறுபாட்டில் பரளச்சியோடு சம்பந்தம் வைத்துக் கொள்வதை எங்கள் ஊரார் தவிர்த்ததாகச் சொல்வார்கள்.

முனியாண்டித் தாத்தா, கருப்பாயி அம்மாயி பிள்ளைகள் கருப்பசாமி, பொன்னையன், நாகராஜ், அழகு மீனா மற்றும் முத்து மீனா. தாத்தா கலகலப்பாகப் பேசுவார். சடையன் கண்மாய் அருகே குத்தகைக்கு தோட்டம் பார்த்தார். கருப்பசாமி மாமா திருமலைபுரத்தில் மளிகைக் கடை வைத்தார். மனைவி மாரியம்மாள். அத்தை எம்மோடு நன்றாகப் பேசுவார். பொன்னையா மாமா, பெருநாழியில் திருமணம் முடித்து அங்கேயே இருந்தார். மூட்டம் போடும் வேலை செய்வார். வெளிநாடு செல்ல தரகர்களிடம் பணம் கொடுத்து ஏமாந்து கடனால் துன்பப்பட்டார். என்னக்கா பண்றது, எல்லாம் தலையெழுத்து என அம்மாவிடம் சொல்லி வருந்தியதைக் கேட்டிருக்கிறோம். நாகராஜ் மாமா மிகவும் ஜாலியான ஆள். வீட்டுப்பக்கம் வந்தால் அப்பாவை வம்பிழுக்காமல் போகமாட்டார். கொத்தனாருக்கு இன்னைக்கு வேலை இல்லையா என உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பார். புளி வாங்கிட்டு வரச் சொன்னா, இங்கேயே உட்காந்துட்டோம் என ஓடுவார். இரண்டாம் தாரமாகக் கட்டிய பஞ்சவர்ணம் அத்தை அமைதியானவராக இருப்பார்.

கிரால் என்ற கருப்பசாமி அவர்கள் கோலவர்ணத் தாத்தா மகள் பழனி அக்காவை திருமணம் செய்திருக்கிறார். மாட்டுத் தரகர். வண்டிமாடுகள் வைத்திருந்தார்.

துருத்தி பெரியப்பா, சிலையாள் பெரியாத்தா மகன் பாண்டி அண்ணன் பல வருடங்கள் பாம்பேயில் இருந்தார். மகள் பூபதி. துருத்தி பெரியப்பா, பொன்னு பெரியப்பாவோடு அடிக்கடி தகராறு செய்யவே ஒரு நாள் இரவு பொன்னு பெரியப்பா இவரது கையை வெட்டி விட்டார். இவ்வளவு அமைதியானவரா இப்படி செய்தார் என்று எல்லோருக்கும் ஆச்சரியம். சாது மிரண்டால் காடு தாங்காது என்பதற்கு சரியான உதாரணம்.

வழிவிட்டான் மச்சான் பச்சேரிக்காரர். ஞானசுந்தரி அக்காவைக் கட்டி இங்கேயே தங்கிவிட்டார். மிகவும் ஜாலியான மனிதர். இவர்களது குல தெய்வம் கமுதி அருகே இருக்கும் வழிவிட்ட அய்யனார். ஞானசுந்தரி அக்கா எங்கள் மேல் பாசமாக இருப்பார். பொது வேலைகளை இழுத்துப் போட்டு செய்வார். இவர்கள்

குழந்தைகள் பரஞ்சோதி, முத்துமாரி, ஞானமுத்து மற்றும் முத்துராமர். பரம்ஜோதி தெற்குப் பட்டியைச் சேர்ந்த சுப்பையய்யா அண்ணனை கட்டி இருக்கிறார். இருவரும் எம் மீது மிகுந்த பாசமாக இருப்பார்கள்.

பால்ச்சாமி எனும் மொட்டக்குண்டு மாமா எமது அப்பாவோடு நெருக்கமாக இருப்பார். மகன் நல்லதம்பி. மகள் அரசியை பூமாலை அண்ணன் மணமுடித்திருக்கிறார். பூமாலை அண்ணன் நல்ல உழைப்பாளி. தெல்லி குளம் அருகே தோட்டமும் பார்த்தார்கள். பெரும்பாலும் தோட்டத்திலேயே இருப்பார். வட்டிக்கு கொடுத்து வாங்குவதாகவும் பேசுவார்கள். இவர்களது குழந்தைகள் அரசி, மாரிமுத்து, முத்து மற்றும் பால்பாண்டி. மாரிமுத்து மதுரை சரஸ்வதி நாராயணன் கல்லூரியில் வரலாறு பட்டம் பெற்றார். தற்போது சங்கரன்கோவில் அருகே ஆசிரியராகப் பணியிலிருக்கிறார். பால்பாண்டி எம்மீது அன்பாக இருப்பார்.

அழகன் தாத்தா மாடு மேய்ப்பார். பாட்டி சின்னப் பாஞ்சாலி. இவர்களது மகன் பாண்டி மாமா. தாத்தா போலவே கனத்த ஆளாக இருப்பார். அத்தை அரசி. அம்மாவோடு அன்பாக இருப்பாகள்.

குட்டையன் சித்தப்பா, சந்திரன் சித்தப்பா போன்றவர்கள் பச்சேரி ஆனைக்குளம் பக்கமிருந்து வந்து ஊரில் தங்கியவர்கள். அப்பத்தா வழியில் நெருங்கிய உறவினர்கள். குட்டையன் சித்தப்பா எங்கள் வீட்டில் ஆள் இல்லாத நேரம் பார்த்து சாப்பிட்டு விட்டுச் சென்று விடுவார். சத்தமாகப் பேசுவார். மிகவும் ஜாலியான மனிதர். சின்னக் கருப்பையா சித்தாப்பாவுடன் அவருக்கும் வீட்டில் பங்கிருக்கிறது என அடிக்கடி வம்பிழுப்பார். பாப்பா சித்தி சிரித்த முகத்துடன் அமைதியானவராக இருப்பார். பிள்ளைகள் உதயசூரியன், அன்னக்கொடி, வீரம்மாள், மீனாள், மற்றும் முத்துப்பாண்டி. உதயசூரிய அண்ணன் கொத்தனார் வேலை பார்க்கும் போது ஆதிதிராவிடர் சமூகத்தைச் சார்ந்த பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார்.

சந்திரன் சித்தப்பாவோடு அதிகம் பேசியதில்லை. காடுகளுக்குச் சென்று எதையாவது பிடித்து வருவார். ஒரு முறை முள்ளெலியைப் பிடித்து வந்திருந்தார். அனைவரும் வேடிக்கை பார்த்தோம். நாகம்மாள் சித்தி அம்மாவோடு நட்பாக இருப்பார். இவர்களுக்கு வீரம்மாள், குருசாமி, கருப்பசாமி என்று குழந்தைகள். வீரம்மாளை தெற்கு நத்தத்தில் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள்.

பெருமாள் பெரியப்பா உயரமாக இருப்பார். எம்மைப் பார்க்கும் போது எப்பய்யா வந்தீங்க என்று விசாரிப்பார். மனைவி புஷ்பம் பெரியம்மா. பெரியம்மா எம்மீது பாசமாக இருப்பார். ஊரில் இருந்த எம்.எல்.எ. தோட்டத்தில் பல ஆண்டுகளாக வேலை செய்தார்கள். இவர்களுக்கு குமராயி, கோட்டை ஈஸ்வரி, இரட்டையர்களான ராமர், லட்சுமணன் குழந்தைகள்.

குமராயி அக்கா எமது அக்காவின் நெருங்கிய தோழி. நாகராஜ் மாமாவிற்கும் இவருக்கும் திருமணம் சிறப்பாக நடந்தது. மேளமெல்லாம் வைத்திருந்தார்கள். திருமணச் சாப்பாடும் பிரம்மாதம். இரண்டு நாட்களிலேயே மாப்பிள்ளை பிடிக்க வில்லையென்று தற்கொலை செய்து கொண்டார். எமக்கு விவரம் தெரிந்து நடந்த முதல் தற்கொலை. சிறுவயது என்பதால் விவரம் புரியாமல் மற்றவர்கள் அழுததைப் பார்த்து யாமும் அழுதுகொண்டு திரிந்தோம்.

சௌரித் தாத்தா, கிருட்ணம்மாள் பாட்டியின் குழந்தைகள் பொன்னுப்பாண்டி, பாண்டியம்மாள். பொன்னுப்பாண்டி வயல்களுக்கு மருந்தடிப்பார். முதலில் கைதெளிப்பானும், பின்னர் மோட்டார் மூலம் இயங்கும் தெளிப்பானும் வைத்திருந்தார். தற்போது தோட்டம் பார்க்கிறார். கண்மாய்க் கரையில் மண்ணைக் கொட்டி மேடாக்கி வீடு கட்டினார்கள். தும்முசினம்பட்டி லெட்சுமி அக்காவை கட்டினார்.

அருணாச்சல மாமா பையன்கள் சோலையப்பன், ஆத்தியப்பன். செவல்காட்டில் தோட்டம் வைத்திருந்தார்கள். சோலையப்பன் மச்சான் தெற்குநத்தம் லெட்சுமி அக்காவை மணமுடித்தார். கீழ்காட்டுப் பக்கமிருந்து வந்து இங்கே தங்கியவர் ஆட்டுக்கார பாண்டி அண்ணன். இவரது தந்தை பெயர் கோண மண்டையன். காரவீட்டு கருப்பையா மாமா பெண் சோலையம்மாள் மதனியை கட்டியிருந்தார். எமது அம்மாயி இறந்ததற்கு ஆட்டம், பாட்டம் என்று ஜமாய்த்துவிட்டார். கொட்டுக்காரர்களே அசந்து விட்டார்கள். இவரது பையன் அமிர்தராஜ் கோபால் அவர்களின் பெண் அமிர்தவல்லியை மணம் செய்து இருக்கிறார்.

தெருக்காரர்கள் அம்மா மீது அன்பும் மரியாதையும் வைத்திருந்தார்கள். அதற்கு நேர் எதிராக அப்பாவை உண்டு இல்லையென கலாய்ப்பார்கள். எமது சிறு வயதுகளில் தெருவில் கிண்டலும், கேலிப் பேச்சுமாக மகிழ்ச்சியாக இருப்பார்கள். தேர்தல் வந்தால் விடிய விடிய உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பார்கள். எமது

அப்பா உரக்கப் பேசுவார். கருணாநிதியை என்ன காரணத்தாலோ அவருக்கு சுத்தமாகப் பிடிக்காது.

கருப்பசாமி கோவில் கும்பிடுவதற்கு தெருவில் ஒவ்வொரு தலக்கட்டுக்கும் இத்தனை ரூபாய் என்று வரி விதிப்பார்கள். எமது சிறுவயதுகளில் அடிக்கடி தெருக் கூட்டம் நடக்கும். தெரு, ஊர் சம்பந்தமான எல்லா முடிவுகளையும் காரசார பேச்சுக்கள் பேசித்தான் தீர்மானிப்பார்கள். அனைத்து வீடுகளிலிருந்தும் ஆண்கள் வந்து விடுவார்கள். பெண்கள் சற்று தள்ளி உட்கார்ந்து கொள்வார்கள்.

தெருவிற்கென்று மொத்தமாகப் பணம் வைத்திருப்பார்கள். தேவைப்படுவர்கள் குறைந்த வட்டிக்கு பணம் வாங்கிக் கொள்ளலாம். திருமணம் போன்றவை நடக்கும்போது ஊர்ப்பணம் என்று வாங்குவார்கள். வியாபாரிகள் வந்தால் மகிமை என்றும் வாங்குவதுண்டு. எல்லா சாதிக்கார்களும் இப்படி பொதுப் பணம் வைத்திருப்பார்கள்.

ஊரின் கிழக்கு எல்லையில் மண்ணாலான சிறு பீடமே கோவில். அதில் இரும்பால் செய்த சூலாயுதம் மற்றும் நிறைய அருவாள்கள் நடப்பட்டிருக்கும். இவ்வளவுதான் கோவில். எமது சிறுவயதில் கோவிலருகே நிறைய உடை மரங்கள் இருந்தன. எங்கள் தாத்தா காலத்திற்கு முன்பிருந்தே கருப்பசாமி இருக்கிறார். பெயர் வாக்கு வழி கருப்பையா. எங்கள் கருப்பசாமிக்கு ஆடு கோழி பலியிட மாட்டார்கள். அருள் வாக்கு வந்து சொன்னதால் நிறுத்தி விட்டார்களாம்.

எமது அப்பாவின் சொல்லிலிருந்து, இந்த கருப்பசாமியை கேரளாவிலிருந்து யாரோ ஒரு மாந்தரீகர் கொண்டு வந்து விட்டாராம். அந்தப் பக்கமாக விளையாடிய சிறுமிகள் திடீரென்று பாதிக்கப்பட்டார்களாம். பின்னர் பெரியவர்கள் கனவில் வந்து உங்கள் ஊரை அழிக்க எம்மை விட்டிருக்கிறார்கள் என்றும், எம்மை வழிபாடு செய்து பூஜித்தால் காப்பாற்றுவதாகவும் அருள் வாக்குக் சொன்னாராம். நாடார்கள் அங்கேயே கோவிலாக வைத்துக் கொண்டார்களாம். அங்கிருந்து பிடிமண் எடுத்து தேவேந்திரர்கள் தனியாக கருப்பசாமியை வைத்துக் கொண்டார்களாம். நாடார் தெருவும் எங்கள் தெருவும் சந்திக்கும் இடத்தில் இப்போதும் ஒரு கருப்பசாமி கோவில் இருக்கிறது. இவரை கவுன்சிலர் குருசாமி அவர்களின் வகையறாக்கள் குல தெய்வமாக வணங்குகிறார்கள். எமது சிறுவயதில் மைல்கல் மாதிரியான ஒரு கல் மட்டும் அங்கே இருக்கும். இப்போது கவுன்சிலருக்கு வசதி வாய்ப்புகள் பெருகி

விட்டதால் அழகிய சுற்றுச்சுவர் கட்டி அருவாள், சூலாயுதம் வைத்திருக்கிறார். கடந்த சில ஆண்டுகளாக சிறப்பாக வழிப்படுகிறார்கள்.

இது எமது அப்பா சமீபத்தில் சொன்ன கதை. முன்னர் வேறுமாதிரி பேசியதெல்லாம் நினைவிலுள்ளது. பெரியவர்களிடம் பேசிப் பார்த்தால் இன்னும் விவரமாகத் தெரிய வரும். தாத்தாவிற்கு நிறையத் தெரிந்திருக்கும். தாத்தா காலத்தில் தேவேந்திரர்களின் வாக்குவழி கருப்பையாவைத்தான் அகமுடையார்களும் வணங்கி இருக்கிறார்கள். அப்போது சாதி வேறுபாடு தீவிரமாக இல்லாமல் மக்கள் ஒற்றுமையாக இருந்திருக்கிறார்கள்.

எல்லோரும் பொங்கல் வைத்து தளுகை போடுவார்களாம். எமது தந்தைக்கு விவரம் தெரிந்த நாட்களில்கூட வெளியூர்களிலிருந்தெல்லாம் வண்டி மாடுகளில் நிறையப் பேர் வருவார்களாம். பெரிய பந்தல் போட்டு திருவிழா போன்று நடக்குமாம்.

தேவேந்திரர்களில் சில பேருக்கு அருள்வந்து சாமியாடியிருக்கிறார்கள். நாளடைவில் இதில் சில முரண்பாடுகள் வந்ததாகத் தெரிகிறது. பின்னர் அகமுடையார்கள் இங்கிருந்து பிடிமண் எடுத்துப் போய் பக்கத்திலேயே தனியாக கருப்பசாமியை வைத்துக் கொண்டார்களாம். இரண்டு கருப்பசாமி கோவில்களிலுமே பீடமும், அருவாள்களும் இருக்கும். எமது சிறுவயதில் இங்கிருந்து அருவாள்களை எடுத்து அவர்கள் கருப்பசாமி பீடத்தில் வைத்துக் கொள்வார்கள். நாங்களும் அங்கிருந்து அருவாள்களை எடுத்து எங்கள் பீடத்தில் வைத்துக் கொள்வோம். இப்படி இரண்டு பக்கமும் அருவாள்கள் மாறிக் கொண்டிருக்கும்.

பின்னர் அம்பிகாவதி தலவர் முயற்சியில் கருப்பசாமிக்கு சிலை வைத்தார்கள். இந்த சிலை உய்யவந்த பெருமாள் கோவில் கிணற்றிலிருந்து எடுத்ததாகத் தெரிகிறது. காற்றுக்கு சிலை விழுந்து சேதமடைந்ததால், வேறொரு கருப்பசாமி சிலை வைத்து, அந்த சிலையைச் சுற்றி ஒரு சிறிய கோவிலைக் கட்டி இருக்கிறார்கள். சில வருடங்களாக அகமுடையார்கள் தெருவினர் எல்லோரும் சேர்ந்து கருப்பசாமியை சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். சமீபமாக கோவில் அருகே நாடகமெல்லாம் போடுகிறார்கள்.

அகமுடையார்கள் தனியாக கருப்பசாமியை வைத்துக் கொண்டது போல் ஆதிதிராவிடர்களும் தேவேந்திரர் கருப்பசாமியிடம் பிடிமண் எடுத்து பக்கத்திலேயே

தனியாக வைத்துக் கொண்டார்கள். அங்கும் சூலம், அருவாள், மணிகள் இருக்கின்றன. இந்தப் பிரிவினை எமக்கு விவரம் தெரிந்து நடந்தது.

மாசி மாதம் தெரு சார்பாக பொதுப் பொங்கல் வைப்பார்கள். வீடுகள் தோறும் தனியாகவும் பொங்கல் வைப்பதுண்டு. அகரத்துப்பட்டியில் இருந்து செல்ல வடிவுச் சித்தப்பா பங்காளி என்ற முறையில் வருவார். அதுபோக பிறந்த மொட்டை, காதுகுத்து போன்ற சுபவிஷேசங்களும் கோவிலில் நடக்கும். எங்கள் கருப்பனுக்கு ஆடு, சேவல்தான் இல்லையே தவிர, படையல் போடும்போது சாராயப் பாட்டிலும் சுருட்டும் கண்டிப்பாக வைக்க வேண்டும்.

பொதுப்பணம் கொடுக்கல் வாங்கலில் தெருவில் சண்டை வந்து பல ஆண்டுகள் மாசித் திருவிழாவைக் கொண்டாடாமல் இருந்தார்கள். கடந்த சில வருடங்களாக இளைஞர்கள் இணைந்து சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.

பெரியப்பாதான் பூசாரியாக இருந்து தேங்காய் உடைப்பார். அவர் இல்லையென்றால் அப்பா செய்வார். இன்றும் குழந்தை பிறந்தால் அப்பாவிடமிருந்து திருநீறு வாங்கிச் செல்வார்கள். ஓயாமல் குழந்தை அழுதாலும் திருநீறு உண்டு. மற்ற சாதிக்காரர்களும் இதுபோல் திருநீறு வாங்கிச் சென்றதை சிறுவயதில் கவனித்திருக்கிறோம்.

எமது தாத்தா காலத்திலேயே கருப்பசாமி கோவிலிலிருந்து பிடிமண் கொண்டு வந்து எங்கள் வீட்டிற்கு அருகிலேயும் ஒரு கோவில் வைத்திருக்கிறார்கள். அப்பாவிடம் காரணம் கேட்டால் அடிக்கடி அங்கு சென்று வர சிரமமாக இருந்ததாம். பெரியப்பா வீட்டிற்கும் எங்கள் வீட்டிற்கும் இடைப்பட்ட பகுதியில் கருப்பசாமி கோவில் உள்ளது. அதே போன்று பீடமும் அருவாளும் இருக்கும். அம்மா ஆட்சியில் இருபத்தைந்தாயிரம் ரூபாய் கோவில் கட்டக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பணத்தில் சிறு கோவில் கட்டி இருக்கிறார். கான்கீரிட் போடும் கம்பியை வளைத்து சூலம் வைத்திருக்கிறார். சில அருவாள்கள் உண்டு. எமது சிறு வயதில் இருந்த மணி பொருத்திய நீண்ட இரும்புத் தண்டு இன்றும் இருக்கிறது. கும்பாபிசேகம் வைத்து, அன்னதானம் போட்டு ஜமாய்கிறார். சூலம் சீலக்காரி அம்மனுக்காக. அருவாள் கருப்பசாமிக்காக.

பெயர்தான் கருப்பசாமியே தவிர நாங்களும் பங்காளிகளும் கருப்புக் கயிறு கட்ட மாட்டோம். கருப்பாக உடையும் போடுவதில்லை. வீட்டு முற்றத்தில் கட்டில் போட்டு படுக்க மாட்டார்கள். இரவில் பெரிய கோவிலிருந்து வீட்டு அருகே இருக்கும்

கோவிலுக்கு வெள்ளைக் குதிரையில் கருப்பசாமி வருவாராம். மணிச் சத்தம் கேட்குமாம். ஒருமுறை எமது அண்ணன் வீம்புக்காக காசிக் கயிறு என்ற கருப்புக் கயிறை கட்டிக் கொண்டு கட்டில் போட்டு முற்றத்தில் படுத்திருந்தார். இரவே தேள் கடித்து விட்டது. மறுபடியும் கட்ட மனம் வருமா என்ன.

எமது சிறுவயதில் முனியாண்டித் தலவர் தேநீர்க் கடைதான் பிரபலம். இவரது தேநீர் சுவைக்கு எங்கள் ஊர் மட்டுமல்லாது பக்கத்து ஊர்க்காரர்களும் ஆவலாக இருப்பார்கள். எல்லோர் வீடுகளிலும் பால் மாடுகள் இருந்தாலும் காலையில் அங்கு தான் போய் நிற்பார்கள். தேநீர் வாங்கி வருவது சிறுவர்களின் பணி. விருந்தாளிகள் வந்தால் முதலில் இவர் கடைக்குதான் ஓட வேண்டும். யாமெல்லாம் ஓட்டமாக ஓடிப்போய் வாங்கி வந்து விடுவோம். அகரத்துப்பட்டி, இராசலபட்டிலிருந்து தேநீர் அருந்த, செய்தித் தாள்கள் படிக்க காலையிலேயே வந்து விடுவார்கள். ஆளுக்கொரு பக்கத்தை வைத்துக் கொண்டு படித்துக் கொண்டிருப்பார்கள். சிலர் எழுத்துக் கூட்டியும் படிப்பதுண்டு. சமயங்களில் ஒருவர் சத்தமாகப் படிக்க, மற்றவர்கள் ஆர்வமாகக் கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

காலையில் இட்லி, தோசை கிடைக்கும். உடம்புக்கு முடியாமல் வந்தால் மகிழ்ச்சிதான். இட்லி வாங்கிக் கொடுப்பார்களில்லையா. மொச்சைப் பயிறு மசால் கிடைக்கும். பழைய கஞ்சிக்கு கடித்துக் கொள்ள சுவையானது. பத்து மணிக்குப் போனால் மெது வடை, ஆமை வடை சாப்பிடலாம். இரவு வரை டீக்கடை திறந்திருக்கும். முனியாண்டித் தலவர் அண்ணனும் டீக்கடையில் இருப்பார். ஜக்கட்டித் தலவர் என்பார்கள். பேசிக் கொண்டே இருப்பார். நாம் தான் ஞாபகப்படுத்த வேண்டும். சில நேரங்களில் இவர் இருந்தால் வாங்க வேண்டாம் எனச் சொல்லி அனுப்புவார்கள். டீத்தூளை அவ்வளவு எளிதில் மாற்ற மாட்டார்.

தேநீர் கடையில் சாதி வேறுபாடு தெளிவாகத் தெரியும். மற்ற ஜாதியினருக்கு கண்ணாடி தம்ளர். தேவேந்திரருக்கும் ஆதிதிராவிடருக்கும் கண்ணாடி டம்ளரில் பூவு போட்டிருக்கும். தேநீர் அருந்தியபின் தம்ளரை கடைக்காரரே கழுவிக் கொள்வார். அருந்ததியருக்கு வேறு தம்ளர். தம்ளரை அவர்களே கழுவி வைக்க வேண்டும். நாடார்களில் ஓரிருவரைத் தவிர மற்றவர்கள் தேநீர் அருந்தி யாம் பார்த்ததில்லை.

இந்த தீண்டாமைப் பாகுபாடு தொடர்ந்து நடக்கிறது. டம்ளர்கள் மாறி இருக்கின்றன. எவர்சில்வர் தம்ளர்களில் வித்தியாசம் காட்டுகிறார்கள். மக்களின்

மனங்கள் மாறாதவரை எத்தனை சட்டங்கள் போட்டு என்ன பயன்.

தலவமார் தெருவில் சக்கரை என்ற பெயரில் பலர் இருப்பார்கள். சீனி என்ற பெயரும் உண்டு. பெண்களில் சீரங்கம், பொன்னரங்கு என்று பெயர்கள் இருக்கும்.

சக்கணத் தலவர் பெரிய மீசை வைத்திருப்பார். காளவாசல் வைத்திருந்தார். பல பேர் வேலை பார்த்தார்கள். ஓடையிலிருந்து சுண்ணாம்புக் கல் கொண்டு வந்து சிறியதாக உடைப்பார்கள். அதை அடுக்கி பகல் முழுவதும் எரிப்பார்கள். அடுப்புக் கரியைப் போட்டு பெரிய சக்கரத்தை மாற்றி மாற்றி சுற்றிக் கொண்டே இருப்பார்கள். மறுநாள் அதிகாலை அதனைப் பரப்பி தண்ணீர் ஊற்றி சுண்ணாம்பு எடுப்பார்கள். இதுதான் ஊரின் கட்டுமானத்திற்கு. பக்கத்து ஊர்களிலிருந்தும் வாங்கிச் செல்வார்கள். முன்பு ஓடைக்கல்லைக்கொண்டே காரவீடு கட்டுவார்கள். கோடையில் ஓடைக்கல்லைப் பெயர்த்தெடுக்கும் வேலை மும்முரமாக நடக்கும்.

வேல்ச்சாமி சேர்வை நாடக வாத்தியார். குரலும் நன்றாக இருக்கும். இரவு நேரங்களில் கூட ஒக்திகை பாட்டுக்கள் கேட்கும். இராஜலபட்டியிலிருந்து ஒரு பெண்ணை சந்திரமதியாக அரங்கேற்றினார்கள். மனைவி மாதம்மாள் அம்மையார். மகன் விஜயபாண்டி.

தலவமார் தெருவில் நிறையப் பேர் பலகார வியாபாரம் செய்தார்கள். நிறைமதித் கொத்தனார் வீட்டிலும் இட்லி, தோசை விற்பார்கள். தோசை நன்றாக இருக்கும். சீரங்கம் ஆத்தா மற்றும் லட்சுமி ஆத்தா பனியாரம் சுட்டு விற்பார்கள். ஐந்து காசில் ஆரம்பித்தது இன்று ஒரு ரூபாய்க்குக் கிடைக்கிறது. அம்பிகாபதி தலவரின் அம்மா அலங்காரி ஆத்தா பனியாரம், சக்கரை வள்ளிக் கிழங்கு, மொச்சைப்பயிறு, தட்டப்பயிறு, பலாக் கொட்டை விற்பார். யாம் காலையில் முதல் ஆளாக வாங்கினால் அவருக்கு மகிழ்ச்சி. சீக்கிரம் விற்றுப் போய் விடுமாம். பெரும்பாலும் பருத்தி கொடுத்துதான் இவரிடம் வாங்குவார்கள். தராசு வைத்திருப்பார். கொண்டுபோகும் பருத்திக்குச் சமமாகவோ அல்லது இரண்டு மடங்கோ கிடைக்கும். சக்கரை வள்ளிக் கிழங்கு மூன்று மடங்கு கூட வரும்.

ராஜ் எனும் ராஜசேகரன், தம்பி ஆண்டவரோடு சேர்ந்து சிற்றுண்டிக் கடை வைத்திருந்தார். முன்னர் இவர்கள் கடையில் மற்றவர்கள் சேர், டேபிள் மீதும், அட்டவணை இனத்தவர்கள் தரையிலும் உட்கார்ந்து சாப்பிடுவார்கள்.

எங்கள் ஊரின் தெற்கேயிருந்து கரிசல் பூமி ஆரம்பமாகிறது. வழியில் பெரியதொரு ஓடையைக் கடக்க வேண்டும். ஓடையில் தண்ணீர் வந்தால் சிறுவர்களுக்கு மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டோடும். நுங்கும் நுரையுமாகப் பாய்ந்தோடி வரும் காட்டாற்று வெள்ளத்தில் கால்களை நனைத்துக்கொண்டு வெகுநேரம் நின்றிருப்போம். வள்ளிமுத்து நாடார் கிணறு வரையிலும்கூட வெள்ளம் ஓடிப் பார்த்திருக்கிறோம். நடந்து போகும்போதே கால்கள் சகதியில் மாட்டிக் கொண்டுவிடும். கைகளைப் பிடித்துக்கொண்டு மெதுவாக நடந்து போவதுண்டு. ஓடைக்கு அருகே போகப்போக வெள்ளத்தின் ஓட்டமும் சத்தமும் கூடிக்கொண்டே போகும்.

கரிசக் காடுகளில் கம்பு, பருத்தி, மல்லி, திணை வகைகள், கொண்டல்பயிறு, உளுந்து, மாடுகளின் தீவனத்திற்கு சோளம் போடுவார்கள். நாட்டுக் கம்பு சுவையாக இருக்கும். கம்மங்கதிரை நெருப்பில் வாட்டி, அரிசியை உதிர்ந்துத் தின்றால் ருசியாகவும் வாசனையாகவும் இருக்கும். முளை கட்டியும் திங்கலாம்.

கம்மங்கதிரை ஒடித்து கைகளுக்கிடையில் வைத்துக் கசக்கி, உமியை ஊதித் தள்ளி மென்று சாப்பிடுவதில் இருக்கும் சுவையே தனிதான். அன்று பெரும்பாலான வீடுகளில் கம்பஞ்சோறுதான். கம்பரிசி இடிக்கும் சத்தம் கேட்டுக் கொண்டே இருக்கும். கருப்பட்டி சேர்த்து இடித்துச் சாப்பிட்டால் சுவை அருமையாக இருக்கும்.

யாம் முதுநிலை முடிக்கும்வரை உணவுப் பயிர்கள்தான் பயிரிட்டார்கள். பின்னர் முத்துச் சோளம், மக்காச் சோளம், வெங்காயம் போட்டும் யாம் பார்த்திருக்கிறோம். தொடர்ந்து குண்டு மிளகாய் போட்டார்கள். அதற்கு முன்னர் தோட்டங்களில் தான் நீளமான நாட்டு மிளகாய் போடுவார்கள். தற்போது இரண்டு மூன்று வருடங்களாக மறுபடியும் அரிசிக் கம்பிற்கும் மக்காச் சோளத்திற்கும் திரும்பி இருக்கிறார்கள். மிளகாயோடு லோல்பட முடியவில்லையாம். நாற்று நட்டு, களையெடுத்து, மருந்தடித்து, உரம் போட்டு, முறை வைத்துப் பிடுங்கி, காயவைத்து, காவல் காத்து, சோடை நீக்கி, சாத்தூருக்கோ, விருதுநகருக்கோ கொண்டு போய் விற்று பணம் பண்ணுவது விவசாயிகளுக்கு மிகுந்த சிரமத்தையும், உடல் உழைப்பையும் கொடுக்கக் கூடியது. அது தவிர வேலை பார்ப்பதற்கு ஆட்கள் கிடைப்பதும் கடினம். சம்பளம் கொடுத்தும் மாளாதாம். இதற்கு கம்பரிசி, சோளம் போடுவது மிகவும் எளிது. களையெடுப்பு கம்மி. மழை பெய்யும் போது உர

மூட்டைகளைக் கொட்டி விட்டால் போதும். விளைச்சல் உறுதி. அருப்புக்கோட்டை சாலையில் போட்டு, தானிய மூட்டைகளை அங்கேயே விற்று பணத்தை பையில் வைத்துக் கொண்டு கைவீசி நடந்து வரலாம். வீட்டில் சுவையான, சத்தான ரேசன் அரிசிச்சோறு காத்திருக்கும்.

ஊரில் எல்லோருக்கும் ஒன்றிரண்டு குறுக்கமாவது கரிசல் காடு இருக்கும். காடுகள் இல்லாதவர்கள் மிகவும் குறைவாக இருப்பார்கள். மாமா வீட்டில் பாதைப் பிஞ்சையில் பருத்தியும், சற்று தள்ளி இருக்கும் பிஞ்சையில் கம்பும் போடுவார்கள். நல்ல உழைப்பாளி என்பதால் எப்படியும் விளைய வைத்து விடுவார்.

நாங்கள் ஒத்திக்கு சில ஆண்டுகள் கரிசல் காடு வைத்திருந்தோம். பின்னர் பால்மாட்டை விற்று சொந்தமாக இரண்டு குறுக்கம் வாங்கினோம். இன்றும் இருக்கிறது. முன்பு நெல் அறுவடை முடிந்தபின் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என அனைவரும் கரிசல் காட்டில்தான் பருத்தியெடுத்துத் திரிவார்கள். பருத்திப் பிஞ்சும் இனிப்பாக இருக்கும். சிறுவயதில் அம்மாவின் பாவாடையைக் கட்டிக் கொண்டு அதற்குள் பருத்தியை எடுத்து வைப்போம். கைலி கட்டிய பின்பு கைலிக்குள். பருத்தியெடுத்து தனித்தனியாக குமித்து வைத்துக் கொள்வார்கள். பெண்கள் யாரைப் பற்றியாவது பேசிக் கொண்டேதான் வேலை செய்வார்கள். கூலியாக ஐந்தில் ஒரு பங்கோ ஆறில் ஒரு பங்கோ பருத்தி கிடைக்கும். கடையில் பருத்திக்கு மாற்றாக சக்கரைக்கட்டி, புளி, பொட்டுக் கடலை, காய்கறிகளென்று பல பொருள்களும் வாங்கலாம்.

பல நேரங்களில் கொண்டுபோன தண்ணீர் காணாது. இப்போதுபோல் பிளாஸ்டிக் குடங்களோ, பாட்டில்களோ கிடைக்காது. தின்பதற்கு வெள்ளரிக்காய், மிதுக்காய் என்று கிடைக்கும். இலந்தைப் பழம் நிறையப் பிடுங்கலாம். இலந்தப்பழம் பறிக்கவென்றே சிறுவர்கள் சேர்ந்து செல்வோம்.

தெருவில் எல்லோரும் குப்பைகள் வைத்திருப்பார்கள். கிழக்குக் கண்மாயில் மண் அள்ளிய பள்ளங்கள் நிறைய இருக்கும். அவற்றில் குப்பைகளைக் கொட்டுவார்கள். சில வீடுகளைத் தவிர்த்து அனேக வீடுகள் இங்கிருந்து எடுக்கப்பட்ட மண்ணில் கட்டிய வீடுகள் தான். சிறு சிறு கல்லும் மண்ணும் சேர்ந்திருக்கும். அதை அப்படியே குழைத்து மண் சுவர் வைத்தால் போதும். மேற்கூரைக்கு காட்டில் கிடைக்கும் கோரை போன்ற ஒரு வித புல். கூரையைக் கட்டுவதற்கும் காட்டிலிருந்தே பிரம்பு போன்ற கொடிகள் கொண்டு வருவார்கள்.

மழைக் காலங்களில் குப்பைகள் எல்லாம் தண்ணீருக்குள் மூழ்கி விடும். நன்றாக மக்கியும் போகும். கோடை காலத்தில் குப்பைகளை மாட்டு வண்டிகளில் அள்ளி வயல்களில் குமிப்பார்கள். அள்ளும்போது சாரைப் பாம்புகள் இங்குமங்கும் திரியும். பயமில்லாமல் அள்ளிக் கொண்டிருப்பார்கள். எங்களைப் போன்ற சிறுவர்கள் தான் கம்புகளை வைத்து அடித்துத் திரிந்தோம்.

கிழக்குக் கண்மாயில் வளமான வண்டல் மண் படிந்து கிடக்கும். இதை அள்ளுவதற்கு ஊர் சார்பாக ஒப்பந்தம் விடுவார்கள். பெரும்பாலும் மேலத் தெருக்காரர்கள் எடுப்பார்கள். உரத்திற்கு ஆட்டுக்கிடையும் தவறாமல் போட்டு விடுவார். அப்போது ஆடு மேய்த்த கோனார்கள் ஊரில் தங்கி இருந்தார்கள். மாமாவுக்கு பழக்கமாக இருப்பார்கள்.

சித்திரை மாதமெல்லாம்கூட மக்கள் வெயிலில் அலைவார்கள். வெயில் இப்போது போல் மோசமாக இருக்காது. பருத்தி மார் பிடுங்குவது, மஞ்சனத்திக் கட்டை பறிப்பது எனக் கோடையிலும் காடுகள் தனியாக இருக்காது.

கோடை காலத்தில் அடுப்பிற்கான விறகு வெட்டுவது தனிக்கலை. அப்பணசாமி அவர்கள் வீட்டில் சாண எரிவாயு இருந்தது. மற்ற அனைவர் வீடுகளிலும் விறகுதான். மழைக்காலங்களில் ஈரவிறகை வைத்துக் கொண்டு பெண்கள் பாடு படுதிண்டாட்டம். விளையாடிக் கொண்டிருக்கும் போது திடீரென்று மழைபெய்து விட்டால் முதல் ஓட்டம் வீட்டிற்குத்தான். காய வைத்திருக்கும் விறகையோ அல்லது கொல்லையில் இருக்கும் விறகையோ அள்ளி அடுப்பங்கரைக்குள் போட வேண்டும். இல்லையென்றால் எங்கள் வீட்டில் திட்டு. மற்றவர்கள் வீட்டில் அடி விழும்.

எமது பெற்றோர் அடிக்க மாட்டார்கள். அப்பா திட்டக் கூட மாட்டார். சில நேரங்களில் அம்மா கோவிப்பார். வசவெல்லாம் இருக்காது. யாமும் பெற்றோரிடம் திட்டு வாங்காத அளவிற்கு நடந்து கொண்டோம். நன்றாகப் படிப்பதால் வீட்டில் ரொம்பச் செல்லம்.

அக்காவுடன் சேர்ந்து விறகு வெட்டச் செல்வது அந்த வயதில் மகிழ்ச்சியாக இருக்கும். அண்ணன் பெரும்பாலும் அவர் சோட்டுப் பையன்களுடன் போவார். பெரிய கட்டாகக் கொண்டு வருவார். அக்கா எமக்கு நிறையச் சுமையை கொடுக்க மாட்டார். பெரும்பாலும் புறம்போக்கில் இருக்கும் கருவேல மரங்கள் தான் விறகு. ஓடையில் நிறைய வெட்டலாம். அங்கு பனை மரங்கள் இருப்பதால் நொங்குகள்,

பனம் பழங்கள் கிடைக்கும். பனம் பழம் மிகுந்த வாசனையாக இருக்கும். பள்ளிக்கூடத்திற்கு தெற்கே கணபதி நாடார் வயல் ஓரங்களில் நிறைய பனை மரங்கள் வளர்ந்திருக்கும். இங்கு பெரிய பெரிய பனம் பழங்கள் கீழே விழுந்து கிடக்கும்.

எமக்கு சும்மாடு கூட்டி வைக்கத் தெரியாது. தலையில் சும்மாடு கூட்டிவைத்து, அது விழாமால் பானையைத் தூக்கி வைக்கத் தெரியாமல், யாராவது வருகிறார்களா என நின்று கொண்டிருப்போம். விறகுக் கட்டைத் தூக்கும் போதும் இதுதான் நிலை. பலரும் விறகுக் கட்டை சிறிது நிமிர்த்துத் தூக்கி, பாதி தூரத்தில் சும்மாடு வைத்து தலையை அதன் மேல் வைத்து தம்கட்டி அலாக்காகத் தூக்கிவிடுவார்கள். கனமான கட்டாக இருந்தால், மற்றொருவர் தரையில் ஊன்றியிருக்கும் பகுதியை ஒத்தாசைக்கு சிறிது தூக்கிவிடுவது உண்டு. சும்மாடு சரியாக கூட்டத் தெரியாமலும், சும்மாடு விலகியும், விறகை பாதிதூரத்திலேயே போட்டு விடுவோம். சில நேரங்களில் தலையில் முள்ளும் குத்திவிடும். உடன் வருபவர்கள் அவர்கள் விறகுக் கட்டை கீழே போட்டால் தூக்கிவிட ஆள் இருக்கமாட்டார்கள் என்பதால் கேலியாகப் பேசிவிட்டு சென்று விடுவார்கள். அக்காதான் அவர் கட்டை வீட்டில் போட்டு விட்டு, எமது கட்டை தூக்க வருவார். அதுவரை யாம் அங்கேயே நின்று கொண்டிருப்போம் அல்லது எலந்தப் பழம் தேடித் திரிவோம்.

விறகு வெட்டின்போது செங்குளவிக்கு சற்று கவனமாக இருக்க வேண்டும். அதிலும் எலந்தப் பழம் பறிக்கும்போது கூடுதல் கவனமாக இருப்பது நல்லது. நிச்சயம் செங்குளவி கூடு கட்டியிருக்கும். பெரிய கூடாக இருந்தால் தொலைந்தோம். கடி வாங்காமல் தப்ப முடியாது. சற்றே கவனக் குறைவாக இருந்தாலும் கொட்டி விடும். செங்குளவிகளுக்கு கண்ணாம்பட்டையும், உதடுகளும் தான் பிடித்தமான இடங்கள் போல. குறிப்பாக மேலுதடு. கடி வாங்கி உதடு வீங்கி வெளியே தெரிந்தால் நண்பர்கள் கேலிபேசுவார்கள் என்றும் வீட்டில் திட்டு விழும் என்றும் துணியாலும் கைகளாலும் வீங்கிய இடத்தை மறைத்துக் கொண்டு வீடு வந்து சேர்வது சோகமான கதை.

செங்குளவிகளுக்குத் தப்பினாலும் தப்ப முடியுமேயொழிய செந்தட்டிகளுக்குத் தப்புவது மிகவும் கடினம். கால் கைகளில் செந்தட்டிச்செடியின் இலைகள், பூக்கள் பட்டு விட்டால் தொலைந்தோம். அரிப்புத் தாங்காது. கையையும்,

காலையும் உதறிக்கொண்டு திரிவார்கள். அரிப்பைப் போக்க ஒரு அற்புதமான வழியையும் நாங்கள் வைத்திருந்தோம். மண்ணில் சிறுநீர் போய், அதை அப்படியே குலைத்து அரிக்கும் இடத்தில் அப்பவேண்டும்.

சில நேரங்களில் தும்பி வண்டுகள் தொல்லை தாங்காது. ஒன்றையொன்று விரட்டிக் கொண்டும், ரிங்காரமிட்டும் நம்மையே சுற்றிச் சுற்றி வரும். எங்கே கடித்துத் தொலைக்கப் போகிறதோ என ஒரு வித பதற்றத்தை உண்டு பண்ணும். கம்பளிப் பூச்சிகளைத் தேவை இல்லாமல் பிடித்து அவைகளாலும் அரிப்பு வாங்கி சிறுவர்கள் சிரமப்படுவார்கள்.

சமயங்களில் கிளிக் குஞ்சுகளும் எடுத்து வருவதுண்டு. வீட்டில் கிளி, மைனா, முயல் வளர்த்திருக்கிறோம். எங்கள் வீட்டு கிளியைத் தின்ற பூனையை விரட்டி, விரட்டிக் கல்லெறிந்த கதையெல்லாம் உண்டு. பாவம் மைனா. நாக்கில் சூடெல்லாம் போட்டோம். நன்றாகப் பேச வேண்டுமில்லையா.

போத்தம்பட்டிக் காடுகளில் பிஞ்சைக்காரர்களுக்குத் தெரியாமல் பெரிய கட்டைகளாக வெட்டி விடுவார்கள். அக்காவும் மற்றவர்களும் அதிதீவிரமாக இப்படி விறகு வெட்டும்போது யாம் அங்குள்ள உப்பு ஓடையில் ஓடி ஓடி மீன் பிடித்துத் திரிவோம். நிறையக் கெண்டை மீன்கள் இருக்கும். ஒன்றும் சிக்காது. சில நேரம் அணை கட்டி தண்ணீரையெல்லாம் இறைத்துப் பிடித்திருக்கிறோம்.

கருவேல விறகு என்றில்லாமல் மஞ்சனத்தி, எருக்கம் செடி, ஆடுதொடாசெடி எல்லாம் வெட்டுவதுண்டு. கஞ்சம்பட்டி கண்மாயில் எருக்கம் செடி புதர் மண்டிக் கிடக்கும். கவனமாக வெட்ட வேண்டும். பால் கண்ணில் பட்டுவிட்டால் பெண்களிடம் பால் வாங்கி கண்ணில் ஊற்றுவார்கள். கரிசல் காடுகளில் மஞசனத்தித் தூர் பறிப்பது பெரிய வேலை. வாச்சாத்தி, கோடரி வைத்து வெட்டுவார்கள்.

எங்கள் கூரை வீட்டை மாற்றி ஓட்டு வீடாக்கியபின் மின்சாரத்தை எடுத்துவிட்டார்கள். பின்னர் யாம் பத்தாவது படிக்கும் போதுதான் மின்சாரம் வந்தது. அதுவரை சிம்னி விளக்கில்தான் படிப்பு. கையில் மண்ணெண்ணெய் நாற்றம் அடிக்கும் என்பதால் விளக்கேற்றுவதற்கு யாம் தயங்குவோம். ஒரு விளக்கு மட்டுமே இருந்தது. பின்னர் காடாத் துணி வைத்து பெரிய விளக்குகள் வந்தன.

இப்போது போல் மண்ணெண்ணையை அடுப்பெரிக்கப் பயன்படுத்த முடியாது. விளக்கு எரிக்க மட்டும்தான் கொடுப்பார்கள். தெருப்பக்கத்தில் அருணாசல நாடார் வீட்டில் பொதுவிநியோக வைகை அங்காடி இருந்தது. வைகை நாயக்கர்

அலுவலராக இருந்தார். எமது அப்பாவோடு நட்பாக இருப்பார். எண்ணெய் ஊற்றும்போது பெரிய வரிசையாக நீளும். இப்போதுபோல் எல்லா நாட்களும் திறந்திருக்காது. குறிப்பிட்ட நாள் மட்டுமே பொருள்களைக் கொடுப்பார்கள்.

ஸ்டவ் அதன்பின் வந்தது. எங்கள் வீட்டில் வைத்திருந்தோம். மற்றவர்கள் அட்டையில் எண்ணெய் வாங்குவதுண்டு. எல்லோருக்கும் வீட்டிற்கு பக்கத்திலேயோ, சற்று தள்ளியோ கொல்லை இருக்கும். விறகை துண்டு துண்டாக வெட்டுவது பெரிய வேலை. பள்ளிக் கூடம் விட்டு வந்தவுடன் இந்த வேலையும் செய்ய வேண்டும். பெரிய விறகுகளை லகுவாக வெட்டி விடலாம். சில நேரங்களில் முள் விறகுகளை வெட்ட வேண்டும். எப்படி கவனமாக வெட்டினாலும் முள் குத்தி விடும். பாம்புகளும் இருப்பதுண்டு. சத்தம் போட்டால் அத்தனை பேரும் கம்புகளோடு ஓடி வந்து விடுவார்கள். பாம்பை அடிக்க வேல் கம்புகளும் வருவதுண்டு. சில பேரிடம் சுருக்கு என்ற ஈட்டி இருக்கும். அதை வைத்தும் குத்துவார்கள். பாம்பு தப்பிப்பது மிக அரிதுதான்.

மழைக்காலங்களில் எல்லோர் வீட்டு கொல்லையிலும் பூசணிக்காய், சுரைக்காய், பாகற்காய் போன்ற செடிகள் போடுவார்கள். காரவீட்டு கருப்பையா மாமா பந்தல் கட்டி புடலங்காயெல்லாம் போடுவார். தக்காளி கண்டிப்பாக இருக்கும். கத்திரிக்காய்க்கும் இடமுண்டு. விதை வைத்து விட்டு தினமும் காலையில் போய் பார்ப்போம். சிறுவர்களுக்கு இது ஒரு பெரிய ஆச்சரியமாக இருக்கும். செடிகளில் பூவு பூக்கும் போதும், காய்கள் வரும் போதும் அவற்றை நோக்கி விரல் நீட்டக் கூடாது. கருகிவிடும் என்று ஆட்காட்டி விரலுக்கும் நடுவிரலுக்கும் இடையில் கட்டை விரலை வைத்துக் காண்பிப்போம். பூக்களையும், பிஞ்சுக்களையும் எண்ணும் போதும் அப்படியே. கரிசல் காட்டுப் பொலிகளிலும் கொடிச் செடிகள் போடுவார்கள்.

ஒருமுறை கிழக்குக் கண்மாயில் வெளியூரிலிருந்து வந்து வாத்துகள் வளர்த்தார்கள். சில வாத்துகள் எங்கள் வீட்டுச் கொல்லையின் தோட்டச் செடிகளுக்குள் முட்டை போட்டுச் சென்று விடும். கோழி முட்டையை விட பெரியதாக இருக்கும். நாங்கள் எடுத்து வந்து அவித்துத் தின்றோம்.

மஞ்சனத்திக் காய்களை பறித்து வந்து வீட்டு அருகே சிறிய குழி தோண்டி புதைத்து வைப்போம். வெளியிடம் என்றால் அடையாளத்துக்கு ஏதேனும் வைப்பதுண்டு. ஓரிரு நாளில் கறுப்பான மஞ்சனத்திப் பழங்கள் கிடைக்கும். பள்ளிக் கூட மைதானத்தில் பெரிய ஆலமரம் இருந்தது. சிவப்பான ஆலம் பழங்கள்

நிறையக் கிடக்கும். புளியம்பூ, பிஞ்சு, காய் என்று எதையும் விடுவதில்லை. மாடு மேய்த்துக் திரியும் போது ரோட்டில் புளியங்காய்களை உரசியும் தின்பதுண்டு.

வெள்ளிக்கிழமை வந்தால் எமக்கெல்லாம் கோபம் கோபமாக வரும். அம்மா அதிகாலையிலேயே பசுஞ்சாணம் கொண்டு வந்து வீட்டை மெழுகுவார்கள். அவர்கள் அவசரம் அவர்களுக்கு. எமது தூக்கம் எமக்கு. மழைக்காலமானாலும் இதை மாற்ற மாட்டார்கள். வீட்டுக்குள் மெழுகும் வரை திண்ணையில் தூங்குவோம்.

அம்மாவிற்கு சாமி பக்தி அதிகம். அப்பா கிண்லடிப்பார். திருமணம் முடிந்து சில வருடங்கள் பிள்ளைப்பேறு இல்லாமல் இருந்தார்களாம். பிள்ளை வரம் கேட்டு பல கோவில்களுக்கும் இருவரும் சென்றார்களாம்.

எங்கள் ஊருக்கு அருகேயிருக்கும் திருச்சுழி பூமிநாதர் சிவன் கோவில் புகழ் பெற்றது. ஸ்ரீரமண மகரிஷி பிறந்த ஊர். பலரும் இங்கு திருமணம் நடத்துவார்கள். அம்மா சில திருமணங்களுக்கு சென்று வந்தது நினைவுள்ளது.

சிறு வயதில் எங்களோடு முத்து மாமா குடும்பம் நெருங்கி இருந்தது. மாமா குடும்பமும் எங்கள் குடும்பமும் சேர்ந்து பலமுறை கோவில்களுக்குச் சென்றிருக்கிறோம். இருக்கன்குடி மாரியாத்தா கோவிலுக்கு பலமுறை சென்றதுண்டு. இரவில் ஆற்று மணலில் படுத்துக் கொள்வோம். இரவெல்லாம் கடுங்காப்பி, சுக்கு மல்லிக் காப்பி. சூடான பருத்திப்பால் என்று விற்பார்கள். இப்போது போன்று கடைகள் இருக்காது. மணலாக கிடக்கும். கோடையிலும் கொஞ்சமாவது தண்ணீர் ஓடும். ஷவர் போன்று குழாய்களில் தண்ணீர் பிய்த்துக் கொண்டு கொட்டும். ஒரு ரூபாயோ, இரண்டு ரூபாயோ கொடுத்தால் போதும். நன்றாகக் குளிக்கலாம். அப்பவும் கோவிலில் கூட்டமாகத்தான் இருந்தது. அனேகமாக நாங்கள் ஆடி வெள்ளிக் கிழமைகளில் போயிருக்க வேண்டும். பேருந்து நடத்துனருக்குத் தெரியாமல் சேவலைக் கொண்டு செல்வதற்கு தனித்திறமை வேண்டும். மண்டபங்கள் கட்டியபின் அங்கே இரவில் தங்குவோம். கோவிலில் இலந்த முட்களில் சில பேர் படுத்திருப்பார்கள். பார்க்கவே எமக்குச் சகிக்காது.

எமது சிறுவயதில் பல பேருக்கு அம்மை போட்டியிருந்தது. அம்மாவிற்கும் அம்மை போட்டு ஒருமுறை மிகவும் வேதனைப்பட்டார். அதன் பின் தான் அக்காவின் படிப்பு நின்றது. அம்மை போட்டால் கோவிலுக்கு வந்து மாவிளக்கு எடுப்பதாக

வேண்டிக் கொள்வார்கள். அம்மா காலையில் மாவிளக்கு எடுப்பார். மாவைக் கையோடு கொண்டு வந்திருப்பார்.

மாவுருண்டையில் பள்ளம் செய்து நல்லெண்ணெய் ஊற்றி திரி வைத்து தீபம் ஏற்றுவார்கள். இதை கண், நெற்றி, வயிறு எனப் பல இடங்களிலும் வைத்துக் கொண்டு சிறிது நேரம் படுத்திருப்பார்கள். வாழை இலை வைத்து கீழேயும் வைப்பதுண்டு. மாவை ஊருக்கு எடுத்து வந்து பலருக்கும் கொடுப்பார்கள். பெரும்பாலும் எல்லாப் பெண்களும் இதைச் செய்வார்கள். ஈயத்தில் விற்கும் கண்மலர் வாங்கி உண்டியலில் போடுவதும் தப்பாது நடக்கும். சேவல் கறிச் சோறு. வீடு வந்து சேர இரவாகிவிடும். அருப்புக்கோட்டையில் வந்து சாப்பிட்டு விட்டு புகைப்படம் எடுத்ததெல்லாம் பசுமையாக நினைவிருக்கிறது. எம்மை குதிரையில் உட்கார வைத்ததனால் உம்மென்றிருக்கும் அண்ணனைப் பார்த்தால் இன்றும் சிரிப்பு வரும்.

அம்மா அக்கினிச் சட்டி எடுத்த காலங்களும் உண்டு. மற்றவர்களுக்கெல்லாம் சாமி வந்தும் அம்மாவுக்கு சாமியாட்டம் வராமல் வெகுநேரம் நின்றுகொண்டே இருந்தது நினைவிலுள்ளது. பெருநாழியில் கோவிந்தப் பெரியப்பா, செல்லப் பூபதி அக்கா இருப்பார்கள். பெரியப்பா நல்ல மனிதர். எங்கள் வீட்டோடு நெருக்கமாக இருந்தார். அக்காவும் அன்பாக இருப்பார்கள். சிலமுறை எல்லோரும் சேர்ந்து மாரியம்மனை பார்க்கச் சென்றிருக்கிறோம்.

விவரம் தெரிந்து முதன் முதலில் இரயிலில் போனது இராமேஸ்வரத்திற்கு. அப்போது எந்த வகுப்பு படித்தோம் என நினைவில்லை. அப்பாவும் அம்மாவும் ஒருமுறை போகும்போது யாமும் அடம்பிடித்து அவர்களோடு சென்று விட்டோம். இராமநாதபுரத்திலிருந்து தொடர்வண்டி. அதிகாலையில் பாம்பன் பாலம் வழியாகப் போனது. தூங்காமல் வேடிக்கை பார்த்துக்கொண்டே சென்றோம். பேருந்து பாலம் அப்போதுதான் கட்டிக் கொண்டிருந்தார்கள். கடலில் குளித்தது, தீர்த்தமாடியது, இராமர் பாலம் நடந்து சென்றது எல்லாம் பசுமையாக ஞாபகமிருக்கிறது. தீர்த்தப் பெட்டி வாங்கி வந்து எல்லோருக்கும் தீர்த்தம் கொடுத்தோம். வரும்போது கமுதி வரை புகைவண்டியில் வந்தோம்.

அதன்பின் அருப்புக்கோட்டையில் படிக்கும்போது கல்விச் சுற்றுலாவாக இராமேஸ்வரத்திற்குச் சென்று வந்தது மனதைக் கவர்வதாக இருந்தது. குருசடைத்

தீவிற்கு படகில் பயணித்ததும், ஆழமற்ற கடல் பகுதியில் இறங்கி விளையாடியதும் மகிழ்ச்சியான தருணங்கள். பாலு சார் மண்ணில் புதைத்திருந்த பலனோகிளாசஸ் விலங்கைத் தோண்டித் காண்பித்தார். கடல் சாமந்தி, கடல் பாசிகள் எல்லாம் கண்டு களித்தோம். மீன்களைப் பதப்படுத்தும் தொழிற்சாலையை சுற்றிப் பார்த்ததும் வியப்பாக இருந்தது. பின்னர் மண்டபம் மீன் வள ஆராய்ச்சி நிலையத்தில் திமிங்கலத்தின் எலும்பைக் கண்டு நண்பர்களோடு சேர்ந்து திகைத்தோம். கடைசியாக கோவில் சென்றும் சாமி தரிசனம் செய்தோம்.

இருக்கன்குடி, இராமேஸ்வரம், திருச்செந்தூர் தவிர்த்து பிற பெரிய கோவில்களுக்கோ, சுற்றுலா போன்றோ நாங்கள் சென்றதாக நினைவில்லை. ஒருறை யாமும் தேனி அல்லி நகரம் நண்பரும் திருப்பரங்குன்றம் முருகன் கோவிலுக்குச் சென்றோம். பன்னிரெண்டாம் வகுப்பு முடித்து வேளாண் படிப்பில் சேருவதற்காக மதுரை தியாகராசர் பொறியியல் கல்லூரியில் நுழைவுத் தேர்வு எழுதச் சென்றோம். நுழைவுத் தேர்வு எழுத வந்திருந்த பையனுடன் பேசி நட்பாகி இருவரும் முருகனை பார்க்கக் கிளம்பி விட்டோம். பின்னர் நடந்த உசிலம்பட்டி கலவரத்தில் நண்பருக்கு ஏதும் ஆகியிருக்கக் கூடாது என்று கூட யாம் நினைத்ததுண்டு.

ஊரில் தலவமார்களைப் பற்றி பேசிக் கொண்டிருந்தோம். எங்கெங்கோ சுற்றி விட்டோம். பெருமாள் தலவர் பையன்கள் மகேந்திரன். பொன்னுச்சாமி. இராஜேந்திரத் தலவர், இரங்கிமுத்தம்மாள் பையன்கள் ராஜபாண்டி மற்றும் தங்கப்பாண்டி. கரிசல் காட்டில் தோட்டம் இருந்தது. ராஜபாண்டி - இந்திரா திருமணத்திற்கு குதிரை வண்டியில் மணமக்களின் ஊர்வலம் நடந்தது. அன்றைக்கு அது பெரிய விஷயம்தான். தங்கப்பாண்டி மனைவி பொன்னழங்காரி. இவரது பெற்றோர் பாண்டி, சக்கம்மாள். சென்னையில் இருந்தார்கள்.

அம்பிகாபதி தலவர் உருவத்தில் பெரிய ஆளாக இருப்பார். மனைவி ருக்குமணி அம்மையார் உருவத்தில் சிறயவராக இருப்பார். எம்மைப் பார்க்கும் போது இப்பதான் வ்ற்றாப்லயா எனக் கேட்கத் தவறமாட்டார். ராஜ், கஜேந்திரன், முத்துச்செல்வம், பஞ்சவர்ணம் என நான்கு பையன்கள். முத்துச்செல்வம் ராணுவத்திலிருக்கிறார். அம்பிகாபதி தலவர், அவர்கள் தெருவைச் சேர்ந்த பெண்ணைக் கேலி செய்தாரென்று துருத்திப் பெரியப்பாவை தெரு மின் கம்பத்தில் கட்டி வைத்து அடி அடியென்று அடித்தார். தெருக்காரர்கள் ஒன்றுமே

சொல்லவில்லை. ஆஜானபாகுவாக இருந்தவரை அவர்கள் தெருவைச் சேர்ந்த பையன் குடும்பத் தகராறில் வெட்டிச் சாய்த்து விட்டார்.

பால் சேர்வை, லெட்சுமி அம்மையார் நல்ல தம்பதிகளாக இருப்பார்கள். இவர்களது வீடருகே போஸ் தலவர், லெட்சுமி இருந்தார்கள். மகன் தங்கப்பாண்டி உயரமாக இருப்பார். சக்கரைத் தலவர் அமைதியானவராக இருப்பார். மனைவி இரங்கிமுத்தம்மாள். எம்மோடு படித்த மாரிச்சாமியின் பெற்றோர் சக்கரைத் தலவர், சக்கம்மாள் அம்மையார்.

சுப்பையாத் தலவர் கடையில் தூண்டி முள் கிடைக்கும். மனைவி பூச்சம்மாள். இவர்களது பையன்கள் காட்டு ராஜா, முத்துராமலிங்கம், சுப்பையா மற்றும் பாலசுப்ரமணி. ராஜா என்ற சுப்பையா ரேடியோகாரர். எந்த விஷேசமானாலும் இவரது ரேடியோ செட்தான். பழைய பாடல்களாகப் போடுவார். இன்றும் அப்படியே. பாலமுருகன் என்ற கணேஷ்குமார் ஒலி பெருக்கி என மைக்கில் அடிக்கடி சொல்வார். எமது சிறுவயதில் திருவிளையாடல், சரஸ்வதி சபதம் படங்களின் ஒலிப்பதிவை அடிக்கடி போடுவார். அதன் பின் விதி என்ற படம். எமக்கு இன்றும் இந்தப் படங்களின் வசனங்கள் அத்துபடி. இது தவிர நாடங்களின் ஒலிப்பதிவும் இரவெல்லாம் போட்டு வைப்பார்கள். தேர்வுக்கு படிக்கும் காலங்களில் சில சமயம் கோபமாக வரும். முத்துராமலிங்கம் பஜனைப் பாடல்கள் நன்றாகப் பாடுவார். ராஜாவின் பிள்ளைகள் பாலமுருகன், முருகேஸ்வரி. இருவரும் அமைதியானவர்களாக இருப்பார்கள்.

வேட்டைச்சிங்கம் என்ற பெருமாள் தலவர் எல்லோரிடமும் மரியாதையாகப் பேசுவார். எதை வேட்டையாடினார் எனத் தெரியவில்லை. படித்திருக்கிறார். சத்துணவு அமைப்பாளராக இருக்கிறார். பக்திப் பாடல்கள் பாடுவதில் விருப்பமானவர். அபிராமியின் தீவிர பக்தர். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அபிராமி அந்தாதி பாடுவார். எம் மீது பேரன்பு கொண்டவர். இவரது தந்தை துரைசாமித் தலவர். தாயார் காளியம்மாள். காளியம்மாள் அம்மையார் எம்மீது அன்பாக இருப்பார்கள். மனைவி மாது ஈஸ்வரி. மூத்த பையன் பொறியியல் முடித்து சிங்கப்பூரில் பணியாற்றுகிறார். இன்னொரு பையன் காவல்துறையில் இருக்கிறார். பெருமாள் தலவர் தங்கை கோட்டையம்மாள். அவரது கணவர் பொன்னுச்சாமி சேர்வை நல்ல மனிதராக இருப்பார்.

கோலப்பொடி எனும் வெள்ளைச்சாமி சேர்வை கிணற்றில்தான் படிக்கும் காலத்தில் குளிப்போம். மனைவி வள்ளி அம்மையார். இவரும் இவரது மகன்களும் நல்ல மனிதர்கள். குளிப்பதற்கு ஒன்றுமே சொல்ல மாட்டார்கள். தோட்டத்தில் பெரிய மாமரம் இருந்தது. கீழே விழுந்து கிடைக்கும் மாங்காய்களைப் பொறுக்கும் போது மரத்திலிருந்து ஒன்றிரண்டு காய்கள் பிடுங்கிக் கொள்ளுங்கள் என்றுகூட சொல்லியிருக்கிறார்கள்.

முனியம்மாள் அம்மையார் கரிசல் காட்டில் தோட்டம் வைத்திருந்தார். கணவர் முத்துப்பாண்டி. தென்னை மரங்கள் நிறைய இருக்கும். கடலை நன்றாகக் காய்க்கும். வெங்காயமும் போடுவார்கள். எப்பவும் வீட்டில் பசுமாடுகள் இருக்கும். மகன் அயோத்திராமன். மகள் இராமலெட்சுமி படித்திருக்கிறார். மகளிர் சுய உதவிக்குழு வைத்திருந்தார்.

செண்பகராமன் ஆசிரியர் ஊரில் கேபிள் வைத்திருக்கிறார். மனைவி பாப்பம்மாள். மகன்கள் முத்துப்பாண்டி மற்றும் ஜெயப்பாண்டி. செவல் காட்டில் தோட்டம் வைத்திருந்தார்கள்.

பொன்னுச்சாமி சேர்வை மளிகைக் கடை இப்போதும் இருக்கிறது. இவர் மட்டுமே அ.தி.மு.க வில் இருப்பார். மற்ற தலவமார்கள் எல்லாம் தி.மு.க. கட்சி. அ.தி.மு.க வைச் சோந்த பிச்சை என்பவர் அன்று எம்.எல்.ஏ.வாக இருந்தார். தேர்தல் முடிந்து முடிவுகள் வெளிவரும் போது பொன்னுச்சாமி சேர்வையின் வைக்கோல் படப்புகள் எரியும். இப்படி இரண்டு மூன்று முறை எரிந்திருக்கிறது. குருசாமி, சாமிநாதன், ஜெயசுதா என நிறைய பிள்ளைகள் இருந்தார்கள்.

அப்போது ஊரின் கட்சி இன்று போல் இருக்காது. தேவர்கள், அகமுடையார்கள் தி.மு.க. கட்சி. தேவேந்திரர்கள் அனைவரும் அ.தி.மு.க. கட்சி. ஓரிருவர் மட்டுமே மாறி இருப்பர். நாடார்கள் காங்கிரசு. நாயக்கர்கள் பெரும்பாலும் அ.திமு.க.

யாராவது முக்கியமானவர்கள் பிரச்சாரத்திற்கு வந்தால் ஒலிபெருக்கி கட்டுவார்கள். ஒவ்வொரு தெருவிலும் தனித்தனியாக வரவேற்பு இருக்கும். அப்போது சாத்தூர் கே.கே.எஸ்.எஸ். ராமச்சந்திரன் அவர்கள் புகழ் பெற்றவராக இருந்தார். எங்கள் தெருவில் உள்ள சங்க மடத்தின்முன் பந்தல் போட்டு அலங்கரித்திருப்பார்கள். எமது அப்பா, நல்லதம்பி போன்றவர்கள் இதில் தீவிரமாக இருப்பார்கள். எம்மைப் போன்ற சிறுவர்களுக்கு நிறைய மிட்டாய்கள் கிடைக்கும்.

தேவர்கள் தெருவில் இருந்து விடாமல் கட்சிப் பாடல்கள் போடுவார்கள். தி.மு.க கட்சியினர் பிரச்சாரத்திற்கு வந்தால் எங்கள் தெருவிற்கு வர மாட்டார்கள். லஞ்சம் லஞ்சம் ஊரெல்லாம் லஞ்சம், பாளையங்கோட்டை சிறையினிலே போன்ற பாட்டுகள் தொடர்ந்து ஒலிக்கும். தி.மு.க பிரச்சாரத்திற்கு டி. இராஜேந்தர் வருகிறார் என்று சொல்லி விடியும்வரை காத்துக் கிடந்தார்கள். அன்று பாக்யராஜ் அ.தி.மு.க. ஆதரவாளராக இருந்தார்.

ஒருமுறை ரெட்டியப்பட்டியில் நடந்த இடைத் தேர்தல் பிரச்சாரத்திற்காக எம்.ஜி.ஆர் வந்திருந்தார். பஞ்சவர்ணம் அவர்கள் வேட்பாளர். எங்களையெல்லாம் லாரியில் அழைத்துச் சென்றார்கள். எம்.ஜி.ஆரை நேரில் பார்க்கக் போகிறோம் என்பதே வியப்பாக இருந்தது. பிரம்மாண்டமான கூட்டம். எம்.ஜி.ஆர் மேடைக்கு வந்தவுடன் வேட்டுச் சத்தம் அதிர்ந்தது. விசில் சத்தமும் கைதட்டல்களும் வாழ்க கோசங்களும் ஏதோ வேற்றுலகத்தில் இருப்பது போல் இருந்தது. எம்.ஜி.ஆர். என்ற பெயருக்கு அத்தனை அன்பு, மதிப்பு. அவரை உயிர் போலத்தான் நினைத்தார்கள். பேசுவதற்கு சிரமப்பட்ட போதிலும் நிறைய நேரம் பேசினார். இடையிடையே இன்னும் பேசவா எனக் கேட்டார். யாம் மேடைக்கு அருகே போய் நின்றுகொண்டு அவரையே பார்த்துக் கொண்டிருந்தோம்.

அமெரிக்காவிலிருந்து எம்.ஜி.ஆர் சிகிச்சை முடிந்து திரும்பும் போது அவரை வரவேற்க எமது அப்பா, நல்லதம்பி உட்பட பலரும் சென்னைக்குப் போனார்கள். கூட்டத்தில் பார்க்க முடியாமல் திரும்பி வந்தார்கள். புரட்சித்தலைவர் மறைவுக்கு எங்கள் தெருவிலிருந்து நிறையப் பேர் மொட்டை போட்டார்கள். அந்த அளவிற்கு மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றவர். ஏழை எளியவர்களின் இதயத்தில் வாழ்ந்தாரெனில் மிகையாகாது. ஜா.அணி, ஜெ.அணி என்று பிரிந்தபோது தெருவே ஜெ.அணி பக்கம் நின்றது.

ஜெயலலிதா அம்மையார் வந்த பின்பு காட்சிகள் மாறி விட்டன. தேவர்கள், அமமுடையார்கள் எல்லாம் அதிமுக. தேவேந்திரர்களில் சிலரைத் தவிர்த்து பெரும்பாலும் தி.மு.க கட்சி. எம்.ஜி.யாரையும் அ.தி.மு.க. வையும் அப்படி வெறுத்த எங்கள் ஊர் தேவர்கள், தற்போது அ.தி.மு.க. ஜெயித்ததற்காக கேசரி செய்து எல்லோருக்கும் கொடுக்கிறார்கள். அன்றைக்கெல்லாம் அ.தி.மு.க கட்சிப் பாட்டு போட்டவுடன் கரண்ட் போய்விடும். மின்சாரக் கம்பியின்மீது பச்சையாக இருக்கும்

வாழை மட்டையைத் தூக்கி போட்டால் போதும். பியூஸ் போய்விடும். இது கூடத் தெரியாமலா கிராமத்தில் இருப்பார்கள்.

தேவர்கள் மேலத் தெரு, கீழத் தெரு என இரண்டு தெருவாக இருந்தார்கள். மேலத் தெருக்காரர்கள் தோட்டம், வயல்கள் என்று வசதியாக இருப்பார்கள்.

அப்போது முனியாண்டித் தேவர் வீடு வசதியாக இருக்கும். பெரிய தொந்தியோடு இருப்பார். செல்லத்தாய் ஆத்தா எங்களுக்கெல்லாம் பிரியமானவர். எமது சிறுவயதில் அம்மா இவர்கள் வீட்டில்தான் அதிகமாக வேலை செய்தார். வயல் வேலை இல்லையென்றால் தானியங்கள் புடைப்பது, கேழ்வரகு அரைப்பது, நெல் அவிப்பது போன்ற வேலைகள் கொடுப்பார்கள். கடினமான காலங்களில் தானியங்கள் கொடுத்து உதவுவார்கள். யாமே பலமுறை சென்று பெட்டியில் நெல்லோ, கேழ்வரகோ வாங்கி வந்திருக்கிறோம். பின்னர் இதை களையெடுத்துக் கழிக்க வேண்டும். குமரய்யா கோவில் அருகே செழிப்பான தோட்டம் இருந்தது. அம்மாவுடன் சேர்ந்து பலமுறை இங்கு வேலைக்குச் சென்றிருக்கிறோம். வசதியாக இருந்தவர்கள் இடையிலே கொஞ்சம் சிரமமடைந்தார்கள்போல் தெரிகிறது. செல்லத்தாயாத்தா கூலி வேலைக்குச் செல்வதை சில ஆண்டுகளுக்கு முன்னால் யாம் கவனித்தோம். வாழ்க்கை விசித்திரமானதொன்று. இராஜா மற்றும் துரைராஜ் இவர்களது பையன்கள். இராஜா தேவர் எம்மைப் பார்த்தால் அன்புடன் நலம் விசாரிப்பார். துரைராஜ் தேவர், ஆசாரியிடமிருந்து வாங்கிய செவக்காட்டு தோட்டத்தில் சிறப்பாக விவசாயம் செய்கிறார்.

பொன்னுச்சாமித் தேவர் எல்லோரிடமும் சகஜமாகப் பழகுவார். இராமலிங்க மாமாவைத் தேடி அடிக்கடி வருவார். ஒன்றாக உழுகிறவர்கள். மாப்பிள்ளைச்சாமி தேவரது மகன்கள் வெளி நாடுகளில் வேலை பார்த்தார்கள்.

சுப்பையாத் தேவர் கடை வைத்திருந்தார். இவரது பையன்கள் வெளி நாடுகளில் இருந்தார்கள். மூத்த மகன் இறந்தபின் உடலைக் கொண்டு வந்தார்கள். இன்னொரு மகன் கணேசன் அவர்கள் வெளிநாடு சென்று திரும்பிய பின் டிராக்டர் ஓட்டினார். மருமகன் இராமேஸ்வரம் பக்கம் என்பார்கள். இங்கேயே தங்கி விட்டார். டேரா அருகே இருந்த தோட்டத்தில் வீடு கட்டினார்கள்.

வெங்கலத் தேவர் என்றெல்லாம் இருந்தார். இவரது பையன் எல்லோரையும் மரியாதையாகப் பேசுவார். திருக்கணத் தேவரிடம் எங்கள் அப்பா கடன் வாங்கி படாதபாடு பட்டார். கடனை அடைத்து விட்டதாக எமது அப்பா சொல்ல, அவர்

முழுவதும் அடைக்கவில்லையென்று மறுக்க, கடன் பிரச்சினை வருடக்கணக்கில் இழுத்துக் கொண்டு போனது. பின்பு எப்படியோ சமரசம் பேசி முடித்து விட்டார்கள். இவரது பையன்கள் குருவுத் தேவர் மற்றும் நாகராஜ்.

வெள்ளைச்சாமித் தேவர் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர். அமைதியானவராக இருப்பார். நாடகங்களில் ஆர்மோனியம் வாசிப்பார். நன்றாகப் பாடுவார். மார்கழி மாதங்களில் தவறாமல் பஜனை பாடி வருவார். அன்னபாக்கியம் டீச்சர் வீட்டில் இருந்தார்.

சிறு வயதில் நிறையப் பேர் பஜனை பாடி வருவார்கள். ஒரு முறை யாமும் கண்ணனோடு சேர்ந்து சுற்றியிருக்கிறோம். அதிகாலையில் எழுந்து ஊரணியில் குளித்து திருநீறு அணிந்து பஜனை தொடங்கும். ஒவ்வொரு தெருச் சந்திப்பிலும் பஜனை நிற்கும். வெள்ளைச் சாமித் தேவர் பாடுவதை மற்றவர்கள் திரும்பவும் பாடுவார்கள். பெரும்பாலும் முருனைப் பற்றிய சினிமாப் பாடல்களாக இருக்கும். திருவெம்பாவை, திருபபள்ளியெழுச்சி பாடினார்களா எனத் தெரியவில்லை. தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி, பார்வதி பதயே நமஹ, கோவிந்த நாம சங்கீர்த்தனம், கோவிந்தா, கோவிந்தா, திருச்சிற்றம்பலம் சொல்லி அடுத்த தெருவிற்கு பஜனை நகரும்.

பெரும்பாலும் சிறுவர்கள்தான் உடன் வருவார்க்ள். சில நாட்களில் நான்கைந்து சிறுவர்கள்தான் இருப்பார்கள். இத்தனை பெரிய ஊரில் இது போன்று நடந்தது விசித்திரம். அதிலும் சென்ற ஆண்டு யாம் மார்கழி மாதத்தின் போது சில நாட்கள் ஊரில் இருந்தோம். மார்கழி பஜனையே பாடவில்லை. வெள்ளைச்சாமித் தேவருக்குப் பின் இதை முன்னெடுப்பவர் யாருமில்லை போலும். மார்கழி மாதப் பஜனையைப் பாடாதவர்கள், எட்டு கோவில்களில் ஒலிபெருக்கிகள் கட்டி காலையிலும் மாலையிலும் கத்த வைத்தது மகா விந்தை.

அருகருகே இருக்கும் எட்டு இடங்களில் கூம்பு குழாய்களில் எட்டு விதமான பாட்டுக்கள் போட்டால் எப்படி இருக்கும். நாயக்கரின் சக்கம்மா கோவில், தேவர் சிலை, நாடார் காளியம்மன் கோவில், அருந்ததியரின் கோவில், விநாயகர் கோவில், அகமுடையார்களின் கருப்பாசாமி கோவில், சக்தி கோவில் மற்றும் பெருமாள் கோவில். இதில் தேவேந்திரர்களின் கருப்பசாமிக்கு ஒலிபெருக்கி போடாமல் விட்டு விட்டார்கள். பிள்ளைமாருக்கும் அம்மன் இருக்கிறார். வரும் ஆண்டுகளில்

இவர்களும் போட வாழ்த்துவோம். மக்களுக்கு வசதி வாய்ப்புகள் குறைவில்லாமல் இருக்கின்றன. காசைக் கொடுத்தால் பாட்டு பாடப் போகிறது.

எங்கள் ஊரின் பெருமாள் ஆயிரம் வருடங்களுக்கும் மேலாக இங்கேயே இருந்து சேவை சாதிக்கிறார். எங்கள் பெருமாள் அழகாக இருப்பார். பெருமாளின் திருநாமம் உய்யவந்த விண்ணகரப் பெருமாள். பெருமாள் பெயரே எங்கள் ஊருக்கும். உய்யவந்த விணணகரம். கல்வெட்டுச் சான்று இருக்கிறது. குலசேகரப்பெருமான் ஆழ்வார் அருளிச் செய்தது போல் வன்பெரு வானகம் உய்ய, அமரர் உய்ய, மண் உய்ய, மண்ணுலகில் மனிசர் உய்ய வந்தவர் எங்களின் உய்ய வந்த விண்ணகரப் பெருமாள்.

சங்கு சக்கரம் ஏந்தி நின்ற நிலையில் சேவை சாதிக்கிறார். முறையான கட்டடக் கலை அமைப்பில் இக்கோயில் இருக்கிறது. பெரிய கோவில்களில் இருப்பது போன்ற கஜலட்சுமி கோவில் முகப்பில் இருக்கிறார். இரண்டு பக்கமும் சங்கு சக்சரம் பொறிக்கப்பட்டுள்ளது.

கோவில் முன்னே கம்பம் இருக்கிறது. முன்பக்கம் ஆஞ்சநேயரும், மூலவருக்கு எதிராக கருடாழ்வாரும் கம்பத்தில் புடைப்புச் சிற்பமாக அருள்பாலிக்கிறார்கள். மூலவருக்கும் கருடாழ்வருக்கும் இடையில் பலி பீடம் இருக்கிறது. பக்கத்திலியே சிம்மம் சிலை காணப்படுகிறது.

ஆயிரம் வருடங்களுக்கும் மேலான பெருமாள் கோவில் பல வருடங்களாகவே கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. மக்களுக்கு பெருமாளைப் பற்றி நினைக்க எங்கே நேரமிருக்கிறது. கலியுகமல்லவா.

எமக்கு நாற்பத்தி இரண்டு வயது. எமக்குத் தெரிந்தே கோவில் ஓரளவிற்கு நன்றாக இருந்தது. புரட்டாசி சனிக்கிழமைகளில் அம்மாவுடன் சேர்ந்து தீபம் ஏற்றி இருக்கிறோம். பெருமாளுக்கு பூசாரி இருந்ததால் கோவில் திறந்திருப்பார்கள்.

ராஜாராம் கவுண்டர் பெருமாள் கோவில் பூசாரியாக இருந்தார். இவருக்கு முன்னால் இவரது அப்பா சேது கவுண்டர் இருந்தாராம். ராஜாராமுக்கு தம்பியும் இருந்தாராம். அண்ணனும் தம்பியும் இறந்துவிடவே அவர்களது அம்மா சனிக்கிழமை மாலை சிறிது நேரம் கோவிலைத் திறந்து வைக்கிறார். பெருமாள் கோவிலில் திருநீறு கொடுக்கிறார். ஆரத்தி தவிர வேறு ஒன்றும் கிடையாது. பெருமாளுக்குரிய எந்த ஒரு வழக்கமும் பின்பற்றப்படுவதில்லை.

பெருமாளுக்கு திருவமுது இல்லை. திருக்கோவிலில் மின்சாரம் இல்லை. தீபமும் ஏற்றுவதில்லை. மார்கழி மாதம் மட்டும் ஒரு நல்ல மனிதரால் வெளிச்சம் உண்டு.

கோவிலின் கற்கள் எல்லாம் பெயர்ந்து விழுகின்றன. வேப்ப மரங்கள் பெரியதாக உள்ளேயே வளர்ந்து நிற்கின்றன. சிறியதாக இருக்கும் போதே யாரேனும் கவனித்து அகற்றி இருக்கலாம். மேற்கூரை கற்கள் தொங்கிக் கொண்டிருக்கின்றன. இடிந்து விழாமல் இருப்பது மகா ஆச்சரியம்.

பெருமாள் நிலையே இப்படியென்றால் பிராட்டி நிலையை என்னவென்பது. சிரசு இல்லாத பிராட்டியாக பெருமாள் அருகே சேவை சாதிக்கிறார். இப்படிக் கூடவா ஊரார் மனம் கல்லாக இருக்கும். இது அமங்களமாக யாருக்கும் படவில்லை.

கோவிலினுள்ளே சில சிலைகள் மீது மணல் கொட்டிக் கிடக்கிறது. சுற்றிலும் கருவேல மரங்கள் மண்டிக் கிடக்கின்றன. அரிய கல்வெட்டுக்கள் மண்ணால் மூடப்பட்டு விட்டன. காலி மது பாட்டில்களும் தென்படுகின்றன.

2011 செப்டம்பர் 12ம் தேதி வெளியான தினகரன் மதுரைப் பதிப்பில் எங்கள் ஊரின் பெருமை பற்றி வந்த செய்திக் குறிப்பு கீழே.

தொப்பலாக்கரை

‘‘விருதுநகர் மாவட்டத்து இவ்வூரினை ‘அளற்றூர் நாட்டுக் குளத்தூர்’ என்றும், ‘ஜனநாத நல்லூர்’ என்றும், கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. ஊருக்கு மேற்கே முறையான கட்டிடக் கலை அமைப்பில் பெருமாள் கோவில் இருக்கிறது. இங்குள்ள முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன், முதலாம் மாறவர்மன் குலசேகரன் கல்வெட்டுகள் இக்கோயிலை ‘உய்யவந்த விண்ணகரம்’ என்கின்றன.

இராசேந்திர சோழ வாணாதிராயன் இக்கோவிலில் இறைவனுக்குப் படைக்க ஆகும் செலவிற்காகவும், பல்லவ குலாந்தக நல்லூரைச் சேர்ந்த ஊர்ச்சபையாரும் நிலங்கள் தானம் வழங்கியதை கல்வெட்டுகள் காட்டுகின்றன.

இதே போல், நின்ற ஆதிபிரான் அழகப்பெருமாள் என்பவர் விளக்குகள் எரிக்க காசுகளை தானமாக வழங்கியதையும் அறிய முடிகிறது. பலிபீடத்து கல்வெட்டு, பரளச்சியைச் சேர்ந்த இரட்டை மூவன் ஆன தமிழ்திரையன் என்பவர் குலசேகரன் ஆட்சிக் காலத்தில் பலிபீடத்தை செய்தளித்ததாக தெரிவிக்கிறது. கோவில் முன்புறம் அழகிய சிம்மக் கற்சிலையில் உள்ள கல்வெட்டில், வீரன் சடைக்கண்

ஆன தர்ம வித்தகன் என்பவர் துர்க்கைக்காக இச்சிம்மச் சிற்பச் சிலையை வடித்துக் கொடுத்தது தெரிகிறது.

ஊர்க் குளக்கரையில் இரண்டு தீர்த்தங்கரர் சிலைகள் உள்ளன. 'விற்போர் வீரர் பெரும்பள்ளி' என்ற சமணப் பள்ளி இங்கிருந்திருக்கிறது. இப்பள்ளிக்காக பரளச்சி என்ற ஊரில் நிலம் தானமாக வழங்கப்பட்ட செய்தியை இங்குள்ள கல்வெட்டில் அறிய முடிகிறது. வணிகக் குழுக்களைக் காக்கும் 'விற்போர் வீரர்' என்ற படைப் பிரிவினர் இந்த சமணப் பள்ளியை உருவாக்கி இருக்கலாம் எனத் தெரிகிறது''.

எத்துணை பெருமை மிக்கது எங்கள் ஊர். சங்க காலத்திற்கு முன்பிருந்தே எங்கள் ஊரில் மக்கள் வாழ்கிறார்கள் போலும். பாண்டிய, சேர, சோழ, பல்லவ என்று அனைத்து அரசர்களோடும் எமதூருக்குத் தொடர்பிருக்கிறது. சமணப் பள்ளியும் இருந்திருக்கிறதெனில் பழமைக்கு வேறு சான்றும் தேவையோ? எங்கள் பெருமாளும் பல்லாண்டு சேவை சாதிக்கிறார்.

எங்கள் ஊரின் மக்களைச் சொல்லியும் குற்றமில்லை. ஊரின் பழம் பெருமையும், அதன் தனித்துவமும் அவர்களுக்குத் தெரியவில்லை. பெரும்பாலான வயதானவர்கள் படிப்பறிவு இல்லாதவர்கள். சாதிய உணர்வில் தனித்தனி தீவுகளாக வாழ்கிறார்கள். பெண்களின் நிலையைச் சொல்லவே வேண்டாம். எமது அப்பா காலத்திலேயே வறுமையான வாழ்க்கைதான் இருந்திருக்கிறது. ஊரில் பெரிய வீடு மட்டுமே ஓரளவிற்கு வறுமை இல்லாமல் இருந்திருக்கிறது. மற்றவர்களின் நிலை துன்பம் தான். எமது காலத்திலேயே பெருவாரியான வீடுகளில் வயிற்றுக்கே சிரமம். வானம் பார்த்த பூமி. மழை பெய்யா விட்டால் என்ன செய்ய முடியும்.

எமது பெற்றோர் காலத்தில் கடுமையான வறுமை இருந்ததாம். நல்ல துணிமணிகள் போட்டதில்லையாம். சிறுசிறு குடிசை வீடுகளில் வாழ்ந்திருக்கிறார்கள். அதற்கு முன்னர் இருந்தவர்கள் செழிப்பாக இருந்திருக்கலாம்.

அதையும் உறுதியாகச் சொல்ல இயலாது. அவர்களுக்கு அடிமை வாழ்க்கை. ஆங்கிலேயர், நாயக்கர், மொகலாயர் என வரிசை நீள்கிறது. அடிமைகள் சந்தோஷமாக வாழ்ந்திருக்க முடியாது. அதற்கும் முன்னால் மதச் சண்டைகள். அதற்கு முன் அரசர்களுக்குள் ஓயாத வெட்டுக் குத்துக்கள். அதற்கும் அப்பால்

வைதீகம் வருகிறது. சாதீயத்தால் மக்கள் எத்தனையாயிரம் துன்பங்களை அனுபவித்தார்களோ?

இருந்தும் நம் முன்னோர்கள் எவ்வளவு மகோன்னதமானவர்கள். இவர்களைப் போல் இலக்கியங்கள் எவர்களும் படைத்ததில்லை என்று பெருமைப்படும் அளவிற்கு உலகத்தரமான இலக்கியங்களை நமக்குப் பரிசளித்திருக்கிறார்கள். போரிலும், காதலிலும் புகுந்து விளையாடியிருக்கிறார்கள். எப்படித்தான் இவ்வளவு பிரம்மாண்டமான திருக்கோவில்களைக் கட்டினார்களோ.

அவர்கள் நட்டு வைத்திருக்கின்ற தூண்களைப் பார்த்தால் தலை சுற்றுகிறது. அவர்களின் இறைவன் மீது அளப்பரிய அன்பு. ஆகாயமளவு நம்பிக்கை. நாமோ அவர்களின் தூண்கள் மீது கண்டதையும் கிறுக்குகிறோம்.

இன்று இருக்கும் இடத்திலேயே எங்கள் ஊர் இருந்ததில்லை. மேற்கே இருந்த குமரய்யா கோவிலருகே முதலில் இருந்ததாகத் தெரிகிறது. அப்போது ஊரின் கிழக்கே பெருமாள் கோவில் வரும். எங்கள் தெருவிற்கு கிழக்கே சோலைமேடு இருக்கிறது. நல்ல செம்மண் நிலம். கடலை, சோளம், பயிறு வகைகள் போடுவார்கள். பெரிய நடுகல் ஒன்றும் இருந்தது. முன்னர் இங்கேயும் ஊர் இருந்ததாகப் பெரியவர்கள் சொல்லுவார்கள். இன்று புதிதாக சில வீடுகள் வந்துவிட்டன. கிழக்கேயும், வடக்கேயும் எங்கள் ஊர் விரிவடைந்து செல்கிறது.

எமது தந்தைக்கு விவரம் தெரிந்து, பெருமாள் கோவிலுக்கு மற்ற ஊரிகளிலிருந்து வண்டி மாடுகள் கட்டி வந்து சாமி கும்பிடுவார்களாம். ஓட்டுக் கூடாரம் ஒன்றும் இருந்திருக்கிறது. பெருமாள் கோவில் கிணற்றில் பெண்கள் தண்ணீர் இறைத்து யாமே பார்த்திருக்கிறோம்.

பெருமாள் கோவில் முன்பாக, சாலையின் ஓரத்தில் நன்கு வளர்ந்த ஒரு புளிய மரம் இருந்தது. கடந்த ஆண்டு அடித்த சுழல்காற்றுக்கு வேரோடு சாய்ந்து விட்டது. அதன் அருகே சிறு அரச மரமும் இருந்தது. சிறுவர்களான நாங்கள் அந்த மரத்தில் ஏறி புளியம் பூக்கள், பிஞ்சுகள், கொழுந்துகள் பிடுங்குவோம். முக்கியமாக காக்காக் கம்பு விளையாட்டு. நாங்கள் விளையாடுவதற்கு எத்தனை எத்தனை விளையாட்டுகள்..

யாம், அண்ணன், மணிகண்டன், வேல்முருகன், தங்கப்பாண்டி, இரத்தின சபாபதி, இராமகிருஷ்ணன், மாரிமுத்து, கருணாமூர்த்தி இவர்களெல்லாம் சேர்ந்து

தான் பல விளையாட்டுகளும் விளையாடுவோம். ஐஸ் விளையாட்டு, கிளித்தட்டு, நொண்டிக்கு பெண் பிள்ளைகளும் சேர்ந்து கொள்வார்கள்.

காக்கா விளையாட்டிற்கு மரம் வேண்டும். பெரும்பாலும் பெருமாள் கோவில் புளியமரம். வேப்பமரத்திலும் விளையாடுவதுண்டு. செவல் காட்டு ரோட்டில் புளிய மரங்களும் புங்கை மரங்களும் அனேகம் இருந்தன. மாடு மேய்க்கச் செல்லும்போது அங்கும் விளையாட்டுகள் தொடரும்.

காக்காக் கம்பு விளையாட்டில், முதலில் அனைவரும் கோட்டில் நின்று கொண்டு அவரவர்க்குக் கிடைத்த சிறு குச்சிகளை எறிய வேண்டும். யார் குச்சி அருகே விழுகிறதோ அவர் தான் அவுட். அவுட் என்றால் தோற்றவர். இவர் தான் முதலில் பிடித்து வர வேண்டும். யார் குச்சி தூரமாக விழுந்ததோ அவர் குச்சியை எறிந்து மரத்தில் வேகமாக ஏற வேண்டும். தோற்றவர் குச்சியை எடுத்து வரும் முன்பே குச்சியை எறிந்தவர் மரத்தில் தாவி ஏறி விடுவார். மற்றவர்கள் முதலிலேயே மரத்தின் மீது ஏறிவிடுவார்கள்.

தோற்றவர் குச்சியைக் கொண்டு வந்து சிறு வட்டம் வரைந்து அதனுள் குச்சியை வைத்துக் கொள்வார். இனி அவரது வேலை யாரையாவது தொட வேண்டும். தொடுவதற்கு முன்னால் யாரும் குச்சியைக் கவ்வி விடக்கூடாது. அப்படிக் கவ்வி விட்டால் மறுபடியும் அவர் தான் தோற்றவர். அப்போது குச்சியை எடுத்து வாயில் கவ்வியவர் எறிவார்.

எல்லோரும் வெளவால்கள் போன்று தொங்கிக் கொண்டிருப்போம். சில பேர் நுனிக் கொம்பில் சென்று ஊசலாடி விளையாட்டுக் காட்டுவார்கள். தோற்றவர் மரத்திலிருப்பவர்களைத் தொட மரத்தில் ஏறினால், மற்றவர்கள் கிளைகளைப் பிடித்துக் கொண்டு குதிப்பார்கள். மரமே ஆடும். தோற்றவர் இங்குமங்கும் ஓடிக் குதித்து யாரையேனும் தொட முயற்சிப்பார். யாராவது கீழே குதித்து விடுவார்கள். அவர்களை விரட்டிப் பிடிக்கப் போனால் மற்றவர்கள் கீழே குதித்து கம்பை எடுத்து விடுவர். இருந்தாலும் திறமையாக விளையாடி யாரையாவது தொட்டு விடுவர். பல மணி நேரங்கள் இப்படியாக விளையாட்டு தொடரும்.

இது மதியம் என்றால், சாயங்காலத்திற்கு தள்ளு கம்பு விளையாட்டு. ஆளுக்கொரு நீளமான கருவமரக் கம்புகளை எடுத்துக் கொள்வோம். கோட்டில் நின்று கொண்டு அவரவர் கம்புகளை சுழற்றி எறிய வேண்டும். யார் எறிந்த கம்பு அருகே விழுகிறதோ அவர் தான் தோற்றவர்.

இனி கம்பை கீழே போட்டுத் தள்ள வேண்டும். கம்புக்குச் சொந்தக்காரர் தள்ளுபவர்களைத் தொட வேண்டும். தள்ளுபவர்கள் கீழே கிடக்கும் ஏதேனும் ஒரு கல்லிலோ அல்லது பாறையிலோ கம்பால் தொட்டுக்கொண்டிருக்க வேண்டும். அப்படி வைக்காமல் இருக்கும் போது தொட்டுவிட்டால் அவர் அவுட்.

தோற்றவர் தமது கம்பு அருகே நின்று கொண்டிருப்பார். மற்றவர்கள் ஆளுக்கொரு கல்லை தொட்டுக் கொண்டு காத்திருப்பர். யாரேனும் ஒருவரைத் தொட முயற்சி செய்யும் போது மற்றவர்கள் கம்பைத் தள்ளிக் கொண்டு சென்று விடுவார்கள். தெரு அருகே இருக்கும் கண்மாய் வழியாக தள்ளிக் கொண்டு சென்றால் மற்றவர்களைத் தொடுவது மிகவும் சிரமம். பாறைகள் நிறைய இருப்பதால் தள்ளிக் கொண்டே சோலைமேடு வரையிலும் சென்று விடுவார்கள்.

யாரையாவது கல்லில் வைக்காமல் இருக்கும் போது தொட்டு விட்டால், அங்கிருந்து தள்ள ஆரம்பித்த இடத்திற்கு கபடியாகவோ, நொண்டி அடித்தோ வர வேண்டும். தூரத்திற்கு ஏற்றவாறு ஒரே தம்மோ அல்லது இரண்டு மூன்று தம்மோ நிர்ணயிக்கப்படும். அடிகுழாய் வரை என்றால் ஒரு தம்மு. காளவாசல் என்றால் இரண்டு. சோலைமேடு என்றால் மூன்று. மூச்சுவிடாமல் கபடியெடுத்து ஓடி வரும் போது அந்த முறை தோற்றவர் கூடவே ஓடி வருவார். ஒரு வேளை முடியாவிட்டால் மறுபடியும் அங்கிருந்து தள்ளுவது தொடரும்.

கிளி விளையாட்டுக்கு வேட்டி சேலைகள் தேவைப்படும். யாராவது கொண்டு வருவார்கள். சமயங்களில் ஒவ்வொருவரும் கொண்டுவர வேண்டும்.

இரண்டு இரண்டு பேர் இணைகளாகச் சேர்ந்து கொள்வார்கள். பின்னர் ஆளுக்கொரு பக்கமாக எதிரெதிர் அணியில் இருப்பார்கள். விளையாட்டு ஆரம்பிப்பதற்கு முன்பாக பூவா, தலையா போட வேண்டும். சிறு ஓட்டுத் துண்டை எடுத்து நாக்கில் வைத்து மேலே தூக்கிப் போட வேண்டும். எச்சில் இருப்பது தலை. இல்லாதது பூவு.

டாசில் வென்றவர்கள் கிளியை ஒளித்து வைக்கும் வரை எதிர் அணியினர் பக்கத்தில் இருக்கும் வீடுகளுக்குப் பின்னே சென்று ஒளிந்து கொள்ள வேண்டும். இடையில் யாரும் என்ன நடக்கிறது என்று எட்டிப் பார்க்க கூடாது. பெரும்பாலும் சங்க மடத்தின் முன்பே தான் இது நடக்கும். அங்கிருந்து எங்கள் வீட்டின் அருகே இருக்கும் போஸ்ட் மரத்தை அதாவது மின்சாரக் கம்பத்தை கிளி தொட வேண்டும்.

இனித்தான் ஆட்டம் விறுவிறுப்பாக நடைபெறும். தோற்ற அணியிலிருந்து ஒருவர் கீழே படுத்துக் கொள்வார். இவரை உடல் தெரியாத அளவிற்கு துணியால் மூடி விடுவார்கள். இதில் உள்ள சுவாரஸ்யம், பெரிய பையன்களைக் கூட கால் கைகளைச் சுருட்டி மடக்கி வைத்து சிறு பையன் போன்று படுக்க வைப்போம். சிறு பையன்களை முழங்காலிட வைத்து பெரிய பையன் போன்று வைத்து விடுவோம். இடையில் எதிர் அணியினர் யாராவது எட்டிப் பார்க்கிறார்களா என ஒருவர் பார்த்துக் கொண்டிருப்பார். ஒருவருக்கொருவர் சத்தமே கேட்காமல் இரகசியமாகப் பேசிக் கொள்வோம்.

எல்லாம் முடிந்தவுடன் வரலாம் என்று சொல்லிவிட்டு, கிளி வரும் பாதையிலுள்ள வீடுகளின் சந்துகளில், சுவர்களில் மற்றவர்கள் ஒளிந்து கொள்வோம். எதிர் அணியினர் வந்து சுற்றிச் சுற்றிப் பார்ப்பார்கள். யாராக இருக்கும் என்று அவர்களுக்குள்ளேயே பேசி முடிவெடுப்பார்கள். படுத்திருக்கும் பையனின் ஜோடிப் பையன் யாரோ அவர் படுத்திருப்பது எமது ஜோடி என்று அவர் பெயரைச் சொல்லித் தொட வேண்டும். சரியாகச் சொல்லிவிட்டால் படுத்திருப்பவர் துள்ளியெழுந்து கிளி வருது கிளி வருது என்று சத்தமாகக் கத்துவார்.

உடனே மற்றவர்கள் கிளியைச் சூழந்து கொண்டு எல்லையைத் தொட ஓடி வருவர். எல்லையைத் தொடும் முன் ஒளிந்து கொண்டிருக்கும் அணியினரில் யாரேனும் கிளியைத் தொட்டு விட்டால் கிளி அவுட்.

கிளியோடு வருபவர்கள் ஒளிந்து கொண்டிருக்கும் அவரவர் ஜோடிகள் வரும் போது பிடித்துக் கொள்வார்கள். தொட்டு விட்டாலே நின்று விட வேண்டும். கிளியைத் துரத்தக் கூடாது. துணிக்குள் படுத்திருப்பவரை சரியாகக் கணித்து விட்டால் எளிதாக வெற்றி பெற்றுவிடலாம். மாறாக தவறாக கணித்தால் கிளி எழுந்திருக்காது. அப்படி படுத்திருப்பது எமது ஜோடி எனத் தவறாக அடித்தவர், அவருக்கு உரிய ஜோடியைப் பிடிக்கக் கூடாது. ஜோடி இல்லாததால் ஒளிந்திருப்பவர் கிளியை விரட்டிச் சென்று எளிதாகத் தொட்டு விடுவார். படுத்திருப்பவரைக் கணிப்பதற்குப் பண்ணும் கூத்துகள் விளையாட்டை விட அலப்பரையாக இருக்கும்.

வண்ணார் பொதி விளையாட்டு பெரும்பாலும் இரவில் விளையாடுவோம். அவரவர் சட்டைகளைக் கழட்டியோ அல்லது வீடுகளில் இருந்து துணி கொண்டு வந்தோ ஒரு துணிப் பொதியினை உருவாக்க வேண்டும். யார் முதலில் பொதி

சுமப்பது, யார் பொதி சுமப்பவரை மற்றவர்கள் குத்தாமல் காப்பாற்றுவது எனத் தேர்ந்தெடுப்பதற்கு ஓட்டப் பந்தயம் நடக்கும். சங்க மடத்திலிருந்து, எங்கள் வீடு அருகே இருக்கும் மின்சாரக் கம்பத்தை தொட வேண்டும். முதலில் தொடுபவர் காப்பாற்றுபவர். கடைசியாகத் தொடுபவர் பொதி சுமக்க வேண்டும்.

சிறு தலையணை போன்ற பொதியினை முதுகில் சுமந்து கொண்டு தோற்றவர் ஒரு காலை மடக்கி வைத்து உட்கார்ந்து கொள்வார். மற்றவர்கள் சுற்றி நின்று கொள்வார்கள். யாரையும் பொதியில் குத்த விடாமல் ஒருவர் காப்பாற்ற வேண்டும். குத்தி விட்டு ஓடும் போது காப்பாற்றுபவர் அவரைத் தொடுவதற்குள் மற்றவர்களில் ஒருவராவது பொதியைக் குத்தி விட வேண்டும். அப்படிக் குத்தவில்லையெனில் தொட்டவர் அவுட். அவுட்டானவர் பின் பொதி சுமக்க வேண்டும். முதலில் சுமந்தவர் இப்போது காப்பாற்றுபவர். இப்படி தொடர்ந்து சாமம் வரை விளையாடித் திரிவோம்.

சில நேரங்களில் இந்த விளையாட்டில் சண்டை வந்துவிடும். வேண்டுமென்றே பொதியைக் குத்த விட்டு காப்பாற்றுபவர் தொடுவது போன்று நடித்துக் கொண்டிருப்பார். பொதி சுமப்பவர் சண்டைக்கு வந்து விடுவார். குத்தும் போது ஓங்கி, வேகமாகக் குத்தக் கூடாது. தொட்டாலே போதும். வலிக்குமாறு யாரேனும் குத்தி விட்டால் சண்டை தான். சுமப்பவரை நாம் ஓங்கிக் குத்தினால் நாம் அகப்பட்டு சுமக்கும் போது அதை மனதில் வைத்து நம்மைக் குத்துவார். சில நேரங்களில் பெரியவர்கள் வந்து சமாதானப் படுத்துவதும் உண்டு. இதில் பெண்களும் வருவார்கள். தனியாகவும் விளையாடுவார்கள்.

கில்லி என்ற கிட்டி விளையாட்டைப் பற்றிச் சொல்லி மாளாது. எல்லோருக்கும் பிடித்த விளையாட்டு. கணேசமூர்த்தி அண்ணனும், வேல்முருகனும் எல்லா விளையாட்டுக்களும் நன்றாக விளையாடுவார்கள். கில்லி விளையாட்டில் வேல்முருகன் தூள் கிளப்புவார்.

கண்மாயிலும், அடிகுழாய் பக்கத்திலும் விளையாடுவோம். பல நேரங்களில் பள்ளிக்கூட மைதானம். ஆலமரம் இருந்ததால் நிழலாகவும் இருக்கும். பெரும்பாலும் மஞ்சனத்தியிலோ, கருவக்குச்சியிலோ கிட்டி கம்பு இருக்கும். கிட்டி கருவ மரத்திலும், கம்பு மூங்கிலாகவும் வைத்துக் கொள்வதுண்டு. சிறு குச்சியில் இரு முனைகளையும் கூராகச் வெட்டிக் கொண்டால் கிட்டி தயார். பொதுவாக எல்லோரிடமும் கிட்டி, கம்பு இருக்கும்.

கிட்டி தனித்தனியாகவும், நிறையப் பேர் சேர்ந்தால் அணிகளாகவும் விளையாடுவதுண்டு. தனித்தனியாக விளையாடும் போது முதலில் யார் ஆரம்பிப்பது என்பதற்கு ஓட்டப் பந்தயம். யார் முதலில் என்று வந்தால் ஓட்டத்தின் மூலமே தீர்மானிப்பது எங்கள் வழக்கம். ஐந்து பேர் விளையாடினால் அருகே ஒரு எல்லையை தீர்மானித்து அதைத் தொட்டு வர வேண்டும்.

இன்று எமது குழந்தைகள் அவர்கள் விளையாட்டிற்கு, ஒருவரை குனியச் சொல்கிறார்கள். முதுகில் தட்டி விரல்களை நீட்டுகிறார்கள். முதலாவது கண்டிப்பாகக் கடவுளுக்கு. குனிந்தவர் சொல்ல மறந்தால் சாமிக்கு என்று சொல்லுமாறு அரட்டுகிறார்கள். விரலில் எண்ணிக்கை வைத்து இது யாருக்கு என்று கேள்வி. அந்தப் பையன் அவர்களுக்குள் ஒரு பெயரை சொல்கிறார். இப்படியே விரல் எண்ணிக்கை எல்லோருக்கும் நீள்கிறது. எமது காலத்தில் இந்த நுட்பம் தெரியாமையால் வெயிலில் ஓடித் திரிந்தோம். இப்போது யார் ஓடுகிறார்கள். ஓடாமல் தானே விளையாடுகிறார்கள். நினைத்தாலும் ஓட முடியாது. பெரிய தொப்பைகளைத் தூக்க முடியாதல்லவா. எங்கள் காலத்தில் பிரியாணிகளும், பீட்சாவும், கே.எப்.சி.களும், பர்கரும், டாமினோஸ்களும், குழல் சாந்து இத்யாதிகளும் கிடைக்காமல் கேப்பக்கூழையும், கம்மஞ்சோறையும், குருணைக் கஞ்சியையும், சக்கரவள்ளிக் கிழங்கையும், தட்டப் பயிறையும் சாப்பிட்டுத்தான் காடு மேடெல்லாம் ஓடித் திரிந்தோம்.

கிட்டி விளையாட்டில், இருபதா அல்லது ஐம்பதா என்ற எண்ணிக்கையை முதலில் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். கிட்டியை மேலே தூக்கி கீழே விழாமல் ஒன்று, இரண்டு, மூன்று என்று அடிக்க வேண்டும். சில பேர் ஆறு, ஏழு கூட அடித்து விடுவார்கள். அதன்பின் எந்த முனை சற்று தூக்கி இருக்கிறதோ அதை சிறிது தட்டி கிட்டி மேலே வரும் போது ஓங்கி ஒரு அடி கொடுத்தால் கிட்டி பறக்கும். சில நேரங்களில் பக்கத்திலேயே விழும். பின் கம்பால் அளந்து எண்ணிக்கையைத் தொடர வேண்டும். முடிவு செய்யப்பட்ட எண்ணிக்கை வந்தால் அவர் பழம். இல்லாவிட்டால் மறுபடியும் தொடர வேண்டும்.

சில நேரங்களில் கிட்டியின் முனையைத் தட்டும் போது மேலே வராது. பக்கத்திலுள்ள மணலிலோ, செடிகளுக்குள்ளேயோ விழுந்து விடுவதும் உண்டு. பின்பு அடுத்தவர் அவரது ஆட்டத்தைத் தொடங்குவார். இப்படியே எல்லோரும் பழமான பின் ஒருவர் எஞ்சியிருப்பார். அவர் தோற்றவர்.

கம்பால் சற்று பெரிய வட்டம் வரைந்து கொள்ள வேண்டும். பின்பு சவட்டு ஆரம்பிக்கும். வட்டத்தின் கோட்டில் நின்று கொண்டு ஒரு திசையை நோக்கி கிட்டியை அடிக்க வேண்டும். அவரவர் திறமையைப் பொறுத்து கிட்டி வேகமாகப் போய் விழும். ஒவ்வொருவரும் அவரவர் பாணியில் கிட்டியை அடிப்பார்கள். இடது கையால் மேலே தூக்கிப் போட்டு சில பேர் அடிப்பார்கள். சில பையன்கள் இடது கையால் கிட்டியைக் கீழே பிடித்துக் கொண்டு அடிப்பார்கள். ஒன்றிரண்டு பேர் இடதுகையின் சுட்டு விரல் மற்றும் சிறு விரல் மட்டும் நீட்டி, அதன் மேல் கிட்டியை வைத்தும் அடிப்பார்கள். அடிக்கும் போது கிட்டி தவறினால் மூன்று வாய்ப்புகள். மூன்றிலும் தோற்றால் அடிப்பவர் அவுட். பெரும்பாலும் இப்படி நடப்பது அரிது.

கிட்டியை அடித்தவுடன் தோற்றவர் அதனை எடுத்து வட்டத்துக்குள் எறிய வேண்டும். சரியாக வட்டத்துக்குள் போட வேண்டும். அடிக்கும் போதே கிட்டியை தரையில் படாமல் பிடித்துவிட்டால் அடித்தவர் அவுட். கிட்டியை வட்டத்துக்குள் போடத் தேவை இல்லை.

கிட்டியை வட்டத்துக்குள் எறியும் போது அடித்தவர் அதைத் தடுப்பார். கிட்டியை மறுமுறை அடிக்கும் முன்பே எறிபவர் ஓடி வந்து அடிப்பவரைத் தொட்டு விட்டால் அங்கிருந்தே வட்டத்துக்குள் எறியலாம். இதற்காக தொட வருகிறாயா வரவில்லையா என்று அடிப்பவர் முதலிலேயே கேட்டு தெரிந்து கொள்வார். தொட வரவில்லையென்றால் மனமிறங்கி மெதுவாக அடிப்பது இயல்பு. சில நண்பர்கள் கொஞ்சம் மண்ணைக் குவித்து, அதில் கிட்டியை சற்று சாய்வாக வைத்துக் கொண்டு ஓங்கி அடிப்பர். இப்படி அடிக்கும் போது கிட்டி பறக்கும். சமயங்களில் கிட்டியை வட்டத்திற்குள் எறியும் போது அடிப்பவர் பிடித்துக் கொள்வார். இப்போது அடிக்கத் தேவை இல்லை. எறியலாம். தூரமாகப் போய் விழும்.

இப்படியே அடிப்பவர் தடுப்பதும், எறிபவர் வட்டத்திற்குள் எறிய முயற்சிப்பதும் தொடரும். தூரம் அதிகரிக்க அதிகரிக்க வட்டத்திற்குள் விழாது. அப்படியே சவட்டிக் கொண்டே இருப்பார்கள். சிறு பையன்கள் என்றால் அழும்வரை விட மாட்டார்கள். பல நேரங்களில் எளிதாக வட்டத்துக்குள் போட்டு விடுவதும் நடக்கும்.

அணியாகப் பிரிந்து கிட்டி விளையாடுவது இன்னும் ஆர்வமாக இருக்கும். கொஞ்சம் சமமான இடத்தைத் தேர்வு செய்வது முதல் வேலை. தரையில் சிறு வரிப்பள்ளம் தோண்ட வேண்டும். கிட்டியின் நடுப்பகுதி பள்ளத்தில் இருக்குமாறு வைத்து இடது கையால் கம்பை சாய்வாகப் பிடித்துக்கொண்டு வலது கையால் ஓங்கி

ஒரு அடி. அடிக்கு ஏற்றாற்போல் கிட்டி பறக்கும். ஒரு இருபதடி தூரத்திற்கு அப்பால் எதிர் அணியினர் ஒருவருக்குப் பின் ஒருவராக நிற்பார்கள். கிட்டியை அடிக்கும் போது பிடித்து விட்டால் அடித்தவர் அவுட். இதற்காக பலபேர் சட்டையைக் கழற்றி கையில் வைத்துக் கொண்டு நிற்பார்கள்.

சில பேர் கிட்டிக்கு நடுவே நின்று கொண்டு இரண்டு கைகளாலும் கிட்டியைத் தள்ளுவார்கள். பெண்கள் இது போன்று தான் தள்ளுவார்கள். கிட்டியை அவுட்டாகாமல் தள்ளிய பின் கம்பை குழியிலேயே வைத்து விட வேண்டும். எதிரணியிலிருந்து ஒருவர் குறி பார்த்து கம்பில் எறிவார். கிட்டி கம்பில் பட்டு விட்டால் அடித்தவர் அவுட். கம்பில் படவில்லையெனில் தனி விளையாட்டில் விளையாடுவது போல் தொடரும். இதில் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். குறிப்பிட்ட எண்ணிக்கை அடித்து விட்டால் வெற்றி. இல்லாதபட்சத்தில் எதிரணியினர் ஆடுவார்கள்.

வெற்றி பெற்றால் அந்த அணியிலிருக்கும் ஒவ்வொருவரும் மூன்று முறை கிட்டியைத் தொடர்ந்து அடிப்பார்கள். சில நேரங்களில் சோலைமேடு சென்றுவிடும். அங்கிருந்து எதிரணியினர் கபடியோ, நொண்டியோ எடுக்க வேண்டும். அதிக தூரமென்றால் நொண்டி. ஒருவர் விட்ட இடத்திலிருந்து இன்னொருவர் தொடருவார்.

கிட்டியில் சில நேரங்களில் காயம் பட்டுவிடும். சில பேருக்கு மண்டை உடைந்து இரத்தமெல்லாம் வந்திருக்கிறது. சில வீடுகளில் கிட்டி விளையாட விடமாட்டார்கள். தெரியாமல் விளையாட வேண்டும். இப்படியாக தண்ணீர் கூடக் குடிக்காமல் விளையாண்டு திரிந்த காலங்கள் அவை.

இரவெல்லாம் பையன்களும், பெண்களும் ஒளிந்து விளையாடும் ஐஸ் விளையாட்டு விளையாடித் திரிந்தோம். சாப்பிடாமல் இருந்தால் வீட்டில் தேடுவார்கள். சாப்பிட்டு விட்டால் சாமம் வரைகூட விளையாடலாம்.

சனி, ஞாயிறு வருவதை ஓணான்கள் கண்டிப்பாக விரும்பாது. பல ஓணான், பச்சோந்திகளுக்கு அவை கெட்ட நாட்கள். மாடுகளின் வால் உரோமங்களைப் பிடுங்கி, திரித்து, நீளமான கம்பின் நுனியில் சுருக்குக் கயிறு கட்டிக் கொள்வோம். ஒவ்வொருவரிடமும் இப்படியான சுருக்குக் கயிறு கட்டிய கம்புகள் இருக்கும். தெருவிற்கு தெற்கே கருவ மரங்கள் நிறைய இருந்தன. அதுதான் எங்களின் வேட்டைக் களம். ஒருவர் ஓணானைப் பார்த்தால் போதும். அனைவரையும் கத்தி கூப்பிட்டு விடுவார்.

ஓணான் அங்கே, இங்கே என ஓடிக் களைத்து விடும். நைசாக சுருக்கை தலையில் நுழைத்து இழுத்து விடுவார்கள். அங்குமிங்கும் அதை இழுத்தடித்து படாதபாடு படுத்துவார்கள். கண்மாய்க்குள் தூக்கிப் போட்டு நீந்த வைப்பார்கள். பெரியவர்களிடம் மூக்குப்பொடி வாங்கி அதை தலையில் போடுவார்கள். எந்த ஓணானும் உயிரோடு போனதாகச் சரித்திரம் இல்லை.

சில நேரங்களில் கோஷ்டியாகச் சேர்ந்து மத்தியானம் அணில் வேட்டைக்குப் போவோம். அணிலை வேட்டையாடுவதில் மணிகண்டன், தங்கப் பாண்டியன் சூரப்புலிகள். இவர்கள் கண்ணுக்கு எந்த அணிலும் தப்பாது.

ஊரிலுள்ள கிணறுகளையெல்லாம் ஒரு சுற்று சுற்றி விடுவோம். முக்கியமாக கிணற்று ஓரமாக கட்டியிருக்கும் மோட்டார் அறையில் அணில்கள் குடி இருக்கும். அதே போன்று கிணற்றின் பொந்துகளிலும் வசிக்கும். கம்புகள், எறிவதற்கு கால்சட்டைப் பையில் கற்கள் சகிதமாக வேட்டைக்குச் செல்வோம்.

செவக்காட்டுக் கண்மாய்க்குள் அகரத்துப் பட்டிக்குச் செல்லும் பாதை ஓரமாக ஒரு கிணறு இருக்கும். அங்கே அணில்களை விரட்டும் போது ஒளிவதற்கு இடம் இருக்காது. ஏளிதாக மாட்டிவிடும். அதே போன்று பேய் கழிக்கும் பனைமரத்திற்கு அருகிலிருக்கும் கிணற்றுக்கும் நம்பிப் போகலாம்.

எப்படியும் ஒரு நான்கைந்து அணில்களாவது மாட்டி விடும். அங்கேயே பிளேடால் வயிற்றைக் கீறி குடலை எடுத்து கீழே போட்டு விட்டு, வயிற்றுக்குள் சிறுசிறு சீனிக்கற்களை வைப்பார்கள். சீனிக்கற்கள் ருசியைக் கூட்டுவதற்காக. செத்தைகள், குரண்டிக் குச்சிகளைப் பொறுக்கி வந்து அணிலைச் சுட்டு அங்கேயே விருந்தும் முடிந்து விடும். வீட்டிற்குக் கொண்டு வந்தால் ஒருவர் வீட்டிலிருந்து சட்டி, இன்னொருவர் வீட்டிலிருந்து மசாலா, மற்றொருவர் வீட்டிலிருந்து விறகு என அருமையான குழம்பு தயாராகும். அன்று ருசியான, குசியான கூட்டாஞ்சோறு களை கட்டும்.

எலி வேட்டை, முயல் வேட்டை, முட்டை வேட்டையென்று இன்னும் நிறைய இருக்கிறது. நெல் அறுத்து முடிந்தபின், பெரும்பாலும் சாயங்கால வேளைகளில் எலி வேட்டை நிகழும். யாராவது பெரியவர்கள் போகும்போது விளையாட்டுப் பையன்களான நாங்களும் செல்வோம்.

நெல் வரப்பில் எலிப்பொந்தை அடையாளம் பார்த்தபின் அருகே இருக்கும் மற்ற பொந்துகளை அடைத்து விடுவார்கள். வரப்பை கொஞ்சம் கொஞ்சமாக

வெட்டிக் கொண்டு வரும்போது எலிகள் சேர்த்து வைத்திருக்கும் நெற்கதிர்களை சேகரித்துக் கொள்வார்கள். திடீரென்று நான்கைந்து எலிகள் ஓடும். அடிங்கடா, அடிங்கடா என்று கத்துவார்கள்.

இதற்காகத்தானே நாங்கள் கம்புகளோடு காத்திருப்பது. ஆளுக்கொரு எலி பின்னால் ஓடுவோம். பெரும்பாலும் எலிகள் மாட்டிவிடும். சில நேரங்களில் ஏதாவது ஒரு பொந்துக்குள் ஓடி ஒளிந்து கொள்ளும். பின்னர் பிடித்து விடுவார்கள். எலிக்குட்டிகள் மாட்டினால் வீட்டிற்கு எடுத்து வந்து விளையாடுவோம்.

ஓணான், எலிகளாவது பரவாயில்லை. தட்டான்கள் பாடுதான் படு திண்டாட்டம். எங்களிடம் சிக்கி சின்னா பின்னமாகிவிடும். தட்டான்களைப் பிடிப்பது எம்மைப் போன்ற பையன்களுக்கு கைவந்த கலை.

பள்ளிக்கூடம் விட்டு வந்த பின் வாசலிலிருந்தே வீட்டுக்குள் புத்தகப் பைய் பறக்கும். இப்போது போன்று தூக்க முடியாத சுமைகளையா நாங்கள் தூக்கிச் சென்றோம். உடைந்த சிலேடு. குட்டி குட்டியான குச்சிகள். ஒன்றிரண்டு புத்தகங்கள்.

ராஜாத் தட்டான்களை எளிதாகப் பிடித்து விடலாம். இவைதான் நிறையத் திரியும். கொல்லையில் கிடக்கும் விறகுகளிலோ அல்லது செடி, கொடிகள் மீதோ உட்கார்ந்திருக்கும். சத்தம் போடாமல் நைசாகப் போக வேண்டும். சிறு சத்தத்திற்கெல்லாம் இது போகாது. வலது கையின் கட்டை விரலையும், ஆட்காட்டி விரலையும் இடுக்கி போல் வைத்து முன்னால் நீட்டிக் கொண்டு போய் அதன் வாலைப் பிடித்து விட வேண்டும். இறக்கையைப் பிடிப்பது சுலபமல்ல. மாட்டும் தட்டான்களுக்கு அதோ கதி தான். உடனடியாக பாதி இறக்கையை பிய்த்துவிடுவோம். இடது கையில் வைத்துக் கொண்டு அடுத்த தட்டான் பிடிக்கும் சாகசம் தொடரும்.

நான்கைந்து தட்டான்களைப் பிடித்து நூலால் அவைகளின் வாலில் சுருக்கு மாட்டி பறக்க விட்டுத் திரிந்திருக்கிறோம். தட்டான்கள் பெருங்கூட்டமாகத் தாழ்வாகப் பறக்கும் போது பருத்திமாரை எடுத்து வீசி அடிப்பதுண்டு. பெரும்பாலும் செத்துவிடும். ஒன்றிரண்டு மாட்டும். கண்மாய் கரை ஓரங்களில் இப்படி பருத்தி மாரை வைத்துக் கொண்டு வரிசையாக நிற்போம். தட்டான்களுக்கு அன்று கெட்ட காலம் தான்.

வீட்டுச் சுவற்றில் ஒரு தட்டான் ஒட்டி இருக்கும். இதைப் பிடிப்பது அவ்வளவு சுலபமல்ல. அதே போன்று ஊசித் தட்டானும் எளிதில் மாட்டாது. மழை பெய்து முடிந்த சாயங்கால வேளைகளில் இருட்டுவதற்கு சற்று முன்பாக, கண்ணாடித் தட்டானைப் பிடிக்கலாம். இதன் நிறம் மிகவும் அழகாக இருக்கும். சிறு சத்தம் கேட்டாலும் பறந்து விடும். பிடிப்பது மிகக் கடினம்.

மலைத் தட்டானைப் பிடிப்பவர் தான் எங்களில் மாவீரர். சிறு பையன்கள் பிடிக்க மாட்டார்கள். கடித்து விடும். காலையில் பிடித்தால் மாலை வரை கைகளில் பிடித்துக் கொண்டு திரிவார்கள். இதை வாலில் பிடிக்கக் கூடாது. இறக்கையைத் தான் பிடிக்க வேண்டும்.

அவை ஒரு வெள்ளந்தியான விளையாட்டுக் காலங்கள். பம்பரம் விளையாடித் திரிந்ததை சொல்ல மறந்து விட்டோமோ. நாங்களே மஞ்சனத்திக் கட்டைகளிலிருந்து செய்து கொள்வோம். மதுரையைச் சேர்ந்த செல்வம், அம்புரோஸ் எங்கள் ஊரில் இருந்தார்கள். செல்வம் மிக நேர்த்தியான பம்பரங்கள் செய்து கொடுப்பார். பம்பரத்தில் பெரிய ஆணியாகப் பார்த்து அடித்துக் கொள்வோம்.

பழைய வேட்டி சேலைகளைக் கிழித்து சாட்டையாகத் திரித்துக் கொள்வோம். இதற்கு நேரம் காலமெல்லாம் கிடையாது. எப்போதும் டவுசர் பையில் சாட்டை சுற்றிய மேனிக்கு பம்பரம் தயாராக இருக்கும். பையில் பம்பரம் வைத்திருந்து டீச்சரிடம் பல பையன்கள் மாட்டுவார்கள்.

இது தவிர பனை ஓலையில் கருவேல மரத்தின் முள்ளைத் குத்தி காற்றாடி செய்து, காற்றடிப்பதற்கு எதிர்ப்பக்கமாக ஓடிக் கொண்டே திரிந்தோம். இதில் டுர் என்ற சத்தம் வேறு. கடைக்குப் போகும் போதும், தேநீர் வாங்கப் போகும் போதும் இந்த டுர் தான். கடைக்குப் போகும் போது வீட்டில் சொல்லி விட்டதை மறக்காமல் இருப்பதற்காக சத்தமாகச் சொல்லிக் கொண்டே சென்றதும் உண்டு.

நொங்கு வண்டியும் ஓட்டியதுண்டு. கவட்டை வெட்டுவதற்காக அலைந்து திரிவார்கள். கொஞ்சம் மெனக்கெட்டால் கொல்லைகளில் கிடக்கும் விறகுகளில் கவட்டை விறகை தேடி எடுத்து விடலாம். சில பையன்கள் நான்கு நொங்கு கொண்ட உருளை வண்டியும் வைத்திருப்பார்கள். பனை மரத்தில் தங்கப்பாண்டி எளிதாக ஏறி நுங்கு வெட்டி விடுவார். பிஞ்சைக் காரர்கள் திட்டுவார்கள் என உடனே நொங்குக்

குலையை தூரமாக தூக்கிச் சென்று விடுவோம். வயிறு முட்ட நொங்கு தின்றதுண்டு. நொங்கு வண்டிக்கு பெரிய காய்களாகப் பார்த்து எடுத்து வருவோம்.

விஷேச வீடுகளில் இருக்கும் வாழை மரங்கள் எங்களிடம் சிக்கி நார் நாராகக் கிழிபடும். பையன்களை வாழை மட்டைகளில் உட்கார வைத்து இழுத்துத் திரிந்ததுண்டு. மயில் முட்டை, கதுவாளி முட்டைகளைத் தேடிப் பிடித்து அவித்துத் தின்றதெல்லாம் தனிக்கதை. சணல்களை வைத்து பேருந்து ஓட்டித் திரிந்தோம். நாயுருவி விதைகளை எச்சில் வைத்து வெடித்தோம். இப்படியாக எங்கள் விளையாட்டுகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

வானத்தில் இரவு நேரங்களில் செல்லும் விமான வெளிச்சங்களை பார்த்து கத்திக் கொண்டே திரிந்திருக்கிறோம். முதலில் பார்த்தவர்கள் மற்றவர்களுக்கு அடையாளம் காட்டுவதற்குள் போதுமென்றாகிவிடும். சும்மா சொல்லாதே எனச் சீண்டுவார்கள். சில முறை சந்திர சூரிய கிரகணங்களையும் கண்டு களித்திருக்கிறோம். வானவில்லை பார்க்க கண்மாய் கரைகளுக்கு படையெடுத்துக் கிளம்புவதும் அவ்வப்போது நடப்பதுதான்.

தேவர்களில், மேலத் தெருவை விட கீழத் தெருவில் ஆட்கள் அதிகமாக இருப்பார்கள். வீடுகளும் சின்னதாக இருக்கும். நல்ல மருதுத் தேவர் என்று இருந்தார். திருக்கணன் என்ற பெயரில் பலர் இருந்தார்கள். திருக்கண்ணன் என்பது தான் இப்படி மருவியது போலும். ரேஷன் கடையில் அரிசி நிறுத்தி போடுவதும் மண்ணெண்ணெய் ஊற்றுவதும் இரங்கநாதத் தேவர். பொன்னுச்சாமித் தேவர் கொண்டை போட்டிருப்பார். கொஞ்சம் குள்ளமாக இருப்பார். இவரது பையன் தான் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்த மலைராஜா. கோட்டைச்சாமி, மணிகண்டன் மற்றம் ஒரு பெண் பிள்ளையும் இருந்தார்கள். இவர்களுக்கு வடக்குக் கண்மாய் அருகே தோட்டம் இருந்தது.

எம்மோடு பள்ளியில் படித்த பையன்களில் தேவர் சமூகத்தவர் குறைவு தான். ஒன்றிரண்டு பேர் தான் படித்தார்கள். கண்ணனின் அண்ணன் மகாலிங்கம் அவர்கள் இராணுவத்தில் இருந்தார். அக்கா மாரியம்மாள். ஒரு தம்பியும் உண்டு.

தசரதத் தேவர் தான் தலையாரி. எல்லோரிடமும் அன்பாகப் பேசுவார். ஊரணி அழிந்து மீன் பிடிக்கும் காலங்களில் எல்லோரிடமும் தலையாரி பங்கு என்று மீன் வாங்கியது எமக்கு நினைவிருக்கிறது. இவரது பையன் இராமர். இப்போதும் எம்மைக் கண்டால் எப்படி இருக்கீங்க என நலம் விசாரிப்பார்.

கம்யூனிஸ்ட் இயக்கத்தில் இருக்கிறார். கருப்பையாத் தேவருக்கு செல்லத்துரை, திருக்கணன் என மகன்கள் இருந்தார்கள். இராமசாமித் தேவருக்கு நிறைய பையன்கள் இருப்பார்கள். கதிர்வேல் தேவர் மிதிவண்டி இல்லாமல் இருக்கமாட்டார். மனைவி சுப்புலெட்சமி. முருகன், செந்தில், தங்கம் என பையன்களும், சில பெண் பிள்ளைகளும் இருந்தார்கள்.

பெரிய ஆட்களெல்லாம் சட்டை போடாமல் இருப்பார்கள். வெளியூருக்கு போனால் தான் உண்டு. அப்பவும் சில பேர் போடமாட்டார்கள்.

தேவேந்திரர் கிணறு அருகே கருப்பசாமித் தேவர், மூக்கையாத் தேவர், அழகுத் தேவர் என்று குடி வந்தார்கள். இதில் அழகுத் தேவர் பேயோட்டுவார். சிறுவயதில் பல பேய்களை வேடிக்கை பார்த்ததுண்டு. கூனாசாரி உடுக்கை அடிப்பார். பின்னாட்களில் அருந்ததியர் தெருவில் முத்துமாரி என்பவரும் பேய் ஓட்டினார். இப்போது பேய்களெல்லாம் வேறெங்கோ ஓடி விட்டன. அதென்ன மாயமோ மந்திரமோ. படித்தவர்களை பேய் பிடிப்பதேயில்லை.

பேருந்து நிலையம் தாண்டி வடக்கேயும் தேவர் வீடுகள் சில இருந்தன. ஒத்த வீட்டு வெள்ளைச்சாமி தேவர் குறி சொல்வார். பேயோட்டுவது, முடியாதவர்களுக்கு திருநீறு பூசுவதும் உண்டு. யாம் ஒருமுறை முடியாமல் இருந்தபோது அம்மா இவரிடம் அழைத்துப் போனார். முத்துப் போட்டுப் பார்த்து திருநீறு பூசிவிட்டார். நல்ல மனிதர். இவரது பையன் பாண்டி. மகள் முனியம்மாள். இன்னொரு மகள் கோட்டை ஈஸ்வரி. அவர் கல்லூரியில் படிக்கும் போது எம்மைப் பார்த்தால் ஒரு சில வார்த்தைகள் பேசுவார்.

தவசி எங்களோடு மட்டைப் பந்து விளையாடுவார். எம்மீது நல்ல மரியாதை வைத்திருப்பார். இவரது அண்ணன் முனியசாமி அவர்கள் சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தில் வேலை பார்த்தார். இவர்களது வீடு அருகே இருந்த இன்னொரு பையனும் மட்டைப் பந்து விளையாட வருவார்.

முத்துபாக்கியத் தேவர் பேருந்து நிலையத்தில் எம்மைப் பார்த்தால் அருகே வந்து நல்லா இருக்கீங்களா தம்பி என்று அன்போடு கேட்பார். இவரது மகன்கள் தற்போது மளிகைக் கடைகள் வைத்திருக்கிறார்கள. முத்துச்சாமி தேவர் வீடும் அருகிலேயே இருந்தது.

கோடங்கி முத்துத்தேவர் வீடு அம்மா கோவில் அருகே இருந்தது. பண்டிகை காலங்களில் ஆட்டுக்கறி போடுவார். செவல்காட்டில் தோட்டம் இருந்தது. கிராம

நிர்வாக அலுவலராக இருந்த வீரபத்ரன் அவர்களும் வடக்கே புது வீடு கட்டி குடியிருக்கிறார். ஆன்மீக விசயங்களில் ஈடுபாடு கொண்டவர்.

எமது சிறு வயதில் ஒவ்வொரு தெருவிற்கும் தனித்தனி கிணறுகள் இருக்கும். அந்தந்த சாதிப்பெயரே கிணறுகளுக்கும். தேவேந்திரர் கிணறு, கிழக்குக் கண்மாய் அருகிலிருந்ததால் மழைக் காலங்களில் தண்ணீர் நிறம் மாறி கலங்கலாக இருக்கும். குடிப்பதற்கு நீர் இறைக்க மாட்டார்கள். ஆதிதிராவிடர் தெருவிலிருந்த அடிகுழாய் தண்ணீர் சுவையாக இருக்கும். இன்று போல் மேடான சாலை அப்போது இல்லை. மிகுந்த பள்ளமாகக் கிடந்தது. மழைக்காலங்களில் கிழக்குக் கண்மாய் தண்ணீர் எங்கள் வீடுவரை தேங்கி விடும். இங்கிருந்து இடுப்பளவு தண்ணீருக்குள் நடந்து ஆதிதிராவிடர் தெரு அடிகுழாய் வரை சென்று விடுவோம். வரும்போது சில நேரங்களில் இடுப்பளவு தண்ணீருக்குள் பானையை அமிழ்த்துத் தள்ளிக்கொண்டே எளிதாகக் கொண்டு வருவோம். அன்று சருகப்பானை என்ற பித்தளைப் பானைதான் இருக்கும். புளி, செங்கல் வைத்து விளக்குவார்கள். அதன்பின் சில்வர் பானை வந்தது. மழைக் காலத்தில் எங்கள் தெரு அருகேயிருக்கும் அடிகுழாய் தண்ணீருக்குள் மூழ்கி கிடக்கும். இந்த அடிகுழாய்கள் போடும் போது யாம் வேடிக்கை பார்த்திருக்கிறோம்.

எங்கள் தெருக்கிணற்றை தூர் வாரியதெல்லாம் எமக்கு நினைவிருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாகத் தண்ணீர் கீழே போய் பின்பு இல்லாமலே ஆகிவிட்டது. இன்று கிணறு இருந்த அடையாளமே இல்லை. மண்ணைப் போட்டு மூடியாயிற்று. இது போன்று தான் அருந்ததியர் மற்றும் ஆதிதிராவிடர் கிணறுகளும். இவர்கள் கிணறுகள் சிறியதான உறைக்கிணறுகள். அவரவர் தெருக்காரர்கள் தண்ணீர் இறைப்பார்கள். இதையும் மண் மூடிவிட்டது. எங்கள் வயதுக்காலங்களில் இவர்கள் கிணறுகளில் உட்கார்ந்து ஊர்க்கதைகள் பேசிக்கொண்டிருப்போம்.

பிள்ளையார் கோவில் அருகே பொதுக்கிணறு இருந்தது. அட்டவணை இனத்தவர் தண்ணீர் இறைக்க முடியாது. கிணற்றிலிருந்து சற்றுத் தள்ளி நின்று கொண்டே இருக்க வேண்டும். யாராவது ஓரிருவர் மனது வைத்து வாளியைத் தூரமாக தூக்கிப் பிடித்து தண்ணீர் ஊற்றுவார்கள். ஆதிதிராவிடர் கிணறு பழுதான சமயங்களில் யாம் சில முறை இங்கு சென்றிருக்கிறோம். அருகேயிருந்த அடிகுழாயிலும் சுவையான நீர் கிடைத்தது.

எங்களது வீடு அருகே முத்தாப்பாட்டி, உடையாப்பாட்டி என்று சகோதரிகள் இருந்தார்கள். உடையாப்பாட்டி மண்பானையோடு இங்கு காத்திருந்ததை யாம் பலமுறை கவனித்திருக்கிறோம்.

நாடார் தெருக்கிணறு பள்ளிக்கூட ஆலமரம் அருகே இருந்தது. ஆசாரி தெருக்காரர்கள் பெருமாள் கோவில் கிணற்றில் நீர் இறைப்பார்கள். நாயக்கருக்கு பேருந்து நிறுத்தம் அருகே தனிக்கிணறு.

பெரிய வீட்டுக் கிணற்றில் வேலையாட்கள் தண்ணீர் இறைப்பார்கள். ஒருமுறை மயிலும், மற்றொரு முறை ஆடும் இந்தக் கிணற்றுக்குள் விழுந்து வெளியில் தூக்குவதை ஊரே நின்று வேடிக்கை பார்த்தது. மயிலை தூக்குவதற்குள் மிகுந்த சிரமப்பட்டார்கள்.

எமது சிறுவயதில் நிறைய விவசாயக் கிணறுகள் வெட்டினார்கள். தேவேந்திரர் தெருக்காரர்கள் நிறையப் பேர் வேலை செய்தார்கள். மற்ற சாதிக்காரர்களும் இருந்தார்கள். குருசாமி நாடார் கிணறு, மேலத்தெரு பொன்னுசாமித் தேவர் கிணறு, முத்தூரணிச்சாமி கிணறு, லட்சுமண மாமா கிணறு என்று பல கிணறுகள் தோண்டியதை யாம் பார்த்திருக்கிறோம். கிணறு வெட்டு முடிந்தவுடன் கிடாவிருந்து வைப்பார்கள்.

முத்தூரணிச் சாமி என்பவர் பரளச்சிப் பக்கமிருக்கும் முத்தூரணி என்ற ஊரிலிருந்து வந்து எங்கள் தெரு சுடுகாட்டுப்பக்கம் நிலங்கள் வாங்கி கிணறு வெட்டினார். செழிப்பான தோட்டங்கள் உருவாக்கினார். புதிதாக வெட்டிய கிணற்றிலிருந்து தொட்டியில் தண்ணீர் கொட்டிக் கொண்டேயிருக்கும். குளிப்பதற்கும் சில நேரங்களில் குடிக்கத் தண்ணீர் எடுப்பதற்கும் யாம் இங்கே சென்றிருக்கிறோம்.

கிணறுகள் வெட்ட ஆரம்பித்ததிலிருந்து தண்ணீர் வரும்வரை நாங்கள் அதிசயமாகப் பார்த்துத் திரிந்தோம். எல்லாமே சதுரமான கிணறுகள். பெரும்பாலும் சரளைக் கற்களாக இருக்கும். வெட்டிய மண்ணை பக்கத்திலேயே குவிப்பார்கள். சிறு குன்றுகள் போன்று கிடக்கும். இதன் மீது சறுக்கி விளையாடுவதுண்டு. ஆழமாகத் தோண்டத் தோண்ட பாறைகள் வந்துவிடும். வெடி வைத்துத் தகர்ப்பார்கள். குருசாமி நாடார் கிணறு வெட்டும் போது வெடி வைப்பதை அருகிலிருந்து பார்த்திருக்கிறோம். வெடியை மிகவும் கவனமாக, பொறுமையாகக்

கையாள்வார்கள். பல மீட்டர் தூரத்திற்கு திரியை இழுத்திருப்பார்கள். டமார் எனும் வெடிச் சத்தம் காதைப் பிளக்கும்.

எல்லாக் கிணறுகளுக்கும் இறுதி வரை படிக்கட்டுகள் போகும். ஆப்பு வைத்து, சுற்றிலும் நின்று கொண்டு ஒருவர் பின் ஒருவராக சம்மட்டியால் சீராக அடிப்பார்கள். இதற்கு மிகுந்த வலிமை தேவைப்படும். பல குழந்தைகளை வைத்துக் கொண்டு, வயிற்றுப் பாட்டுக்கே சிரமப்பட்ட அந்த காலக்கட்டங்களில் எப்படித்தான் இது போன்ற கடினமான வேலைகளைச் செய்தார்களோ. சிலர் கடப்பாறையால் குத்திக் கொண்டும் நெம்பிக் கொண்டும் இருப்பார்கள். மண் அள்ளி விடுபவர்கள் இருப்பார்கள். பலபேர் படிக்கட்டுகளில் நின்று மாற்று முறையில் மண்ணை, பாறைகளைச் சுமப்பார்கள். ஒருவர் இன்னொருவரிடம் கொடுத்து விட்டு அவரிடம் கிடக்கும் காலிக் கூடையை வாங்கிக் கொள்வார். அவர் மற்றொருவரிடம் கொடுப்பார். கூடை போய் பின்னர் இரும்புத் தட்டு வந்தது. இப்படி அடி ஆத்திலிருந்து மளமளவென மண் மேலே வரும். காலையிலிருந்து மாலை வரை இப்படி படிக்கட்டுக்களில் ஏறியும் இறங்கியும் மண்ணைச் சுமந்தார்கள்.

ஒரு மணி நேரம் நின்று கொண்டு பாடம் சொல்லிக் கொடுப்பதற்கே எம்மைப் போன்றவர்களுக்கு கால் வலிக்கிறது. அதிலும் தேர்வு அறைக் கண்காணிப்பாளராகப் போனால் கொஞ்ச நேரம் கூட நிற்பதில்லை. படித்தால் உடல் வலிமையும் மனஉறுதியும் போய்விடுமோ?

கிணறு வெட்டும்போது கற்கள் தெறித்தோ, ஆப்பு அடிக்கும் போது கவனக்குறைவாகவோ அல்லது படிகளில் சுமப்பவர்களின் கூடைகளிலிருந்து கற்கள் விழுந்தோ சிலருக்குக காயம் பட்டுவிடும். காயம் பட்டால் மிகுந்த சிரமம். வேலை போய்விடும். மருத்துவச் செலவு வேறு. சிறிய காயமென்றால் பச்சிலைகளை வைத்து கட்டிக் கொள்வார்கள்.

ஓரளவிற்கு ஆழமாக வெட்டி முதன்முதலில் தண்ணீர் வருவதைப் பார்த்தவுடன் வேலை பார்ப்பவர்கள் முகத்தில் நிரம்ப மகிழ்ச்சி பொங்கும். கிணற்றின் சொந்தக்காரருக்கும்தான். கிணற்றில் தண்ணீர் ஊறுவதை ஊரெல்லாம் சொல்லுவார்கள். அதன் பின் கப்பி வைத்து தண்ணீரையும், மண்ணையும் அள்ள வேண்டும். வேலை கொஞ்சம் சுணங்கும். ஓரளவிற்குத் தண்ணீர் ஊறினால் நிறுத்திவிடுவார்கள்.

புதிய கிணறுகள் போக ஏற்கனவே இருக்கும் கிணறுகளை ஆழப்படுத்துவதும் நடந்தது. இப்படியே தோண்டித் தோண்டி அதளபாதாளத்திற்கு கிணறுகள் காட்சியளிக்கின்றன. சில கிணறுகளைப் பார்த்தால் தலை சுற்றும். எட்டிப் பார்ப்பதற்கே பயமாக இருக்கும்.

முன்னர் இருந்த பல கிணறுகள் இன்று தூர்ந்துவிட்டன. சில கிணறுகளில் இயந்திரத் துளை போட்டு அதனுள்ளே மோட்டார் வைத்து கிணற்றுக்குள் தண்ணீர் இறைக்கிறார்கள். இப்படியாக கிணறுகளில் தேங்கும் தண்ணீரை மற்றொரு மோட்டார் வைத்து வயல்களுக்குப் பாய்ச்சுகிறார்கள். பல நூறு அடிகள் துளை போட்டாலும் தண்ணீர் கிடைப்பது அரிது தான். விவசாயம் மட்டுமே தெரிந்தவர்களாகையால் வேறு வழியில்லாமல் தொடர்வதாகத் தெரிகிறது.

முன்பெல்லாம் தோட்டங்களில் நாட்டு மிளகாய் போடுவார்கள். அதனூடே சின்ன வெங்காயம் பயிர் செய்வார்கள். கடலையோடு தட்டைப்பயிறு வைப்பார்கள். பெரிய பெரிய அகத்தி மரங்கள் வளர்ந்து நிற்கும். தென்னை மரங்களும் நிறையக் காணப்படும். காய்கறிகள் நிச்சயமாக இருக்கும். பெரும்பாலும் கத்திரிக்காய், வெண்டைக்காய், சீனியாரக்காய், தக்காளி போன்றவை. சில பேர் சீமைப்பருத்தி போடுவார்கள். ஆமணக்குச் செடிகள் பெரியதாக வளர்ந்திருக்கும். தோட்டங்களின் வரப்புகளில் புற்கள் அறுத்து மாடுகளுக்குப் போடுவார்கள்.

ஓரளவிற்கு யாம் பெரிய பையனாக இருந்த போது தான் கரும்பு வந்தது. கரும்போடு சேர்ந்து தீய் எறும்பும் வந்து சேர்ந்தது. கடி வாங்கினால் கொஞ்ச நேரத்திற்கு கால் தீயாக எரியும். சிவப்பாக, சிற்றெரும்பை விட கொஞ்சம் பெரியதாக இருக்கும்.

ஆரம்ப காலங்களில் கரும்பை வெட்டத் தெரியாமல் எங்கள் தெருக்காரர்கள் படாதபாடுபட்டார்கள். விழுப்புரம், கள்ளக்குறிச்சி பக்கமிருந்து கரும்பு வெட்ட ஆட்கள் வந்தார்கள். இவர்களிடமிருந்து பழகிக் கொண்டபின் பிரமாதமாக வெட்டினார்கள். கரும்பு சோகை குத்துவதற்குப் பலரும் பயந்தார்கள். கூலி அதிகம் கொடுத்ததால் நாளடைவில் அதுவும் பழகிவிட்டது. ஊருக்கு வரும்போது பழைய கால் சட்டை இருந்தால் கொண்டு வாய்யா என்று அம்மா சொல்லுவார். யாராவது கேட்டிருப்பார்கள். பள்ளிக்கூடம் போகாதவர்கள் பேண்ட்டும், முழுக்கைச் சட்டையும் அணிந்து கரும்பு வெட்டச் சென்றது கண்கொள்ளாக் காட்சி.

ஆண்கள் வெட்டிப் போடும் கரும்பை பெண்கள் சிறு சிறு கட்டுகளாகக் கட்டுவார்கள். ஏற்று வாகனம் வந்து ஏற்றிச் செல்வதற்கு தோதாக ஒரு இடத்தில் அடுக்கி வைப்பார்கள். கரும்பு வெட்டும் போது நிறையப் பாம்புகளை எதிர் கொள்ள வேண்டியதிருக்கும்.

ஏற்று வாகனத்தில் கரும்பு ஏற்றுவது மிகவும் சிரமமானது. பெரும்பாலும் பகலில் வாகனம் வராது. நடுச் சாமத்தில் கூட வரும். எல்லோரும் போக வேண்டும். வேலை முடியும் வரை வீட்டில் பிள்ளைகள் தனியாகத் தூங்கும். யாம் கவனித்தவரை மிகவும் நேர்த்தியாக லாரிகளில் ஏற்றுவார்கள். அமிர்தராஜ், பால்பாண்டி, முத்துப்பாண்டி போன்றவர்கள் இதில் திறமைசாலிகள்.

எங்கள் ஊர் செவல் காடுகளைப் பற்றி நாள் முழுக்கப் பேசலாம். செக்கச் செவேல் என செழிப்பான செம்மண் பூமி. அதற்கு முன் எங்கள் ஊர் ஆசாரிமார் தெருவை பற்றிச் சொல்லட்டுமா.

ஆசாரியை நாங்கள் அப்புச்சி என்றுதான் அழைப்போம். பூணூல் போட்டிருப்பார்கள். வினை தீர்த்தான் ஆசாரி சொல் வழக்கில் வினயத்தப்புச்சி. வினை தீர்த்த அய்யனார் குலதெய்வம் போலும். சுப காரியங்களுக்கு நாள் நேரம் குறித்துக் கொடுப்பார். வினயத்தப்புச்சியிடம் சமீபத்தில் ஊரின் பெருமாள் கோவிலைப் பற்றிக் கேட்டபோது, எம்மை அருகே உட்கார வைத்து மணிக்கணக்காகப் பேசினார். சிறப்பான அப்புச்சி. இவரது மகன் முத்துசாமி ஆசாரிதான் சமீபத்தில் கட்டிய எங்கள் வீட்டிற்கு தச்சு வேலைகள் பார்த்தார். நன்றாகச் செய்திருக்கிறார். இவரது தம்பி கருப்பசாமி எமது பள்ளித்தோழர். பாதியிலேயே நின்று விட்டார். முன்பு ஓட்டு வீட்டின் கூரைக்கு பனைமரைக் கட்டைகள் பயன்படுத்துவார்கள். அதன் சிம்புகள் நீக்கி, ரீப்பர் கட்டைகள் அடித்து ஓடு போடும் வரை அப்புச்சிகளின் கடின உழைப்பு தேவைப்படும்.

பாலப்புச்சி என்று இருந்தார். வீட்டின் முன் நிறைய மரங்கள் குவிந்து கிடக்கும். இவரது மகன் முனியாண்டி ஆசாரி தச்சு வேலையைத் தொடர்கிறார். முனியாண்டி அப்புச்சி நல்ல மனிதர். எல்லோரிடமும் அன்பாகப் பேசுவார். இவரது மனைவி யாம் களையெடுக்கச் சொல்லும் போது பார்த்தால் லீவுக்கு வந்த பிள்ளைய இப்படியா காட்டுக்கு கூட்டிட்டு வர்றது என்று அம்மாவைச் செல்லமாகக் கோவிப்பார். முனியாண்டி அப்புச்சி பையன்கள் அப்போதே பெரியவர்களாக இருப்பார்கள். பெங்களூரில் இருந்ததாக ஞாபகம்.

சாம்பல் ஆசாரியும் கூன் ஆசாரியும் நண்பர்களாக இருப்பார்கள். உண்மையான பெயர் தெரியவில்லை. ஊரணியின் அருகே டேராவில் கொல்லம் பட்டறை வைத்திருந்தார்கள். குடலாசாரி உயரமாக, சட்டை போடாமல் இருப்பார். சத்தமாகப் பேசுவார். பேசுவதே சண்டை போடுவது போல் இருக்கும். எல்லோரையும் மரியாதையோடு பேசுவார். கொத்துவான்களுக்கு கனைகள் செய்து கொடுப்பார்.

டேராவில் இராமநாதபுரம் ராஜா வந்தால் தங்குவார் என்று சொல்வார்கள். சாமிமார் வீட்டிலிருந்து சாப்பாடு போகுமாம். எமக்குத் தெரிந்தே சில கட்டிடங்கள் இருந்தன. கொஞ்ச காலம் பள்ளிக்கூடமாகவும் இருந்திருக்கிறது. பக்கத்திலேயே பெரிய ஆலமரம் இருந்தது. கன்றுகள் போட்டால் அவற்றின் நஞ்சுக் கொடியை ஓலைப்பெட்டியில் வைத்து ஆலமரத்தின் மேல் கட்டி வைத்துவிடுவார்கள். நிறையப் பெட்டிகள் இப்படி தொங்கிக் கொண்டிருக்கும். இந்த ஆலமரம் எமது தாத்தா காலத்தில் வைத்தார்களாம். சில வருடங்களுக்கு முன் சூறாவளிக்குச் சரிந்து தற்போது மீண்டும் வளர்ந்து வருகிறது.

ஊரணிக்கு மீன் பிடிக்கப் போகும்போது பட்டறையில் சுறுசுறுப்பாக வேலைகள் நடப்பதைக் கவனித்திருக்கிறோம். பட்டறை அருகே இருந்த ஒரு குப்பையில் தோண்டினால் பெரிய பெரிய மண்புழுக்கள் கிடைக்கும். பக்கத்திலேயே கொடிக்காப் புளி மரம் இருந்தது. கல்லை விட்டு எறிந்தே கொடிக்காப் புளியை பறித்து விடுவோம்.

கடப்பாறையை அடுப்பில் வைத்து கைத்துருத்தி மூலம் காற்றடித்து எரிப்பார்கள். மூட்டம் போட்ட கரியை எடுத்து ஓயாமல் போட்டுக் கொண்டே இருப்பார்கள். அவ்வப்போது இரும்பை வெளியே எடுத்து பதமும் பார்த்துக் கொள்வார்கள். சூடேற்றி குறடு மூலம் பிடித்து உலைக்கல்லில் வைத்து சம்மட்டியால் நங்நங்கென்று தீப்பொறி பறக்க அடிப்பார்கள். சிறுவர்கள் என்பதால் துருத்தியை வேடிக்கை பார்த்து நிற்போம். தள்ளி நின்று வேடிக்கை பார்க்கச் சொல்வார்கள்.

பெரிய இரும்பின் மீது சம்மட்டியால் மாற்றி மாற்றி அடிப்பார்கள். நுனியில் இரும்பாக இல்லாமல் கங்கு போன்று சிவப்பாக இருக்கும். ஒருவர் அடிக்கும்போது மற்றவர் இடுக்கி வைத்துப் பிடித்துக் கொண்டு மாற்றி மாற்றிக் காண்பிப்பார். இப்படி ஆப்பு, கடப்பாறை எல்லாம் கூராக்குவார்கள். மாட்டு வண்டிச் சக்கரத்தின் இரும்புப்

பட்டையை கூலம் போட்டு எரிப்பார்கள். வேலை முடிந்தபின் சில பேர் வண்டிச் சக்கரத்தை உருட்டிக் கொண்டே செல்வார்கள்.

பலரும் அருவாமனை, களையெடுக்கப் பயன்படும் கொத்துவான், கதிரறுவாள் போன்றவற்றிற்கு பட்டை போடக் கொடுப்பார்கள். கொத்துவான்களுக்கு பூன் போட்டும் கொடுப்பார்கள். சிறு வேலைகளுக்கு கூலி வாங்க மாட்டார்கள். நெல், கம்பு போன்ற தானியங்களின் அறுவடையின் போது களங்களுக்கு வந்து கொடுப்பதை வாங்கிக் கொள்வார்கள். ஆசாரிகளின் அடுத்த தலைமுறையினர் பலரும் பெங்களூர் சென்று வேலை பார்த்தார்கள்.

சங்கரலிங்க அப்புச்சியும் அனந்தன் ஐயங்காரும் நெருங்கிய நண்பர்களாக இருப்பார்கள். அனந்தன் ஐயங்கார் எமக்கு ஜாதகம் எழுதிக் கொடுத்திருக்கிறார். ஜாதகத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் அழகான கோலங்கள் போட்டிருக்கிறார்கள். இந்த அளவிற்கான நேர்த்தியும் அக்கறையும் அவர்கள் காலத்தோடு முடிந்துவிட்டது.

அனந்தன் ஐயங்காரின் பூர்வீகம் தெரியவில்லை. இவரது மகன் ஹிப்பி டாக்டர். பார்ப்பதற்கு கமல்ஹாசன் போன்று இருப்பார். நிறைய முடி வளர்த்திருப்பார். மணிச்சாமி பெண்ணைக் கட்டி இருந்தார். இவரது அம்மா கிண்ணங்களை வைத்து இசைக்கும் ஜலதரங்கம் இசையைக் கற்றவர். இவர்கள் நாடார் தெருவில் அனந்தம்மாள் வீட்டில் இருந்தார்கள். ஜலதரங்கம் இசைப்பதை சிலமுறை யாம் பார்த்திருக்கிறோம். வானொலியில்கூட இவரது இசை நிகழ்ச்சிகள் நடந்ததாகச் சொல்வார்கள். ஹிப்பி டாக்டர் தங்கை சீதா மிகவும் அழகாக இருப்பார். நீண்ட காலமாக திருமணம் நடைபெறாமல் இருந்தது. வெங்கடேஷ் என ஒரு தம்பியும் இருந்தார்.

கடைகார நாடார்களின் அம்மா இறுதி ஊர்வலத்தின் போது வானவெடி போட்டார்கள். வசதியானவர்களுக்கு காசுகள், வாழைப்பழம், சேவு, சக்கரைக்கட்டி போன்றவற்றை மாடி வீடுகளிலிருந்து போடுவார்கள். போட்டிப் போட்டுக் கொண்டு மக்கள் இதைப் பிடிப்பார்கள். சிறுவர்களான நாங்களும் இப்படி வெல்லக்கட்டிகளைப் பிடித்துக் கொண்டிருந்தோம். இந்த வெல்லக்கட்டி என்பது சிறிய அச்சு வெல்லம். கேழ்வரகுக் கூழ், கம்பங்கூழ், பழைய கஞ்சி இதற்கெல்லாம் சிறந்த வெஞ்சனம் இது தான். இதைக் கடித்துக் கொண்டே சிறுவர்கள் கூழ் குடிப்பார்கள். சும்மாவே

கடையில் வாங்கித் திண்பதுண்டு. பொட்டுக்கடலையோடு தின்பதற்கும் சுவையாக இருக்கும்.

பொதுவாக வானவெடியின் கம்பை குளிர்பான பாட்டிலுக்குள்ளே வைத்து சற்று மேலே தூக்கி திரியைப் பற்ற வைத்தால் சர்ரென்று மேலே போய் சத்தமாக வெடிக்கும். அன்று ஏனோ தரையில் மண்ணைக் கூட்டி அதில் ஒருவர் வெடி வெடித்தார். இத்தனைக்கும் நல்ல கூட்டம் வேறு. பெரியவர்கள் வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே எங்கள் தெருவைச் சேர்ந்த வழிவிட்டான் அவர்கள் பெண் பரஞ்சோதி வயிற்றில் முட்டி வெடித்து விட்டது. எமது உறவினர் என்பதால் அந்தப் பெண் கத்துவதைப் பார்த்து நாங்களும் அழுது கொண்டு திரிந்தோம். பிழைப்பது அரிது என்று பேசினார்கள். பரஞ்சோதியும் கத்தி அழுது கொண்டிருந்தார். ஹிப்பி டாக்டர் தான் மிகவும் சாமர்த்தியமாக இந்தப் பெண்ணைக் காப்பாற்றினார். புண் ஆறுவதற்கு நீண்ட நாட்களானது.

வெள்ளைச்சாமி அப்புச்சி நேர்த்தியாக மரவேலைகள் பார்ப்பார். பேசிக் கொண்டே வேலை செய்வார். இவரது பையன்கள் முருகன், மாதவன் கூடவே வேலை செய்வார்கள். மாதவன் எம்மோடு நட்பாக இருப்பார். எல்லோருடனும் சகஜமாகப் பேசுவார். அருப்புக்கோட்டை போன்ற வெளியூர்களில் வேலை பார்ப்பார்கள். இவர்கள் கார வீடு கட்டும் போது மாலை வேளைகளில் எமது அப்பாவைப் பார்க்கச் செல்வதுண்டு. கடுக்காய், கருப்பட்டி அண்டாவில் ஊற வைத்திருந்ததை யாம் பார்த்திருக்கிறோம். மேற்கூரைக்கு மரச்சட்டங்களை வைத்து அதன் மீது நெருக்கமாக சிறு அளவிலான ஓடுகள் வைப்பார்கள். இந்த ஓடுகளை இணைப்பதற்குச் செய்யும் சிறப்பான சாந்து இது.

இவரது அக்கா பையன் மாரிமுத்து எங்களுடன் எட்டாவது வரை படித்தார். திரைப்படங்கள் பற்றி நிறையப் பேசுவார். மாரிமுத்துவின் அப்பா பெருமாள் கோவில் அருகே இருக்கும் இடத்தில் திரைப்படம் போட்டார். கொட்டகை போன்று சுற்றிலும் மறைத்து காசு வசூலித்தார். நிறையப் பேர் படம் பார்த்தார்கள்.

தாசில்தார் வீடு பெரியதாக இருக்கும். தெல்லி கண்மாய் அருகே கிணறு இருந்தது. தெல்லி கண்மாய் என்ற பெயர் எப்படி வந்ததென்று தெரியவில்லை. பட்டாளத்தப்புச்சிக்கு மொளக்கொட்டு திண்ணை அருகே வீடு. கைப்பனியனோடு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருப்பார். மேற்குக் கண்மாய் போகும் வழியில் இவருக்குச் சொந்தமான வேலிக்காடு இருக்கிறது. பெரிய குட்டையும் இருந்ததால்

ஆண்கள் இந்த பக்கம் ஒதுங்குவார்கள். அப்படியே பக்கத்துக் கிணறுகளில் குளித்தும் விடலாம்.

வேகாவின் சொந்தக்காரர் கிருஷ்ணராஜ் என்பவரைப் பற்றி நிறையச் சொல்லுவார்கள். எங்கள் ஊர் பள்ளியில் படித்து சிறு வயதிலேயே பெங்களூருக்கு வேலைக்குப் போய் விட்டாராம். இவரைப் போல் நன்கு படித்து வேலைக்குப் போக வேண்டும் எனப் பெரியவர்கள் அறிவுறுத்துவார்கள். எங்களின் சிறு வயது ரோல் மாடல் எனில் மிகையாகாது. ஆங்கிலத்தில் சொல்லிவிட்டேமோ. முன் மாதிரி. சரி தானே. பள்ளிக்கூட ஆலமரத்தில் இவர் படிப்பதை யாம் பார்த்திருக்கிறோம். அமைதியாக இருப்பார். இவரது அம்மா எங்கள் ஊரில் இருந்தார்.

நாங்கள் பாவைக் கூத்தை எப்படி ரசித்தோம் தெரியுமா. நாங்களே அரங்கேற்றமும் பண்ணினோம் என்பதை நீங்கள் நம்பித்தான் ஆக வேண்டும்.

ஊருக்கு பாவைக் கூத்து வந்துவிட்டது என்றாலே எங்களைப் போன்ற சிறுவர்களுக்கு மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டோடும். ஒவ்வொரு நாளும் மாட்டு வண்டிகளில் வந்து அன்றைக்கு என்ன நிகழ்ச்சியென்று ஒலிபெருக்கியில் அறிவிப்புச் செய்துக் கொண்டே செல்வார்கள். வண்டி பின்னாடியே ஓடித்திரிவோம். அதே போல் திரைப்பட சுவரொட்டிகள் ஒட்ட வந்தாலும் ஓட்டம் நிற்காது. சில பையன்கள் ஒட்டி விட்டுச் சென்ற உடனேயே லாகவகமாகக் கிழித்து வீட்டுக்கு எடுத்துச் சென்று விடுவார்கள். சுவரொட்டியை வைத்துக் கொண்டு வசனம் பேசித் திரிவதும் நடக்கும்.

பாவைக்கூத்து பத்து நாட்கள் நடைபெறும். பத்தாவது நாள் இராமருக்கு பட்டாபிஷேகம். அன்று மட்டும் திறந்த வெளியில் நடக்கும். மற்ற நாட்களுக்கு சுற்றிலும் துணியால் மறைத்து விடுவார்கள். இருபத்தி ஐந்து காசு கட்டணம். சிறுவர்கள் எப்படியாவது அழுது அடம்பிடித்து வாங்கி விடுவார்கள். பல வீடுகளில் காசு கொடுக்க மாட்டார்கள். சிறுவர்கள் கூத்து நடக்கும் இடத்தை சுற்றிச் சுற்றி வருவார்கள். நிகழ்ச்சி ஆரம்பித்த சிறிது நேரத்தில் சில சிறுவர்கள் நைசாக துணியை விலக்கி உள்ளே நுழைவார்கள். பெரும்பாலும் மாட்டிக் கொள்வார்கள். சில பேர் தப்பிப்பதும் உண்டு.

ஊரின் பேருந்து நிறுத்தம் அருகே, இன்று இருக்கும் நாயக்கர்கள் கலையரங்கம் அருகே தான் தினமும் பாவைக்கூத்து நடக்கும். பெரிய, பெரிய தோல்

பொம்மைகள் வைத்திருப்பார்கள். மதியம் வெயிலில் காயப்போட்டு வைப்பார்கள். அதைப் பார்ப்பதற்கென்றே போவதும் உண்டு.

உச்சிக் குடும்பன், உளுவத் தலையன் என இரு சிரிப்புக் கதாபாத்திரங்களை வைத்துக் கொண்டு ஊர்க்காரர்கள் எல்லோரையும் சிரிக்க வைப்பார்கள். அன்றைய மக்களும் கள்ளம் கபடமில்லாத மக்களென்பதால் விழுந்து விழுந்து சிரிப்பார்கள். சில பேர் பக்கத்தில் உட்கார்ந்திருப்பவர்களை மொத்திக் கொண்டே சிரிப்பார்கள். விசிலெல்லாம் தூள் பறக்கும். அன்று நடந்த கதைகளை காடுகரையெல்லாம் பேசித்திரிவார்கள். மயில் ராவணன் என்ற கதாபாத்திரத்தை பிரமாதமாகச் சித்தரித்திருப்பார்கள்.

பாவைக்கூத்தின் பேச்சும், பாட்டும் அற்புதமாக இருக்கும். மிருதங்க இசையும் மனதைக் கவரும். நிகழ்ச்சி முடிந்து வீட்டிற்கு வருவதற்கு மனசே வராது. சிறிய திரையாகத் தான் அமைத்திருப்பார்கள். பளிச்சென்று வெளிச்சம் இருக்கும். ஒருவரையொருவர் அடிக்கும் போது இரண்டு பொம்மைகளையும் சொத் சொத்தென்று அடிப்பார்கள். அடிக்கடி படத்தை திருப்புவார்கள். அதே போன்று கீழே குனிவதும் அடிக்கடி நிகழும். பாவைகளும் அழகிய சித்திரங்களாக இருக்கும். இராமர் மற்றும் பத்துத் தலை ராவணன் தத்ரூபமாக இருப்பார்கள். ஒவ்வொரு நாள் முடியும் போதும் அடுத்த நாள் என்ன நிகழ்ச்சி என்பதை கோமாளிகள் சொல்வார்கள்.

பத்தாவது நாள் ஊரின் சார்பாக சிறப்புச் செய்வார்கள். பட்டாபிஷேகம் முடிந்த அன்று மழை பெய்யும் என்பது மக்களின் நம்பிக்கை. அன்று கட்டணம் இல்லையென்பதால் அதிகமான கூட்டம் கூடும்.

ஒருமுறை யாம், மணிகண்டன், தங்கப்பாண்டி போன்றவர்கள் இருளப் பெரியப்பா வீடு அருகே சிறு கொட்டகை போட்டு வீட்டிலிருந்த வேட்டியைக் கொண்டு போய் திரையைக் கட்டி விட்டோம். அதற்கு முன்பே பனை ஓலைகளையும், நோட்டு அட்டைகளையும் வெட்டி பொம்மை செய்து கொண்டோம். வெளிச்சத்திற்கு வீட்டிலிருந்த விளக்கு. அவர்களைப் போன்றே சாயந்தரம் தெரு முழுக்க பாவைக் கூத்து நடப்பதை அறிவிப்பும் செய்தாயிற்று. சில பெரியவர்கள் கூட வந்துவிட்டார்கள். பாவைக்கூத்தின் பல வசனங்களை அப்படியே சொல்லி ஏதோ ஒப்பேற்றி விட்டோம். இப்படி பாவைக்கூத்தின் மீது ஆவலாய்த் திரிந்த காலங்கள் அவை.

ஊருக்கு வடக்கே செவல்காடுகள் இருக்கின்றன. நல்ல சமதளமான பூமி. ஊருக்கு வரும் பேருந்துகள் இந்தக் காடுகளின் வழியாகவே பயணமாகும். குறிப்பிட்ட நேரம் தவிர ஊருக்குப் பேருந்து வராது. இப்போதும் அப்படித்தான். முன்பு செவல்காடு பாதை வழியாகத் தான் அருப்புக்கோட்டை சாலைக்குப் போவோம். சிறிய ஓடை ஒன்று தொடர்ந்து வரும். வழியில் செண்பகராமத் தலவர் தோட்டமும், அய்யாச்சாமி நாயக்கர் தோட்டமும் இருக்கும். பேருந்து நிறுத்தத்தின் பெயர் தொப்பலாக்கரை பாதை. பொதுத் தேர்வுகளுக்குப் போகும் சமயங்களில் படித்துக் கொண்டே சென்றிருக்கிறோம். கையைக் காட்டினால் பேருந்தை நிறுத்துவார்கள். இன்று இந்த நிறுத்தத்தில் பேருந்து நிற்காது.

காலையில் ஆறே முக்காலுக்கு வடக்கு நத்தத்திலிருந்து சந்திரா வரும். அப்போது சந்திரா ஒரே நிறுவனமாக இருந்தது. தற்போதோ பல பெயர்கள். பருத்தி, மல்லி, காய்கறிகள், மிளகாய் வற்றல் போன்ற பொருட்களை பேருந்தின் கூரையில் ஏற்றுவார்கள். நொடியில் சரசரவென்று ஏற்றிவிடுவார்கள். பூக்கள் என்றால் பின் இருக்கையின் அருகே போடுவார்கள். பூவை சாக்குப்பையில் கட்டி எந்தக் கடைக்கு அனுப்புகிறார்களோ அவர்களின் பெயரையோ அல்லது கடை அட்டையையோ இணைத்துக் கட்டி விடுவார்கள். அருப்புக்கோட்டை சென்றபின் அந்தந்த கடைக்காரர்கள் வந்து எடுத்துக் கொள்வார்கள்.

சில நேரங்களில் பேருந்து கிளம்பும் போது தான் தலைச் சுமையாகவோ, மிதிவண்டியிலோ மூட்டைகளைக் கொண்டுவருவார்கள். சத்தம் போட்டோ, பேருந்தைத் தட்டியோ நிறுத்தி விடுவார்கள். இது போன்று வழியெங்கும் ஏற்றுவார்கள்.

பூக்களில் மல்லிகையும், கனகாம்பரமும் இருக்கும். கவுன்சிலர் குருசாமி நாடார் தோட்டத்தில் மல்லிகை பறிக்க சிறு வயதுக்காரர்கள் காலையும் மாலையும் போவார்கள். எமது அண்ணன் தோட்டத்தில் இரண்டும் இருந்தது. நிலக்கோட்டைப் பக்கம் போய் கனகாம்பர விதை வாங்கி வந்தது எமக்கு நினைவிருக்கிறது. முத்துக்கிருஷ்ணன் முக்கிய சாலைக்கு சென்று பூக்களை ஏற்றிவிட்டு வருவார். இரண்டாவது பேருந்தில் கூட்டம் அதிகமாக இருக்கும் என்பதால் வெளியூருக்கு வேலைக்குச் செல்பவர்கள் மண் வெட்டி, தூக்குச் சட்டி, வெற்றிலை சகிதம் முதல் பேருந்திலேயே கிளம்பி விடுவார்கள்.

ஏழு மணிக்கு பெருநாழியிலிருந்து ஸ்ரீராம் வரும். பெருநாழி, சாயல்குடிக்கு அடிக்கடி பேருந்து இல்லையென்பதால் இந்த வழியாக வந்து செல்லும் பேருந்துகளில் உட்காருவதற்கு இடம் கிடைப்பது அரிது. வயதானவர்கள் முதல் பேருந்திலேயே சென்று விடுவார்கள். பாரம் ஏற்றுவதும் கடினம் தான். அவசரப்படுத்துவார்கள். பள்ளிகளுக்கு, கல்லூரிகளுக்குச் செல்பவர்களுக்கு இது தான் வரப்பிரசாதமாக இருக்கும். . மாணவர்கள் சீக்கிரமே செல்வதால் பள்ளி, கல்லூரிகளில் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டும். பெரும்பாலும் காலையில் சாப்பிட மாட்டார்கள். இதை தவறவிட்டால் முக்கியச் சாலைக்கு நடக்க வேண்டும்.

எமது அப்பா காலத்தில் ஊருக்குள் பேருந்து வராதாம். இரண்டு கிலோ மீட்டர் நடந்து முக்கியச் சாலைக்கு செல்ல வேண்டுமாம். பேருந்தின் முன்பக்கம் கரியைப் போட்டு எரிப்பார்களாம். அடிக்கடி நின்று விடுவதும் உண்டாம். இறங்கித் தள்ளிவிட வேண்டுமாம்.

பருத்தி, மல்லி, கம்பு போன்றவற்றை மாட்டு வண்டிகளில் ஏற்றி விளாத்திகுளம், புதூர் போன்ற ஊர்களுக்குக் கொண்டு செல்வார்கள். இது இரவுப் பயணமாக இருக்கும். வண்டியை அனுப்பி விட்டு மறுநாள் பேருந்தில் செல்பவர்களும் உண்டு. நல்ல விலைக்கு விற்றால் நிறையத் தின்பண்டங்கள் வாங்கி வருவார்கள். அதன் பின்னர் விருதுநகர், சாத்தூர் என்று கொண்டு போனார்கள். தற்போது அவர்களே வந்து வாங்கிக் கொள்கிறார்கள். விவசாயிகள் மீது அவ்வளவு அக்கறை. நாட்டின் முதுகெலும்பாயிற்றே. அக்கறை இல்லாமல் இருக்க முடியுமா.

காலையில் செல்லும் முதல் பேருந்து அருப்புக்கோட்டை சென்று எட்டு இருபதுக்கு அங்கிருந்து கிளம்பும். ஊருக்கு ஒன்பது மணிக்கு வரும். ஆசிரியர்கள் வருவார்கள். ஊருக்கு செய்தித் தாள்களும் இந்தப் பேருந்தில் தான் வரும். மாணவர்கள் காத்திருந்து வாங்கிச் செல்வார்கள்.

அடுத்து பத்தரை பேருந்து. இது பெருநாழியிலிருந்து மதுரை செல்லும் பேருந்து. ஏற்கனவே நிறைந்து வரும் பேருந்தில் எங்கள் ஊரிலிருந்து குறைந்தது இருபது முப்பது பேராவது ஏறுவார்கள். நிற்பதற்கே இடம் கொள்ளாது. பல நேரங்களில் கூரைப் பயணம். யாம் சில முறை கூரையில் அமர்ந்து சென்றிருக்கிறோம். அருப்புக்கோட்டை எல்லையில் இறங்கச் சொல்வார்கள். ஆஸ்பத்திரிக்கு இந்தப் பேருந்தில்தான் செல்வார்கள்.

மதியம் ஒரு மணிக்கு அருப்புக்கோட்டையிலிருந்து அடுத்த பேருந்து. சாயல்குடிக்குச் செல்லும் இந்தப் பேருந்து எங்கள் ஊருக்கு இரண்டு மணிக்கு வரும். திமுதிமுயென ஊர்க்காரர்கள் இறங்குவார்கள். எல்லோர் கையிலும் தின்பண்டப் பைகள் இருக்கும். பேருந்தே வெறிச்சோடி விடும். ஊரில் கடை வைத்திருப்பவர்கள் இதில் தான் சரக்கு ஏற்றி வருவார்கள். சரக்கு இறக்கும் வரை பேருந்து நிற்கும்.

இரண்டேகால் மணிக்கு பெருநாழியிலிருந்து விருதுநகர் செல்லும் பேருந்து ஊருக்குள் வரும். களையெடுப்பவர்கள் இந்தப் பேருந்துகளை கவனித்துக் கொண்டே இருப்பார்கள். ஓட்டுனர்களும் பேருந்து வந்து செல்லும் போது மறக்காமல் சத்தமாக ஒலி எழுப்புவார்கள். ஒண்ணே முக்கால் போய்டுச்சு, ரெண்டரை வந்திருச்சு என நேரக்கணக்கு வைத்திருப்பார்கள். பத்தரை பேருந்து போய்விட்டால் மதியச் சாப்பாடு. ரெண்டரை போய் கொஞ்ச நேரத்தில் வீட்டுக்கு.

நான்கு இருபதுக்கு கமுதியிருந்து எஸ்.ஏ.ரோடுவேய்ஸ் வரும். அருப்புக்கோட்டை செட்டியார்களும், ரெட்டியார்களும் பெருமளவில் பள்ளி ஆசிரியர்களாக இருப்பார்கள். பள்ளி தொடர்பாக பேசிக் கொண்டும் கிண்டலடித்துக் கொண்டும் செல்வார்கள். சில நேரங்களில் பரளச்சி ஆசிரியர்கள் எம்மைப் பார்த்தால் எப்படி படிக்கிறே என்று அன்பாக விசாரிப்பார்கள். செவ்வாய்கிழமை கமுதியில் சந்தை என்பதால் அன்று மட்டும் கொஞ்சம் தாமதமாக வரும். இதற்குப் பின் அருப்புக்கோட்டை செல்வதற்கு ஊருக்குள் பேருந்து வராது.

அருப்புக்கோட்டையில் ஒரு மணி பேருந்தை தவறிவிட்டால் ஐந்து நாற்பது வரை பேருந்து நிறுத்தத்திலேயே காத்திருக்க வேண்டும். இது கமுதி செல்லும் பேருந்து. பல ஊர்களை சுற்றிக் கொண்டு கமுதி செல்லும். அங்கிருந்து வடக்கு நத்தம் வந்து அங்கேயே இரவு தங்கும். பின் முதல் பேருந்தாக இதுவே காலையில் வரும். கல்லூரி காலங்களில் யாம் ஒரு மணி பேருந்தைத் தவறவிட்டால் தமிழ்மணி தியேட்டருக்கோ கோமதி தியேட்டருக்கோ படம் பார்க்கச் சென்று விடுவோம். படம் முடிவதற்கு சற்று முன்பே வந்தால் மாலைப் பேருந்து தயாராக இருக்கும். என்ன ஒன்று. உச்ச கட்டக் காட்சிகளை மட்டும் பார்க்க முடியாது.

ஐந்து நாற்பதுக்கு எடுக்கும் பேருந்து ஆறரை மணிக்கு மேல் ஊருக்கு வந்து சேரும். இன்றைய பழைய பேருந்து நிறுத்தம் இருக்குமிடத்தில் தான் அன்று அனைத்துப் பேருந்துகளும் நிற்கும். பேருந்து நிலையும் மிகவும் நெருக்கடியாக இருக்கும். சுற்றிலும் கடைகள். புது பேருந்து நிறுத்தம் கட்டுவதில் நாடார்களுக்கும்

முஸ்லீம்களுக்கும் சண்டை வந்து கலவரத்திலும், துப்பாக்கிச் சூட்டிலும் பல பேர் இறந்தார்கள். புதிய பேருந்து நிலையம் வந்தால் வியாபாரம் கெடும் என்று நாடார்கள் எதிர்த்தார்கள். ஜவுளிக் கடைகளும், நகைக் கடைகளும் இன்றும் அதே இடங்களில் தான் இருக்கின்றன. தற்போதும் இங்குதான் மக்கள் மொய்க்கிறார்கள்.

நிலையத்திலிருந்து புறப்பட்டு, அகமுடையார் மகால், தனலட்சுமி உணவகம், மரக்கடை, சிவன் கோயில், காந்திநகர். ஆத்திபட்டி, இராமசாமி நகர் எனும் இராமலிங்கா மில் போன்ற பேருந்து நிறுத்தங்களில் வண்டி நிற்கும். இராமலிங்கா மில் பெரிய சுற்றுச் சுவருடன் இருக்கும். ஜெயவிலாஸ் என்ற பெயரில் நிறைய பேருந்துகள் வைத்திருக்கிறார்கள். முன்பெல்லாம் எங்கள் ஊரிலிருந்து மில் வேலைக்கு ஆட்கள் சென்றதில்லை. இன்று ஊருக்கே மில் வண்டி வருகிறது. எட்டாவது முடித்த முடிக்காத பல பெண்களும் வேலைக்குச் செல்கிறார்கள். ஆண்களும் தான்.

அங்கிருந்து மல்லம்பட்டி, குல்லம்பட்டி, கல்லூரணியில் இரண்டு நிறுத்தங்கள், நார்த்தம்பட்டி, முத்துராமலிங்கபுரம் போன்ற ஊர்களில் பேருந்து நிற்கும். கல்லூரணியில் நாடார்கள் நடத்தும் சைவபானு ஷத்திரியப் பள்ளி உள்ளது. முத்துராமலிங்கபுரத்தில் அரசு பள்ளி மேனிலை வரை உள்ளது. இந்தப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் பேருந்தில் ஏறிக் கொள்வார்கள்.

பின்னர் பொம்மகோட்டை, கரிசல்குளம், ஆலடிபட்டி விலக்கு, கத்தாளம்பட்டி, ரெட்டியபட்டியில் நிற்கும். ரெட்டியபட்டியில் ஊர்க்காரர்கள் நிறையப் பேர் ஏறுவார்கள். எங்கள் ஊரிலிருந்து ரெட்டியபட்டி ஐந்து கிலோமீட்டர் தூரத்திலுள்ளது. எமது சிறு வயதில் அருப்புக்கோட்டைக்குப் போவதைக் காட்டிலும் ரெட்டியப்பட்டிக்குத் தான் அதிகமாகப் போவார்கள். இங்கு எல்லாமே கிடைக்கும்.

பன்னிரண்டாம் வகுப்பு வரை எமது பள்ளிச்சீருடை இங்கு உள்ள கடையில் தான் வாங்கினோம். மணி கடை என்பார்கள். அங்கேயே தைத்துக் கொள்ளலாம். கடைக்காரர் நன்றாகப் பேசுவார். ஊரிலிருக்கும் பெரும்பாலானவர்களின் பெயர்களைச் சொல்லி நலம் விசாரிப்பார். அவர் வீட்டு விசயங்களைப் பேசுவார். சிறிய கடை. பாய் விரித்திருப்பார்கள். பேரம் பேசுவதைப் பார்த்தால் வேடிக்கையாக இருக்கும். துணிகள் வாங்க இரண்டு மணி நேரம் கூட ஆகும். பேசிக் கொண்டே இருப்பார்கள். இவ்வளவு பேசுவதும் கடன் சொல்லத்தான். சில முறை குருணை அரிசி வாங்க யாம் மிதி வண்டியில் சென்றிருக்கிறோம். கரிசல் காடாக இருக்கும்.

பெரிய குதிரையோடு அய்யனார் சிலையை பார்த்திருக்கிறோம். குதிரை தத்ரூபமாக இருக்கும்.

அடுத்து மண்டபசாலை, கமுதி விலக்கு, அகரத்துப்பட்டி சாலை நிறுத்தங்கள். தும்முசினம்பட்டி செல்பவர்கள் கமுதி விலக்கில் இறங்கிக் கொள்வார்கள். சிறிது தூரம் சென்று முக்கிய ரோட்டிலிருந்து விலகி எங்கள் ஊருக்கு பேருந்து வரும். நல்லது கெட்டது மற்றும் திருவிழா போன்ற காலங்களில் பேருந்தின் கூரையும் நிரம்பி வழியும்.

முக்கிய ரோட்டிலிருந்து விலகி எங்கள் ஊருக்குள் வந்து செல்வதால் பரளச்சி போன்ற ஊர்க்காரர்கள் இந்தப் பேருந்தில் ஏறுவதற்கு சங்கடப்படுவார்கள். சுற்றிக் கொண்டு போகுமாம்.

வடக்குநத்தம் பேருந்திற்குப் பின் இரவு எட்டு மணிக்கு அருப்புக்கோட்டையிலிருந்து கமுதி செல்லும் பேருந்து ஊருக்குள் ஒன்பது மணிக்கு வரும். இதைத் தவறவிட்டால் முக்கியச் சாலையில் இறங்கி நடக்க வேண்டும். முக்கிய சாலைக்கு வர அருப்புக்கோட்டையிலிருந்து பத்து மணிக்கு இறுதிப் பேருந்து. இதன் பின்னர் பேருந்து நிலையத்திலேயே படுத்துக் கொள்ள வேண்டியது தான்.

ஊருக்குள் வரும் அனைத்தும் சந்திரா நிறுவன பேருந்துகள் தான். இதன் உரிமையாளர்கள் நாடார் சமூகம். நாயக்கரின் ஜெயவிலாஸ் வருவதில்லை. எமக்குத் தெரிந்து காலை எட்டு மணிக்கு ஒரு ஜெயவிலாஸ் பேருந்து ஊருக்குள் வந்து பின்பு நின்றுவிட்டது.

சில வருடங்களுக்கு முன்பு பரளச்சி அருகே இருக்கும் பூலாங்கால் என்ற ஊருக்குச் செல்லும் அரசுப் பேருந்து எங்கள் ஊர் வழியே வந்து சென்றது. தற்போது வருவதில்லை. பின் இராணிசேதுபுரம் சென்ற அரசுப் பேருந்தும் வந்து நின்று விட்டது. தற்போது பரளச்சி செல்லும் அரசுப் பேருந்து சில முறை ஊருக்குள் வந்து செல்கிறது. சில மாதங்களாக விளாத்திகுளத்திலிருந்து கமுதி செல்லும் பேருந்து காலையில் ஊர் வழியாகச் செல்கிறது.

யாம் பேருந்துகளில் செல்லும்போது எங்கள் ஊரின் தற்போதைய செவக்காடுகளைப் பார்ப்பதுண்டு. தொப்பலாக்கரை பாதையில் இருந்த புன்செய் நிலங்கள் அனைத்தும் இன்று வீட்டு மனைகளாகிவிட்டன. எங்கள் ஊரின் மக்கள் தொகை பெருகி, இடமில்லாமல் இப்படி வீட்டு மனைகளாக மாற்றிக் கொண்டார்கள்

என்றாலாவது பரவாயில்லை. யாரோ சிலபேர் கொள்ளை லாபத்துக்காக பெருவாரியான நிலங்களை வளைத்துப் போட்டிருக்கிறார்கள். கள்ளக்குறிச்சியிலும், விழுப்புரத்திலும் இருப்பவர்களுக்கு குலுக்கல் முறையிலும், மாதத் தவணைகளிலும் எங்கள் ஊர்க் காடுகளை வீட்டு மனைகளாக்கி விற்கிறார்கள். செங்கல் சூளைகளுக்கும் காடுகளை விற்றதால் பல இடங்களில் பெரிய பெரிய பள்ளங்களாகக் கிடக்கிறது. மழைக் காலங்களில் குளங்கள் போன்று காட்சியளிக்கின்றன. மண்ணை இயந்திரங்கள் வைத்து அள்ளியிருக்கிறார்கள். பார்க்கவே பரிதாபமாக இருக்கிறது.

ஊருக்கு வரும் பிரிவுச் சாலையின் கிழக்கே கண்ணுக்கெட்டிய தூரம் வரை வீடடு மனைகளின் எல்லைக் கற்களாகத் தெரிகிறது. வடக்கே இன்னும் மோசம். பல நிறுவனங்களின் பெயர்களில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் வேலிகளால் சூழப்பட்டுள்ளன. இங்கெல்லாம் நெல் விளையும். யாம் கூட சிலமுறை இந்தக் காடுகளுக்கு களைக்குச் சென்றிருக்கிறோம். மாடுகளையும் இந்தக் காடுகளில் மேய்த்துத் திரிந்திருக்கிறோம்

கரிசல் காடுகளையும் இப்படித்தான் நிறுவனங்கள் பெயரில் வளைத்திருக்கிறார்கள். நேர்மையாக வாங்கினாலாவது பரவாயில்லை. காடுகளை விற்பதற்கு இடைத் தரகர்களாக இருந்த, எங்கள் ஊரைச் சேர்ந்த இரண்டு தேவர்கள் இன்று பெரும் பணக்காரர்களாகிவிட்டார்கள். சல்லிசாக முடித்துக் கொடுத்ததற்காக கம்பனியாரிடமிருந்து ஊக்கத் தொகையும், பரிசும் பெற்றார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். எமது மாமா காட்டை அவருக்கே தெரியாமல் பஞ்சாப்பை சேர்ந்தவருக்குப் பத்திரம் போட்டு விட்டார்கள். பெரும்பாடுபட்டு நிலத்தை மீட்டார். யாம் அந்த பத்திரத்தைப் படித்துப் பார்த்தோம். நிறுவன வழக்கறிஞர்கள் மிகவும் புத்திசாலித்தனமாக எழுதி இருக்கிறார்கள்.

கிராமத்தில் பெரும்பாலும் பட்டா இருக்காது. பலபேர் பத்திரம் கூட போட்டிருக்க மாட்டார்கள். நம்பிக்கையின் அடிப்படையில் எழுதிக் கொடுத்திருப்பார்கள். நிலம் ஒருவர் பெயரிலும் உழுபவர் வேறொருவராகவும் இருப்பார். இதில் இன்னொரு கொடுமையும் தற்போது நடக்கிறது. அப்பாவிடம் நிலம் வாங்கியிருப்பார். அவரது பெயரிலேயே நிலம் இருக்கும். அவருக்குப் பின் மகனிடம் பத்திரம் போடச் சென்றால் இன்றைய மதிப்பில் பணம் கேட்கிறாராம். மறுத்தால் நிறுவனத்தாருக்கு விற்று விடுவதாக மிரட்டுவதும் நடக்கிறது. கிராமத்தில் கொடுத்த

வாக்கை மீறமாட்டார்கள் என்பதெல்லாம் பழங்கதையாகி விட்டது. நிறுவனத்தார்கள் எங்கள் ஊரில் மட்டும் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை அடிமாட்டு விலைக்கு நைசாகப் பேசி வாங்கி விட்டார்கள். வாங்கும்போது நீங்களே உங்கள் நிலத்தில் தொடர்ந்து பயிர் செய்யலாம் என்றும் வாக்குறுதி கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். வாங்கிய ஒரு வருடத்திற்குள் வேலி போட்டு விட்டார்கள்.

இனி ஆடு மாடுகளுக்கு எங்கள் ஊரில் வேலை இல்லை. நிறுவனங்கள் எல்லாம் சுற்றுச்சுவரும் வேலியும் போட ஆரம்பித்து விட்டன. வேலி போட்ட பின் உள்ளூர்க்காரர்களுக்கு அங்கு என்ன வேலை? இன்னும் சில வருடங்களில் சாலைகளைத் தவிர்த்து ஊரார் எங்கும் செல்லமுடியாது. ஹிந்தி பேசுபவர்கள் தங்கி பயிர் செய்கிறார்கள். விவசாயக் கூலிகளாக எங்கள் ஊர் மக்கள் வேலை செய்ய வேண்டிய அவல நிலை. மழைக்காலங்களில் சாயல்குடிப் பக்கமிருந்து டிராக்டர்களில் கூலி வேலைக்கு ஆட்கள் வருகிறார்கள். பேருந்துகளில் ஹிந்திப் பாட்டுக்கள் ரீங்காரமிடுகின்றன. ஊர் பெயர் சொல்லத் தெரியாமல் பேருந்துச் சீட்டு எடுக்கும் இந்திக்காரர்களைக் கண்டு மக்கள் சிரிக்கிறார்கள். இவர்களைப் பார்த்து அவர்கள் நகைக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை. இப்படித்தான் வெள்ளையர்கள் வந்தார்கள். நிறுவனக் கொள்ளையர்களும் அதே வழியில் தான் வருகிறார்கள். பட்டும் திருந்தாத தமிழர்களை என்னவென்பது.

சிறுவயதில் எங்களுக்குச் சொந்தமான செவல்காடு கொஞ்சம் இருந்தது. ஒரு பங்கு சித்தப்பாவுக்கும் மற்றொரு பங்கு எங்களுக்கும். கடலைக் காவலுக்கு அப்பாவோடு சென்று யாம் இரவில் தூங்கி இருக்கிறோம். இரவுச் சாப்பாடு தூக்குச் சட்டியில் கொண்டு போய்க் கொடுத்தது நினைவிருக்கிறது. தட்டப்பயிறு, பாசிப்பயறு விளையும். கேப்பை பயிரிட்டும் பார்த்திருக்கிறோம். பச்சைப் கேப்பையின் ருசி தூக்கலாக இருக்கும்.

சில வருடங்கள் வரகுப் பயிரும் போட்டிருந்தோம். ரசம் வைத்து வரகு அரிசிக் சோறு இரவில் சாப்பிட்டிருக்கிறோம். மிகவும் சுவையாக இருக்கும். கரிசல் காடுகளைப் போன்றே செவல் காடுகளும் ஊரில் பெரும்பாலான மக்களுக்கு இருந்தது.

நாட்டுச் சோளம் பயிரிடுவார்கள். பச்சையாக இருக்கும் போது அறுத்து மாடுகளுக்குத் தீவனமாகப் போடுவார்கள். சோளத்தட்டை, கம்புத் தட்டை, நெல் கூளம், கடலைச் செடி இவைகளைச் சேர்த்து படப்புகளை உருவாக்குவார்கள்.

மாடுகள் நிறைய வைத்திருப்பவர்களின் படப்புகள் சிறிய மலை போன்று இருக்கும். தீபாவளிக்கு கோழி பிடிக்கும் போது படப்புகள் மீது ஏறி இறங்குவதுண்டு. சோளத்தட்டையை நறுக்குவது சுலபமான வேலை. கொத்தாக எடுத்து விறகுக் கட்டையில் வைத்து நறுக்கிப் போடுவார்கள். மாடுகள் இவற்றை விரும்பி உண்ணும். கம்பங்கதிரை ஆய்ந்தபின் தட்டை வெட்டிவந்தும் இவ்வாறு நறுக்கிப் போடுவதுண்டு.

அன்று செவல்காடு முழுதும் கடலைக்காடுகள் நிறைந்திருந்தன. சில நேரங்களில் கடலை பிடுங்கும் சமயம் மழை பெய்யாமல் செடிகள் கருகி விடும். கொத்துவான் வைத்து வெட்டுவார்கள். இவர்கள் வேலை முடிந்ததும் சிறுவர்கள் வேலை ஆரம்பமாகும். வேலை ஆட்களுக்குத் தவறி கருகிய செடிக் காம்புகள் நிறையத் தென்படும். தோண்டினால் கொத்துக் கொத்தாகக் கடலை கிடைக்கும். சனி, ஞாயிறுகளில் இப்படியும் நாங்கள் கடலை தோண்டுவதுண்டு. சில படிக் கடலைகள் சேர்த்து விடலாம். இது போன்றே கடலைக் காடுகளை உழும் போதும் நிறையக் கடலைகள் வெளிவரும். அன்று சிறுவர்களுக்கு செமக் கொண்டாட்டம். பறவைகளுக்கும் தான்.

எமது பெற்றோர் வீரசோழன், அபிராமம் போன்ற ஊர்களுக்கு, கடலைக்காட்டு வேலைகளுக்குப் போனார்களாம். பல பேர் அங்கேயே தங்குவதும் உண்டாம். அப்பகுதியில் அவ்வளவு கடலை விளையுமாம்.

செவல்காட்டில் மாமாவிற்கு வன்னியத்தார் என்ற பெயரில் வயல்கள் இருந்தன. அப்பாவிற்கு சொந்தமானதை மாமா வாங்கினாராம். நெல் பயிரிடுவார். அறுப்புக்கு நாங்கள் தவறாமல் செல்வோம்.

இராஜகோபாலபுரத்தை சேர்ந்த கஞ்சயநாயக்கர் என்பவரது மருமகளை குடும்பத் தகராறில் பரளச்சி போகும் செவல்காட்டு சாலை அருகே வைத்து எரித்துவிட்டார்கள். அப்போது இது பரபரப்பாகப் பேசப்பட்டது. அதன் பிறகு பெண்கள் தனியே போவதற்கு பயப்படுவார்கள்.

செவல்காட்டு ஓடைகளில் நிறைய மணல் கிடக்கும். சில வருடங்களுக்கு முன்பு வரை, வீடு கட்டுபவர்கள் மாட்டு வண்டிகளில் சென்று அள்ளிக் கொண்டு வருவார்கள். எமது அண்ணன் தோட்டத்திற்கு செல்லும் வழியில் அழகியதொரு நீரோடை இருக்கும். கொஞ்சமாவது தண்ணீர் சென்று கொண்டிருக்கும். சில ஆண்டுகளுக்கு முன்புவரை கூட மிதிவண்டியில் போனால் ஓடையைக் கடக்க இறங்கித் தள்ள வேண்டும். அவ்வளவு மணல் குவிந்து கிடக்கும். தற்போது நூறு

நாள் வேலை வந்து எல்லா ஓடைகளையும் சுத்தமாகத் துடைத்து வைத்திருக்கிறார்கள்.

யாம் அருப்புக்கோட்டையில் படிக்கும் காலத்தில் அகரத்துப்பட்டி விலக்கில் நூற்றுக்கணக்கான ஏக்கர் செவல்காடுகளைச் சேர்ந்தாற் போல் வாங்கி தோட்டம் போட்டார்கள். அப்போது ஆட்சியில் இருந்த முக்கியமானவர் பெயரை தோட்டத்திற்குச் சொல்வார்கள். ஜெட் வேகத்தில் தோட்டம் வளர்ந்தது. தோட்டத்தைச் சுற்றிலும் வேலி போட்டார்கள். சொட்டு நீர் பாசனம் செய்தார்கள். நிறையப் பேர் வேலை பார்த்தார்கள். விடுதியிலிருந்து வந்து செல்லும் நாடகளில் யாம் ஆச்சரியத்துடன் பார்த்தோம்.

முருங்கைச் செடிகள் சடை சடையாகக் காய்த்துத் தொங்கியன. கொய்யாச் செடிகள் இருந்தன. ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின் எல்லாமே திடீரென்று மாறிவிட்டது. ஒரு வருடத்திற்குள்ளாகவே பராமரிப்பு நின்றுபோய், பக்கத்து ஊர்களைச் சேர்ந்தவர்கள் வண்டி மாடுகள் வைத்து எல்லாவற்றையும் களவாடிச் சென்று விட்டார்கள். விவரமான பலரும் கூலிக்கு ஆட்களை அமர்த்தி இரவில் திருடி இருக்கிறார்கள். எங்கள் ஊர்ப் பகுதியின் பெரும்பாலான தோட்டங்களில் பதித்திருக்கும் பி.வி.சி. குழாய்கள் அங்கிருந்து எடுக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். சில வீடுகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததை யாமே பார்த்திருக்கிறோம். இந்த நிலங்கள் மற்றும் பக்கத்து நிலங்களில் தான் விருது பெற்ற வாகை சூடவா திரைப்படத்தை படமாக்கினார்கள். எமது சித்தப்பா கூட வைத்தியர் வரும் காட்சிகளில் உடன் இருப்பார்.

ஆதிதிராவிடர்கள் குடியிருப்பு ஊரின் கிழக்கே சற்று தள்ளி தனியாக உள்ளது. எமது சிறுவயதில் மிகக் குறைவான வீடுகளே இருந்தன. தற்போது அரசு கட்டிக் கொடுத்த தொகுப்பு வீடுகளில் வசிக்கிறார்கள். ஒன்றிரண்டு வீடுகளை தேவர் ஆட்கள் விலைக்கு வாங்கிக் குடியிருக்கிறார்கள். சில வீடுகள் இடிந்து கிடக்கின்றன.

மூக்காண்டி அண்ணன் அவர்களில் கொஞ்சம் பெரிய மனிதர் போன்று இருப்பார். எம்மைப் பார்த்தால் தம்பி நல்லா இருக்கீங்களா என்று வாஞ்சையோடு நலம் விசாரிப்பார். தற்போது அப்பணசாமி தோட்டத்தில் பல வருடங்களாக வேலை பார்க்கிறார். மனைவி சரஸ்வதி அம்மையார். பையன் சோலையப்பன். ரத்தின சபாபதியோடு படித்தார். பெண் பிள்ளைகளும் இருந்தார்கள்.

கருப்பு என்றொரு அண்ணன் இருந்தார். குலுக்கைகள் செய்வார். விளையாடச் செல்லும் போது இவர் குலுமைகள் செய்வதை வேடிக்கை பார்ப்பதுண்டு. அருகிலிருக்கும் கண்மாயில் சகதியை அள்ளி நெல் பதரைச் சேர்த்து நன்றாக மிதிப்பார். அதைக் கொண்டு சிறியதும் பெரியதுமான குலுக்கைகள் செய்வார். எமது மாமா வீட்டில் பெரிய குலுக்கையில் நெல்லும், சிறிய குலுக்கையில் கம்பும் கொட்டி இருப்பார்கள். அழகி திரைப்படத்தில் வருவது போன்று நெல் அள்ள எம்மைக் கூப்பிடுவார்கள். எங்கள் மச்சு வீட்டினுள்ளும் சிறியதொரு குலுக்கை இருந்தது.

கருப்பையா அண்ணன் படித்திருக்கிறார். பல வேலைகள் பார்த்தார். வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும் வேலை செய்ததாக ஞாபகம். ராட்டை சுற்றியெல்லாம் பார்த்திருக்கிறோம். இவரது அக்கா லட்சுமி. மருமகன் முனியசாமி.

தங்கராஜ் அண்ணன் சிலுவை போட்டிருப்பார். கிறித்துவக் குடும்பம். ராஜ், அந்தோணி எனப் பையன்கள் உண்டு.

அடிகுழாய் அருகே பாஞ்சாலி, மூக்கம்மாள் என இருந்தார்கள். நிறைய ஆடுகள் வைத்திருந்தார்கள். ஆதிதிராவிடர்கள் பெரும்பாலும் தூத்துக்குடி முத்தையாபுரத்தில் தங்கி வேலை பார்த்தார்கள். இவர்களை சாம்பாக்கமார், சாம்பான், பறையர் என ஊரில் அழைப்பார்கள்.

கட்டக்கருப்பன் அவர்கள் அருந்ததியர் குடியிருப்பு அருகே வசித்தார். பன்னிகள் நிறைய வளர்த்தார். காலையிலும் மாலையிலும் ஊரைச் சுற்றி மேய்ப்பார்கள். கம்பை கழுத்தில் வைத்து இரு கைகளாலும் கம்பைப் பிடித்துக் கொண்டு நடப்பார். இவரது தங்கை ராணி அக்கா. இவரது மகன் முத்துப்பாண்டி என்ற நண்டுக் குளவன். சத்தமாகப் பேசுவார். கடன்பட்டு அடிவாங்கித் திரிவார். பல நேரங்களில் அடி வாங்குவதை சிறுவர்கள் வேடிக்கை பார்ப்பதுண்டு. இராமர் என்ற இன்னொரு பையன் இருந்ததாகவும் சொல்வார்கள். மகள் லட்சுமி.

ராணி அக்கா பிரசவம் பார்ப்பார். நல்ல குணமுள்ளவர். ஊரின் பெருவாரியான பிள்ளைப் பேறுகள் இவர் பார்த்ததுதான். எமது அக்காவின் நான்கு குழந்தைகளுக்கும் இவர்தான். நிறைமாதக் கர்ப்பிணிக்கு வலி வந்தவுடன் இவரைத் தான் கூப்பிட்டு ஆள் அனுப்புவார்கள். பணம் நூறு, இருநூறு என்று ஆளக்கேற்றாற் போல் கொடுப்பார்கள். பூண்டு, கருப்பட்டி கிடைக்கும். வசதியானவர்களெனில் சேலை கொடுப்பார்கள். வயிற்று வலி என்றாலும் வயிற்றில் கையை வைத்து தட்டிக்

கொடுப்பார். யாம் முதுநிலை முடிக்கும் போது வயிற்று வலி வந்து சிரமப்பட்ட போது வீட்டிற்கே வந்து வயிற்றில் தட்டிக் கொடுத்து வைத்தியம் பார்த்தார். மருந்துகளும் சொல்வார்.

இவரும் மகள் வயிற்றுப் பேரனான முனியப்பனும் ஊரில் உள்ள பசுமாடுகளை மேய்ப்பார்கள். காலையில் மாடுகளை அவிழ்த்துப் போய் மாலை வரை செவல்காட்டில் மேய்த்துத் திரும்புவார்கள். அம்மன் கோவிலருகே வடக்குக் கண்மாய் கரையிலிருந்த ஆலமரத்தில், மதியம் மாடுகளை அடையப் போடுவார்கள். அருகிலேயே சாணத்தை அள்ளிக் குவித்திருப்பார்கள். பின்னர் சம்சாரிகளுக்கு விலைக்கு விற்பதுண்டு. வீட்டுச் சுவற்றிலும் சாண வரட்டிகள் ஒட்டி இருக்கும். நாடார் தெருவிலிருந்து அதிக மாடுகள் இப்படி மேயச் செல்லும். மாட்டை மேய அனுப்புகிறவர்களின் வீடுகளில் தினமும் உணவு வாங்குவார்கள். பெரும்பாலும் கம்மச் சோறு, கேப்பக் கூழ் கிடைக்கும். நெல்லுச் சோற்றுக்கு தனியாகப் பாத்திரம் வைத்திருப்பார்கள்.

சீதாலட்சுமி அம்மையாரும் பிள்ளைப் பேறுகள் பார்ப்பார். டாக்டரம்மா எனக் கூப்பிடுவார்கள். இவர் பிள்ளைமார் சமூகம். யாம் பரளச்சியில் படிக்கும் போது ஊருக்கு வந்ததாக ஞாபகம். முதலில் கர்ணாவதரன் அவர்களின் ஓட்டு வீட்டில் இருந்தார். காய்ச்சலுக்கு ஊசி போட்டு மாத்திரை தருவார். கொஞ்சம் வசதியானவர்கள், படித்தவர்களென்றால் பிள்ளைப் பேறு பார்க்க இவரைக் கூப்பிடுவார்கள்.

அருகிலிருக்கும் ஊர்களிலிருந்தும் இவரை மிதிவண்டியில் வந்து கூட்டிச் செல்வார்கள். கர்ணாவதரன் அவர்களின் மூத்த மகள் தேவேந்திரர் தெரு அருகே வீடு கட்டினார். ஏனோ பாதியில் நின்று விட்டது. அந்த வீட்டை இவர்கள் விலைக்கு வாங்கி முழுமையாகக் கட்டி குடியேறினார்கள். இவரது பையன்கள் அதே வீட்டில் இருக்கிறார்கள். தற்போது எங்கள் ஊர்க்காரர்களின் காய்ச்சலுக்கு சுத்தமடத்தைச் சேர்ந்த ஒருவர் ஊசி போடுகிறார். இது போன்ற கிராமத்து டாக்டர்களைப் பற்றி மக்களுக்கு போதிய விழிப்புணர்வு இல்லை. இந்த மக்களுக்கு இவர்களைத் தவிர வேற வழியும் இல்லை. அலைபேசியில் அழைத்தால் உடனேயே வந்து விடுகிறார். முடியாதவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல ஆட்களும் ஊர்களில் இருப்பதில்லை.

கிராமங்களில் மகப்பேறுக்கு மருத்துவனைகளுக்குச் செல்வது அரிது. எமது மாமா பெண் பால்தங்கம், மதியம் வரை அக்காவின் கரிசல் காட்டில் வேலை பார்த்தார். யாமும் காட்டிலிருந்தோம். மாலையில் குழந்தை பெற்று விட்டதாகச் சொன்னார்கள். கிராமத்தில் முன்னர் இப்படித்தான் எளிதாகக் குழந்தை பெறுவார்கள்.

எமது சிறுவயதில் பேருந்து நிறுத்தம் அருகே ஆரம்ப சுகாதார நிலையத்தை சிறப்பாகக் கட்டினார்கள். எமது அப்பா வேலை பார்த்தார். நீண்ட காலம் பயன்பாட்டிற்கு வராமல் இருந்தது. பராமரிப்பு இல்லாத கட்டிடமாக தற்போது காணப்படுகிறது. ஊரில் சில வருடங்கள் முன், இரண்டு லட்சம் மதிப்பீட்டில் கட்டிய கழிப்பறைக் கட்டிடமும் பயன்பாட்டுக்கு வரும் முன்பே பாழடைந்து விட்டது.

எமது அப்பா திருவாரூர் அருகே இருக்கும் வடபாதிமங்கலத்தில் ஆட்களை வைத்து ஆலைக் கரும்பு வெட்டினார். சில வருடங்கள் இவ்வூரில் வாழ்ந்தோம். எமது சிறுவயது ஞாபகம் இங்கிருந்துதான் ஆரம்பிக்கிறது. சிறிய ஓலை வீட்டில் வசித்தோம். உறவினர்கள் பக்கத்து வீடுகளில் இருந்தார்கள்.

யாம் வீட்டிற்குள் நுழைந்த நல்ல பாம்போடு, ஒருமுறை விளையாடிக் கொண்டு இருந்தோமாம். பின்னர் ஆட்கள் பார்த்து அலறியடித்து எம்மைத் தூக்கி பாம்பை அடித்து வெள்ளிக்கிழமை என்பதால் பால் ஊற்றிப் புதைத்தார்களாம். இந்தச் சம்பவம் எமக்கு நன்றாக நினைவிருக்கிறது.

இங்கு வருவதற்கு முன், எமது பெற்றோர் சென்னையில் திரைப்பட நடிகை கே.ஆர்.விஜயா அவர்களின் தோட்டத்திலிருந்த செங்கல் சூளையில் வேலை பார்த்தார்களாம். அப்போது உணவிற்குப் பஞ்சம் இருந்ததால் மரவள்ளிக் கிழங்கின் மாவிலிருந்து கூழ் செய்து சாப்பிட்டிருக்கிறார்கள். யாம் அந்தக் கூழை அடிக்கடி குடித்து பெரிய வயிற்றோடு இருந்திருக்கிறோம். மாமா வந்து எம்மைப் பார்த்து விட்டு, தேவாங்கு மாதிரி இருக்கிறோமென்று கிண்டலடித்தாராம். இப்போதும் சொல்லிச் சிரிப்பதுண்டு.

வடபாதிமங்கலத்தில் எங்கள் குடிசையின் அருகே ஒரு குளம் இருக்கும். அதில் தூண்டில் போட்டு மீன் பிடிப்பார்கள். பொத்தல் கூடை வைத்தும் பிடிப்பதுண்டு. விளையாடப் போய் ஒருமுறை யாம் குளத்தில் தவறி விழுந்ததைக் கண்ட அக்காவும் காப்பாற்றும் முயற்சியோடு குதித்துவிட்டார். இருவரையும் பெரியவர்கள் வந்து காப்பாற்றினார்கள். ஊரில் பெரிய கால்வாய் இருந்தது. தண்ணீர் வராத

சமயங்களில் சிறுவர்களோடு சேர்ந்து சறுக்கு விளையாடுவோம். அப்படி விளையாடும்போது இடது காலின் இரண்டாவது விரல் மாட்டி நகம் பெயர்ந்து விட்டது. இன்றுவரை நகம் சரியாக வளரவில்லை. அந்த விரலைப் பார்க்கும் போதெல்லாம் பழைய ஞாபகம் வரும்.

அங்கிருந்த வருடங்களில் வீமன் சாமிக்கு யாம் பயங்கரமாகப் பயப்படுவோம். கருப்பு ஆடை உடுத்தி, கையில் கதை ஏந்தி, பெரிய மீசையோடு, தலைப்பாகைக் கட்டி ஒவ்வொரு வீடாக வீமன் சாமி வருவார். எங்கள் வீட்டில் கதவு இருக்காது. மூங்கில் சட்டம் அடித்து, சாக்குப் பைகளைக் கிழித்து தைத்திருப்பார்கள். தூரமாக வரும் போதே கதவைச் சாத்திவிட்டு சாக்கு ஓட்டை வழியே பார்ப்போம். பக்கத்து வீடுகளுக்கு வரும்போது அக்கா இல்லாத சமயங்களில் மூலைக்குச் சென்று விடுவோம்.

அருகிலிருந்த ஒரு பள்ளிக்கு எங்களை அனுப்பினார்கள். அண்ணனும் யாமும் அங்கு சென்று படித்தது, மதிய உணவாக உப்புமா சாப்பிட்டது எல்லாம் பசுமரத்தாணிபோல் நினைவிருக்கிறது. அதன் பின்னர் பெற்றோர் தொப்பலாக்கரைக்கே வந்துவிட்டதால் இங்கு படிப்பு தொடர்ந்தது. அன்று இன்றைக்குப்போல் பள்ளிகளில் கேள்விகள் கேட்க மாட்டார்கள். கையை வைத்து தலை உச்சி வழியே காதைத் தொடவேண்டும். தொட்டுவிட்டால் ஒன்றாம் வகுப்பு. தொட முடியாவிட்டால் அடுத்த வருடம்.

யாம் பரிதாபி வருடம் மாசி பத்தாம் தேதி இரவு பிறந்தோம். ஆங்கிலத்துக்கு இருபத்து இரண்டாம் தேதி இரண்டாம் மாதம் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்து மூன்றாமாண்டு. ஊரில் மறுபடியும் ஒன்றாம் வகுப்பில் சேர்ந்ததால் ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து நான்கு மேமாதம் மூன்றாம் தேதி போட்டு சேர்த்து விட்டார்கள். பள்ளியில் சேரும் அனைவருமே மேமாதம் தான் பிறப்பார்கள். கிராமங்களில், பல பிள்ளைகள் பெற்றிருப்பதன் காரணமாக பெற்றோருக்கு பிறந்த தேதி, வருடம் ஞாபகம் இருக்காது. தலைமையாசிரியர் மேமாதத்தில் ஏதாவதொரு தேதி போட்டு சேர்த்துக் கொள்வார்.

சென்னைக்கு ஒன்பதாம் வகுப்பு முழுப்பரிச்சை விடுமுறையில் ஒருமுறை சென்று வந்தோம். எமது அப்பா அங்கு புதிதாகக் கட்டிய கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் கொத்தனார் வேலை பார்த்தார். அம்மாவும், அண்ணனும் அப்பாவுடன் வேலை பார்த்தார்கள். யாமும், அக்காவும் ஊரில் இருந்தோம். எங்கள்

தெருவிலிருந்தும், தலவமார், பூசாரி தெருவிலிருந்தும் பல பேர் அங்கே தங்கி இருந்தார்கள். சுப்பையா தலவர் பணியாளர்களை வேலைக்கு ஒப்பந்தம் செய்திருந்தார். அவருக்குக் கீழ் இவர்களெல்லாம் வேலை பார்த்தார்கள். கமிசனாக இவர்கள் சம்பளத்தில் பங்குத் தொகை எடுத்துக் கொள்வார்.

ஊருக்கு வந்திருந்த ஒப்பந்ததாரர் பையனோடு, அக்காவும் யாமும் சென்னைக்குப் பயணமானோம். மதுரை பேருந்து நிறுத்தத்தில் நீண்ட நேரம் காத்திருந்தோம். நரிக்குறவர்கள் நிறையக் கடைகள் விரித்திருந்தார்கள். சாலையைக் கடந்துபோய் உணவு சாப்பிட்டு வந்தோம். முதல்முறை என்பதால் மதுரையைப் பார்ப்பதற்கே எமக்கு பிரமிப்பாக இருந்தது.

ஜன்னல் ஓர இருக்கையில் உட்கார்ந்து கொண்டு இரவு முழுதும் வேடிக்கை பார்த்துக் கொண்டே சென்னை சென்றோம். இரவில் பெரிய பெரிய மலைகளைப் பார்த்து வியந்தோம். காலையில் சென்னையில் இறங்கியவுடன் அடைந்த பரவசத்திற்கு அளவேயில்லை. பாரிஸ் கார்னர் பேருந்துகளையும், உயர்நீதிமன்றக் கட்டிடம் போன்ற உயரமான கட்டிடங்களையும் ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டு நின்றோம். வேறொரு பேருந்தில் ஏறி கே.கே.நகர் என்னும் கவிஞர் கண்ணதாசன் நகர் அடைந்தோம். அங்கு தான் சிறிய கீற்றுக் கொட்டகை வீட்டில் பெற்றோர் தங்கியிருந்தனர். இரவு வரும் விமானங்களைப் பார்த்து ரசித்தபடியே முற்றத்தில் பாய் போட்டுத் தூங்குவோம்.

எல்லோரும் வேலைக்குச் சென்றதால் யாம் மட்டும் தனியாக இருக்கப் பிடிக்காமல் யாமும் அவர்களோடு சேர்ந்து சித்தாள் வேலைக்குச் சென்றோம். வீட்டிலிருந்து நடந்தே செல்லும் தூரத்தில்தான் பணியிடம் இருந்தது. எங்கள் ஊர்க்காரர்கள் சிலபேர் அங்கு ஓடும் சாக்கடைக் கழிவுநீர் பாய்ந்து வளர்ந்திருக்கும் புற்களை அறுத்து பெரிய பெரிய கட்டுகளாகச் சுமந்து கொண்டு வருவார்கள். இப்படி வரும் கழிவுநீரைச் சுத்திகரிக்கும் பிரம்மாண்டமானதொரு சுத்திகரிப்பு நிலையத்தைத்தான் அப்போது கட்டிக் கொண்டிருந்தார்கள்.

பின்னாட்களில் இத்தகைய சுத்திகரிப்பு பற்றி படித்த போதும் தற்போது முதுநிலை மாணவர்களுக்கு கழிவுநீர் சுத்திகரிப்பு முறை பற்றி விளக்கும் போதும் அன்றைக்கு நேரில் பார்த்த சுத்திகரிப்பு நிலைய நினைவுகள் தோன்றுவதுண்டு. மிகப் பெரிய தொட்டிகளாகக் கட்டினார்கள். சில கிணறுகளை எட்டிப் பார்ப்பதற்கே துணிவு வேண்டும். யாம் மண்ணைச் சுமப்பது, செங்கல் எடுத்துக் கொடுப்பது

போன்ற வேலைகளைச் செய்தோம். அன்னக்கூடை என்னும் அகன்ற ஈயப் பாத்திரத்தில் மண் சுமப்பார்கள். தண்ணீர் வைக்கும் பாத்திரமாகவும் இது பயன்படும்.

முதலில் இருந்த வீட்டாரோடு பிரச்சினை வந்து, கொஞ்சம் தூரத்திலிருந்த வேறோர் வீட்டிற்கு மாறிச் சென்றோம். யாமும் அக்காவும் சேர்ந்ததால் வீட்டினரின் எண்ணிக்கை கூடிவிட்டதென்று வாடகை அதிகமாகக் கேட்டிருக்கிறார்கள். பத்து நாட்களில் சென்று விடுவார்கள் என்று சொன்னதை ஏற்கவில்லையாம்.

இரண்டாவதாகக் குடிவந்ததும் கீற்றுக் கொட்டகை. அருகே இருந்த எங்கள் ஊர் பூசாரி வீட்டில் தொலைக்காட்சிப் பெட்டி இருக்கும். ஒலியும், ஒளியும் பார்க்கலாம். நிர்மா சோப், உஜாலா விளம்பரம் ஓயாமல் போடுவார்கள். காலைக் கடனுக்கு, நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டும். வழியில் தோல் பதனிடும் தொழில் செய்பவர்கள் உப்புச் சேர்த்து நிறையத் தோல்களை காயப் போட்டிருப்பார்கள். தண்ணீரும் உப்பாக இருக்கும்.

ஒருமுறை பிருந்தா திரையரங்கில் இரவு பத்து மணிக் காட்சிக்கு இளவட்டங்களோடு சேர்ந்து குருசிஷ்யன் படம் பார்க்கச் சென்றோம். இடைவேளையின்போது குளிர்சாதன வசதிக்காக அமைத்திருந்த பெரியதொட்டியில் பீய்ச்சியடித்த தண்ணீரை வேடிக்கை பார்த்தோம். பள்ளிப் பருவத்திலேயே யாம், ரஜினி ரசிகனாகியிருந்தோம். சென்னை செல்வதற்காக அவர் ஸ்டைலில் சிறப்பாக, தலைமுடி காதுகளை மறைக்கும்படியான கிராப் வெட்டிக் கொண்டோம். இதே படத்தை மற்றோரு தடவையும் குடும்பத்தினரோடு பார்த்தோம்.

சென்னையிலிருந்த காலங்களில் ஒரு ஞாயிற்றுக்கிழமை கடற்கரைக்குக் கூட்டிச் சென்றார்கள். எங்கள் குடும்பமும் இன்னும் பலரும் வந்தார்கள். பூக்கடை வரை பேருந்து. அங்கிருந்து கடற்கரைக்கு நடந்தே வந்துவிட்டோம். சுற்றிப் பார்த்துவிட்டு மறுபடியும் பூக்கடைக்கு நடைபயணம். அந்த வயதில் எல்லாமே மனதிற்குப் பிடித்திருந்தது. அண்ணா நினைவிடம், எம்.ஜி.ஆர். நினைவிடம் மற்றும் கடற்கரை உள்ளிட்ட பகுதிகளை உற்சாகமாகச் சுற்றிப் பார்த்தோம். பத்தாவது வகுப்பைத் தொடர்வதற்காக யாமும் அக்காவும் விடுமுறை முடித்து ஊர் திரும்பினோம். யாம் சிங்காரச் சென்னைக்குச் சென்று வந்ததை நண்பர்களிடம் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தோம்.

ஊரணிக்கரை அருகே பூசாரிகள் தெரு இருக்கிறது. குறைவான குடும்பங்களே வசித்ததார்கள். சோலையப்பன் பூசாரி மற்றும் அவரது அண்ணன் தம்பிகள். அதே போல் களிம்பன் பூசாரியும் அவரது அண்ணன் தம்பிகளும். களிம்பன் பூசாரி இறங்குமுத்தம்மன் கோவிலுக்கு பூசை செய்பவர். சமீப காலமாக அகமுடையார் கருப்பசாமி கோயிலுக்கு வெள்ளிக்கிழமை தோறும் பொங்கல் வைக்கிறார். பொங்கல் பிரசாதம் வாங்கத் தான் ஆளில்லை. இவரது மனைவி வள்ளி அம்மையார் பூக்கள் கட்டி விற்பார். இவர்கள் பூத்தோட்டம் சீனிச்சாமி கிணறு அருகே இருக்கும். எமது மாமாவின் வீட்டோடு நட்பாக இருப்பார்கள்.

சங்கரபாண்டிய நாடார் கடை அருகே அழகு பூசாரி அவர்களின் வீடு இருந்தது. வீட்டிலேயே தேநீர் கடையும் வைத்திருந்தார்கள். இட்லி, தோசையும் கிடைக்கும். முத்தம்மா டீக்கடை என்பார்கள். சரஸ்வதி அம்மையார் என்னொரு மனைவியும் இவருக்குண்டு. மாலையில் கடுங்காப்பி போடுவார்கள். எமது அம்மாயி இங்குதான் கடுங்காப்பி வாங்கிவரச் சொல்வார். முத்தம்மா அவர்களின் அம்மாவிற்கு, கண் பார்வை தெரியாது. தேநீர் வாங்கச் சென்றால், கருப்பாயி பேரனா, பொன்னம்மா மகனா என அடையாளம் கேட்டுத் தெரிந்து கொள்வார். பெரியவர்கள் இறந்தபின் வீட்டை விற்றுவிட்டு மதுரையில் தங்கி விட்டார்கள்.

எமது சிறுவயதில் கொண்டாடிய பண்டிகைகளுக்கும், இப்போது அவற்றைக் கொண்டாடுவதற்கும் நிறைய வித்தியாசங்கள். சில பண்டிகைக் கொண்டாட்டங்கள் வழக்கொழிந்து விட்டன. முக்கியமாக கார்த்திகைத் திருவிழா.

கார்த்திகை மாதம் வரும் இத்திருவிழாவை சிறுவர்கள் ஆவலோடு எதிர் நோக்கி இருப்போம். அதற்குக் காரணம் மூன்று நாட்கள் மாம்பலி சுற்றலாம். அதோடு முறைப் பெண்கள் தலையில் ஒட்டுப்புல் வைத்தும் விளையாடலாம்.

மாம்பலி செய்வதற்கு கம்மந்தட்டை வேண்டும். கம்மந்தட்டைகளை நடுவில் வைத்து, வைக்கோல் போட்டு மூடி படப்புகள் வைத்திருப்பார்கள். சில படப்புகளின் நடுவில் காய்ந்த கடலைச் செடிகளும் இருக்கும். கொஞ்சம் கம்மந்தட்டைகளை எடுத்து நன்றாகச் சேர்த்து கட்டிவிட வேண்டும். அதன் நுனியில் சிறிது வைக்கோலை வைத்து, கம்மந்தட்டையை மடக்கிக் கட்டிவிட்டால் போதும். மாம்பலி தயார்.

சாயங்காலம் ஒட்டுப்புல் வைப்பதற்கு மதியமே சோலை மேட்டிற்குச் சென்று புல்லை சேகரித்து விடுவோம். பெண்களும் இப்படி தயாராக இருப்பார்கள்.

ஒட்டுப்புல், சிறு சிறு விதை போன்று இருக்கும். தலைமுடியில், ஆடைகளில் நன்றாக ஒட்டிக் கொள்ளும். சில பேர் முன்னெச்சரிக்கையாக, தலை நிறைய தேங்காய் எண்ணெய் தேய்த்துக் கொள்வார்கள். ஒட்டுப்புல் ஒட்டாது. ஒட்டினாலும் சீவினால் எளிதாக வந்து விடும். இன்னும் சில பேர் கையில் சீப்பு வைத்தும் திரிவார்கள்.

முறைப் பையன்களும், பெண்களும் ஒருவர் மாற்றி ஒருவர் தலையில் ஒட்டுப்புல்லை அப்புவார்கள். கைய் கொள்ளாத அளவிற்கு பெரிய பெரிய உருண்டைகளாக வைத்துக் கொண்டு விரட்டுவதும், ஒளிவதுமாக சிறுவர்களும் பெரியவர்களும் மன மகிழ்வாக இருப்பார்கள். எமக்கு அதிகமான முறைப் பெண்களென்பதால், பெரிய பெண்கள் கூட ஒட்டுப் புல் வைத்துவிடுவார்கள். சோலையம்மாள் மதினி, மிகவும் ஜாலியான பெண்ணாக இருப்பார். மணிகண்டனின் அம்மா. அப்பா வழியிலும் அம்மா வழியிலும் சொந்தம் என்பதால் உரிமையோடு ஒட்டுப்புல் ஒட்டுவார். பெண்களில் சில பேருக்கு தலை நிறைய அப்பி விடுவார்கள். புல்லை பிரித்தெடுக்க பெரும் சிரமப்படுவார்கள். யாருமே திட்ட மாட்டார்கள். ஒருவரும் கோபப்பட்டு யாம் காண்டதில்லை.

எங்கள் சிறுவயதில் கார்த்திகைக்கு எண்ணெய் தீபமெல்லாம் ஏற்றியதில்லை. சிறு சிறு மெழுகுவர்த்திகள் கடையில் விற்பார்கள். மூன்று நாட்களுக்கு மூன்று பெட்டிகள் வாங்கினால் போதும். இரவு வந்தவுடன் வீடு முழுக்க வைத்து விடுவோம். சில வீடுகளில் மெழுங்குவர்த்தி கூட வைக்க மாட்டார்கள். சாப்பிட்டு முடித்தவுடன், மாம்பலி சுற்றப் போகலாம் வாங்க என சிறுவர்கள் சத்தமிடுவார்கள். அவரவர் மாம்பலிகளை எடுத்துக் கொண்டு அடிகுழாய் இருக்கும் இடத்திற்குச் சென்றுவிடுவோம். அங்கே தண்ணீர் இருந்தால் அழகத் தாத்தா வீடு அருகில் சுழற்றுவோம். சில வருடங்கள் தண்ணீர் வற்றாமல் அருந்ததியர் தெரு அருகிலும் சுற்றியதுண்டு. அகமுடையார் தெருவைச் சேர்ந்த பையன்கள் அழகத் தாத்தா வீடு அருகே இருந்த மேட்டு நிலத்தில் தனியாகச் சுற்றுவார்கள். அவர்கள் மாம்பலிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கும்.

எமது அண்ணன், வேல்முருகன் போன்றவர்கள் பந்தம் சுழற்றுவார்கள். இரும்பு வளையத்தை நீண்ட கம்பியுடன் இணைத்துக் கொண்டு, பழைய சேலைகளைக் கிழித்து, இரும்பு வளையத்தில் நெருக்கமாக சுற்றிக் கொள்வார்கள். இதில் மண்ணென்ணெய் ஊற்றி ஊற வைத்திருப்பார்கள். தகதகவென நீண்ட நேரம்

எரியும். இதை வைத்து, சிலம்பம் ஆடுவது போன்று சரசரவென சுற்றுவார்கள். மற்றவர்களுக்கும் கொஞ்ச நேரம் சுற்றுவதற்குக் கொடுப்பார்கள்.

மாம்பலியை வைக்கோலில் பற்ற வைத்த உடன் நெருப்பு படபடவென எரியும். இடது புறமும் வலது புறமும் மாற்றி மாற்றி சிறிது நேரம் சுற்றுவோம். கொஞ்ச நேரத்திற்கு கம்மந்தட்டையும் எரியும். பிறகு பாதி எரிந்த கம்மந்தட்டைகளை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து கூம்பு போல் அடுக்கி எரிப்போம். மளமளவென நெருப்பு கொழுந்துவிட்டு எரியும் போது ஓடி வந்து தாண்டுவார்கள். முதலில் யார் தாண்டுவது என்று போட்டி நடக்கும். பெரிய பையன்களுக்கு கால் முடியெல்லாம் கருகிவிடும். சில பேர் ஓடிவந்து தாண்டுவது போல் பாவ்லா காட்டுவார்கள். இன்னும் சிலர் ஓடி வந்து தீயெரியும் இடத்திற்கு அருகே நின்று விடுவார்கள். பயந்தாங்கோழி என பெண்கள் கிண்டலடிப்பார்கள். மாம்பலி சுற்றுவதைப் பார்க்க பெரியவர்களும் வருவார்கள். பெண்களும் வந்து நிற்பார்கள். யாமெல்லாம் கொஞ்சமாகத் தீய் எரியும் போதுதான் தாண்டுவோம்.

தட்டைகள் எரிந்து முடிந்தவுடன் கங்குகளாகக் கிடக்கும். கால்களால் இதைத் தட்டி விட்டு உழுவார்கள். இப்படி உழுவது எல்லோருக்கும் பிடித்திருக்கும். ஆடிக் கொண்டும், ஒருவரையொருவர் தள்ளிவிட்டுக் கொண்டும், அடுத்தவர் மேல் கங்கை எத்தி விட்டும் மகிழ்ச்சியாக தீ மிதி நடக்கும். அதன் பின் கபடி ஆட்டம் ஆரம்பமாகும். இரவு நெடு நேரம் வரை விளையாடுவதுண்டு. பாடி வருபவரை பிடித்துக் கொள்வதில் யாம், திறமையாகச் செயல்படுவோம். பக்கத்தில் இருக்கும் மின்சார விளக்கு எரியவில்லையெனில் எங்கள் வீடு அருகே கபடி நடக்கும்.

கார்த்திகை திருவிழா இப்படியென்றால் தீபாவளி இன்னும் களைகட்டும். பெரும்பாலான சிறுவர்களுக்கு புதுத்துணிகள் கிடைத்துவிடும். இரவு எங்கள் அப்பா மைதா மாவில் இனிப்பு உருண்டை செய்வார். வெளியூருக்கு வேலைக்கு போனால் தாமதமாகத்தான் வீடு திரும்புவார்.

சுத்தமடம் அரிராம் கொத்தனாரும், பிச்சைக் கொத்தனாரும் அப்பாவின் தோழர்கள். இருவரும் பிள்ளைமார் சமூகம். அப்பாவும் அரிராம் கொத்தனாரும் பக்கத்து ஊர்களுக்கு மிதிவண்டிகளில் வேலைக்குச் சென்று வருவார்கள். அரிராம் கொத்தனார் ஒப்பந்த அடிப்படையில் வீடுகள் பிடித்து வேலைகள் செய்வார். எமது அப்பாவையும் கூட்டிக் கொள்வார். வெளியூர்களுக்குச் சென்று அங்கேயே பல நாட்கள் தங்கியும் வேலை செய்வார்கள். எமது வயதில் ஒரு பையன் படித்துக்

கொண்டு இருந்ததால் படிப்பு குறித்து எம்மிடம் அக்கறையோடு விசாரிப்பார். அன்புள்ளம் கொண்டவர்.

அகம்படியார் தெரு நிறைமதிக் கொத்தனாரும் அப்பாவின் நண்பர். இருவரும் போட்டி போட்டுக் கொண்டு வேலை செய்வார்கள். சாந்து சுமப்பவர்கள் பாடுதான் திண்டாட்டமாக இருக்கும். இவரது மூத்த பையன் சென்னையில் விஜயகாந்த் வீட்டில் வேலை பார்த்ததாகச் சொல்வார்கள். அவர்கள் வீட்டில் தினமும் பந்தி போன்று சாப்பாடு பரிமாறுவார்களாம். மகனை பார்க்கப் போய் வந்த கதையை அப்பாவிடம் சொல்லியிருக்கிறார்.

பிச்சைக் கொத்தனார் எங்கள் ஊரிலேயே தங்கிவிட்டார். நாடார் தெருவில் வீடு வாங்கினார்கள். இவரது பையன் சித்து அவர்கள் தையல் கலைஞர். படிக்கும் காலங்களில் இவரிடம் தைப்போம். ஆரம்பத்தில் தேவேந்திரர்கள் சங்க மடத்தில் வாடகைக்கு கடை வைத்திருந்தார்.

அப்பா வேலை செய்வதை பார்க்கப் போனால் சாந்து கண்ணுல தெறிக்கும் தள்ளிப் போய்யா எனச் சொல்வார். சில நேரங்களில் ஆசையாய் மணியாச்சிப் பலகையை வாங்கி தேய்த்துப் பார்த்திருக்கிறோம். எமது தந்தை நன்றாகவே வேலை செய்வார். தரைக்கு சிமெண்ட் பால் போட்டு தேய்த்து, மட்டநூல் வைத்து கோடுகளும், பூவு போன்ற வேலைப்பாடுகளும் செய்வதைப் பார்ப்பதற்கு ஆர்வமாக இருக்கும். தட்டியான நூலை வளைவுகளாக வளைத்து, சுரண்டியால் சற்று அழுத்தி பலவித வடிவங்களை உண்டாக்குவார்கள். சிறிய கம்பிகளை வளைத்தும் வைத்திருப்பார்கள். முகட்டுப் பூச்சின்போது கவனமாக இருக்க வேண்டும். இல்லையெனில் கண்ணில் சாந்து விழுந்துவிடும். சாரம் கட்டுவதில் கவனமாக இருக்கவேண்டும்.

எமது அப்பா வேலை முடிந்து வந்தவுடன் சுடுதண்ணீரில் குளித்து விடுவார். தீபாவளிக்கு இனிப்பு உருண்டை சுடுவதற்கு ஒன்பது மணிக்கு மேலாகிவிடும். உருண்டைகளை எண்ணெயில் சுட்டு சிறிய ஓலைப்பெட்டியில் போட்டு வைப்பார். யாம் சுடச்சுட சாப்பிட்டு நண்பர்களுக்கும் எடுத்துச் செல்வதுண்டு.

நாங்களும் தின்று உறவினர்களுக்கும் கொடுத்தது போக மீதம் இருக்கும் உருண்டைகளை மூன்று பங்காகப் பிரித்து எங்களுக்குக் கொடுத்துவிடுவார்கள். எமது பங்கை எண்ணி, வீட்டு முகட்டுச் சுவற்றிலோ அல்லது பானைகளுக்குள்ளேயோ ஒளித்து வைத்துவிடுவோம். அக்காவை ஏமாற்றி அவர்

பங்கை முதலில் முடித்துவிடுவோம். இரண்டு மூன்று நாட்கள் கூட எமது பங்கை ஒளித்து வைத்துக்கொண்டு தின்று திரிவோம். சில நேரங்களில் பூனை தின்று விட்டுச் சென்றுவிடும். எமக்கும் அண்ணனுக்கும் தகராறு வரும். சமாதானப்படுத்துவதற்குள் அக்காவிற்கு போதும் போதுமென்றாகிவிடும். கொஞ்சம் பெரிய பையனாக வர வரத் தான் இப்படி ஒளித்து வைத்துத் தின்பது குறைந்தது. அண்ணன் எங்குதான் ஒளித்து வைப்பாரென்று தெரியாது. கண்டு பிடிக்கவே முடியாது. சிலமுறை அதிரசமும் அம்மா செய்து கொடுத்திருக்கிறார்.

விடிந்தவுடன் புதுத்துணிகளைப் போட்டுக் கொண்டு துப்பாக்கி வாங்கச் செல்வோம். துப்பாக்கியும், பொட்டு வெடியும், கொஞ்சம் ஓலை வெடியும் கிடைக்கும். சீனி வெடியெல்லாம் அதன் பின்னர் தான் வந்தது. ஓலை வெடியைக் கூட கல்லின் மீது வைத்தே திரியில் பற்றவைப்போம். பூனை வெடியை பற்ற வைத்தால் கறுப்பாக வரும். இது சிறுவர்களுக்குப் பிடித்தமான பட்டாசு. அன்றைய நாட்களில் மிகச் சத்தமாக வெடிப்பது லட்சுமி வெடிதான். அதை தெருவுக்குள் போட்டால் பெரியவர்கள் திட்டுவார்கள். அதைப் போடுவதற்கு அடிகுழாய் பக்கமோ அல்லது கம்மாக் கரைக்கோதான் செல்லவேண்டும். எமது அண்ணன் போன்றவர்கள் களையெடுத்து காசு வைத்திருப்பார்கள். அதில் வெடிகள் வாங்குவார்கள். சில நேரங்களில் தேங்காய் மூடி, ஓலைப் பெட்டி, சிறிய மண் சட்டிகளைக் கவிழ்த்து வைத்து லட்சுமி வெடியை வெடிப்பார்கள். அவற்றை தூக்கி அடித்து வெடிப்பதைப் பார்ப்பதற்கு அவ்வளவு ஆர்வமாக இருப்போம்.

மதியம் ஆட்டுக்கறிக் குழம்புடன் சோறு சாப்பிடலாம். கையில் கொழுப்பாக ஒட்டும் என்பதால் யாம் சிறுவயதில் கறிக்குழம்பு சாப்பிடுவதற்குச் சங்கடப்படுவோம். அப்பா கம்பியில் ஈரலை மாட்டி சுட்டுக் கொடுத்தெல்லாம் சாப்பிட்டிருக்கிறோம்.

நாடார் தெருவில் பலபேர் அப்போது பட்டுக்கோட்டை, பேராவூரணி, தஞ்சாவூர் போன்ற பகுதிகளில் பாத்திர வியாபாரம் செய்தார்கள். தீபாவளிக்கு வரும் போது வித்தியாசமான வெடிகளை வாங்கி வருவார்கள். இரவு ஊரார் தூங்க ஆரம்பிக்கும் நேரத்தில் மகிமைக் கடை அருகே வெடிப்பார்கள். ஆத்தியப்ப நாடார் மகன் இப்படி நிறைய வெடிகள் வெடிப்பார். பலரும் சென்று வேடிக்கை பார்ப்போம்.

தீபாவளி போன்றே ஆயுத பூஜைக் கொண்டாட்டமும் சிறப்பாக இருக்கும். ஆயுத பூஜையன்று விடுமுறை என்றாலும் பாலகிருஷ்ணன் சார் பள்ளிக்கூடத்திற்கு வரச் சொல்லி விடுவார். பூஜை போட்டு எல்லோரையும் வரிசையாக உட்காரவைத்து

அரிசிப் பொரியும், சோளப் பொரியும் கொடுப்பார்கள். யாரெல்லாம் விரதம், கையைத் தூங்குங்கள் எனக் கேட்டு நேரத்தோடு சாப்பிட வேண்டும் என்ற அறிவுரையோடு அனுப்பி வைப்பார். நிறைய மாணவர்கள் விரதமிருப்பார்கள்.

காலையில் கடையில் வாங்கிய இட்லியோ, தோசையோ தேங்காய்ச் சட்னியுடன் கிடைக்கும். காலை உணவிற்குப்பின் வீட்டை சுத்தப்படுத்துவது தொடங்கும். பனைமரக் கட்டைகளில் ஒட்டிக் கொண்டிருக்கும் நூலாம்படையை அகற்றுவது சிரமமாக இருக்கும். மாலையில் சமையல் முடிந்தவுடன் விரதச் சாப்பாடு. கத்திரிக்காய் சாம்பார், வாழைக்காய் பொரியல் போன்றவற்றை குழல் அப்பளத்துடன் சாப்பிடலாம். அப்பளங்களை விரல்களில் நுழைத்து வைத்து ஒவ்வொன்றாகத் தின்பதும் உண்டு. இரவில் புத்தகங்களும், கொத்துவான், அருவாள், கொத்தனார் கரண்டி, மணியாச்சிப் பலகை, மட்டக்கம்பு போன்றவற்றை கழுவி, சந்தனம், குங்குமம் சாத்தி, தேங்காய் பழம் வைத்துச் சாமி கும்பிடுவோம். எல்லோர் வீடுகளிலும் தவறாமல் சாமி கும்பிடுவார்கள். சோளப் பொரி நிறைய வாங்குவார்கள். நெல் பொரியும் கொஞ்சம் வைப்பார்கள்.

ஆவடை நாடார் கடையில் ஆயுதபூஜை முடிய இரவு நெடுநேரம் ஆகும். பூஜையெல்லாம் முடித்து எல்லோருக்கும் நிறைய பொரி கொடுப்பார்கள். அதை வாங்குவதற்காக சிறுவர்கள் பலரும் காத்திருப்பார்கள். சிறுவர்கள் பலரும் இப்படி அனைத்துக் கடைகளுக்கும் செல்வதுண்டு. யாம் இப்படியெல்லாம் செல்லமாட்டோம்.

விநாயகர் சதுர்த்தியன்று களிமண்ணால் செய்த சிறிய விநாயகர் சிலையை பலகையில் வைத்து பள்ளியிலிருந்து ஊர்வலமாக மாணவர்கள் எடுத்து வருவார்கள். பள்ளிக்கூடத்தில் மதிய உணவு ஆக்கும் பூசாரி, விநாயகர் சிலையை அழகாகச் செய்வார். ஊர்வலம் அம்மன் கோயில் வரை சென்று திரும்பும். பின்னர் கணபதியை ஊரணிக் கண்மாயில் கரைத்து விடுவார்கள். வீடுகளில் கணபதி பூஜையெல்லாம் செய்யமாட்டார்கள்.

பொங்கல் விழா இன்னும் சிறப்பாக அமையும். நெல் அறுவடைக் காலமென்பதால் மக்கள் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள். மழை பெய்யாவிட்டால் நெல்லை விளைவிக்க மக்கள் தவதாயப்படுவார்கள்.

கண்மாய் முழுதும் நீர் நிரம்பி இருக்கும்போது மடை திறந்தால் நீர் சுழித்துக் கொண்டு ஓடும். நீர்ச் சுழலை அதிசயமாக நாங்கள் வேடிக்கை பார்ப்போம்.

செடியைப் பிடுங்கி நீர்க் குமிழிக்குள் போட்டால் மடை வழியாக அடுத்த பக்கம் வந்து விடும். வாய்க்காலில் இழுத்துக் கொண்டு செல்வதை ஓடிப் போய் எடுத்துவந்து மறுபடியும் சுழலுக்குள் போட்டு விளையாடுவோம். சில பையன்கள் சட்டையைக் கழற்றியும் எறிவதுண்டு. விவசாயிகள் தண்ணீரை வீணாக்காமல் கவனமாக மடையை அடைத்து வைப்பார்கள். குளிக்கும் போது விளையாட்டுக்கு மடையைத் திறந்து விடுவோம். பின்னர் அதை அடைப்பதற்குள் நாங்கள் திண்டாடிவிடுவோம்.

நெல் வயல்களிலும், கரிசல் காடுகளிலும் சோளக்காட்டுப் பொம்மைகள் ஊன்றியிருப்பார்கள். தலைக்கு மண் சட்டியை கவிழ்த்து, சுண்ணாம்பால் வெள்ளைப் புள்ளி வைத்திருப்பார்கள். உடலுக்கு வைக்கோல். சிலர் காக்காவை அடித்து தலைகீழாகவும் தொங்கவிட்டிருப்பர்.

கண்மாயில் தண்ணீர் குறைந்துவிட்டால் மடை வழியாகப் பாயாது. தண்ணீரும் குறைந்து, மழையும் பெய்யாவிட்டால் விவசாயிகள் முகத்தில் கவலை ரேகை படர்ந்து விடும். மடையைச் சுற்றி சிறிய வரப்பு வைத்து கண்மாயத் தண்ணீரை இறைப்பார்கள். பகல் இரவு பார்க்காமல் நீர் இறைப்பது முறை வைத்துத் தொடரும். முக்காலி போன்று மரக்கட்டைகளை ஊன்றி நடுவே கமலக்கட்டையை வைத்துவிடுவார்கள். நீருக்குள் இறங்கி தண்ணீரை அள்ளி ஊற்ற வேண்டும். இதற்கு ஒரு ஆள் போதும்.

பெட்டி போட்டால் இருவர் வேண்டும். சில நேரங்களில் நான்கு பேர் சேர்ந்து இரண்டு பெட்டிகள் போட்டு இறைப்பார்கள். கடைகளில் கிடைக்கும் எண்ணெய் வைத்திருந்த தகரப் பெட்டியின் வாயை அகற்றி கொச்சைக் கயிற்றால் சுற்றிக் கட்டுவார்கள். பின் இதோடு இறைக்கும் நீண்ட இரு கயிறுகளை, இரு பக்கமும் இணைப்பார்கள். நீர் இறைப்பவர்கள் இரு கைகளாலும் இரு கொச்சைக் கயிறுகளைப் பிடித்துக் கொண்டு சீராக நீரை அள்ளி மடையில் ஊற்றுவார்கள். நீர் வாய்க்கால் வழியே ஓடி வயலுக்குச் சென்றுவிடும். கதிர்விடும் நிலையில் நெல் வயல்கள் இருந்தால் ஓரளவிற்கு காப்பாற்றி விடுவார்கள். இறைக்கக் கூட நீர் இல்லையென்றால் பக்கத்தில் இருக்கும் தோட்டங்களிலிருந்து ரப்பர் குழாய் மூலம் நீரேற்றுவார்கள். ஒரு மணி நேரத்திற்கு இவ்வளவு ருபாய் என்று கணக்கு. இப்படி வியர்வை சிந்தி விளைவிப்பதாலேயே விவசாயிகள் பொங்கலை குடும்பத்தோடும் உறவினர்களோடும் சேர்ந்து உற்சாகமாகக் கொண்டாடுவார்கள்.

பொங்கலன்று இரண்டு மூன்று வீடுகளில் கூட்டுச் சேர்த்து, கட்டாகக் கரும்பை வாங்கி தங்களுக்குள் பிரித்துக்கொள்வார்கள். புத்தாடைக்கு மஞ்சள் தேய்த்துப் போட்டுக் கொண்டு சாமிக்கு காப்பு வைக்கச் செல்வோம். நாங்கள் முழுநீளக் கரும்பை எடுத்துக் கொண்டு காடுகளுக்கு காப்புக் கட்டச் செல்வோம். நண்பர்கள் ஒன்றாகச் சேர்ந்துதான் போவது. சொந்தக்காரர்கள் அனைவரின் காடுகளுக்கும் காப்பு வைப்போம். போகும் வழியிலேயே கன்னிப் பிள்ளைச் செடி, வேப்பிலை பிடுங்கிக் கொள்ளலாம். வீடுகளுக்கு வைப்பதற்கு முதல் நாளே சிறுவர்கள் சேர்ந்து கட்டுக் கட்டாகப் பிடுங்கிவிடுவோம். படப்புகளுக்கும் காப்புச் செடி வைப்பார்கள்.

எமது அக்கா கோலம் போடுவதால் கோலப் பொங்கல் வைப்பார். தினமும் பசுமாட்டுச் சாணம் வைத்து பூசணிப்பூ வைப்பதுண்டு. மாமா வீட்டில் மாட்டுப் பொங்கல் அன்றுதான் பொங்கல் வைப்பார்கள். பொங்கல் சீராக அருந்ததியர் தெருவைச் சேர்ந்த அழகிரி அவர்கள் கடகாப் பெட்டியில் அரிசி, பழம், கருப்பட்டி உருண்டை வைத்து எங்கள் வீட்டுக்கு கொண்டு வருவார். இது எமது தாத்தா காலத்திலிருந்து வரும் செய்முறை என்பார்கள். இது போல் பெரியப்பா வீட்டிற்கும் வரும்.

அருந்தியர்கள் ஊரின் தெற்கே வசிக்கிறார்கள். எங்கள் ஊரில் பகடை, சக்கலியர் என்பார்கள். தெலுங்கு பேசுவார்கள். எமது சிறுவயதில் கவனித்தவரை மற்ற தெருப் பெண்களுக்குள் சண்டை வந்தால் இந்தப் பெயர்களைச் சொல்லி ஒருவருக்கொருவர் அசிங்கமாகத் திட்டுவார்கள். ஆண்களும் கோபத்தில் வசவுச் சொற்களாக இந்தப் பெயர்களைச் சொல்லி அடுத்தவரை ஏளனம் செய்வார்கள். தற்போது இப்படித் தரக்குறைவாகப் பேசுவது குறைந்துவிட்டது.

இவர்கள் தெருவில் மாரியப்பன் அவர்கள் பெரிய மனிதராக இருப்பார். மோளையன் எனக் கூப்பிடுவார்கள். இவரது மனைவி லீலாவதி அம்மையார். இவர்களது பையன்கள் எட்டு, கருப்பசாமி மற்றும் வேல்முருகன். கருப்பசாமி எம்மோடு ஐந்தாம் வகுப்பு வரை படித்தார். பள்ளிக்கூடத்திற்கு தெற்கே இவருக்குத் தோட்டம் இருந்தது. பருத்தி, மிளகாய் போன்றவை பயிரிடுவார்கள். மாடுகள் வைத்து கமலை இறைப்பார்கள். எமது மாமாவோடு நன்கு பழகுவார். வண்டி மாடுகள் வைத்திருந்ததால் இராமலிங்க மாமாவோடும் நட்பாக இருப்பார். இராமலிங்க மாமா தெலுங்கும் பேசுவார்.

மாரியப்பன் அவர்களின் தம்பி அழகிரி ஊருக்கு வராமல் அந்தமானிலேயே பல வருடங்களாக இருந்தார். தம்பி குடும்பத்தையும் இவர்தான் பராமரித்து வந்தார். அழகிரி மனைவி திருமால். பையன்கள் சக்திவேல் மற்றும் சரவணன்.

பூச்சன், பூச்சியென்று பெரியவர்கள் இருந்தார்கள். களம் புடைப்பார்கள். குருசாமி எனும் கோனையன் பன்னிகள் வைத்திருந்தார். சவ்வு மிட்டாயும் விற்பார். பையன் கண்ணாயிரம். இவரது வீட்டருகே இருந்த குருசாமி என்பவரும் பன்னிகள் மேய்ப்பார். இவரது மகள்கள் கிட்ணம்மாள் மற்றும் திருமால். பண்டிகைக் காலங்களில் பன்றிக்கறி போடுவதை ஊரில் பலரும் வாங்குவார்கள். மூலத்திற்கு நல்லது என்பார்கள்.

லாலா என்ற பூச்சன் அவர்கள் நிறைய பால்மாடுகள் வைத்திருந்தார். வண்டி மாடும் இருந்தது. பிள்ளைகள் கிட்ணம்மாள் மற்றும் கோபால். கிட்ணம்மாள் எமது வயதுக்காரர் என்பதால் ஒருவருக்கொருவர் நலம் விசாரித்துக் கொள்வோம். எமது சிறுவயதில் தூத்துக்குடியிலிருந்து வந்த ஒரு குடும்பத்தார் மாரியப்பன் அவர்கள் வீடு அருகே இருந்தார்கள். இவர்கள் வீட்டிலிருந்த இளவயதுப் பெண் பொடி போடுவதால் பசங்கள் கிண்டலடிப்பார்கள்.

அம்மாசி என்பவர் ஆடுகள் மேய்ப்பார். மனைவி பெத்தக்காள். இன்று அவரது மகன்கள் இராமகிருஷ்ணன் மற்றும் சுப்ரமணி ஆடுகள் மேய்க்கிறார்கள். கார்த்திகை தீபத்திற்கு திருவண்ணாமலை சென்று வருவதாகச் சொல்வார்கள். தற்போது ஆதிதிராவிடர் குடியிருப்பு அருகே கிழக்குக் கண்மாய்க்குள் இவர்கள் வீடு கட்டிக் குடியிருக்கிறார்கள். வேறு சிலரும் இங்கே வீடுகள் கட்டியிருக்கிறார்கள்.

செட்டிகுளத்தான் அவர்களும் அவரது மனைவி கருப்பியும் சிரித்த முகத்துடன் பேசுவார்கள். இவர்களது பிள்ளைகள் சின்னுப்பாண்டி, சுப்ரமணி, சின்னு மற்றும் கண்ணன். பையன்கள் எம்மைப் பார்த்தால் எப்படி இருக்கிறீர்கள் என அன்போடு நலம் விசாரிப்பார்கள்.

அழகிரி அமைதியானவராக இருப்பார். எம்மைப் பார்த்தால் எப்ப வந்தீங்க என நலம் விசாரிக்கத் தவறமாட்டார். யாம் பாதையில் எதிரே வந்தால் வழிவிட்டு விலகி நிற்பதைக் கவனித்திருக்கிறோம். மனைவி சக்கம்மாள். பையன்கள் கருப்பசாமி மற்றும் பூச்செண்டு.

முத்துமாரி ஆடுகள் வைத்திருந்தார். மனைவி அய்யம்மாள். மகள்களும் சுப்ரமணி எனும் பெயரில் மகனும் உண்டு.

கதுவாளி அவர்கள் சிறிய ஆளாக இருப்பார். ஊர் சாட்டுபவர். இடுப்பில் கிடுகிட்டியை அடித்துக் கொண்டு ஒவ்வொரு தெருவாகச் சென்று சொல்ல வேண்டிய செய்திகளைச் சத்தமாகச் சொல்லுவார். மனைவி அழகரக்காள் அம்மையார். பையன்கள் முத்துமாரி, கோபால் மற்றும் சுப்ரமணி. பெண் பிள்ளைகளும் உண்டு. இவரது ஒரு மகளை தேவேந்திரர் தெருவைச் சேர்ந்த பையன் காதல் திருமணம் செய்தார்.

மாடு இறந்துவிட்டால் அதைத் தூக்கி வந்து இறைச்சியை அறுத்து கொடிகளில் காயப்போட்டிருப்பதை எமது சிறுவயதில் கவனித்திருக்கிறோம். காயவைத்து உப்புக் கண்டமாக வைத்துக் கொள்வார்கள். தோல் செறுப்பும் தைத்துக் கொடுப்பார்கள். சிறுவர்களான நாங்கள் கவன் வில் செய்வதற்கு தோல் கேட்டாலும் தருவார்கள். இவர்களிடம் தோல் வாங்கி, தேங்காய் மூடியில் ஒட்டி கொட்டு செய்தும், பூவரசம் இலையில் ஊதி செய்தும் விளையாடித் திரிந்திருக்கிறோம்.

ஊரில் யாராவது இறந்துவிட்டால் குழி வெட்டுவதும், பாடை கட்டிய மரத்தை தூக்கிச் செல்வதும் இவர்களது பணி. பல வருடங்களுக்கு முன்பு இதனை தேவேந்திரர்கள்தான் செய்து வந்தார்கள். எமது அண்ணன் போன்றவர்கள் இளைஞர்களாக இருந்தபோது, இச்செயலை இழிவானதாகக் கருதி தெருக்கூட்டம் போட்டு, குழி வெட்டப் போவதைத் தடுத்துவிட்டார்கள். ஊரில் பெரிய பகைமையே இதனால் வந்தது. மற்ற தெருக்காரர்கள் தேவேந்திரர்களை கூலி வேலைக்குக் கூப்பிடமாட்டார்கள். தேவேந்திரர்களும் உறுதியாக இருந்துவிட்டார்கள். அப்போதிலிருந்து அருந்ததியர்கள்தான் இறந்தோர்க்குக் குழி வெட்டும் வேலையைச் செய்கிறார்கள்.

விவசாய விளைபொருட்கள் அறுவடையின் போது களம் வெட்டுவது, சாணிப்பால் தெளிப்பது, கூட்டுவது மற்றும் புடைப்பது போன்ற வேலைகளை அருந்ததியர்கள் செய்வார்கள். ஒவ்வொரு வீட்டிற்கும் தனித்தனியாக இவ்வாறான ஆட்கள் இருப்பார்கள். விளைந்ததில் இவர்களுக்கும் கொஞ்சம் கொடுப்பார்கள்.

அருந்ததியர் தெருப் பெண்கள் ஆடித் திருவிழா, தீபாவளி, பொங்கல் போன்ற முக்கிய நாட்களில், ஒவ்வொரு வீடாகச் சென்று உணவு வாங்குவார்கள். காலையில் தோசை, இட்லி போன்றவற்றை வாங்கவும், மதியத்திற்குமேல் சோறு, கறிக் குழம்பு வாங்கவும் வருவார்கள். முன்னர் அருந்ததியர்கள் மிகவும்

ஏழைகளாக இருந்திருக்கலாம். அன்றைய காலகட்டத்தில் பலகாரங்கள் செய்வதற்கும், நெல்லுச் சோறு பொங்குவதற்கும், ஆட்டுக்கறி சமைப்பதற்கும் வசதிக் குறைவாக வாழ்ந்ததால், இப்படி பண்டிகை நாட்களில் வீடு தோறும் சென்று உணவு வாங்கும் வழக்கம் வந்திருக்கக்கூடும். திருமலைபுரம், இராஜகோபாலபுரம் போன்ற ஊர்களில் நடக்கும் திருவிழா நாட்களிலும் இது போன்று சாப்பாடு பெறுவதுண்டு. வீட்டு விசேஷங்களின் போது மீதமாகும் உணவையும் அன்போடு வாங்கிக்கொள்வார்கள்.

அருப்புக்கோட்டையில் படிக்கும்வரை அடிக்கடி ஊருக்கு வந்து செல்வோம். தூத்துக்குடி சிதம்பரனார் கல்லூரியில் முதுநிலை படித்தபோது அவ்வப்போது வந்து செல்வதோடு சரி. பின்னர் சென்னைக்கு ஆராய்ச்சி மாணவராகச் சென்றோம். வேலைக்குச் சென்றபின் ஊரில் தங்குவது இன்னும் குறைந்துவிட்டது. இருந்தாலும் ஊருக்கு வந்து செல்லும் போது அக்காவுடன் பேசி ஊரில் நடக்கும் எல்லா விவரங்களையும் தெரிந்துகொள்வோம். தற்போது அலைபேசி வசதி இருப்பதால் அனைத்து விரங்களும் உடனுக்குடன் தெரிந்துவிடுகிறது.

யாம், நன்றாகப் படித்து முதல் மாணவராகத் தேறியும் மேற்கொண்டு முதுநிலை படிப்பைத் தொடர இயலாமல் இருந்தோம். படிப்பதற்கு பெற்றோரைச் சிரமப்படுத்த வேண்டாமென்ற எண்ணத்தில் மற்ற கல்லூரிகளுக்கு விண்ணப்பம் செய்யாமல் இருந்துவிட்டோம். ஜவஹர்லால் நேரு பல்கலைகழகம், முதுநிலை உயிர்தொழில் நுட்பவியல் படிப்பிற்கு நுழைவுத் தேர்வை மதுரையில் நடத்தியது. இது ஊக்கத் தொகையுடன் கூடிய படிப்பு என்பதால் நண்பர்களோடு சேர்ந்து யாமும் தேர்வெழுதினோம்.

முதுநிலை படிக்கவில்லை என்பதையறிந்து எம்மை விட பாலு சார் தான் மிகவும் வருத்தமடைந்தார். ஏதேனும் வேலைக்குச் செல்லலாமென்று இருக்கிறோம் என்றதற்கு, உடனே நல்ல வேலை கிடைக்காதென்றும், படித்துக்கொண்டே வேலைக்கும் முயற்சி செய்தால் இரு வருடங்களுக்குள்ளாகவே ஏதேனும் போட்டித் தேர்வுகள் எழுதி வேலைக்குச் சென்றுவிடலாமென்றும் ஆலோசனை வழங்கினார். மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் முதுநிலை படிப்பதற்கு அன்று நுழைவுத் தேர்வு எழுதாததால் எந்தக் கல்லூரியிலும் சேர இயலாத நிலையில் இருந்தோம். பின்னர் துறைத் தலைவராக இருந்த கனகவேல் ராஜன் சாரும் மற்ற பேராசிரியர்களும் எமது நிலை குறித்துப் பேசினார்கள்.

தூத்துக்குடியில் உள்ள வ.உ.சிதம்பரனார் கல்லூரியில் நுழைவுத் தேர்வு இல்லையென்றும், இடம் காலியாக இருந்தால் சேர்த்துக்கொள்வார்கள் என்றும் கலந்து பேசி, அக்கல்லூரியின் துறைத் தலைவருக்கு ஒரு பரிந்துரைக் கடிதம் எழுதிக் கொடுத்து, உடனே சென்று பார்க்குமாறு கனகவேல் ராஜன் சார் அனுப்பினார். அடுத்த நாளே யாம் கடிதத்தை எடுத்துக்கொண்டு தூத்துக்குடி சென்றோம். அப்போது துறை ஆசிரியர்கள் அறையில் முனைவர் ரங்கநாதன் சார் இருந்தார். அவரிடம் கடிதம் கொடுத்தோம். சராசரி மதிப்பெண்கள் எவ்வளவு எனக் கேட்டதற்கு எண்பத்தி ஆறு என்றோம். முகம் மலர்ந்து, சேர்க்கை நடந்து கொண்டிருக்கிறது என்றும், இப்போதே அலுவலகத்தில் விண்ணப்பம் வாங்கி பூர்த்தி செய்துவிட்டுச் செல்லுமாறும் அறிவுறுத்தி, கண்டிப்பாக இடம் கிடைக்குமென்றும் ஆறுதல் வார்த்தைகள் சொல்லி அனுப்பினார். அது போன்றே சில நாட்களுக்குள் தேர்வுக் கடிதமும் வந்தது. உடனே அப்பாவோடு சென்று சேர்ந்துவிட்டோம். விடுதிக்கும் சேர்த்தே பணம் கட்டிவிட்டு வந்தோம்.

முதுநிலை சேர்ந்து விட்டோமே தவிர, விடுதிக்கு மாதாமாதம் எப்படி பணம் கட்டுவது என்பது பெரிய கேள்விக்குறியாக இருந்தது. கணேசமூர்த்தி அண்ணன் கொத்தனாராகவும், முனியசாமி அண்ணன் தோட்ட வேலையிலும் அப்போது சௌதி அரேபியாவில் இருந்தார்கள். யாம் அவர்களிடம் பணம் கேட்பதற்கு மிகவும் தயங்கினோம். முனியசாமி அண்ணன் அங்கு சம்பளம் குறைவாகப் பெற்று கஷ்டப்பட்டார். நாமும் சிரமம் கொடுக்கக்கூடாது என்ற மனநிலையில் யாமிருந்தோம்.

காரவீட்டுக் கருப்பையா மாமா அருப்புக்கோட்டை அருகிலிருக்கும் புலியூரானில் மூன்றாவதாகத் திருமணம் செய்திருந்த பாண்டியம்மாள் அத்தையின் தம்பி வைரமுத்து அண்ணன் அப்போது சென்னையில் தடய அறிவியல் துறையில் இரண்டாமாண்டு படித்துக்கொண்டிருந்தார். எம்மைப் பற்றிக் கேள்விப்பட்டு எம்மையும் அதற்கு விண்ணப்பம் செய்யுமாறு கேட்டுக் கொண்டிருந்தார். நுழைவுத் தேர்வு இல்லையென்பதால் அதற்கும் விண்ணப்பம் செய்திருந்தோம். தூத்துக்குடியில் சேர்ந்த பின்னரே நேர்காணல் கடிதம் வந்தது. நேர்காணல் கடற்கரை அருகிலிருந்த மாநில காவல்துறை இயக்குனர் அலுவலகத்தில் நடந்தது. அண்ணன் எமக்கு ஆய்வுக் கூடங்களையெல்லாம் சுற்றிக் காண்பித்தார். இந்திய அளவில் இருபது மாணவர்கள்தான் தேர்வு செய்யப்படுவார்கள் என்றும் இறுதிப் பருவ திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு கல்கத்தா சென்று ஆறு மாதங்கள் வரை தங்க

வேண்டுமென்றும் கூறினார். சென்னையில் விடுதியும் இல்லை. படித்துத் தேறினாலும் தமிழ்நாடு தேர்வாணையத்தில் மறுபடியும் தேர்வு எழுதித்தான் வேலைக்குச் செல்ல முடியும் என்ற நடைமுறை இருந்ததையும் அறிந்தோம்.

தடய அறிவியல் நேர்முகத் தேர்விற்குச் சென்றிருந்த போது, ஜமுனா தேவியைப் பார்க்க திருவொற்றியூருக்கு சரவணனோடு சென்று வந்தோம். பலபேரிடம் வழி கேட்டு வெகுநேரத் தேடலுக்குப் பின்பே நண்பர் இவர்களது வீட்டைக் கண்டு பிடித்தார். அக்கா திருமணமாகி திருவொற்றியூரில் இருந்தபோது, இவர்கள் பக்கத்து வீட்டுக்காரர்களாம். மிகுந்த அன்பு பாராட்டுவார்கள் என ஊருக்கு வரும்போதெல்லாம் சொல்லி நெகிழ்வார். எம்மையும் அடிக்கடி கேடபார்களாம். அண்ணன் காதல் பிரச்சினையில் அக்கா வீட்டிற்குச் சென்று பல மாதங்கள் தங்கியிருந்தார்.

யாம் சென்னைக்குச் செல்கிறோம் என்றதும், ஜமுனா வீட்டாரைப் பார்த்து விட்டு வரும்படி அக்கா பலமுறை நினைவூட்டி அனுப்பினார். நாங்கள் சென்றிருந்த சமயம் அவர் வேலைக்குச் சென்றிருந்தார். பள்ளியொன்றில் பகுதி நேர வேலை பார்த்ததாகச் சொன்னார்கள். அவரது அப்பா பாலசுப்ரமணியன் அவர்களும், அம்மாவும் எங்களை மிகவும் பேரன்புடன் வரவேற்று உபசரித்தார்கள். எம்மை நன்றாகப் படிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்கள். ஜமுனாவைப் பார்த்தது இனிய அனுபவம். அதன் பின்னர் இருவரும் சில கடிதங்கள் பரிமாறிக்கொண்டோம். முதுநிலை முடித்து சென்னையிலேயே இரு வருடங்கள் தங்கியிருந்த போதும் சந்தித்துக் கொள்ள சந்தர்ப்பம் வாய்க்கவில்லை.

தடய அறிவியல் நேர்காணலில் கேட்ட அனைத்துக் கேள்விகளுக்கும் பதில் சொல்லியிருந்தோம். தடய அறிவியல் துறையில் இரண்டு ஆண்டுகள் முதுநிலைப் படிப்பிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளதாகக் கடிதம் வந்தது. நிறையப் பணம் செலவாகும் என்பதால் சமாளிக்க முடியாதே என்று தூத்துக்குடியிலேயே எமது விலங்கியல் படிப்பைத் தொடர்ந்தோம்.

இதுவும் சிறப்பான கல்லூரியாகவே இருந்தது. பிள்ளைமார் சமூகத்தைச் சேர்ந்தவரால் நடத்தப்பட்டது. இங்கேயும் முதல்வராக இருந்த துரைசாமி சார் எங்கள் துறையைச் சேர்ந்தவர்தான். துறை பேராசிரியர்களும் கொஞ்சம் கண்டிப்புடனே இருந்தார்கள். அதே நேரம் முதுநிலை மாணவர்களுக்குரிய சுதந்திரமும் கிடைத்தது.

அருப்புக்கோட்டை விடுதியில் வைத்திருந்த தகரப் பெட்டியை யாம் கொண்டு செல்ல வெட்கப்பட்டு புதிதாக ஒரு சூட்கேஸ் வாங்கினோம். பழைய விடுதியைக் காலி செய்யும்போது கருணாமூர்த்திதான் அனைத்தையும் மிதிவண்டியில் ஏற்றி ஊருக்குக் கொண்டு வந்தார்.

ஓரிரு நாட்களிலேயே எல்லோரும் நண்பர்களாகிவிட்டோம். சாத்தூர் பக்கமிருந்து வந்த பழனிராஜனும் யாமும் வகுப்பில் இணைபிரியாத தோழர்களாகிவிட்டோம். விடுதியிலும் ஒரே அறை. பின்னர் எங்கள் அறைக்கு ஏரல் அருகே இருக்கும் ராஜபதியிலிருந்து தோழர் ரவி வந்து சேர்ந்தார். நெல்லை புனித ஜான் கல்லூரியில் படித்த சந்திரசேகரும் விடுதியில் தங்கியிருந்தார். சண்முக சுந்தரம் ஆத்தூர் பக்கமிருந்து தினமும் வந்து சென்றார். வேல் முருகன், சோமசுந்தரம் மற்றும் ..... உள்ளூர்க்காரர்கள்.

பெண்களும் எட்டுப்பேர் இருந்தார்கள். ஜூடிஸ் பூபால் ராயர், லிவின் ஹேமலதா, விஜயா மற்றும் சோமசுந்தரம், அப்துல் ஜாபர் உள்ளூர்க்காரர்கள். சாத்தூர் பத்மாவதி, மதுரையிலிருந்து ரமா பிரபா, நாகர்கோயில் பக்கமிருந்து வந்திருந்த லீனா கிரேஸ் மற்றும் லிண்டா எல்லோரும் நல்ல தோழிகள். கண்ணண் இரண்டு மூன்று மாதங்களில் அப்போது தொடங்கிய ஸ்டெர்லைட் ஆலை வேலைக்குச் சென்றுவிட்டார்.

பேராசிரியர்களில் ஓரிருவரைத் தவிர அனைவரும் முனைவர்களாக இருந்தார்கள். திறமையும், கண்டிப்பும், அன்பும் நிறைந்த பேராசிரியர்கள். பலரும் விலங்கியில் துறை சார்ந்த புத்தகங்கள் எழுதியிருந்தார்கள். இளநிலை படிக்கும் போது பரிணாமத்திற்குப் படித்த புத்தகம் எழுதிய ரங்கநாதன் சாரை நேரில் பார்க்கும் போது வியப்பாக இருந்தது. அதே போல் துறைத் தலைவராக இருந்த ஹுசைன் சார் புத்தகங்களையும் படித்திருந்தோம்.

ரங்கநாதன் சார் பாடத்திட்டம் தொடர்பான பல கருத்துகளையும் அழகாக தொகுத்துச் சொல்வார். பரிணாம வகுப்பு மிகவும் சிறப்பாக இருக்கும். பேராசிரியரின் பரிணாமப் புத்தகங்களும், நோய்க் காப்பியல் புத்தகமும் வெகு சிறப்பு. நேரத்தை துல்லியமாகக் கையாள்வார்.

ஹுசைன் சார் துறைத் தலைவராக இருந்தார். சிரித்த முகமாய் இருப்பார். வகுப்பெடுக்கும் போது சமூகம் சார்ந்த பல விசயங்களைப் பற்றியும் பேசுவார். சமூக

அக்கறை உள்ளவர்களாக அனைவரும் இருக்க வேண்டுமென்பதை அடிக்கடி வலியுறுத்துவார்.

சம்பத் சார் வகுப்பெடுக்கும் போது அனைவரும் கூர்ந்து கவனிப்போம். உயிரி புள்ளியியலை புரியுமாறு எளிதாக நடத்தினார். பேராசிரியரை வழியில் பார்த்து வணக்கம் சொன்னால் தலைக்கு மேலே கைகளை உயர்த்தி சிரித்துக்கொண்டே பதில் வணக்கம் சொல்வது எங்களுக்கு ஆனந்தமாக இருக்கும். இரண்டு ஆண்டுகள் முடிவில் எங்களுக்கிடையே மிகச் சிறந்த அன்பு மலர்ந்திருந்தது. தனிப்பட்ட முறையில் எம்மீது மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். ஆசிரியர் மாணவர் உறவு இன்றும் எங்களிடையே நீடித்து நிலைத்திருப்பதற்குக் காரணம் பேராசிரியரின் பெருங்கருணையே.

பேராசிரியர் மிகச் சிறந்த ரமண பக்தர். பகவான் ஸ்ரீரமணரைப் பற்றி சிறந்த புத்தகங்கள் எழுதியிருக்கிறார். பணி ஓய்விற்குப் பின் திருச்சுழியில் ஸ்ரீரமண மகரிஷியின் பெயரிலான ஆசிரமத்தில் தன்னை இணைத்துக் கொண்டு சமூகத் தொண்டுகள் செய்து வருகிறார். ஆசிரமம் சார்பாக சமீபத்தில் ஊட்டியில் உலக நன்மைக்காக பெரிய அளவிலான பிராத்தனைக் கூட்டத்தை ஏற்பாடு செய்து சிறப்பாக நடத்தினார்கள். இரண்டு நாட்கள் ஆய்வரங்கமும் சீரிய கருத்துக்களோடு நடந்தது. பேராசிரியரின் இனிய பேச்சை கேட்டுக் கொண்டே திருவண்ணாமலையில் கிரிவலம் சென்ற நாட்கள் என்றும் பசுமையானவை. திருமணத்திற்கு வந்திருந்து எங்களை ஆசிர்வதிக்கவும் செய்தார்.

எட்வின் சார் தம்பி என்று எங்களை அழைப்பது அழகாக இருக்கும். ஏதேனும் கேள்வி கேட்கும் போது நீங்க சொல்லுங்க தம்பி என்றே எல்லோரையும் அன்போடு அழைப்பார். பூச்சியியல் வகுப்பு சிறப்பாக நடத்துவார். யாம் பணிக்கு வந்து பாரதியார் பல்கலைக்கழகத்தில் புத்தாக்கப் பயிற்சியில் கலந்து கொண்டபோது, பேராசிரியரும் அதே பயிற்சிக்கு வந்திருந்தது இன்ப அதிர்ச்சி. ஆசிரியரும் மாணவரும் ஒரே அறையில் தங்கி இருந்தது யாருக்கும் கிடைக்காத கொடுப்பினை. அந்நாட்களில் எம்மை அவரது மாணவர் போன்றே நடத்தவில்லை. சக ஆசிரியர் போல் நட்பு பாராட்டினார். அறிவில் சிறந்தவர்களிடம் கற்றுக் கொள்வதற்கு நிறைய உள்ளது போலும். பேராசிரியர் சிறந்த பண்பு நலன்கள் நிரம்பியவர்.

சிவக்குமார் சார் பெரிய மீசை வைத்திருப்பார். சுற்றுச் சூழலியல் நடத்துவது அருமையாக இருக்கும். செய்முறை வகுப்பும் சிறப்பே. வைத்தி எனும்

வைத்தீஸ்வரன் சாரோடு தான் எல்லா மாணவர்களும் நெருக்கமாக இருப்போம். குறிப்புகள் கொடுத்து உதவுவார். நன்றாகப் பாடம் புகட்டுவார். வகுப்பும் கலகலப்பாக இருக்கும். வாடே, சொல்லுடே என்று எங்களைச் செல்லமாக அழைப்பார். யாம் எமது மாணவர்களையும் இது போன்று அழைப்பதுண்டு.

அருணாச்சலம் சார் பாடத்திட்டம் தாண்டி பொது அறிவு சம்பந்தமான பல கருத்துக்களையும் பேசுவார். இரண்டாமாண்டு பயிலும் போது பேராசிரியருக்கு உடல்நிலை சரியில்லை என்றார்கள். சில வருடங்களில் இரத்தப் புற்றுநோயால் இறந்துவிட்டதாக அறிந்தோம். நல்ல ஆசான். இப்ராஹிம் சார் எல்லோரிடமும் அன்பு பாராட்டுவார். அதே போன்று முகம்மது கனி சாரும். கனி சார் வந்தால் எங்களுக்கெல்லாம் குஷியாக இருக்கும். ஓரளவிற்கு ரிலாக்ஸாக இருக்கலாம். மற்ற பேராசிரியர்களிடம் முடியாது.

சண்முகவேல் சார் நிதானமாக வகுப்பெடுப்பார். உயிர் வேதியியல் திறம்பட சொல்லிக்கொடுத்தார். மாணவர்களையும் வகுப்புகள் எடுக்க உற்சாகப்படுத்துவார். குலுக்கல் முறையில் தேர்தெடுக்கப்பட்டதில் யாமே முதலாவதாக வகுப்பெடுக்க வேண்டி வந்தது. யாம் பதற்றத்தின் காரணமாக சுமாராகவே வகுப்பெடுத்தோம். பேராசிரியர் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலராகவும் பணியாற்றினார். சுகாதாரம் குறித்து அருமையாகப் பேசுவார்.

ஜேம்ஸ் சார் மாணவர்கள் மீது அக்கறையோடு இருப்பார். சில நேரங்களில் மிகுந்த கண்டிப்போடு நடந்துகொள்வார். மாணவர்களிடம் சிறுசிறு கேள்விகள் கேட்பார். எம்மீது மிகுந்த அன்பும், நன்றாகப் படித்ததால் நிறைய எதிர்ப்பார்ப்பும் வைத்திருந்தார். சம்பத் சாரிடம் பகுதி நேரமாக முனைவர் ஆய்வினைச் செய்துகொண்டிருந்தார். யாம் இரண்டாம் ஆண்டு படிக்கும்போது, பேராசிரியர் வெளியூர் செல்ல வேண்டியிருந்தால், மீன்களுக்கு உணவிடும் பணியை எம்மிடம் கொடுப்பார். மீன் தொட்டிகளில் தண்ணீரும் மாற்ற வேண்டும்.

எம்மை அழைத்து மீன்களைப் பற்றியும் அதன் இனப்பெருக்க நடத்தை முறைகள் பற்றியும் ஆர்வம் பொங்க சொல்லிக்கொடுத்தார். யாமும் பேராசிரியரும் ஆராய்ச்சிக்காக தேளி மீன் வாங்க புன்னைக்காயல் பகுதிகளுக்கு இருசக்கர வாகனத்தில் சென்று வருவோம். ஓரிருமுறை மீன்களுக்கு உணவாகப் போடும் பூச்சி போன்ற ஆர்ட்டிமியாவை சேகரிப்பதற்கும் சென்றதுண்டு. உப்பளங்களில் இவை சிவப்பாக நீந்தித் திரியும். சிறிய வடிகட்டிகளில் இவற்றை சேகரித்துவிடலாம். இரு

சக்கர வாகனத்தில் செல்லும் போது பேராசிரியரும் யாமும் மகிழ்ச்சியாக பேசிக் கொண்டு செல்வோம். பண உதவி வேண்டுமா என்றெல்லாம் எம்மிடம் அன்போடு விசாரிப்பார். எப்போதுமே ஆசிரியர்களுக்கு நன்றாகப் படிக்கும் மாணவர் மீது தனிக்கவனம் இருக்கும். அவரிடமே கொஞ்சம் நல்ல குணநலன்களும் இருந்து விட்டால் ஆசிரியர்கள் மிகுந்த அன்பு பாராட்டுவார்கள்.

ஜேம்ஸ் சாரின் மற்றொரு சிறப்பு எங்களை திருவனந்தபுரத்திற்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் சென்றது. எங்களுக்கு அளவிலா உற்சாகமும் உள மகிழ்வும் கொடுத்த மிகச்சிறந்த சுற்றுலாவாக இது அமைந்தது. தூத்துக்குடியிலிருந்து வேனில் கிளம்பி காலையில் நெய்யாற்றங்கரை அணைக்குச் சென்று விட்டோம். அணையைச் சுற்றிப் பார்த்து மகிழ்ந்தோம். பெரிய பெரிய மீன்களாக நீந்தித் திரிந்ததை பார்த்து மிகுந்த பரவசம் அடைந்தோம். பொரி வாங்கிப் போட மறக்கவில்லை.

அங்கிருந்து பத்மநாபசுவாமி கோவில். அங்கு கொடுத்த வேஷ்டி, துண்டுகளை அணிந்து கொண்டு சிறப்பான சுவாமி தரிசனம் முடித்தோம். பின்னர் வேலி என்ற இடத்தில் படகுச் சவாரி. பேராசிரியர் உப்பங்கழி முகத்துவாரம் பற்றி விளக்கிக் கொண்டு வந்தார். மதிய உணவுக்கு கோழிபிரியாணி. பின்னர் விலங்கியல் பூங்காவில் சிங்கம் போன்ற விலங்குகளைப் பார்த்து நண்பர்கள் எல்லோரும் குதூகலித்தோம். அதன்பிறகு அழகிய கோவளம் கடற்கரை. வெளிநாட்டுப் பெண்களை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே கடற்கரையில் செம ஆட்டம். அங்கிருந்து மார்த்தாண்டம் தாண்டி ரப்பர் தோட்டங்களைக் கண்டு களித்தவாறே திற்பரப்பு அருவிக்கு வந்து சேர்ந்தோம். கொஞ்சம் இருட்டியிருந்தாலும் அருவித் தண்ணீரில் சுகக்குளியல் போடத் தவறவில்லை. தண்ணீர் கொஞ்சமாகக் கொட்டியது. வரும் வழியில் வேன் ஓட்டுநரை சரிக்கட்டி நெல்லையில் வான்மதி இரண்டாம் ஆட்டம் பார்த்தோம். படத்தின் கதாநாயகன் பெயர் கிருஷ்ணா என்பதால் நண்பர்களின் ஜாலியான கிண்டலுக்கு யாம் ஆளானோம். அந்த வயதிற்கே உரிய விளையாட்டும் கேலியும் சிரிப்புமாக இன்பச் சுற்றுலா முடிந்தது.

இரண்டாமாண்டு படிக்கும்போது சூழியல் பாடத்தின் செயல் வகுப்புக்காக முக்காணி அருகே இருந்த பெரிய கண்மாய்க்கு எல்லோரும் சென்றுவந்தோம். ஆய்வு உபகரணங்களையெல்லாம் எடுத்துக் கொண்டு உணவு விடுதியில் இரண்டு

வேளைக்கு உணவும் வாங்கிக் சென்றோம். எமக்கு நீச்சல் நன்றாகத் தெரியுமென்பதால் யாமும் சந்திரசேகரும் குளத்தின் ஆழத்திற்கு சென்று ஹைட்ரில்லா செடிகளை பிடுங்கி வந்தோம். மாணவர்களோடு சேர்ந்து ஆனந்தக் குளியல் போட்டோம். பெண்கள் வேடிக்கை பார்த்துச் சிரித்தார்கள். மாலை திருச்செந்தூருக்குச் சென்று முருகனை தரிசித்துவிட்டு விடுதிக்குத் திரும்பினோம்.

சுப்பையா அண்ணன் ஆய்வுக் கூட உதவியாளராக இருந்தார். மாணவர்களிடம் மிகுந்த அன்பு கொண்டிருப்பார்.

அருப்புக்கோட்டையில் படிக்கும் போது யாம் கல்லூரி நூலகத்திற்கு அடிக்கடி செல்வதுண்டு. சிதம்பரனார் கல்லூரியின் நூலகமும் சிறப்பாக இருந்தது. நூலகர் கருப்புச் சட்டை போட்டிருப்பார். திராவிடர் கழகத்தை சார்ந்தவர் என்பார்கள். போட்டித் தேர்வுகளுக்கான அறிவிப்புகள் வரும்போது வகுப்புகளில் வாசிப்பதற்கு தவறாமல் அனுப்புவார். இவரது ஆலோசனையைக் கேட்டே யாம் சி.எஸ்.ஐ.ஆர். தேர்வுக்கு விண்ணப்பித்தோம். மாணவர்கள் நூலகத்திற்கு வருவதை மிகவும் ஊக்கப்படுத்துவார்.

நான்கு மணிக்கு கல்லூரி முடிந்தவுடன் பெரும்பாலும் யாம் நூலகத்திற்குச் சென்று விடுவோம். சில மாணவர்கள்தான் இவ்வாறு வருவார்கள். நேஷனல் ஜியோகிராபிக் சொஸைட்டிலிருந்து வழவழப்பான தாளில் மிக நேர்த்தியான புகைப்படங்களுடன் கூடிய புத்தகங்கள் நிறைய இருக்கும். ஒவ்வொரு தலைப்புத் தொடர்பாகவும் வரிசையாக புத்தகங்கள் அடுக்கப்பட்டிருக்கும். எமது விருப்பத் தேர்வாக இந்தப் புத்தகங்கள் இருந்தன. ரீடர்ஸ் டைஜஸ்ட், காம்படிட்டிவ் சக்சஸ் போன்றவையும் நிறையப் படிப்பதுண்டு. நூலகத்தில் பெண் ஊழியர் இருப்பார். இறுதியாக நூலகத்தை மூடும்போது யாம் மேலே இருக்கும் ஷட்டரை கொக்கியால் இழுத்து அவருக்கு உதவுவோம்.

முதலாமாண்டில் சேர்ந்தபோது இரண்டாமாண்டு மாணவர்கள் எங்களுக்கு வரவேற்பு விழா நடத்தினார்கள். திராட்சை கோர்ப்பது, பலூன் உடைப்பது, இட்லி சாப்பிடுவது போன்ற பல விளையாட்டுப் போட்டிகள் வைத்து பரிசு கொடுத்தார்கள். எம்மை கராத்தே பண்ணச் சொன்னார்கள். யாமும் கால் கைகளை ஆட்டினோம். ஓரே கிண்டல். பேராசிரியருக்கும் விவசாயிக்கும் என்ன வித்தியாசமென்று கேட்டார்கள். அந்த வார ஆனந்த விகடனில் வந்திருந்ததை யாம் படித்திருந்ததால் சட்டென, விவசாயி அறுத்துப் போரடிக்கிறார், பேராசிரியர் போரடித்து அறுக்கிறார்

எனச் சொல்லிவிட்டோம். எல்லோருக்கும் ஆச்சரியம். பேராசிரியர்கள் மறுபடியும் யாம் என்ன சொன்னோம் எனக் கேட்டு அர்த்தம் தெரிந்து சிரித்தார்கள். இறுதிப் போட்டியில் வேகமாக இட்லி சாப்பிட்டு சண்முக சுந்தரத்தை யாம் வென்றோம். பரிசாகக் கொடுத்த அழகான கண்ணாடி தண்ணீர் ஜக்கை எமது பெற்றோரிடம் காட்டி மகிழ்ந்தோம்.

சீனியர் மாணவர்களில் கிட்டோபர் அண்ணன் எம்மீது அன்பாக இருப்பார். யாம் நன்றாகப் படித்ததால் எம்மை படிப்பு சார்ந்து ஊக்குவிப்பார். பாலசுப்ரமணி அண்ணனும் நட்பாக இருப்பார். ஹேமலதா எம்மைப் பார்த்தால் அழகாகச் சிரிப்பார். அனைத்து விலங்கியல் மூத்தோருக்கும் நன்றி.

வகுப்புத் தோழர்களில் பழனி, எம்.ஜி.ஆர் ரசிகர். தனியாகச் சென்று எம்.ஜி.ஆர் படங்கள் பார்த்து வருவார். எம்.ஜி.ஆர் பாடல்கள் பாடிக் கொண்டும், நடித்துக் கொண்டும் விடுதி அறையில் ஜாலியாக இருப்பார். எம்.ஜி.யாரும் சரோஜா தேவியும் என இவர் ஆரம்பித்தால் நாங்கள் ஐயோ சாமி என்று விடுதி அறையிலிருந்து விளையாட்டாக ஓடுவோம். அந்த அளவிற்கு பரம ரசிகர். இவரது அண்ணன் இராணுவத்திலிருந்தார்.

ரவியும் யாமும் நெருங்கிய தோழர்களாக இருந்தோம். ரவி எம்மீது மிகுந்த அன்பும் மரியாதையும் வைத்திருந்தார். பள்ளி, கல்லூரிகளில் எளிதாக சாதி அடையாளம் தெரிந்து விடும். அட்டவணை இனத்தவரைப் பற்றிய ஏதேனும் தகவல் கேட்டு சுற்றறிக்கை வரும். அது போன்றே படிப்பு உதவித் தொகை போன்ற விபரங்களும் கேட்பார்கள். சில நேரங்களில் பெயர்களை வாசித்து, துறைத் தலைவரையோ, அலுவலகத்தையோ சென்று பார்க்கவும் சொல்வார்கள். இப்படியாக அனைத்து மாணவர்களின் சாதியும் அதன் உட்பிரிவுகளும் தெரிந்து விடும். ஒரே சாதி மாணவர்களெனில் இயல்பாகவே ஒருவித நெருக்கம் உருவாகும். இப்படியான சில பேரோடுதான் படிப்பு முடிந்த பின்பும் நட்பு தொடரும்.

எமக்கும் ரவிக்குமான நட்பு இப்படியானதே. வகுப்பில் அவ்வளவு நெருக்கம் இருக்காது. விடுதியில் தங்கியவுடன் ஒன்றாகச் சுற்றும் அளவிற்கு நட்பு வளர்ந்தது. சொந்த ஊர் நவதிருப்பதிகள் அருகே ராஜபதி. சில நேரங்களில் இந்தப் பகுதியிலிருக்கும் திவ்ய தேசங்கள் பற்றி சொல்லக் கேட்டிருக்கிறோம்.

விடுதியில் ரவியைப் பார்க்க இவரது உறவினர் கணேசன் சார் வருவார். கஸ்டம்ஸ் துறையில் அதிகாரியாக இருந்தார். எம்மீதும் அன்பு பாராட்டுவார்.

இரண்டாமாண்டு முடிந்த பின்னர் ரவி வீட்டிற்குச் சென்று வந்தோம். அதன்பின் சிலமுறை சென்றிருக்கிறோம். தாமிரபருணி ஆற்றங்கரையோரம் அழகிய ஊர். ரவியின் அம்மா மிகுந்த அன்புடன் உபசரிப்பார். சண்முகம் அண்ணனும் அக்கறையோடு நலம் விசாரிப்பார்கள். கால்வாயில் வரும் தண்ணீரில் குளித்து வயிறு நிறைய சாப்பிட்டுவிட்டு, வீடு அருகே இருக்கும் வாழை தோப்பில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்போம். ஒரு முறை பொங்கலுக்குச் சென்று இவர்கள் வீட்டில் வைத்திருந்த காற்கறிக் குழம்போடு பச்சரிசி சாதத்தை சாப்பிட்டது மறக்க முடியாத அனுபவம். எம்மீது பேரன்பு கொண்ட அருமை நண்பருக்கு நன்றி.

ஒவ்வொரு முறையும் திவ்ய தேசங்களை சுற்றிப் பார்க்கக் கூப்பிடுவார். யாம் தான் மறுத்துவிடுவோம். ஒரு முறை ஆழ்வார் திருநகரிக்கு இருசக்கர வாகனத்தில் அழைத்துச் சென்றார். அப்போது எமக்கு நம்மாழ்வார் பற்றி ஒன்றும் தெரியாது. ஆழ்வார் ஒளிந்திருந்த புளியமரத்தைக் காட்டினார். கோவிலிலும் தரிசனம் செய்தோம்.

வேல்முருகன் சிறந்த நண்பர். எம்மீது மிகுந்த அன்பு பாராட்டுவார். சமூக சேவை செய்வதில் விருப்பமாக இருந்தார். பிரம்மகுமாரிகளின் இராஜயோகத் தியானத்தில் மிகுந்த ஈடுபாட்டுடன் காணப்பட்டார். மவுண்ட் அபு சென்று வந்த கதையெல்லாம் சொல்வார். இனிமையாகவும், குறைவாகவும், நிதானமாகவும் பேசுவார். எல்லோருக்கும் நண்பர். நேரம் கிடைக்கும்போது வகுப்பறையில் இருவரும் ஆன்மீகம் குறித்து காரசாரமாக விவாதித்திருக்கிறோம். இருவரும் சேர்ந்து எமது அறையில் மைக்ரோடோம் சிலைடுகளை இரவெல்லாம் தூங்காமல் செய்ததுண்டு. திருமணம் வேண்டாம் என்று சொல்லி வந்தார். முதுநிலை முடிந்தபின் தூத்துக்குடி செல்லும் போது ரவியோடு சேர்ந்து நண்பரின் வீட்டிற்குச் செல்வோம். அப்பா, அம்மா அன்பானவர்கள். எங்களிடம் நண்பரைத் திருமணம் செய்ய வலியுறுத்துமாறு சொல்வார்கள். நாங்கள் பேச்சை ஆரம்பித்தால் நண்பர் அதை சாமர்த்தியமாகத் திசை திருப்பிவிடுவார்.

சந்திரசேகருக்கு யாம் படித்துக்கொண்டே இருப்பதைப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கும். நீங்கள் படிக்கும் வரை யாமும் படிப்போம் என்று போட்டி போட்டுப் படிப்பார். நிறையக் குறிப்புகள் எடுத்து வைத்திருப்பார். இருவரும் சேர்ந்து சுண்டல்பயறு ஊற வைத்துக் காலையில் தின்போம். முட்டையும் பச்சையாகக்

குடிப்பதுண்டு. தினமும் அதிகாலையில் கல்லூரி மைதானத்திற்குச் சென்று ஓடுவோம். மாலையில் பார் கம்பியிலும் உடற்பயிற்சி தொடரும்.

ஜாபர் நன்றாகப் படிப்பார். சோமு ஆண்டு விழாவில் மேற்கத்திய நடனம் ஆடி அசத்தினார். சண்முக சுந்தரம் ஒல்லியாக உயரமாக இருப்பார். பங்காளி என்று எல்லோரையும் செல்லமாக அழைப்பார். இனிய நண்பர்கள்.

பெண்களில் ஜூடிஸ் அன்புத் தோழி. மில்லர்புரத்திலேயே வீடு இருந்தது. கடை வைத்திருந்தார்கள். அரிதாகவே கடைக்குச் செல்வோம். அண்ணன்களுக்கு பயங்கர மரியாதை கொடுப்பார். ஹேமா, விஜயா நன்றாகப் படிப்பார்கள். முதல் மதிப்பெண் யார் வாங்குவது என்று எங்களுக்குள் போட்டி இருக்கும். தோழிகளுக்குள் நடக்கும் செல்லச் சண்டைகளில் நாங்கள் மதுரைக்காரர்கள் என பிரபாவோடு சேர்ந்து கொள்வோம். லீனா நன்றாகப் படிப்பார். லிண்டா அமைதியானவராக இருப்பார். பத்மாவதி சிரித்த முகமாய் இருப்பார். இனிய தோழிகள்.

செய்முறை வகுப்புகள் மகிழ்சியானவைகளாக இருக்கும். சிலர்தான் ஒழுங்காகச் செய்வோம். சூழியல் செய்முறையில் நீரின் வெப்பத்தைக் குறைக்க ஐஸ்க்கட்டிகள் கொடுத்தார்கள். அதை வைத்துக்கொண்டு ஏராளமான குறும்புகள் செய்தார்கள். மரபியலில் மென்டலின் விதிகளைக் கண்டறிய பாசிகள் கொடுப்பார்கள். பாசிகளை வைத்தும் நன்றாக விளையாடினோம். எப்படியோ விடைகளையும் சரியாக எழுதிவிட்டோம். முதலாமாண்டில் வகுப்புத் தோழிகளோடு யாம் அதிகமாகப் பேசியதில்லை. ஏதேனும் தேவை இருந்தால்தான் பேசுவோம். மற்றபடி அரட்டை அடிப்பதெல்லாம் இருந்ததில்லை. இரண்டாமாண்டில் ஓரளவிற்கு நண்பர்களாகி இருந்ததால் கொஞ்சம் பேசுவதுண்டு. எம்மோடு ஏதேனும் பேச வேண்டுமென்பதற்காக வகுப்பில் நுழையும் போது உடைகளின் நிறத்தை வைத்து சாக்லேட் கேட்பார்கள்.

ஒருமுறை பத்மாவதி அவர்களது தோட்டத்தில் விளைந்த கொய்யாப்பழங்களை எங்களுக்குக் கொடுப்பதற்காக மஞ்சள் பையில் போட்டுக் கொண்டுவந்திருந்தார். உள்ளூர்க்காரர்கள் மஞ்சள் பையைக் கேலி பண்ண, யாம் அதற்கு ஆதரவாகப் பேசினோம். எமக்கு மஞ்சள்பை என்று பெயரே வைத்துவிட்டார்கள். மீன் வாங்குவதற்கு பிளாஸ்டிக் வாளிகள் தூக்கித் திரிவதால் பக்கெட் கிருஷ்ணா என்றும் பெயருண்டு. முதல் மாடியில் வகுப்பு இருக்கும். கீழே

மீன் தொட்டிக்கு யாம் தண்ணீர் மாற்றும் போது கவனித்துவிட்டால் கேலி செய்து சிரிப்பார்கள்.

தோழிகளிடம் விளையாட்டுக்கு யாம் ஏதாவது சொல்வதுண்டு. எமக்கு மாமா பெண்ணோடுதான் திருமணம் என்றும் சிறுவயதிலேயே நிச்சயம் செய்துவிட்டதால் மீற இயலாது என்றும் கூறினோம். மாமா பெண் இப்போது என்ன செய்கிறார் எனக் கேட்டதற்கு எருமை மாடுகள் மேய்க்கிறார் என்றும் சமர்த்தாகப் பதில் சொல்லி இருந்தோம். எல்லோருக்கும் கவலை. எருமை மாடு மேய்க்கும் பெண்ணைக் கட்டாதே என்று ஆலோசனைகள் வேறு. எப்போது ஊருக்கு வந்து சென்றாலும் எருமைப் பெண் எப்படி இருக்கிறாள் எனத் தவறாமல் நலம் விசாரிப்பார்கள். யாம் சிரித்துக் கொள்வோம்.

எமது தந்தை ஆத்திரேலியாவில் இருக்கிறார் என்றும், இரண்டாவது மனைவியோடு அங்கே வசிக்கிறார், எம்மைப் பார்க்க ஓரிரு நாளில் கல்லூரிக்கு வருகிறார் என்றும் ஒரு பொய்யைச் சொல்லி வைத்திருந்தோம். இரண்டாவது நாளில் கோட்சூட் போட்டுக் கொண்டு வராண்டா வழியாக துறைத் தலைவரை பார்க்க யாரோ ஒருவர் வந்தார். வந்தவர் சிறிது நேரத்தில் சென்று விட்டார். நண்பிகளுக்கு ஒரே ஏமாற்றம். எம்மைப் பார்க்காமல் சென்று விட்டாரே என வருந்தினார்கள். பெரிய தங்கும் விடுதி பெயரைச் சொல்லி, அங்கே தங்கியிருக்கிறார், யாம் காலையிலேயே போய் பார்த்துவிட்டோம் என்று சமாளித்துக் கொண்டோம்.

எம்மோடு இளநிலையில் படித்த மகாராணி காமராஜ் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். ஆய்வரங்கத்திற்கு அங்கு சென்ற தோழிகள் அவரோடு பழக்கமாகி விட்டார்கள். கல்வியியல் எல்லோரும் சேர்ந்து படித்தார்கள். எம்மீது மாறாத அன்பும் பெரு மதிப்பும் வைத்திருந்த அன்புத் தோழிகளுக்கு யாம் மிகுந்த நன்றி பாராட்டுகிறோம்.

காலையில் ஊரிலிருந்து கிளம்பி அருப்புக்கோட்டை பேருந்து நிலையத்தில் தூத்துக்குடி, திருச்செந்தூர் பேருந்துகளுக்குக் காத்திருக்க வேண்டும். சில நேரங்களில் வெகு நேரத்திற்கு பேருந்து வராமல் நம் பொறுமையைச் சோதிக்கும். திருச்செந்தூரில் முக்கிய நாட்களெனில் பேருந்துகளில் கூட்டம் நிரம்பி வழியும். முட்டி, மோதி ஏறி விடுவோம். முக்கியமான வகுப்பு இருக்கிறதெனில் யாம் முதல்

நாள் மதியமே கிளம்பிவிடுவது வழக்கம். யாம் அடிக்கடியும் ஊருக்கு வரமாட்டோம்.

பேருந்தில் ஏறியவுடன் இருக்கை கிடைக்கிறதா எனத் தேட வேண்டியது முதல் வேலை. இடம் கிடைக்கவில்லையெனில் பரவாயில்லை என மனதை தேற்ற வேண்டியதுதான். இருக்கும் கூட்டம் காணாதென்று கோமதி திரையரங்கம் நிறுத்தத்திலும் கூட்டம் முண்டியடித்து ஏறிக் கொள்ளும். மருந்து நெடியை வைத்து அரசு மருத்துவமனை நெருங்குவதை அறியலாம். மருத்துவமனையைத் தாண்டி பெரிய கண்மாய் இருக்கும். ஒரு காலத்தில் அழகிய கண்மாயாக இருந்திருக்கும். தொன்னூறுகளிலேயே சாக்கடை கலந்து நாற்றமடிக்கும் கண்மாயாக மாறிவிட்டிருந்தது. அருப்புக்கோட்டையின் வளர்ச்சிக்கு முதல் பலி இந்தக் கண்மாய் போலும். தொடர்ந்து சாலையின் இருபுறமும் அழகிய கரிசல் காடுகள் நம்மை வரவேற்கும். சோளம், பருத்தி, மல்லி என பயிரிட்டிருப்பார்கள். இன்று இவைகளைப் பார்க்க முடியாது. பள்ளிகள், கல்லூரிகள், வீடுகள் என கரிசல் காடு கட்டிடங்களாக மாறிவிட்டது.

சுற்றுச்சாலை பணி முடிந்திருந்தாலும் அவ்வளவாகப் போக்குவரத்து இல்லாமல் இருந்தது. வழியில் இருக்கும் கிராமங்களைத் தாண்டி பேருந்து நேரே பந்தல் குடி உணவு விடுதியில் கால் மணி நேரத்திற்கு நிற்கும். நடத்துனர், ஓட்டுனர் சாப்பிடுவார்கள். மற்ற பயணிகள் பெரும்பாலும் தேநீர், இளநீர் குடிப்பார்கள். போண்டா, வடையும் கிடைக்கும். இளநீர் சப்பைத் தண்ணீராக இருக்கும். முன்னர் பேருந்து போகும் திசையிலும் வரும் திசையிலும் இரண்டு உணவகங்கள் இருந்தன. பின்னர் வந்த நாட்களில் ஒன்று மட்டுமே இருந்தது. அரசு பள்ளிகூடம், பஞ்சாலை என வேகமெடுக்கும் பேருந்து வழியில் வரும் பெரும்பாலான ஊர்களில் நிற்காது. கரிகல் காடுகள் நம் கூடவே பயணித்து வரும். மேலும், பிரம்மாண்டமான மின்சாரக் கோபுரங்கள் நம் பார்வைக்கு பட்டுக்கொண்டே இருப்பதையும் காணலாம்.

ராம்கோ சிமெண்ட் நிறுவனத்தார் சுண்ணாம்புக் கற்கள் தோண்டி எடுக்கும்போது உருவான மண்ணைக் குவித்து உண்டாக்கியிருக்கும் செயற்கை மலைகள் நம்மை ஆச்சரியத்திலாழ்த்தும். கருவேல காடுகளும் நம்மை துரத்திக்கொண்டே பயணிக்கும். ஆங்காங்கே தீப்பெட்டி தொழிற்சாலைகள் தென்படும். பெண்கள் தூக்குவாளிகளோடு சென்று கொண்டிருப்பார்கள். வைப்பாறு

நெருக்கத்தில் ஏராளமான செங்கல் சூளைகள் கண்ணில்படும். ஓடுகளும் தயாரிப்பார்கள். மூட்டம் போடும் வேலைகளும் மும்முரமாக நடந்து கொண்டிருக்கும்.

வைப்பாறு மழைக்காலத்தில் கூட வறண்டே காணப்படும். நல்ல அகலமான ஆறு. மணல் குவிந்து கிடக்கும். ஆற்றைத் தாண்டி சிறிது நேரப் பயணத்தில் சிந்தலக்கரை வந்துவிடும். பிரம்மாண்டமான அம்மன் சிலையைப் பார்க்கலாம். பின்னர் வந்த காலங்களில் பள்ளி கொண்ட பெருமாள் சிலையும் பெரியதாக வைத்தார்கள். படமெடுத்தாடும் பாம்புகளை தூரத்திலிருந்தே பார்க்கலாம். இக்கோயிலை நிர்மாணித்த சித்தர் பல நாட்கள் மண்ணில் புதையும் சாகசம் செய்தாரென்று சொல்வார்கள். யாம் படித்த காலத்தில் மிகக் குறைவாகவே மக்கள் கூட்டம் இருந்தது. ஆனால் இன்று அப்படியில்லை எனத் தெரிகிறது.

இங்கிருந்து எட்டயபுரம் வெட்ட வெளியாகத் தெரியும். ஊருக்கு சற்று தொலைவில் குடியிறுப்புகள் கட்டிப் பயன்படுத்தாமல் கிடந்தன. இவ்வளவு வீடுகள் கட்டிப் போட்டு ஏன் மக்கள் வசிக்காமல் இருக்கிறார்கள் என யாம் பல முறை நினைப்பதுண்டு. ஊருக்கு தொலைவு என மக்கள் நினைத்திருக்கக் கூடும். ஆனால் தற்போதைக்கு அப்படியில்லை.

எட்டையபுரம் சிறிய ஊராகவே இருக்கும். நேராகச் செல்லும் பேருந்து வளைந்து பின் நேராகி மறுபடியும் வளைந்து சாலையிலேயே நிற்கும். தனியாக பேருந்து நிலையம் இல்லாமலிருந்தது. பாரதி பிறந்த வீடு என்ற தட்டியைப் பார்க்கும் போதெல்லாம் பாரதியார் வீட்டிற்குச் செல்ல வேண்டும் என ஆவல் பீறிடும். கல்லூரிக்கு நேரமாகிவிடும், ஊருக்குச் செல்லும் பேருந்தைப் பிடிக்க முடியாது போன்ற சாக்குப் போக்குகளைச் சொல்லியே யாம் இரண்டு வருடங்களையும் ஓட்டி விட்டோம். நமது ஆகச் சிறந்த தேசபக்தருக்கு யாம் சிறு மரியாதையாவது செய்திருக்கலாம்.

பெருங்கவிஞன் பிறந்த வீடு தெரிகிறதா என எட்டிப் பார்த்துக் கொண்டே பயணம் தொடரும். கீழ ஈரால், மேல ஈரால் என ஊர்கள் வரும். சிலர் ஏறி இறங்குவார்கள். காய்ந்து கிடக்கும் நிலத்திற்கு மத்தியில் இந்த ஊர்கள் சற்றே செழிப்பாக இருக்கும். லாரிகள் அதிகம் தென்படும். அதற்கேற்றாற்போல் புரோட்டாக் கடைகள், சேவு கடைகளும் அதிகமிருக்கும்.

நீண்ட பயணத்தில் கருவக்காடுகள் அதிகம் தென்படும். கருவச்செடிகள் மறைந்து சட்டென நெல்வயல்கள் ஆரம்பிப்பதை காணும் போது மகிழ்ச்சியாக இருக்கும். எப்போதும் வென்றான் கண்மாயில் மழைக்காலங்களில் தண்ணீர் முழுதும் தேங்கியிருப்பது கண்கொள்ளாக் காட்சி. பெரிய கண்மாய் என்பதை விட சிறிய அணை என்றே சொல்லலாம். கரையின் சரிவில் எப்பபோதும் வென்றான் என பெரியதாக எழுதியிருப்பார்கள். ஊரையொட்டி கால்வாயில் எப்போதும் தண்ணீர் தேங்கியிருக்கும். கோடையில் சிறுவர்கள் மீன்பிடித்துத் திரிவார்கள். சோலையப்பசாமி கோவிலுக்குப் போகும் மக்கள் இறங்குவார்கள். பேருந்து ஜன்னல்களில் நீட்டி நுங்கும் விற்பார்கள்.

பொட்டல்காடுகள் வழியாக போய்க்கொண்டேயிருந்தால் குறுக்குச் சாலை வந்துவிடும். வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கயத்தாறு இங்கிருந்து பக்கம். குறுக்கு சாலை தாண்டி சற்று நேரத்தில் காட்சிகள் மெதுவாக மாறத் தொடங்கும். வீடுகளின் நெருக்கம் கூடி நகர் அடையாளம் தெரிவதை உணரலாம். அவ்வப்போது தொழிற்கூடங்களையும் பார்க்கலாம். நகரத்தின் தொலைவு குறையக் குறைய கடைகள் எண்ணிக்கை கூடிக்கொண்டே செல்லும். கடல் உணவு சார்ந்த இறால், உப்பு சார்ந்த தொழிற்கூடங்கள் பெருகிக் கொண்டிருந்தன. கடைகளும், வீடுகளும் உயரமாகிக் கொண்டிருந்தன. மக்கள் அங்குமிங்கும் சென்று கொண்டிருப்பதைப் பார்க்கையில் நம்மையும் அந்த நகரத்து மனநிலை தொற்றிக் கொள்ளும். நேசமணி போக்குவரத்துக் கழகப் பணிமனை நிறுத்தத்தில் பேருந்து நின்று செல்லும். ஓட்டுனர், நடத்துனர்கள் ஏறிக் கொள்வார்கள். அங்கிருந்து சற்று வேகம் குறைந்த பேருந்து இருப்புப் பாதையருகே புதிதாக கட்டிக் கொண்டிருந்த புதிய பேருந்து நிலையமருகே நின்று செல்லும். இவ்விடத்தில் பெரிய பெரிய தங்குமிடங்களாக கட்டிக் கொண்டிருந்தார்கள். அரசியல்வாதியொருவரின் உணவுவிடுதி அழகாக இருக்கும்.

அடுத்து வரும் பெரியதொரு சாக்கடைக் கால்வாய் நம்மை மூக்கைப் பொத்த வைக்கும். வளைந்து, நெளிந்து, குறுகி, கோணிச் செல்லும் பேருந்து ஒரு பெரியதொரு சுற்று சுற்றி பழைய பேருந்து நிறுத்த வாசலில் நின்று கொள்ளும். நடந்தோ அல்லது புதுக்கோட்டை செல்லும் பேருந்தில் ஏறியோ மில்லர்புரத்திலிருக்கும் எமது அழகிய கல்லூரிக்குச் சென்று சேர்வோம்.

யாம் இரண்டாமாண்டு படிக்கும் போது முத்துக்கனி அக்கா எம்.்.பில் பயின்றார்கள். ஆரம்பத்தில் மீன் வாங்க எம்மை துணைக்கு அழைத்துச் சென்றார். பின்னர் வீட்டிற்கு அடிக்கடி செல்லுமளவிற்கு அன்பு வளர்ந்தது. அம்மா பள்ளி ஆசிரியராக இருந்தார்கள். எம்மைச் சொந்த சகோதரனாகவே பார்த்தார்கள்.

கல்லூரிக்கு பின் பக்கமாக விடுதி அமைந்திருந்தது. ஒரு அறைக்கு நான்கு மாணவர்கள். தரையில் பாய் விரித்து படுத்துக் கொள்வோம். நீளமான பழைய கட்டிடம். முன்னர் காவல்துறைக் கண்காணிப்பாளர் அலுவலகம் செயல்பட்டதாகச் சொல்வார்கள். விடுதியைச் சுற்றிலும் நிறைய காலி இடம் கிடக்கும். இளநிலை மாணவர்கள் விடுதி நன்றாக இருக்கும்.

விடுதி வாழ்க்கை மிகவும் மகிழ்ச்சியாகவும் விளையாட்டாகவும் நகர்ந்தது. நல்ல நண்பர்கள் கிடைத்தார்கள். வாலிபால் தினமும் நடக்கும். மட்டைப்பந்து கூட அவ்வப்போது உண்டு. கல்லூரியில் சேர்ந்தபோது, ஒன்றிரண்டு மாதங்கள் கல்லூரி விடுதியில் இருந்து விட்டு பின்னர் அரசினர் விடுதிக்கு மாறிவிடலாம் என இருந்தோம். ஆனால் விடுதியில் மாதாமாதம் பணம் கட்டவேண்டாமென்றும், படிப்பு உதவித் தொகை, படிப்பிற்கான கடனுதவி வரும்போது நிர்வாகத்தார் எடுத்துக்கொள்வார்கள் என்றும் மூத்த நண்பர்கள் கூறினார்கள். வசதியில்லாத மாணவர்கள் என்பதால் கல்லூரி நிர்வாகம் இது போன்று ஏற்பாடு செய்திருப்பதாகக் கேள்விப்பட்டு யாம் மிகவும் மகிழ்ந்தோம்.

பல ஊர்களிலிருந்தும் மாணவர்கள் படித்தார்கள். இளநிலை விடுதியின் ஜெயராம் இங்கு முதுநிலை வேதியியல் படித்துக் கொண்டிருந்தார். எங்கள் அறை நண்பர் கழுகுமலை முத்து மாலையா ஆங்கிலம் பயின்றார். எம்மீது அபார நம்பிக்கை கொண்ட அற்புதமான தோழர். எங்களுக்குள் கைய் மடக்கும் போட்டி அடிக்கடி நடக்கும். கவிதை, கதை எழுதுவதில் ஆர்வம் கொண்டிருந்தார். ஒரு நோட்டுப் போட்டு அவ்வப்போது எழுதி வருவார். எம்மிடம் கவிதைகளைக் காட்டி கருத்துக் கேட்பதுண்டு.

வரலாறு பயின்ற வேலுச்சாமி அனைவருக்கும் செல்லப்பிள்ளை. பின்னிரவுகளில் கூட மாணவர்கள் இவரை விரட்டிக்கொண்டு திரிவார்கள். ஆங்கிலம் முத்துப்பாண்டி, தாவரவியல் முருகன் இவர்களெல்லாம் சங்கரன் கோவில் பக்கம் என்பதால் இவரை கலாய்த்துக்கொண்டே இருப்பார்கள். தாவரவியல் படித்த முருகன், விஜயகுமார், இராமநாதபுரம் ஜெயக்குமார், வரலாறு

செல்வா போன்றவர்களும் ஜாலியான நண்பர்கள். ஜெயக்குமார் மேஜையில் நன்கு தாளம் போடுவார். யாமும் சேர்ந்து கொள்வதுண்டு. சில நேரங்களில் இரவில் இசைக் கச்சேரியே நடக்கும்.

பொருளாதாரம் பயின்ற இராமச்சந்திரனின் பெற்றோர் வால்பாறையில் இருந்தார்கள். தோழரை வால்பாறை வரதா எனக் கிண்டலடிப்பார்கள். விடுதியில் குளிப்பதற்கு நல்ல தண்ணீர் கிடைப்பது கடினம். தொட்டியில் நிரம்பி இருப்பதை அள்ளிக் குளிக்கவேண்டும். நண்பர் நல்ல தண்ணீரில் குளிப்பதற்காக அதிகாலையிலேயே எழுந்துவிடுவார். நண்பர் குளிப்பது வேடிக்கையாக இருக்கும். இருமுறை சோப்பு போட்டு, நைலான் ஸ்பாஞ்சு வைத்து தேய்ப்பார். விடுதியில் நல்ல தண்ணீர் இல்லாத காலத்தில் மில்லர்புரம் சாலையில் பேருந்து நிலையம் செல்லும் வழியில் இருந்த பூங்கா சென்று கட்டணம் கொடுத்தும் நல்ல தண்ணீரில் குளிப்போம்.

நண்பர் கோபப்படவே மாட்டார். எல்லாப் பொருட்களும் வாங்கி வைத்திருப்பார். எண்ணெய், ஷாம்பு, பவுடர் போன்றவற்றை சேட்டைக்கார நண்பர்கள் எடுத்துவிடுவார்கள். சில நேரங்களில் எமது இடம் அருகே ஒளித்து வைப்பார்கள். எம்மீதுள்ள நம்பிக்கையில் நண்பர் எமது இடத்தில் தேட மாட்டாரென்பதால் இவ்வாறு ஒளிப்பார்கள். ஆண்டின் இறுதியில் விடுதி உணவுக் கூடத்தை மூடி விடுவார்கள். அப்போது நாங்களெல்லாம் சமைத்துச் சாப்பிடுவதுண்டு. நண்பர் தேர்ந்த சமையல்காரரும் கூட. கணேசன் சார் பதப்படுத்தப்பட்ட இறால்களை நிறையக் கொடுத்துவிடுவார். தண்ணீரில் ஊறப் போட்டால் ஐஸ்கட்டிகள் உருகுவதற்கு அரைமணி நேரமாவது ஆகும். குழம்பு வைத்து எல்லோரும் சாப்பிடுவோம். நல்ல குணங்களுள்ள சிறந்த நண்பர்.

விடுதியில் பட்டியில் மாணவர்கள் அதிகமாக இருந்தார்கள். குறிப்பாக தேவேந்திரர் மாணவர்கள். இருந்தாலும் சாதி குறித்துப் பேசியதாக நினைவில்லை. எல்லோரும் நல்ல நண்பர்களாக இருப்பார்கள். அந்தப் பகுதியில் பசுபதிபாண்டியனுக்கும் நாடார் இனத்தைச் சார்ந்த வெங்கடேச பண்ணையாருக்கும் தகராறுகள் இருந்தன. இவர்களது சண்டைகள் பற்றி ரவி நிறையச் சொல்லுவார். சிறு ஈகோ பிரச்சினைதான் தலைமுறைகள் தாண்டி பழி வாங்கும் வன்மமாக வளர்ந்துவிட்டதாகத் தெரிகிறது.

நண்பர்கள் பலரும் மில்லர்புரம் சாலையிலிருந்த இசக்கி அம்மன் கோவிலுக்கு வெள்ளிக்கிழமைகளில் செல்வோம். கோவில் அருகில்தான் பெண்கள் விடுதி இருக்கும். சில மாணவர்களின் வகுப்புத் தோழிகள், ஜன்னல் வழியாக எட்டிப் பார்ப்பார்கள். சில பேர் கையசைத்துக் காட்டுவார்கள். மறுநாள் வகுப்பில் கோவிலில் பார்த்ததாகச் சொல்வார்கள். சிலர் இதற்காகவும் அம்மனை தரிசிக்கச் செல்வதுண்டு.

இசக்கியம்மனைப் பார்த்துவிட்டு இளநிலை மாணவர்கள் விடுதியில், மணலில் உட்கார்ந்து கொண்டும், நின்று கொண்டும் ஒலியும் ஒளியும் பார்க்கலாம். அப்படியே இரவுச் சாப்பாடு. விடுதியில் உணவு நன்றாக இருக்கும். காலையில் தோசை, இட்லி. மதியம் கோழிக் குழம்பு, முட்டைக் குழம்பு, மீன் குழம்பு என ஒவ்வொரு நாளுக்கும் வேறு வேறு கொடுப்பார்கள். பெரிய மீன் துண்டாக பொரித்து வைப்பார்கள். காய்கறிப் பிரியாணியும் கிடைக்கும். இரவில் பூரி, தோசை, தயிர் சாதம் சாப்பிடலாம். முந்திரிக் கூடுகளை சமையலுக்கு எரிக்கப் பயன்படுத்துவார்கள். மூட்டை மூட்டையாகக் குவித்து வைத்திருப்பார்கள். கூடுகள் தகதகவென எரியும். ரத்தினம் சார் விடுதியின் துணைக் காப்பாளராக இருந்தார். அமைதியானவர். மாணவர்கள் உணவருந்தும் சமயங்களில் வந்து உணவின் தரத்தை பார்த்துச் செல்வார். அடிக்கடி விடுதி வந்ததை கவனித்திருக்கிறோம். தமிழ் குமார் சாரும் மாணவர்களோடு இனிமையாகப் பழகுவார். மாணவர் பிரதிநிதிகள்தான் உணவுப் பொருள்களை வாங்கி வருவதும் சமையலுக்கு எடுத்துக் கொடுப்பதும். உணவுக் கட்டணமும் அதிகமாக இருக்காது.

நண்பர்களோடு சேர்ந்து பம்பாய், பாட்ஷா போன்ற படங்கள் பார்த்திருக்கிறோம். பாட்ஷா படத்திற்கு பயங்கரக் கூட்டம். பல பேர் நின்று கொண்டே பார்த்தார்கள். விடுதிக்கு தெற்கே சாலை ஓரமாக பெரிய மணல் வெளி கிடந்தது. சனி, ஞாயிறு போன்ற நாட்களில் இரவு உணவிற்குப்பின் நெடுநேரம் பல நண்பர்களும் இங்கு உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்போம்.

முதலாமாண்டு படிக்கும்போது கல்கி கிருஷ்ணமூர்த்தி அறக்கட்டளை சார்பில் இளநிலையில் நன்கு படித்த மாணவர்களுக்கு ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் உதவித்தொகை கொடுப்பதாக ஒரு விளம்பரத்தில் பார்த்து, யாம் அதற்கு விண்ணப்பம் செய்தோம். உதவித் தொகை கொடுப்பதற்கு எம்மை தேர்ந்தெடுத்திருப்பதாக வந்த கடிதம் கண்டு எமது மகிழ்ச்சிக்கு அளவில்லை.

வங்கியில் கணக்குத் துவங்கி தேவைப்படும் நேரங்களில் எடுத்துக் கொள்வோம். கல்கி அறக்கட்டளைக்கு நன்றி.

சபாபதி வகுப்புத் தோழர் ஜெயில்சிங் எமக்கு கல்லூரியில் இளையவராக இருந்தார். பரமக்குடியைச் சேர்ந்த வஹிதா பானு முதலாமாண்டு படித்தார். எம்மிடம் குறிப்புகள், செய்முறை நோட்டுகள் வாங்குவதுண்டு.

சேவியர், ஜெயக்குமார் போன்ற இனிய நண்பர்கள் மாலை நேரக் கல்லூரியில் பயின்றார்கள். ரவியின் உறவினரான இராமலிங்கம் எம்மிடம் நட்பாக இருப்பார். ரஹிம் சாரும், கீதா மேடமும் மாலை நேர வகுப்பின் பேராசிரியர்கள். ரஹிம் சார் விடுதியில் தங்கியிருந்தார். அரசுக் கல்லூரி விரிவுரையாளர் பணிக்கான தேர்வில் வெற்றி பெற்றிருந்தார். எப்போதும் இன்முகத்துடன் பேசுவார். பின்னர் சந்திக்கும் நாட்களில் எம்மையும் இது போன்ற தேர்வெழுத ஊக்க மூட்டினார். கல்லூரி ஆண்டு மலரில் பரிணாமத்தின் தந்தை சார்லஸ் டார்வின் எனும் தலைப்பில் எமது கட்டுரை ஒன்று வெளியாகியது.

அப்போது முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா அவர்கள் ஸ்டெர்லைட் விழாவிற்கு வருகை தந்தார். எங்கள் கல்லூரி மைதானத்தில் மிகப் பிரம்மாண்டமான பந்தல் அமைத்தார்கள். கல்லூரிக்கும் சில நாட்கள் விடுமுறை அளித்தார்கள். ஒருமுறை தூத்துக்குடி அனல்மின் நிலையம் சுற்றிப் பார்க்க, ஒரு நண்பரின் அண்ணன் மூலமாக நுழைவுச் சீட்டு கிடைத்தது. நான்கைந்து பேர் கிளம்பிச் சென்றோம். அனைத்து இடங்களுக்கும் எங்களை அழைத்துச் சென்று காண்பித்தார்கள். கடற்கரையிலிருந்து பெல்ட் மூலம் நிலக்கரி கொண்டு வரப்படுவதை ஆச்சரியத்தோடு பார்த்தோம். அங்கு நிலவிய இரைச்சலும், வேலை விறுவிறுப்பும் வித்தியாசமான அனுபவங்கள். நிலக்கரி எரியூட்டப்படுவதை அருகிலிருந்து பார்த்த போது இதயம் படபடத்தது. நினைவுக்காக சிறு நிலக்கரித் துண்டொன்றை யாம் எடுத்துவந்தோம்.

நகரின் அருகே இருந்த திரேஸ்புரம் கடற்கரைக்கும் நண்பர்களோடு சென்றதுண்டு. சிப்பிகள் நிறையக் கிடக்கும். சேர்ந்தாற்போல் விடுமுறை இருந்தால் யாம் ஊருக்கு வருவோம். அருப்புக்கோட்டையில் படிக்கும் காலத்திலேயே ஊருக்கு வந்தால் குளிப்பதற்கு சிரமப்படுவோம். முதுநிலையில் கிணறுகளில் மோட்டார் ஓடினால்தான் குளிக்க முடியும் என்ற நிலை. இப்படி சேர்வைக்காரர், சாமியாடி,

நாகராஜ் பிள்ளை, வள்ளிமுத்து, நேரு தோட்டம் போன்றவைகளில் தண்ணீர் அடிக்கிறதா எனத் தேடித் திரிவது அலுப்பு ஊட்டும்.

ஊரில் விவசாயத்திலும் பெரும் மாற்றம் நிகழ்ந்து கொண்டிருந்தது. காடுகளில் கம்பு, பருத்தி, மல்லி போடுவது நின்றுபோய் பெல்லாரி வெங்காயம், மிளகாய், மக்காச்சோளம் பயிர் செய்ய ஆரம்பித்திருந்தார்கள். வெளிநாடு சென்று சம்பாதிக்க வேண்டுமென்ற மோகம் பலருக்கும் இருந்தது. சில பேர் இடைத்தரகர்களிடம் ஏமாந்து கடனாளிகளாக ஒளிந்து திரிந்தார்கள். கிணறுகளில் தண்ணீரே இல்லாத நிலையிலும் போர் மூலம் தண்ணீர் இறைத்து கரும்பு விவசாயம் செய்தார்கள். சில கிணறுகள் விவசாயம் செய்யாமல் தூர்மண்டிப் போயின. செவல்காடு விவசாயமின்றி குரண்டிச் செடிகள் பரவிக் கிடந்தது. காடுகளை விற்க ஆரம்பித்திருந்தார்கள். ஊரில் டிராக்டர்கள் சுற்றி வர ஆரம்பித்தன. உழுவதும் இவைதான். சுவையான குடிநீருக்கு பிளாஸ்டிக் குடங்களைத் தூக்கிக் கொண்டு அலைந்தார்கள். யாம் தபால் பிள்ளை கிணற்றிலிருந்து மிதிவண்டியில் எடுத்து வந்தோம். எம்முடன் படித்த பலருக்கும் திருமணம் நடந்து கொண்டிருந்தது. கூரை வீடுகள் மறைந்து ஓட்டு வீடுகள் வர ஆரம்பித்திருந்தன. ஊரில் நிறையப் பேர் வெளியூர்களுக்கு இடம் பெயர்ந்திருந்தார்கள். அகமுடையார்கள் மற்றும் நாடார்களில் பலரும் சென்னைக்கும், தேவேந்திரர்கள், ஆதிதிராவிடர்கள் தூத்துக்குடி முத்தையாபுரத்திற்கும், தேவர்கள் மதுரைக்கும் வேலை நிமித்தம் இடம் மாறினார்கள். சவுண்ட் நல்லதம்பி அவர்கள் பெரிய முறுக்கு மீசை வைத்து தூத்துக்குடியில் ஒரு நிறுவனத்தில் பாதுகாவலராக இருந்தார்.

சரவணன், ஆனந்தன் சென்னையில் கடை வைத்திருந்தார்கள். கண்ணன், ஆடலும் பாடலும் குழுவினரோடு சேர்ந்து நடனமாடினார். மணிகண்டன், அத்தை பெண்ணை மணம் செய்து மதுரையில் வசிக்கலானார். வேல்முருகன் எங்கிருக்கிறார் என்றே தெரியாமல் இருந்தது. சபாபதி முதுநிலை படிக்க மாட்டோமென்று சொல்லிவிட்டார். லட்சுமண மாமா எம்மிடம் சொல்லி வருத்தப்படுவதுண்டு.

ஜோதி அவர்கள், குருந்தங்குளத்தைச் சேர்ந்த அமராவதி அக்காவை இரண்டாவதாகத் திருமணம் செய்திருந்தார். இவரது தம்பி நாகராஜ் என்பவர் கேரளாவிலிருந்து மீனா என்ற பெண்ணை காதல் திருமணம் செய்து எங்கள்

ஊருக்கு அழைத்து வந்திருந்தார். பெண் அழகாகவும், பையன் கரடுமுரடாகவும் இருந்தார்கள். மீனா எமது அம்மா மீது மிகவும் பிரியமாக இருப்பார்.

எமது அக்காவிற்கு லாவண்யா, கௌசல்யா பிறந்திருந்தார்கள். முதுநிலை முடிந்த வருடம் அனுஷ்யா பிறந்தார். ஆண் குழந்தை பிறக்க வேண்டுமென்று திருச்செந்தூருக்கு மச்சான் மாலை போட்டு நடைப்பயணம் செய்ய ஆரம்பித்திருந்தார். ஒரேயொரு சிறு அறைதான் அவர்களது வீடு. யாம் கால் நீட்டிப் படுத்தால் கால் தட்டும். தொண்டு நிறுவனம் கொடுத்த உதவித் தொகையில் தேநீர்க்கடை வைத்தார்கள். சரியாக வியாபாரம் இல்லை. தையல் வேலையும் செய்தார். தொலைக்காட்சி, வானொலிப்பெட்டி சரி பார்ப்பது, வீடுகளுக்கு மின்சார இணைப்பு கொடுப்பது போன்ற வேலைகள் செய்துகொண்டிருந்தார். அக்கா எப்பவும் போல் நாத்து நடவு, களையெடுப்பு, கதிரறுப்பு வேலைகள் பார்த்தார். அண்ணன் சௌதியிலிருந்து தொலைபேசியில் பேசுவார். வெளிநாட்டில் இருப்பவர்கள் யாரிடம் பேச வேண்டுமென்பதை பரளச்சி தபால் அலுவலகத்தில் சொல்வார்கள். அங்கிருந்து எங்கள் ஊருக்கு யாராவது வரும்போது சொல்லி விடுவார்கள். மிதிவண்டியிலும் வந்து சொல்வார்கள். பரளச்சி தபால் அலுவலகத்திற்குச் சென்று காத்திருக்க வேண்டும். கொஞ்ச நேரத்தில் அழைப்பு வரும். அழுது கொண்டேதான் பேசுவார்கள். அண்ணன் மகள் உஷாதேவி யாம் அருப்புக்கோட்டையில் படிக்கும்போது பிறந்தார். கருணாமூர்த்தி சென்னையில் ஒரு இனிப்புக் கடையில் வேலை பார்த்தார். பத்தாவது படிக்கும் போதே வீட்டுக்குத் தெரியாமல் சென்றிருந்தார்.

கருணாமூர்த்திக்கு மாமாவின் கட்டுப்பாடுகள் பிடிக்காது. சிறிய பையனாக, நண்பர்களோடு ஜாலியாக விளையாட ஆசைப்படும் பையனாக இருந்தார். மாமாவுக்கோ பையன் படித்து பெரிய ஆளாக வரவேண்டுமென ஆசை. படிப்பு வரலைன்னா விட்டுட வேண்டியதுதானே என எமது அம்மாவிடம் வந்து சண்டை போடுவார். எமது பெற்றோர் மேல் மிகுந்த பாசம் வைத்திருந்தார். எம்மீது மிகுந்த மரியாதை வைத்திருப்பார்.

முனியசாமி அண்ணன் இல்லாததால், அவர்கள் தோட்டம் கொஞ்சம் கொஞ்சமாக பொலிவிழந்து வந்தது. பெரியம்மாவோடு உண்டான மனக்கசப்பில் தோட்டத்திலேயே சித்தப்பா சமையல் செய்ய ஆரம்பித்தார் சித்த வைத்தியராக பல ஊர்களுக்கும் சென்றதால், நாட்கள் கணக்கில் வராமலும் இருப்பதுண்டு.

தோட்டத்திலேயே கும்பங்கள் வைத்து மந்திரம், மாந்த்ரீகம் செய்யலானார். தம்பிகளும் அவரோடு தங்கினார்கள். ஒருவருக்கும் படிப்பு வரவில்லை. விவசாயமும் சரிவரச் செய்யவில்லை. அக்காமார்களுக்கு முதலிலேயே திருமணம் முடிந்திருந்தது. தங்கம்மாள் அக்காவை அருப்புக்கோட்டை கஞ்சநாயக்கன் பட்டியிலும், பாண்டியம்மாள் அக்காவை, எங்கள் ஊர் அத்தை மகன் பாண்டிக்கும் திருமணம் செய்திருந்தார்கள். பாண்டி மச்சான், சித்தப்பாவின் மற்றொரு கிணற்றுத் தோட்டத்தில் இருந்தார். பின்னர் அதை விலைக்கு வாங்கியதாகச் சொல்வார்கள். தங்கக்காள் திருமண வரவேற்பன்று கஞ்சநாயக்கன்பட்டியில் கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்களின் மேடைப் பேச்சு இருந்தது. அவர் முகத்தில் முட்டை திராவகம் வீசி பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை செய்திருந்த சமயமது. காத்திருந்து அவரைப் பார்த்தோம். கொஞ்ச நேரம் பேசினார்.

ஊருக்கு வந்தால் மாதவனைப் பார்க்க விருதுநகருக்குச் செல்வதுண்டு. கறிக்குழம்பு இல்லாமல் சோறு போடமாட்டார்கள். வரும் வழியில் ராஜேஷையும் பார்ப்போம். மிதிவண்டியில் சென்று பாண்டி, பாலசுப்ரமணியன் போன்ற நண்பர்களையும் சந்திப்பதுண்டு. மாதவன் அப்பா முத்துச்சாமி சார். பள்ளி ஆசிரியர். பணி ஓய்வு பெறும் வயதில் இருந்தார். அம்மா பெயர் செல்வி. அம்மா எம்மீது மிகுந்த அன்பு வைத்திருப்பார். யாம் ஏதோ வயதில் பெரிய மனிதர் போல் நினைத்து எல்லாவற்றையும் எம்மிடம் உரிமையோடு பேசுவார்கள். நண்பர்களின் அம்மாவை யாமும் அம்மா என்று அழைத்துவிடுவோம். ஆனால் அப்பாக்களை அப்பா என்று அழைப்பதில்லை. ஏனோ அப்படித் தோன்றவில்லை. சார் என்று தான் அழைப்போம். மாதவனின் தம்பி காமராஜ் எம்மீது பாசமாக இருப்பார். மாதவனுக்கு கரேத்தே தெரியுமென்பதால் பள்ளிகளில் கற்றுத்தர ஆரம்பித்திருந்தார். தமிழரசி அக்காவிற்கு அப்போதுதான் திருமணம் நடந்திருந்தது. ராஜேஷின் அக்கா திருமணம் முடிமன்னார்கோட்டையில் நடந்தது.

சிதம்பரனார் கல்லூரியில் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் நிறைய நடக்கும். யாமும் ரவியும் தவறாமல் கலந்துகொள்வோம். பட்டியல் இன மாணவர்களுக்கென்று அரசு சார்பில் கல்லூரியிலேயே விடுமுறை நாட்களில் வகுப்புகள் நடத்தினார்கள். மற்ற சமூக மாணவர்களும் கலந்து கொள்ளலாம். பணியாளர் தேர்வு ஆணையம், தமிழ்நாடு பொதுத் தேர்வு ஆணையம், வங்கிப் பணியாளர் தேர்வாணையம், இரயில்வே பணியாளர் அமைப்பு போன்ற தகுதியுள்ள

அனைத்துப் போட்டித் தேர்வுகளுக்கும் யாம் விண்ணப்பித்தோம். நண்பர்களுக்கும் கடிதம் மூலம் தெரியப்படுத்துவோம்.

இரண்டாமாண்டில், தொடர்வண்டித் துறையில் நிலைய உதவி அதிகாரி பணிக்கு தேர்வெழுத சென்னை சென்று வந்தோம். நண்பர்கள் பலரும் வந்தார்கள். பதிவு செய்யப்படாத பெட்டியில் பலருக்கும் உட்கார இடம் கொடுத்துவிட்டு நாங்கள் மகிழ்ச்சியாக அரட்டை அடித்துக் கொண்டு சென்றோம். நெல்லை பேட்டையில் உள்ள இந்துக் கல்லூரிக்கும் தேர்வெழுதச் சென்று வந்தோம். பல தேர்வுகள் இது போன்று எழுதத் தொடங்கி இருந்தோம்.

வ.உ.சி. கல்லூரியில் நான்காவது பருவம் தொடங்கியிருந்த சமயம், எமது பெற்றோர் ஊரில் வேலைவாய்ப்பு இல்லையென்று முத்தையாபுரத்தில் தங்கி உப்பளத்தில் வேலை செய்ய ஆரம்பித்தார்கள். முதலாமாண்டு படிக்கும் போது மங்களூர் துறைமுகத்தில் எமது அப்பா பல மாதங்கள் கொத்தனார் வேலை பார்த்தார். செலவுக்கு கவலைப்பட வேண்டாமென்று எமக்கு அடிக்கடி கடிதங்கள் அனுப்புவார்.

ஞாயிற்றுக்கிழமை மாலை வேளைகளில் பெற்றோரை பார்க்கச் செல்வோம். மிகச் சிறியதொரு தென்னை ஓலைக் குடிசையில் இருந்தார்கள். கோழிக்குழம்பு, மீன்குழம்பு சமைத்து வைத்துக் கொண்டு எம்மை எதிர்நோக்கி சாப்பிடாமல் காத்திருப்பார்கள். உப்புச் சுமந்து காலெல்லாம் புண்ணாகி இருந்தது. எமது தந்தை காலில் துணி கட்டியிருந்தார். யூரியா நிறுனத்தில் அமிலம் அள்ளும் வேலையும் பார்த்தார். இவர்கள் தங்கியிருந்த இடமும், இவர்களது உடல்நலமும் எம்மை சொல்லொணாத் துயரத்தில் ஆழ்த்தியது. இளநிலையோடு நின்றிருக்க வேண்டுமோ என்று வருந்தமாகவும் இருந்தது. எமது செலவுக்கு சுருக்குப் பையிலிருந்து பணம் எடுத்துக் கொடுக்கும் போது வாங்குவதற்கு கையே வராது. பல நேரங்களில் வைத்துக்கொள் என்று எமது சட்டைப்பையில் திணிப்பார்கள். இப்படி இவர்கள் சம்பாதித்த பணத்தை கொண்டுதான் வருடக் கடைசியில் உணவுக் கட்டணம் கட்டினோம். உறவினர்களில் சிலரும் இப்படி வேலை பார்த்தார்களெனினும் எமது பெற்றோரை நினைத்து யாம் வருந்தினோம். படிப்பில் கவனம் குறைந்து போட்டித் தேர்வுகளுக்குத் தயாராவதில் அதிக நேரம் செலவிட்டோம்.

விடுதிக்குத் திரும்பும்போது அப்பா பேருந்து நிலையம் வரை வருவார். என்னப்பா இப்படி கஷ்டப்படுறீங்க என்று சொன்னால் பரவாயில்லப்பா, ஊர்ல சும்மா தானே இருக்கணும், ஒண்ணும் கஷ்டமில்லையென சமாதானம் சொல்லுவார். ஒருமுறை அருகே இருந்த கோயில் திருவிழாவில் கருப்பசாமி வேடம் கட்டிய சாமியாடி, புட்டி புட்டியாக சாராயம் குடிப்பதை வேடிக்கை பார்த்து நின்றோம். கையால் தொடாமல் வாயினால் கவ்வியே மூடியை உடைத்து குடித்துக்கொண்டே இருந்தார். திடீரென்று பெரிய அருவாளை இருவர் பிடித்துக் கொள்ள, அதன் மீது ஏறி நின்றும் சாமியாடினார்.

எமது பெற்றோரைப் பார்க்க இவ்வாறு போய் வரும்போது, நகரின் மையப்பகுதியில் ஒரு வயதான பாட்டியைத் தவறாமல் பார்ப்பதுண்டு. ஒரு பெரிய வீட்டுச் சுவற்றின் சாய்வில் இரு கம்புகள் நட்டு பாலிதீன் சாக்குகளைப் பிரித்து கூரையாகப் போட்டிருந்தார். மாலையில் போகும்போது, சிறிய குச்சிகளை எரித்து பழைய ஈயச்சட்டியில் சோறாக்கிக் கொண்டிருப்பார். வயதான காலத்தில் யாருமில்லாமல் இப்படி கஷ்டப்படுகிறாரே என்று மனம் ஏங்கும். எத்தனையாயிரம் வயதானவர்கள் இப்படி வாழ்கிறார்களோ என மனம் பதைபதைக்கும்.

எமது கல்லூரியிலிருந்து நடந்து செல்லும் தூரத்தில்தான் மாவட்ட மைய நூலகம் இருந்தது. யாம் அங்கு செல்வதையும் வழக்கமாகக் கொண்டிருந்தோம். அங்கு உறுப்பினராகி சமூகம் சார்ந்த பல புத்தகங்களையும் எடுத்து வந்து விடுதியில் படிப்போம். அதே போன்று மொழி சார்ந்த நூல்களும் வாசிப்பதுண்டு. சி.எஸ்.ஐ.ஆர். அமைப்பு நடத்தும் கல்லூரிப் பேராசிரியர் வேலைக்கான தேசிய தகுதிகாண் தேர்விற்கு யாமும் ரவியும் விண்ணப்பித்தோம். பேராசிரியர்கள் இத்தேர்வில் வெற்றி பெறுவது மிகவும் கடினம் என்றதால், ஒருமுறை எழுதிப் பார்ப்போமே என்று விண்ணப்பம் அனுப்பினோம்.

தூத்துக்குடியிலிருந்த வருடங்களில் பனிமயமாதா திருவிழாவைக் கண்டு வியந்ததுண்டு. கட்டுக்கடங்காத கூட்டம். நண்பர்களோடு சேர்ந்து இரவெல்லாம் சுற்றித் திரிந்தோம். ஒருமுறை நகரில் இருந்த பெரிய சிவன் கோவிலுக்கும் நண்பர்களோடு சென்று வந்தோம். புதிய பேருந்து நிலையம் கட்டி முடித்து செயல்பாட்டிற்கு வந்திருந்தது. நகரில் இரண்டு வருடங்களுக்குள்ளாக புதிய புதிய தங்கும் விடுதிகள் முளைத்திருந்தன. எமக்கு வயிற்று வலி வந்து குடல்வாலாக

இருக்குமோ என்று தூத்துக்குடியிலேயே ஸ்கேன் செய்து பார்த்தோம். அப்படி ஒன்றும் இல்லை.

இரண்டு ஆண்டுகளில் வேல்முருகன், முத்துக்கனி அக்கா வீடுகளுக்குச் சென்றோம். இரண்டு வருடங்கள் முடிவில் இறுதித் தேர்வு எழுதிய பின் மதியம் நண்பர்களோடு சேர்ந்து பிரிவின் ஞாபகமாக ஆளுக்கொரு குவளை பிராந்தி குடித்துவிட்டு உணவு விடுதியில் சாப்பிட்டோம். அதற்கு முன் ஒருபோதும் குடித்ததில்லை. இளநிலையிலும் கல்லூரிக்குப் பின்புறம் இரயில்வே வழித்தடம் அருகில் நண்பர்கள் பீர் அருந்தினார்கள். யாம் மறுத்துவிட்டோம். தூத்துக்குடியில் எண்ணெய் பரோட்டா சுவையாக இருக்கும். அடுத்த நாள் நண்பர்களிடம் பிரியாவிடை பெற்று ஊர் வந்து சேர்ந்தோம். இவ்வாறாக அறிவார்ந்த பேராசிரியர்களும், சிறந்த நண்பர்களும், இனிய தோழிகளும் முதுநிலைப் படிப்பில் கிடைக்கப் பெற்றோம். இரண்டு வருடங்கள் இமைப் பொழுதில் கடந்து சென்றன.

இரண்டாயிரத்துப் பதினான்காம் ஆண்டைப் போலவே தொன்னூற்றி ஆறாம் ஆண்டிலும் பொதுத்தேர்தல் நடந்ததது. ஊருக்கு வந்த சமயம் பலரும் திருச்செந்தூருக்கு மாலை போட்டு பாதயாத்திரை கிளம்பினார்கள். சாமிகளை வழியனுப்புவதற்காக பிள்ளையார் கோவிலிலிருந்து பள்ளிக்கூட ஆலமரம் வரை பலரும் செல்வது வழக்கம். யாமும் அக்காவின் கணவரை வழியனுப்ப அப்படிச் சென்றோம். ஏதோ ஒரு என்னத்தில் யாமும் உடன் வருவதாகச் சொன்னோம். உடையோ, உணவோ ஒன்றும் எடுத்துக் கொள்ளாமல் கிளம்பி விட்டோம். நடப்பது கடினம் சார் என மச்சான் மிகவும் தயங்கினார்.

அருப்புக்கோட்டையில் படிக்கும் காலத்திலிருந்தே தெருக்காரர்கள் உறவுமுறை சொல்லாமல் சார் என்றுதான் எம்மை அழைப்பார்கள். செல்லவடிவு சித்தப்பா தான் வாப்பே என்று தைரியம் சொல்லி அழைத்துச் சென்றார். அகரத்துப்பட்டிக்காரர்கள் வாப்பே, போப்பே, எப்பப்பே வந்தே என்றுதான் சொல்வார்கள். தேவர் வீட்டு ஆட்கள் யார் வீட்டுப் பையன்பே என்று கேட்பார்கள். அந்த ஊரிலிருந்து முத்துத் தேவரும் தவறாமல் பாத யாத்திரை செல்வார்.

வீட்டில் சொல்லிவிட்டு கைலியோடு யாமும் கிளம்பி விட்டோம். செருப்பு அணியாததால் ஓடைக்குப் போவதற்குள்ளாகவே கால் சூடு தாங்கவில்லை. ஆனாலும் திரும்பும் எண்ணமில்லை. மறுவருடம் யாமும் ஒரு வாரம் மாலை போட்டு

விரதமிருந்து பாத யாத்திரை சென்றோம். திருமணம் முடிந்தும் இரண்டு வருடங்கள் சென்றதுண்டு.

யாம் மாலைபோட்டுச் சென்ற ஒன்றிரண்டு வருடங்கள் வரை தோள் பையில் உடைகள், நான்கு வேளைகளுக்கான உணவுப் பொட்டலங்கள், கூடவே தண்ணீர் கேனும் எடுத்துச் செல்ல வேண்டும். அங்கங்கே தண்ணீர் பிடித்துக் கொள்ளலாம். சில பேர் நிறையப் பொட்டலங்கள் கட்டிக் கொள்வார்கள். பின்னர் டிராக்டரில் உணவுப் பொருள்களும் ஆட்களும் கூடவே வந்து, சாமிகள் தங்கும் இடங்களில் சமைத்துக் கொடுக்கும் வழக்கம் வந்தது. சாப்பிடுவதும் திருப்தியாக இருந்தது. சுமையும் மிச்சம். டிராக்டர், அரிசி போன்றவை உபயதாரர்கள் புண்ணியம்.

மாலையில் கிளம்பினால் கரிசல்காடு வழியாக வடக்குநத்தம் அடையலாம். அங்கு பூமாலைகளைக் கழற்றி மரங்கள் மேல் போட்டு விடுவார்கள். கரிசல்காடு என்பதால் பல இடங்களில் நெருஞ்சி முள்ளும், கருவேல முட்களும் கிடக்கும். பலரும் சென்று கால்தடம் பதிந்திருக்குமென்பதால் பெரும்பாலும் முள் தைக்காது. டார்ச் விளக்கும் கொண்டு செல்வோம்.

தெற்குநத்தம் தாண்டினால் துரைசாமிபுரம். இந்த ஊரின் கண்மாய்க்கரை ஓரமாகக் சென்றால் அடுத்து வருவது மாதலப்புரம். இங்கிருந்து மாட்டு வண்டிப் பாதையில், மிளகாய் காடுகளுக்கு நடுவே பேசிக்கொண்டே செல்வது சுகமான அனுபவம்.

ஆரம்பத்தில் எல்லோரும் ஒன்றாக நடந்தாலும், போகப்போக நான்கைந்து பேராக சேர்ந்து போவார்கள். யாம், செல்லவடிவுச் சித்தப்பா, ஜெயபால், விக்ரபாண்டி மச்சான்கள் சேர்ந்தே செல்வோம். ஒருமுறை முனியசாமி அண்ணனும் எங்களோடு நடந்து வந்தார்.

ஜெயபால் மிகவும் ஜாலியான மனிதர். பஜனைகளில் சாமி வந்தது போல் விளையாட்டுக்கு ஆடுவார். தேங்காய் சிரட்டை வைத்து தாளம் போடும்போது அடுத்தவர் மண்டையில் நைசாகத் தட்டுவார். பக்தகோடிகளுக்கு திருநீறு பூசும் போது சகட்டு மேனிக்கு அருள்வாக்கு சொல்லுவார். வயதானவர் வந்தால் அடுத்த அமாவாசைக்குள்ள போய்டுவ என்றும் கல்யாணமாகாத பெண் வந்தால் உமக்கு சீக்கிரமே ரெட்டப்புள்ள பொறக்கும் எனவும் அளந்து விடுவார். எல்லோரும் சிரிப்பார்கள். சபாபதி வீட்டில் மளிகைக் கடை வைத்திருந்தார். பின்னர் எமது சித்தப்பா வீட்டிற்குப் பின்புறம் சிறிய கூடாரம் போட்டு கடை நடத்தினார். இடையில்

மலேசியா செல்வதற்கு பணம் கட்டி இடைத்தரகரால் ஏமாற்றப்பட்டார். அதன்பின் செட்டிகுறிச்சியிலேயே மளிகைக்கடை வைத்துத் தங்கிவிட்டார். இவர்களின் புதுமனைப் புகுவிழாவிற்கு அம்மாவோடு யாமும் சென்று வந்தோம். லெட்சுமி அக்காவும் எம்மீது பாசமாக இருப்பார். இவர்களது பெண் முருகேஸ்வரி, சிறு பிள்ளையாக இருக்கும் போது எம்முடன் நன்றாக விளையாடுவார். அவரது அப்பா, அம்மா சொல்வதை அப்படியே கிளிப்பிள்ளை போல் சொல்வார். கிளவி, வாயாடி என்றுதான் யாம் கூப்பிடுவோம்.

செல்லவடிவு சித்தப்பா அப்பாவுக்குப் பங்காளி. எங்களது கொல்லை அருகே அவர்களுக்கும் நிலம் இருந்தது. நல்லா இருக்கயாப்பு என்று வாஞ்சையாகக் கேட்பார். நாங்கள் செல்லமாக ஏதாவது பேசினாலும் கோபப்படமாட்டார். கரிசல் காட்டில் கிணறு தோண்டி சுற்றிலும் செங்கல் வைத்துக் கட்டனார்கள். அப்பா வேலை செய்ததால் யாமும் சில நாட்கள் வேலை பார்த்தோம். சித்தப்பா நல்ல உழைப்பாளி. பையன் பாப்பையன் இராணுவத்தில் இருந்துவிட்டு தற்போது வருவாய்த் துறையில் பணியாற்றுகிறார். இன்னொரு பையன் முத்துராமர். அக்காவை இராமனாத அண்ணன் திருமணம் செய்திருக்கிறார். பல வருடங்களாக நடைபயணம் செய்பவர் என்பதால் எம்மை மிகுந்த கவனமோடு அழைத்துச் செல்வார்.

நடைபயணங்களின் போது குடும்ப, ஊர் விசயங்களைப் பேசிக் கொண்டே நடப்பது உற்சாகமாக இருக்கும். களைப்பு தெரியாது. கல்லூரி வாழ்க்கை பற்றி யாமும் ஏதேனும் பேசுவதுண்டு.

மாதலப்புரம் தாண்டினால் குமரட்டய்யாபுரம் வந்துவிடும். முதல் முறை சென்றபோது நிற்காமல் நடந்து கொண்டே செல்கிறார்களே என்று வருத்தப்பட்டதுண்டு. இங்கு இரவுச் சாப்பாடு முடிந்து கொஞ்சம் ஓய்வும் கிடைக்கும். சிறிது நேர இடைவெளியில் பலரும் வந்து சேர்வார்கள். வினைதீர்த்தான் ஆசாரி குருசாமி என்பதால் அவர் வரும் வரை காத்திருப்பார்கள். வயதானவர் என்பதால் மெதுவாகத்தான் நடப்பார். குருசாமியோடு வருபவர்கள் ஒவ்வொரு ஊரைக் கடக்கும் போதும் பஜனை பாடிக்கொண்டு வருவார்கள். குமரட்டய்யா கோவிலிலிலும் பஜனை நடக்கும். நாங்கள் முன்னாடி மெதுவாகப் போய்க் கொண்டிருக்கிறோம் என்று குருசாமியிடம் சொல்லி விட்டுக் கிளம்பி விடுவோம்.

சிறிது நேரப் பயணத்தில் இடைச்சியூரணி வரும். இந்த ஊரைச் சேர்ந்த முருகேசன் என்பவர் அப்போது வள்ளி திருமணம் நாடகத்தில் முருகனாக நடித்து புகழ் பெற்றிருந்தார். எங்கள் ஊர் நாடகத்தில் யாமும் பார்த்திருக்கிறோம். நன்றாகப் பாடுவதாகச் சொல்வார்கள். அசோகன், சுகுணா போன்றவர்கள் பபூன் டான்ஸாக தூள் கிளப்புவார்கள். இருவரும் வந்து சென்ற பின் பாதிப் பேருக்கு மேல் கிளம்பி விடுவார்கள். இரட்டை அர்த்த வசனங்களைக் கேட்டு விசில் பறக்கும்.

அடுத்ததாக, கரிசல்காடு வழியாக நீண்ட பயணம். பக்கத்து ஊர்களிலிருந்து பஜனைப் பாடல்கள் காற்றில் தவழ்ந்து வரும். திருச்செந்தூர் முருகனுக்கு அரோகரா கோஷத்தை பன்னிரண்டு மணிக்குக்கூட கேட்டுக் கொண்டே நடக்கலாம். வழியில் மற்ற சாமிகளைப் பார்த்தால் எந்த ஊர் சாமிகள் என்று கேட்டுக் கொள்வோம்.

விளாத்திக்குளம் அருகே சென்று உழுது கிடக்கும் கரம்பைக் காடுகளில் துண்டை விரித்து குட்டித் தூக்கம். ஒரு முறை வைப்பாறு தாண்டியும் சென்று தூங்கியதுண்டு. அதிகாலையில் எழுந்து விளாத்திகுளம் பேருந்து நிலையம் அருகே தேநீர்க் குடித்து விட்டு நடை தொடரும். யாம் பாலில் இரண்டு பூஸ்ட் போடச் சொல்லி அருந்துவோம்.

வைப்பாறு மணலில் நடப்பது பாதத்திற்கு ஒத்தடம் கொடுப்பது போல் இதமாக இருக்கும். பெரும்பாலும் விடிந்திருக்காது. எவ்வளவு பெரிய ஆறு இப்படி நீர் இல்லாமல் வறண்டு கிடக்கிறதேயென்று ஏக்கமாக இருக்கும். ஆற்றைக் கடந்து சாலையில் நெடிய பயணம் ஆரம்பிக்கும். இடையிடையே சிறுசிறு ஊர்கள் வரும். எங்கும் நிற்காமல் குளத்தூருக்குச் சென்று சேருவோம். குளத்தூருக்கு மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் சாலையிலிருந்து விலகி ஒற்றையடிப் பாதையில் செல்வோம். அவரி பயிரிட்டிருப்பார்கள். குளத்தூரில் பாதயாத்திரைப் பயணிகள் தங்குவதற்கென்றே கண்மாய்க் கரையோரம் தென்னை மரங்களுடன் கூடிய அழகிய நந்தவனம் இருக்கும். கொஞ்சம் உப்புத் தண்ணீர். குளித்து விட்டு காலை உணவு. சிலருக்கு கால்கள் வீங்கியிருக்கும். திருநீறு போட்டு கால்களை தடவிக் கொடுப்பார்கள். துண்டை விரித்து, கைப்பையைத் தலையணையாக வைத்து ஓய்வு. தூக்கம் வராது. மதிய உணவும் அங்கு தான். பக்கத்துக் கடைகளில் தேவையானவற்றை வாங்கிக் கொள்வார்கள். மூன்று மணியளவில் மீண்டும் குளித்து விட்டு பயணம் புறப்படும். தார்ச்சாலையென்பதால் எமக்கு கால் சுடும். சமாளித்து நடந்து விடுவோம்.

இரண்டு கிலோமீட்டர் தூரத்திற்குப் பின் மண் பாதையில் இறங்கி நடப்பார்கள். பனை மரக்காடுகள் தாண்டி வேப்பலோடை வந்து விடும். குளிர் பானங்கள் அருந்திவிட்டு பயணம் தொடரும். அடுத்து தூத்துக்குடி வரை கால்களைப் பதம் பார்க்கும் மோசமான பயணத்திற்குத் தயாராக வேண்டும். நடந்து பழக்கமில்லாதவர்கள், வயதானவர்கள் இந்த நடைப் பயணத்தின் போது சிரமப்படுவார்கள். அன்றைக்கு சாலை கரடுமுரடாக இருந்தது. உப்பளங்கள் நிறைய இருப்பதால் சாலையில் உப்பு கொட்டிக் கிடக்கும். காலில் பட்டு புண்களை உண்டாக்கி விடும். முடியாதவர்கள் காலில் துணியைக் கட்டிக் கொண்டு நடப்பார்கள். பலருக்கும் கொஞ்சம் சோர்வு உண்டாக்கும் பயணம் இது.

தருவைக்குளம் சென்று உணவருந்தி விட்டு இரவுத் தூக்கம். ஒரு முறை அருகே இருந்த தேவாலயத்தில் உறங்கினோம். அதிகாலையில் எழுந்து நடக்கத் துவங்கினால் தூத்துக்குடி நகர் தாண்டி ஏழு, எட்டு மணிக்கு முத்தையாபுரம் வந்து விடலாம். முதன்முறை நடைபயணத்தில் நகரைத் தாண்டும் போது நண்பர்கள் யாரும் பார்த்து விடக் கூடாதேயென்று நினைத்துக்கொண்டோம். ஒரு முறை நல்ல தண்ணீர் ஓடையில் குளித்ததுண்டு. இன்னொரு முறை நேராக புன்னைக் காயல் தாண்டிவிட்டோம். கால்வாயில் குளித்துவிட்டு அருகே இருந்த பேருந்து நிறுத்தத்தில் வெயிலுக்கு தங்கியிருந்தோம். ஒரு சிலர் தவிர காலை உணவு உணவகங்களில் தான் சாப்பிடுவார்கள். உணவு சமைத்துக் கொடுக்க ஆரம்பித்த பின் முத்தையாபுரத்தில் தங்கி விடுவதுண்டு. பக்தர்கள் தங்குவதற்கு சிறிய திருமண மண்டபம் ஏற்பாடு செய்திருப்பார்கள். நாங்கள் அங்கு செல்வதில்லை.

மாலையில் பொருநையில் குளிக்கப் போகிறோமென்ற எதிர்பார்ப்பில் விரைவாக எட்டு வைப்போம். வழியெங்கும் பச்சை பசேல் வயல்களும், வாழைத் தோட்டங்களும் செழித்திருக்கும். முக்காணி ஊர் தாண்டி தாமிரபருணியைப் பார்த்த உடனேயே சோர்வெல்லாம் பறந்து விடும். குறைந்தது இரண்டு மணி நேரமாவது அருமையான குளியல் போடுவோம். நீந்திக் குளிப்பதில் பலருக்கும் மூட்டுவலி பறந்து விடும்.

ஆத்தூரிலேயே சூடான இட்லி சாப்பிட்டு விட்டு, மெதுவாக நடந்து சென்று ஆறுமுகனேரி பிள்ளையார் கோவிலில் இரவு தங்கிவிடுவோம். பெரும்பாலும் முதலாவதாக நாங்கள் சென்றிருப்போம். பின்னர் அடுத்த நாள் காலை வரை எங்கள் ஊர் சாமிகள் முன்னும் பின்னுமாக வந்து சேர்வார்கள். மதியம் வரை இங்கு

தங்கல். ஒருமுறை ஆலமரம் அருகே உணவு சமைத்துக் கொடுத்தார்கள். புழுதி உண்ணி கடித்து பலருக்கும் வீக்கம் வந்தது.

ஊரிலிருந்து கோவிலுக்கு வருபவர்கள், மாலை போட்ட சாமிகளை ஆறுமுகநேரியில் சந்திப்பார்கள். பலர் இங்கிருந்து சாமிகளோடு சேர்ந்து கோவில் வரை நடப்பார்கள். இந்த நடைப் பயணம் இன்னும் சிறப்பாக இருக்கும். பலரும் சேர்ந்து, பஜனையோடு ஆட்டம் பாட்டம் எனச் செல்வோம். கோவில் நெருங்க நெருங்க ஆட்டம் பாட்டத்தில் வேகம் கூடும். பலருக்கும் சாமி வந்துவிடும். பிடிக்கப்பிடிக்க திமிறிக்கொண்டு ஓடுவார்கள்.

திருச்செந்தூர் நகரில் நுழைந்தவுடன் அரோகரா சத்தம் அதிரும். பல ஊர்களைச் சேர்ந்தவர்களும் இப்படி ஆடல் பாடல்களோடு செல்வார்கள். முருக பக்தர்களால் நகரின் வீதிகள் திணரும். கோவிலின் அருகே இருக்கும் விநாயகருக்கு, ஊரிலிருந்து சுமந்து வந்த தேங்காயை சிதறுகாயாக எல்லோரும் உடைப்போம். கோவிலினுள் நுழையும் போது தங்கத் தேர் வரும். தேர் பின்னாடியே பஜனையோடு செல்வோம். சாமிகளின் எண்ணிக்கை அதிகமிருப்பதால் பஜனையும் ஆக்ரோஷமாக இருக்கும்.

கடற்கரை அருகில் கோவிலின் முன்னே வட்டமாக நின்று கொண்டு பஜனை தொடரும். பலரும் பஜனைக்கேற்றவாறு ஆடுவார்கள். யாம் ஒருமுறை இப்படி ஆட்டம் போட்டதை அம்மா அடிக்கடி சொல்லிக் காட்டுவார். கோவில் நுழைவாயில் மண்டபத்தில் இரவெல்லாம் பஜனைப் போட்டி நடக்கும். மண்டபங்களிலோ, அறைகள் எடுத்தோ ஊர்க்காரர்கள் தங்கிக் கொள்வார்கள்.

விடிந்ததும் மாலை கழற்றுவார்கள். குழந்தைப் பாக்கியமில்லாதவர்கள் ஒவ்வொரு சாமியாக காலில் விழுந்து ஆசி பெறுவார்கள். பின்னர் கடலில் ஆனந்தக் குளியல். நாழிக்கிணறு குளியலும் உண்டு. முருகனைத் தரிசிப்பதற்குள் போதுமென்றாகிவிடும். கூட்டத்தை முறையாக அனுப்பமாட்டார்கள். இதில் நடக்கும் மோசடிகளைச் சொல்லி மாளாது. சிறு பிள்ளைகளை வைத்துக் கொண்டு சுவாமி தரிசனம் செய்யச் சென்றால், அதுவரை இருந்த அனைத்து சந்தோஷங்களும் பறி போய்விடும். இதற்காக அம்மாவோடு சேர்ந்து, இரவே யாம் ஒருமுறை ஆற அமர முருகனைத் தரிசித்து விடுவோம். ஊருக்குத் திரும்பும்போது, பேருந்தில் இடம் பிடிப்பதற்கு மிகுந்த திறமையும், சிறந்த வீரமும் தேவைப்படும். இப்படியாக

திருச்செந்தூர் பயணம் இனிதாக நிறைவு பெறும். ஒருமுறை திருச்செந்தூரிலிருந்து உவரி, கன்னியாகுமரி, சுசீந்திரம் சென்று வந்தது மகிழ்ச்சியாக இருந்தது.

விலங்கியல் விரிவுரையாளருக்கான தேசிய தகுதிகாண் தேர்வு காரைக்குடி மத்திய மின்வேதியியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடந்தது. முதல் நாளே யாமும், ரவியும் சென்று பேருந்து நிலையம் அருகில் இருந்த விடுதியில் தங்கினோம். இரவில் அருகேயிருந்த திரையரங்கிற்குச் சென்றோம். அது வயது வந்தவர்களுக்கான படம் என்பது பின்னரே தெரிந்தது. படம் பார்க்க வந்த சிறுவர்களையும், வயது முதிர்ந்தவர்களையும் பார்த்து எமக்கு வியப்பாக இருந்தது. படம் முடிந்து வெளியே வந்த பலரும் இப்படி ஏமாத்திட்டாங்களே என திட்டிக்கொண்டே சென்றார்கள்.

தகுதிகாண் தேர்வு எளிதாகவே இருந்தது. அப்போது பகுதி ஒன்று பொது அறிவுக் கேள்வியாகவும், பகுதி இரண்டு முக்கியப் பாடத்தில் கேள்விகளாகவும் இருந்தன. இரண்டும் குறிகொள்வகைக் கேள்விகள். நான்கு பதில்களில் சரியான ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தவறான பதில்களுக்கு, வாங்கிய மதிப்பெண்களிலிருந்து கழிக்கும் வழக்கமும் இருந்தது. மதியம் கட்டுரைக் கேள்விகள். கட்டுரைக்கான பதில்களை யாம் சிறப்பாக எழுதியிருந்தோம்.

கல்லூரி முடிந்து வீட்டிற்கு வந்திருந்த சமயம் உலகக் கோப்பை கால்பந்து விறுவிறுப்பாக நடந்து கொண்டிருந்தது. இரவுகளில் நடந்ததால் முழுத்திருந்து பார்த்தோம். சிறந்த வீரர் பிரேசிலின் ரொமாரியோவா அல்லது இத்தாலியின் பாகியோவா என பெரும் யுத்தமே நடந்துகொண்டிருந்தது. எமக்கு பாகியோவே பிடித்தமானவராக இருந்தார். குதிரைப்பின்னல் போட்டு ஆட்டத்தில் பட்டையைக் கிளம்புவார். இறுதிப் போட்டியில், பெனால்டி ஷூட்டில் பந்தை கோல் கம்பத்திற்கு சற்று மேலே அடித்து எம்மை அதிர்ச்சியில் ஆழ்த்தினார். கோப்பையை பிரேசில் தட்டிச் சென்றது. கோல் அடிக்காவிட்டாலும் அவர் மிகச் சிறந்த வீரர்தான். உலக்கோப்பை கால்பந்தாட்டம் பார்த்து, எங்கள் ஊர் மட்டைப்பந்து நண்பர்கள், கொஞ்ச நாட்கள் கால்பந்து விளையாடித் திரிந்தோம். அட்லான்டா ஒலிம்பிக் போட்டிகளையும் தொலைக்காட்சியில் கண்டு இன்புற்றோம்.

டென்னிஸ் போட்டிகளும் யாம் விரும்பிப் பார்த்தோம். ஸ்டெபி கிராப்பின் ஆட்டம் அழகு. மோனிகா செலசின் சர்வீசும், அவர் போடும் சத்தமும் பயங்கரமாக இருக்கும். இருவரும் மோதும் ஆட்டங்கள் அனலைக் கிளப்பும்.

ஆசியா போட்டிகளில் கபடி சேர்க்கப்பட்டு திடீரென கபடியின் புகழ் கூடியது. இந்திய கபடி அணி வெல்ல முடியாத ஒன்றாக வலம் வந்தது. இரவியின் உறவினர் ஒருவரும் ஆசிய அணியில் இடம்பெற்றிருந்தார்.

ஹாக்கியில் தன்ராஜ் பிள்ளையின் ஆட்டம் விறுவிறுப்பாக இருக்கும். ஆவேசமாக விளையாடக்கூடியவர். திர்க்கி எனும் பெயரில் பலர் இருப்பார்கள். மட்டைப் பந்து போன்றே ஆக்கியிலும் இந்திய - பாகித்தான் வீரர்கள் கடுமையாக மோதிக்கொள்வார்கள்.

ஊரின் வடக்கே இருக்கும் நாயக்கர் குடியிருப்புக்கு பட்டி என்று பெயர். கம்பளத்து நாயக்கர்கள் என்று சொல்வார்கள். நிறையப் பேர் வசிக்கிறார்கள். சிறுவயதில் ஒரிரு முறை அவர்கள் தெரு வழியாகச் சென்றதுண்டு. நெருக்கமான சிறு சிறு வீடுகளாக இருந்தன. ஒரு வீட்டுக்குள்ளேயே பல வீடுகள் இருக்கும். குழந்தைகள் நிறைய இருப்பார்கள். இப்போது பெரிய, பெரிய வீடுகளாகக் கட்டுகிறார்கள். நல்ல உழைப்பாளிகள். காலையில் வரும் பேருந்துகளில் மண்வெட்டி, கடப்பாறை, தூக்குச் சட்டியில் சோறு சகிதம், இவர்கள் வெளியூர்களுக்கு வேலைக்குச் செல்வார்கள்.

பாண்டிச்சாமி நாயக்கர் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தவர். உரக்கப் பேசுவார். பேருந்து நிலையம் அருகே பெரும்பாலும் உட்கார்ந்திருப்பார். இறக்கும் தருவாயில் இருப்பவர்களுக்கு இரவில் பாரதம் படிப்பார்கள். இவர் அதில் முக்கியமானவராக இருப்பார்.

சிவசாமி வாத்தியார் எல்லோரும் மதிக்கக் கூடியவராக இருந்தார். இராமசாமிபட்டிக்கு மிதிவண்டியில் சென்று வருவார். இவரது மகன் பச்சைமால் அவர்கள் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தார். பட்டப்படிப்பு படித்திருப்பதாக அறிகிறோம். பச்சைமால் எமது அப்பாவோடு நட்பாக இருப்பார். தோட்டம் வைத்திருந்தார். பெரிய லெவன், சின்ன லெவன் எனத் தம்பிகள் இருப்பார்கள். இவர்கள் வீட்டில் தான் பாய் பின்னும் தொழிற்பயிற்சி நடந்தது.

ஊராட்சி மன்றத் தேர்தலில் நாயக்கர், நாடார், தேவேந்திரர் கூட்டணி உருவாகி விடும். தேவரும் அகமுடையாரும் ஒன்று சேர்ந்தாலும் வெற்றி பெறும் எண்ணிக்கை அவர்களுக்கு வராது. இப்படித்தான் நாயக்கர்கள் வெற்றி பெறுவார்கள். சுழற்சி முறையில் ஊராட்சி மன்றத் தலைவரைத் தேர்ந்தெடுக்கலாம் என்றெல்லாம் வாக்குறுதி அளித்ததாக எமது தெருவில் பேசிக் கொள்வார்கள்.

இந்தமுறை நாயக்கர் என்றால் அடுத்தமுறை நாடார். அதற்கு அடுத்தமுறை தேவேந்திரர். அதெல்லாம் நடைமுறைக்கு வரவில்லை.

எமது சிறுவயதில் கவனித்தவரை நாயக்கரில் சொந்தம், சொத்துப் போகக் கூடாதென்று சிறு பெண்ணைக் கூட வயதானவருக்குத் திருமணம் செய்வார்கள். இராஜகோபாலபுரத்தில் ஒரு திருமணத்திற்கு யாம் சென்றோம். எம்முடன் பரளச்சியில் படித்த சுப்புராம் வீட்டுத் திருமணம். மொய் செய்யச் சென்றிருந்தோம். மணமகள் சிறுபெண். மணமகன் கிழவராக இருந்தார். தற்போது இப்படியான திருமணங்கள் நடப்பது பெருமளவில் குறைந்து விட்டதாகத் தெரிகிறது. யாம் படித்த காலத்தில், நாயக்கர் தெருவிலிருந்து படித்தவர்கள் மிகவும் குறைவு. வேலைகளுக்குச் செல்வார்கள். ஆடுகள் வளர்ப்பார்கள். பேருந்து நிறுத்தம் அருகே இவர்களது ஆடுகள் மந்தைபோல் படுத்துக் கிடக்கும். பேருந்து வரும்போது ஆடுகளை விலக்குவதற்கு சிலநேரம் சிரமப்படுவார்கள்.

சாலையின் ஓரமாக அய்யாச்சாமி நாயக்கர் வீடு இருக்கிறது. இவரது மகன் கனகராஜ் பட்டப்படிப்பு முடித்திருக்கிறார். வெளிநாடு சென்றுவந்து, பின் இராமலிங்கா மில்லில் வேலை பார்த்தார். இரத்தின சபாபதி வகுப்புத் தோழர்.

இன்னொரு பெரிய வீடு இருக்கும். வீடு அருகிலேயே இவர்களது தோட்டமிருந்து. நரி, அய்யப்பன் என்று பெயர் சொல்லி அழைப்பார்கள். நடவுக்கு இந்த வீட்டிலிருந்து ஒரு அம்மையார் எமது அம்மாவைக் கூப்பிட அடிக்கடி வருவார். தருமர் நாயக்கர் தரகு வியாபாரம் செய்பவர். பெருமாள் நாடாரோடு சேர்ந்திருப்பார். எடைபோடும் வேலை. எல்லோருடனும் அன்பாகப் பேசுவார்.

கோவிந்தராஜ் அவர்கள் மலேசியாவில் இருந்தார். இவரது ஏற்பாட்டில் கணேசமூர்த்தி அண்ணன் சௌதியிலிருந்து வந்தபின் மலேசியா சென்றார். விசா பிரச்சனையில் அண்ணன் மிகவும் கஷ்டப்பட்டார். மல்லுசாமி அவர்கள் பேருந்து நிறுத்தம் அருகே தேநீர்க்கடை வைத்திருக்கிறார். சக்தி பொதுவுடைமை இயக்கத்தில் இருக்கிறார். மிகுந்த மரியாதையோடு பேசக் கூடியவர்.

நாயக்கர்களில் பலருடைய முகமும் எமக்கு நினைவிருக்கிறது. ஆனால் அவர்களது பெயர்கள் தெரியவில்லை. எமது சிறுவயதில் பெரிய அளவில் அறிமுகமும் இருக்கவில்லை.

இவர்களது குலதெய்வம் பட்டத்தரசியம்மன். பேருந்து நிலையம் அருகே கோவில் இருக்கிறது. இலந்தை முள்வேலியை அகற்றிவிட்டு தற்போது சுற்றுச் சுவர்

கட்டியிருக்கிறார்கள். வீடு தவறாமல் பெண்கள் பொங்கல் வைப்பார்கள். கோவிலருகே இருக்கும் இவர்களது கிணற்றில் ஆச்சரியமாக தற்போதும் தண்ணீர் ஊறுகிறது.

போன வருடத்திற்கு முந்தைய தீபாவளிக்கு யாம் குடும்பத்துடன் ஊருக்குச் சென்றிருந்தோம். மது குடித்தவர்களால் சாதிச் சண்டை வந்து நாயக்கரும், தேவரும் ஒருவரையொருவர் அடித்துக் கொண்டார்கள். இவர்களுக்குள் சிறுசிறு வாய்த்தகராறுகள் வந்ததுண்டே தவிர, இது போன்று சண்டை வந்ததில்லை. கல் வீச்சில் பலருக்கும் காயம். வீடுகளுக்கும் சேதம். பக்கத்து ஊரான இராஜகோபாலபுரத்திலிருந்து நாயக்கர்கள் மொத்தமாக வந்து, ஆதிதிராவிடர் தெரு அருகே நின்று கொண்டார்கள். அலைபேசி இருப்பதால் உடனே செய்தி தெரிந்து வந்துவிட்டார்கள் போலும். திருமலைபுரத்திலிருந்து தேவர்களும் வந்ததாகப் பேசிக் கொண்டார்கள். இத்தகைய போக்கு மிகவும் ஆபத்தானது. இன்றைய தேதியில் ஒன்றுமில்லாத சிறு பிரச்சினை கூட தமிழ்நாடு தழுவிய சாதிச் சண்டையாக மாறுவதற்கான வாய்ப்புகள் பெருகிவிட்டன.

மலைராஜா அவர்கள் பக்குவமாக எடுத்துச் சொல்லி இராஜகோபாலபுரத்து ஆட்களைத் தடுத்துவிட்டார். நாயக்கரில் ஒருவருக்கு பலமான அடியென்றும், இறந்து விட்டாரென்றும் சொல்லி, அகமுடையார் வீட்டுப் பெண்கள் காவலர்களின் கைதுக்குப் பயந்து குழந்தைகளை அழைத்துக் கொண்டு தெற்கே போனார்கள். சாதிச் சண்டையால் முதலில் பாதிக்கப்படுவது பெண்களும் குழந்தைகளும் தானே.

ஊருக்குள் பேருந்து வராததால் பைகளைத் தூக்கிக் கொண்டு குழந்தைகளோடு யாம் முக்கிய சாலைக்கு நடந்து சென்றோம். ஊருணிக் கரையெங்கும் பெரிய பெரிய கற்களாகச் சிதறிக் கிடந்தது கண்டு மனம் வேதனைப்பட்டது. நாயக்கர் சாதி ஆண்களை தேவர் வீட்டு ஆட்கள் மாமா என உறவுமுறை சொல்லிக் கூப்பிட்டெல்லாம் யாம் கவனித்திருக்கிறோம். அன்று தேவர் பேரவைகளெல்லாம் இல்லாமலிருந்தன. சமீபத்தில் ஒருமுறை, ஊரில் கட்டபொம்மன் பிறந்த நாளுக்கு நாயக்கர்கள் வைத்திருந்த தட்டி வாசகங்களைப் பார்த்து யாம் அதிர்ந்து விட்டோம். இது போன்ற பேனர் கலாச்சாரமும், அதில் இடம் பெறும் வாசகங்களும், சாதித் தலைவர்களுக்கான ஜோதி ஓட்டங்களும் தமிழகத்தை எங்கு போய் நிறுத்தப் போகின்றனவோ.

ஆசாரி தெருமுனையில் சங்குப் பண்டிதர் இருந்தார். வைத்தியம் பார்ப்பார். அட்டவணை இனம், நாடார் தவிர்த்து மற்ற சாதிக்காரர்களுக்கு முடிதிருத்தும் வேலை. இவரது மகன் சேகர் அவர்கள் இதே வேலையைத் தொடர்ந்தார். இன்னொரு மகன் மதுரையில் காவல்துறையில் பணிபுரிவதாகச் சொல்வார்கள். சங்குப் பண்டிதர் மருமக்கமார்களான லட்சுமி, சிவன் என்று பெண்கள் இருந்தார்கள். எமது பெற்றோரோடும், தெருக்காரர்களோடும் நன்றாகப் பேசுவார்கள். சிவன் அம்மையார் மகன் முனியசாமி அவர்கள் பெரிய மீசை வைத்திருப்பார். எம்மைப் பார்த்தால் ஊர்ல இருந்து எப்ப வந்தாப்ல என்று மறக்காமல் நலம் விசாரிப்பார். படிக்கும் காலத்தில் அம்மாவோடு இவர்கள் வீட்டிற்குச் சில முறை சென்றிருக்கிறோம்.

இரண்டு ஆண்டுகளுக்குமுன் ஊரில் நாங்கள் வீடு கட்டும் போது நிலம் யாருடையது என்பதில் இவர்களோடு கருத்து வேறுபாடு ஏற்பட்டு நீதிமன்றம் வரை சென்று எங்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வந்தது. பெரிய வீட்டு குடும்பத்தார்களிடமிருந்து நிலத்தை வாங்கினோம். பிரச்சினையைப் பேசித் தீர்த்திருக்கலாம். இதைப் பற்றி மேலும் சொல்வது நாகரீகமாக இருக்காது. அம்மாவின் கடைசி ஆசை காரவீடு கட்டி குடியிருக்க வேண்டுமென்பது. அவர்களுக்காகவே அவசரமாகக் கட்டினோம். கட்டி முடித்து கொஞ்ச காலமாவது புது வீட்டில் வசித்திருந்தால் நிறைவாக இருந்திருக்கும்.

மற்ற சாதிக்காரர்களுக்கு துணி வெளுக்கக் கூடிய சலவைத் தொழிலாளி குடும்பம் ஒன்று அகம்படியார் தெருவில் இருந்தது. இரண்டு மூன்று கழுதைகள் வைத்திருந்தார்கள். கமுதி ஆற்றிலிருந்து வெள்ளாவி மண்ணை கழுதைகளின் முதுகில் ஏற்றிக் கொண்டுவருவார்கள். மேற்குக் கண்மாயில் துணி துவைப்பார்கள். கணவர் இறந்த பின் அந்த வீட்டு அம்மையார், முனியசாமி, சப்பாணி என்ற அவரது பையன்களோடு சேர்ந்து துணிமணிகள் துவைப்பதைப் பார்த்திருக்கிறோம். பின்னர் நாடார் தெருவிலும், ஆசாரி தெருவிலும் குடியிருந்தார்கள்.

எங்கள் தெருவிற்கு பொன்னுச்சாமி என்பவர் சலவைத் தொழிலாளியாக இருந்தார். ஏகாலி என்று கூப்பிடுவார்கள். ஆதிதிராவிடர்களுக்கும் அருந்ததியர்களுக்கும் துணி துவைப்பவர்கள் இல்லை. நாடார்களுக்கு துணி வெளுப்பவர் தனியாக இருந்தார். வெளுப்பவராக இருந்தாலும் வீடு வீடாகச் சென்று

அவர்கள் தெருவில் சாப்பாடு வாங்கமாட்டார் என்பார்கள். ஊரில் நாயக்கர்களுக்கு தனியாக இருப்பார்.

பொன்னுச்சாமி அவர்கள் வாகைக்குளத்திலிருந்து வெளுத்த துணிப் பொதியை மிதிவண்டியில் கொண்டு வருவார். மிகுந்த பேச்சுச் சாமர்த்தியமுள்ளவர். ஒவ்வொரு வீட்டிற்கும் துணியின் கழுத்துப்பட்டையில் அடையாளக் குறி போட்டிருப்பார். ஒவ்வொரு வீட்டுத் துணிகளையும் மொத்தமாக அடுக்கிக் கொண்டுவந்திருப்பார். சிறுவர்களான நாங்கள் போய் வாங்குவோம். சில நேரங்களில் அவரே வீடு வீடாகக் கொடுக்கவும் செய்வார். துணியேதும் மாறியிருந்தால் கொஞ்ச நேரத்திற்குள்ளாகவே யார் வீட்டில் இருக்கிறதென்று சரியாகக் கண்டுபிடித்துவிடுவார். வாரத்திற்கு ஒருமுறையாவது வந்து விடுவார். வெள்ளாவியில் வெளுப்பதால் துணிகளிலிருந்து ஒரு வித மணம் வரும்.

துணிகளை வெள்ளிக்கிழமை வாங்கினாரென்றால் திங்கள்கிழமை காலையில் கொண்டுவந்து விடுவார். எமது பள்ளிக்கூட உடையான காக்கி கால்சட்டை, வெள்ளைச் சட்டையை போடும்போது சரியாக வந்து விடுவாரா என்று கேட்டுத்தான் கொடுப்போம். துணி கொண்டு வந்தால் ஒவ்வொரு வீட்டிலும் கஞ்சி வாங்குவார். அதேபோன்று பண்டிகை நாட்களில் இருவேளையும் வருவார். இவருக்குப்பின் இன்னொருவர் வந்ததாக ஞாபகம். பல வருடங்களுக்கு முன்பே சலவைத் தொழிலாளி வருவது நின்றுவிட்டது.

முன்னரே சொல்லிவிட்டால் உடைகளை தேய்த்துக் கொண்டுவருவார். இல்லையெனில் தேய்ப்பதற்கு பரளச்சி போகவேண்டும். யாம் கல்லூரி நாட்களில் ஊருக்கு வந்து சென்றால் துணிகளை இஸ்திரி போடுவது சிரமமாக இருக்கும். ஊரில் சுத்தமடத்திலிருந்து ஒருவர் வந்து இஸ்திரிக்கடை போட்டிருந்தார். எமது துணிகளை தேய்த்துக் கொடுக்கமாட்டார். மற்ற தெருக்காரர்களுக்குத் தெரிந்தால் ஏசுவார்கள் என்று சொல்லிவிடுவார். சில நேரங்களில் அப்பா இரகசியமாகத் தேய்த்து வாங்கிவருவார். அருப்புக்கோட்டை விடுதியில் கனமான இஸ்திரிப்பெட்டி இருக்கும். தூத்துக்குடியில் நண்பர்கள் அயன்பாக்ஸ் வைத்திருப்பார்கள். விடுதிக்கே வந்து ஒருவர் தேய்த்தும் கொடுப்பார்.

எங்களுக்கு முடிதிருத்துபவர் பெயர் பெருமாள். குடிமகன் என்பார்கள். பரளச்சியிலிருந்து வருவார். எட்டாம் வகுப்புவரை அவரிடம்தான் முடி வெட்டினோம். வைத்தியமும் பார்ப்பார். எமது காலில் உடைமர முள் குத்தி புண்ணாகி விட்டது.

இவர் தான் முள்ளை எடுத்தார். சிறு பையன் என்பதால் ஒரே அழுகை. திட்டு வேறு. பெரியவர்கள் கையையும் காலையும் பிடித்துக் கொண்டார்கள். அந்தக் காயத் தழும்பு இன்றும் உள்ளது. கிராமப் பேச்சில் கர்ணையாகி விட்டது என்று சொல்வர்.

தெருவில் யாரேனும் இறந்துவிட்டால் இவர்களுக்கு ஆள் அனுப்புவார்கள். சில நேரங்களில் பொன்னுச்சாமி அவர்கள் வருவதற்கு முன்பே இறந்தவரைக் குளிப்பாட்டி விடுவார்கள். குளிப்பாட்டுவதற்கு வீட்டு நிலைக் கதவை கழற்றி அதன் மீது வைத்துத் தான் தண்ணீரை ஊற்றுவார்கள். இப்படி நிலைக் கதவு இல்லாத வீடுகளில் நீளமான பலகை மீது வைத்துக் குளிப்பாட்டுவார்கள். இறந்தவர் ஆண் என்றால் ஆண்களும், பெண்ணாக இருந்தால் பெண்களும் இதனைச் செய்வார்கள்.

எந்தெந்த ஊர்களுக்கு ஆள் அனுப்ப வேண்டும் என்பதை இறந்தவர் வீட்டாரோடு கலந்து பேசி முடிவெடுப்பார்கள். தெருவைச் சேர்ந்த ஒரேயொரு பெண் அயலூருக்கு வாக்கப்பட்டுச் சென்றிருந்தாலும் தவறாமல் ஆள் அனுப்புவார்கள். அப்போது தொலைபேசி இல்லாத காரணத்தால் நேரில் ஆட்கள் போய் சொல்லி வருவார்கள். அருந்ததியர் தெரு ஆட்கள் மூலமாகவும் சேதி சொல்லி அனுப்புவதுண்டு.

ஒருவருக்கு உடம்புக்கு மிகவும் முடியவில்லையென்றால் உள்ளூர் வைத்தியர் நாடித்துடிப்பு பார்ப்பார். பெரும்பாலும் உணவு சாப்பிட இயலாமல் இருப்பார்கள். ஓரிரு நாட்கள்தான் தாங்குவார் என்று தெரிந்தால், இரவில் வில்லிபுத்தூராரின் பாரதம் படிப்பார்கள். செய்யுட்களை இராகத்தோடு பாடி பொருள் விளக்குவார்கள். பெண்களும், சீட்டு விளையாடத் தெரியாத ஆண்களும் கூட்டமாக உட்கார்ந்து கேட்பார்கள். ஆண்கள் வெட்டுச் சீட்டு விளையாடுவார்கள். தோற்ற அணிக்கு சுண்ணாம்பைக் கொண்டு நாமம் போடுவார்கள். அப்பா அருகில் உட்கார்ந்து யாம் உன்னிப்பாக விளையாட்டைக் கவனித்துக் கொண்டிருப்போம். மற்ற தெரு ஆண்களும் நிறையப் பேர் வருவார்கள். பெண்களும் வருவதுண்டு. இடையில் சுக்குக்காப்பி, கடுங்காப்பி வரும். வெற்றிலை, பாக்கு நிறைய வைத்திருப்பார்கள். தின்பதற்கு சேவு, சீவல் கலந்துபோட்டுக் கொடுப்பார்கள். நெருங்கிய உறவினர்கள் பால் ஊற்றுவார்கள். பால் கூட இறங்கவில்லை என்று கவலையோடு பகிர்ந்து கொள்வார்கள். பாரதம் படிப்பவர்களும் அடிக்கடி நிலைமையைக் கேட்டறிவதுண்டு.

போக மனமில்லாத சில பெரியவர்களுக்கு, இரண்டு மூன்று நாட்கள் கூட இப்படி பாரதம் படிப்பார்கள். கிழடு இன்னைக்கும் போகலையா எனக் கேலி பேசுவார்கள். இறந்துவிட்டார் என்பதை வைத்தியர் நாடித்துடிப்பு பார்த்து உறுதி செய்வார். இறந்தவர் வீட்டில் புது வேட்டியோ, சேலையோ இருந்தால் அதைக் கட்டுவார்கள். இல்லையெனில் பழைய துணிகள் அணிவிப்பார்கள். வாய் திறக்காமல் இருப்பதற்காக வெள்ளைத் துணியை தலையோடு நாடியைச் சேர்த்து கட்டி வைப்பார்கள். மரச்சேரில் தாத்தாவோ, பாட்டியோ உட்கார்ந்திருப்பார். படித்தவரென்றால் புத்தகமும் கையில் வைத்திருப்பார். ஒருவேளை சொர்க்கத்திலும் படிப்பதற்காக இருக்கக்கூடும். படிக்காதவர்களுக்கு அங்கே என்ன வேலை கொடுப்பார்கள் எனத் தெரியவில்லை.

இறந்தவர் வீட்டில் பெண்கள் வீட்டுக்குள்ளும் ஆண்கள் வெளியிலும் அமர்ந்திருப்பார்கள். முன்பு இரவெல்லாம் உட்கார்ந்திருப்பார்கள். இப்போது கடமைக்காக கொஞ்ச நேரம் இருப்பதோடு சரி. மிக நெருங்கிய உறவினர் மட்டுமே உடன் இருக்கிறார்கள். எல்லாப் பெண்களும் ஒப்பாரி வைப்பார்கள். அவரவர் குடும்பத்தில் இறந்தவர்களை நினைத்து அழுவார்கள். சில பேர் பேசிக்கொண்டே அழுவார்கள். சில பேருக்கு பல் கட்டி மயக்கம் வரும். முகத்தில் தண்ணீரோ சோடாவோ தெளித்து எழுப்பி விடுவார்கள். வாயில் மூக்குப் பொடியும் திணிப்பதுண்டு.

காலையில் தலைக்கட்டு வரி வசூலிப்பார்கள். திருமணம் முடிந்த ஆண்கள் அனைவரும் வரிக் கொடுக்க வேண்டும். சிறு வயதில் ஒரு படி வீட்டு அரிசியும் பத்து ரூபாயும் கொடுப்பார்கள். இதை இறந்தவருக்கு மரியாதை செய்யவும், தேவையானதை வாங்கவும் செலவிடுவார்கள். பின்னர் கேதம் கேட்டு வருபவர்களுக்கு மதிய உணவு அளிப்பதற்கும் பணம் வாங்கினார்கள். இறந்தவர் வீட்டில் செலவு செய்வதற்கு பணம் இல்லையெனில் பணத்திற்கு ஏற்பாடும் செய்வார்கள்.

இறந்துவிட்டார் என்று உறுதியானால் உடல் வீங்காமல் இருப்பதற்காக வாயில் கொஞ்சம் மண்ணெண்ணெய் ஊற்றுவார்கள். வெற்றிலை கற்பூரம் சேர்த்து உடலில் தேய்ப்பார்கள். சமீபத்தில் ஒரு தெருவில் இறந்துவிட்டாரென்று கருதி மண்ணெண்ணெய் ஊற்ற அவர் கொஞ்ச நேரத்திலேயே துப்ப ஆரம்பித்துவிட்டார். பின்னர் மருத்துவமனைக்குக் கொண்டு போய் வைத்தியம் பார்த்தது சூப்பரான

கிராமத்துக் காமெடி. ஐஸ்கட்டிகளை வாங்கி வந்து தலையில் சும்மாடு போல் கட்டிவைப்பதும், காலுக்கு தலையணை போலவும் வைப்பதுண்டு. இதெல்லாம் மகன், மகள் போனறவர்கள் நீண்ட தூரங்களில் இருந்து வரத் தாமதமாகும் என்றால் செய்வது. அன்று சென்னை போன்ற ஊர்களுக்குக் கூட நேரில் ஆள் போவார்கள். கூலி வேலை செய்பவர்களுக்கு வீட்டு முகவரி தெளிவாக இருக்காதென்பதால் தந்தியும் கொடுக்க முடியாது. தற்போது உடலைப் பற்றிக் கவலையில்லை. குளிர்சாதனப் பெட்டி பரளச்சியிலேயே கிடைக்கிறது.

விடிந்ததும் முதல் வேலையாக சிலுக்குப்பட்டி, கல்லூரணி, நார்த்தம்பட்டி, பொம்மகோட்டை போன்ற ஊர்களுக்கு கொட்டுக்கு ஆள் அனுப்புவார்கள். ஏதாவதொரு ஊரில் ஆள் கிடைப்பார்கள். கல்லூரணி ஆலமரப் பேருந்து நிறுத்தத்தில் இதற்காகவே ஆட்கள் உட்கார்ந்திருப்பார்கள். அன்றைக்கெல்லாம் பெரும்பாலும் சிம்பலாக் கொட்டு தான். சிம்பலக்க சிம்பலக்க சிம்பலா என்று அடிப்பதால் சிம்பலாக் கொட்டு. எளிமை என்பதை ஆங்கிலத்தில் சிம்பிள் என்று சொல்லுவோமல்லவா. சிம்பிளான கொட்டு என்பதைத் தான் இப்படி சிம்பலாக் கொட்டு என்கிறார்கள் போலும். இப்படித்தான் அதிகமாக என்பதைக் குறிக்கும் மெஜாரிட்டியை மெசினாரிட்டி என்பார்கள். ஹெயிட் அயிட்டாகும்.

பின்னர் பலபேர் சேர்ந்து அடிக்கும் உறுமி மேளம் வந்தது. சினமாப் பாடல்களை நாதஸ்வரத்தில் வாசித்து தோல்க் கருவிகளை அடிப்பார்கள். கொட்டு ஒன்பது மணி பேருந்தில் வரும். அதற்கு முன்பாகவே இறந்தவர் வீட்டில் தென்னந்தட்டி வைத்து கொட்டகை போடுவார்கள். தட்டிக்குக் கீழே வேட்டிகளை ஊக்கால் இணைத்திருப்பார்கள். பலரும் வேட்டிகள் கொடுப்பார்கள்.

முன்பெல்லாம் எந்தச் சாதியில் துஷ்டியென்றாலும் ஊரில் வேலைக்குச் செல்ல மாட்டார்கள். எல்லா சாதிப் பெண்களும் வந்து செல்வார்கள். ஆண்களும் வந்து கொஞ்ச நேரம் இருந்து விட்டுப் போவார்கள். இறந்தவரை தூக்கிச் செல்லும் போதும் பலபேர் வந்து செல்வார்கள். மற்ற தெரு கேதத்திற்கு எங்கள் தெருப் பெண்களும் எல்லோரையும் அழைத்துக் கொண்டு போய் வருவார்கள். இன்று இந்த நல்ல பழக்கம் மாறிவிட்டது. எமது அம்மா நாற்று நடாத நெல் வயல்களே இல்லை. அவர் களையெடுக்காத வயல்களும் இல்லையென்று சொல்லலாம். அவரது மறைவிற்கு மற்ற தெருவிலிருந்து வந்தவர்கள் மிகச் சிலரே. அன்றைக்கு இருந்தவர்கள் மனிதர்களை மதித்தார்கள்.

சில விஷயங்களில் கிராமத்தவர்கள் ரொம்பவும் சமர்த்தாக இருப்பார்கள். அழுது கொண்டு இருந்தாலும் யார் யார் வருகிறார்கள், யார் வீட்டிலிருந்து ஆட்கள் வரவில்லையென்பதை சரியாகப் பார்த்திருப்பார்கள். ஒருவர் வீட்டிலிருந்து போகவில்லையெனில் இவர்கள் வீட்டு நிகழ்வுக்கு அவர்களும் வரமாட்டார்கள். இன்னொன்றையும் யாம் கவனித்ததுண்டு. முதல் முறை விடுமுறைக்குச் செல்லும் போது சண்டை போட்டு பேசாமல் இருப்பார்கள். அடுத்த விடுமுறையில் இருவரும் கொஞ்சிக் குலாவிக் கொண்டு இருப்பார்கள். உணர்ச்சிகளை உடனே வெளிப்படுத்தி விடுவார்கள். மற்றபடி மனதில் பெரிய அளவில் வன்மத்தை வளர்க்க மாட்டார்கள். என்னதான் சண்டை, சச்சரவு என்றாலும் நல்லது கெட்டதுக்குப் போய்விடுவார்கள். பெரியவர்களும் விட மாட்டார்கள். எப்படியாவது மனதைக் கரைத்து விடுவார்கள். ஆனால் இன்று அப்பா இறந்ததற்கே மகன் வரவில்லை. இத்தனைக்கும் வீடு, காடு, கரையென்று சொத்துக்கள் கொடுத்த அப்பாவிற்கே இந்த நிலைமை.

செய்தி தெரிந்தவுடனேயே அகரத்துப்பட்டியிலிருந்து வந்துவிடுவார்கள். தெற்குப் பட்டியிலிருந்து, ஊருக்கு வரும் முதல் பேருந்தில் வருவார்கள். நடந்தும் வண்டி மாடுகளில் வந்தும் யாம் பார்த்திருக்கிறோம். மிதிவண்டியில் வருவதும் உண்டு. பெருநாழியிலிருந்து பத்தரை பேருந்தில் வருவார்கள். செட்டி குறிச்சிக்கும் ஆள் அனுப்புவார்கள். ஒவ்வொரு ஊர்க்காரர்கள் வரும் போதும் அழுகை வீரியமாக இருக்கும். பெரியவர்கள் அழுகையை அமத்துவார்கள்.

எப்படா கொட்டு வருமென்று சிறுவர்கள் காத்திருப்போம். கொட்டுக்காரர்களில் பலரும் பம்பை முடி வைத்திருப்பார்கள். ஜீப்பா சட்டையும் போடுவார்கள். அரை மணி நேரம் கொட்டடிப்பார்கள். பின்னர் கொஞ்சம் ஓய்வு. இப்படி மாலைவரை விடாமல் அடிப்பதுண்டு. இவர்களுக்கு தவறாமல் சாராயம் வாங்கிக் கொடுப்பார்கள். மதியச் சாப்பாடும் உண்டு. சில பேர் தண்ணியடித்துவிட்டு கொட்டடிப்பதற்கு ஏற்ப ஆடுவார்கள். கொட்டடிப்பவர்களும் குஷியாகி விடுவார்கள். பல நேரங்களில் மாரடிப்பும் நடக்கும். கருவாட்டுக் குழம்ப எமக்குக் கொடுத்திட்டு நீங்க கத்திரிக்காயைக் கடிப்பீங்களே போன்ற எதுகை மோனைப் பாடல்களை ஒரு வித ராகம் போட்டு மார்பில் இரு கைகளாலும் மெதுவாக அடித்துக் கொண்டு பாடுவார்கள். கத்தரிக்காய் எங்களுக்கு கைலாசம் உங்களுக்கு, பூலோகம் உங்களுக்கு, பூசணிக்காய் எங்களுக்கு என ஒவ்வொன்றாகச் சொல்லியும்

பாடுவார்கள். இப்படிப் பாடும்போது உயர்வானவற்றை இறந்தவர்க்குச் சொல்வது மரபாக இருக்கும். மாரடிப்பில் மேளக்காரரும் சேர்ந்து கொள்வார்.

சில ஆண்கள் இருப்பில் தண்ணீர்க் குடமும், தாவணியை மேலேயும் போட்டுக் கொண்டு, பெண்கள் போல் நடித்துக் கொண்டு சிரிப்பாகவும் ஒப்பாரி வைப்பார்கள். இறந்தவர் வயதானவரென்றால்தான் இது போன்று சிரிப்பும் பாட்டுமாக இறந்த வீடு களை கட்டும். கொட்டுக்காரருக்கு பணம் குத்துபவர்களும் உண்டு. அன்றைக்கு ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் நோட்டுக்கள் இருந்தன. ஐந்து ரூபாய் குத்துபவருக்கு, கொட்டுக்காரர் வாழ்த்தி மரியாதை செய்வதும் உண்டு. கொட்டு அடிப்பவர்கள் காலில் சலங்கை கட்டி இரு அணிகளாகப் பிரிந்து, ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்திற்கு ஆடிக் கொண்டே செல்வார்கள். வட்டமாக நின்றும் அடிப்பார்கள். பார்ப்பதற்கு உற்சாகமாக இருக்கும். இன்றைக்கு கொட்டுக்காரர்கள் முகத்தில் இப்படியான உற்சாகம் இல்லை. கொட்டும் நேரமும் மிகக் குறைவு. அன்று விட மாட்டார்கள்.

பானக்காரம் நிறையக் கொடுப்பார்கள். தண்ணீரில் கருப்பட்டியும், புளியும் கலந்து செய்வார்கள். வெய்யிலுக்கு ஏற்ற பானம். இன்று பானக்காரம் என்றால் என்னவென்றே தெரியாத நிலை உருவாகிவிட்டது. தேநீரும் மொத்தமாகப் போட்டு, அவரவர் வீட்டிலிருந்து டம்ளர்கள் வாங்கி வந்து ஊற்றிக் கொடுப்பார்கள். ஈய டம்ளர்கள் தான் நிறைய இருக்கும். சிறுவர்கள் ஓயாமல் குடித்துக்கொண்டே இருப்பார்கள். வேறு தெருக்காரர்கள் வந்தால் சோடா, கலர் கொடுப்பார்கள். பின்னர் கலர் பாட்டில் கொடுப்பது வழக்கமாகிவிட்டது. கடையில் மொத்தமாக வாங்கி பெண்கள் சுமந்து வருவார்கள். கொட்டுக்காரர்கள் முன்னே கொட்டடித்தபடி செல்வார்கள். இப்படி எத்தனை பேர் கொண்டு வந்தார்கள். என்பதை வைத்து இறந்தவருடைய மரியாதையைக் கணித்துவிடலாம்.

இறந்தவரின் சடங்கு சம்பிரதாயத்துக்குத் தேவையான பொருள்கள் வாங்க ரெட்டியபட்டிக்கோ, அருப்புக்கோட்டைக்கோ முதல் பேருந்திலேயே தெரு சார்பாக இரண்டு ஆட்கள் சென்றிருப்பார்கள். இராமலிங்க மாமா செல்வார். அவருக்கு முன் இருளப் பெரியப்பா போன்றவர்கள் போவார்கள். பூக்கள், ஓலைப்பாய், கொள்ளிக் குடம், குச்சிகள், துணிமணிகள், வெடிகள் போன்றவற்றை வாங்கிக்கொண்டு இரண்டு மணி பேருந்தில் திரும்புவார்கள். பிறந்த வீட்டுக் கோடி, புகுந்த இடத்துக் கோடி போடுபவர்களும் ரெட்டியபட்டிக்கு சென்று வாங்கி வருவார்கள்.

இதற்கிடையில், இளவட்டங்களோடு ஒரு பெரியவர் சென்று சுடுகாட்டில் குழி வெட்டி வைப்பார். தேவேந்திரர், ஆதிதிராவிடர், அருந்ததியருக்கு அருகருகே சுடுகாடு. மற்ற சாதிக்காரர்களுக்கு தனித்தனியாக ஊரின் தெற்கே உள்ளது. சலவை செய்யும் பொன்னுச்சாமி அவர்கள் இன்னொருவரை துணைக்கு வைத்துக் கொண்டு பல்லக்குக் கட்டுவார். வசதிக்கேற்ப பூப்பல்லக்கு, படகுப் பல்லக்கு என்று மூங்கில் குச்சிகளாலும், துணிகளாலும் கட்டி முடிப்பார். தற்போது பணம் கொடுப்பதற்கு ஏற்றவாறு பல்லக்கு கட்டுகிறார்கள். சமீபமாக ஊரில் சில பேருக்கு அருப்புக்கோட்டையிலிருந்து பல்லக்கு வாகனமும் வருகிறது. உள்ளூர்க்காரர்களுக்கு தொப்பைகளைத் தூக்கவே முடிவதில்லை. இதில் இறந்தவரையும் தூக்கிச் செல்ல முடியுமா. சினிமா பாட்டுக்களைக் கேட்டுக் கொண்டே ஹாயாக இடுகாடு வரை சென்று வருகிறார்கள். பணக்காரர்கள் என்றில்லாமல் இனி எல்லோருக்கும் இப்படியான வாகனம் வருவது நிச்சயம்.

சொந்தக்காரர்களெல்லாம் வந்தபின் மூன்று மணி அளவில் மகள்கள், பேத்தி முறை உள்ளவர்கள் குடங்களில் தண்ணீர் எடுத்து வருவார்கள். தெருக் கிணற்றில் தண்ணீர் எடுத்துப் பார்த்திருக்கிறோம். பின்னர் அடிக்குழாய் தண்ணீர். அழுதுகொண்டே குடத்தை இடுப்பில் தூக்கி வருவார்கள்.

இறந்தவரை இப்படிக் கொண்டு வந்த தண்ணீரால் பெண்கள் குளிப்பாட்டுவார்கள். இறந்த அம்மையாருக்கு நல்லெண்ணெய், சீயக்காய் தேய்த்துத் தண்ணீர் ஊற்றுவார்கள். பெண்ணோடு பிறந்தவர்களின் புதுசேலை, சட்டையைக் கட்டி அலங்காரம் செய்வார்கள். பின் பொன்னுச்சாமி அவர்கள் கால், கைகளைக் கட்டுவார். கண்களுக்கு மஞ்சளும், நடுவில் கறுப்புக்கு கரி மையும் வைப்பார்கள். சுமங்கலியென்றால் நெற்றியில் மஞ்சள், குங்குமம் வைத்து நடுவில் ஒரு ரூபாய் நாணயத்தை வைப்பார்கள். இப்படி சுமங்கலியாகப் போய்ச் சேர வேண்டுமென வயதானவர்கள் அடிக்கடி சொல்லிக் கொள்வார்கள்.

யாம், இறந்தவரின் இப்படியான கண்களை சிறுவயதில் பார்க்கவே மாட்டோம். ஞாபகத்திற்கு அந்தத் தோற்றம் ஓயாமல் வரும் என்பது காரணம். இரண்டு மூன்று நாட்களுக்கு இரவு நேரத்தில் வீட்டில் தனியாக இருக்க மாட்டோம். இரவு வீட்டு முற்றத்தில் உட்கார்ந்து சாப்பிடும் போது ஏதாவது தேவையென்றால் வீட்டுக்குள் சென்று வர யாரையாவது கூப்பிடுவோம். வேண்டுமென்றே யாரும்

வரமாட்டார்கள். ஒரே தாவில் வீட்டுக்குள் சென்று குழம்போ, தண்ணீரோ எடுத்துக் கொண்டு நொடிப் பொழுதில் வந்து விடுவோம்.

இப்படி அலங்காரம் நடந்து கொண்டிருக்கும்போதே ஆண்கள் நீர்மாலை எடுத்து வர தெரு அருகேயிருக்கும் கண்மாய்க்கு கொட்டோடு செல்வார்கள். வேறுசில சாதிக்காரர்களும் நீர்மாலை எடுக்க இங்குதான் வருவார்கள். இந்தச் சடங்கை குடிமகன் செய்வார். பெண்கள் இரவு இந்தப் பக்கம் ஒதுங்குவதால் அருவெறுப்பாக இருக்கும். வேட்டியை நான்கு மூலைக்கும் மைத்துனர்கள் பிடித்துக்கொள்ள நடுவில் மகன்கள், பேரன்கள் நடப்பார்கள். கண்மாயில் கொஞ்சம்கூட தண்ணீர் இல்லையென்றால் கிணறு, அடிகுழாயிலிருந்து தண்ணீர் கொண்டு வருவார்கள். சமீப காலமாக அதுவும் இல்லாமல் வீட்டிலிருந்து குடங்களில் சுமந்து வருகிறார்கள்.

மகன்கள் குளித்து, புதுவேட்டிகள் கட்டி, இடுப்பில் துண்டைக் கட்டிக் கொண்டு நான்கு திசைக்கும் விழுந்து கும்பிடுவார்கள். பித்தளைச் செம்பில் வெள்ளை நூல் சுற்றி குடிமகன் தயாராக வைத்திருப்பார். பூணூல் போடுவார்கள். நெற்றி, மார்பு, கைகளில் திருநீறு பூசுவார்கள். செம்புகளில் தண்ணீர் ஏந்தி வருவார்கள். வெடி போடுவதும் நடக்கும். இறந்தவர்க்கு அலங்காரம் செய்து முடிப்பதற்கும், நீர்மாலை வருவதற்கும் சரியாக இருக்கும். சில நேரங்களில் நீர்மாலை வீட்டு அருகே வந்து காத்திருக்கும். இதற்குள்ளாக அருந்ததியர் சமூகத்தவர் கொள்ளிச்சட்டியை தயார் செய்து வைத்திருப்பார். மண் சட்டியில் விறகுக் கட்டைகளை எரித்து கங்குகளை உண்டாக்கி, சட்டியில் கயிறு கட்டி அதைத் தூக்கிச் செல்வதற்கு ஏற்றவாறு செய்திருப்பார்.

இறந்தவருக்கு அலங்காரம் செய்து, முற்றத்தில் நாற்காலியில் உட்கார வைத்திருப்பார்கள். சிறுவர்களுக்கெல்லாம் பத்திக்குச்சியை கொடுத்திருப்பார்கள். மருமகள்கள் குளித்து, புது ஆடைகள் அணிந்து, அலங்காரம் செய்து நிறமாலை ஏந்தி வருவார்கள். மரக்காலில் நெல் வைத்து மேலே பித்தளை விளக்கில் தீபம் ஏற்றியிருப்பார்கள். மகன் நீர்மாலைச் செம்பில் தேங்காய், மாவிலை வைத்து மனைவியின் சேலைத் தலைப்பை பிடித்துக் கொள்ள, இருவரும் மூன்று முறை வலம் வந்து விழுந்து வணங்குவார்கள். மஞ்சள் அரிசியும் வைத்திருப்பார்கள். பசுஞ்சாணத்தை நெல்லோடு சேர்த்து கையில் தொட்டும் வாங்குவார்கள்.

பெண்ணிற்கு பிறந்த இடத்துக் கோடி போடுபவர்கள் போடுங்கள் என்று பொன்னுசாமி சத்தமாகச் சொல்வார். சடங்குகளின் போது எதைச் சொன்னாலும் மூன்று முறை சொல்வது வழக்கம். பேச்சு, அழுகைச் சத்தத்தில் கேட்காமல் இருக்கலாம் என்பதற்கான நல்ல ஏற்பாடு. பெண்ணிற்கு சித்தப்பா, பெரியப்பா உறவுமுறைகளிலுள்ளவர்கள், அவர்களது மகன்கள் இறந்தவரைச் சுற்றி வந்து சேலைகள் சார்த்தி மரியாதை செய்வார்கள். ஆணிற்கு, பிறந்த இடத்துக் கோடி என்று அவரது சொந்த பந்தங்கள் இபபடி வேட்டிகள் அணிவிப்பார்கள். மகள்கள், மிகவும் பிரியமானவர்கள் சோகமாக அழுவார்கள். தூக்கிச் செல்லும் போது அனேகக் கண்களில் கண்ணீர் கொட்டும்.

கிழக்குப் பக்கம் பார்த்து பல்லக்கு நிற்கும். இறந்தவரை பல்லக்கில் உட்கார வைத்து சடங்கு செய்பவர் தலை, கால், கைகளை நன்றாகக் கட்டுவார். சனிக்கிழமையெனில் கோழிக் குஞ்சையும் பல்லக்கின் முன்பாகக் கட்டுவதுண்டு. பல்லக்கைத் தூக்கி மூன்று முறை வலமாகச் சுற்றி தெருமுனை அருகே சென்று மறுபடியும் மூன்று முறை சுற்றி இறக்குவார்கள். இப்படி வரும் வழியில் முன்னர் வாழைப்பழம், வெல்லம், காசுகளைத் தூவுவார்கள். தற்போது இப்பழக்கம் மறைந்து விட்டது. பின்னர் குடம் உடைப்பது நடக்கும். நீர்க்குடம் சுமந்தவர்களின் தலையில், நீர் நிரம்பிய சிறு மண் சட்டியை வைத்து சுற்றி வருவார்கள். பிரிவுத் துயரில் அழுவார்கள் என்பதால் இன்னொரு பெண் பானையைப் பிடித்துக் கொண்டு கூடவே சுற்றி வருவார். ஒவ்வொரு சுற்றுக்கும் சடங்கு செய்பவர் அருவாளால் சிறு ஓட்டை போடுவார். ஓட்டை வழியாக நீர் கொட்டும். மூன்று சுற்று முடிந்தபின் கீழே போட்டு உடைத்து விடுவார்.

பல்லக்கைத் தூக்குபவர்கள் நான்கு பக்கமும் இரண்டிரண்டு பேராக எட்டுப் பேர் இருப்பார்கள். இடதுபுறமாக மூன்று முறை சுற்றி பல்லக்குப் புறப்படும்போது கோவிந்தா கோவிந்தா என்றும் சொல்வார்கள். சில பேரன்கள் பல்லக்கின் முன்பக்கமாக ஏறிக் கொண்டு கோவிந்தா சொல்வதும் உண்டு. போகும் வழியில் கடுகை வீசிக் கொண்டு செல்வர். தெருமுனையோடு பெண்கள் திரும்பிப் பார்க்காமல் வீட்டிற்கு வந்து விடுவர். பின் குளித்து விட்டு உடை மாற்றிக் கொள்வார்கள்.

பல்லக்குப் போகும் வழியில் மாலைகளிலிருந்து பூக்களை பிய்த்துப் போட்டுக் கொண்டே போவார்கள். பல்லக்கு முன்பாகவும் உதிரிப் பூக்களை தூவிக் கொண்டு

செல்வார்கள். கொள்ளிச் சட்டியும் முன்னே செல்லும். வான வெடி போடுவார்கள். பல்லக்கைச் சுமப்பவர்கள் மாறிக் கொள்வதும் உண்டு. இவ்வாறு இறுதி ஊர்வலம் முடிந்து வெளியூர்க்காரர்கள் அவரவர் ஊருக்குச் செல்வது முன்னர் வழக்கம். இப்போது நெருங்கிய உறவினர் மட்டுமே வருகிறார்கள். சுடுகாட்டில் பல்லக்கை மூன்று முறை சுற்றி இறக்கி வைத்து மற்ற சம்பிரதாயங்கள் நடக்கும்.

மகன்களுக்குப் பூணூலைக் கழற்றிவிட்டு குடிமகன் மொட்டை போட்டுவிடுவார். கொட்டுக்காரர், குழி வெட்டுபவர், பல்லக்குக்காரர், குடிமகன், சலவைக்காரர் என்று எல்லோருக்கும் பணம் கொடுப்பார்கள். இதன்போது நடக்கும் பேச்சு வார்த்தை சுவாரஸ்யமாக இருக்கும். இவ்வளவு தான் என்று இவர்கள் சொல்ல காணாது என்று அவர்கள் மறுக்க வேடிக்கையாக இருக்கும். கல்லுக்காளை பெரியப்பா இப்படி பணம் பிரித்துக் கொடுப்பார். முன்பெல்லாம் முதலிலேயே இவ்வளவு பணம் என்று பேசியிருக்க மாட்டார்கள் போலும். வாங்கமாட்டோம் என அடம் பிடித்து சில அடி தூரம் நடப்பார்கள். எப்படியோ சமாதானம் முடிந்துவிடும். இறந்தவரின் உடலை குழி அருகே வடக்குப் பக்கமாகப் பார்த்து சடங்கு செய்பவர், காலோடு அணைத்துப் பிடித்துக்கொள்வார். வாக்கரிசி போடுபவர்கள் வாங்க என்று அழைப்பார். அனைவரும் சில்லறைக் காசுகள் போட்டு கொஞ்சம் மஞ்சளரிசியை எடுத்து இறந்தவர் வாய் அருகே காட்டி மடியில் போடுவார்கள். எல்லோரும் வாக்கரிசி போட்டபின் பெண்களுக்கு நகைகளைக் கழற்றி உரியவர்களிடம் கொடுத்து விடுவார். மூத்த மகன் கொள்ளிப் பானையை வைத்து மூன்று முறை சுற்றி வருவார். மற்ற மகன்கள் பிடித்துக்கொண்டு வருவதுண்டு. பின்னர் பானையை உடைத்து விடுவார்கள்.

குழிக்குள் இறங்கி ஒருவர் பிடித்துக் கொள்ள இறந்தவர் முகத்தை துணியால் சுற்றி குழிக்குள் இறக்குவார்கள். மண் அள்ளிப் போட வாங்க எனக் கூப்பிடும் போது அனைவரும் சென்று மூன்று முறை கொஞ்சம் மண் அள்ளிக் குழிக்குள் போட்டு இறுதி மரியாதை செய்வார்கள். அதன்பிறகு மூன்று முறை மண் அள்ளிப் போட்டு பின் மண்வெட்டியால் மண்ணை அள்ளி குழியை நிரப்புவார்கள். முன்பு நாய், நரி தோண்டிவிடக் கூடாதென்று மண்குழிக்கு மேலே கருவமுள் செடிகள் வைத்து அதன் மேலும் மண்ணைக் கொட்டி மூடுவார்கள். தற்போது முட்கள் வைத்து மூடுவதில்லை. நரி இருந்தால்தானே இரவில் வந்து உடலைத் தோண்டுவதற்கு. முன்பெல்லாம் இரவில் நரி ஊளையிட்டால் ஏதோ அபசகுனம் எனப் பெரியவர்கள் சங்கடப்படுவார்கள். குழி அளவிற்கு மேடாக மண்ணை வைத்து தலைமாட்டில்

சிறிய பள்ளம் தோண்டி பிரண்டைச் செடிகளை நடுவார்கள். பிரண்டை இல்லையெனில் துளசியும் நடுவதுண்டு. இறுதியாக ஒரு கொட்டு மூன்று முறை அடிக்கும். நாளை மூன்றாம் நாள் பால் ஊற்றுவதற்கு அனைவரும் தவறாமல் வந்து விடுங்கள் என்று சடங்கு செய்பவர் சத்தமாகச் சொல்வார். திரும்பிப் பார்க்காமல் அனைவரும் வீட்டிற்கு வந்து குளிப்பார்கள்.

மகன்கள் குளித்துவிட்டு வீட்டிற்குள் நுழையும்போது, வாசல் முன்பு போட்டிருக்கும் உலக்கையைத் தாண்டுவர். சிறிது வேப்பஞ்சாறும் குடிப்பார்கள். இரவு சாப்பாட்டிற்கு எல்லோர் வீட்டிலிருந்தும் சோறு, பருப்புக் கடைசல், ரசம் கொண்டு வந்து இறந்தவர் வீட்டில் வைப்பார்கள். இது சாப்பிடுதற்கு ருசியாக இருக்கும். எமக்கு இந்த பருப்புக் கடைசல் மிகப் பிடிக்கும். சிறுவர்களையெல்லாம் கூப்பிட்டு பந்திபோல் பரிமாறுவார்கள்.

தெருவிலுள்ள அனைவரும் சலவைக்காரரிடம் உடைகளை வெளுக்கப் போடுவார்கள். இப்படியான நாட்களில் இரண்டு மிதிவண்டிகளில்கூட உடைகளைக் கொண்டு செல்வார்கள். அடுத்த நாள் மகன்கள் விரதம் இருப்பார்கள். சாயங்கால வேளையில் சுடுகாட்டுக்குச் செல்லும் முன் விரதச் சாப்பாட்டை புறங்கையில் கொஞ்சம் வைத்து மூன்று முறை துப்பச் செய்து கீழே போடுவார்கள். அகத்திக்கீரை கண்டிப்பாக இருக்க வேண்டும். பிரண்டைத் துவையலும் கொடுப்பார்கள். தெரு ஆண்களெல்லாம் இறந்தவரை நல்லடக்கம் செய்த குழிக்குச் செல்வார்கள். அங்கே தலைமாட்டில் இன்னாருக்கு இன்னார் பால் ஊற்றுவதாக மூன்று முறை சத்தமாகச் சொல்லி, மகன்கள் பால் ஊற்றுவார்கள். மகன்களைத் தொடர்ந்து விருப்பப்படுபவர்கள் பால் ஊற்றுவர். அதே போன்று எள்ளும், தண்ணீரும் இடுவார்கள். இறந்தவருக்குப் பிடித்தமான உணவுப் பண்டங்களை படையிலிடுவார்கள். அந்தக் காலத்தில் காரச்சேவு, சீனிச்சேவு, சீவல், மிக்சர், முறுக்கு, அதிரசம், சீனிமிட்டாய் போன்றவை வைப்பார்கள். வீட்டாரும் பண்டங்கள் செய்திருப்பார்கள். படையல் போட்டபின், வந்திருப்பவர்களுக்கு இவற்றைப் பகிர்ந்தளிப்பார்கள். சாப்பிட்டுக்கொண்டே வீடு வந்து சேர்ந்துவிடலாம். இதெல்லாம் தெரு சார்பாகவே செய்வார்கள்.

இரவு உறவின்முறை சார்பாக பொதுச் சாப்பாடு பரிமாறுவார்கள். சாப்பிட்ட பின், மைத்துனர்மார்கள் லேஞ்சி கட்டுவார்கள். குடிமகன் நான்கு பக்கமும் விழுந்து வணங்கி லேஞ்சி கட்டுபவர்கள் கட்டலாம் என அறிவிப்புச் செய்வார். அனைத்து

விதமான அறிவிப்புகளின் போதும் சாமி, சாமியோவ் போன்ற வார்த்தைகள் கண்டிப்பாக இடம் பெற்றிருக்கும். மகன்கள் தரைவிரிப்பில் அமர்ந்திருப்பார்கள். சொந்த மைத்துனர்கள் முதலில் வேட்டி, துண்டு தலையில் கட்டிவிடுவார்கள். கட்டும் போது இன்னாருக்கு இன்னார் லேஞ்சி கட்டுகிறோம் எனச் சத்தமாகச் சொல்லவேண்டும். காலில் வேறு விழ வேண்டும். பின்னர் மற்றவர்கள் கட்டுவார்கள். குடிமகனுக்கும், சலவைத் தொழிலாளிக்கும் வேட்டி துண்டு கொடுப்பார்கள். தற்போது லேஞ்சியாக பேண்ட், சட்டை போடுகிறார்கள். மோதிரம் போடுவதும் வந்துவிட்டது.

அடுத்த நாள் மைத்துனர்மார்கள் சேர்ந்து மகன்களுக்கு கறிச்சோறு போடுவார்கள். பதினாறாம் நாள் வசதியானவர்கள் ராமேஸ்வரம், சேதுக்கரை சென்று சாமி கும்பிட்டுத் திரும்புவார்கள். பெரும்பாலும் வீட்டிலேயே படையல் வைத்து சாமி கும்பிடுவார்கள். தற்போது ஐயர் வைத்து காரியம் செய்பவர்களும் உண்டு.

பொன்னுசாமி, பெருமாள் ஆகியோருக்குப் பின் அவர்களது வம்சாவழிகள் இப்பணியைச் செய்கிறார்கள். அன்று வருடக் கூலி கொடுப்பார்கள். தற்போது, முடி திருத்துபவர் முடி வெட்டியவுடனே பணம் பெற்றுக் கொள்கிறார். சலவைக்காரர் இறப்புக்கு மட்டும் வந்து செல்கிறார்.

சமீப ஆண்டுகளில் இன்னொரு பைத்தியக்காரத்தனமும் பெருகி வருகிறது. இறந்தவர் வீட்டில் அனைவரும் இணைந்து பிரதிபலன் பாராமல் வேலைகள் செய்வார்கள். இன்றோ இறப்புச் செய்தி வரும் முன்பே மதுபாட்டில் வாங்கப் பணம் கேட்கிறார்கள். பணம் கொடுக்கவில்லையெனில் ஒரு வேலையும் நடப்பதில்லை. இறந்தவர் வீட்டில் இதற்காக சில ஆயிரங்கள் அழ வேண்டியிருக்கிறது. குடித்து விட்டு சும்மாவும் இருப்பதில்லை. தேவையில்லாத வம்புகள் வேறு. முன்பெல்லாம் ஒன்றிரண்டு பேர்தான் குடிப்பார்கள். குடித்தவர்களும் வெட்கப்பட்டுக் கொண்டு வெளியில் வரமாட்டார்கள். இன்று ஊரே குடிக்கிறது. தீபாவளி, பொங்கல் போன்ற நாட்களில் பாட்டில் வாங்குவதற்கு பறந்து பறந்து திரிகிறார்கள். ஒருவருக்கு ஒரு கிலோ கறி பத்தவில்லை.

பெண் பிள்ளைகளின் விளையாட்டு எனத் தனியாக இருந்தாலும், சிறுவர்களான நாங்களும் அவர்கள் விளையாட்டை விளையாடுவோம். முக்கியமாகச் சொல்ல வேண்டுமென்றால் பாண்டி விளையாட்டு. சில நேரங்களில்

பெண் பிள்ளைகள் கோவித்துக்கொண்டு சென்று விடுவார்கள். கண்ணாமூச்சி எல்லோரும் சேர்ந்து விளையாடும் விளையாட்டு. அதேபோல் ஒளிந்து கொண்டு கண்டு பிடிக்கும் ஐஸ் விளையாட்டு பெரும்பாலும் இரவு நேரங்களில் நடக்கும். சிறுவர்கள் எங்கெங்கோ சென்று ஒளிந்து கொள்வார்கள். கோழிகளை கவித்துப் போடும் பெரிய கூடாரத்துக்குள்ளும் ஒளிந்து கொள்வார்கள்.

தட்டக்கல் விளையாட்டும் பெண்பிள்ளைகள் அதிகமாக விளையாடுவார்கள். ஆடு, மாடு மேய்ச்சலுக்குப் போனால் பெண்களின் விருப்பமான விளையாட்டு இதுவாகத்தான் இருக்கும். ஐந்து கற்களைப் பொறுக்கி தரையில் பரப்பிக் கொள்வார்கள். ஒரு கல்லை மேலே தூக்கிப் போட்டு, அது கீழே வரும் முன் தரையில் கிடக்கும் ஒரு கல்லை எடுத்துக் கொண்டு, மேலே போட்ட கல்லையும் கீழே விழாமல் பிடித்துக்கொள்ள வேண்டும். கீழே கிடக்கும் கல்லை எடுக்கும் போது விரல் மற்ற கற்களின் மீது விரல் பட்டுவிடக் கூடாது. விரல் படலாமா, படக்கூடாதா என்பதை முதலிலேயே தீர்மானித்துக் கொள்வார்கள். இவ்வாறு நான்கு கற்களையும் ஒவ்வொரு கல்லாக எடுக்க வேண்டும். பின் இரண்டாக, மூன்றாக, நான்காக கற்களைப் பிடிப்பார்கள். பின் கற்களில் ஒன்றை வைத்து அடுத்த கல்லை விரலால் சுண்டிவிட்டு அடிக்க வேண்டும். இறுதியாக உள்ளங்கையில் கற்களை நெருக்கமாக அடுக்கி மேலே தூக்கிப் போட்டு, புறங்கையில் கற்களை வாங்கி மீண்டும் உள்ளங்கையில் பிடிக்க வேண்டும். சாமர்த்தியமான சில பெண்பிள்ளைகள் ஐந்து கற்களையும் பிடித்து விடுவார்கள். இருபது, ஐம்பது போன்ற எண்ணிக்கை வைத்து யார் முதலில் அந்த எண்ணிக்கையை அடைகிறார்களோ அவர்கள் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவார்கள்.

இந்த தட்டக்கல் விளையாட்டில், தோற்றவர் வெற்றி பெற்றவரை உப்பு மூட்டை தூக்கிச் செல்வது வழக்கமாக நடைபெறும். பெண்கள் வென்று விட்டால் பையன்கள் தூக்கிச் செல்ல மறுப்பார்கள். சில பெண்கள் ஒத்துக் கொள்ளாமல் முதுகில் ஏறி சுமக்க வைப்பதும் உண்டு. பையன்களுக்குள் விளையாடினால் வேறு பல தண்டனைகளும் கொடுப்பதுண்டு. கைவிரலை மடக்கி கற்களைக் கொண்டு அடிப்பதும் ஒரு தண்டனை. இன்னும் ஒரு தண்டனையாக தரையில் மூன்று கற்களை வைத்து கணுக்கால் எலும்பை அதன் மேல் வைப்பார்கள். கணுக்காலின் அடுத்த எலும்பில் ஒரு கல்லை வைத்து, மற்றொரு கல்லால் எத்தனை எண்ணிக்கையில் தோற்றார்களோ அத்தனை எண்ணிக்கை அடிப்பார்கள். சிலபோ அடிப்பதில், கீழே

உள்ள கற்கள்கூட உடைந்து விடும். யாம் அக்காவோடு விளையாடும் போது இந்த முறையைத்தான் பெட்டாக வைப்போம். அக்காவை வென்று இப்படி அடித்தோமா என நினைவில்லை.

நொண்டி அடித்து இன்னொருவரைத் தொடுவதும் பெண்பிள்ளைகளின் பிடித்தமான விளையாட்டே. ஓரளவிற்கு பெரிய வட்டம் போட்டு அதற்குள் விளையாடுவார்கள். பையன்களும் நைசாக சேர்ந்து கொள்வோம். எந்தெந்தப் பையன்கள் ரொம்பவம் சேட்டை செய்கிறார்களோ, அலுச்சாட்டியும் பண்ணுகிறார்களோ அவர்களை குறிவைத்துப் பிடிப்பார்கள். இந்த விளையாட்டின் போது கேலியும் கிண்டலும் ரசிக்கும் படியாக இருக்கும்.

வளையல்களை இணை சேர்ப்பதும் பிள்ளைகளின் முக்கியமான பொழுதுபோக்கு. கோடைகாலங்களில் விறகை வெட்டி வீட்டில் போட்டபின் இந்த விளையாட்டை விளையாடுவர். உடைந்த கண்ணாடி வளையல்களை நிறைய சேகரித்து வைத்திருப்பார்கள். எமது அக்காவும் மணி அக்காவும் இவ்வாறு அதிகமாக சேர்த்து வைத்திருப்பார்கள். ஒத்த அளவும், நிறமும் கொண்ட உடைந்த வளையல்களை ஒன்றாகச் சேர்த்து எடுக்க வேண்டும். விரல் மற்ற வளையல்களில் பட்டுவிட்டால் அடுத்தவர் இவ்வாறு எடுப்பார். அக்கா சிறு மண்சட்டி முழுதும் இவ்வாறு வளையல்களை சேர்த்து வைத்திருப்பார். எம்மை விளையாட்டுக்கு சேர்க்கும்போதே கசனாறக் கூடாது என்ற ஒப்பந்தத்திலேயே சேர்ப்பார். யாம் ஜெயிக்க வேண்டும் என்பதற்காக அக்காவை ஏமாற்ற நினைப்பதால் இந்த ஒப்பந்தம்.

பையன்களுக்குப் பிடித்த இன்னொரு முக்கியமான விளையாட்டு கோலிக் குண்டு. எம்மிடமெல்லாம் நிறையக் குண்டுகள் இருக்கும். கால்சட்டைப் பையில் எந்நேரமும் வைத்துக் கொண்டுதான் அத்தனை சிறுவர்களும் திரிவோம். யாம் கொஞ்சம் தூரமாக இருக்கும் குண்டைக்கூட குறி பார்த்து அடித்து விடுவோம். பெரும்பாலும் குழிக்குள் போட்டு விளையாடும் முறைதான் அதிகமாக இருக்கும். இதில் பத்து முறை குழிக்குள் குண்டைப் போட்டு அடுத்தவர் காய்களை அடித்து பழமாக வேண்டும். தோற்றால் கைவிரலை மடக்கி குண்டை குழிக்குள் சரியாகத் தள்ள வேண்டும். தரையோடு சேர்த்து குண்டைத் தள்ளும்போது காயம் பட்டுவிடும்.

குண்டு விளையாட்டில் கைமுட்டியால் தள்ளுவது, விரலால் தள்ளுவது, தலையால், மூக்கால், நாக்கால் தள்ளுவது என்ற கட்டுப்பாடுகள்

வைத்திருப்பார்கள். தோற்றவர், குண்டை குழிக்குள் தள்ளுவதைப் பார்க்கையில் வேடிக்கையாக இருக்கும். நாக்கால் தள்ளும் போது சில பையன்கள் மண்ணையும் சேர்த்துத் தள்ளி, வாயெல்லாம் மண்ணாக நிற்பார்கள்.

வழவழப்பான சீனிக் கற்களையும் குண்டாகப் பயன்படுத்துவதுண்டு. அதே போல் ஒருவர் குண்டை இன்னொருவர் எறிந்து அடித்து விளையாடுவதும் நடக்கும். இதில் நிறையக் குண்டுகள் உடைந்து விடும்.

இன்றும் நாங்கள் கிராமத்திற்குப் போனால் விளையாடும் மற்றொரு ஆர்வமான விளையாட்டு தாயம். எமக்கு நினைவு தெரிந்து, ஆரம்பத்தில் சோழிகளை வைத்தே தாயம் விளையாடினோம். எங்கள் வீட்டிலேயே எராளமான சோழிகள் இருந்தன. கொஞ்சம் பெரிய பையன் ஆனவுடன் கருவக் குச்சியிலோ, மூங்கில் குச்சியிலோ தாயக்கட்டை செய்து அனைத்து சிறுவர்களும் வைத்திருப்போம். நான்கு விழுவதைக் குறிப்பதற்காக ஒரு கட்டையில் போடும் குறியீடு, ஒவ்வொருவருக்கும் வேறுபடும். இதில் யார் அழகாக போடுவது என்ற போட்டி இருக்கும். சில பேர் பெருக்கல் குறி போன்றும், சிலர் ஆங்கில எழுத்து எஸ் போன்றும் கத்தியால் செதுக்கியிருப்பார்கள்.

ஜோடி சேர்ந்தே பெரும்பாலும் விளையாடுவோம். காயை வெட்டுப்படாமல் கொண்டு போவதில் அனைவரும் குறியாக இருப்பார்கள். ஆட்டம் இறுதிக் கட்டத்தை அடையும் போது, காய்களை ஒருவருக்கொருவர் வெட்டுவதும், மொக்க அதாவது பழுக்க முடியாமல் திணறுவதும் மிகவும் விறுவிறுப்பாக இருக்கும். பெரியவர்கள் சுற்றி நின்று ஆளுக்கொரு யோசனையும் சொல்வார்கள். விளையாட ஆரம்பித்தால் நேரம் போவதே தெரியாது. பசங்கள் அதிகமிருந்தால் ஒரு கைய்க்கு இரண்டிரண்டு பேராக எட்டுப் பேரும் விளையாடுவதுண்டு. இது இன்னும் ஆர்வமாக இருக்கும். காயை வெட்டு, வெட்டாட்டம், விழு, விருத்தம் போடு என அனைவரும் ஆர்வமாக விளையாடுவார்கள். விழு அஞ்சு, எட்டு கேட்டோமே என்னாச்சு என்று தாயாக்கட்டைகளைத் தூக்கி எறிவதைப் பார்த்தால் ஒரே வேடிக்கையாக இருக்கும்.

சிறுவர்கள் விளையாடுவதைவிட பெரியவர்கள் விளையாடுவது இன்னும் வேடிக்கையாகவும், விறுவிறுப்பாகவும் இருக்கும். பொழுதுபோக்கு விளையாட்டை காசு வைத்து விளையாடிய பின்னர் ஆக்ரோசம் இன்னும் கூடியது. மொளக்கொட்டுத் திண்ணையில் விளையாடுவதைப் பார்த்தால், ஏதோ இரண்டு நாடுகள் முட்டி

போதுவதைப் போல் பரபரப்பாக இருக்கும். காலையில் ஆரம்பித்து மாலை வரை விளையாடுவார்கள். பசிக்கு தேநீர் போதும். தாயக்கட்டையை குத்தி தூரமாக ஏறிய, அதைப் பொறுக்கி எடுத்து வர இன்னொருவர் இருப்பாரென்றால் எவ்வளவு தூரம் எறிவார்கள் என்பதை நாமே அளந்து கொள்ளலாம். சிறுவர்கள் உட்பட அனைவரும் காட்டு வேலைகளுக்குச் செல்லும் விவசாய வேலை காலங்களில் கூட இவர்கள் இப்படி தாயக் கட்டைகளை எறிந்து கொண்டிருப்பார்கள்.

தாயமாவது விளக்கு வைக்கும் வரை விளையாடுவார்கள். சீட்டாட்டமோ நடுச்சாமம் வரை நீடிக்கும். பனிக்காலத்தில் தலையை மூடிக்கொண்டு, தெருவிளக்கு வெளிச்சத்தில் சீட்டை கையில் பிடித்துக் கொண்டு, மெனக்கென்னேவென்று உட்காந்திருப்பார்கள். இப்படி விளையாடுபவர்களில் பாலகிருஷ்ண மாமா, இராமலிங்க மாமா, நல்லதம்பி, அவரது பையன் கருப்பசாமி, திடுமுடுபாண்டி, ஜித்து டெய்லர் போன்றவர்கள் முக்கியமானவர்கள். மற்ற தெருவிலிருந்தும் வந்து உட்காந்திருப்பார்கள். இரவில் யாம் ஒன்றுக்குப் போக எழுந்து வரும்போது, இப்படி விளையாடுபவர்களை எத்தனையோ இரவுகளில் பார்த்திருக்கிறோம். பகல் நேரங்களில் சங்கமடம், பெருமாள்கோவில் மரம் என்று உட்கார்ந்திருப்பார்கள். ஒருமுறை காவல்துறையிடம் மாட்டி அபராதம் கட்டியபின், வேலிக்கருவல் காடுகளுக்குள் ஒளிந்தும் சீட்டாட்டம் நிற்காமல் நடந்தது.

எங்களைப் போன்ற சிறுவர்களின் பிடித்தமான, மற்றொரு விளையாட்டு செதுக்கு முத்து. சிறுவர்கள் ஒவ்வொருவரும் புளியமுத்துக்களை சேகரித்து வைத்திருப்போம். ஒரு சிறிய வட்டம் போட்டு அதற்குள் ஒவ்வொரு பையனும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் முத்துக்களைப் போட்டுக் கொள்வோம். புளியமுத்துக்களை செதுக்குவதற்கு ஓரளவிற்கு தட்டையான கல் தேவைப்படும். இதற்கான கற்களைத் தேடித் திரிவது தனிக்கதை. ஒவ்வொருவரும் எல்லைக் கோட்டைத் தாண்டி அவரவர் கற்களை தூக்கிப் போட வேண்டும். யார் தொலைவாகப் போட்டாரோ அவர் முதலாவதாக முத்துக்களை அடிப்பார். சில பையன்கள் முதல்முறை எறியும்போதே முத்தை கோட்டிலிருந்து வெளியே செதுக்கி விடுவார்கள். இப்படி ஒவ்வொருமுறை செதுக்கும் போதும் ஒரு முத்தாவது வட்டத்தைத் தாண்டி வர வேண்டும். இப்படி வராவிட்டால் அடுத்த பையன் ஆடுவார்.

முத்துக்கள் அதிகமிருந்தால் இன்னொரு முறையிலும் செதுக்கு முத்து விளையாடுவது நடக்கும். நான்கு சிறுவர்கள் விளையாடினால் ஆளுக்கு ஐம்பது

முத்துக்கள் போட்டு கொஞ்சம் மண்ணைப்போட்டு மூடிவிடுவோம். பின் ஒவ்வொருவரும் தூரமாக செதுக்குக் கல்லை எறிந்து, தூரமாக எறிந்தவர் முதலாவதாக வட்டத்துக்குள் இருக்கும் புளியமுத்துக்களை நோக்கி வீசுவார். வீசும்போது குனிந்து கைகளை வீசி லாவகமாக எறிவார்கள். இப்படி எறியும்போது ஒரு முத்து கோட்டுக்கு வெளியே விழுந்தாலும் மொத்தமும் அவருக்கே கிடைக்கும். இப்படி முதலில் எறிவதற்காக ஒவ்வொருவரும் தூரமாக எறிய முயற்சிப்பார்கள்.

புளியமுத்துக்களை வைத்து ஒத்தையா ரெட்டையா விளையாடுவதும் ஆர்வமானதே. ஒன்றிரண்டு முத்திலிருந்து பத்து, இருபது முத்துக்கள் வரை இப்படி வைத்து விளையாடுவதுண்டு. கையில் முத்தை எடுத்து ஒற்றையா, ரெட்டையா எனக் கேட்க வேண்டும். உடன் விளையாடுபவர்கள் சரியாகச் சொல்லிவிட்டால் முத்து அவர்களுக்குச் சொந்தம். தவறாகச் சொன்னால் கையினுள்ளே எத்தனை முத்துக்கள் இருந்ததோ அத்தனை முத்துக்களை அவர் கொடுக்க வேண்டும். சில பையன்கள் அதிரடியாக ஐம்பது, நூறு முத்துக்களை அள்ளி வைத்து வீம்புக்குக் கேட்பார்கள். இரண்டிரண்டாக அடுக்குவதற்கே நீண்ட நேரம் ஆகும். அதுவரை ஜெயிப்போமா, தோற்போமா என்ற தவிப்பில் இருக்கவைப்பார்கள். ஜெயித்தால் இரட்டிப்பு மகிழ்ச்சி கிடைக்கும்.

பெரும்பாலான விளையாட்டுக்களில் வென்றால் அதற்குரிய வெகுமதியும், தோற்றால் சிறு தண்டனையேனும் கிடைக்குமென்பதால் அனைவரும் வெற்றிபெறவே முயற்சிப்பார்கள். சில விளையாட்டுக்களில், தோற்றவரின் கைய் விரல்களை மடக்கி எலும்பின் மீது பாதி உடைந்த வேப்ப முத்துக் கூட்டை வைத்து அடிப்பதுண்டு. தோற்றவரே அடித்துக் கொள்ள வேண்டும். மெதுவாக அடித்தால் வெற்றி பெற்றவர் அடிப்பார். அடிக்கும் அடியில் கூடு உடைந்து தோளைக் கிழித்து இரத்தமும் வருவதுண்டு. பெரும்பாலும் இதற்காக யாரும் சண்டை போட்டு யாம் பார்த்ததில்லை.

யாம் கொஞ்சம் பெரிய பையனாக வளர்ந்தபின் ஆடுபுலி ஆட்டம் விளையாடி மகிழ்ந்தோம். எமது அப்பாவும், பாண்டி அண்ணனும் மணிக்கணக்கில் விளையாடி உட்கார்ந்திருப்பார்கள். வெள்ளைச்சாமி அவர்களோடு யாம் பலமுறை ஆடியதுண்டு. உயர்நிலை படிக்கும் காலங்களிலிருந்து, கிழக்குக் கண்மாய் கரையில் உட்கார்ந்து நண்பர்கள் பலரும் பேசிக் கொண்டிருப்போம். இது போன்ற

சமயங்களிலும் ஆடுபுலி ஆட்டம் நடக்கும். இப்படி கண்மாய்க் கரையில் உட்கார்ந்திருக்கும்போது சிறப்பான நொறுக்குத் தீனி தயாரிப்பதும் வாடிக்கை.

பொட்டுக்கடலையில் நல்லெண்ணெய் சேர்த்து, வெங்காயம், மிளகாய் கிள்ளிப் போட்டு, சீரகத்தை நசுக்கிச் சேர்த்து ஒன்றாகப் பிசைத்து கொள்வோம். இது மணமாகவும் தின்பதற்கு சுவையாகவும் இருக்கும். கரைக்குப் போகும்போதே எல்லாப் பொருட்களையும் வாங்கிச் செல்வோம். வேலைக்குச் செல்பவர்கள் இவ்வாறு சாப்பிட விரும்புவார்கள். குச்சி மிட்டாய், குருவி ரொட்டி, இருபத்து ஐந்து பைசா அளவில் கிடைக்கும் பிஸ்கட் இவையும் ருசிமிக்கவையே. கடலை மிட்டாய் எப்போதும் எல்லோருக்கும் பிடித்தமான ஒன்று.

சிறுகல்லை மணலில் ஒளித்துவைத்து விளையாடுவதும் மாடு மேய்க்கும் நேரத்தை ஆர்வமுள்ளதாக மாற்றும். மணலில் கிடக்கும் சிறு சங்கு ஒளித்து வைத்துக் கண்மூடிப் பிடிப்பதற்கு ஏற்றதாக இருக்கும். மண்ணையோ, மணலையே சிறு மேடாக்கி சீனிக்கல்லையோ, சங்கையோ பெருவிரலுக்கும் ஆட்காட்டி விரலுக்கும் இடையில் வைத்துக்கொள்ள வேண்டும். இரு கைகளையும் கொண்டு, மணல் மேட்டில் நுழைந்து ஏதேனும் ஒரிடத்தில் செருகி ஒளித்து வைக்க வேண்டும். உடன் விளையாடுபவர் அவரது இரு விரல்களையும், நாம் எந்த இடத்தில் ஒளித்து வைத்திருப்போம் என்பதை ஊகித்து அவ்விடத்தில் அழுத்தமாக வைத்து கொள்வார். நாம் ஒளித்து வைக்காத இடத்தில் அவர் மூடிக்கொண்டிருந்தால் நாமே வென்றவர். அவர் சரியாக யூகித்து விரல்களால் பூட்டிக் கொண்டால், நமது ஒரு விரலை வைத்து ஓரளவிற்கு மண்ணைத் தோண்டி ஒளித்து வைத்ததை எடுப்பதற்கு அனுமதியுண்டு. இப்படி எடுக்க முயற்சி செய்யும்போது அவர் இன்னும் அழுத்தமாக விரல்களால் மூடிக்கொள்வார். நம்மால் எடுக்க இயலவில்லையெனில் அவர் வென்றவர். பீன்னர் நாம் அதேபோல் எடுக்க வேண்டியதிருக்கும். பெண் பிள்ளைகளுக்கும், சிறுவர்களுக்கும் ஏற்ற விளையாட்டு இது.

இன்னும் ஏராளமான விளையாட்டுகள் இருக்கின்றன. குமட்டிக்காய் என்ற கசக்காமுட்டிக்காயை எறிந்து விளையாடுவது அனைத்துச் சிறுவர்களுக்கும் மிகவும் பிடித்தமான ஒன்று. இது டென்னிஸ் பந்து அளவுக்கு கொடிகளில் காய்த்துக் கிடக்கும். மழைக்காலங்களில் அனேக இடங்களில் பிடுங்கலாம். கசப்பாக இருக்கும். கால் நடைகளும் திங்காது. ஒருவர் எறிவதும் இன்னொருவர் பிடிப்பதும்,

யாராவது ஒருவரை விரட்டி விரட்டி எறிந்து திரிவதுமாக சாயந்தரப் பொழுதுகள் அமர்க்களமாகக் கழியும்.

கல் தூண்டில் கட்டி விளையாடுவது, சிறுவர்களுக்குப் பிடித்தமான ஒன்று. தரையிலும், கண்மாயிலும் சணலில் கல்லைக் கட்டிக் கொண்டு, மீன் மாட்டி விட்டதாகத் தூக்கி அடிப்பது அலாதி சுகம். தெருவில் விளையாடினால் கல்லைக் கட்டிட்டு என்ன விளையாட்டு இது எனத் திட்டு விழும். சரியாகக் கட்டாமல் ஓங்கி இழுக்கும்போது வீடுகள் மேலும் கல் விழுவது அடிக்கடி நடக்கும். கம்மாக்கரையில் போய் விளையாடுங்க என விரட்டுவார்கள்.

வில், அம்பு விடுவதையும் நாங்கள் விட்டோமா என்ன. கருவக் குச்சியின் நுனிப்பகுதியை பச்சையாக வெட்டி முள்ளை நீக்கி வில்லாக வளைத்துக் கொள்வோம். புளிய விளார்களையும் விடுவதில்லை. அம்புக்கு கூரைக்குச்சிகள். கூரைக்குச்சிகளின் நுனியில் வேலமர முள்ளையும் குத்திக் கொண்டு அடுத்தவர் மேல், வானத்தில், கண்மாய்த் தண்ணீருக்குள் அம்பு விட்டுத் திரிந்த காலங்கள் அற்புதமானவை.

சிறுவர்களுக்கு உப்பு மூட்டை தூக்கித் திரிவது வெகு சாதாரணமானது. உப்பு வாங்கலியோ உப்பு எனவும் கூவித் திரிவார்கள். ஒருபடி உப்பு கொடுங்கய்யா எனச் கோட்டால் உப்பு கொடுப்பதுபோல் பாவ்லா காட்டி வாயால் டுர் சத்தம் போட்டு, சிரித்துக் கொண்டே அடுத்தவருக்கு டுர் கொடுக்கக் கிளம்பி விடுவார்கள். எமக்கு டுர் போட்டால் பிடிக்காது. இரவு நேரங்களில் கூட்டாஞ்சோறு சாப்பிடும்போது யாரிடமிருந்தாவது எப்படியும் ஒன்றிரண்டு டுர் வந்து விடும். உடனே சிறிது சோறை அள்ளி கீழே வைத்துவிட்டே யாம் சாப்படுவதைத் தொடர்வோம். சில நேரங்களில் தனியாக உட்கார்ந்தும் சாப்பிடுவதுண்டு.

சோடாமூடி தேடித்திருந்தது சுகமான அனுபவம். சோடாமூடியை எடுத்து அதில் இரண்டு ஓட்டைகள் போட்டு, நூலினைச் கட்டி, இரண்டு கையின் பெருவிரல்களிலும் மாட்டிக் கொண்டு நூலினைச் சிறிது சுற்றி முறுக்க வேண்டும். பின்னர் மெதுவாக நூலினை இழுக்க இழுக்க மூடி அதிவேகத்தில் சுற்ற ஆரம்பிக்கும். இரு பெருவிரல்களையும் லாவகமாக இழுக்க மூடி சுழல்வது நிற்காது. இப்படியே நேரம் கிடைக்கும் போதெல்லாம் சுற்றிக் கொண்டு காடு மேடெல்லாம் சுற்றி வந்தோம். சுற்றிக் கொண்டே அடுத்த பையன் காது அருகே வைப்பதும் உண்டு. சில பையன்கள் இவ்வாறு லாவகமாக சுற்றத் தெரியாமல்

முழிப்பார்கள். சோடாமூடி என்றில்லாமல் ஏதாவது தகரம் கிடைத்தாலும் அதை வட்டமாக வெட்டி அதிலேயும் இப்படி சக்கரம் செய்து விளையாடுவதுண்டு. சிலர் கால்சட்டைப் பையை நிறைய சோடா மூடி வைத்துக்கொண்டு ஓடும்போது, மூடிகள் உரசும் ஸல்ஸல் சத்தம் தெருவிற்கே கேட்கும்.

வெண்டைக் காய்களையும் விட்டு வைக்கவில்லை. குழம்புக்கு வெட்டியபின் இருக்கும் தூரை எடுத்து முகம் பூராவும் ஒட்டித் திரிந்திருக்கிறோம். இதற்காகவே காய் நறுக்கும் வேலையும் பார்ப்பதுண்டு.

பருப்பு கடையும் மத்தை வைத்து வாள் சண்டை போட்டுத் திரிந்திரிக்கிறோம். பருப்பைக் கடைந்து கொண்டிருக்கும்போதே அம்மாவிடம் மத்தைக் கொடுத்து விடும்படி சொல்லி விடுவோம். மத்தோடு ஒட்டியிருக்கும் பருப்புக் கடைசல் ருசியாக இருக்கும்.

பெண்பிள்ளைகள் சமையல் செய்து விளையாடுவதைக் கெடுப்பதும் அவ்வப்போது நடக்கும். சிரட்டைகளை சமையல் பாத்திரங்களாக வைத்துக்கொள்வார்கள். கருவ இலை, பூக்களை பறித்தும் சமையலுக்குப் பயன்படுத்துவதுண்டு. மண்ணைக் கரைத்து தோசையும், கட்டியாகப் பிடித்து இட்லியும் சுட்டு வைத்திருப்பார்கள். உடைந்த பானைகளில் மண் இட்லி, தோசை வைத்து மேலே கருவ இலை, பூக்களைத் தூவி சாப்பிடக் கொடுப்பார்கள். சில நேரங்களில் கீழே போட்டும் உடைப்பது நடக்கும். அடாவடியாக நடந்து கொண்டால் அடுத்தமுறை சேர்க்க மாட்டார்கள். பின்பு, எங்களையும் விளையாட்டில் சேர்த்துக்கோங்க எனக் கெஞ்ச வேண்டி வரும்.

சாமச் கோடங்கி விளையாட்டும் பிரசித்தம். நடுச்சாமத்தில் வரும் கோடாங்கிக்கு கிராமத்தில் தனி மரியாதை இருக்கும். ஒவ்வொரு வீடாகச் சென்று குறி சொல்வார். வீட்டை பூட்டிக்கொண்டு அவர் சொல்வதை கவனமாகக் கேட்பார்கள். இவர்களின் குறி சொல்லும் திறைமையைப் பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக அளந்து விடுவார்கள். நடுச்சாமத்தில் சுடுகாட்டுக்குச் சென்று பூஜை செய்து, அப்படியே குறிசொல்ல வருகிறாறென்றும் சொல்லி வைப்பார்கள். குறி சொல்லும்போது எதிரே யாரும் வரக்கூடாது என்ற கட்டுப்பாடும் உண்டு. விடிந்தவுடன் ஒவ்வொரு வீடாக காணிக்கை வாங்க சாமக்கோடங்கி வருவார். இரவில் வந்தவர் இவர்தானா என அவரைப் பார்க்க ஆவலாய் இருப்பார்கள். தானியங்கள் கொடுப்பார்கள். ஏமாந்தவர்களிடம் பரிகாரம் என்ற பெயரில்

வகையாகச் சுருட்டுவதும் நடக்கும். சாமக் கோடாங்கி வந்து சென்றால் ஒரு வாரத்துக்கு உதட்டில் கோடாங்கிச் சத்தம் எழுப்பிக்கொண்டு குறி சொல்லித் திரிவதுதான் அத்தனை சிறுவர்களுக்கும் முக்கியமான பணி.

அறுவடைக் காலங்களில் பூம் பூம் மாடுகளும் தவறாமல் வந்துவிடும். மாட்டின் பின்னாடியே ஒடித் திரிந்திருக்கிறோம். சில மாடுகளுக்கு உடலிருந்து ஐந்தாவது கால் போன்ற உறுப்பும் ஒட்டி இருக்கும். இப்படியான மாடு வந்தால் பின்னாடி திரியும் நேரமும் அதிகரிக்கும். பூம் பூம் மாட்டை அலங்கரித்திருப்பது மிகவும் வித்தியாசமாக இருக்கும். அடர்நிறத்திலான தடித்த துணிகளைப் போர்த்தியிருப்பார்கள். கால்களிலும், கொம்புகளிலும் சலங்கை கட்டியிருக்கும். தானியங்களை வாங்கிப் போடுவதற்காக மாட்டின் இருபுறமும் பெரிய பைகளைத் தொங்கவிட்டிருப்பார்கள். நெல், கம்பு, கேழ்வரகு போன்றவற்றிற்கு தனித்தனி பைகளாகப் பிரித்திருப்பார்கள். இந்த வீட்டுக்காரங்களுக்கு கூடிய சீக்கரமே நல்லது நடக்குமா என்று பூம்பூம்காரர் கேட்டு மாடு தலையாட்டும் முன்பே நாங்கள் ஆட்டி விடுவோம். பூம்பூம்காரர் தோற்றமும் கலவையாக இருக்கும். அவரும் உடலில் பல வகையான துணிகளைப் போட்டிருப்பார். பெரும்பாலான பெண்கள் சொளகில் ஏதேனும் தானியம் வைத்துக் கொடுப்பார்கள். பதிலுக்கு கொஞ்சம் திருநீறும் நாலு நல்ல வார்த்தைகளும் கிடைக்கும்.

பூம்பூம் மாட்டைப் போலவே கரடியும் தெருவிற்கு வந்து சுற்றித் திரிந்த காலங்களும் உண்டு. காலையிலேயே கரடி வந்து விட்டால் பள்ளிக் கூடம் போவது கடினம்தான். சில நேரங்களில் பெரிய கரடியாக வந்து நிற்கும். வாயைக் கட்டியிருப்பார்கள். சின்னப் பசங்க தள்ளிப் போங்க என்று விரட்டுவார்கள். கன்னங்கரேலென்ற உருவத்துடன் வேகமாக நடந்து போன கரடிகள் இன்றைக்கும் கண்களில் நிறைந்துள்ளன. கரடியிடம் தாயத்தைக் கொடுத்து, பல்லால் கடிக்க வைத்து வாங்கி மேல்கையில் கட்டிக் கொள்வார்கள். பிறந்த இளம் பிள்ளைகளுக்கும் கட்டுவது நல்லதென்பார்கள். சிலபேர் கரடி ரோமத்தையும் வாங்கிக் கொள்வார்கள். தாயத்தை ஆசிர்வதித்து கடித்துக் கொடுக்காத கரடியை உடன் வந்தவர் அதட்டி மிரட்டுவதை, பயங்காட்டுவதை, இருவரும் சண்டை போடுவதை பார்த்துக் கொண்டும் சிரித்துக் கொண்டும் வேலைக்கும் போக மனமில்லாமல், பெரியவர்களும் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றிருப்பார்கள்.

தேவாங்கை பயமில்லாமல் கண்டு களிக்கலாம். சில நேரங்களில் எஜமானரின் தோளில் அமர்த்து அவரது தலைக்கு மேல் நீட்டிக்கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டே வரும். பெரிய கண்களை உருட்டி உருட்டி எல்லோரையும் பார்க்கும். நரிக்குறவர்கள் ஊரில் வந்து தங்கும்போது, தேவாங்கை கூட்டி வருவார்கள். டேரா அலமரத்தடியில் கூடாரம் போட்டுத் தங்குவார்கள். பெண்கள் பாசிமணி மாலை, காது வளையங்கள் போன்றவற்றை விற்க வருவார்கள். செம்பு மோதிரத்தை தேவாங்கின் ஆசிர்வாதத்துடன் அணிந்து கொண்டோரும் உண்டு. நரிப்பல் வியாபாரமும் அமோகமாக நடக்கும். நரிக்குறவ ஆண்கள், கிழக்குக் கண்மாயில் காலையிலேயே வந்து ஆமையைப் பிடிக்க வலை போட்டு வைப்பார்கள். ஆமைக்கு தூண்டில் போட்டும் உட்கார்ந்திருப்பார்கள். மாலையில் வலையை எடுக்கும்போது சிறுவர்களான நாங்கள் ஒடிச் சென்று பார்ப்போம். நிச்சயம் இரண்டு மூன்று ஆமைகளாவது மாட்டிக் கிடக்கும். மகிழ்ச்சியாக எடுத்துக்கொண்டு செல்வார்கள். அவர்கள் பேச்சை சில சிறுவர்கள் வாய்க்கு வந்தபடியும் பேசித் திரிவார்கள்.

சிறுவர்களான எங்களிடம் ஆமைகள் மாட்டினால் அதோ கதிதான். கிழக்குக் கண்மாயில் தண்ணீர் வற்றும்போது இவை வெளியில் வந்து மாட்டிச் கொள்ளும். கல்லைத் தூக்கிப் போடுவார்கள். பெரியவர்கள் பார்த்தால் விடுங்கடா போகட்டும் என்று விலக்கி வைப்பார்கள். சில நேரங்களில் இரவில் ஆமைக் குட்டிகள் வீட்டு முற்றங்களில் உலா வரும். வீட்டிற்குள் வரக்கூடாது எனப் பதறுவார்கள். சிறுவர்கள்தான் பிடித்துக்கொண்டு போய் தூரப் போடுவோம். ஆமை கடித்தால் விடாது என்றும் இடி இடித்தால் மட்டுமே கடியை எடுக்க முயலும் என்றும் பெரியவர்கள் சொல்லிப் பயம் காட்டினார்கள். கிணறுகளில் குளிக்கப் போகும்போது படிகளில் ஆமையைப் பார்த்தால் பயந்து கொண்டே குளித்து வந்ததும் உண்டு.

பல்லாங்குழி வயதானவர்களுக்குப் பிடித்தமான விளையாட்டு, மரக்கட்டையில் வைத்திருப்பார்கள். பின்னர் எவர்சில்வரிலும் கிடைத்தது. மரக்கட்டையில் மூடியோடு சேர்த்தே பார்த்ததாக எமக்கு ஞாபகம். சிலர் பூமியில் பள்ளம் தோண்டி சிறு கற்களை வைத்தும் விளையாடிப் பார்த்திருக்கிறோம். மலைக்காரப் பெரியாத்தா பல்லாங்குழியில் கோப்பை வெல்லும் அளவிற்குத் திறமையானவர். அவர்கள் வீட்டு அருகே இருந்த மேட்டில் நிரந்தரமான

பல்லாங்குழிக் குழிகள் தோண்டி வைத்திருந்தார். சில வயதான ஆண்களும், பல்லாங்குழியில் சேர்ந்து கொள்வார்கள்.

புதிதாக வயதுக்கு வந்த பெண்களின் ஆபத்பாந்தவன் இந்த பல்லாங்குழியாரே. பொழுது போக வேண்டுமல்லவா. வயதுக்கு வந்த பெண்ணோடு யாரேனும் ஒருவர் இப்படி பல்லாங்குழி ஆடிக் கொண்டேயிருப்பார். அந்தக் காலத்தில் பெண்கள் தாமதமாகத் தான் வயதுக்கு வந்தார்கள். வயதிற்கு வரும் முன்பே பெரிய பெண் போன்ற தோற்றத்தில் இருப்பார்கள். எமது சகோதரியின் சடங்கின் போது யாம் ஒன்பதாம் வகுப்பில் சேர்ந்திருந்தோம். கைகால்களெல்லாம் எமக்கு சொரிசிரங்கு வந்து அவதிப்பட்டதால் பள்ளிக்குப் போகாமல் வீட்டிலேயே இருந்தோம். அக்காவோடு பகல் முழுவதும் விளையாடி யாமும் எந்தக் குழியிலிருந்து முத்தைப் போட ஆரம்பித்தால், நிறையப் பசுக்களை அள்ளலாம் என்ற அளவிற்கு பல்லாங்குழி விளையாட்டில் நுட்பமாகத் தேர்ச்சி பெற்றிருந்தோம். அக்காவிற்கு நிறையப் பசுக்கள் சேர்வது போல் இருந்தால் அழிச்சுக் கிழிச்சு முதலிருந்து ஆடலாம் என ஆட்டம் காட்டுவதும் உண்டு.

அக்கா பெரிய மனுசி ஆகியதில் எமது வயிறுதான் அதிகமாக வஞ்சிக்கப்பட்டது. யாரேனும் வயதிற்கு வந்தால் தெருக்காரர்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவர் என காலையில் பலகாரம் செய்து கொடுப்பார்கள். இவ்வாறு இட்லி, தோசை, பனியாரம் என ஒரு மாதம் வரை வந்து கொண்டே இருக்கும். சில நாட்களில் இரண்டு மூன்று பேர் கூட பெட்டி நிறைய இட்லி கொண்டுவந்து வைத்து விடுவார்கள். புது மனுசிக்கு மதியமும் சேவு, மிக்ஸர், பிஸ்கட், வடை போன்றவற்றை வாங்கிக் கொடுப்பார்கள். காலையும் மாலையும் சத்தான உளுந்தங்கழியும் சாப்பிடுவார்கள். ஒருமாத காலத்திற்குள்ளாகவே நன்றாகக் கவனித்து ஒல்லிக் குச்சியைக்கூட குண்டாக மாற்றி விடுவார்கள். இப்படி பெட்டி பெட்டியாக இட்லி வந்தும் யாம் சாப்பிடமுடியாமல் இருந்தோம். அன்று ஆஸ்பத்திரிக்கு போவதே அரிது. அதிலும் சிரங்குக்கு யார் போவார்கள். கடைகளில் மைய் வாங்கி ஊற்ற வேண்டியதுதான். எமது புண்ணுக்கு இன்னொரு முரட்டு வைத்தியமும் பார்த்தார்கள். ஈயச்சட்டியில் கோழி முட்டையைப் போட்டு கந்தகம், நல்லெண்ணெய் சேர்த்து பொரித்துக் கொள்ள வேண்டும். பின்பு முட்டையைச் சாப்பிட்டு எண்ணெய்யை எடுத்து உடல் முழுக்க பூசிக்கொள்ள வேண்டும். மாலைவரை சாப்பிடாமல் இருக்க வேண்டும். ஒரு வாரம் வரை யாம் இப்படியும் சாப்பிட்டோம். கந்தகம் போட்ட முட்டை குமட்டிக் கொண்டு வரும். முத்து மாமா இந்த வைத்தியத்தை பரிந்துரை

செய்ததால் அவருக்கும் வசவு கிடைக்கும். எப்படியோ ஒரு வாரத்தில் குணமாகியும் விட்டோம்.

எவ்வளவு பலகாரங்களைத்தான் எங்கள் வீட்டினர் சாப்பிடுவார்கள். மற்றவர்களுக்குக் கொடுத்தும், கொண்டு வருபவர்களுக்கே திருப்பிக் கொடுத்துக் கொண்டும் அம்மா இருந்தார். வீட்டிலிருந்து பலகாரம் வெளியே போகும்போது, யாம் சாப்பிட முடியாமல் இருக்கும்போது உம்மை யார் இப்போது பெரிய மனுசியாகச் சொன்னது என்று அக்காவைத் திட்டுவோம். யாம் கவனித்த வரை மற்ற தெருக்காரர்கள் கூட இப்படி பலகாரங்கள் வாங்கிக் கொடுப்பார்கள். களப்புக் கடையில் முதலிலேயே சொல்லி வைத்தும் வாங்கிக் கொடுப்பார்கள். இன்று இந்த நல்ல வழக்கம் அனேகமாக இல்லை.

பெண் வயதானவுடன் முதல் தகவல் தாய் மாமாவிற்குச செல்லும். அவர் வந்து வீட்டின் ஓரத்தில் அத்தி, ஆலங்குச்சிகளை வைத்து பெண்ணைத் தனியாக இருக்க வைப்பார். சிறு சிறு வீடுகள் என்பதால் தனியாக குடில் போட்டு பெண்ணை தங்க வைக்க மாட்டார்கள். எமது அக்கா, வீட்டின் முன்னால் இருந்த அடுப்பங்கரையில் இருந்தார். ஒரு வாரம் கழித்து பெண்ணுக்கு தலைக்கு நீர் ஊற்றும் சடங்கு நடக்கும். ஆரம்ப காலங்களில் ஒலிபெருக்கி கட்டமாட்டார்கள். தற்போது உண்டு. சொந்தக்காரர்கள் அனைவருக்கும் செல்வார்கள். வெளியூர்களுக்கும் தகவல் போகும். சடங்கு இரவில் நடக்கும். பந்தி வைத்து சாப்பாடு பரிமாறுவார்கள். தாய் மாமா சீர்வரிசை வரும். சேலை, ரவிக்கை, பொட்டு, கண்ணாடி, மஞ்சள் கிழங்கு, பவுடர் என ஒரு பெண்ணுக்கு தேவையான அத்தனை பொருட்களும் தாய்மாமா கொடுப்பது முறை. குறிப்பாக பித்தளை அண்டாவை தூக்க முடியாமல் தூக்கி வருவார்கள். அதே போல் பித்தளை பானை, பித்தளை சட்டி. பின் வந்த வருடங்களில் எவர்சில்வர் அண்டா, குடம், குத்துச்சட்டி வந்தது. வீடு தவறாமல் தட்டில் தேங்காய், பழம், பனங்கருப்பட்டி வைப்பார்கள். இப்படி வரும் கருப்பட்டியை என்ன செய்வதெனத் தெரியாமல் கடைகளில் விற்பார்கள்.

சிலபேர் தீட்டு பார்ப்பதாகச் சொல்லி இப்படியானவர்கள் வீட்டிற்கு வரமாட்டார்கள். இப்படி வருபவர்களுக்கென்றே வேறொருவர் வீட்டில் தனியாக சமையல் நடக்கும். கிராமங்களில் சிலபேர் சேவல் கறி சாப்பிட மாட்டோம் எனவும் அடம் பிடிப்பார்கள்.

புதிதாக ருதுவான பெண் ஒரு மாதம்வரை சிரிப்பும் விளையாட்டுமாக இருப்பார். பின்னர் காடுகளுக்குச் செல்ல ஆரம்பித்து விடுவார். அகமுடையார் தெருவில் பல வீடுகளிலும் சடங்கானபின் வெளியே அனுப்ப மாட்டார்கள். காட்டு வேலைக்கும் போகமாட்டார்கள். கிராமங்களில் வீட்டுக்குள்ளேயே வைத்திருப்பதாகச் சொல்வார்கள். திருமணமான பின்புதான் வெளியே செல்ல முடியும்.

சில பெண்களுக்கு சடங்கான உடன் சீர் செய்யாமல் திருமணத்திற்கு முதல் நாள் சடங்கு செய்வார்கள். பத்திரிக்கையில் திருமணத்திற்கு முதல் நாள் பெண் வீட்டில் சடங்கு நடைபெறும் எனவும் அச்சடித்திருப்பார்கள். இந்த பழக்கம் இன்று வரவேற்பு நிகழ்ச்சியாக மாறிவிட்டது. இன்று சடங்கு நிகழ்ச்சியே திருமணம் போன்று சிற்ப்பாக நடத்த ஆரம்பித்தாயிற்று.

அன்றைய திருமணங்கள் எவ்வளவு எளிமையாக நடந்தன தெரியுமா. யாம் சொல்வது சங்ககாலத் திருமணங்களல்ல. முப்பது வருடங்களுக்கு முன்பு நடந்தவை. பெரும்பாலான திருமணங்கள் உள்ளூரிலேயே முடிந்து விடும். மிஞ்சிப் போனால் பக்கத்து ஊருக்குக் கொடுப்பார்கள். பெண் வீட்டார் திருமணப் பேச்சை எடுப்பதில் மிகுந்த கௌரவம் பார்ப்பார்கள். மாப்பிள்ளை வீட்டார் முதலில் பெண் கேட்டு வரவேண்டுமென விரும்புவார்கள். திருமணப் பேச்சு வரும்போதே பெண்ணிற்கும் மாப்பிள்ளைக்கும் விருப்பமிருப்பது தெரிந்து விடும். ஒருவருக்கொருவர் சம்மதமெனில் திருமணம் நிச்சயிக்க நல்ல நாளைத் தேர்ந்தெடுப்பார்கள்.

தெருப் பெரியவர்களை அழைத்துக் கொண்டு மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டிற்கு வருவார்கள். இப்படி வருவதில் பெண்ணின் தாய்மாமாவிற்கு சம்மதமா என்பதைத் தெரிந்துக் கொண்டே வருவார்கள். பெண்ணைப் பொருத்தவரை தாய்மாமாவிற்குத்தான் அனைத்து உரிமைகளும். வரும்போதே வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், தேங்காய், பூச்சரம், மிட்டாய் முதலியவற்றை ஒரு தாம்பாளத் தட்டில் எடுத்து வருவார்கள்.

இதன்பின் நடக்கும் பேச்சுவார்த்தைகள் மிகவும் சுவாரஸ்யமாக இருக்கும். பேச்சுக்களில் கிராமத்தின் குசும்பு அப்படியே எதிரொலிக்கும். பெரிசுகள் பேச, இளவட்டங்கள் கிண்டலடிக்க, பெண்களின் சிரிப்புமாகச் சபை களைகட்டும். சில படங்களில் காட்டுவது போல் ஒரு பெரியவர் ஆரம்பிப்பார். தட்டுல பூவு, பழம்,

வெற்றிலை பாக்கெல்லாம் கொண்டு வந்திருக்கீங்க. எதுக்கு வந்திருக்கீங்க. இது பெண் பிள்ளையின் சார்பாக. இவருக்கு எதுக்கு வந்திருக்காங்கன்னு தெரியாதா என்ன. தெரிந்து கொண்டேதான் இப்படிக் கேட்பார். தெரியாதவர்களும் கூட்டத்தில் இருந்தால் அவர்களும் தெரிந்துக் கொள்ள வேண்டுமல்லவா. அதற்காகக் கூட இருக்கலாம்.

பின்னாடி இருந்து ஒரு பாட்டி சொல்லும். அப்புராணி, ஒண்ணும் தெரியாம வந்து ஒக்காந்துட்டாராக்கும், எந்த ஊர் நாட்டாமையாண்டி இவரு. பாட்டி இப்படி மெதுவாகப் பேசியது, மற்ற ஆண்களுக்குக் கேட்டு விட்டால், யாரும்மா அது குறுக்க பேசறது, ஆம்பளைங்க பேசிட்டு இருக்கோம்ல என்று சத்தம் வரும். அதுக்கும் பெண்களுக்குள்ளேயே எதிர் பேச்சு தொடரும். இன்னார் வீட்ல பொண்ணு கேட்டு வந்திருக்கோம். இது மாப்பிள்ளை வீட்டுப் பெரிசு. ரெண்டு வீட்டாரும் பேசிக் கலந்துட்டீங்களா. இது இன்னொரு பெரியவர். இன்னொரு பெண் நைஸாக, அந்த முட்டாய இப்டிக் குடுத்து விட்றது, வாயில போட்டு ஒதப்பிக்கிட்டே பேசுறதக் கேப்போம்ல எனக் கேட்பார். ஆடடடா.. இந்தப் பொம்பளைங்களோட பெரிய ரோதனையாப் போச்சே. செத்த நேரம் சும்மா இருக்கீங்களா - இப்படியாகப் பேச்சுக்கள் நடக்கும்போதே பெண்ணை அலங்கரிப்பது வீட்டினுள் நடக்கும். பட்டுச் சேலைகளெல்லாம் பார்த்திராத காலம். இருப்பதில் நல்ல சேலையாகப் பார்த்து உடுத்துவார்கள்.

இடையில் கடுங்காப்பித் தண்ணி கொண்டு வரலாமா எனக் கேட்டுக் கொடுப்பார்கள். நல்ல படியா பேசி முடிச்சிட்டு குடிப்போம் என்றும் சொல்வதுண்டு. ஜாதகம் பார்த்தெல்லாம் திருமணம் செய்ததாக எமக்கு நினைவில்லை. மாப்பிள்ளை பவுடர் பூச்சோடு, அவர் ஜோட்டுப் பசங்களோடு தனியாக நின்று கொண்டிருப்பார். பெண்களிடம் மாட்டினால் கேலிப் பேச்சு தாங்க முடியாது.

தாய்மாமன் சம்மதம் கேட்பார்கள். அவர் தனது முழுச் சம்மதம் தெரிவிக்க வேண்டும். எம் பொண்ணு போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்துவார். அதே போல் மாப்பிள்ளையின் தாய் மாமாவும் சம்மதம் சொல்வார். பெண் சபையை நோக்கி விழுந்து வணங்கி நாணத்தோடு நிற்பார். பெண்ணிடம் இந்தப் பையனைக் கட்டிக் கொள்ள சம்மதமா எனக் கேட்பார்கள். அதேபோல் பையனிடமும் கேட்டு, இருவருக்கும் சம்மதம் என்றால்தான் அடுத்த கட்டப் பேச்சுத் தொடரும்.

இருவரின் பெற்றோரிடமும் சம்மதம் கேட்பார்கள். வேறு யாருக்கேனும் இந்தத் திருமணத்தில் மனஸ்தாபம் இருக்கிறதா எனக் கேட்பதும் வழக்கம். எல்லோருக்கும் சம்மதம் மற்றும் பிடித்தமெனில் இரண்டு தாய்மாமன்களும் வெற்றிலை மாற்றிக் கொள்வார்கள். இதன் போது உங்க பொண்ணு இனி எம்பொண்ணு எனவும், உங்க பையன் இனி எங்கள் பையன் எனவும் சத்தமாகக் கூறுவதும் மரபு. முன்னரெல்லாம் அன்றைக்கே பரிசமும் போட்டு விடுவார்கள். பரிசு தான் இப்படி பரிசமானதோ அல்லது மணமகன் கொடுக்கும் சேலை மணப்பெண்ணை ஸ்பரிஷிப்பதால் பரிசச் சேலையாக மாறியதோ தெரியவில்லை. மணமகன் வீட்டார் வரும் போது கூரைப்பட்டும் ரவிக்கை சட்டையும் கொண்டு வருவதுண்டு. பெரும்பாலும் நூற்றியொரு ரூபாய் பரிசம் போடுவதுண்டு. கூரைப்பட்டுத் சேலையைக் கட்டி வந்ததும் பெண் பெரியவர்களை வணங்குவார். தற்போது திருமணத்திற்கு முதல் நாளோ அல்லது திருமணத்திற்கு சற்று முன்போ இந்த பரிசம் போடும் பழக்கம் மாறாமல் வருகிறது.

எமது அக்காவின் இது போன்ற நிச்சயதார்த்ததின் போது வழக்கத்திற்கு மாறான சம்பவம் ஒன்று நடந்தது. முன்னர் பெண்ணுக்கு என்ன செய்வீர்கள் என்றோ சீர்வரிசை என்ன என்பது போன்ற பேச்சோ ஒரு போதும் வராது. வரதட்சணை சிறிதும் இருந்ததில்லை. பெண்ணுக்கு தோடு, மூக்குத்தி, கொலுசு, கொஞ்சம் பண்டபாத்திரங்கள் இவையே சீர்வரிசை. நிச்சயத்தின்போது கைமாற்றாகக் கூட வாங்கிப் போடுவார்கள். அதன் பின்னரே நகை வாங்குவது நடக்கும்.

மாமனார் கல்யாணச் செலவுக்கு இரண்டாயிரம் ரூபாய் ரொக்கம் கேட்டு விட்டார். சபையினருக்கோ அதிர்ச்சி. நம்ம குலத்தில் ரொக்கப் பணம் தருவது வழக்கத்திலில்லையே, எப்படிக் கேட்கலாம் எனப் பிடித்துக் கொண்டார்கள். தாய்மாமாவோ உங்களுக்குப் பெண் கொடுப்பதில்லை என்று எழுந்து விட்டார். திருமணத்திற்கு கையில் பணமில்லையென்றும் மச்சான் சென்னையிலேயே இருந்துவிட்டாரென்றும், வேறு யாரிடமாவது போய் பணம் வாங்கித்தான் திருமணம் செய்யும் நிலைமையில் இருப்பதாகவும் சொல்லவே, எமது அப்பாவும் பணம் கொடுப்பதாகச் சொல்லி விட்டார். ஆனால் சபையினர் ஏற்கவில்லை. உங்களிடம் இருப்பதால் கொடுக்கறீர்கள், இல்லாதவர்கள் என்ன செய்வதென்றும், இப்போது அனுமதித்தால் இதுவே ஒவ்வொரு திருமணத்திற்கும் வழக்கமாகிவிடும் என்றும் மறுத்து விட்டார்கள். வேண்டுமானால் நீங்கள் தனிப்பட்டு பேசிக் கொள்ளுங்கள், ஊர்ப் பொதுவில் பேசக் கூடாது என்றும் கட்றன்ரைட்டாகச் சொல்லிவிட்டார்கள்.

கல்யாணத் தேதியை முடிவு செய்தாயிற்றா என்றும் கேட்பதுண்டு. இல்லையெனில் வ்ற முகூர்த்ததிலேயே வைத்துக் கொள்ளுங்களென்பர். கல்யாணத்திற்கும் இதுபோல் சபையோர் வந்து சிறப்பாக நடத்திக் கொடுக்க வேண்டும் என்ற வேண்டுதலோடு சபை கலையும். போகும் போது அனைவருக்கும் வெற்றிலை, பாக்கு கொடுத்தனுப்புவார்கள்.

அன்று ஒரு சிலர் தான் பத்திரிக்கை அடிப்பார்கள். வீடு வீடாகச் சென்று வெற்றிலை, பாக்கு கொடுத்து திருமண அழைப்பு வைப்பார்கள். திருமணத்திற்கு முதல் நாள் முகூர்த்தக் கால் ஊன்றுவதற்கும், ஒவ்வொரு வீடாகச் சென்று அழைப்பார்கள். பின்னர் தென்னந் தட்டிகளை வைத்து பந்தல் போடுவார்கள். சாய்ந்தரம் ரேடியோ பாடத் தொடங்கும். ஒலி பெருக்கிக் கட்டிய பின்தான் கல்யாண வீடு களை கட்டும். முன்னர் திருமணங்கள் இரவில் மட்டுமே நடந்தன. அக்காவின் திருமணத்தை நாங்கள் பகலில் வைத்தோம். அதன் பின்னர் அனைத்துத் திருமணங்களும் பகலில்தான் நடக்கின்றன. அக்காவின் திருமணத்தன்று டெக்கில் படம் போடுவதில் எமக்கும் அண்ணனுக்கும் தகராறு வந்தது தனிக்கதை.

திருமணத்திற்கு தெருக்காரர்கள் சமையல் செய்யும் அழகே தனி. சமையல்காரர் எனத் தனியாக வைக்கமாட்டார்கள். உப்பு, புளி, காரம் போட்டால் போதும், இதற்கெதற்கு தனியாக சமையக்காரர் என்பார்கள். மட்ட நெல்லுச் சோறு, உருளைக் கிழங்கு சாம்பார், கத்தரிக்காய் கூட்டு, சீனியாரக்காய் பொரியல், சவ்வரிசிப் பாயாசம் என திருமண விருந்து மணம் பரப்பும். ஆண்களே சமைப்பார்கள். சில நேரங்களில் சாதத்தை குழைத்து விடுவார்கள். வீட்டினுள் ஓலைப் பாயைப் போட்டு மேலே ஈரவேட்டியைப் பரப்பி சாதத்தைக் கொட்டி மூடி விடுவார்கள். வீட்டிற்கு ஒருவராவது வந்து இப்படி சமையல் வேலைகளில் உதவி செய்வார்கள். எம்மைப் போன்ற சிறுவர்கள் காய்கறி வெட்டுவதில் முனைப்பாக இருப்போம்.

பெண்கள் தண்ணீர் எடுத்துக் கொடுப்பார்கள். இவர்களின் இன்னொரு மிக முக்கியமான பணி அரிசியை அரிஞ்சு போடுவது. இதற்கென்றே தனியாக ஒரு பாத்திரம் வைத்திருப்பார்கள். அன்று கல் நீக்காத அரிசியாக இருக்குமென்பதால் இவ்வாறு அரிசியை தண்ணீரில் போட்டு, குத்துச் சட்டியை கொஞ்சம் சாய்வாக வைத்து, இடது கையால் சட்டியை முன்னும் பின்னும் நகர்த்திக் கொண்டே வலது கையால் தண்ணீரோடு சேர்த்து மேலாப்பில் சிறிது சிறிதாக அரிசியை

அள்ளுவார்கள். இப்படி செய்யும்போது கற்கள் பாத்திரத்தின் அடியில் தங்கி விடும். யாம் கவனித்தவரை சிறியதும் பெரியதுமாக கற்கள் நிறையவே இருக்கும். ஆண்களுக்கு அத்தனை லாவகமாக அரிச்சுப் போட வராது. பெண்கள் எவ்வளவுதான் திறமையாக அரித்துப் போட்டாலும் அடிச் சோற்றில் கல் இருக்கும். இரவு பந்தியில் எக்கச்சக்க கேலிப் பேச்சுகள் வரும். இளவட்டங்கள் பரிமாறுவார்கள். திடீரென்று மின்சாரம் நின்று போனால் படுதிண்டாட்டமாகிவிடும். கரண்ட்காரனுக்கு வசவு தாங்காது. சாப்பிட வராதவர்களுக்கு தூக்கு வாளிகளில் வாங்கிச் செல்வார்கள்.

தாலிகட்டிய பின்னரே பந்தி வைப்பார்கள். திருமணச் சடங்குகள் பெரிதாக ஒன்றும் இராது. மரபெஞ்சின் மேல் போர்வை போட்டிருப்பார்கள். வேட்டி, சட்டையில் கையில் பூவோடு மாப்பிள்ளை கிழக்குப் பக்கமாகப் பார்த்து உட்காருவார். எல்லோரும் சுற்றி நின்றிருப்பார்கள். முறைப் பெண்கள் நிறைய இருந்தால் மாப்பிள்ளை பாடு திண்டாட்டம். திருமணத்தின்போதே பெண்ணுக்கு சடங்கு செய்தால், மணக் கோலத்தில் பெண்ணை உட்கார வைத்து, தாய்மாமா வீட்டில் சிறு பையன் இருந்தால், பையனுக்கு வேட்டி சட்டை போட்டு திருமணம் செய்வது போன்ற சடங்கு செய்வார்கள். ஒரு வேளை பையன் இல்லாவிட்டாலோ, பெரிய பையனாக இருந்தாலோ, முறைப் பெண்ணுக்கு வேட்டி, சட்டை போட்டு இருவரையும் வைத்து சடங்கு நடக்கும். சடங்கு முடிந்து இந்த குட்டி மாப்பிள்ளையைப் பத்திரமாக வீட்டிற்குள் கூட்டிச் செல்ல வேண்டும். இவர் பையனென்றால் முறைப் பையன்களும், பெண் என்றால் முறைப் பெண்களுமாக வாசலில் அடிப்பதற்குக் காத்திருப்பார்கள். அசல் மாப்பிள்ளை இருக்கும்போது இவர் தாலிகட்ட ஆசைப்பட்டால் எப்படி. விளையாட்டுக்குத்தான் அடிப்பார்கள். மாட்டாமல் தப்பித்தால் உண்டு. இல்லாவிட்டால் கைகளைப் பிடித்து இழுத்து முதுகில் குத்தி ஒரு வழி பண்ணி விடுவார்கள். இந்த குட்டி மாப்பிள்ளையின் உடன் பிறந்தவர்கள் சுற்றிலும் நின்று அடி வாங்காமல் கூட்டிச் செல்ல முனைய, எதிராளிகள் அடிக்க முனைய கத்துவும், சிரிப்பதும், கூச்சல் போடுவதுமாக, திருமணம் நல்ல மகிழ்ச்சிக் கொண்டாட்டமாக இருக்கும்.

மாப்பிள்ளையின் இடப்பக்கமாக பெண் அமர்வார். மாங்கல்யத்தை தேங்காயில் வைத்து அனைவரிடம் ஆசிர்வாதம் பெற்று மாப்பிள்ளை தாலி கட்ட, இவரின் சகோதரி வாங்கி நன்றாகக் கட்டி விடுவார். கைய் தட்டல் தூள் பறக்கும். மணமக்கள் இருவரும் மூன்று மாலை மாற்றுவார்கள். பெற்றொர்கள் தொடங்கி

அங்கிருக்கும் அனைத்துப் பெரியவர்களிடமும் மூன்று முறை காலில் விழுந்து நல்லாசிகள் பெறுவார்கள். பெரியவர்கள் திருநீறு வைத்து வெற்றிலை பாக்கு கொடுப்பார்கள். மணப்பெண் சேலை மடியில் வாங்கிக் கொள்வார்.

பந்தி நடந்து கொண்டிருக்கும் போதே மொய்யெழுத ஆரம்பித்து விடுவார்கள். செய்முறைகளில் கவனமாக இருப்பார்கள். ஒருவர் செய்ததை விட ஒரு ரூபாயாவது அதிகமாக இருக்கும். பெரும்பாலும் பத்து, இருபது ரூபாய் எழுதுவார்கள். ஐம்பது ரூபாய் செய்வது குறைவு. நூறு ரூபாய் அரிதினும் அரிது. ஒரே பெயரில் பல பேர் இருப்பதால் பட்டப் பெயரைச் சொல்லி எழுதுவது ரொம்பவும் முக்கியம். யாம் கருப்பையா கொத்தனார் என்று எழுதுவோம். சிறுவர்கள் ரோஜாப்பாக்கு வாங்குவதற்கு போட்டி போடுவோம்.

திருமணம் மணமகன் இல்லத்தில் நடக்கும். மறுவீட்டிற்கு மாமியார் வீட்டிற்குச் செல்வர். வரும்போது பெண்ணிற்கு சீர் வரும். கூடவே அண்டாவில் முறுக்கும் பானையில் அதிரசமும் வரும். வீடு தவறாமல் கொடுப்பார்கள். புதுத் தம்பதிகளுக்கு உறவினர் வீடுகளில் விருந்து வைப்பார்கள். காலையில் பலகாரம், மதியம் வெடக்கோழிக்குழம்பு, இரவு சாப்பாடு என ஒவ்வொரு வீடாக நடக்கும். விருந்து முடிந்த கொஞ்ச நாட்களிலேயே வளைகாப்பும் வந்து விடும்.

எமது அக்காவின் திருமணம் எங்கள் வீட்டில் நடந்தது. மாப்பிள்ளை அழைப்பு வைத்தார்கள். யாம் கூலிங்கிளாஸ் அணிந்து ஸ்டைலாக மாப்பிள்ளைக்கு குடைபிடித்து அழைத்து வந்தோம். எந்த ஊரு தொர இப்படி வர்றாக என எம்மைக் கேலி செய்தார்கள். கண்ணாடி உபயம் ராஜபாண்டி அண்ணன். திருமணத்திற்கு டெக்கில் படம் போடுவதென்று அண்ணன் முடிவு செய்து அப்பாவிடம் சொல்லியாயிற்று. மற்ற தெரு, அடுத்த ஊர் போய்த்தான் இப்படி படம் பார்த்திருக்கிறோமே தவிர எங்கள் தெருவிலேயே படம் போட்டுப் பார்த்ததில்லை. எமெக்கெல்லாம் தலைகால் புரியாத மகிழ்ச்சி.

என்னென்ன படங்கள் போடுவது என்பதில் வந்தது வினை. யாம் தீவிரமான ரஜினி ரசிகன். அண்ணனோ வெறித்தனமான ராமராஜன் விரும்பி. அவர் பரட்டைத் தலையெல்லாம் ஒரு ஆளா என்பதும், பதிலுக்கு டிரவுசரெல்லாம் ஒரு நடிகரா என்பதும் எங்களுக்குள் நடக்கும் சண்டைகள். எங்க ஊரு பாட்டுக்காரன் படத்தில் ராமராஜன் அவர்கள், டிரவுசர் போட்ட பால்காரர் வேடத்தில் நடித்திருப்பதால் அவருக்கு டிரவுசர் என்ற பட்டப் பெயர் வந்துவிட்டது.

அவர் ரஜினி படமெல்லாம் போட மாட்டோம் எனச் சொல்லவும் யாம் அப்பாவிடம் சொல்லி ஒரு படமாவது போடச் சொன்னோம். ஒரே இரவில் நான்கு படங்கள் போடுவார்கள். யாம் சாமி படம் ஒன்று, எம்.ஜி.ஆர், ரஜினி, ராமராஜன் படங்கள் போட வேண்டும் என்றோம். வீட்டாரும் எமக்காகப் பேச அண்ணனும் சம்மதித்து விட்டார். தலைவர் படம் பார்ப்பதற்கு யாமும் தயாராக இருந்தோம்.

பரளச்சியிலிருந்து படம் போடுபவரும் வந்து விட்டார். யாம் அவசர அவசரமாகச் சாப்பிடும் போது, ரஜினி படமெல்லாம் கொண்டு வரவில்லை என அண்ணன் சொன்னார். எமக்கோ பயங்கரக் கோபம். என்னடா இப்படிப் பண்ணிட்டே என அப்பாவும் சொல்லிப் பார்த்தார்.

சின்னப் பையனை ஏமாத்திட்டியே என அம்மாவிடமிருந்தும் திட்டு விழுந்தது. யாம் படம் போடுபவரிடம் கேட்டதற்கு ரஜினி படம் கொண்டு வரச் சொல்லலையே எனச் சொல்லி விட்டார். ரஜினி படம் போடாமல் யாம் படமே பார்க்க மாட்டோம் என்று சொல்லி ஆட்டுக் கொட்டகையில் போய் படுத்துக் கொண்டோம்.

இருவருக்குமிடையில் பெரும்பாலும் சண்டைகள் வந்ததில்லை. சிறுவர்களாக இருந்தபோது சிறுசிறு வாய்ச்சண்டைகள் வருவதுண்டு. கொஞ்சம் பெரிய்வர்களான பின் ஒரு முறை இருவருக்கும் சண்டை வந்து, அவர் சைக்கிள் செயினை எடுக்க, யாம் விறகுக் கட்டையை தூக்க, மற்றவர்கள் ஓடி வந்து இருவரையும் விலக்கிவிட்டார்கள். அப்பாவிடம் வாங்கிய அடியில் கோவித்துக் கொண்டு சென்ற எம்மை மணிகண்டன் வந்து சமாதானம் செய்து திரும்பவும் அழைத்து வந்தார். அதுதான் கடைசிச் சண்டையாகவும் அமைந்தது. அவருக்குத் திருமணம் முடிந்த பின் எம்மீது மிகுந்த அன்பு காட்ட ஆரம்பித்தார்.

எங்களுக்குள் சண்டை வந்தால் அம்மாதான் மிகவும் வருந்துவார். அக்காவிற்கும் சேர்ந்தே திட்டுக் கிடைக்கும். ஏமன், காலன், தூதனாட்டம் மூன்று பேர் பொறந்து எமது உயிரை எடுக்கிறீங்களே என வசவு விழும். சிறிது நேரத்திலேயே சமாதானமும் ஆகி விடுவார். கடுகு டப்பாவில் காசு போட்டிருப்பார். காசு கேட்டுத் தொல்லை பண்ணினால் தாலியும் தாமரங்காயும் வச்சிருக்கோம், இரு கொஞ்ச நேரங்கழித்து எடுத்துத்தாரோம் எனக் கிண்டலாகச் சொல்வார். பொன்னம்மா, செல்லம்மா என்ற பெயரில் பல பாட்டுகள் இருக்கும். இரவு நேரங்களில் இப்படியான பாட்டுக்களைப் பாடி யாம் அம்மாவைக் கேலி

செய்வதுண்டு. காலையில காசு கேட்பேயில்ல, அப்ப வச்சிக்கிறோம் உன்ன என்பார். காலையில் பள்ளிக்குக் கிளம்பும் போது பத்துப் பைசா கொடுக்க மறக்க மாட்டார்.

எம்மை கடைக்கும் அவ்வளவாக அனுப்பமாட்டார். அக்கா இல்லையெனில், அடுப்புல விறகப் பார்த்துக்கோ, சாமான் வாங்கிட்டு சட்டுன்னு வந்துர்றோம் எனச் சொல்லிச் செல்வார். வரும் போது மறக்காமல் பொட்டுக் கடலை வாங்கி வருவார். கொஞ்சம் பெரிய விறகாக இருந்தால் நின்று எரியும். முள் குச்சிகளாக இருந்தால் அச்சலாத்தியாக வரும். விறகை வைத்துக் கொண்டே இருக்க வேண்டும். சீக்கிரத்தில் மடமடவென எரிந்து விடும். கவனிக்காமல் இருந்து விட்டால் அணைந்து விடும். ஊத வேண்டும். எல்லோர் வீடுகளிலும் இரும்பாலான ஊதுகுழல் இருக்கும். ஊதும்போது புகைபட்டு கண்ணீர் வந்துவிடும். சிறு குச்சிகளையோ, செத்தைகளையோ கொஞ்சம் போட்டு ஊதினால் சட்டென்று பற்றிக் கொள்ளும். வீடுகளில் உலைமூடி போட்டு மூடியே, தண்ணீரைக் கொதிக்க வைப்பார்கள். கொஞ்சம் அசந்தால் ஆவி பொங்கி விறகை அணைத்து விடும். ஆவி வரும் போது மறக்காம உலமூடியை எடுத்திடு என பல முறை சொல்வார்கள்.

பல வீடுகளிலும் தீக்கரண்டி இருக்கும். எந்த வீட்டில் கனந்த கங்காக இருக்கிறது எனக் கேட்டுத் திரிவார்கள். நெருப்பு பத்த வச்சாச்சா என்று கேட்பார்கள். பெயரையோ, முறையையோ சொல்லி ஒரு வித ராகத்தோடு கேட்பார்கள். சிறுவர்கள் நோட்டு புத்தகங்களைக் கிழித்துக் கொடுத்துவிட்டு பள்ளி கூடத்தில் அடியும் வாங்குவார்கள்.

பெண்கள் மசாலை அரைப்பது தனி அழகு. எங்கள் வீட்டு வாசல் அருகே அம்மி வைத்திருந்ததால் பலரும் வந்து அரைத்துச் செல்வார்கள். சிறு கிண்ணியில் தண்ணிர் கொண்டு வருவார்கள். அரைக்கும் முன்னர் அம்மியையும் குலவியையும் கழுவி, அரைத்த பின்னரும் இரண்டையும் கழுவி மீதித் தண்ணீரும் எடுத்துச் செல்வார்கள். யாம் கல்லூரி படிக்கும் காலங்களில், மதினி அந்த தண்ணியை கொடுத்துட்டுப் போனா நாங்களும் அரச்சிக்குவோம்ல என ஒரு சிலரைக் கிண்டலடிப்போம்.

மஞ்சளைத் தட்டி அரைத்து, சீரகம், மல்லி, வத்தலைப் போட்டு சரசரவென அரைப்பார்கள். அவ்வப்போது கொஞ்சம் தண்ணீர் ஊற்றுவதும், அம்மிக்குலவியில் ஒட்டியிருப்பதை வழித்து நடுவில் வைத்தும் அரைப்பது வழக்கம். தேங்காய் அரைப்பது திகலைக் கிளப்பும். அம்மியை ஒரு பக்கமாகத் தூக்கி நசுக்கி

அரைப்பார்கள். அரைத்து முடித்து உருண்டையாக ஆக்கி கிண்ணியில் ஒட்டி, கழுவிய தண்ணீரோடு எடுத்துச் செல்வார்கள். வீட்டில் ஏதேனும் கோபமென்றால் அரைப்பதில் தெரியும்.

பெண்கள் மட்டும் சேர்ந்து சாமி கும்பிடும் நாட்களில் மட்டும் யாம் அப்பா அருகில் படுத்துக் கொள்வோம். செவ்வாய்க் கிழமைகளில் இரவில் மாவு இடிக்கும் சத்தம் அதிகமாகக் கேட்கும். மின் விசிறி கூட இல்லாத காலமென்பதால் தெருவே அமைதியாக இருக்கும். சாமி கும்பிடுவதை ஆண்கள் யாரும் பார்க்கக் கூடாதென்றும், அங்கு செய்யும் பலகாரங்களை சிறுவர்கள்கூட சாப்பிடக் கூடாது என்றும் பேசிக் கொள்வார்கள். எங்க வீட்டுப் பானைக்குள்ள ஒளிச்சு வச்சிருந்ததை தின்னேன்டா, கொலுக்கட்டையிலே உப்பில்லாம சப்புனு இருந்திச்சு என்று சிலர் சொல்ல யாம் கேட்டிருக்கிறோம்.

கிராமத்தினர் பேச்சு வழக்கில் பயன்படுத்தும் சில சொற்கள் வித்தியாசமாக இருக்கும். யாமே சில நேரங்களில் இப்படிப் பேசி விடுவதுண்டு. சில வார்த்தைகள் அழகு தமிழ்ச் சொற்களாக இருக்கும். உதாரணமாக காலங் கார்த்தால அலுவல் இல்லாம வந்திட்ட. ஒரு சோலியா வந்தோம், அப்புராணி சப்ராணி, ஏப்ப சாப்ப போன்று பல எதுகைச் சொற்களும் சரளமாக வரும்.

சில பெரியவர்கள் நண்டையும் சிண்டையும் வச்சிட்டு லொட்டும் லொசுக்குமா என்னமா சிரமப்பட்டோம் என்று பேசுவதுண்டு. அச்சலாத்தியா வருது, பெரிய ரோதனையாப் போச்சு, கொமட்டுல குத்திருவோம், தொக்குனாப்ல போன்றவை பிரசித்தம். போர்த்துனாப்ல என்பது பொத்துனாப்ல. உடைஞ்சிடாம பொத்துனாப்ல வைப்பே என்பது சகஜம். அது போலவே கூப்டக் கூப்ட திலும்பிப் பார்க்காம போய்ட்டே இருக்க, நீச்சத் தண்ணி இருந்தா கொடேன் என்பதும். டெல்லி எரும என எதற்காகத் திட்டினார்கள் எனத் தெரியவில்லை.

பெரியவர்கள் தூரத்தை பர்லாங்கு என்றே சொல்வார்கள். வேலை என்பதை அலுவல் என்று அழைப்பார்கள். பாட்டுப் பாடுறார் என்பதற்குப் பதிலாக பாட்டுப் படிக்கிறார் என்பதே பொது. யாம் நண்பர்கள் சிலரிடம் இப்படிச் சொல்லி அவர்களை நகைக்க வைத்திருக்கிறோம். அது போலவே தோதிருந்தா ஒரு எட்டு வந்துட்டுப்போ என்பதும்.

எமது தந்தை அட்டம் சுழிக்க முடியுமா எனச் சொல்வதைக் கேட்டிருக்கிறோம். அதன் அர்த்தம்தான் தெரியவில்லை. தஞ்சைப் பக்கம்

இருந்ததால் கம்னாட்டி வார்த்தையும் அவ்வப்போது வரும். சேட்ட இங்க வாப்பா என செல்லமாகக் கூப்பிடும் ஆங்கிலேயரின் கம் நாட்டி தான் இப்படி கம்னாட்டி ஆனது போல. முதன் முதலாக இங்கிலீசு படித்தது பழைய தஞ்சைக்காரர்கள்தானே.

வாய்ச் சண்டைகளின்போது பேசும் பேச்சுக்கள் தனிரகம். அவற்றையெல்லாம் சொன்னால் நாகரிகமாக இருக்காது. பெண்களின் பருவகால தொடர்புடைய அந்த வார்த்தையைத்தான் அதிகம் பயன்படுத்துவார்கள். சண்டை வலுக்கும்போது ஒருவருக்கொருவர் தலைமயிரைப் பிடித்துக் கொள்வதும் உண்டு. முற்றத்தில் தண்ணீர் சிந்தியது போன்ற சாதாரண விசயங்களுக்குத்தான் வலுத்த சண்டையாகப் போட்டுக் கொண்டிருப்பார்கள். முற்றம் என்பதை முத்தம் என்பார்கள். சொல்லாததைச் சொல்லியதாகச் சொன்னதற்கும் சண்டைதான்.

பெண்களின் வாய்ப் பேச்சு அதிகரிக்க அதிகரிக்க ஆண்களின் சண்டையாக மாறுவதற்கான வாய்ப்புகள் அதிகம். ஒரு பெண் பேச ஆரம்பித்தால் அப்பெண்ணின் நெருங்கிய இரத்த உறவுகளும் சேர்ந்து கொண்டு வசைமாரி பொழிவார்கள். எமது சிறு வயதுகளில் அம்மா இப்படி தெருச் சண்டை போட்டதுண்டு. நாங்கள் எல்லோரும் சேர்ந்து அம்மாவைத்தான் சமாதானப் படுத்துவோம். அம்மாவுக்குக் கோபம் வந்தால் மிகவும் ஆக்ரோஷமாக வரும். சத்தியம் பண்ணு என்பதிலும் குறியாக இருப்பார். சில பேர் குடும்பம், சந்ததி என அத்தனை பேருக்கும் மண்ணை அள்ளித் தூற்றி சாபமிடுவார்கள்.

ஆண்களுக்குள் சண்டையென்றால் கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும். சண்டை விலக்கப் போய், சமயத்தில் இருவரிடமும் மொத்து வாங்க வேண்டியதிருக்கும். உடல் உறுப்புகள் சார்ந்த வசவுச் சொற்களை அடுத்தவர் மேல் மிகவும் சரளமாகப் பயன்படுத்துவார்கள். எல்லோரும் காட்டு வேலைகள் செய்து உடல் உறுதியுடன் இருப்பதால் ஒருவருக்கொருவர் மடங்கிக் போக மாட்டார்கள்.

கோபம் பொத்துக் கொண்டு அருவாளை எடுக்க வீட்டிற்குள் ஓடுவார்கள். மனைவியும் மற்றவர்களும் கால்கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சுவதும் இழுப்பதுமாகப் போராட்டம் நடக்கும். விடுங்க, இன்னக்கி யாமா அவனான்னு பார்த்துரலாம் என்றோ, பொலி போட்டுர்றோம் என்றோ அவர் சொல்ல, போட்டுப் பார்த்துரலாம் வாப்பு, உங்குதுகுதுப்ப இன்னிக்கு அடக்கிடுறோம் என்று இவர் எகிற அழுகையும் கூக்குரலுமாக இடம் அல்லோலப்படும். இது போதாதா சிறுவர்களுக்கு வேடிக்கை பார்க்க. முண்டியடிச்சு முன்னாடி போய் நின்னுக்குவோம்.

அப்பனாத்தானே அவங்க சண்டை போடுறது மாதிரி நாங்களும் சண்டை போட்டுப் பார்க்க முடியும்.

ஒத்தைக்கு ஒத்த வந்து பார்றா, உங்குடல உருவாம போக மாட்டோம், அமா இவரு பெரிய சூரப்புலி வந்து நில்லுடா உங்குடல எடுத்து மாலையா போடுறோம். இப்படியெல்லாம் நாங்களும் சீகுக் குச்சிகளை எடுத்துக் கொண்டு விளையாட்டுக்கு கால்களை எத்திக் கொண்டும், தள்ளி விட்டுக் கொண்டும் வைக்கோல் சுனை அரிக்க விளையாடித் திரிந்தோம். சமயங்களில் பன்னரிவாள்களையும் கைகளில் வைத்துச் சுற்றுவதுண்டு.

அனைவர் வீடுகளிலும் விறகு வெட்டும் இரும்பு அருவாள் கண்டிப்பாக இருக்கும். பாதுகாப்புக்கென்றே பெரிய உருக்கு அருவாள்களும் வைத்திருப்பார்கள். அகலமாக, பளபளவென்று, அழகான கைப்பிடியோடு இந்த அருவாள்கள் இருக்கும். அருவாள் வியாபாரிகள் அடிக்கடி வந்து யாம் பார்த்திருக்கிறோம்.

சாதி ரீதியாக ஏதேனும் பதற்றம் வரும் சமயங்களில் அருவாள் வியாபாரம் அமோகமாக இருக்கும். கையில் உள்ள உரோமத்தை வழித்துப் பார்த்து அருவாளின் பதம் காண்பதுண்டு. எங்கள் வீட்டில் உறைபோட்ட ஒரு பெரிய அருவாள் இருந்தது. அண்ணன் பெரிய பையனாகி வாங்கினார் என நினைக்கிறோம். இது போக அவர் சைக்கிள் செயினுக்கு கம்பி போட்டு இடுப்பு பெல்ட் போன்றும் சுற்றிக் கொள்வார். வேல் கம்பு ஒன்றும் இருந்தது. அப்பா வேலைக் கழட்டி வைத்திருப்பார். பதற்றமான நேரங்களில் மாட்டிக் கொள்வதுண்டு. மூங்கில் கம்பில் தொரட்டி அரிவாள் மாட்டியும் வீட்டில் வைத்திருந்தார்கள்.

வேல் கம்பு மிகவும் கனமாக இருக்கும். எண்ணெய் தடவி பளபளப்பாக வைத்திருப்பார்கள். மேலும் இருக்கவே இருக்கிறது உலக்கை. ஏதேனும் சண்டை என்றால் முத்துச்சாமி மாமா உலக்கையை தூக்கிக் கொண்டு வந்து விடுவார். இராமலிங்க மாமா வீட்டில் பெரிய வாள் ஒன்று இருந்தது. காரவீட்டு கருப்பையா மாமாவிற்கு வேல் பிடிக்கும் போல. டிரவுசர் போட்டுக் கொண்டு வேலோடு வந்துவிடுவார். சிலர் மம்பட்டியையும் தூக்குவதுண்டு. சூரிக்கத்தி, மடக்குக்கத்தி போன்றெல்லாம் வைத்திருப்பார்கள். அண்ணன் திருமண பிரச்சினையில் யாம் பள்ளிக் கூடம் போகும் போது கூட சில வாரங்கள் இப்படி பையினுள் பாதுகாப்புக்காக சூரிக் கத்தியோடு போய் வந்தோம். வெங்கலத்தில் கைப்பிடி இருந்தது. கனமான உறை போட்டிருந்தார்கள்.

கத்தி, அருவாள் பதம் தீட்டுவது சற்று கவனமாகச் செய்ய வேண்டிய வேலை. வீடுகளில் தீட்டுக்கட்டை என்றே வைத்திருப்பார்கள். மரத்தூர்களில் சமமாகச் சீவி வழவழவென்று இருக்கும் தீட்டுக்கட்டையில் மண்தூசியோ, சிறிது கோலப்பொடியோ அல்லது செங்கல் தூளோ போட்டு அருவாள்களை இடதும், வலமாகவும் இழுத்து கூர் தீட்ட வேண்டும். விறகு வெட்டும் கோடை காலங்களில் இப்படி பலரும் அருவாள்களை கூர் தீட்டி உட்கார்ந்திருப்பார்கள். சிலர் தூண்கற்களில் இரண்டு ராவு ராவிக்கொண்டும் விறகு வெட்டச் செல்வதுண்டு. மொட்டையான அருவாள்களை வைத்துத் கொண்டு சத்தட்டி சத்தட்டி என விறகு வெட்டுபவர்களும் இருப்பார்கள். சாணை பிடிப்பவரும் அவ்வப்போது வந்து பார்த்திருக்கிறோம். பெரும்பாலும் காலை வேளைகளில் வருவார்கள்.

எமது சிறுவயதில் கமுதி அருகேயிருக்கும் இராமநதியில் தேவவேந்திரருக்கும் தேவருக்கும் சண்டை வந்துவிட்டது. முதல் வருடத்தில் தேவர் வீட்டு ஆட்கள் கொலை செய்திருக்கிறார்கள். மறுவருடம் அதே நாளில் தேவேந்திரர் ஆட்கள் கொலை செய்துவிட்டார்கள். எல்லா ஊர்களிலும் இதைப் பற்றி பரபரப்பாகப் பேசிக் கொண்டார்கள். அந்தச் சமயத்தில் எங்கள் வீட்டு உள்பக்கமாக இரவில் வேல்கம்பு சாத்தப்பட்டியிருந்தது. இந்த வேல்கம்பு அகரத்துப்பட்டிக்கும் சென்று வந்தது.

பொதுப்பண வரவு செலவு தகராறில் தெருவே இரண்டு கோஷ்டியாக இருந்ததல்லவா. அப்போது ஒரு பெரிய அளவில் அடிதடி நடந்தது. இரவில் சண்டை வந்து விட்டது. விஜயன் அவர்கள் சைக்கிளில் சென்று வரும் போதெல்லாம் ஒரு பெரிய பளபள அருவாளை முன்னாடி தொங்கப் போட்டுச் செல்வார். அன்று நடந்த சண்டையில் இவரை இராமலிங்க மாமா வகையறாக்கள் நான்கைந்து பேர் சுற்றி வளைத்துக் தாக்க எப்படியோ அவர்களிடமிருந்து தப்பி விட்டார். வெள்ளைச்சாமி அவர்களுக்கு நல்ல காயம். லட்சுமணன் மாமா இரத்தத்தைப் பார்த்து மயங்கி விழுந்து அவதிப்பட்டார்.

சின்ன நல்லதம்பி வசமாக மாட்டிக் கொண்டார். எதிர் தரப்பினர் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். தடுமாறி கீழே விழுந்தவரை பெரிய பெரிய கம்புகளால் அடிக்கிறார்கள். யாம் எங்கள் வீட்டுத் திண்ணையில் நின்று பார்த்துக் கொண்டிருந்தோம். அடி நிற்கவே இல்லை. மருத்துவமனையில் பல நாட்கள் இருந்தார். வந்த பின் வீட்டு முற்றத்தில் கட்டில் போட்டு உட்கார்ந்திருப்பார்.

பதிலுக்கு ஒன்றும் நடக்கவில்லை. கொஞ்ச நாட்களிலேயே தூத்துக்குடிக்கு குடும்பத்தோடு சென்று விட்டார்.

தனிப்பட்ட கோபதாபங்களுக்கு சில நேரங்களில் வீட்டைக் கொழுத்தியதும் நடந்திருக்கிறது. தெருவில் மூன்றுமுறை இவ்வாறு கூரை வீடுகள் எரிந்திருக்கின்றன. அப்போது பெரும்பாலான வீடுகள் கூரை வீடுகளாகத்தான் இருந்தன. கூரை வேயப் பயன்படுத்தும் சீகுகள் கரிசல் காடுகளில் வளர்ந்திருக்கும். ஆட்களை வேலைக்கு அமர்த்தி சீகு அறுப்பார்கள். பின் நன்றாகக் காயப் போடுவார்கள். ஓரளவிற்கு தடிமனாக வைத்தே கூரை மேய்வார்கள். இருளப் பெரியப்பா, கருப்பு அண்ணன் போன்றவர்கள் கூரை மேய்வதில் திறமையானவர்கள். இப்படி கூரைவேயக்கூட வசதியில்லாதவர்கள் பனை ஓலையை வைத்து வேய்ந்து கொள்வார்கள். எல்லோர் வீடுகளுமே ஓரளவிற்கு பெரிய வீடுகளாகத்தான் இருந்தன. திண்ணையோடு கூடிய வீடுகள்.

ஓட்டு வீடுகளைவிட கூரை வீடுகள் குளிர்ச்சியாக இருக்கும். மழைக்கும் ஒழுகாது. நன்றாக வேய்ந்திருப்பார்கள் என்பதால் புயலுக்கும் தாங்கும். கூரையில் மழை ஓய்ந்த பின்னும் சொட்டுச் சொட்டாகத் தண்ணீர் வெகு நேரத்திற்குக் கொட்டிக் கொண்டிருக்கும். யாம் ஒவ்வொரு புல்லாக தட்டி விட்டு விளையாடுவதுண்டு. அதே போல் கருவேல மரங்களை ஆட்டியும் ஒருவர் மேல் மற்றொருவர் மழை நீரைத் தெளித்து விடுவார்கள்.

சீகுக் குச்சியைத் துளைத்துக் கொண்டு, சிறிய வண்டு உள்ளே இருக்கும். வண்டு இருக்கும் புல்லில் ஓட்டை இருக்கும். ஒவ்வொரு குச்சியாக இழுத்து குச்சியை இரண்டாகக் கிழித்தால் நீலம், பச்சை இறகுடன் சிறிய குளவி பறந்தோடும். சில நேரம் பறக்க முடியாத சிறு குளவிகளும் இருக்கும். இப்படி குச்சிக்குள் குளவி இருக்குமா இருக்காதா என்பதை வைத்து சிறுவர்களுக்குள் பந்தயம் நடக்கும். பல குச்சிகளை இப்படி ஒடித்துப் போட்டு வீட்டுக்காரர்களிடம் பேச்சு வாங்குவதும் உண்டு.

மழைக்காலங்களில் பல கூரைகளிலும் சுரைக்காய், பூசணிக்காய்கள் காய்த்துக் கிடக்கும். சுரைக்காயைப் ஏறிப் பறிக்க முடியாமல் சுரைக்காய்கள் முத்திப் போய்விடும். சாயங்கால வேளைகளில் கூரைகளிலிருந்து புகை மண்டலம் வெளி வரும். அதிலும் மழைக்காலமானால் குபுகுபுவென சில கூரைகளிலிருந்து புகை வெளியேறும். மும்முரமாக சமையல் செய்து கொண்டிருப்பார்களல்லவா.

மணிகண்டனின் வீடு ஒரு முறை தீப்பற்றி எரிந்தது. நாடகம் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் அடித்துப் பிடித்து ஓடி வந்தோம். மணிகண்டனின் அப்பா பொன்னையன் அண்ணன். அவரது பாட்டி சுப்பம்மா. எங்கள் பெரியப்பாவிற்கு வாக்கப்பட்டவர் என்பார்கள். எம்மீதும் பாசமாக இருப்பார். பொன்னையன் அண்ணன் சோலையம்மாவை விவாகரத்துச் செய்து செட்டிகுறிச்சியில் மறுமணம் செய்து அங்கேயே இருந்தார். மணிகண்டன் அம்மா வீட்டில் இருந்தார். அண்ணன் ஊருக்கு வந்திருந்த ஒரு இரவு வீடு தீப்பற்றி எரிந்தது. யாரோ அவரது கைகால்களை கட்டி, முற்றத்தில் போட்டு விட்டு வீட்டுக்கு நெருப்பு வைத்து விட்டு ஓடி விட்டதாகச் சொன்னார்.

கொஞ்சம் பக்கத்தில் கண்மாய் இருந்ததால் ஆணும் பெண்ணும் தண்ணீரை அள்ளி வந்து தீயை அணைத்து விட்டார்கள். எரியும் வீட்டின் மிக அருகே பல கூரை வீடுகள் இருந்தன. அந்த வீடுகளிலும் தண்ணீரை ஊற்றி நெருப்பு பரவாமல் சாமர்த்தியமாகத் தடுத்து விட்டார்கள். ஆபத்துக் காலங்களில் கிராமத்தவர்கள் மிக ஒற்றுமையாகச் செயல்படுவார்கள். தீய் பற்றியதற்கு அவர் சொன்ன காரணத்தை ஒருவரும் நம்பவில்லை. சுப்பம்மா பெரியாத்தாவிடம் காசு கேட்டு அவர் கொடுக்காத ஆத்திரத்தில் இப்படி வீட்டிற்கு நெருப்பு வைத்து விட்டதாகப் பேசிக் கொண்டார்கள்.

இன்னொரு முறை துருத்திப் பெரியப்பாவின் வீடு கொழுந்து விட்டு எரிந்தது. படம் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் பதறியடித்து ஓடி வந்தோம். பலரும் ஓடி வருவதற்குள்ளாகவே முக்கால்வாசி வீடு எரிந்து சாம்பலாகி விட்டது. பொன்னுப்பெரியப்பா மேல் பழி போடுவதற்கு வீட்டுக்காரரே வைத்துக் கொண்டதாகச் சொன்னார்கள். இதே போல் அவுட்டு முனியசாமியும் அவர்கள் கூரையில் கோபத்தல் நெருப்பு வைத்துக் கொண்ட சம்பவமும் நடந்தது.

இன்றைக்கு ஒரு வீடு கூட கூரை வீடாக இல்லை. காரவீடுகளும் ஒட்டு வீட்டுகளுமாக தெரு மாறிவிட்டது. பெரிய வீடுகளாகக் கட்டுவதற்குதற்கு இடமில்லாமல் பலரும் சோலை மேட்டுப்பக்கம் வீடு கட்ட ஆரம்பித்து விட்டார்கள்.

எமது சிறுவயதில் புயலைச் சந்தித்த அனுபவங்கள் மறக்க முடியாதவை. அது போலவே ஸ்கைலாப் ராக்கெட் விழுந்த கதையும். புயல் வருகிறதென்றால் வீடுகளைப் பற்றித்தான் கவலைப்படுவார்கள். பரபரவென அடிக்கும் காற்றுக்கு கூரைகள் தூக்காமல் இருக்க வேண்டுமே. மற்ற எல்லாவற்றையும் போல் புயல்

வருவதும் எங்களுக்குக் கொண்டாட்டம் தான். புயலோடு மழையும் கொட்டு கொட்டென்று கொட்டும். மழை பெய்வது இராவெல்லாம் நிற்காது. சிறுவயதில் இரண்டு மூன்று முறை புயல் வந்ததாக ஞாபகம். ஒரு பயுலுக்கு வீட்டின் கிழக்கே இருந்த சிறிய ஜன்னல் திறந்து கொண்டது. சாக்குப்பை, துணிகள் வைத்து அதை அடைப்பதற்குள் பெரும்பாடு பட்டார்கள். வீட்டின் முகடு சரியாக பொருந்தாததால் மழை பெய்தால் எங்கள் வீட்டில் தண்ணீர் ஒழுகும். அதே போல் மின்சாரக் குழாய் இணைப்பு வழியாகவும் தண்ணீர் உள்ளே வந்து விடும். பாத்திரங்கள் வைக்காவிட்டால் வீடு முழுவதும் நனைந்து விடும்.

கூரை வீடுகளில் மரக்கட்டைகளை மேலே போட்டு வைப்பார்கள். ஓட்டு வீடுகளில் முண்டுக்கல்லை ஆங்காங்கே வைப்பதுண்டு. புயல் முடிந்த பின் எடுத்து விடுவார்கள். பழைய வீடுகளெனில் மற்றவர் வீடுகளுக்குச் செல்வதும் நடக்கும். புயலின்போது பெரியவர்களோடு சேர்ந்து சிறுவர்களும் தூங்காமல் உட்காந்திருப்போம். யாம் வெளியே வந்து வேடிக்கை பார்ப்பதில் ஆர்வமாக இருப்போம். விட மாட்டார்கள். இரவு எட்டு, ஒன்பது மணிக்கு ஆரம்பிக்கும் காற்று, போகப் போக உக்கிரமாக வீசி, சாமம் வாக்கில் வேகம் குறையும். காற்றின் சத்தத்தோடு மழையின் சத்தமும் இணைந்து மனதில் ஒரு வித அச்ச உணர்வை உருவாக்கும். காலையில் எழுந்து பார்க்கும் போது கண்மாய்களில் கரை தளும்ப தண்ணீர் நிறைந்திருக்கும். பல படப்புகள் சேதாரமாயிருக்கும். சில கூரைகளும் பறந்திருக்கும். பனை, தென்னை மரங்களும் விழுந்து கிடக்கும்.

ஒருமுறை ராக்கெட் ஒன்று பூமியல் விழப் போகிறதென்றும், எந்த இடத்தில் விழப் போகிறதென்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாதெனவும் ஒரு தகவல் பரவி மக்கள் பீதியில் உறைந்தார்கள். விழுந்தால் உலகமே அழிந்து விடுமென்றும் வந்த செய்தி இன்னும் மக்களை அதிர்ச்சியில் ஆழந்தியது. எல்லோரும் சாகப் போகிறோமென்ற பயம் ஒருபுறம், சாகத்தான் போகிறோமே நல்லது பொல்லதை சாப்பிட்டுச் சாவோமே என்ற ஏக்கம் மறுபுறம். மக்கள் கோழிகளாகத் தின்று தீர்த்தார்கள். இதோ வந்து விட்டது, அதோ விழப் போகிறது என ஒவ்வொரு நாளும் பயத்தைக் கூட்டிக் கொண்டே போனார்கள்.

ஒருநாள் இரவு உறுதியாக விழப் போகிறது என்ற தகவல் வானொலியில் வந்தது. கூரை வீடு, ஓட்டு வீட்டுக்காரர்களெல்லாம் காரவீடுகளில் தஞ்சம் புகுந்தார்கள். காரவீட்டு மாமா வீட்டில் இடம் போதவில்லை. நாங்களும் ஆளோடு

ஆளாக ஒடுங்கிப்போய் உட்கார்ந்திருந்தோம். அப்பா, அம்மா வரவில்லை. நாங்களாவது பிழைத்துக் கொள்ள வேண்டுமல்லவா. சாமத்தில் ஒருவர் ஓடி வந்து ராகெட் கடலில் விழுந்து விட்டதாக வானொலியில் சொன்னதாகச் சொன்ன பிறகே அனைவர் முகங்களிலும் சிரிப்பு வந்தது. எல்லாம் சாமியின் அருள் என்று பேசிக் கொண்டார்கள். அப்படியே விழுந்திருந்தாலும் ஒன்றும் ஆகியிருக்காது. நாங்கள் தான் காரவீட்டிற்குள் இருந்தோமே.

முன்பெல்லாம் குளிர் காலங்களில் நல்ல குளிராக இருக்கும். சில வீடுகளில்தான் போர்வை வைத்திருப்பார்கள். பொங்கலுக்குக் கொடுக்கும் இலவச வேட்டி சேலைகள்தான் பலரையும் குளிரிலிருந்து பாதுகாக்கும். காலை சூரியன் குளிர் காய்ந்து சிறுவர்கள் உட்கார்ந்திருப்போம். மாமா ஒரு பெரிய கருப்பு கம்பளிப் போர்வையை போர்த்திக் கொண்டு திரிவதை பார்த்திருக்கிறோம். இன்று அப்படியான குளிர் இல்லை. கம்பளிக்கெல்லாம் வேலையே இல்லை. வித்தியாசமாக இந்த வருடம் நல்ல குளிர். இரவுகளில் போர்வை ஏலம் நடந்து பார்த்திருக்கிறோம். மிதிவண்டிகளில் வருவார்கள். சோப்பு டப்பா வாங்குவதில் பெண்கள் ஆர்வமாக இருப்பார்கள். கண்ணாடி, பவுடர் போன்றவையும் ஏலத்தில் வரும்.

காலையில் பாத்திரம் விளக்குவது பெண்களுக்கு பெரிய வேலை. அதிகாலையில் எழுந்தவுடன் சாணம் எடுத்துவந்து முற்றம் தெளிப்பது முதல் வேலையாக இருக்கும். பாத்திரம் துலக்க அடுப்புச் சாம்பலை உபயோகிப்பர். இரவில் மட்டும்தான் சமையல் செய்வார்கள். வடிதண்ணீர் ஊற்றி, பழைய சாதமாக காலைக்கும், மதியத்திற்கும் வைத்துக் கொள்வார்கள். இரவில் மீதம் இருக்கும் வெஞ்சணத்தை சுண்டவைத்து காலையில் வைத்துக்கொள்ள வேண்டும். மதியத்திற்கு பெரும்பாலும் தொட்டுக்கொள்ள ஒன்றும் இருக்காது. சூடப்பொடி சுட்டோ, வெங்காயம், வெல்லக் கட்டியைக் கடித்தோ மத்தியானச் கஞ்சி உள்ளே போகும். சிறுவர்கள் வெல்லக் கட்டியை தின்பண்டம் போன்று தின்று திரிந்தோம். வாய்க்குள் ஒதுக்கி வைத்திருக்கும் வெல்லக் கட்டியை, டேய் டேய் எனக்கும் கொஞ்சம் கடுச்சுக் கொடுடா எனக் கேட்டு நண்பர்கள் ஏங்கித் தவிப்பார்கள். சிலர் கடித்துக் கொடுப்பதும் உண்டு.

இடையில் ஒன்றும் சாப்பிடக் கிடைக்காது. இன்றைய குழந்தைகள் சாப்பிடும் ஸ்நாக்ஸ் நினைத்துக்கூடப் பார்த்திராத ஒன்று. வேலைவிட்டு வந்து சில

நேரங்களில் தட்டாம்பயிறு அவித்துக் கொடுப்பார்கள். மிகவும் ருசியாக, மணமாக இருக்கும். சமீபத்தில் ஒருமுறை பழைய ஆசையில் தட்டாம்பயிறு அவித்துத் தரச் சொல்லி சாப்பிட்டோம். வாந்தி வராததுதான் குறை. மண்ணைச் சாப்பிட்டால் கூட நல்ல ருசியாக இருக்கும். என்ன ஹைபிரிடோ, எங்கே புரடியுஸ் பண்ணியதோ.

அந்த காலத்தில் தட்டாம்பயிரை சாப்பிட்டுத்தான் சக்கைப்போடு போட்டிருக்கிறார்கள். மாமா மாடு மேய்க்கப் போகும்போது அரைப்படி அளவிற்கு அவித்த தட்டைப் பயிரை துணியில் கட்டி கொடுத்துவிடுவார்களாம். அதுதான் மதியச் சாப்பாடாம். பின் பொழுதடையும் முன்னர் ராத்திரிச் சாப்பாடு முடிந்து விடுமாம்.

பயிறு என்றில்லை. தக்காளி, கத்தரிக்காய், வெண்டைக்காய் என எதையுமே தற்போது பச்சையாக சாப்பிட இயலவில்லை. என்ன பூசணிக்காய் விற்கிறார்களோ கசக்கிறது. பாகற்காயின் அளவைப் பார்த்தால் பயமாக வருகிறது. பாகற்காயும், பீர்க்கங்காயும், புடலங்காயாகக் கிடைக்கிறது. ஒரு கத்தரிக்காய் வாங்கினால் இரண்டு நாட்களுக்குக்கூட வரும் போல. எல்லாமே வீக்கமடைந்தும், நெடிதுயர்ந்தும் கிடைக்கின்றன. ருசி மட்டும் சுருங்கிக் காணாமல் போய் விட்டது. இன்னும் சில வருடங்களில் ஒரு தக்காளி, ஒரு கத்திரிக்காய், ஒரு உருளைக் கிழங்கை வைத்தே திருமணச் சமையலை முடித்து விடலாம். ஒருவேளை திருமணத்திற்கு சமையல் செய்தால்.

விடிந்தும் விடியாமலும் இருக்கும் நேரத்தில் அடுப்பில் சாம்பலை அள்ளும் போது கவனமாக அள்ள வேண்டும். சில வேளைகளில் பூனை படுத்து பாத்ரூம் போய்த் தொலைத்திருக்கும். மறுநாள் முன்ஜாக்கிரதையாக முள் குச்சியை அடுப்பில் போட்டு வைப்பார்கள்.

பாத்திரம் விளக்க என்றில்லாமல், பல் துலக்கவும் சாம்பல் பயன்படும். திருநீரும் இதுதான். பல் வலிக்கும் சாம்பலை எடுத்து அப்புவதுண்டு. கொஞ்ச நேரத்திற்கு சுர்றென்றிருக்கும். சிலர் பல்வலிக்கு பொடி போடுவார்கள். பல் துலக்குவது போல் இரண்டு பக்கமும் அப்பிக் கொள்வார்கள்.

எமது தந்தை சிகரட் பழக்கத்தை விடுவதற்காக பொடி போட ஆரம்பித்தாராம். பெரிசுகள் பலவும் பொடி போடும். சிறுசுகளிடம் பொடி டப்பாவைக் கொடுத்து பட்டணம் பொடி எனக் கேட்டு வாங்கி வருமாறு அனுப்புவார்கள். கடையில் கூட்டமாக இருந்தால் நின்றுக் கொண்டே இருக்கவேண்டும். சின்ன சரக்கு என்று

உடனே தரமாட்டார்கள். பொடி எடுத்துப் போடுதெற்கென்றே மிகச் சிறிய கரண்டி ஒன்றை கடைகாரர் வைத்திருப்பார். டப்பாக்குள் அள்ளிப் போடுவதும் வித்தியாசமாக இருக்கும். சிலருக்கு தினமும் டப்பா பொடி தேவைப்படும். விதவிதமாக டப்பா வைத்திருப்பார்கள். பெரும்பாலானவர்கள் பிளாஸ்டிக்கில் வைத்திருப்பார்கள். எமது தந்தை சில்வரில் வைத்திருந்தார். டப்பாவைத் தொலைத்து விட்டு இவர்கள் தேடித் திரிவதைப் பார்த்தால் பரிதாபமாகத் தோன்றும். நகையைத் தொலைத்தவர்கள் கூட அப்படி சல்லடை போட்டுத் தேடமாட்டார்கள்.

பொடி போடுவது கூட பரவாயில்லை. இவர்கள் மூக்கைக் சிந்தி வைப்பது கண்றாவியாக இருக்கும். எமது அப்பா எங்களிடம் நன்றாகத் திட்டு வாங்குவார். சில நேரங்களில் யாம் டப்பாவை எடுத்து ஒளித்து வைத்துவிடுவோம். மூக்குப்பொடி கருப்பையா எனக் கிண்டலும் செய்வோம். வேலைக்கு வந்த பின்னரே எமது அப்பாவை வாங்க போங்க என்று மரியாதையாக அழைத்தோம். அதற்கு முன் ஒருமைதான்.

சிலர் டப்பாவை கையிலேயே வைத்துக் கொண்டு திரிவார்கள். வேட்டி, லுங்கியின் உள் மடிப்பில், பத்திரமாக வைத்திருப்போரும் உண்டு. இன்னும் சிலர் விவரமாக, டப்பாவைக் கொடும் என ஓசியிலேயே பொடி வாங்கியும் காலத்தைச் கழிப்பார்கள். சோலையம்மாள் மதினி போன்றவர்கள் பொடி கேட்டு அப்பாவிடம் செல்லமாகச் சண்டை போடுவார்கள். பெண்கள் அனேகமாகத் தனியாக பொடி டப்பா வைத்திருக்க மாட்டார்கள்.

பொடி இருக்காணே, கழுதைய வீட்லேயே வச்சிட்டு வந்துட்டோம் என நைசாக வாங்குவார்கள். கையை உதறி, மூடியைத் தட்டி, மூக்கில் லாவகமாக இழுத்து, முகம் எட்டுக் கோணலாகி, மூக்கைத் துடைத்து, அப்பாடா என பெருமூச்சு விடும் போதுதான் சிலருக்கு உயிரே வந்தது போல இருக்கும். செல்ல வடிவுச் சித்தப்பாவும் பயங்கரமாக பொடி போடுவார். சும்மா இந்தப் பக்கம் வந்தோம், பொடியாண்ணே வச்சிருக்க எனக் கேட்கும் பாங்கே தனி. ஒரிருமுறை யாம் பொடி போட்டால் என்னாகும் என்பதற்காக முயற்சித்திருக்கிறோம். மூக்கு அருகே கொண்டு போனாலே நெடி தாங்காது. இதை எதற்கு மூக்கினுள் திணிக்கிறார்கள் என ஆச்சரியமாக இருக்கும். கலப்பட பொடியை எளிதாகக் கண்டுபிடித்து விடுவார்கள். எவ்வளவு போட்டாலும் ஒன்னும் ஆகலையே என்பார்கள். பொடி போட்டால் அவர்களுக்கு சுர்ரென்று ஏறவேண்டும். ஏறாத பொடியை கொட்டி விட்டு

புதிதாக வாங்குவார்கள். சாப்பாடு கூட இல்லாமல் இருப்பார்களேயொழிய பொடி இல்லாமல் இருக்க மாட்டார்கள்.

வெற்றிலை போடுவது தனி சுகம். யாம் கொஞ்சம் பெரிய பையனாகியபின் பல முறை போட்டதுண்டு. சிறுவயதில், அம்மா மென்று கொடுத்த வெற்றிலையைப் போட்டதெல்லாம் உண்டு. நல்லது கெட்டதுகளுக்கு வெற்றிலை கொடுப்பது ஒரு சம்பிரதாயமாகவே இருக்கும். ஒரு சிலருக்கு வெற்றிலை இல்லாவிட்டால் பைத்தியமே பிடித்து விடும். மாமா, வழிவிட்டான், மாரியம்மா பெரியாத்தா போன்றவர்கள் வெற்றிலை இல்லாமல் இருக்கமாட்டார்கள்.

அதிலும் வழிவிட்டான் அவர்கள் வெற்றிலை கிடைக்காவிட்டால் ஈசலாகத் திரிவார். சருகப் பையில் மடித்து, பத்திரமாக வைத்திருப்பார். வெத்தல போடுவமா சின்னய்யா என்று மாமாவோடு உட்கார்ந்தால் அன்றைய பொழுது முடிந்து விட்டது என்று அர்த்தம். பெரும்பாலானவர்கள் புகையிலையும் சேர்த்துக் கொள்வார்கள்.

ஒவ்வொரு வெற்றிலையாக காம்பைக் கிள்ளி சுண்ணாம்பு தடவி வாய்க்குள் போட்டுக் தள்ளிக்கொண்டே இருப்பார்கள். கொழுந்து வெற்றிலை கிடைத்து விட்டால் பூரித்து விடுவார்கள். சுண்ணாம்புக்கு சிறு டப்பா வைத்திருப்பார்கள். சிறிய பாலிதீன் கவர்களிலும் கிடைக்கும். சிறு சுண்ணாம்பக் கற்களை அடுப்பில் போட்டுச் சுட்டு, பின்னர் கல்லில் தண்ணீர் ஊற்றினாலும் சுண்ணாம்பாக மலரும். காளவாசலில் சிதறிக் கிடக்கும் சுட்ட கற்களை எடுத்து தண்ணீர் ஊற்றி பொங்க வைத்தும் சுண்ணாம்பு சேர்ப்பார்கள். வெற்றிலைக்கு சுண்ணாம்பு அதிகம் சோத்தால் நாக்கு பொத்து விடும்.

வெற்றிலை போடுபவர்களை, சட்டையை வைத்தே கண்டுபிடித்து விடலாம். வாயில் அதக்கிக் கொண்டு சும்மா இருக்கமாட்டார்கள். அந்தப் பேச்சு, இந்தப் பேச்சு என வெட்டிப் பேச்சு போய்க் கொண்டே கிடக்கும். வெற்றிலை எச்சில் சட்டையில் தெறிக்கும். வெற்றிலை போட்டுத் துப்பி வீட்டுச் சுவர்கள்கூட கறை படிந்து இருக்கும். கறிச்சோறு சாப்பிட்டால் கண்டிப்பாக வெற்றிலை போடுவார்கள். விருந்தினர் வந்தாலும் வெற்றிலை கொடுத்து அனுப்புவது வழக்கம்.

பெண்கள் சுருக்குப் பையில் வெற்றிலை வைத்திருப்பார்கள். வேலைகளுக்குப் போகும்போது, பிஞ்சைக்காரர்கள் தவறாமல் வெற்றிலை, சீவல் வாங்கிக் கொடுப்பார்கள். மதிய உணவிற்குப்பின், ஆற அமர வெற்றிலை போட்டு உட்காந்திருப்பார்கள். எமது அம்மாயி, வெற்றிலை இடிக்கும் சத்தம் அருமையாக

இருக்கும். சில வேளைகளில் எங்களையும் இடித்துத் தரச் சொல்வார். அப்பத்தாவுக்கும் வெற்றிலை போடும் பழக்கம் இருந்தது. திண்ணையில் உட்காந்து இடித்துக் கொண்டிருப்பார். இன்றோ தர்மர் அண்ணன் போன்ற ஒரு சிலர் தான் வெற்றிலை போடுகிறார்கள்.

முன்பு வீடுகளில் பாத்திரங்கள் அதிகமிருக்காது. கம்மஞ்சோறை மண்பானையில் கிண்டுவார்கள். அது போல் கருவாட்டுக் குழம்பு வைப்பதற்கும் மண் சட்டி. பின்னர் சாப்பாடு செய்வதற்கு ஈயச் சட்டி வந்தது. கூடவே ஒட்டை உடைசல் ஈயப் பாத்திரங்களுக்கு ஈயம் பூசுபவர்களும் வந்தார்கள். இவர்கள் பாத்திரங்களை வாங்க வரும்போது போடும் சத்தமும் வித்தியாசமாக இருக்கும். சாப்பாட்டுத் தட்டும் ஈயத்தட்டாகவே இருந்த காலம் அது.

சில வீடுகளில் சாப்பிடுவதற்கு கும்பா வைத்திருப்பார்கள். வெங்கலத்தாலான கொஞ்சம் பெரிய சட்டியாக இருக்கும். கூட்டாஞ்சோறு சாப்பிடும் போது சபாபதி கும்பாவில் கொண்டு வருவார். கீழே குறுகியும், மேலே போகப்போக அகன்றும் இருக்கும். உழுபவர்கள் மண் கலயத்தில் கஞ்சி கொண்டு செல்வார்கள். உழுவதற்கு அதிக உழைப்பு வேண்டுமென்பதால் கலயத்தில் எடுத்துச் சென்று சாப்பிடுவார்கள்.

எங்களது மச்சு வீட்டில் பானைகள் நிறைய அடுக்கி இருக்கும். யாம் மிகச் சிறுவனாக இருக்கும்போது மாமா வந்து பானைகளை இறக்கிவைத்து எதையாவது எடுத்துச் செல்வார். அம்மா வந்தவுடன் ஒரே மூச்சாகச் சொல்லி விட்டுத்தான் யாம் வேறு வேலை பார்ப்பது. வீட்டிலிருந்த மிடாப்பானையில் தானியங்கள் வைத்திருப்பார்கள். கீழே பெரிய பானையும் மேலே அதற்கும் சிறியதுமாக அடுக்கி வைத்திருப்பார்கள். இப்படி பல பானைகள் மேலே மேலே ஒரு அடுக்காக அடுக்கப்பட்டு இருக்கும். அடிக்கடி எடுக்கும் பொருளை மேல் பானையில் வைத்திருப்பார்கள். பொத்தல் பானைகளையும் கிழே போடாமல் ஏதேனும் போட்டு வைப்பதுண்டு.

பானைகளை கீழே வைக்க புரிமனை வைத்திருப்பார்கள். வைக்கோலில் வளையமாக செய்து விற்பார்கள். சில பேர் அவர்களே செய்து கொள்வதுண்டு. மண்பானையின் அடிப்பகுதி வளைந்திருப்பதால் பிரிமனை இல்லாமல் வைத்தால் விழுந்து விடும். அதே போன்று தரையில் கரி ஒட்டாமல் இருப்பதற்காக சோத்துப்பானை, குழம்பு பானை, வடச்சட்டி போன்றவற்றிற்கும் பிரிமனை

வைப்பதுண்டு. சில வருடங்களில் தண்ணீர் பானைகளுக்கு எவர்சில்வர் பிரிமனை வைக்கும் வழக்கம் வந்தது.

கம்மஞ்சோற்றுப் பானையைக் கழுவது சிறிது சிரமமாக இருக்கும். எப்படித்தான் லாவகமாகக் கிண்டினாலும் அடியில் பிடித்துவிடும். கடைசியாக இருக்கும் சோறு கொஞ்சம் கறுப்பாக மாறிவிடும். அதே போல் கற்களும் நிறையக் கிடக்கும். காட்டுக்குப் போய் வந்த பின் கம்பரிசி இடிக்கும் வேலை நடக்கும். மாங்கு மாங்கென்று குத்தி சிறிது நேரத்தில் மாவாக்கி விடுவார்கள். உலக்கையின் ஒரு முனையில் கம்பு இடிப்பதற்கும் மறு முனையில் நெல் குத்துவதற்கும் இரும்பு பூண் மாட்டியிருப்பார்கள். எங்களைப் போன்ற சிறுவர்கள் உலக்கையை வாங்கி நாலைந்து குத்து குத்தி விட்டு ஒருவாய் கம்பரிசியை அள்ளி வாயில் போட்டுக் கொள்வோம். இப்படி தின்பதற்குத்தான் இடிப்பது போல் பாவ்லா காட்டுவது. நெல் குத்தும் போதும் உமியோடு அள்ளி உமியைத் தூற்றி விட்டு அரிசியைத் தின்பதும் தப்பாது. இளஞ்சிவப்பு நிறத்தில் அரிசி அவ்வளவு சுவையாக இருக்கும்.

பெண்கள் உலக்கையை இடிக்கும்போது குரலெழுப்புவார்கள். ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு விதங்களில் ஒலி வரும். சிலர் ஒவ்வொரு குத்துக்கும் ச்சோ என்பார்கள். ஒரு சிலர் தொண்டைக்குள் சொல்வதுண்டு. ம்கும் என்பது போன்ற ஒலியும் கேட்கலாம். நெல் குத்தும்போது, கையை மாற்றி மாற்றி லாவகமாகக் குத்துவார்கள். நெல்லுக்கு செங்குத்தாகக் குத்தக் கூடாது. அரிசி உடைந்து விடும். சற்று சாய்வாக பலம் குறைவாகக் குத்த வேண்டும். கம்புக்கு நேராக இடிக்க வேண்டும். அவ்வப்போது பதம் பார்த்துக் கொண்டு கொஞ்சமாக தண்ணியும் தெளித்துக் கொள்ள வேண்டும். இரண்டு பேர் சேர்ந்து மாற்றி மாற்றிக் குத்துவதையும் காணலாம். கம்பை நன்றாக இடித்து, பெட்டியில் அள்ளிக் கொண்டு போகும்போது சிறுவர்கள் கைய் நீட்டுவோம். சில நேரங்களில் பெரியவர்களும் கேட்டு நிற்பார்கள். எல்லாத்துக்கும் கொடுத்துட்டு என்னத்த கொண்டு போய் ஒலைல போட என்பார்களே தவிர, அள்ளிக் கொடுக்கத் தவறமாட்டார்கள். வறுத்த கம்பரிசி கொண்டு வந்தால் இடிக்கும் முன்பே பாதிக்கும் மேல் காலியாகிவிடும். இடித்த பின்பு மீதியும் தீரும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. ஆண்கள் இடிக்க வருவது மிகவும் அரிது. சில சமயங்களில் ஆண்கள் உரலருகே உட்கார்ந்து கொண்டு, உலக்கையின் பூண் அருகே பிடித்துக் குத்தி சடுதியில் மாவாக்கிக் கொடுத்து விடுவார்கள். சில வீடுகளில் சிமெண்ட் தரையில் நெல்லைக் குவித்து

ஒருவர் கீழே உட்கார்ந்து தள்ளிவிட இன்னொருவர் நின்று கொண்டு குத்துவதையும் பார்திருக்கிறோம். உரலில் கூட்டமாக இருக்கும் நேரங்களில் இப்படிச் குத்துவார்கள்.

கேப்பை அரைப்பதில் வயதானவர்களுக்கு பிரியம் இருக்கும் போல. ரசித்துச் செய்வார்கள். சிறுவர்களுக்கும் மகிழ்ச்சிதானே. திருக்கையின் கம்பை பிடித்துக் கொண்டு சுலபமாகக் சுற்றலாம். விளையாட்டு போன்று கொஞ்சம் கொஞ்மாக கேழ்வரகை அள்ளி குழிக்குள்ளும் போடலாம். முக்கியமாக தின்பதற்கு சூடான மாவும் கிடைக்கும். மாவை அரைப்பது எனச் சொல்லாமல் திரிப்பது என்றே சொல்வார்கள். எங்கள் வீட்டுத் திண்ணையில் கனமான கல் கிடந்தது. பலரும் வந்து அரைத்துச் செல்வார்கள். பரளச்சி சென்று மில்லில் மாவு அரைக்க ஆரம்பித்த பின் இந்தப் பழக்கம் படிப்படியாகக் குறைந்து விட்டது. கம்பு இடிக்கும் முறை அதன் பின்னரும் சில காலம் தொடர்ந்தது. பொது விநியோக அரிசி பரவலாகிய பின், அதுவும் நின்று விட்டது. அன்று ரேசன் அரிசி அதிகமாக நெல்லும், கல்லும் கலந்து வந்தது. வடி தண்ணியைக் குடிக்கவே முடியாது. நாற்றமடிக்கும். பழைய சாப்பாட்டிற்கு விளங்காது. கெட்டுப் போனது போல் நுரை நுரையாக வரும். ஆனாலும் அதைத்தான் பின்னர் வந்த நாட்களில் சாப்பிட்டு உடல் வளர்த்தோம்.

பாத்திரங்கள் தேய்ப்பதற்கு, கழுவுதற்கு மிகக் குறைவான தண்ணீரையை பயன்படுத்துவார்கள். முதல் பாத்திரத் தண்ணீரில் கழுவி, அடுத்ததாக சுத்தமாக இருக்கும் தண்ணீரில் கழுவுவார்கள். கழுவி ஊற்றும் தண்ணீர் பெரும்பாலும் அவரவர் வீட்டு முற்றத்தைத் தாண்டாது. முற்றமும், தெருச்சாலையும் சிமெண்டாக வந்தபின் வண்டிப்பாதைக்கு தண்ணீர் ஒடி வந்து விடுகிறது.

முன்னர் வண்டிப்பாதை பள்ளத்தில் கிடந்தது. சற்று தூரத்திலிருந்து பார்த்தால், ஆட்கள் நடந்து போவதே தெரியாது. அவ்வளவு ஆழமாக இருக்கும். இன்றைக்கு சாலை போடுகிறோம் என்ற பெயரில் சரளை மண்ணைச் கொட்டி மேடாக்கி விட்டார்கள். அன்று சபாபதி வீட்டிற்கு, படிக்கட்டு இல்லாமல் இருக்கும். கீழே பெரிய முண்டுக் கல்லைப் போட்டிருப்பார்கள். மிகுந்த சிரமப்பட்டே தாவிக் குதித்து ஏறுவோம். அதற்கும் கீழே ஓடை போன்று பாதை கிடந்தது. இன்று அவர்கள் வீட்டிற்குள் தண்ணீர் பாயும் அளவிற்கு மேடாகி விட்டது.

ஊரின் வடக்குப் பகுதி சற்று மேடாகவும், தெற்கு சாய்வாகவும் அமைந்திருப்பதால் மழை பெய்யும் போது கிழக்குக் கண்மாயே முதலில் நிரம்பும்.

வண்டிப்பாதை வழியாக தண்ணீர் பெருக்கெடுத்து ஓடும். பாதையின் இரு கரையும் கொள்ளாத அளவிற்கெல்லாம் நீர் பாய்ந்து வந்து பார்த்திருக்கிறோம். மழை விட்டவுடன், சிறு பையன்கள் எல்லாம் வண்டிப்பாதைக்கு வந்து விடுவார்கள். பிறகென்ன. ஒரே குதியாட்டம்தான்.

கத்திக் கப்பல்களெல்லாம் மழை பெய்யும் போதே செய்து தயாராக வைத்திருப்போம். எங்களுக்குள் கப்பல் போட்டியும் நடந்திருக்கிறது. அடித்துச் செல்லும் கப்பல் பின்னாலேயே ஓடித் திரிந்திருக்கிறோம். கப்பல் மூழ்கி விட்டால் கண்ணீர் விட்டு அழும் நண்பர்களும் இருந்தார்கள். மழைக்காலங்களில் நாள் கணக்கில் தண்ணீர் கொஞ்சமாகவேணும் வந்து கொண்டிருக்கும். கைகளால் தண்ணீரை இறைத்து மற்றவர் மேல் ஊற்றுவது, காலால் தண்ணீரை எத்தி விடுவது என மகிழ்ச்சியால் துள்ளித் திரிந்த காலமது.

பல நேரங்களில் மண் புழுக்கள் அடித்து வரப்படுவதுண்டு. அவற்றை எடுத்து, கையில் விட்டுக் கொண்டு விளையாடுவதும் நடக்கும். அது போக மண் புழு ஓட்டப் பந்தயமும் நடத்துவதுண்டு. நகராமல் நிற்கும் மண்புழுவிற்கும், பின்னாடி செல்லும் மண்புழுவிற்கும் தலை துண்டாவது நிச்சயம்.

மழை பெய்து, பச்சைப் பசேல் என முளைக்கும் தாவரங்களைப் பார்த்தவுடனேயே மனதிற்குள் உற்சாகம் கரைபுரண்டு ஓடத் துவங்கிவிடும். முதல் வேலை தக்காளிச் செடிகளைத் தேடித் திரிவதாகத்தான் இருக்கும். தெருவிற்குத் தெற்கே கருவக் காடுகளாகக் கிடந்தது. பெண்கள் ஒதுக்கும் இடம். பகல் பொழுதுகளில் வரமாட்டார்கள். கருவேலச் செடிகள் முழுவதும் துணிகளாகக் கிடக்கும். கருப்பசாமி வரும் பாதையென்று சொல்லி, பெரியதொரு கல்லும் கிடந்தது. சிறுவர்கள் கல் அருகே போக மாட்டார்கள்.

பெரிய தக்காளிச் செடியாக மாட்டி விட்டால், அன்று முழுவதும் அவரைப் பிடிக்க முடியாது. செடியை கீழே கூட வைப்பதில்லை. இப்படியே கைகொள்ளாத அளவிற்கு செடிகளைப் பிடுங்கித் திரிந்தோம். தக்காளிச் செடியே ஒரு வித மணமாக இருக்கும். கையிலும் அந்த மணம் அப்படியே ஒட்டிக் கொள்ளும். கத்தரிக்காய், மிளகாய் செடியும் இவ்வாறே சேர்த்தோம். வேம்பு, புளியமரச் செடிகளையும் புடுங்கத் தவறவில்லை. மரங்களை நடுவதற்கு இடம் தேடுவது சிரமமானது.

சொடக்குத் தக்காளி மாட்டினால் சிறுவர்கள் சொக்கிப் போவோம். உறையை அமுக்கினால் சொடக் என்று சத்தம் வருவதாலேயே இதற்கு சொடக்குத்

தக்காளி என்று பெயர். ஓரளவிற்கு காய்ந்த உறையுள்ள சொடக்குத் தக்காளி சுவையாக இருக்கும். எங்களுக்கு எங்கே உறை காயும் வரை பொறுமை இருந்தது. செடியிலிருந்து பச்சையாகத் தொங்குவதைப் பார்த்தாலே போதும். பிடுங்கி விடுவோம். காய்ந்த சொடக்குத் தக்காளி புதர்களுக்குள் இருக்கும். பார்த்து விட்டால் பூரித்துவிடுவோம்.

வேப்ப மரங்களில் பிசின் எடுத்து திரிவது, மற்றொரு மகிழ்ச்சியான பொழுதுபோக்கு. அனைவருக்கும் பச்சையான பிசின் கிடைக்காது. காய்ந்த பிசினையும் எடுத்து வந்து, கொஞ்சமாக தண்ணீர் ஊற்றி வைத்து விடுவோம். பிசின் எடுக்க என சிறு பாட்டிலும் வைத்திருப்போம். தங்கப்பாண்டி வீட்டின் முன் இருந்த வேம்பில் பிசின் நிறைய இருக்கும். கிழிந்த புத்தகங்களை எடுத்துப் போய், அங்கேயே ஓட்டுவதும் உண்டு. அதே போல் சைக்கிள் கடை அருகேயும் பிசின் கிடைக்கும்.

பள்ளிக் கூடம் ஆரம்பித்து சில நாட்களில், என்னென்ன நோட்டு வாங்க வேண்டுமென எழுதிப் போடுவார்கள். ஆறாவதிலிருந்து நோட்ஸ்களும் வாங்க வேண்டும். வெற்றி, கோனார் உரைகள் கிடைக்கும். புத்தகங்கள் வாங்க மாட்டோம். இலவசமாகக் கொடுப்பார்களில்லையா. புதுப்புத்தகங்களின் மணமே சிறுவர்களை கிறங்கடிக்கும். எவ்வளவுதான் அட்டை போட்டு பத்திரமாக வைத்திருந்தாலும், சில நாட்களுக்குள்ளாகவே அட்டை காணாமல் போய்விடும். நோட்டுகளும் முனை மடங்கி விடும். கூழ், கம்பங்கஞ்சி போன்றவையே எங்களுக்கு கோந்து.

பேப்பரில் கேமரா செய்வது சிறுவர்களுக்குக் கைவந்த கலை. பேப்பரைப் மடித்து கத்தரி போல் செய்து, முனையைச் சிறிது மடித்து ஒன்றோடொன்று இணைத்து படம் பிடிக்கலாம். பார்ப்பதற்கு நடுவே ஒட்டையும் கிழிக்க வேண்டும். சிரிங்க சிரிங்க என முகத்திற்கு நேரே கொண்டு செல்வதுண்டு.

மழைக்காலத்தில் சிறுவர்களுக்குப் பிடித்த மற்றொரு விருப்பமான விசயம் பாப்பாத்தி பிடித்துத் திரிவது. சிறியதும் பெரியதுமாக, குங்குமச் சிவப்பு நிறத்தில் பாப்பாத்திகள் ஊர்ந்து திரியும். பார்ப்பதற்கே இவை மிகவும் அழகாக இருக்கும். தொட்டால் பஞ்சு மெத்தை போன்று அவ்வளவு மிருதுவானவை. கடிக்காது என்பதால் பெரும்பாலும் அனைத்துச் சிறுவர்களும் பிடித்து விடுவார்கள். பாப்பாத்தி ஓட்டப் பந்தயமும் எங்களிடையே வெகு பிரபலம்.

ரயில் பூச்சிகளும் எங்களிடம் மாட்டிக் கொண்டு, என்ன செய்வதென்று தெரியாமல் சுருண்டு கிடக்கும். குச்சியால் மெதுவாகத் தொட்டாலே போதும். உடனே சுருண்டு கொள்ளும். சிறிது நேரம் கழித்து மறுபடியும் மெதுவாகப் புறப்படத் தயாராகும். மறுபடியும் தொடும் போது பழைய படியே படுத்துக் கொள்ளும். வீட்டில் யாராவது கூப்பிட்டால்தான் அன்று அவைகளுக்கு நல்ல நேரம். பெரும்பாலும் இவைகளைக் கொல்லமாட்டார்கள்.

எங்களிடம் மாட்டிக் கொண்டு விழிபிதுங்கி நிற்கும் மற்றொன்று புழுதி உண்ணி. மண் வீடுகளென்பதால், சந்துகளில் இவைகளின் குழி அதிகளவில் இருக்கும். சில இடங்களில் வரிசை வரிசையாக அனேகக் குழிகளும் அகப்படும். நூலை குழியின் வாய்க்குள் வைத்தால் போதும். உண்ணியார் மாட்டிவிடுவார். நூலை அதிகம் ஆட்டாமல் மேலே தூக்கினால் நூலைப் பிடித்து வெளியில் வரும். உண்ணி பிடிக்க நூலைத் தேடித் திரிய முடியாது. இருக்கவே இருக்கிறது மற்றொரு எளிய முறை. கொஞ்சம் தண்ணீர் ஊற்றினால் உண்ணி மேலே வந்து விடும். தண்ணீருக்கு யாராவது மெனக்கெட்டு அலைவார்களா. வயிற்றுக்குள் நிறைய இருக்குமல்லவா. மாடு மேய்த்துத் திரியும்போது, இப்படி உண்ணி பிடித்துப் பொழுது போக்குவதும் பல சிறுவர்களுக்குப் பிடித்தமானதே.

சில வீடுகளில் மாட்டு உண்ணிகளைப் பிடுங்கி கங்குக் கரண்டியில் போட்டுச் கொல்வார்கள். உண்ணி கருகிச் சாவதை பார்க்கப் போகாமல் இருக்க முடியுமா. அங்கு போய் கைகள் சும்மா இருக்குமா என்ன. இரவுகளில் மிகுந்த உற்சாகத்தோடு, மின்மினிப் பூச்சி பிடித்துத் திரிந்து, கீழே விழுந்து கிடந்த கதையெல்லாம் யாம் சொல்ல மாட்டோம். எருக்கஞ்செடிகளில், ஆரஞ்சு, பச்சை வண்ணங்களில் அழகான ஒரு வண்டு அமர்ந்திருக்கும். அவையும் எங்கள் கைகளுக்குள் வராமல் தப்புவது அரிதே.

மாமாவின் பழைய வீடு இருந்த இடத்தில், கருவேல மரம் பெரியதாக வளர்ந்திருக்கும். பங்காளிகளுக்குள் ஏதோ தகராறு வரவே அங்கிருக்கப் பிடிக்காமல் அம்மாயியின் வற்புறுத்தலால், இப்போது இருக்கும் இடத்தை வாங்கி வீடு கட்டினாராம். பழைய வீடு, சுவர் இடிந்து கட்டாங்கோட்டையாகக் கிடந்தது. இந்த இடம் மணிகண்டன் வீடு அருகே இருந்ததால், யாம் அடிக்கடி அங்கே செல்வதுண்டு. மரத்தில் ஏறி கருவேலம்பழம் பிடுங்கித் தின்பது, சிறுவர்களுக்குப்

பிடித்தமான ஒன்று. பெரியவர்கள் பார்த்தால் கண்ணுவலி வரும், ரொம்பத் திங்காதீங்க எனச் சத்தம் போடுவார்கள்.

சில நண்பர்கள் மரத்தின் உச்சிக்குப் போய் பிடுங்குவார்கள். இருளப் பெரியப்பா பார்த்தால், சுழி புடுச்சவன்களா, கீழே இறங்குங்க எனச் சத்தம் போடுவார். கருவமரம் அவ்வளவு உறுதியாக இருக்காதல்லவா. ஒற்றைச் சுழி இருந்தால் நல்ல பையன் என்று அர்த்தம். இரட்டைச் சுழி இருந்தால் கேலிப் பேச்சுக்கு ஆளாக வேண்டும்.

எங்களைக் காணவில்லை எனில் நேராக அங்கு வந்து பார்ப்பதும் பல வீடுகளின் நடைமுறை. சில பசங்களுக்கு ஓதக்காய் அதிகம் பிடிக்கும். ஆடு வைத்திருப்பவர்கள், ஆடு தின்றதை நீங்க என்னப்பு திங்கறீங்க எனக் கேட்பார்கள். ஆடுகள் விரும்பித் தின்பதையே நாங்களும் ஆசையாகத் தின்றோம் என்பதை இப்போது நினைத்துப் பார்த்தால் விந்தையாக இருக்கிறது.

ஆடு வைத்திருப்பவர்கள் கருவக்காய்களை ஒவ்வொரு கருவேல மரமாக தொரட்டி வைத்துப் பிடுங்கித் திரிவார்கள். பிடுங்கி கைலியினுள் போட்டுக் கொள்வார்கள். அதிகாலையில் கரிசல் காடுகளில் இருந்து பருத்தி, வேப்பங்குலை என கட்டுக் கட்டாகப் பிடுங்கி வருவார்கள். களையெடுத்துப் போட்டிருக்கும் அருகுப் புல்லையும் சேர்த்துக் கொண்டு வருவார்கள்.

சோளக் காடுகளுக்குள்ளே வளர்ந்திருக்கும் ஒரு செடியை ஆடுகள் நன்றாகத் திங்கும். சோள மேட்டு வயல்களுக்குச் சென்று யாம் பிடுங்கி வருவோம். தூரை சேர்த்து கட்டித் தொங்கவிட்டால் ஒட்ட ஒட்ட ஆடுகள் மேய்ந்து விடும். ஒரு குலையை முடித்து விட்டு அடுத்த குலை கட்டுவதற்குள் ஆடுகள் நம்மை ஒரு வழி பண்ணிவிடும். கிழக்குக் கண்மாய்க் காடுகளில் சில முறை யாம் புல்லறுத்திருக்கிறோம். நண்பர்களோடு பேசிக்கொண்டே புல்லறுப்பது சுகமான அனுபவம்.

யாம் பன்னிரெண்டு படிக்கும் போது, அக்காவும் அண்ணனும் சென்னையில் இருந்ததால், நண்பர்களோடு சேர்ந்து அதிகாலையிலேயே ஆட்டுக்குலை பிடுங்க கரிசல் காட்டுக்குச் சென்று விடுவோம். பாலாட்டாம் செடியை ஆடுகள் விரும்பி உண்ணும். செடியில் பால் போன்று வரும். கொஞ்சம் ஆழமான தூரோடு தரையில் படர்ந்திருக்கும். பனி பெய்ந்திருப்பதால் செடிகள் சுலபமாகப் பிடுங்க வராது.

தூர்களை ஒன்றாகச் சேர்த்து குலையாகப் பின்னித் தொங்கவிட்டால் ஆடுகள் பூரித்துவிடும்.

தைய், மாசி மாதங்களில் வெம்பாப் பனி விழுந்தால் அருகிலிருப்பவர் கூட தெரியாது. அவ்வளவு கருமையாக இருக்கும். மல்லிச் செடிகள் பூப்பூக்கும் போது, வெம்பா பனி பெய்தால் கருகிவிடும் எனக் கவலைப்படும் காலமும் இருந்தது. இன்று மல்லியும் இல்லை. அந்த அளவுக்கான வெம்பாவும் இல்லை.

கரிசல் காட்டு களையெடுப்பது எளிது. தேள், பூரானுக்கு மட்டும் கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும். கரிசல் மண் ஈரமாக இருந்தால் கால் அமுங்கும். களையெடுக்க முடியாது. மண் பொருபொருவென இருந்தால் கூடுதல் மகிழ்ச்சி. பெரும்பாலும் புல், பூண்டு, அருகு, கோரைப்புல் போன்றவையே வளர்ந்திருக்கும். உட்கார்ந்துக் கொண்டே களை எடுக்கலாம். கொத்துவான் கொஞ்சம் பெரிதாக இருப்பது கூடுதல் சௌகர்யம். கொத்துவான் கனையும் சற்று நீளமாக வைத்திருப்பார்கள். சிலர் மதிப்புக்களைக்கு அரை மம்பட்டி அளவிற்குக் கூட பெரியதாக வைத்திருப்பார்கள். கோரையைப் பிடுங்குவதற்கு தரங்கி அதிகம் பயன்படும். சிலர் குச்சியையே தரங்கு போன்று செதுக்கிக் கொள்வர். பூண்டை வெட்டுவதற்கு செதுக்கி நன்றாக இருக்கும்.

மதிப்புக் களையின் போது எம்மை நடுவில் விட்டு, அம்மாவும் அக்காவும் இருபுறமும் இருந்து கொள்வார்கள். யாம், கொஞ்சமாக களை வெட்டிக்கொண்டே முதலாவதாகப் போய் உட்கார்ந்து கொள்வோம். கல்லூரிப் படிப்பின் போதே யாம் ஓரளவிற்கு அதிக நிறை வெட்டிச் சென்றோம். அத்தக் கூலி களையெடுப்பின் போது அம்மாவோடு இருந்தால், கொஞ்சமா எடுத்துட்டு முன்னாடி போய்யா, யாம் பார்த்துக்கிறோம் எனச் சொல்வார். சில முறை சுத்தமடம், கிருஷ்ணாபுரம் என்றெல்லாம் கரிசல் காட்டு களைக்குச் சென்று பொழுதடைந்து வீட்டிற்கு வந்து சேர்ந்திருக்கிறோம். வேலை ஆட்களுக்குச் கிராக்கி என்றால் கூலி கொஞ்சம் அதிகம் கிடைக்கும்.

ஒருமுறை பேச்சியம்மாளின் கரிசல் காட்டில் களை எடுத்துக் கொண்டிருந்தோம். வேலை முடிந்து வீட்டுக்குப் போகும் நேரம் வந்தது தெரியாமல், யாம் வேகவேகமாக களை வெட்டிக்கொண்டு முன்னால் சென்று கொண்டிருந்தோம். ஒருவர் எங்கே நிறையை முடிக்கிறாரோ, அதுவரை மற்றவர்களும் எடுத்து முடித்து விட்டே வீட்டிற்குச் செல்ல முடியும் என்பதெல்லாம் எமக்குத் தெரியாது. யாம்

வேகமாகக் சென்று கொண்டிருந்தோம். பின்னால் இருந்து, யாரோ கரம்பைக்கட்டியை தூக்கி எம்மேல் போட்டார்கள். கட்டியை விட்டு யாரோ எம்மீது எறிவதாக அம்மாவிடம் சொன்னோம். பிஞ்சைக்காரருக்கு விசயம் தெரிந்து விட்டது. எல்லோரையும் பிடிபிடியென பிடித்து விட்டார். ஒன்றும் பேசாமல் அமைதியாக இருந்தார்கள். அவர் அதிகம் பேசவே இவர்களும் பேசி வாக்குவாதம் போல் வந்து விட்டது. உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது என அவர் சொன்னது இன்றும் எம் நினைவில் உள்ளது. அடுத்த நாள் அவருக்கு களைக்குச் செல்லாமல் இருந்து விட்டார்கள்.

நெல் வயலில் தண்ணீர்க் களை எடுப்பது சிரமமானது. சிறு பயிராக இருக்கும்போது, எளிதாக கோரை, வெஞ்சாப் பயிரை பிடுங்கி விடலாம். நெல் பயிர் கதிர் விடும் நிலையில் இருக்கும்போது, கடைசிக் களை எடுத்து உரம் போடுவார்கள். தோகை கத்தி போன்று கூராக இருக்கும். கையைக் கீறி விடும். அதேபோல் நெற்பயிர் சுனையும் குத்தும். களையெடுத்து முடித்தபின் கால், கைய் மோசமாக அரிக்கும். ஐயர் கண்மாய் காடுகளில் இவ்வாறு பலமுறை நெற்களை எடுத்திருக்கிறோம். மணிச்சாமிக்கு சொந்தமான வயலில் வாரத்திற்கு பார்த்தோம். நிலம் அவருடையது என்பதால் விளைச்சலில் குறிப்பிட்ட பங்கை அவருக்குக் கொடுக்கவேண்டும். எங்களைப் போல் பலரும் அந்தப் பகுதியில் வாரத்திற்கு பயிர் செய்ததால், மாற்றி மாற்றி களையெடுப்பது வழக்கம். சிறு நெற்பயிரில் களை எடுப்பது மனதிற்கு நிறைவாக இருக்கும். ஒரு முறை எங்கள் வயலில் வேகமாகக் கதிர் அறுக்கிறோம் எனப் பன்னருவாளால் விரலைப் பதம் பார்த்துக்கொண்டோம். அந்த விழுப்புண் இன்றும் ஆட்காட்டி விரலில் இருக்கிறது.

நெற்பயிர் மதிப்புக் களையின் போது எமக்கு அரிக்குமென்பதால், அப்பா எம்மை குமி அள்ளிப் போடும் வேலையை செய்யச் சொல்வார். வேகமாக அள்ள வேண்டும். வரப்பு கொஞ்சம் தள்ளி இருந்தால் சிரமமாக இருக்கும். களைக்குமி மலைபோல் குவிந்து விடும். வீட்டிற்கு போவதற்கு முன்னால் அனைவரும் சேர்ந்து அள்ளிப் போடுவார்கள். கூடை வைத்தும் சுமக்க வேண்டியிருக்கும்.

மாமா வீட்டில், ஒரு மருந்தடிக்கும் கைத்தெளிப்பான் இருந்தது. வயல்களுக்கு மருந்தடித்து முடித்த பின் கொஞ்சம் தண்ணீரை ஊற்றி அடித்துப் பார்த்திருக்கிறோம். கரிசல் காட்டில் மருந்தடிக்க தண்ணீர் எடுத்துத் தர ஒரு ஆள் வேண்டும். இயந்திர தெளிப்பான் வந்த பிறகு எல்லாமே எளிதாகி விட்டது.

பத்தாவது படிக்கும் போது காலாண்டு விடுமறையில் ஒருமுறை பரளச்சிக் காடுகளுக்கு நெல்களை எடுக்கச் சென்றோம். எங்கள் ஊர் காடுகள் விதைக்கும் முன்பே, அந்தப் பக்கமிருக்கும் ஊர்களில் விதைத்து விடுவார்கள். பள்ளிக்கூட கண்மாய்க் கரை வழியாகவே நடந்து போனோம். நண்பர்கள் யாரும் பார்க்கக் கூடாது என வெட்கப்பட்டோம். வெட்கத்தை கூட்டுவது போல் நெல் வயல், வீடுகளுக்கு அருகிலேயே இருந்தது. காலாண்டு விடுமுறை என்பதால் இரண்டு மூன்று நாட்கள் தொடர்ந்து சென்றோம்.

கடைசி நாளில் வீட்டிற்கு வரும்போது, மழையில் மாட்டிக் கொண்டோம். பகல் முழுவதுமே மேகம் மப்பும் மந்தாரமுமாகவே இருந்தது. பொம்மநாயக்கன்பட்டி ஆலமரம் தாண்டி, கொஞ்ச தூரத்தில், மழை கொட்ட ஆரம்பித்து விட்டது. அப்படியொரு மழையை அதற்கு முன்னால் பார்த்ததில்லை. கொட்டு கொட்டென்று கொட்டித் தீர்த்து விட்டது. இடி இடிப்பது அதை விட மோசம். மிக அருகாமையில் இடிப்பது போன்று பயங்கரச் சத்தம். காற்றுவேறு ஆளைத் தள்ளும் அளவுக்கு வீசுகிறது. நாங்கள் இரண்டு மூன்று பேர்தான் நிற்காமல் நடந்து வந்துகொண்டே இருந்தோம். ராஜகோபாலபுரம் கரையில் வரும்போது, பயங்கரமான இடிக்கு அர்ஜுனன் பேர் பத்து எனச் சத்தமாக சொல்லிக் கொண்டே வந்தோம். அர்ஜுனன் பேர் பத்து எனச் சொன்னால், இடிக்கும் இடி நம்மேல் விழாது எனச் சொல்வார்கள். வீடு வந்து சேரும் வரை மழை நிற்கவே இல்லை. மழையில் அவ்வளவு நேரம் நனைந்ததால் தடுமம் பிடிக்கும் என நினைத்தோம். நல்ல வேளையாக ஒன்றும் ஆகவில்லை. இது போன்றதொரு மழையையும், காற்று, இடியையும் யாம் அதன் பின்னர் சந்தித்ததே இல்லை எனலாம்.

அன்று மழைக் காலங்களில் எங்கள் ஊர் மிகவும் ரம்மியமாகக் காட்சியளிக்கும். எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேல் நெல் வயல்களாகத் தெரியும். வயல்காடு, செவல்காடு, கரிசல்காடு என எங்கும் பசமை நிரம்பி வழியும். பெரிய கண்மாயில்தான் அதிக நெல் விளைச்சல் என்றாலும், மற்ற காடுகளும் சளைத்ததல்ல. வரப்பு வெட்டுபவர்களும், தொழி அடிப்பவர், நாற்று நடுபவர், களையெடுப்பவர், உரம் போடுபவர், மருந்தடிப்பவர் என காடுகள் பூராவும் ஆட்களாகவே தென்படுவார்கள்.

வயலில் வேலை இல்லாவிட்டாலும், சும்மானாச்சுக்கும் பிஞ்சையைப் பார்த்து வரக் கிளம்புவார்கள். ஒரு நாளைக்கு ஒருமுறையேனும் காடுகளைப்

பார்க்கவில்லையெனில் சிலருக்குத் தூக்கமே வராது. மழை அதிகமாகப் பெய்து விட்டால், நீரை வெட்டி விட மழையிலேயே கிளம்பி விடுவார்கள். பிள்ளைகளைக் கூட அந்த அளவிற்கு அக்கறையாகக் கவனித்தார்களா என்பது சந்தேகமே.

யாம் இரண்டொருமுறை நாற்று பிடுங்கச் சென்றிருக்கிறோம். ஆடிப் பதினெட்டுக்கு நாற்றுப் பாவுவார்கள். காரவீட்டு மாமா நாற்றுப் பாவப்போவதைக் கூட அம்மாவிடம் வந்து சொல்வார். வயலின் ஒரு ஓரத்தில் பாத்தி வைப்பார்கள். எரு போட்டு சிறப்பான முறையில் நாற்றுப் பாவும் இடத்தைத் தயாரிப்பார்கள். பருவமழை தாமதமானால், ஆள் வைத்தும் நாற்றங்காலுக்கு குடங்களில் தண்ணீர் சுமந்து ஊற்றியும் யாம் பார்த்திருக்கிறோம்.

ஊரின் ஆண்கள் பல வேலைகளும் செய்வார்கள். அன்று பாத்தி கட்டும் வேலை முக்கியமானது. அனைத்து வேளாண்மையும் பாத்தி, பாத்தியாக பிரித்துச் செய்வார்கள். உழுது போட்ட வயலுக்கு வரப்பு வைத்து, மண்ணை சமமாக்கி, அணைகட்டி, பாத்தியாகச் செதுக்க வேண்டும். குனிந்து கொண்டே வேலை செய்ய வேண்டும். இடுப்பு ஒடிந்து விடும். இருந்தாலும் யாரும் அசர மாட்டார்கள். மண்வெட்டியை தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு, விடிகாலையிலேயே கிளம்பி விடுவார்கள். சிலர் ஒன்றாகச் சேர்ந்து மதிப்பாகவும் செய்வதுண்டு. யாமெல்லாம் இப்படியான வேலைக்குச் சென்றதில்லை. எமக்கு களையெடுப்பதற்கே கையில் பொய்யான குளம் வரும். அதாவது பொய்க்குளம். குளம் போல நீர் கோர்த்துக் கொள்ளுமல்லவா. பொக்குக்குளம். பொக்குளம். புண் பொங்கி வருவதால் பொங்கு குளம். என்னே இந்த அழகுத் தமிழன் அருமை.

பாத்தி கட்டுவதற்கு இடுப்பு ஒடியுமென்றால், தொழியடுப்பதற்கு பெண்டு கழன்று விடும். உழுவதற்குச் சிரமமெனில், மம்பட்டியாலேயே ஈரமண்ணை வெட்டி குப்புறப் போட்டுவிடுவார்கள். சகதிக்குள் மண்ணை வெட்டிப் புரட்டுவது லேசான காரியமில்லை. சில நேரங்களில் மண்வெட்டி உள்ளே சிக்கிக் கொண்டு வராது. யாம் சும்மா விளையாட்டுக்கு வாங்கி வெட்டிப் பார்த்திருக்கிறோம். கடினமான வேலை. ஒரு மூச்சு தக்தக்கென வெட்டுவார்கள். பின் கொஞ்ச நேரம் ஓய்வு. பின் அடுத்த மூச்சு வெட்டு. பகலெல்லாம் செய்ய வேண்டும். சேறும் சகதியுமாக ஆகி விடுவார்கள். பாத்தி கட்டில் கவனமாக இல்லையெனில், மண்வெட்டி விரலையோ, கணுக்காலையோ பதம் பார்ப்பது போன்று, இதில் கண்களைக் கவனமாக வைத்துக்

கொள்ள வேண்டும். சகதி தெறிக்கும். அண்ணன் இப்படி வேலைக்கெல்லாம் செல்வார். போட்டி போட்டு வேலை செய்வார்கள்.

நடுத்தர வயதானவர் எனில் வயல்களுக்கு நீர் பாய்ச்சும் வேலை எளிது. மிளகாய், காய்கறிகள் போன்றவை பாத்தியாக இருப்பதால், பாத்திக்குள் நீர் பாயும் வரை, கணையைப் பிடித்துக் கொண்டு, கொஞ்ச நேரம் சுகம் அனுபவிக்கலாம். ஒரு பாத்தி நிறைந்தவுடன், அடுத்த பாத்திக்கு நீர் பாய்ச்ச வேண்டும். சில பேர் நன்கு உடல் வருத்தி வேலை செய்யக் கூடியவர்களாக இருப்பார்கள். பாத்திக்குள் நீர் பாயும் நேரத்தில் களையைச் சீவி, வாய்க்கால் வரப்பை சீர் செய்வார்கள். இன்னும் சிலருண்டு. தோட்டக்காரர் பார்க்கும் போது, அதையும் இதையும் வெட்டுவது போல் தெரியும். கவனிக்கவில்லையெனில் ஒன்றரைக் காலில் ஸ்டைலாக சாய்ந்து நிற்பர்.

குப்பை அள்ளுவதும் நல்ல வேலையே. எல்லோருக்கும் குப்பை இருக்குமாதலால், கோடை காலத்தில் மண் அள்ளுவது, குப்பை அள்ளுவது நடக்கும். பிஞ்சைகளில் குமி குமியாகக் கொட்டுவார்கள். பின் அதை மண்வெட்டி வைத்து பரப்புவர். பழக்கமானவர்கள் மிக நேர்த்தியாக வயல் முழுவதும் ஒன்று போல பரப்பி விடுவார்கள்.

மாட்டு வண்டிகளில் குப்பை ஏற்றிச் செல்வதால், வண்டிப் பாதை முழுவதும் குப்பைகள் சிந்திக் கிடக்கும். மழைக் காலங்களில், வண்டிப் பாதைக்கு நடுவிலுள்ள பகுதியில் வளரும் செடிகள் மட்டும், உயரமாக நன்கு செழித்து வளர்ந்திருக்கும். எல்லாம் சிதறிய குப்பையின் மகிமை. கோடை காலங்களில், கண்மாய் மண்ணை அள்ளுவதும் நடக்கும்.

வண்டிகளுக்கு படல் மாட்டியிருப்பார்கள். படலுக்கான பிரம்பு போன்ற கொடி, கரிசல் காடுகளில் கிடைக்கும். சிலர் அவர்களே பின்னிக் கொள்வார்கள். வண்டி சக்கரத்திற்கு மசகு போடுவது கடினமான வேலை. சக்கரத்தைக் கொஞ்சம் கழற்றி இன்னொருவர் பிடித்துக் கொள்ள வேண்டும். இராமலிங்க மாமா, எம்மைக் கூட சில வேலை கூப்பிட்டதுண்டு. விரலால் எடுத்து நன்றாக அப்பிவிடுவார். கன்னங்கரேலென டப்பாவில் வைத்திருப்பார். பின்பு ஆப்புக்கும் தடவ வேண்டும். கையில் ஒட்டினால் எவ்வளவு கழுவினாலும் லேசில் போகாது.

குப்பை அடிப்பதற்கு அரைப்படல் கட்டுவார்கள். வண்டியில் இரும்பு வளையம் வைத்திருப்பார்கள். அதன் உள்ளே சற்று பருமனுள்ள கம்பைச் செருகி அதனோடு படலைக் கட்டுவார்கள். ஊர்களுக்குப் போனாலும் படல் வண்டியில் போகலாம். கம்பு

ஏற்றி வந்தால், முழுப்படல் தேவைப்படும். இப்போது போல் சாக்கில் கம்புக்கதிரைப் போடமாட்டார்கள். கம்பு, சோளம், கேப்பை போன்றவற்றை தட்டையிலிருந்து அறுப்பதற்காக கம்பறக் கத்தி என வளைவான, சிறிய கத்தி வைத்திருப்பார்கள். கம்பு அறுக்கும் கத்திதான் கம்பறக் கத்தியாகச் சுருங்கி விட்டது போலும். கம்பந்தட்டை பெரியதாக வளர்ந்திருந்தால், கதிரை அறுப்பதற்கு சிரமமாக இருக்கும். கதிரை அறுத்து கடகாப் பெட்டியில் போட, அதை வாங்கி வண்டியில் கொட்ட வேண்டும். எம்மைப் போன்றவர்கள், கதிர் வாங்கிப் போடச் செல்வதுண்டு. ஆட்கள் கிடைக்காமல் இருந்தால், இன்றைக்கு கம்மங்கதிறு அறுக்க ஆள் போகுது, நேரத்தோட வந்துடனும் என மாமா சொல்லி விட்டுச் செல்வார்.

பருத்திக் காடுகளில் திணை, குதிரைவாலியும் ஊடு பயிராகப் போட்டிருப்பார்கள். திணை சில நேரங்களில் சடை சடையாகப் பிடித்து விடும். தட்டை தாங்காமல் தலை சாய்ந்து தொங்கும். மயிர் போன்ற பெரிய பெரிய சுனை முடிகளும் இருக்கும். குதிரை வாலி கொஞ்சம் சின்னதாக இருக்கும். திணையைத் திரித்து, கருப்பட்டி சேர்த்துக் கொடுப்பார்கள். சுவை அற்புதமாக இருக்கும். குதிரைவாலியில் சோறாக்குவார்கள்.

கரிசல் காடுகளில் கிடைக்கும் மிதுக்கங்காய் எல்லோருக்கும் மிகவும் பிடித்தமானது. பழமாகக் கிடைத்தால் இன்னும் சிறப்பு. கொடிகளில் காய்க்கும். தோடு போன்று மஞ்சளாகப் பூத்திருக்கும். சில காய்கள் கசக்கும். கொஞ்சமாக நடுவில் கடித்துப் பார்த்து, கசக்கவில்லை என்றாலே சாப்பிட வேண்டும். சிறுவர்கள் காட்டுக்குப் போனால் மிதுக்கங்காய் தேடித் திரிவதே முதல் வேலையாகப் பலரும் வைத்திருப்பார்கள். கம்பு, சோளக்காட்டில் களையெடுக்க மாட்டார்கள் என்பதால் அதிகமாகப் பிடுங்கலாம். பருத்திக் காடுகளில் களையெடுக்கும் போதே அங்கொன்றும் இங்கொன்றுமாக விடச் சொல்வார்கள். நிறையச் செடிகள் விட்டால் பருத்திக் செடிகளை நசுக்கி விடும். படர்ந்து போய்க் கொண்டே இருக்கும்.

மிதுக்கங்காய்களைப் பிடுங்கி வந்து, காயப் போட்டு பலரும் வத்தல் செய்து கொள்வார்கள். ஒரு சிலர் வயல் முழுவதும் மிதுக்கங்செடி போட்டு காவல் இருப்பார்கள். காய வைத்து நல்ல விலைக்கு விற்று விடுவார்கள். வத்தலை எண்ணெயில் போட்டு வறுத்துக் கொடுப்பார்கள். கஞ்சிக்கு நன்றாக இருக்கும். இதோடு மிளகாய் வற்றலும் சேர்த்து வறுப்பதுண்டு.

எமக்கு வெண்டைக்காய் வற்றல்தான் மிகவும் பிடிக்கும். பழைய கஞ்சிக்கு சுவை கூட்டும். வெண்டைக்காய் குறைவான விலையாக இருக்கும் போது வாங்கி, சிறு சிறு துண்டாக்கி காயப் போடுவார்கள். சீனியார வத்தலும் எல்லோர் வீடுகளிலும் இருக்கும். சீனியாரக்காய் மிகவும் விலை குறைவு. அப்படியே அவித்து காய வைத்துக் கொள்ளலாம். காலையில், மிதுக்கை, சீனியாரக்கா, வெண்டை, நீள மிளகாய் சேர்த்துப் போட்டு, வறுத்து வைத்து வீடடுப் போவார்கள். அவர்கள் வைத்துப் போவது, காலை மற்றும் மதியக் கஞ்சிக்கு. ஆனால் காலையிலேயே வெறும் வயிற்றுக்குள்ளேயே எல்லா வத்தல்களும் சென்று விடும். மிளகாயை உப்பில் ஊற வைத்து வற்றல் செய்வார்கள். அவ்வளவு காரமாக இருக்காது. ஒன்றைக் கடித்தாலே போதும், சுள்ளென்று கஞ்சி இறங்கி விடும்.

ஊசிப்பயிறு எனும் மின்மினிக்காய் சிறுவர்களுக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. பாசிப் பயிறை விட சற்று சிறியதாக இருக்கும். ருசிக்கவும் செய்யும். மழைக்காலத்தில் காடுகளில் ஆங்காங்கே நிறைய காய்த்திருக்கும். கால்சட்டைப் பைய் நிறையப் பிடுங்கி வைத்து தின்று திரிவது வெகு சாதாரணம். மாடுகள் மேய்ந்து திரியும் போது, சிறுவர்கள் ஊசிப்பயிறு மேய்வோம். கரிசல் காட்டு ஊசிப்பயிற்றைக் காட்டிலும் செவல்காட்டுப் பயிறு இன்னும் கூடுதல் ருசியில் இருக்கும்.

விதைப்பிற்குப்பின் களையெடுக்கும் வேலை ஆரம்பமாகும். காடுகள் அதிகமிருக்கும் வீட்டு ஆண்கள், களைக்கு வர மாட்டார்கள். வண்டி மாட்டுக் காரர்களுக்கு ஓய்வு கிடைக்கும். சிலர் புல்லறுத்து வண்டியில் ஏற்றிக் கொண்டு வருவார்கள். மாடுகளுக்கு லாடம் கட்டுபவர் ரெட்டியபட்டியிலிருந்து வருவார். மாடுகளைக் கீழே படுக்க வைக்க, பெரும்பாடு பட வேண்டியதிருக்கும். லாடம் கட்டி கொம்பு சீவி விடுவார். கீழே விழுத்தாட்டிய பயத்தில் மாடுகள் மிரள மிரள நின்று கொண்டிருக்கும்.

ஆடுகளுக்கு காயடிப்பதைப் பார்க்கச் சகிக்காது. கத்து கத்தென்று கத்தி ஊரைக் கூட்டும். இடுக்கி போன்ற கம்புக்குள் விதைப் பையை வைத்து நசுக்குவார்கள். இரண்டு பேர், ஆட்டை திமிராமல் பிடித்துக் கொள்வார்கள். விதைப்பை பெரியதாக வீங்கி விடும். அவ்வப்போது அதன் மீது தண்ணீர் அடிக்க வேண்டும். இரையெடுக்காமல் நின்று கொண்டிருக்கும். காயடிக்காத சில ஆடுகள் ஆட்டு மந்தைகளில் பண்ணும் அட்டகாசம் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

ஆடு வளர்ப்பவர்கள் ஒன்றிரண்டு கிடாய்களை இப்படி இனப் பெருக்கத்திற்காக வளர்ப்பார்கள். சில செம்மறியாட்டுக் கிடாய்களின் கொம்புகள் பெரியதாக வளர்ந்திருக்கும். ஆடுகள் மந்தையாகப் போகும்போது பார்க்கவே அழகாக இருக்கும். ஆடுகளும் ஆட்டுக்காரர்களும் போடும் சத்தம் அதை விட அருமை.

கதிரறுப்புக்கு ஆண், பெண் இரண்டு பேரும் தேவைப்படும். மாடுகளுக்கு கூளம் வேண்டும் என்பதற்காக தூர் ஓட்டி அறுப்பார்கள். பெரிய கட்டுக்களாகக் கட்டுவார்கள். கட்டுவதற்கு சோளத் தட்டையைப் பயன்படுத்துவதுண்டு. நான்கைந்து சோளத் தட்டையை ஒன்றாக்கிக் கொள்வார்கள். இப்படி இரண்டு தட்டைகளையும் முடிந்து கொண்டால் கட்டுவதற்கு போதுமானதாக இருக்கும். களம் பக்கத்திலேயே இருந்தால் இரு சோளத் தட்டை போட்டு பெரிய கட்டாகக் கட்டுவதுண்டு.

நெல் கட்டுச் சுமந்தவர்கள், மண் சுமந்து திரிந்தும் யாம் பார்த்திருக்கிறோம். கஞ்சம்பட்டிக் கண்மாய், பரளச்சிக் கண்மாய் என பல கண்மாய்கள் வெட்டினார்கள். ஊர் கண்மாய்களை ஆழப்படுத்துவதும் நடந்தது. கிணறு வெட்டு மிகக் கடினமான பணி என்பதால் ஆண்கள் மட்டும் செய்வார்கள்.

எமது சிறு வயதில், தெருவிலிருந்து பலரும் சிப்பி எடுக்கும் வேலைக்குச் சென்றார்கள். தூத்துக்குடிக்கு அருகே எனச் சொல்வார்கள். சிப்பி கிடைக்கும் விதத்தை ஆசைத்தம்பி போன்றவர்கள் வந்து கதைகதையாகச் சொல்வார்கள். அங்கேயே மூட்டம் போட்டு, சுண்ணாம்பாக்கி விடுவார்களாம். இவர்கள் இப்படிச் சிப்பி எடுத்துத் திரிந்த பாண்டியர்களின் கொற்கைத் துறைமுகம் இருந்த பகுதியில், முதுநிலை படிக்கும்போது, யாம் மீன் வாங்கித் திரிந்தது அற்புதமான ஒற்றுமை. அங்கே தற்போது பல கிலோ மீட்டர் தூரத்திற்கு கடல் நீர் உள்வாங்கி விட்டது.

கோடை காலத்திற்கு இருக்கவே இருக்கிறது விறகு வெட்டும் வேலை. ஊரில் விறகு வெட்டு இல்லாதபோது, அடுத்த ஊர்களுக்குச் செல்வார்கள். இன்னும் சிலர், வெளியூர் சென்று, அங்கேயே தங்கி, குச்சி வெட்டுவதும் உண்டு. ஆண்களே சமைத்துக் கொள்ள வேண்டும்.

சமீப காலத்தில்தான் இந்த கருவச் செடி விதைகளைத் தூவினார்களாம். இன்று எங்கள் ஊர் பகுதிகளில், எங்கெங்கு காணினும் இதுவே வளருகிறது. வறட்சியைத் தாங்குவதாக நினைத்து வெளிநாட்டிலிருந்து கொண்டு வந்தது, இன்று அதிகமான தண்ணீரை உறிஞ்சுவதாகச் சொல்லப்படுகிறது. எத்தனை

வெட்டினாலும் மறுபடியும் தழைத்து விடும். இந்த முள் செடி வந்தபின், செருப்புப் போடாமல் காட்டிற்குப் போகவே முடியாதென்ற நிலையும் வந்து விட்டது.

இதே கருவமரம் பலருக்கு வேலையும், சிலருக்கு லாபத்தையும் கொடுக்கத் தவறவில்லை. மூட்டம் போட்டு சிலர் நல்ல காசு பார்க்கிறார்கள். நிலம் வைத்திருப்பவர்களுக்கு இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நையா பைசா செலவில்லாமல் வருமானம் தருவதாகவும் இந்தச் செடிகள் உள்ளன. செல்லவடிவுச் சித்தப்பா மூட்டம் போடுவதில் சமர்த்தர். அவரும் சித்தியும் மூட்டத்திலேயே இருப்பார்கள்.

பெரும்பாலும் குச்சிகளை மட்டுமே வெட்டுவார்கள். பிஞ்சை சேர்ப்பவர்கள் தூரோடும் பெயர்க்கச் சொல்வார்கள். முன்பு தூரைத் தோண்டுவதற்குச் சிரமம். இன்றோ இயந்திரம் மூலம் எளிதாகத் தோண்டி விடலாம். முள் கொப்புகளை அறுவுவதற்கு கம்புக் கத்தி வைத்திருப்பார்கள். ஒருவர் கொப்புகளை வெட்டி விட மற்றவர்கள் ஓரளவிற்கு பருமனுள்ள குச்சிகளை வெட்டி சிறு கணுக்களாக துண்டாக்கிப் போடுவார்கள்.

வெட்டும் போது மிகவும் கவனமாக இருக்கவேண்டும். அருவாள் கனமாக இருக்கும். கொஞ்சம் கவனம் பிசகினாலும், காலைப் பதம் பார்த்து விடும். காயம் பட்ட பலரையும் யாம் பார்த்திருக்கிறோம். முள் குத்தாமலும் கவனமாக இருக்க வேண்டும். அன்று பலரும் முள் வாங்கி வைத்திருப்பார்கள். செருப்பணிந்து நடப்பது மிகவும் அரிதென்பதால் பலருக்கும் முள் குத்தி விடும். முள்ளெடுப்பதை மெனக்கெட்டு வேலை போல் செய்வார்கள்.

அம்மாவுக்கு முள்ளெடுப்பது சிரமமான காரியம். எம் கண்ணுக்கு ஒன்றுமே தெரியாது. விரலால் தடவிப் பார்த்து இங்கிருக்கில்லே எனக் காட்டுவார். ஊக்கை ஆழமாகக் குத்தினால் வலிக்கிறது என்பார். யாம் வலிக்காமல் முள்ளெடுக்கிறோம் எனப் பலரும் பாராட்டுவார்கள். யாம் முள்ளை நேராகக் குத்தி எடுக்காமல், பக்கத்து இடங்களிலுள்ள தோலை கொஞ்சம் கொஞ்சமாக நீக்கி முள்ளைத் தெளிவாக அடையாளம் கண்டு ஒரே குத்தில் தூக்கிவிடுவோம். எடுத்த இத்தினூண்டு முள்ளை கையில் வைத்துக் கொண்டு உற்று உற்றுப் பார்ப்பார்கள். இது தானா இந்தப்பாடு படுத்திச்சு என ஆச்சரியமடைவார்கள். சில நேரங்களில் மற்றவர்களால் கைவிடப்பட்ட நிலையில் எம்மிடம் வருபவர்களும் உண்டு. பலரும் தோலையும் சதையையும் குத்திக் கிளறியிருப்பார்கள். நாள்பட்ட நிலையில் முள் மக்கி

கருப்பாக மாறியிருக்கும். மற்ற முட்களை எளிதாக எடுத்து விடலாம். குரண்டி முள்தான் தலைவலியைக் கொடுக்கும். சதைபோலேயே இருக்கும். மிகச் சிறியதாக வேறு இருப்பதால் அடையாளம் காண்பது எளிதான காரியமல்ல. ஏப்பே இந்தெடத்துல சுருக்சுருக்னு குத்துதுப்பே என வருபவர்களை வெறுங்கையோடு அனுப்ப முடியுமா. பாலம் பாலமாக வறண்ட கரிசல்காடு போல் வெடித்துக் கிடக்கும் கால்களில் முன்ளெடுப்பதற்கு உலக மகா பொறுமை வேண்டும். அந்தெடந்தாப்பே அந்தெடந்தாப்பே என சொல்லிக் கொண்டே குத்துக்குத் தாங்காமல் காலை வெக்கு வெக்கென இழுப்பார்கள். நாம் காலை வேறு வலுக்கட்டாயமாக இழுத்து பிடித்துக்கொள்ள வேண்டும். அவர்கள் கால்களை நமது குத்துக்கால் வைத்த முழங்கால் மீதும் போட்டுக் கொள்ள வேண்டியதிருக்கும். முள்ளெடுக்கிற சோலீயா நடக்குது என வேடிக்கை பார்க்க வருபவர்கள் அவர்கள் பங்கிற்கு கால் கைகளை நீட்டுவார்கள். கையோடு முள்வாங்கி கொண்டு வருபவர்களும் உண்டு.

எமது தந்தை மூட்டம் போடும் வேலையும் பார்த்தார். யாம் அப்போது மிகச் சிறுவனாக இருந்தோம். சுடுகாட்டுக்குத் தெற்கே ஓடை அருகே மூட்டம் இருந்தது. அம்மாவும் அங்கே இருந்து கொள்வார். மாலையில் சுடுகாட்டு வழியாக சாப்பாடு எடுத்துச் செல்லும்போது, மற்ற சிறுவர்களையும் அழைத்துக் கொள்வோம்.

மூட்டத்தில் விறகுக் கட்டைகளை மிக அழகாக அரைக்கோள வடிவத்தில் அடுக்கியிருப்பார்கள். ஒரு சிலர் பெரிய மூட்டமாகப் போடுவார்கள். விறகு மேலே ஆவாரைச் செடி, மஞ்சனத்திச் செடி போன்றவைகளை அடுக்கி, அதற்கும் மேல் சேற்று மண்ணைச் கொட்டி மூடிவிடுவார்கள். மண் ஒரே சீராக பூசி மெழுகினாற் போல் இருக்கும். கீழே சில இடங்களில் நெருப்பு வைக்க துவாரமும் விட்டு வைப்பார்கள்.

நெருப்பு வைத்தவுடன் உள்ளே காற்று இல்லாததால் தீயாக எரியாது. கனலாக பற்றிக் கொள்ளும். சிறு குச்சிகளாக இருந்தால் வெந்து சாம்பலாகி விடும். கரியாக மாறாது. தூர்கள் கரியாவதற்கு பல நாட்கள் மூட்டம் தேவைப்படும். அவ்வப்போது மூட்டம் மேலே தண்ணீர் தெளிக்க வேண்டும். ஓரிரு நாட்களில் எல்லா விறகும் வெந்து கரிக்கட்டைகளாக மாறியிருக்கும். பெரிய மூட்டம் வேக சில நாட்களாவது தேவைப்படும். சமயங்களில், மூட்டத்தில் ஓட்டை விழுந்து, புகை மளமளவென வெளிவரும். பதறியடித்துக் கொண்டு அதை அடைப்பார்கள். சிறிது

கவனக் குறைவாக இருந்தாலும் நெருப்பு வேகமாகப் பரவி கட்டைகள் எரிந்து சாம்பலாகி விடும்.

பெரும்பாலும், காலையில்தான் மூட்டம் பிரிப்பார்கள். வெளிவரும் புகை குறைவதை வைத்து விறகு வெந்துவிட்டதைக் கணிப்பார்கள் போல. அனேகமாக விறகுகள் அனைத்தும் கரியாகி இருக்கும். பெரிய விறகுகள் கொஞ்சம் எரியாமல் இருப்பதுண்டு. கரியை அள்ளி சாக்கு மூட்டைகளில் கட்டிவிட்டு எரியாதவற்றை வைத்து மறுபடியும் ஒரு சிறு மூட்டம் போடுவார்கள்.

அம்மா சமைக்கும் அனைத்துமே நன்றாக இருக்கும். எமது அம்மாவிற்கு மட்டும் படிக்கும் வசதி இருந்திருக்குமேயானால் உலகமே வியந்து போற்றும் பெண்மணியாக மிளிர்ந்திருப்பார்கள். நல்ல புத்திக் கூர்மையுள்ளவர். கொஞ்சம் கோபம் வரும் என்றாலும் சிறந்த குணமுள்ளவர். மிகுந்த இரக்க சிந்தனையுடையவர். எம்மீது மிகுந்த அன்பு கொண்டவர். யாம்தான் அன்பு செலுத்தத் தவறி விட்டோம். திருமணத்திற்குப்பின் அடிக்கடி ஊருக்குச் சென்று கவனித்திருக்க வேண்டும். எம்மை மன்னிப்பாராக.

ஆரம்ப வயதுகளில் உணவுக்குக் கஷ்டம் இருந்த போதிலும், பின் வந்த வருடங்களில் சாப்பாட்டுக்கு சிரமம் வந்ததில்லை. எல்லோர் வீடுகளிலும், கிராமத்தில் கிடைக்கும் காய்கறிகள்தான் வழக்கமாக இருக்கும். சாம்பாரைக் காட்டிலும் எமக்கு புளிக்குழம்பே அதிகம் பிடிக்கும். பருப்பு உருண்டைக் குழம்பு வைத்தால் எம்மைக் கெஞ்ச வேண்டும். எங்கள் வீட்டில் கத்திரிக்காயை முழுதாக நீளவாக்கில் வெட்டி காம்போடு போட்டு குழம்பு வைப்பார்கள். நன்றாக இருக்கும். எதற்காகவாவது யாம் இரவு சாப்பிடாமல் படுத்து விட்டால், எமது அப்பா எழுப்பி சாப்பிட வைக்காமல் விட மாட்டார். இரவு ஒருபோதும் சாப்பிடாமல் தூங்க முடியாது. பகலெல்லாம் விளையாடித் திரிந்துவிட்டு நேரத்தில் தூங்கி விடுவோம். சில நேரங்களில் அக்காவும் நாற்று நடப் போய்விட்டு இருட்டும் போதுதான் வருவார்கள். பசி தாங்காமல் ஆலாய்ப் பறப்போம். வடிதண்ணியில் கொஞ்சம் சோறை அள்ளிப் போட்டுக் குடித்து விடுவோம். வடிதண்ணிதான் அன்று எங்களது தேநீர். லோட்டாக்களில் கொஞ்சம் பருக்கையையும் போட்டுக் கொண்டு மழைக்காலங்களில் குடிப்பது சுகமான அனுபவம்.

கர்ணக்கிழங்குக் குழம்பும் செமத்தியாக வைப்பார்கள். குழம்பு வைத்து அடுத்த நாள் சாப்பிட்டால் சுவை கூடும். அன்றே சாப்பிட்டால் நாக்கில் அரிக்கும் என

சாப்பிடமாட்டோம். எமக்கு இன்றும் விரும்பமான ஒரு காய் அதலக்காய். கரிசல் காடுகளில் நிறையக் கிடைக்கும். தக்காளி ரசத்திற்கு அதலக்காய் எனில், யாம் மூன்றாம் சோறு வாங்குவதற்குத் தயங்க மாட்டோம். அக்கா வைக்கும் தக்காளி ரசமும் எமது முதலாவது விருப்பத் தேர்வு. பல இரவுகளில் வீட்டில் ரசமும் கத்தரிக்காய் பொரியலும் கிடைக்கும். தக்காளியைக் கடைந்தும் செய்வார்கள். குழம்பில் கடுகு அதிகம் இருந்தால் எமக்குப் பிடிக்காது.

வாழைக்காய் கூட்டும் அதிகம் இடம் பெறும். கத்தரிக்காயோடு தட்டாம்பயிறு சேர்த்து குழம்பு செய்வதுண்டு. தட்டாம்பயிறு அவிக்கும்போதே பாதியை வாங்கித் தின்று விடுவோம். தண்ணீர் எடுத்து வருவதற்குள் மீதியும் வயிற்றுக்குள் சென்றிருக்கும். அரிகரண்டியை வைத்து நைசாக எடுத்து விடுவோம். இரவு குழம்புச் சட்டிக்குள் தேடுவார்கள். யாம்தான் ஏற்கனவே முடித்து விட்டோமே. எம்மிடம் கேட்பார்கள். விளையாடப் போய்விட்டு இப்போதான் வந்தோம் என அடித்துச் சொல்லி விடுவோம். மொச்சைப்பயிறு சாறுக்கு இன்றைய சூப்பெல்லாம் ஒன்றுமே இல்லை. சூடாகக் கிண்ணத்தில் ஊற்றிக் கொடுப்பார்கள்.

கீரைகளில் மகிழிக்கீரையே அதிகம் வைப்பார்கள். களையெடுக்கும்போதே வயலில் இருக்கும் கீரையைக் கிள்ளி மடியில் வைத்துக் கொள்வார்கள். பெரும்பாலான வீடுகளில் ஆபத்பாந்தவன் இந்த மகிழிக்கீரை என்ற புளிச்சிக்கீரையே. புளி போட்டு அவித்து கடைந்தால் கீரை தயார். சோறு மேல் ஊற்றி பிசைந்து சாப்பிடுவோம். மீதிக் கீரை காலையிலும் தொடரும். தோட்டங்களில் இருந்து தண்டுக் கீரை வரும். பெரிய இலைகளாக இருக்கும். பூச்சி துளைத்த ஓட்டைகளைப் பார்த்தால் யாம் சாப்பிட மாட்டோம். யாமே கீரை ஆய்ந்தால் பாதியைக் கழித்து விடுவோம். ஒரு குழம்புதான் எல்லோர் வீடுகளிலும். கூட்டு, பொரியல் என்று தனித் தனியாக வைக்க மாட்டார்கள்.

கரிசல் காடுகளில் வேலை முடிந்து வரும்போது, கரிசல்கீரை கொண்டு வருவார்கள். பல்வேறு செடிகளின் இலைகள் கலந்து இருக்கும். மொசுமொசுக் கீரையின் இலை அதிகமிருக்கும். மொசுமொசுச் செடியில் இரண்டு மூன்று சிறிய காய்கள் சேர்ந்திருக்கும். காயைத் திங்கலாம். மல்லிச் செடிகளைப் பிடுங்கி வந்து துவையல் செய்வது மிகமிகச் சுவையாகவும், மணமாகவும் இருக்கும். மல்லிக் களையின்போது செடிகள் வெட்டுப்பட்டு விடும். அவற்றையும் எடுத்துக் கொள்வார்கள்.

சிறுவயதில் ஒருமுறை அக்காவும் யாமும் மாமா வீட்டுப் பாதைப் பிஞ்சை வழியாக விறகுக்குப் போய்க் கொண்டிருந்தோம். வழியில் பெரிய பாம்பைப் பார்த்து, அலறிக் கத்திக் கொண்டு ஓடை வரை நிற்காமல் ஓடி வந்தோம். பாம்பு முட்டை போட்டு அடைகாத்திருந்ததாகவும், எங்களை நோக்கி வேகமாக வந்ததாகவும் அக்கா சொன்னார். அதன் பிறகு யாம் கரிசல் காட்டுப் பக்கமே தலை காட்டாமல் சில மாதங்கள் வரை இருந்தோம். பின்னர் மிதுக்கங்காய், இலந்தைப்பழம் பறிக்க மெதுவாகப் போக ஆரம்பித்து விட்டோம். எப்போது அந்தப் பிஞ்சை வழியாகப் போனாலும், அந்தப் பாம்பு ஓட்டம் மனதை விட்டு அகலாது.

வெங்காயம் மிளகாய் போட்டு வாளைக்கருவாட்டுத் துண்டு வதக்கிக் கொடுப்பார்கள். வெங்காயம் நல்ல மணமாக இருக்கும். மதியக் கஞ்சிக்கு தொட்டுச் கொள்வதற்கு ஏற்றது. வடி தண்ணீர் ஊற்றிய கஞ்சி புளிக்காமல் நன்றாகவே இருக்கும். சூடப் பொடி ருசியைக் சொல்லவும் வேண்டுமோ,

அம்மா போடும் நெல்லிகாய் உறுகாய் சுவையாக இருக்கும். இரண்டு மூன்று நாட்களிலேயே ஊறுகாய் சட்டியை கழுவி வைக்க நேரிடும். நொறுக்குத் தீனிபோல் ஊறுகாயை அள்ளித் தின்றுவிடுவோம். நார்த்தங்காய் ஊறுகாய் பூசனம் பூத்துப்போய் கிடக்கும். ஒருவரும் சீண்டமாட்டார்கள்.

அயிரை மீன் என்றால் எமக்கு அல்வா சாப்பிடுவது மாதிரி. அது சரி. நாங்கள் எங்கே அந்தக் காலத்தில் அல்வா சாப்பிட்டோம். பார்த்தது கூட இல்லை. மசாலை அரைத்துப் போட்டு அம்மா வைக்கும் மீன்குழம்பு மணமாக இருக்கும். அயிரைகளும் கொஞ்சம் பருவட்டாகவே கண்மாய்களில் கிடைக்கும். கையால் நீரை இறைத்தே பிடித்து விடுவோம். சகதி மண்ணுக்குள் லாவகமாக கைகளைத் துழாவியே அயிரையை அமுக்கி விடுவோம். அக்காவும், யாமும் போனோமென்றால் செம்பு நிறையப் பிடித்து விடுவோம். மேற்குக் கண்மாயில் இப்படி எத்தனையோ முறை அயிரை பிடித்துத் திரிந்திருக்கிறோம். அப்பா பின்னிய வலைகளும் தரமாகவே இருக்கும். சகதியாகக் கிடந்தால், வலை போட்டுப் பிடிப்பது சிரமம். வலை பூராவும் சேறாக வந்து விடும். மீனைப் பிடிக்க சொன்னால், சேறைக் அள்ளிக் கொட்டுறியே எனக் கேலி பேசுவார்கள்.

அப்பா பத்தல் போட்டு மீன் பிடித்து வருவார். பத்தலுக்குப் போனால் அயிரையும் கெழுத்தியும் பெட்டி நிறையக் கொண்டு வருவார்கள். வீட்டில் ஒரு பத்தல் கட்டை வைத்திருந்தோம். கிழக்குக் கண்மாய் நிரம்பும்போது, கண்மாய்

மேற்கில் இருந்த சிறிய ஓடை வழியே நீர் வெளியேறும். இந்த நீர், பெரிய ஓடைக்குச் சென்று சேரும். நீர் போகும் பாதையில் இப்போதிருக்கும் ஆத்தியப்ப நாடார் தோட்டம் அருகே பத்தல் போடுவார்கள். பத்தல் கட்டையை அணைபோல் வைத்து, களிமண்ணால் வழவழவென பூசி வைப்பார்கள். இரண்டு பக்கமும் பானையையும் பதித்து வைப்பார்கள். பத்தல் கட்டை ஓட்டை வழியே தண்ணீர் பீறிட்டுச் செல்லும். துள்ளி விளையாடி வரும் எதிர் மீன்கள், தாவிக் குதித்து பானைக்குள் போய் மொத்தென்று விழுந்து விடும். அதன்பின் எவ்வளவுதான் எம்பிக் குதித்தாலும் பானையை விட்டு வெளியேற முடியாது. சில கில்லாடி மீன்கள் பானைக்குள் போன பின்பும் தப்பித்து ஓடி விடும். காலையில் சென்று மீன்களை அள்ளி வருவார்கள். கெழுறுகள் கொஞ்சம் சிறியதாக இருக்கும். எங்களது பத்தல் கட்டையை வேடிக்கை பார்க்க யாம் பல முறை சென்றிருக்கிறோம்.

பெரிய ஓடைக்குள் தண்ணீர் குறைவாகப் போகும்போது பத்தல் போட்டால் தரமான மீனகள் மாட்டும். பெரிய கண்மாய் நிரம்பினால், மேற்கு மதகு வழியாக நீர் வெளியேறி பெரிய ஓடையின் துணை ஒடைக்கு வரும். அங்கும் பத்தல் இருந்து பார்த்திருக்கிறோம். பத்தல் பானையிலிருந்து மீன்களை அள்ளும்போது கவனமாக அள்ள வேண்டும். இரவில் மீன் தின்ன ஆசைப்பட்டு, தண்ணீர்ப் பாம்பும் சமயங்களில், மீன்களோடு சுருண்டு படுத்திருக்கும். மற்றவர்கள் மீன்களை அள்ளிச் சென்று விடுவார்கள் என இரவெல்லாம் பத்தல் கட்டைக்கு ஆட்கள் காவலுக்குப் போயும் யாம் பார்த்திருக்கிறோம்.

எங்கள் வீடுகளில் தாழித்ததை நினைத்தால் இன்று எமக்கு சிரிப்பும் ஆச்சரியமும் வருகிறது. குழம்புக் கரண்டியில் கொஞ்சம் எண்ணெய் ஊற்றி நெருப்பில் காட்டுவார்கள். தாழிதம் செயவதற்கென்றே தனியாக, கருப்பான கரண்டி இருக்கும். கொஞ்சமாக கடுகு, வெந்தயம், மிளகாய் போட்டு வதக்கி குழம்புச் சட்டியில் ஊற்றிக் கிளறி விடுவார்கள். ஊற்றும் போது சுரீர் என ஒரு சத்தம் வரும். அந்தச் சத்தம் கேட்டால்தான் சிறுவர்களுக்கு உயிரே வரும். அடுத்து சாப்பிடலாமல்லவா.

தாழிக்காமல் குழம்பு ஊற்றிக் கொடுக்குமாறு கேட்டால், எங்கள் வீட்டில் மறுத்து விடுவார்கள். இவ்வளவு நேரம் பொறுத்திட்டேல்ல, இன்னும் கொஞ்ச நேரம் பொறுத்துக்கோ எனப் பதில் வரும். சிலர் குழம்பு வைத்து, வெகுநேரம் கழித்தும் தாழிப்பது வழக்கம். அன்று உணவில் எண்ணெய் சேர்ப்பது அவ்வளவே. அப்பளம்

தவிர்த்து, எதையும் எண்ணெயில் பொரித்து யாம் பார்த்தில்லை. யோசித்துப் பார்த்தால் ஒரு முப்பது வருடங்களுக்குமுன், ஒருவர் கூட குண்டாக இருந்ததில்லை. வீட்டிற்கு வருபவர்களை பசியாறீட்டீங்களா, கொஞ்சம் பசியாறிட்டு போங்க எனச் சொல்வது அழகாக இருக்கும். அதிகமாகப் பசிப்பதை அத்தியப்புடுச்சி வருதே என்பார்கள்.

எங்கள் வீட்டு கோழிக் குழம்பும் சுவையாக இருக்கும். வீடு தவறாமல் கோழிக் கூண்டு வைத்திருப்பார்கள். பொழுதடையும்போது, கோழிகளைச் சரி பார்த்து கூண்டில் அடைக்க வேண்டும். திண்ணையை ஒட்டி, ஒரு மூலையில் கோழிக் கூண்டு கட்டியிருப்பார்கள். சண்டைக் கோழிகளை தனியாக கூடைக்குள் வைப்பதும் உண்டு. வராத கோழிகளை, பக்பக்கென்று கூப்பிட்டு தெருவையே சுற்றி வருவார்கள்.

கோழிகளாகத் திரிவதால், அவற்றின் எச்சத்தில் படாமல் நடக்கவே முடியாது. சேவல்கள் அடிக்கடி முறைத்துக் கொண்டு சண்டை போட்டுத் திரியும். சில சேவல்களின் சண்டையை, செத்துப் போகும் என விலக்கி விடுவதும் நடக்கும். சேவல்களை சாமிக்கு நேர்ந்து விட்டிருப்பார்கள். சில நேரங்களில் கழிச்சல் நோய் வந்து, மொத்தமாகச் செத்ததும் நடந்தது. நோய் வந்தால் தலையைக் குனிந்து கொண்டு, தன்னைத் தானே சுற்றிச்சுற்றி வரும். இறக்கைக்குள் தலையை ஒளித்தும் வைத்துக் கொள்ளும்.

கோழிகளினால் உண்டாகும் பெரியதொரு தொந்தரவு செல். இது பேன்ஈறை விடச் சின்னதாக இருக்கும். உடம்பெல்லாம் ஊறும். கூரை வீடுகளாக இருந்தால் அவ்வளவுதான். மண் சுவர்களின் வெளிப்பக்கம் பூசாமல் விட்டிருக்கும் வீடுகளின் சுவர் முழுக்க ஒட்டியிருக்கும். மருந்தடித்தாலும் ஒழிக்க முடியாது. யார் வீட்டிலும் போய் கொஞ்ச நேரம் கூட உட்கார முடியாது. உடல் முழுக்கப் பரவி விடும். முகத்தில் ஊறினால் அச்சலாத்தியாக வரும். இரவு நேரம் தூங்க முடியாது. வீட்டுச்சுவர், ஆடை அனைத்திலும் ஒட்டியிருக்கும். கோழி இல்லாத வீடுகளிலும், செல் இருக்கும் வீட்டுக்காரர் வருவதன் மூலம் வந்து விடும். முகத்தில் ஊர்வதை ஒருவராலும் சகித்துக் கொள்ள முடியாது. கோழிக் கூண்டில் நெருப்பை காட்டியும் விரட்டுவது நடக்கும். மழைக்காலத்தில் செல்களின் இம்மை உச்சத்தில் இருக்கும். பலருக்கும் சொரிந்து சொரிந்து புண்கள் கூட வருவதுண்டு. பல வீடுகளில் கோழிச் செல்லை ஒழிப்பதற்கென்றே வெள்ளை அடிப்பார்கள். சில நாட்களிலேயே

மறுபடியும் பெருகிவிடும். செல் அரிப்பால் தூக்கம் வராமல் சிரமப்பட்டதற்கு, மின்சாரம் இல்லாததால் தூக்கம் வராதது எவ்வளவோ தேவலை.

பண்டிகை வந்தால், முதல் நாள் இரவே கோழியைப் பிடித்து இறக்கையைப் பின்னி, தனியாகக் கூடையில் அடைத்து வைப்பார்கள். காலையில், கோழியைக் காணாமல் தேடிப் பிடிப்பவர்களும் இருப்பார்கள். சிறுவர்களே பெரும்பாலும் தெகத்திப் பிடிப்போம்.

எங்கள் வீட்டில் தலையைப் பிடித்துக் கொண்டு, கத்தியால் கழுத்தைக் கொஞ்சமாகக் கீறி, கீழே விட்டுவிடுவார்கள். கோழி துடிதுடித்து சாகும். இறகையைப் பிடுங்கி சொளகில் போடுவோம். சிறிய இறகைப் பிடுங்குவதற்கு சிரமமாக இருக்கும். பல இறகுகள், வேரோடு வராமல் முறிந்து விடும். சிறுவர்களுக்கு இறக்கையிலுள்ள இறகைப் பிடுங்கும் வரைத்தான் பொறுமை இருக்கும். நன்றாகக் கழுவி இரண்டுமுறை மஞ்சள் தடவி சுத்தம் பண்ணி வைப்பார்கள். சொளகை திருப்பிப் போட்டு, அதன் மேல் கோழியை வைத்தே எமது அப்பா அறுப்பார். விறகு கட்டையில் வைத்து காலை வெட்டுவார். சில நேரங்களில் அருவாமனையில் வைத்து வெட்டிவிட்டு அம்மாவிடம் பேச்சும் வாங்குவார். குழம்பில் கிடக்கும் கோழித் தலையையும், காலையும் அப்பாவே திங்க வேண்டியிருக்கும். குழம்பில் நல்லெண்ணைய் ஊற்றிக் குடிப்பார். எமக்கெல்லாம் கொமட்டிக் கொண்டு வரும்.

முட்டைக் கோழிகளை நன்றாகக் கவனித்துக் கொள்வார்கள். போடும் முட்டைகளில் பாதியை சாப்பிட்டு விடுவார்கள். ஒற்றைப்படை எண்ணிக்கையில் ஏழு, ஒன்பது என அடை கூட்டி வைப்பதுண்டு. எங்கள் வீட்டுத் திண்ணையின் மூலையில் கோழி அடை காக்கும். இரைக்குக் கூட எழுந்து போகாது. ஒரு ஈயத்தட்டில் தானியங்கள் போட்டிருப்போம். அவசர அவசரமாகத் கொத்திவிட்டு முட்டையில் போய் உட்கார்ந்து கொள்ளும். முட்டைகளை அவ்வப்போது புரட்டியும் போட்டுக் கொள்ளும். ஏதேனும் சத்தம் கேட்டால் கூட சிலுப்பிக் கொண்டு பார்க்கும். குஞ்சி பொரித்துவிட்டாலோ ஒருவரும் அந்தப் பக்கம் போக முடியாது. கொத்துவதற்கு ஒடிவரும். சரியாக அடைகாக்காமல் எப்படியும் ஒன்றிரண்டு கூமுட்டைகள் இருக்கும். சிலர் கூமுட்டைகளையும் சட்டியில் போட்டு வதக்கிச் சாப்பிட்டு விடுவார்கள்.

குஞ்சுகள் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். யாம் வலுக்கட்டாயமாக கைகளில் பிடித்துக் கொள்வோம். கீழே விடு, அமுக்கிக் கொன்னுடாத என வீட்டில் பதறுவார்கள். கோழியிடம் கொத்து வாங்கியும் இருக்கிறோம். குஞ்சுகள் கோழி பின்னாடியே திரியும். கிருஷ்ணசாமி வட்டமடிப்பது தெரிந்தால் தாய்க்கோழி உஷாராகி விடும். தாய் கோழியை விட்டு பயத்தில் தனியாக ஓடும் குஞ்சை கண்மூடித் திறப்பதற்குள் தூக்கி கொண்டு பறந்து விடும். சில கோழிகள், கொஞ்ச தூரம் பறந்தும் தாக்கும். பருந்து தூக்கிச் செல்லும்போது சில குஞ்சுகளை கீழே போடுவதும் நடக்கும். இப்படிக் கிடைக்கும் குஞ்சுகளை மிகவும் செல்லமாக வளர்ப்பார்கள்.

ஆட்டுக்கறிக்கு ஆள் சேர்ப்பார்கள். எத்தன வீச வேணும் எனக் கேட்பார்கள். கோடாங்கி முத்துத் தேவர் ஆடு போடுவார். ஆத்தியப்ப நாடார் ஆட்டை அறுத்து தோலை வாங்கிக் கொள்வார். இராஜகோபாலபுரத்திலிருந்தும் ஒருவர் அறுத்துக் கொடுப்பார். இரத்தத்தையும் பிடித்துக் கொள்வார்கள். இவ்வாறு பண்டிகை தவிர, ஆமணக்கைத் தின்று விட்டது, அரிசியைத் தின்று விட்டது எனச் சொல்லி சாகக் கிடக்கும் ஆட்டை அறுத்ததாகவும் கறி கிடைக்கும். செத்த ஆட்டுக் கறி எனச் சொல்லி யாம் சாப்பிட மாட்டோம்.

எங்கள் வீட்டில் வைக்கும் சுடான புட்டுக்கு இணை எதுவும் இருக்க முடியாது. அடிக்கடி கேப்பைப் புட்டு செய்வார்கள். யாம் தேங்காயைத் துருவி வைத்துக் கொண்டு தயாராக இருப்போம். கருப்பட்டியையும் துணைக்கு வைத்திருப்போம். ஆவியில் வேக வைத்து இறக்கியவுடன் கருப்பட்டித்தூளைப் போட்டு நன்றாகக் கிளறிவிட்டு கொஞ்சமாக தேங்காய் துருவலையும் நல்லெண்ணெய்யும் சேர்ப்பார்கள். வாசனையோடு ருசியும் தூக்கலாக இருக்கும். யாமெல்லாம் ஒரு பிடி பிடித்து விடுவோம். அரிசிப் புட்டும் செய்வார்கள். ஆனாலும் கேப்பை புட்டின் சுவை வராது.

இனிப்பு உருண்டையும் அவ்வப்போது சாப்பிடலாம். அரிசி மாவை இடித்து சிறு சிறு உருண்டையாகப் பிடிப்பார்கள். உருண்டை பிடிப்பதற்கு யாம் ஆவலாய் இருப்போம். உருண்டையை அவித்து, இனிப்புப் பாகு செய்து அதில் போட்டுக் கொடுப்பார்கள். இந்த சக்கரைப் பாகு எமக்கு மிகவும் பிடிக்கும். அதை மட்டும் குடித்து விட்டு, மறுபடியும் மறுபடியும் கேட்டுத் திரிவோம்.

எங்கள் வீட்டின் மின்சாரப் பெட்டியில், குட்டி வௌவால் இருந்து யாம் பார்த்திருக்கிறோம். வீட்டு நிலைக்கு மேலே சுவற்றில் ஆணியில் புகைப்படங்கள் சாய்வாக மாட்டப்பட்டிருக்கும். அந்த இடைவெளிக்குள்ளும் குட்டி வௌவால்கள் இருக்கும். திருமலைபுரம் முனியப்பசாமி கோவில் மரங்களில், பெரிய வௌவால்கள் தொங்கிக் கொண்டிருந்ததும் நினைவிருக்கிறது.

முன்பு, கரிச்சான் குருவிகள் எங்கு பார்த்தாலும் உட்கார்ந்திருக்கும். மினசார கம்பிகளில் வரிசையாக அமர்ந்திருக்கும். இன்று மிகவும் அரிதாகி விட்டன. குயில்களும் அதிகமிருந்தன. புறாக்கள் இணைகளாகப் பறக்கும். செம்பூத்தைப் பார்த்தால் சிறுவர்கள் குஷியாகி விடுவார்கள். இது அளவில் பெரியதான பறவை. குரலெழுப்பவதும் சத்தமாக, இனிமையாக இருக்கும். ஊரில் சிட்டுக் குருவி, வால் குருவிகளுக்கும் குறைவிருக்காது. சிட்டுக் குருவிகள் தான் பாவம். முற்றங்களில் கூட பயமில்லாமல் உட்கார்ந்து தானியங்களைத் தின்று கொண்டிருந்தவை இன்று அரிதாகி விட்டன. அன்றைக்கு வீடு தவறாமல் தானியங்களைக் காயப் போட்டிருப்பார்கள். ஊர் முழுக்கவே தானியங்கள் சிதறிக் கிடக்கும். தையல் சிட்டுகள் கூட்டமாகத் திரியும்.

ஊர்க்குருவிகள் இன்றும் இருக்கின்றன. எண்ணிக்கையில் கொஞ்சம் குறைந்து விட்டதாகத் தெரிகிறது. இவை இரவில் எங்கு போய் அடையும் என்பது அன்றிலிருந்து இன்று வரை ஆச்சரியமே. முன்பு வீட்டு பொந்துகளில் கூட கிளிகள் இருந்தன. ஓடை நெடுகிலும் இருந்த பனைமரங்களில் கூட்டங்கூட்டமாக கிளிகள் உட்கார்ந்தும் பறந்தும் திரிந்தன. இன்றோ மரங்களும் இல்லை. கிளிகளும் இல்லை. தக்காளி, மிளகாய்ப் பழங்களை தூக்கிக் கொண்டு பறப்பதை, மறுபடியும் பார்ப்போமா எனத் தெரியவில்லை.

நெல் வயல்கள் முழுதும் கொக்குகளால் நிறைந்திருக்கும். குருட்டுக் கொக்கு என்பார்கள். ஆனால் கண் நன்றாகத் தெரியும். பிடிக்கவே முடியாது. வெள்ளைச் கொக்குகளைப் பார்த்து எல்லோருக்கும் காட்டித் திரிந்தோம். சில நேரங்களில் எல்லாக் கொக்குகளும் ஒரே நேரத்தில் சத்தம் போடும். மொத்தமாகப் பறந்து போய் பக்கத்து வயலில் அனைத்தும் இறங்கும். பார்க்கும் போது மனதிற்கு மகிழ்ச்சி தாங்காது.

நாரையைப் பார்த்தால் மகிழ்ச்சி கூடும். எவ்வளவு பெரிய றெக்கை என்று மனம் குதூகலமடையும். பெரிய கண்மாயில் செந்நாரைகள் சுற்றித் திரியும். பெரிய

அலகும், பறக்கும் போது விரியும் இறக்கையும் பார்த்துக் கொண்டே இருக்கலாம். மனம் சலிக்காது. பெரிய நாரையை கூழைக்கிடா என்பார்கள்.

அன்றில் பறவைகள் கூட்டம் கூட்டமாகப் பறந்து திரியும். கண்மாய்களின் நீர் ஓரங்களில் அதிகமாகப் பார்க்கலாம். ஒன்றை ஒன்று விரட்டிக் கொண்டும, கொத்திக் கொண்டும் இணைபிரியாமல் சுற்றி வரும். செடிகளுக்குள் இருந்து கௌதாரிகள் ஓடும். இவையும் மயில் போன்றே சிறிது தூரம் ஓடி, பின் பறக்கும். கௌதாரி முட்டைகள் சிறியதாக இருக்கும். எடுத்துக் குடித்து விடுவார்கள். மரக்கொத்தியின் நிறம் மனதை மயக்குவதாக இருக்கும். ஓடைப்பாதையில் போனால் பனைமரங்களில் கொத்திக் கொண்டிருக்கும். அதுபோலவே மீன் கொத்திப் பறவைகளும் அழகான சிறகுகளுடன் கண்மாய்களை வலம் வரும்.

எத்தனை சிறுவர்கள் சேர்ந்து பிடித்தாலும் நீர்முழ்கிப் பறவையைப் பிடிக்கவே முடியாது. மேற்குக் கண்மாயில் குளிக்கப் போகும் போது, வழியில் குமட்டிக்காய் பிடுங்கிச் சென்று விடுவோம். இதை நீருக்குள் ஒருவர் மேல் ஒருவர் எறிந்து விளையாடுவதுண்டு. அனேகமாக எல்லோர் கைகளிலும் இந்தக் காய் இருக்கும். விளையாட்டு மாறி, நீர்ப்பறவையை இன்றைக்காவது பிடித்து விடலாம் என மாற்றி மாற்றி எறிவோம். அனைவருக்கும் தப்பி விடும். ஓரிடத்தில் முங்கினால் மறுபடியும் எங்கே எந்திரிக்கும் எனக் கணிக்கவே முடியாது. தூரமாகப் போய் எழுந்திரிக்கும் என நினைத்து அங்கே நீந்திப் போனால் பக்கத்திலேயே தலையைத் தூக்கிப் பார்க்கும். களைப்படைந்து விட்டது, இனி பிடித்து விடலாம் என நினைத்து தீவிரமாக முயற்சிக்கும் போது பறந்து விடும். அத்தனை சிறுவர்களுக்கும் ஏமாற்றமாகப் போய்விடும்.

எமது சிறுவயதில் ஆடுதொடாச் செடிகள் இருந்ததில்லை. கஞ்சப்பட்டிக் கண்மாய்க்குத்தான் முதன் முதலில் வந்தது. சில வருடங்களிலேயே, மளமளவென அனைத்துக் கண்மாய்களுக்கும் வந்து விட்டது. மேற்குக் கண்மாயின் மேற்குப் பக்கமாக பெரிய தூருடன் இவை வளர்ந்திருக்கும். ஆளுக்கொரு கட்டையான குச்சியை ஒடித்துக் கொண்டும், நீர்ப்பறவையை அடித்துத் திரிந்திருக்கோம். பறவையைப் பயங்காட்டுவதற்காக தண்ணீரில் ஓங்கி சொத் சொத் என அடிப்போம். பயந்து உள்ளே போவது வெகு நேரம் கழித்து, மேலே தலையை மட்டும் மெதுவாகத் தூக்கி எட்டிப் பார்க்கும். அங்கே எட்டிப் பார்க்குதுடா, அடிங்கடா என ஓடுவதற்குள் மூழ்கிவிடும்.

யாம் நீச்சல் பழகியதே இந்த மேற்குக் கண்மாயில்தான். இரண்டு, மூன்றாம் வகுப்பிற்குள்ளாகவே பழகி விட்டோம். அக்காதான் கையைப் பிடித்து பழகி விட்டார். இரண்டொரு நாள்களிலேயே தனியாக நீந்தக் கற்று விட்டோம்.

மேற்கு கண்மாயில் பெண்கள் பொதி பொதியாக துணிகளைக் கொண்டு வந்து துவைப்பார்கள். உயர்நிலைக்கு சென்றதிலிருந்து எமது பள்ளிக்கூட உடைகளை யாமே துவைத்துக் கொள்வோம். கண்மாய்க்கு செல்லும் சாலை அருகே கலுங்கு இருந்தது. சிறிய அளவில் கான்கிரிட் போட்டிருப்பார்கள். பல நேரங்களில் அதைத் தொட்டுக் கொண்டு தண்ணீர் நிறைந்திருக்கம். அலை மோதி தண்ணீர் முகத்தில் தெறிக்கும். அதில் ஏறி நின்று குதிப்பது, பலட்டி அடிப்பது சிறுவர்களுக்குப் பிடித்தமான ஒன்று.

துவைப்பதற்கென்றே பெரிய கற்களை சாய்வாகப் போட்டிருப்பார்கள். தண்ணீர் கீழே இறங்க இறங்க, கல்லும் பின்னால் வந்து கொண்டே இருக்கும். அன்றைக்கு பார் சோப்பு கிடைக்கும். பெரியதாக வாங்கி இரண்டு மூன்று துண்டுகளாக வெட்டிக் கொள்வார்கள். துவைப்பதற்கு உப்புச் சோப்பு கொடுங்க என்றும் வாங்குவார்கள்.

வயதானவர்கள் மேலுக்கு சோப்புப் போடமாட்டார்கள். தலைக்கு கரம்பை மண்ணைக் கரைத்துத் தேய்ப்பார்கள். ஷாம்புகள் வராத காலம். சிலர் உடம்புக்குப் போடும் சோப்பையே, தலைக்கும் போட்டுக் கொள்வார்கள். பலரிடமும் சீயக்காய் இருக்கும். நல்ல மணமும் வரும். சந்திரிகா, லக்ஸ் போன்றவை அதிகமாகக் கிடைக்கும். மைசூர் சாண்டலும் உண்டு. சேலையைத் துவைத்து ஒரு முந்தியை உடம்பில் சுற்றி மறு முனையை செடிகளில் கட்டி விட்டு, ஈரம் காயும் வரை பலரும் நின்று கொண்டிருப்பார்கள். துணிகளைத் துவைத்துக் காயப் போட்டு அவை காயும் வரையும் பலர் குளித்துக் கொண்டிருப்பார்கள். மஞ்சள் அரைத்துக் குளிக்கத் தவறமாட்டார்கள். மஞ்சள் கிழங்கையும் சோப்பு டப்பாவில் வைத்து சோப்பே மஞ்சளாக இருப்பதுண்டு.

கண்மாயில் தண்ணீர் குறையும்போது அதிகம் உதவுவது வள்ளிமுத்து நாடார் குமிழ்பைப் குழாய்தான். பெரியதொரு வட்டத் தொட்டியில் கிணற்றுத் தண்ணீரை நிரப்புவார்கள். அதிலிருந்து குறைந்த உயரத்திலிருந்து குழாய் மூலம் தண்ணீர் கொட்டும். குழாய்க்குக் கீழே, உட்கார்ந்து குளிக்க முடியாது. குவளை வைத்து அள்ளி ஊற்ற வேண்டும். மின்சாரம் இருந்தால் தண்ணீர் கொட்டிக்

கொண்டே இருக்கும். சிறுவர்களை தண்ணீர் அடிக்கிறதா என பார்த்து வரச் சொல்வார்கள். மின்சாரம் திடீரென நின்று விட்டாலும் தொட்டிக்குள் இருந்து வாளி மூலம் இறைத்துக் கொள்ளலாம்.

எத்தனையோ விதங்களில் சிறுவர்கள் பயன்படுவதுபோல், கிழிந்த துணிகளை சிறுவர்கள் இல்லாமல் தைக்க முடியாது. பெரியவர்களால் ஊசியில் நூலைக் கோர்க்க முடியாது. பலருக்கும் பார்வை மங்கியிருக்கும். கோர்த்துக் கொடுத்தால், செத்த நேரம் பிடிச்சுக்கோ, வெரசா தைச்சுருவோம் என்பார்கள். ஒரு துணி தைத்து முடித்தவுடன் போகலாம் என நினைத்தால் அது நடக்காது. இன்னும் ஒன்னே ஒண்ணுப்பே என்று தைத்துக் கொண்டே இருப்பார்கள். உடைகள் நைந்து போகும்வரை இப்படி தைத்துத் தைத்து போட்டுக் கொள்வார்கள்.

பின்னர் வந்த வருடங்களில் முகாம்கள் நடத்தி கண் அறுவைச் சிகிச்சை செய்தார்கள். அம்மாயி இப்படிப் போய் வந்தார். கண்ணாடியும் இலவசமாகத் தந்தார்கள். கண் அறுவை என்றில்லாமல் குடும்பக் கட்டுப்பாடுகளும் மும்முரமாக நடந்தன. எமது அம்மா, அறுவைக் சிகிச்சை முடிந்து வந்து, பல நாட்கள் முடியாமல் இருந்தது ஞாபகமிருக்கிறது.

அப்பாவின் சொல்படி, எமது பாட்டனார் பெயர் நல்ல தம்பி. பாட்டனாருக்கு சிட்டு, முத்திருளி என இரண்டு பாட்டிகள். நல்ல தம்பிக்கும் சிட்டுப் பாட்டிக்கும் பிறந்தவர்கள் கருப்பண்ணன், கிழவன் மற்றும் பெருமாள் தாத்தாக்கள். முத்து இருளிப் பாட்டிக்கு முனியன் மற்றும் இருளி. முனியன் எமது தாத்தா. அப்பத்தா குருவம்மாள். இவர்களுக்கு மூன்று ஆண், மூன்று பெண் குழந்தைகள். நான்கு குழந்தைகள் இறந்து விட்டார்களாம்.

அப்பாவின் அண்ணன் சாத்தையாப் பெரியப்பா திருமணம் முடிந்தே இறந்திருக்கிறார். வெளியூர் வேலைக்குப் போனவரை உடம்புக்கு முடியாமல் விருதுபட்டி வரை புகைவண்டியில் கொண்டு வந்திருக்கிறார்கள். உடன் வேலை பார்த்தவர் அங்கிருந்து ஊருக்கு நடந்தே வந்து தகவல் சொல்லியிருக்கிறார். ஊரிலிருந்து வண்டிமாடு கட்டிப் போகும் வரை புகைவண்டி நிலையத்திலேயே கிடந்திருக்கிறார். வண்டியில் ஏற்றி வரும் போது பாதி வழியிலேயே இறந்து விட்டாராம்.

குருவம்மாள் அத்தை அப்பாவிற்கு மூத்தவர். தும்முசினம்பட்டியைச் சேர்ந்த அழகன் மாமாவிற்குத் திருமணம் செய்திருக்கிறார்கள். நடுத்தர வயதில் மாமா இறந்து விட்டதாகத் தெரிகிறது. பின்பு தொப்பலாக்கரைக்கே வந்துவிட்டார்கள்.

தும்முசினம்பட்டி மாதா கோவில் திருவிழாவிற்கு, யாம் பலமுறை சென்றிருக்கிறோம். தேவாலயம் அழகாகவும், பெரியதாகவும் இருக்கும். உயரமான கோபுரம் பேருந்து சாலையிலிருந்து பார்த்தாலே தெரியும். மாதாவும் புன்முறுவல் பூத்தவாறு இருப்பார்.

ஊரில் தேவேந்திரர், தேவர், தெலுங்கு செட்டியார்கள் இருக்கிறார்கள். தேவேந்திரர் எண்ணிக்கையில் குறைவு. பின் வந்த வருடங்களில் கண்மாய்கரை அருகே தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். ராஜ் பெரியப்பா மகன் பாண்டி அண்ணன், எங்கள் குடும்பத்தின் மீது அன்பும் மரியாதையும் வைத்திருந்தார். முனியசாமி அண்ணனும் பிரியமாக இருப்பார். பாண்டி அண்ணனுக்கு முத்துச்சாமி மாமா பெண் பாண்டியம்மாளைக் கட்டிக்கொடுத்தார்கள். அவருக்கு தாய் மாமா பெண். இருவருக்கும் குழந்தை இல்லாமல் பல வருடங்கள் கழித்து ஒரு பெண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறக்கும் சமயம் அவர் தற்கொலை செய்து கொண்டது துரதிஷ்டமானது. எல்லோருடனும் சிரித்துப் பேசி நட்பும் அன்பும் பாராட்டுபவர் மனதில் இப்படிபொரு விபரீத எண்ணம் வந்தது விந்தையே.

பண்டிகையின் போது தேவாலயத்தை மின் விளக்குகளால் அலங்காரம் செய்திருப்பார்கள். ஏராளமாக மிட்டாய்க் கடைகள் போட்டிருப்பார்கள். இராட்டினங்களும் வந்து விடும். பலூன் கடைகள், பானைக் கடைகள், பெட்டிக் கடைகள், தட்டுமுட்டுச் சாமான் கடைகள் என பலவிதமான கடைகளும் அமைத்திருப்பார்கள். முடிமன்னார்கோட்டை போன்ற சுற்றுப்புற கிறித்துவக் கிராமங்களிலிருந்து வருபவர்களால் கூட்டம் நிரம்பி வழியும். பலரும் வண்டி மாடுகளில் வந்து குடும்பமாக உட்கார்ந்திருப்பார்கள். திருமலைபுரம் பெரிய கண்மாய் வண்டிப்பாதை வழியாக, தெரு நண்பர்களோடு பேசிக் கொண்டே நடந்து செல்வோம். தேவாலயத்தை அடையும் போது சப்பரம் தூக்கிச் செல்வதை தவறாமல் பார்க்கலாம். திருவிழாவின் போது, ஒரு சிலர் எங்களை அடையாளம் கண்டு வீட்டிற்குக் கூப்பிடுவார்கள்.

வாசலில் மெழுகுவர்த்தி வாங்கிக் கொண்டு, மாதா அருகில் வைத்து விட்டு, கூட்டத்தை வேடிக்கை பார்த்துச் சுற்றுவதுண்டு. ஆளுக்கொரு பெட்டி சீனி மிட்டாய் வாங்கிக் கொண்டு திரும்பி விடுவோம். கருப்பட்டி போட்டு செய்ததை விட சர்க்கரைப் பாகு போட்டுச் செய்தது கொஞ்சம் விலை ஜாஸ்தியாக இருக்கும். கண்மாய்க் கரை தாண்டுவதற்குள் ஒரு கொட்டாய் மிட்டாயும் காலியாகி விட்டிருக்கும். திருவிழா பார்க்கப் போவதே இந்த மிட்டாய்க்கும், வேடிக்கை பார்க்கவும் தானே.

இந்த ஊரில் தேர்தல் சமயத்தில், ஒரு முறை தேவருக்கும் செட்டியாருக்கும் மோதல் வந்து, மூன்று செட்டியாரை கொலை செய்யும் அளவிற்கு வன்மம் வளர்ந்து விட்டது. பக்கத்து ஊர்களிலும் ரிசர்வ் காவல்படை முகாம் போட்டார்கள். எங்கள் ஊரிலும் பஞ்சாயத்து அலுவலகத்தில் தங்கியிருந்தார்கள். அந்தச் சமயத்தில் முருகேசன் அண்ணன் வீட்டிற்கும், சித்தப்பா வீட்டிற்கும் ஏதோ வாய்த் தகராறு வந்துவிட்டது. சித்தப்பா வீட்டைச் சேர்ந்த பெண்கள் அழுது கொண்டே காவல்படையினரிடம் போயச் சொல்லி விட்டார்கள். அவர்கள் வரும் போது முருகேசன் கையில் அருவாள் வைத்திருக்கவும், எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, அடி பின்னி விட்டார்கள். கீழே போட்டு பூட்ஸ் காலாலேயே உதைக்கிறார்கள். இப்படியும் கூடவா முரட்டுத்தனமோடு அடிப்பார்கள் என்று அனைவருக்கும் அதிர்ச்சி. முகாமுக்கு கூட்டிச் சென்று அங்கும் அடித்திருக்கிறாகள். பின்னர் பெரியவர்கள் போய், இது சாதி ரீதியிலான சண்டை இல்லை, அக்கா வீட்டிற்கும், தங்கச்சி வீட்டிற்கும் வாய்ச் சண்டைதான் என்று சொல்லி அழைத்து வந்தார்கள். நீண்ட நாட்கள் இருமிக் கொண்டிருந்தார். எப்படியோ ஒரு வழியாகத் தேறிவிட்டார்.

பொன்னுத்தம்பி அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஒன்றியச் செயலாளராக இருந்தார். அமைச்சராக இருந்த தங்கம் தென்னரசு அவர்களின் ஏற்பாட்டில் இவ்வூரில் மேல்நிலை வரை அரசுப்பள்ளி கொண்டு வந்திருக்கிறார்கள். கமுதி விலக்கிலிருந்து இந்த ஊருக்கு இறங்கிச் செல்ல வேண்டும். அன்றைக்கு இடையில் ஒரு வீடு கூட இருக்காது. இன்று சாலை முழுவதும் வீடுகள். கமுதி விலக்கே இன்று கடைவீதி போல் காட்சியளிக்கிறது. உப்புத் தண்ணீர் குடித்து பலருக்கும் கிட்னி பாதிப்பு வந்து விட்டது என பெரிய மருத்துவ முகாம் நடத்தும் அளவிற்கு சமீபத்தில் இந்த ஊர் செய்திகளில் அடிபட்டது.

ஊருக்கு வடக்கே முருகன் கோவில் ஒன்றும் இருக்கிறது. சாமியார் கோவில் என்பார்கள். சாது ஒருவர் இருக்கிறார். திருச்செந்தூர் பாதயாத்திரைக்கு இங்கு சென்று சிலர் மாலை அணிவார்கள்.

கமுதிவிலக்கு அருகே செவல்காட்டில் இருந்த பனைமரத்தை ஒருவர் பிடுங்கிய கதையை தருமர் அண்ணன் மிகவும் பரவசமாகச் சொல்லிக் கேட்டிருக்கிறோம். ஊரான ஊர் சனமே போய் வேடிக்கை பார்த்து நின்றதாம். ஒரு ஆள் எப்படி பனைமரத்தை பிடுங்க முடியும் என்பதை நினைத்து அனைவருக்கும் ஆச்சரியம். காலையிலேயே போய் நின்றிருக்கிறார்கள். அஜானபாகுவான் ஒருத்தர் வந்து நின்றாராம். மரத்தைச் சுற்றி வந்து இரண்டு மூன்று முறை அசைத்துப் பார்த்தாராம். பின் கண்ணிமைக்கும் நேரத்திற்குள் பனையை வேரோடு கீழே சாய்த்து விட்டாராம். கூட்டத்தாரின் கைதட்டு ஆரவாரம் அடங்க வெகு நேரம் ஆகியதாம். இதற்கு கட்டணம் வசூல் பண்ணினார்களா எனத் தெரியவில்லை.

எங்கள் ஊரிலிருந்து கமுதிக்கு செல்ல நிறைய வழிகள் உள்ளன. பேருந்தில் செல்வதானால் இரண்டு வழித்தடங்களில் செல்லலாம். கமுதி விலக்கு, இராமநதி வழியாகப் போகலாம். பரளச்சி, பூலாங்கால், கீழ்க்குடி வழியாகவும் கமுதிக்கு செல்லலாம். முன்னர் நடந்து செல்பவர்கள் ஊரிலிருந்து செவல்காட்டுப் பாதை வழியாக இராமசாமிபட்டி, கிளாமரத்துப்பட்டி, இராமநதி வழியாக கமுதியை அடைவார்கள். செட்டிகுளம், கணக்கி வழியாகவும் நடப்பார்கள். கணக்கியில் ஒரு புற்றுக் கோவில் இருந்தது. அங்கு நடக்கும் திருவிழாவில் நாடகம் போடுவதற்கான சுவரொட்டிகள், ஊரில் பல இடங்களில் ஒட்டியிருப்பார்கள்.

தர்மர் அண்ணன் கமுதிக்கு படம் பார்க்கச் சென்று காவலர்களிடம் மாட்டிகொண்டு விழித்ததை கதைபோல சொல்லி பலமுறை கேட்டிருக்கிறோம். இரவு நேரங்களில் முற்றத்தில் இப்படி ஊர்க்கதைகள் பேசி உர்கார்ந்திருப்பது ஆனந்தமானது. எமது அப்பா, அம்மா, தர்மர் அண்ணன் மற்றும் இன்னும் சிலரும் சேர்ந்து கமுதிக்கு இரண்டாம் ஆட்டம் பார்க்கச் சென்றிருக்கிறார்கள் போல. பேருந்து நிலையத்தில் இறங்கி கண்மாய் ஒன்றைச் சுற்றி திரையரங்குக்கு செல்ல வேண்டுமாம். கண்மாய்க் கரையில் முன்னும் பின்னுமாக நடந்து சென்றிருக்கிறார்கள். போங்க வருகிறோம் எனச் சொல்லி கண்மாய் கரை பக்கம் அண்ணன் ஒதுங்கியிருக்கிறார். அதன் பின் ஆளையே காணோமாம். தேடு தேடன்று தேடியிருக்கிறார்கள். எங்குமே தென்படவில்லை. வழியில் ஒரு காவலரிடம்

விசாரித்ததற்கு காவல்நிலையத்தில் யாரோ ஒரு பையனை பிடித்து வைத்திருக்கிறார்கள், போய் பாருங்கள் என்றிருக்கிறார். அடித்துப் பிடித்து ஓடியிருக்கிறார்கள். உள்ளே பயங்கரமாக விசாரணை நடந்திருக்கிறது. எதைத் திருட வந்தீர்கள் என பிடித்துக் கொண்டார்களாம். அழுது புரண்டு, கெஞ்சிக் கூத்தாடி, ஆளை விட்டாப் போதும் சாமி என அலறியடித்து ஊர் வந்து சேர்ந்தார்களாம். காவல் நிலையத்தில் தர்மர் அண்ணன் உர்கார வைக்கப்பட்டிருந்த நிலையை சொல்லிச் சொல்லி சிரிப்பார்கள். அண்ணன் பேசும் போதுகூட அன்றைக்கு மாதிரி வாழ்க்கையில சிரமப்பட்டதில்லை என்பார். கரையில் ஒண்ணுக்குப் போனவர்களைக் கூடவா காவல் துறை பிடிக்கும்.

முதன் முதலாக பால்மாடுகள் கரூர் பக்கமிருந்தே வாங்கி வந்தார்கள். லாரிகளில் ஏறி வந்தன. கன்றுகளுக்கு தனியாக வண்டி. மாடுகள் காதில் அடையாள வில்லை போட்டிருக்கும். கடன் மாடுகள் எனத் தெரிய வேண்டுமல்லவா. சிலபேர் கன்றுக் குட்டிக்கு கொஞ்சம் கூட பால் வைக்க மாட்டார்கள். பெரும்பாலான கன்றுகள் எலும்பும் தோலுமாக, நடக்க மாட்டாமல் நடந்து போகும். கன்று மடுவை முட்டி, காம்புகள் லேசாகப் புடைத்தவுடனேயே கன்றைப் பிடித்துக் கட்டி விடுவார்கள். வழக்கமாகப் பால் கறக்கும் இடத்தில் சிலர் குத்துக் கல்லைக் கூட ஊன்றியிருப்பார்கள். சில கன்றுகளை மாட்டின் முன்னே பெண்கள் இழுத்தும் வைத்துக் கொள்வார்கள்.

விளக்கெண்ணெய் தடவி, பால்க் காம்புகளை நீவி விட்டு கறக்க ஆரம்பித்து விடுவார்கள். ஆண்கள் குத்துக் காலிட்டு உட்கார்ந்து இரண்டு மொளிக்கும் இடையில் பால் சட்டியை வைத்துக் கொள்வார்கள். பால் அதிகமாக அதிகமாக கீழே வைத்துக் கொள்வார்கள். பெண்கள் சட்டியை தரையில் வைத்தே பீச்சுவார்கள். கன்று கொஞ்சம் பெரியதாகி விட்டால் ஒரு சொட்டுப் பால் கூட மீதம் வைக்க மாட்டார்கள். முட்டி முட்டி கன்று ஏமாந்து போவது தான் மிச்சம்.

பராமரிப்பின்றி சில கன்றுகள் இறந்து விடும். அதன் உடலுக்குள்ளே வைக்கோலைத் திணித்து அசல் கன்றுக்குட்டி போலவே தைத்துத் கொள்வார்கள். காலையும், மாலையும் இப்படி வைக்கோல் கன்றுகளை தூக்கிச் செல்வதைப் பார்ப்பதற்கு வேடிக்கையாக இருக்கும். சில மாடுகள் பால் கறக்க விடாமல் முரண்டு பிடிக்கும். தினமும் பால் கறப்பவர் ஒரு நாள் வராவிட்டால் அன்று பால் கறக்க

பெரிய போராட்டமே நடக்கும். சில மாடுகள் அடிவாங்கி வீடு வந்து சேரும். விளக்கெண்ணெய் பாட்டில் எடுத்து வராமல் ஓசி கேட்பவர்களும் இருப்பார்கள்.

பால்மாடுகளுக்கு வீடு தவறாமல் ஊறல் இருக்கும். பெரும்பாலும் வீட்டின் முன் உள்ள திண்ணையில் பள்ளம் தோண்டியோ, தனியாக ஊறல் மட்டும் வாங்கியோ வைத்திருப்பார்கள். தவிடு போட்டே தண்ணீர் காட்டுவார்கள். எள் புண்ணாக்கு, கடலைப் புண்ணாக்கும் ஊறலில் போட்டு வைப்பார்கள். கடலை புண்ணாக்கைத் திங்கலாம். கற்களாகக் கிடக்கும். கொஞ்சம் கவனமில்லாமல் கடித்து விட்டால் பல் விழுந்து விடும். நான்கு, ஐந்து லிட்டர் பால் கொடுக்கும் மாடுகளுக்கு தனி மரியாதை கிடைக்கும்.

பருத்திக் கொட்டை ஆட்டுவது எளிதான வேலை. தண்ணீர் நிறைய ஊற்றி ஆட்டுவதால் ஒரே ஆளே ஆட்டி விடலாம். பருத்திக் கொட்டை ஆட்டி ஊற்றினால் பால் அதிகம் கறக்கும். மாடுகள் வைத்திருப்பவர்கள் பிறரது வீடுகளின் முன்னே ஊறல் பானைகளை வைத்திருப்பார்கள். அவற்றில், மீதமாகும் கஞ்சி , வடிதண்ணி, அரிசி களைந்த தண்ணீர் போன்றவற்றை ஊற்றுவார்கள். தினமும் வந்து ஊறல் பானையை எடுத்துச் செல்வார்கள்.

எங்கள் ஊர்ப்பக்கம் இன்றும் இருக்கும் பெரிய பிரச்சனை ஒடக் காய்ச்சல் பிடிப்பது. எம்மைப் போலவே எமது அக்கா பையன் இரவெல்லாம் உட்காந்திருக்கிறார். நீர்க்கடுப்பு, சூடு பிடித்தல் என்பார்கள். விளையாட்டு முயற்சியாகவே திரிவதால் தண்ணீர் போதுமான அளவு குடிப்பதில்லை. கோடை காலம் வந்தால் சூடு பிடித்துக்கொள்வது பெரும் தொல்லை. அடிக்கடி சிறுநீர் வரும். உடகார்ந்தால் வராது. ஆனால் வருவது போன்றிருக்கும். ஒன்றுக்குப் போகும் போது பயங்கரமான எரிச்சல் வரும். இரண்டு சொம்பு தண்ணீர் குடிக்கச் சொல்வார்கள். எப்படியோ சிரமப்பட்டு குடித்து விடுவோம். அரைமணி நேரம் கழித்து சரியாகி விடும். ஓடக்காய்ச்சல் சரியாகி விட்டால் அடுத்த தொல்லை இரண்டு சொம்பு தண்ணீரையும் வெளியேற்றுவது.

ஒருமுறை அனைத்துச் சிறுவர்களும், பொன்னுங்கி வீங்கி வந்து அவதிப்பட்டது நினைவிருக்கிறது. எமது அம்மாவுக்கு கால் காந்தல் என்ற நோய் வந்து மிகவும் சிரமப்பட்டார். காலெல்லாம் தீப்பிடித்து எரிவது போல் எரியுமாம். இரத்தினம் ஐயா அப்போது திருமங்கலத்தில் மருத்துவராக இருந்தார். அவரது எற்பாட்டில் அங்கு சென்று மாதக் கணக்கில் தங்கி வைத்தியம் பார்த்தார்.

அன்று நோய்களுக்கான மருத்துவ முறைகள் மிகவும் எளிமையானவை. சுக்கு, மிளகு, திப்பிலியை ஒன்றாகப்போட்டு இடித்து வைத்துக் கொள்வார்கள். அஜீரணம் போன்ற வயிற்றுக் கோளாறுகளுக்கு இதுவே அருமருந்து. சிறு சிறு உருண்டைகளாகச் செய்து அப்படியே விழுங்கிவிட வேண்டியதுதான். கண்டங்கத்திரியும் பல வகைகளில் பயன்படும். இருமலுக்கு இருக்கவே இருகிறது தூதுவளை. சொரி சிறங்கு வந்தால் குப்பை மேனிச்செடி, உடற்சூட்டிற்கு வெந்தயம். வயிறு உப்பினால் பெருங்காயம். மருத்துவரிடம் செல்வது மிக அரிது. தடுமத்தைப் போக்க தும்பைச் செடி, துளசிச்செடி ஆவி பிடிப்பது நல்லது. துளசிச் செடி ஊர் முழுக்க வளர்ந்து கிடக்கும்.

காசி நாடார் வீடு அருகே பெரியதொரு பூவரசு மரம் இருந்தது. அதன் இலைகளைக் மடித்து ஊதி செய்து விளையாடித் திரிந்திருக்கிறோம். ஆசாரி மடம் அருகே ரேடியோப்பூ மரமும் பெரியதாக வளர்ந்திருந்தது. தரையெல்லாம் வெள்ளை நிறப் பூக்களாகச் சிதறி கிடக்கும். சிறுவர்கள் பலரும் பூக்களை வீடுகளுக்கு எடுத்துச் செல்வோம். நிறையக் கிடைக்கும் என்பதால் மாலையாகக் கூட சிலர் கோர்த்துக் கொள்வார்கள்.

குறண்டிப் பூவும் வெள்ளை வெளேர் எனப் பூத்திருக்கும். சில நேரங்களில் சாயந்தர வேளைகளில், எங்கு பார்த்தாலும் வெள்ளைப் பூக்களாகப் பூத்திருப்பதைக் காணலாம். சிறிது மணக்கவும் செய்யும். முன்பு பெண்கள் குறண்டிப் பூவையும் கட்டி வைத்துக் கொள்வார்கள். குறண்டி முட்களே அதிகமானோர் காலை பதம் பார்ப்பதாக இருக்கும்.

குறண்டிச் செடிகளைப் பிடுங்கி, காயப்போட்டு கவட்டைக் கம்பில் தூக்கி வருவார்கள். சிறு படப்பைத் தூக்கி வருவது போல் தெரியும். நெல் அவிக்க உகந்ததாக இருக்கும். பெரிய பித்தளை அண்டாக்களில், பானைகளில் நெல் அவிப்பார்கள். ஈரமண் வைத்து, பாத்திரத்தின் வெளிப்புறம் பூசுவார்கள். பாத்திரத்தின் உள்ளே சூடு அதிகமாவதற்காக இவ்வாறு செய்தார்கள் என நினைக்கிறோம். மேலே மூடியை தூக்கிப் பார்த்து ஒன்றிரண்டு நெல்கள் வாயைப் பிளந்திருப்பதை வைத்து பதம் பார்ப்பார்கள். காயப் போடுவதற்கு தரையை சுத்தமாகத் துடைக்க வேண்டும். இல்லாவிட்டால் நெல்லோடு கல்லும் கலந்து விடும். அவித்த நெல்லைக் காவல் காப்பதும் பெரிய வேலை. கோழிகள் படையெடுக்கும். காகங்களும் சுற்றிச் சுற்றி வரும். புறாக்களும் அவ்வப் போது

வந்து நெல் மணிகளை கொத்திச் செல்லும். வயதானவர்கள் ஊன்று கோலோடு மணிக்கணக்காக உட்கார்ந்திருப்பார்கள்.

நெல்லை அளப்பதற்கு மரக்கால் வைத்திருப்பார்கள். மரக்கால் வைத்தே சாக்குகளில் அளந்து போடுவார்கள். நாழியும் இருக்கும். நாழி என்பது ஒருபடி. அரைப்படி, கால்படியும் வீடுகளில் வைத்திருப்பார்கள். இன்று பல வீடுகளில் இவை இல்லை. படிகள் போன்றே சில்லரைக் காசுகளும் செல்லாதவையாகி விட்டன. அன்று ஈயத்தில் செய்த ஐந்து, பத்து பைசாக்கள் அதிகமிருக்கும்.

டேப் ரிக்கார்டரும் மறைந்து விட்டது. ஜெயபால் அவர்கள் வீட்டில் ஒரு பெரிய டேப்ரிக்கார்டர் இருந்தது. சாமி பாடல்களாகப் போட்டுக் கேட்போம். நாங்களும் பாடி பதிவு செய்து கேட்டு கேலி பேசிச் சிரித்திருக்கிறோம். யாம் பாடி பதிந்திருந்த தாயே கருமாரி, மாணிக்க வீணையேந்தும் மாதேவி கலைவாணி பாடல்களை அழிக்காமல் வைத்திருந்தோம். சில வீடுகளில் மண்பானைகளினுள் ஸ்பீக்கர் வைத்து தொங்கவிட்டிருப்பார்கள். இசை அருமையாகக் கேட்கும்.

பெருநாழியிலிருந்து சற்று உயரம் குறைவான இராவுத்தர் வாராவாரம் ஊருக்கு வருவார். தெருவில் ரிப்பன்காரர், வளையல்காரர் எனக் கூப்பிடுவார்கள். ஊசி, ரிப்பன், காசிக்கயிறு, அருணாக்கயிறு, வளையல், கண்ணாடி, சீப்பு, ஊக்கு என ஒரு பேன்ஸி கடையையே உடலில் தொங்க விட்டிருப்பார். அனைவரிடமும் மிகவும் இனிமையாகப் பேசுவார். அரைஞான் கயிறு வாங்கும் போது எமக்கு இடுப்பை சுற்றி கயிற்றால் அளவு பார்த்து வெட்டிக் கொடுப்பார். பாச்சா உருண்டையும் அதிகம் விற்கும்.

ரிப்பன்காரரைப் போலவே சிறுவர்களுக்குப் பிடித்தமானவர் ஐஸ்க்காரர். அருப்புக் கோட்டையிலிருந்து மிதி வண்டியில் வருவார். நாடார் எனச் சொல்வார்கள். நல்ல மனிதர். சிறுவர்களிடம் அன்பாக இருப்பார். நல்ல உழைப்பாளி. மிதி வண்டியில் ஊர் ஊராகச் சென்று ஐஸ் விற்றே அவரது பெண்களுக்கு சிறப்பாகத் திருமணம் செய்து கொடுத்திருக்கிறார் எனப் பேசுவார்கள். கோடை காலங்களில் தினமும் வந்து விடுவார். பத்து பைசாவிற்கு சுவையான ஐஸ் கிடைக்கும். ஆரஞ்சு ஐஸ், சேமியா ஐஸ், குச்சி ஐஸ், பால் ஐஸ், ஐஸ் எனக் கூவி, பெட்டியின் மூடியை டம்டம் என அடிப்பார். சைக்கிளின் முன்னே பூம் பூம் ஒலியெழிப்பியும் வைத்திருப்பார். இந்தச் சத்தம் கேட்டாலே சிறுவர்களுக்கு குஷி வந்து விடும். பால் ஐஸ் கால் ரூபா. ஐஸ் சிக்கிரமே உருகி விடும். டம்பளரில் வைத்துக் கொள்வோம்.

யாம் கல்லூரியில் படிக்கும் போது தெருவில் எங்க தம்பி பிரசாந்த ரசிகர் மன்றம் ஆரம்பித்தார்கள். அண்ணன் தலைவராக இருந்தார். மன்றம் ஆரம்பிக்க குறைந்தது இருபது பேர் வேண்டும் என்பதால், எமது பெயரையும் சேர்த்து விட்டார்கள். ஒவ்வொரு சாதிக்காரரும் அவரவர் சாதி சார்ந்த சினிமாக் கதாநாயகனுக்கு மன்றம் வைத்திருந்தார்கள். தேவேந்திரருக்கு அப்படியான கதாநாயகன் இல்லாமல் இருந்தார். யாரோ ஒருவர் நடிகர் தியாகராஜன் தேவேந்திர சாதிக்காரர் எனச் சொன்னாராம். அதைக் கேட்டு இவர்களும் ஆரம்பித்து விட்டார்கள். இது உண்மைதானா என ஒருவருக்கும் தெரியாது. சாதி பார்க்காமல் ராமராஜனுக்கு ரசிகராக இருந்தவர், ஊரில் சாதித் துவேசம் அதிகமாகியதால் அண்ணனும் சாதிப்பற்றாளராக மாறி விட்டார் போல. வீட்டுக்கு பிரசாந்த் புகைப்படம் அவ்வப்போது வரும். அண்ணன் வீட்டுச் சுவற்றில் ஒட்டி வைத்திருப்பார். விடுமுறைக்கு ஊருக்கு வரும் எம்மிடம் கடிதம், புகைப்படம் காண்பித்து மகிழ்வார். பின்னர் தெருவில் படம் போட்டாலும் இவர்கள் படங்களே அதிகம் போட்டார்கள்.

மழைக்கஞ்சி குடிப்பதென்றால் சிறுவர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. ஊரே திரண்டு விடும். எமது சிறுவயதில் இரண்டு மூன்றுமுறை மழைக்கஞ்சி ஊற்றினார்கள். பருவமழை தொடங்க தாமதமானால், சரியாக மழை பொழியாவிட்டால், ஊரார் எல்லோரும் சேர்ந்து மேற்குச் கண்மாயின் வடக்கே இருந்த மேட்டு நிலத்தில் மழைக்கஞ்சி ஊற்றுவார்கள். அங்கே சில சிலைகளும் கிடந்து யாம் பார்த்திருக்கிறோம். அங்கேயிருந்த தீர்த்தங்கரர் சிலைகளை, தற்போது ஊரணியில் வைத்திருக்கிறார்கள்

பெருமாள் கோவில் பூசாரி ராஜாராம் அவர்கள் இதற்கான ஏற்பாட்டில் மும்முரமாக இருப்பார். மழைக்கஞ்சி ஊற்றப்போவதை ஊர்ச் சாட்டு மூலம் தெரிவிப்பார்கள். பல வகையான தானியங்களை ஒன்றாகப் போட்டு பெரிய அண்டாக்களில் கஞ்சியாகக் கிண்டுவார்கள். கம்பு அதிகமிருக்கும். மழைக்கஞ்சி குடிக்கப் போகும்போதே தட்டு எடுத்துச் செல்ல வேண்டும். தொன்னையிலும் தருவார்கள். ஒருவித வித்தியாசமான சுவையோடு இருப்பதால் சிறுவர்கள் மறுபடியும், மறுபடியும் வாங்கிக் குடிப்பார்கள். கடிப்பதற்கு உறித்த வெங்காயம் கொடுப்பார்கள். ஊரில் ஒருவர் தவறாமல் இப்படி மழைக்கஞ்சி குடித்தால் மழை பெய்யும் என்பது நம்பிக்கை. மழைக்கஞ்சிக்குப் பின் மழையும் பெய்தது நல்ல ஆச்சரியம்.

சிறு வயதுகளில் பதநீரும் அதிகம் கிடைக்கும். ஓடைப் பனைகளில் பதநீர் இறக்குபவர்கள், ஓலையைச் சீவி சிறிய மண் கலயங்கள் கட்டித் தொங்க விட்டிருப்பார்கள். காலையில் மண்பானைகளில் எடுத்து வருவார்கள். குடிப்பதற்கு பனை ஓலையை, குழிபோல் செய்து ஊற்றிக் கொடுப்பார்கள். நல்ல சுவையாக இருக்கும். ஒருவித நறுமணமும் பதனிரிலிருந்து வரும். அன்று அதிகமாக சுண்ணாம்பு சேர்க்க மாட்டார்கள். சாக்கரின் பவுடர் நிச்சயம் கிடைத்திருக்காது.

யாம், பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும்போது, ஜான் பாண்டியன் அவர்கள் வந்தார். சங்க மடத்தில் வரவேற்பு நடந்தது. உயரமாக, நல்ல நிறமாக இருந்தார். அவர் வருவதால் ஏதும் அசம்பாவிதம் வரக் கூடாது எனப் பெரியவர்கள் பதற்றமாக இருந்தார்கள். ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதை வலியுறத்தி சிறிது நேரம் பேசினார். அன்று அவர் தேவேந்திரர் சமூகத்தில் பெரிதும் மதிக்கத்தக்கவராக இருந்தார்.

பின் வந்த வருடங்களில் புதிய தமிழகம் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் ஊருக்கு வந்து புதிய சங்கமடம் அருகே கொடியேற்றுவதாக இருந்தது. ஊர் ஊராகக் கொடியேற்றி சமூக மக்களைச் சந்தித்து வந்தார். ஊரில் நிலைமை சரியில்லாமல் இருந்ததால், பெரியவர்கள் வரவேண்டாம் எனச் சொல்லிவிட்டார்கள். தெருக்காரர்களே புதிய தமிழகம் கொடியை ஏற்றினார்கள்.

எமது சிறு வயதில் சாதி வேறுபாடு அதிகம் பார்த்தாலும், அன்று வன்முறையாக உருமாறவில்லை. இன்று இருக்கும் இந்த அளவிற்கான வெறுப்பு, நிச்சயம் இல்லையென்றே சொல்லத் தோன்றுகிறது. அன்று அனைவரும் மிகவும் சகஜமாகப் பேசித் திரிந்தார்கள். மிகுந்த நட்புணர்வும் இருந்ததாக உணர்கிறோம். ஒருவருக்கொருவர் பேசாமல் மாறியதால்தான் வெறுப்பு உச்சமாகிறதோ என்னவோ.

அன்று காடுகளில் வேலை செய்யும்போது ஆதிக்க சாதியினர் பாத்திரங்களில் இருந்து தண்ணீரை ஊற்றும் போது, அட்டவணை இனத்தவர் இரு கைகளாலும் வாங்கிக் குடிப்பதை யாமே பலமுறை பார்த்திருக்கிறோம். பாத்திரத்தில் கைய் பட்டால் தீட்டுப் பட்டு விடுமாம். இவர்களும் இன்னும் கொஞ்சம் ஊத்துங்கம்மா என்று வாங்கிக் குடிப்பார்கள். நீயே எல்லாத்தையும் குடிச்சுட்டா மத்தவங்களுக்கு என்ன பண்றது எனக் கேட்பார்கள். சிறுசிறு கேலிப் பேச்சுகளும் உரையாடல்களில் நிகழும். யாம் கவனித்தவரை ஒரு வித பாச உணர்வு இருக்கும்.

அவர்கள் வீடுகளுக்குள் போக முடியாது. முற்றத்தில் வைத்துப் பேசும் போது கனிவான பேச்சைக் கேட்கலாம். எம்மை முனியக் குடும்பன் பேரனா என்றும், கொத்தன் கருப்பையா மகனா என்றும் கேட்டுத் தெரிந்து கொள்வார்கள். பெண்களென்றால் பொன்னம்மா மகனா, படிக்கிறியாக்கும் எனவும் விசாரிப்புகள் நடக்கும்.

இன்று வீட்டுக்குள் விடாதது போன்ற புறக்கணிப்புகள் இல்லை. ஒரு விதத்தில் சொன்னால் புறவயமான புறக்கணிப்பு மறைந்து விட்டது. வீட்டில் உட்கார வைத்துப் பேசுகிறார்கள். வீடுகளுக்கு வந்தால் தண்ணீர் வாங்கிக் குடிக்கக் கூட தயக்கம் காட்டாதவர்கள் உண்டு. ஆனால் அகவயமான புறக்கணிப்பு உருவாகி வருகிறதாகத்தான் தெரிகிறது.

பெரியவர்கள் பேச்சிலிருந்து அன்று தலவமாரே அதிகமாக சாதி வித்தியாசம் பார்ப்பார்களாம். தார்க்குச்சியில தண்ணி ஊத்துறவங்க என இவர்களைப் பற்றி ஒரு அடைமொழி புழக்கத்தில் இருந்தது. அடிச்சிட்டு சாப்பிட்டயா எனக் கேட்கும் சாதியென மறவரை பற்றிச் சொல்வார்கள்.

ஊருக்கு கழைக் கூத்தாடிகளும் அவ்வப்போது வருவார்கள். ஒரு முறை பேருந்து நிலையம் அருகே ஒரு கூட்டம் தங்கியிருந்தது. ஒருவர் மூன்று நாட்கள் இடையில் நிற்காமல் தொடர்ந்து மிதி வண்டி ஒட்டுவதாகச் சொல்ல, இரவெல்லாம் ஊரார் பார்த்திருக்கிறார்கள். ஜோதி அவர்களின் மனைவி வள்ளி அக்காவும் சென்றிருக்கிறார். இவர் எல்லோருடனும் அன்பாகப் பழகுவார். சங்கமடம் எதிரே வீடு என்பதால் திண்ணையில் உட்கார்ந்து சிரித்த முகமாய் அனைவரிடமும் பேசுவார். தஞ்சாவூர் பக்கம் சொந்த ஊர். ஜோதி அவர்கள் அங்கு சென்று வேலை பார்த்த போது இருவருக்கும் காதல் மலர்ந்து திருமணம் செய்திருக்கிறார்கள். இவர்களுக்கு மாரியம்மாள் பிறந்து பெரிய பெண்ணாகவும் இருந்தார்.

சர்க்கஸ்காரரைப் பார்க்க மூன்று நாட்களும் சென்றிருக்கிறார். நான்காவது நாள் அவர்கள் கூடாரத்தைக் காலி செய்து போன போது இவரையும் காணோம். அந்த வயதில் குடும்பத்தை விட்டு இன்னொருவருடன் வந்த காதல் மகா வியப்பானது. பெண்களின் மனதை யார்தான் அறிய முடியும். ஜோதி மச்சான் நல்ல குணமுள்ளவர். அதிர்ந்து கூடப் பேசாதவர். காதல் மனைவி இப்படிப் சென்றது வருத்தமாக இருந்திருக்கும். வருத்தம் மறந்து மறுமணம் செய்து கொண்டார். சர்க்கஸ்காரரோடு சென்றவர் என்ன ஆனார் எனத் தெரியவில்லை.

ஊரில் கரகாட்டம் நடந்தும் பாத்திருக்கிறோம். ராஜகோபாலபுரம் ஆதிதிராவிட சமூகத்தை சேர்ந்த ஒருவர், பெண் தன்மையோடு இருப்பார். இவர் கரகக் கோஷ்டியில் சேர்ந்து பெண் வேடமிட்டு கரகமாடுவார். சுப்பையாத் தலவர் கடையருகே ஒருமுறை இவர்களது கரகாட்டம் நடந்தது. கரகாட்டத்தின் போது, முன்னால் உட்காந்திருப்பவர்கள் பண்ணும் சேட்டைகளும், பதிலுக்கு இவர்கள் செய்யும் சைகைகளும் நன்றாக இருக்காது. புயலுக்கு தனுஷ்கோடி அழிந்த வரலாற்றை சோகம் ததும்ப உணர்சிகரமாகப் பாடுவார்கள். புயல் வருவதையும் மக்கள் இருப்பையும் மழை விடாமல் கொட்டியதையும் கடல் பொங்கி வந்ததையும் மண் மூடிப் போன ஊரையும், மக்களின் இழப்பையும் வருணித்துப் பாடுவார்கள். கூத்தே அமைதியாகிவிடும். பெண்களுக்கு அழுகையைக் கட்டுப்படுத்துவது கடினம்.

ஊரில் நாய்கள் அதிகமிருக்கும். ராஜபாளையம் நாய்கள் என அறியப்படும் நாய்கள் இவை. உயரமாக, நீளமாக வளர்ந்திருக்கும். சில வீடுகளில் நன்றாக சாப்பாடு போட்டு வளர்ப்பார்கள். கட்டிப் போட்டு வளர்க்க மாட்டார்கள். ஒரு தெருவில் இருக்கும் நாய்கள் பெரும்பாலும் ஒற்றுமையாகத் திரியும். இரவெல்லாம் ஊளைச் சத்தம் கேட்கலாம். சண்டை வந்தால் ஆக்ரோசமாகக் கடித்துக் கொள்ளும். அன்று பன்றிகள் அதிகமிருந்ததால், நான்கைந்து சேர்ந்து பன்றிக் குட்டிகளைக் குதறிவிடும். பெரிய பன்றிகளிடம் வாலாட்டாது. இரவில் தனியாகச் செல்வோரை கடித்துக் குதறுவது போல் ஓடிவரும். வீட்டுக்காரர்கள் சத்தம் போட்ட பின்னரே சற்று அமைதியாகும். அப்படியும் கிட்டே வந்து முசுமுசுவென்று மோந்து பார்க்கும். நமக்கு பதற்றம் தொற்றிக் கொள்ளும். எஜமானர் என்னதான் சத்தம் போட்டாலும் சில நாய்கள் குறைப்பதை மட்டும் நிறுத்தவே நிறுத்தாது. இனப் பெருக்க காலங்களில் இவைகளின் அழிச்சாட்டியம் பயங்கரமாக இருக்கும். சிறுவர்கள் கல்லெறிவாகள் எனச் சொல்லவும் வேண்டுமோ.

கணேச அண்ணன் ஒரு நாய் வளர்த்தார். வாடா மணி எனக் கூப்பிடுவார். எங்கே போனாலும் கூடவே செல்லும். ஒரு முறை யாரோ பிடித்துச் சென்று விட்டார்களாம். சில நாட்களுக்குள்ளேயே ஓடி வந்து விட்டது. நாய்களை மலங்காடுகளிலிருந்து வந்து காவலுக்கு வாங்கிச் செல்வதும் உண்டு. சில பாசமான ஜீவன்கள் அங்கிருந்து தப்பி ஊர் வந்து சேர்ந்த கதையும் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம்.

வெறி பிடித்த நாய்களை குடை சுற்றிச் கொல்வார்கள். தலையை சாக்குப் பையால் மூடி வண்டிச் சக்கரத்தில் போட்டு சுற்றிக் கொல்வார்களாம். தெருவில் ஒரு நாயை இப்படிக் கொன்றார்கள். யாம் பார்க்கவில்லை. அதிகமான குட்டிகள் போட்டாலும் கண் திறக்கும் முன்பே சில குட்டிகளைத் தூக்கி கண்மாய்க்குள் போட்டு விடுவார்கள். பாவமாக இருக்கும். நாய்க்குட்டிகள் சிறுவர்கள் கைக்கு போனால் தொலைந்தது. எமக்கு உமக்கு என ஆளாளுக்குப் பிடித்து இழுப்பதில் குட்டிகள் திணறித்தான் போகும். எங்கு ஓடினாலும் குட்டிகளும் பின்னாடியே ஓடி வரும். சிரட்டையில் பால் ஊற்றி கடகாப் பெட்டியை போட்டு மூடி, பத்திரமாக வளர்க்கும் சிறுவர்களும் இருப்பார்கள். பண்டிகைக் காலங்களில் எலும்புக் கறிக்காக வீடுகளின் வாசல்களிலேயே நாய்கள் நின்று கொண்டிருப்பது பரிதாபமானது.

பூனைகளின் தொல்லை வேறுவிதமானது. எவ்வளவுதான் பத்திரமாக மூடி வைத்திருந்தாலும், நைஸாக வந்து கருவாட்டைத் தூக்கிச் சென்றுவிடும். பானைகளை உருட்டும் சத்தம் கேட்டால் ஏதோ ஒன்று காணமல் போய் விட்டது என்று அர்த்தம்.

மலைக்கார பெரியாத்தா வீட்டில் பூனைகள் இருக்கும். சில ஆண் பூனைகள் பெரிதாக வளர்ந்து ஆட்களையே மிரட்டும். காட்டுப் பூனையை வெருகு என்பார்கள். கோழிகளை தூக்கிச் செல்லும். மாமா வீட்டில் இப்படியொரு வெருகை குத்துவேல் கம்பால் குத்தினார்கள். ஒருமுறை கண்ணன் வீடு அருகே இருந்த ஒரு வீட்டிற்குள் வெருகுப் பூனை மாட்டிக் கொண்டது. மதியம் ஆரம்பித்த வேட்டை சாய்ந்தரம்தான் முடிந்தது. யாமும் சென்று வேடிக்கை பார்த்து நின்றோம். குத்திக் கொல்வதற்குள் படாதபாடு பட்டார்கள்.

பூனைகள் இருந்ததால் அன்று வீடுகளில் எலிப் பிரச்சனை அவ்வளவாக இல்லை. எலிகளைப் பிடிக்க மரத்தில் செய்த எலிப்பொறி இருக்கும். மேல்நிலை வகுப்பு செய்முறைக்கு, பொறி மூலம் எலிகளைப் பிடித்து யாம் எடுத்துச் செல்வோம். இரண்டு மூன்று வீடுகளில் வைத்து விடுவோம். ஒன்றிலாவது நிச்சயம் எலி மாட்டும்.

ஒரு சிலர் நெல் அறுவடைச் சமயங்களில் காட்டு எலிகளைப் பிடித்து வந்து சமைத்துச் சாப்பிடுவதை யாம் பார்த்திருக்கிறோம். குப்பைகளில் பெருச்சாளிகள் இருக்கும். மூஞ்சுறும் பார்த்திருக்கிறோம்.

சாம்பல் நிற முயல்கள் காடுகளில் துள்ளிக் குதித்து ஓடும். செவக்காட்டு முயல்களுக்கும் கரிசல் காட்டு முயல்களுக்கும் வித்தியாசம் இருக்கும். முயல் குட்டி எடுத்து வந்தும் ஒரு முறை வீட்டில் வளர்திருக்கிறோம். திருமலைப்புரத்தில் இரவில் முயல் பிடிக்கப் போவார்கள். இராமநாத அண்ணன் இதில் கெட்டிக்காரர். ஒரே இரவில் ஐந்தாறு முயல்வரை பிடித்து வருவதைப் பார்திருக்கிறோம். எங்கள் வீட்டில் கூட ஒரு முறை முயல் கறி சமைத்தது ஞாபகம் இருக்கிறது.

வெளிநாடு போய் வந்தவர்கள் அதிக திறனுள்ள டார்ச் லைட்டுகள் கொண்டு வருவார்கள். இரவில் முயலை நோக்கி அடித்தால் வெளிச்சத்தையே பார்த்துக் கொண்டு அப்படியே நின்று விடும். பக்கத்தில் போய் காதுகளைப் பிடித்துத் தூக்கி சாக்குப் பைக்குள் போட்டுக் கொள்ள வேண்டியதுதான். செவல்காட்டில் ஒளிவதற்கு செடிகள் கூட இல்லாததால் எளிதாகப் பிடித்து விடலாம். எமது சிறு வயதுகளில் அதிகமாகத் தென்படும். இன்று அரிதாகிவிட்டன.

ஊரில் மயில்கள் நிறைய இருந்தன. கிழக்கு கண்மாய் காடுகளில் போட்டிருக்கும் கடலைகளைப் பொறுக்க கூட்டமாக வரும். கரிசல் காடுகளிலும் அதிகமாகப் பார்க்கலாம். சில நேரங்களில் மொத்தமாகச் சேர்ந்து காட்டுக்கத்தல் போடும். ஊர்க்காரர்கள் யாரும் மயிலை வேட்டையாடமாட்டார்கள். ஒரு குறிப்பிட்ட ஊரைச் சேர்ந்த தேவேந்திரர்கள் எங்கள் ஊர் காடுகளில் மயிலை வேட்டையாடி தோளில் சுமந்து செல்வதைப் பார்த்திருக்கிறோம். மயில் தோகை சேகரிப்பதும் சிறுவர்களுக்கு பிடித்தமானதே. இருமலுக்கு மயில் தோகையைச் சுட்டு தேன் கலந்து கொடுப்பார்கள். கொமட்டிக்கொண்டு வரும்.

அன்று ஊரில் பாம்புகளுக்குப் பஞ்சமிருக்காது. ஊரைச் சுற்றி கண்மாய்கள் என்பதால் சாரைப்பாம்புகள் அதிகமாகச் சுற்றித் திரியும். நெல் வயல்களிலும் ஊர்ந்து திரியும். அளவும் பெரியதாக இருக்கும். வயல்கள் வழியாக நடந்து சென்றால் எப்படியும் ஒன்றிரண்டைப் பார்த்து விடலாம். கிழக்குக் கண்மாயில் நீருக்கு மேல் எட்டிப் பார்க்கும் பாம்புத் தலைகளை எண்ணிக் கொண்டு திரிந்தெல்லாம் இனிமையான பொழுதுகள். சில பாம்புகள் தண்ணீரைக் கிழித்துக் கொண்டு வெகுதூரம் வரை நீந்திச் செல்லும் காட்சி ரசிக்கும்படியாக இருக்கும். தண்ணீர் பாம்பை நல்ல பாம்பு என நினைத்து பீதியடைவதும் கிராமத்தில் அடிக்கடி நடக்கும். ஒருமுறை குப்பைமேடு மின்சாரக் கம்பம் அருகே, இரண்டு சாரைப் பாம்புகள் பின்னிக் கொண்டு விளையாடியதை தெருவே நின்று பார்த்தது.

எங்கள் புதுவீடு இருக்கும் இடத்தில் முன்பு குப்பை மற்றும் வேலிக்கருவச் செடிகள் இருந்ததால், பாம்புகள் ஒளிந்துக் கொள்வதற்கு வசதியாக இருக்கும். அன்று ஊமத்தச் செடிகளாக நிறைந்திருக்கும். ஊமத்தங்காயில் முட்கள் போன்று நீட்டியிருக்கும். இலைகளைப் பிடுங்கி, அடுப்புக் கரியோடு சேர்த்து அரைத்து பள்ளிக் கூட எழுது பலகையைத் துடைத்ததுண்டு. பள்ளிக் கூடச் சோதனைக்கு வருகிறார்களெனில், ஊமத்தை இலை இடித்துத் தடவுவது தவறாமல் நடக்கும்.

பள்ளிக்கூடத்தின் மேற்கே கருவக் காடுகள் இருந்தன. பாம்பு பிடிப்பவர்கள் வந்தால் இங்குதான் தேடுவார்கள். வடக்கே பாதை ஓரமாக புற்று ஒன்றும் இருந்தது. ஒருமுறை பாம்பு பிடிப்பவர்கள் ஒரு நாள் முழுக்க அங்கேயே இருந்து பாம்பு பிடித்தார்கள். இந்தப் பகுதியில் பாம்புச் சட்டைகளும் அதிகம் கிடக்கும்.

நல்ல பாம்பு, கட்டுவிரியன், கண்ணாடி விரியன் போன்ற கொடிய நச்சுப் பாம்புகளையும் ஊரில் பார்த்திருக்கிறோம். கண்ணாடி விரியன்கள் பெரியதாக இருக்கும். அகமுடையார் தெருவில் ஒரு வீட்டில் இரண்டு மூன்று கண்ணாடி விரியன்கள் இருந்து அடித்ததைப் பார்த்திருக்கிறோம். கட்டு விரியன்கள் இரவு நேரங்களில் கோழிக் குஞ்சு பிடிக்க வருவதாகச் சொல்வார்கள். மாடுகள் தேவை இல்லாமல் கத்தினாலோ, மிரண்டாலோ ஏதோ பாம்பு வந்திருப்பதாக ஊகிப்பதுண்டு.

வளர்மதி சிறு பெண்ணாக இருந்த போது வீட்டுச் சுவர் அருகே வாத்தியார் பாண்டி அண்ணனும் இன்னும் இரண்டு பேரும் ஆடு புலி ஆட்டம் ஆடிக் கொண்டிருந்தார்கள். யாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோம். திடீரென ஒரு கட்டு விரியன் எங்கள் இரண்டு வீட்டுக்கும் இடையிலிருந்த முற்றத்தைத் தாண்டிப் போனது. நடை வாசலில் வளர்மதி உட்கார்ந்திருந்தார். பாண்டி அண்ணன் ஒரு கல்லை எடுத்து எறிந்தார். நல்ல வேளையாக குறி தவறாமல் அதன் தலையில் பட்டு தலையே நசுங்கி விட்டது. அவருக்கு அது பெரிய ஆச்சரியமாகப் போய்விட்டது. அண்ணனை அனைவரும் பாராட்டினார்கள். இன்னொரு முறை அவர்கள் வீட்டுக்குள் சென்ற ஒரு பாம்பு பாத்திரத்தின் அடியில் சென்று ஒளிந்து கொண்டது. தேடித் தேடி சலித்து விட்டார்கள். யாமும் உடனிருந்தோம். வீட்டிற்குள் வந்தது எங்கடா போய் ஒளிந்திருக்கும் எனக் கடைசியில் கண்டு பிடித்து கூடுதலாக பல அடிகள் வாங்கி அந்தப் பாம்பு செத்தது. பாம்பைப் பார்த்தால் அடித்துக்

கொள்வதுதான் ஒரே வழி. அதை உயிரோடு பிடிக்கவெல்லாம் முயற்சி செய்யமாட்டார்கள்.

எங்கள் கூரை வீட்டைப் பிரித்து ஒட்டு வீடு போடுவதற்கு மேற்குச் சுவரைத் தோண்டும்போது இரண்டு பெரிய நாகப் பாம்புகள் உள்ளே இருந்தன. இரண்டையும் அடித்து பால் ஊற்றிப் புதைத்தார்கள். நல்ல பாம்பென்றால் அனைவருக்கும் பயமே. சர்ரென்று காலுக்குள் வந்து விடும். அது போடும் உஸ் சத்தமும் பயத்தை வர வைப்பதாக இருக்கும்.

முனியசாமி அண்ணன் சௌதியிலிருந்து வந்த பின் ஒருமுறை பனை ஓடைக் கரையில் மதியம் போல் இருவரும் பேசிக் கொண்டு நடந்து சென்றோம். ஓடையில் தண்ணீர் தேங்கியிருந்தது. ஓடைப் புதருக்குள்ளிருந்து நல்ல பாம்பு சட்டென வெளியே வந்தது. ஓடை அருகே சென்று அற்புதமாகப் படமெடுத்து வெகுநேரம் நின்றது. அருகே போய் பார்க்கலாம் என்று கீழே சென்றோம். எங்களைப் பார்த்தவுடன் தண்ணீரில் நீந்தி அந்தப் பக்கமாகச் சென்று விட்டது. நல்ல பாம்பு தண்ணீருக்குள் நீந்திச் செல்வதை அன்றுதான் கண்டோம். அதற்குமுன், நல்ல பாம்பு நீரில் நீந்தாது என நினைத்துக் கொண்டிருந்தோம். மேலும் படம் எடுத்து ஆடியதை அருகில் இருந்து பார்த்ததும் அன்றுதான்.

கட்டு விரியன் போல் தோற்றமளிக்கும் குறண்டிப் பாம்பு என்ற ஓலைக் பாம்புக்கும் உடலில் சிறு சிறு கட்டுகள் இருக்கும். குறண்டிச் செடிகளில் இருப்பதால் குறண்டிப் பாம்பு. செடியின் தூரைச் சுற்றிப் படுத்திருக்கும். நிறமும் தூர் போன்றே இருக்கும். அளவில் சிறியது. கடித்தால் உயிர் போகாது. உடல் வீங்கும். புண் லேசில் ஆறாது. அரிப்பும் தாங்காது. இரவில் பாதை அருகே படுத்திருக்கும். தெரியாமல் காலை வைப்பவர்கள் கடியிலிருந்து தப்ப முடியாது. இருட்டில் என்ன பாம்பு கடித்தது என்றும் தெரியாது. பெரியவர்கள் ஒரளவிற்கு சரியாகக் கணித்து விடுவார்கள்.

பச்சைப் பாம்புகளை மழைக்காலத்தில் அதிகமாகப் பார்க்கலாம். சேர்வைக்காரர் தோட்டத்தில் பாதையோரம் கோவாக்காய் செடிகள் அடர்த்தியாகப் படர்ந்திருக்கும். அருகே கருவச் செடிகளும், மஞ்சனத்திச் செடிகளுமாக நிறைந்திருக்கும். கொஞ்சம் நின்று அங்கே கவனித்துப் பார்த்தால் சாட்டை போன்று செடிகள் மேலே பச்சைப்பாம்பு படுத்திருக்கும். சிறு சத்தத்திற்கும் பாய்ந்தடித்து ஓடி

விடும். கிட்டே போனால் கண்ணைக் கொத்தி விடும் என சிறுவர்களைப் பயங்காட்டி வைத்திருந்தார்கள்.

மண்ணுளிப் பாம்புகள் தனி ரகம். கிழக்குக் கண்மாய் வயல்களை உழும்போது வெளியில் வரும். மெத்தென்று கட்டையாக உருளைக் கட்டை போன்று அடர் பழுப்பு நிறத்தில் இருக்கும். இருபக்கமும் நகர்ந்து செல்லும். சிறுவர்கள் பார்த்தால் விடமாட்டார்கள். எவ்வளவு அடித்தாலும் சாகாது. நகர்ந்து கொண்டே இருக்கும். செத்தைகளைப் போட்டு எரித்து சாகடிப்பார்கள்.

நாக்குலாம் பூச்சி என்ற சிறு பாம்பு சுவர் ஓரங்களில் திரியும். இருட்டில் சுவர் ஓரமாகவே ஊர்ந்து வரும். கரிசல் காடுகளில் குழிப்பாம்பு இருக்கும். சிறியதாக ஒல்லியாக இருக்கும். களையெடுக்கும் போதும், இலந்தைப் பழம் பறிக்கப் போகும் போதும், குழிப்பாம்பு குழியை மிதிக்கக் கூடாது என எச்சரிக்கையாகச் சொல்லி வைப்பார்கள். சிறு குழி தோண்டி தலையை மேலே வைத்திருக்கும். இது கடித்தாலோ, நக்கினாலோ விரல்கள் கொஞ்சம் கொஞ்சமாக தேய்ந்து விடும் எனச் சொல்வார்கள். பெரும்பாலும் இது கரிசல்காட்டு தரிசு நிலங்களில் தான் இருக்கும். குழியை விட்டு வெளியே வருவது மிகவும் அரிது.

செவக்காடுகளில் சீனிக்கற்கள் அடியில் சிறிய செந்தேள்கள் ஒளிந்திருக்கும். கருந்தேள், நட்டுவாக்காலியும் பார்க்கலாம். நட்டுவாக்காலி கடித்தால் கடுமையான விஷம் ஏறுமெனச் சொல்வார்கள். கரிசல் காடுகளிலும் தேள், பூரானுக்குப் பஞ்சமிருக்காது. பூரானை ஆண்கள் அடிக்கக்கூடாது எனச் சொல்வார்கள். சீயான் பூரானை விடப் பெரியதாக இருக்கும். ஒரு முறை எங்கள் பருத்திக் காட்டுக்குச் செல்வதற்காக கீரைக்காரர் தோட்டப் பாதையில் ஓடையைக் கடந்து அம்மாவோடு சென்று கொண்டிருந்தோம். கரை ஏறும் இடம் அருகே பெரியதொரு சீயான் போய்க் கொண்டிருந்தது. அவ்வளவு பெரிய சீயானை அதுவரை பார்த்ததில்லையெனச் சொன்னார்.

ஓணான், பச்சோந்தி தவிர, வேகமாகப் பாய்ந்தோடும் சீயானும் காடுகளில் திரியும். வீட்டுக் கொல்லையில் விறகு மேல் ஏறி நிற்கும். இதைப் பிடிப்பது கடினம். இறக்கை போன்று இருப்பதால் சிட்டாக ஓடி மறைந்து விடும். வீடுகளில் பல்லி, கௌலி, அரணைகளும் சாதாரணமாகத் திரியும். பல்லி முட்டைகள் சிறியதாக மெத்தென்று இருக்கும்.

ஊரில் தேன்சிட்டுகள் அதிகமாக இருந்து பார்த்திருக்கிறோம். மழைக் காலங்களில் பூக்களில் தேனருந்தித் திரிபவைகளைக் காணும் போது மனம் மகிழ்ச்சியடையும். கொண்டையாட்டிக் குருவிகளும் ஆங்காங்கே தென்படும். வெட்டுக் கிளி பிடித்துத் தரிவதும் ஒரு விளையாட்டே. குச்சிப் பூச்சிகளைப் பற்றி சொல்லவே வேண்டாம். காய்ந்த இலைச் சருகு போன்றும், பச்சை வண்ணங்களிலும் இவை சிறுவர்களிடம் மாட்டும். இவற்றின் கால்களில் முட்கள் இருக்குமென்பதால் ஜாக்கிரதையாகவே இவற்றைப் பிடிக்க வேண்டும்.

பிள்ளைப்பூச்சி என்ற வண்டு ஈரப்பதமான இடங்களில் அதிகமிருக்கும். மண்புழுவுக்கு மண்ணைத் தோண்டும் போது இதுவும் வெளியே வரும். பிள்ளைப்பூச்சி என அழைப்பதால் இதைக் கொல்லக் கூடாது என்பார்கள். காவல் நிலையங்களில் விசாரணையின் போது இதைப் பிடித்து பனியனுக்குள் போட்டு விடுவார்கள் என்றும், இது ஒரிடத்தில் இல்லாமல் அங்கும் இங்கும் ஊர்ந்து திரிவதைத் தாங்காமல் உண்மையைச் சொல்லி விடுவார்கள் எனவும் சொல்லக் கேட்டிருக்கிறோம்.

சீயானைப் போலவே தண்ணீர் பூச்சிகளையும் பிடிக்க முடியாது. குளத்தண்ணீரில் கரையோராமாக அங்குமிங்குமாக ஓடிக் கொண்டிருக்கும். வீடுகளில் கரப்பான் பூச்சிக்கும், சிலந்திக்கும் இடமிருக்கும். கரப்பான் பூச்சிகளை அதிகம் பார்த்ததாக ஞாபகமில்லை.

தேனீக்களிடம் கொட்டு வாங்காத சிறுவர்கள் அரிது. மிகச் சரியாக கண்ணாம்பட்டையிலும், உதட்டிலும் கொட்டி வைக்கும். தேனெடுத்துத் திரிந்த காலங்கள் தித்திப்பானவை. விடுமுறை நாட்களில் தேனைடுத்துத் திரிவது நல்ல இனிப்பான பொழுதுபோக்காக அமையும். நண்பர்களோடு சேர்ந்து காடெல்லாம் சுற்றித் திரிந்திருக்கிறோம். வேல்முருகன், தங்கப்பாண்டி போன்றவர்கள் தேனெடுப்பதில் சமத்தர்கள். கொல்லைகளில் கிடக்கும் விறகுக் குச்சிகளில் தேனீக்கள் கூடுகட்டியிருக்கும். முகத்தை மூடிக்கொண்டு நைசாகப் போய் விறகோடு சேர்த்து தூக்கிக்கொண்டு வந்துவிடுவார்கள். பள்ளிக்கூடத்திற்கு கிழக்கே கிடந்த வேலிக்காட்டில் ஏராளமான தேன்கூடுகள் இருக்கும். கஞ்சம்பட்டி கண்மாய் கலுங்கில் மலைத்தேனீக்கள் கட்டியிருந்த கூட்டில் கல்லெரிந்த அனுபவங்களும் உண்டு. தேனடைகளை கைகளில் நசுக்கி தேனைக் குடித்தபின் கைகளை தலையில் தேய்கக்கூடாது. தேய்த்தால் முடி நரைக்கும் என்பார்கள்.

ஊரில் கரையான்கள் மானாவாரியாக இருக்கும். பனிக்காலங்களில் எங்கு பார்த்தாலும் சிறு சிறு கூடுகளாகக் கட்டி வைத்திருக்கும். கரையான் வீடுகளை எத்தி உதைத்துத் சிதறடிப்பது சிறுவர்களுக்குப் பிடித்தமான விளையாட்டு. முதல் நாள் ஒன்றுமே இருக்காது. காலையில் பார்க்கும் போது ஏராளமான கூடுகள் முளைத்திருக்கும். அவ்வளவு கரையான்கள் திடீரென எங்கிருந்து வருகின்றனவோ. புற்றைச் சிதைத்த பின், கரையான்கள் அலை பாய்ந்து திரியும். மண் பொருபொருவென இருக்கும். கைகளில் அள்ளினால் மிருதுவாகத் தெரியும். ஊரில் அனேக இடங்களில் பெரிய புற்றுக்களையும் பார்த்திருக்கிறோம். சில புற்றுக்களில் அதிகமான துளைகள் இருப்பதுண்டு. சில சேட்டைக்காரர்கள், மாடு மேய்க்கும் கம்பை புற்றுக்குள் நுழைத்து ஆட்டுவதுண்டு. பாம்பு வரப் போகுதுடோய் எனப் பயங்காட்டுவார்கள். மாமாவின் வன்னியந்தார் காடு அருகே ஒரு வளர்ந்த புற்று இருந்தது.

மழைக்காலங்களின் மற்றொரு ஆச்சரியம் ஈசல்கள். பல்லிகள் சிறு பூச்சிகளை அப்படியே லபக்குவது போல், ஓடி ஒடி ஈசலைப் பிடித்துத் தின்று திரிந்த அந்தச் சிறுவன் யாம்தானா என வியப்பாக உள்ளது. வீட்டில் எரியும் மண்ணெண்ணெய் விளக்கிற்கு ஈசல்கள் பறந்து வரும். சாப்பிடும் வரைக்கும் கூட விளக்கை வைத்திருக்க முடியாது. ஒன்றிரண்டாக வர ஆரம்பிப்பது சிறிது நேரத்தில் திமுதிமுவென நுழைந்துவிடும். றெக்கையைப் பிய்த்துப் போட்டு விட்டு அப்படியே மெல்ல வேண்டியதுதான். சுவையாகவும், பால் போன்று திரவமாகவும் இருக்கும். வீட்டு அருகே இருந்த மின்சாரக் கம்பத்திற்கு படையெடுத்து வந்து விடும். கூடைக் கொட்டானை வைத்தால் சிறிது நேரத்திலேயே நிறைந்து விடுமளவிற்கு வந்து விழுந்து கொண்டே இருக்கும். கீழே கிடப்பதை கைகூட்டி அள்ளும் அளவிற்கு இரவுகளில் குமிந்து கிடக்கும். கீழே விழுந்த சிறிது நேரத்திலேயே இறக்கைகள் பிய்த்து விடும். சிறிது நேரத்திற்கு அங்மிங்கும் ஊர்ந்து திரியும். சங்க மடம் விளக்கில் ஈசல்கள் போகும் வரை குத்தும் வேலையும் நடக்காது. கண்மாய்க்குள் இருந்த கம்பத்தில் இன்னும் அதிகமான ஈசல்கள் மொய்க்கும்.

ஈசலைப் வறுத்துத் தின்பதில், அப்படியே தின்பதைக் காட்டிலும் சுவை அதிகம். கூடவே பச்சரிசியும் போட்டுக் கொள்வதுண்டு. எமது அப்பா, இரவில் செவல்காட்டுப் புற்றுகளில் ஈசல் பிடிக்கவும் செல்வார். ஈசல் பிடிக்கும் முத்தும் வைத்திருந்தோம். புற்றை துணியால் மூடி ஈசல் முத்தை வைத்து சிறிது புகை மூட்டம் காண்பித்தால் போதுமாம். அத்தனை ஈசல்களும் வெளியே வந்துவிடுமெனச்

சொல்வார். அள்ளி வருவதை தின்று தீர்க்க முடியாது. அகரத்துப்பட்டிக்கும் ஈசல்கள் பைகளில் போய்ச் சேரும். பெரியவர்கள் வறுத்த ஈசலை மிகவும் விரும்பி உண்பார்கள்.

மழைக்காலத்தின் புது வரவாக காடுகளில் வெள்ளிக் குடை போன்று காளான்கள் ஏகத்துக்கும் முளைத்து விடும். சிலர் பச்சையாகச் சாப்பிடுவார்கள். வீட்டிற்குப் பிடுங்கி வந்து குழம்பு வைத்ததாக ஞாபகமில்லை. கொல்லையில் கிடக்கும் விறகுக் கட்டைகளில் பூஞ்சைக் காளான் நிறைய ஒட்டியிருக்கும். சிறுவர்களுக்கு மிகவும் பிடித்தமானது, புகையைக் கக்கும் காளான். கூம்பு போன்று இந்தக் காளான் வளர்ந்திருக்கும். காலால் தட்டினாலோ, கம்பால் அடித்தாலோ கரும்புகை இதிலிருந்து வரும். ஒரு காளானும் விடாமல், தேடித் தேடி அடித்து மகிழ்வதுண்டு. சில சமயங்களில் பெரிய அளவிலான வட்டக் காளானும் கிடைக்கும். கீழே போடாமல் கையிலேயே தூக்கித் திரிவார்கள்.

கள்ளிப் பழங்கள் பிடுங்கப் போய், கையெல்லாம் கள்ளி முள் குத்தின கதையும் உண்டு. இராஜேந்திரத் தலவர் கிணறு அருகே ஒடைக் கரையில் நிறைய கள்ளிச் செடிகள் வளர்ந்திருக்கும். கள்ளிப் பழங்கள் சிவப்பாக, கவர்ந்திழுக்கும் விதமாகப் பழுத்திருக்கும். பழத்தில் கொத்துக் கொத்தாக சிறு முட்கள் இருக்கும். பழங்களைப் பிடுங்கும் போதே எப்படியும் முட்கள் குத்திவிடும். பிடுங்கி கீழே தரையிலோ கல்லிலோ முட்களை உரச வேண்டும். ஆர்வக் கோளாறில் முட்கள் நீக்கியதாக நினைத்து கொண்டு சாப்பிடுவோம். உதட்டிலோ நாக்கிலோ முட்கள் தைத்து பெரும்பாடாகி விடும். முட்களுக்குப் பயந்தால் பழங்களை ருசி பார்க்க முடியுமா. முட்களை லாவகமாக உரசத் தெரியாதவர்களுக்கு, நண்பர்கள் உரசிக் கொடுப்பார்கள். கள்ளிப் பழத்தினுள் விதைகளும் முட்கள் போல் இருக்கும். அவற்றைத் துப்ப வேண்டும். பழங்கள் உண்டபின் நாக்கும் உதடும், உதட்டுச் சாயம் பூசியது போல் செவப்பாக இருக்கும். மாடுகள் ஓட்டிச் செல்லும் போது கள்ளிப் பழங்கள் தப்பாது. பூக்களும் மிகவும் அழகாக இருக்கும்.

ஊரில் நண்டுகளுக்கும் குறைவிருக்காது. வயல் நண்டுகள் ஏராளமாக இருக்கும். பிடிக்கப் போனால் குடுகுடுவென வயல்களுக்குள் ஓடி மறைந்து விடும். சிறிய பச்சை, செந்நிற நண்டுகளே அதிகமிருக்கும். பெரிய நண்டுகள் கண்மாயக் கரையோர பொந்துகளில் ஒளிந்திருக்கும். குச்சியை விட்டு எடுத்து விடலாம். பையன்கள் இடது கையால் லாவகமாக கொடுக்கை அமுக்கிப் பிடித்துக்

விடுவார்கள். பிடித்து சிறிது நேரம் விளையாடி விட்டு தரையில் எறிந்து கொன்று விடுவார்கள்.

கண்மாய்களில் தண்ணீர் வற்றும்போது பலவித நிறங்களில் நண்டுக் கூடுகள் ஆங்காங்கே கிடக்கும். சில சமயங்களில் முழு நண்டின் ஓடும் கிடப்பதுண்டு. தூண்டிலில் நண்டு மாட்டுவது அபூர்வம். மீன் பிடிக்க வலைபோட்டு அரிக்கும்போது நிறைய நண்டுகள சிக்கும். கீழே வலையைக் கொட்டிய உடனேயே வேகமாக தண்ணீருக்குள் சென்று விடும். பெரிய நண்டுகளை கையில் பிடிப்பவரே எங்களில் பெரிய வீரராகக் கருதப்படுவார்.

எமது அப்பாவிற்கு நெஞ்சுத்தக வந்ததற்கு நண்டுச் சாறு இடித்துக் கொடுக்க சடையன் கண்மாயில் ஒரு நாள் முழுக்க, வலைகளில் நண்டு பிடித்துத் திரிந்தோம். நண்டைக் கொண்டு வந்து பச்சையாக உரலில் போட்டு இடித்து, சாறு பிழிந்து, ரசம் போல் வைத்துக் கொடுத்தார்கள்.

நத்தைகளுக்கும், அட்டைகளுக்கும் ஊரில் இடமிருந்தது. சிறு நத்தைகளும், பெரிய கூடு நத்தைகளும் ஏராளமிருந்தன. நத்தை ஊர்ந்து செல்லும் போது குச்சியை எடுத்து தலையைத் தொட்டால் போதும். உடனே தலையை இழுத்துக் கொள்ளும். மேற்குக் கண்மாய்க்கும், காங்கேயன் தோட்டத்திற்குமிடையில் கிடந்த வேலிக் காடுகளுக்குள், பெரிய நத்தைகள் ஏராளமிருக்கும். கோடைகால ஆரம்பத்தில் அந்தப் பகுதி முழுவதுமே நத்தைக் கூடுகளைாகவே காட்சியளிக்கும். கருவக் குச்சிகளிலும், கூடுகள் சடை சடையாக ஒட்டிக் கொண்டிருக்கும். இவ்வளவு நத்தைகள் இருந்து செத்துப் போய் விட்டனவா என வியப்பாக இருக்குமளவிற்கு எங்கு பார்த்தாலும் கூடுகளாகக் கிடக்கும். வடபாதிமங்கலத்தில் சில வீடுகளில் நத்தையை சமைப்பதைப் பார்த்திருக்கிறோம். சட்டியில் போட்டு அலசுவதைக் கூட கவனித்திருக்கிறோம். எமது தந்தை கூட, நத்தைக் குழம்பு சாப்பிட்டிருப்பார் போல் தெரிகிறது.

அட்டைகளைப் பார்த்தால் சிறிது கலக்கமாக இருக்கும். இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்குமென்று சொல்லியிருக்கிறார்களில்லையா. சேர்வைக்காரர் கிணற்றுக்குக் காலையில் குளிக்கப் போகும்போதும், வரும்போதும் சாலையைக் கடந்து பல அட்டைகள் போய்க் கொண்டிருக்கும். சாலையின் ஓரங்களில் முளைத்திருக்கும் புற்களின் மீது ஒட்டிக் கொண்டிருக்கும். நகரும் போது

உடலிலிருந்து நீர்போல் ஒரு திரவம் கூடவே வந்து கொண்டிருப்பதால் அட்டைகளைப் பார்த்தாலே எமக்கு அய்யரவாக இருக்கும்.

தவளையாரை பற்றிச் சொல்லாவிட்டால் கோவித்துக் கொள்வார். பருவ மழை கூடவே தவளைச் சத்தத்தையும் கூட்டி வந்து விடும்போல. கிழக்குக் கண்மாய்க்கு தண்ணீர் வந்தவுடன் தவளைகளும் வந்து விடும். மொக்கை மொக்கையான தவளைகளாக இருக்கும். காலை நோங்களில் கரையோரமாக வெய்யில் காய்ந்து உட்கார்ந்திருப்பார்கள். தவளைகளை அடிக்கவென்றே மெனக்கெட்டுப் போவோம். கம்பை எடுத்துக் கொண்டு அடிக்கப் போனால் ஒவ்வொன்றாக தண்ணீருக்குள் குதித்து ஓடி விடும். குட்டித் தவளைகளைப் பிடித்து ஒருவர் மேல் ஒருவர் எறிந்து விளையாடுவதும் நடக்கும். அரட்டாவலையை பிடித்துத் திரிவதும் கைவந்த கலையே. தலைப் பிரட்டையைத்தான் இப்படி அரட்டாவலை என எங்கள் ஊரில் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். நல்ல வேளை குறட்டாவலை எனச் சொல்லாமல் விட்டார்கள். சொன்னாலும் தப்பில்லை. குறட்டை விடுவது போல் தான் கத்தும். ஆனாலும் நாவல் பழத்தை லவ்வாப் பழமென்று சொல்வது எங்கள் ஊர்க்காரர்களுக்கு கொஞ்சம் ஓவர்தான். வீட்டில் இரவு சாப்பிடும் நேரத்தில் திடீரென்று வரிசையாக வீட்டிற்குள் னுழைந்து விடும். ஒவ்வொன்றாகப் பிடித்து தூரமாக போட்டு விட்டு வருவோம். ஊரில் தேரைகளுக்கும் குறையிருக்காது.

கரிசல் காடுகளில் நரியும் பார்த்திருக்கிறோம். சிறுவர்கள் காட்டுக்குத் தனியாக போகக் கூடாது, நரி பிடித்துக் கொண்டு போய் விடும் எனப் பயங்காட்டுவார்கள். நத்தக்காடு செல்லும் வண்டிப் பாதையில் ஒற்றைப் பனைமரம் இருக்கும். அருகில் பெரிய உப்பு ஓடை இருக்கிறது. ஊற்று தோண்டினால் தண்ணீர் உப்புக்கரிக்கும். இந்த பகுதியில் கொஞ்சம் அடர்ந்த காடுகள் இருந்தன. நரிகள் நடமாட்டம் இங்கு இருந்ததை சில முறை பார்திருக்கிறோம்.

தோட்டங்களில் கடலைக் காவலுக்கு வெடி உருண்டை வைத்து விடுவார்கள். கடலை திங்க நரி வருமா அல்லது கடலை திங்க வரும் பன்றிக் குட்டிகளைத் திங்க நரி வருமா எனத் தெரியாது. வெடியின் மேல் தடவியிருக்கும் ஆட்டுக் கொழுப்பைக் கடிக்கும் போது வெடி வெடித்து விடும். பாவம் நரியார். பிழைத்துக் கொண்டால் தோட்டத்துப் பக்கம் மறுபடியும் எட்டிக் கூடப் பார்க்க மாட்டார். ஒரு முறை ஊரில் ஒருவர், தோட்டத்தில் கடலைக் காட்டில் மின்சாரக் கம்பி வைத்திருக்கிறார்.

சாமத்தில் அங்கே போன ஒரு பையன் மின்சாரம் பாய்ந்து இறந்தே விட்டார். இரு வீட்டார்களுக்கும் சமாதானம் நடந்ததாகத் தெரிகிறது. ஊரில் ஒரு சமயம் அண்ணன், தம்பி இருவரும் இருட்டில் மோட்டார் போடப் போய் மின்சாரம் பாய்ந்து இறந்ததும் நடந்தது.

ஊரில் தற்கொலைச் சாவுகளும் அதிகம் நடந்தன. சமீபத்தில் இரு இளம் வயதுப் பையன்கள் பெற்றோர், மனைவி, குழந்தைகளை கண்ணீரில் மிதக்க விட்டு, சாவை நோக்கிச் சென்றது மிக மிக துரதிஷ்டவசமானது. மானத்திற்கும், ரோசத்திற்கும், வீரத்திற்கும் பெயர் பெற்ற எங்கள் மதுரை மண், தற்கொலைக்கும் பெயர் வாங்க ஆசைப்படுகிறது போலும். மண்ணின் மீதான வாழும் ஆசையை வெறுத்துத்தானே இத்தகைய முடிவை நொடிப் பொழுதில் எடுத்து விடுகிறார்கள். அன்புக் குழந்தைகளின் அழகான சிரிப்பைப் பார்த்த பின்னும் வாழும் ஆசை வராமல் போவது எதனாலோ.

மின் விசிறி வராத காலத்தில் உத்திரத்தில் தூக்குப் போட்டுச் சாவார்கள். நீச்சல் தெரிந்திருக்குமென்பதால் கிணற்றில் எல்லாம் குதிக்கமாட்டார்கள். அப்படியும் ஒருவர் குதித்து இன்று வரை நடப்பதற்கு சிரமப்படுகிறார். தற்போது மண்ணெண்ணெய் ஊற்றி தீய் வைத்துச் சாக ஆரம்பித்திருக்கிறார்கள். ஒரு பெண் குடும்ப பிரச்சினையில் கரிக்கட்டையாக எரிந்து கிடந்ததாகக் கேள்விப்பட்டு மனம் வருந்தியது. எமது கல்லூரிக் காலத்தில் குடும்ப பிரச்சனையில் ஒரு பெண் நெருப்பு வைத்தும் இறந்திருக்கிறார்.

எமது அப்பா ஒரு முறை மொக்கக் குடித்து விட்டு இராவெல்லாம் உத்தரத்தில் ஏறி உட்கார்ந்திருந்தார். ஓட்டு வீடு கட்ட ஆரம்ப கட்ட வேலைகள் நடந்த சமயமது. அம்மாவுடன் ஏதோ தகராறு வந்து விட்டதாம். எல்லோரும் வந்து சத்தம் போட்டார்கள். அந்த நிகழ்விற்குப்பின் குடிப்பதை வெகுவாக விட்டு விட்டார் என்றே சொல்லலாம். பண்டிகை நாட்களோடு சரி. குடித்த அன்றும் வீட்டை விட்டுச் செல்ல மாட்டார்.

எங்கள் ஊரைச் சேர்ந்த பலரின் உன்னதமான உயிரைப் பறித்ததில் முக்கிய பங்கு வகிப்பவை, வேறொன்றுக்கும் உதவாத அரளிச் செடிகளே. பூச்சி மருந்துக்கும் பலியானோர் உண்டு. நாகராஜ் பிள்ளை தோட்டம் அருகே இருக்கும் ஓடையில், மரங்கள் போன்று அரளிச் செடிகள் வளாந்திருக்கும். கீரைக்காரர் தோட்ட ஓடைக் கரையிலும் அனேகச் செடிகள் இருந்தன. யாராவது ஒருவர் இறந்த பின்பு

ஆக்ரோசமாகச் செடிகளை வெட்டிப் போடுவார்கள். அத்தோடு மறந்து விடுவார்கள். ஆனால் அரளிச் செடிகள் அடுத்த உயிருக்கு உலை வைத்து வளர்ந்து நிற்கும்.

அரளிக் காய்களைப் பிடுங்கி வந்து கசக்காமல் இருப்பதற்கு வெல்லக் கட்டி சேர்த்து அரைத்துக் குடித்து விடுவார்கள். அரைக்கும்போது என்னவெல்லாம், யாரையெல்லாம் நினைப்பார்களோ. பேச்சுவாக்கில் யாரேனும் ஒருவரிடமாவது சாகப்போவதாகச் சொல்லியிருப்பார்கள். சும்மா விளையாட்டுக்குச் சொல்வதாகவே பெரும்பாலும் எடுத்துக் கொள்வார்கள். செத்தபின்பு சொல்லி அழுவதால் என்னாகப் போகிறது. குடித்தவர்கள் அரளிக்காயை குடித்து விட்டோமென்றோ மருந்தைக் குடித்துவிட்டோமென்றோ சொல்ல மாட்டார்கள். குடித்த உடனேயே தெரிந்தால் எப்படியும் வாந்தி எடுக்க வைத்து காப்பாற்றி விடுவார்கள். பெரும்பாலும் உடல்நலம் பாதிக்கப்படும்போதே மற்றவர்க்குத் தெரியவரும். இன்றைக்காவது வீடு தவறாமல் மோட்டார்வண்டி இருக்கிறது. அள்ளிப் போட்டுக்கொண்டு உடனே ஆஸ்பத்திரிக்குச் சென்று விடலாம். அன்று மிதிவண்டியிலோ, மாட்டு வண்டியிலோ ஏற்றி, முக்கிய சாலைக்குச் சென்று பேருந்துக்குக் காத்திருக்க வேண்டும். உயிர்தான் காத்திருக்காது.

ஆண்கள் இரவில் குவாட்டரில் ரோக்கரைக் கலந்து குடித்துவிட்டு படுத்து விடுவார்கள். வீட்டினர் ஏதோ தூங்குகிறார் என்றே நினைப்பார்கள். எழுப்பும்போதே தெரியும், இனி எழுந்திருக்கவே மாட்டார் என்பது. மதுபானத்தோடு மருந்தைக் கலந்து குடிக்காத சிலரை காப்பாற்றவும் முடிந்திருக்கிறது. நீரில் சாணத்தைக் கரைத்து ஊற்றுவார்கள். இன்னொன்றையும் கரைத்து ஊற்றுவார்கள். பிழைப்பவர் இதை நினைத்து, மற்றொரு முறை இதுபோல் முயற்சி செய்யக் கூடாது என்பதற்கே இதைக் கரைத்து ஊற்றுவது.

எமக்குத் தெரிந்து தேவேந்திரர்களில் பல பேர் இறந்திருக்கிறார்கள். காதலின் பேரால் மணமாகாத இருவர். இவர்கள் காதலர்களாகச் சொல்லப்பட்டவர்கள் குழந்தை குட்டிகளோ சந்தோஷமாகவே வாழ்கிறார்கள். அவர்களாவது நீண்ட ஆயுளோடு வாழட்டும். நான்கு ஆண்கள் சாப்பாட்டுப் பிரச்சனையில் இனி இருந்து என்னாகப் போகிறது என்ற நினைப்பில் உயிரை மாய்த்துக் கொண்டார்கள். இரண்டு, மூன்று பேர் ஒன்றுக்குமில்லாத சிறு குடும்பச் சண்டைகளில் ஆத்திரத்தில் மாண்டு விட்டார்கள்.

கிராமத்தில் இன்னொன்றும் நடக்கும். குடும்பத் தகராறில் பெண்களை அடித்துக் கொன்று விட்டு தூக்குப் போட்டு செத்து விட்டார் எனச் சொல்லி அவசர அவசரமாக எரித்தும் விடுவார்கள். இப்படியும் சில தற்கொலைகளில் சேர்ந்து விடும். தற்கொலைச் சாவுகளை காவல் நிலையங்களில் சொல்வதெல்லாம் நடைமுறையில் என்றும் இருந்ததில்லை. காதும் காதும் வைத்தாற் போல் கச்சிதமாகக் காரியத்தை முடித்து விடுவார்கள். அண்மையில் இரவு இறந்தவரை, சென்னையிலிருந்து ஆட்கள் வரும்வரை வைத்திருந்து, மறுநாள்தான் எரியூட்டினார்கள். கிராமத்தில் தகவல் வெளியே பரவாது. தெரிந்தவர்களும் சொல்ல மாட்டார்கள்.

ஆபத்தில் செத்தவரை அவசரமாக இடுகாட்டுக்குத் தூக்கிச்சென்று எரித்து விடுவார்கள். இவர்களுக்கு எந்த விதமான சடங்கு, சமபிரதாயமும் இருக்காது. வீடுகளில் கிடக்கும் மரக்கட்டைகள், கட்டை விறகுகள், சில லிட்டர் மண்ணெண்ணெய், கிலோ கணக்கில் சீனியும் எடுத்துச் செல்வார்கள். சிலரை இருட்டும் வரை வைத்திருப்பதும் உண்டு. சீனியைப் போட்டு எரித்தால் சீக்கிரமே வேகும் என எப்படிக் கண்டுபிடித்தார்களோ. தமிழர்கள் புத்திசாலிகள்தான். பிணம் எரியூட்டுக்கு யாம் போனதில்லை. பிணம் எரியும் போது கால் கைகளெல்லாம் விடைக்குமாம். கவட்டைக் கம்பை வைத்து அடிப்பார்களாம். அண்ணன் சொல்லிக் கேட்டிருக்கிறோம். எமக்கு பிணம் எரியும் வாடை வந்தாலே தலைவலி வந்து விடும். அந்த நாற்றம் எமக்கு சுத்தமாகப் பிடிக்காது. அருப்புக்கோட்டை விடுதியும் தூத்துக்குடி விடுதியும் எரியூட்டும் இடத்திற்கு அருகிலிருந்ததால் சில நேரங்களில் அந்த நாற்றமடிக்கும்.

எரித்தபின் அடுத்தநாள் சாம்பலை அள்ளி கடலுக்குச் செல்வார்கள். சாயல்குடி அருகேயிருக்கும் முக்கூர் கிராமக் கடற்கரைக்குச் செல்வார்கள். அழகிய மீனவக் கிராமம். அற்புதமான வளைந்த கடற்கரை. மீனவர்கள் படகுகளை, வலைகளை சரி பார்த்து உட்கார்ந்திருப்பார்கள். கடல் ஆழமாகவும், நீர் தெளிவாகவும் இருக்கும். அருகே பனை மரக் காடுகள். சீனிச்சாமியை கூட்டிச் செல்வார்கள். சாம்பல் குடத்திலிருந்து நூலைக் கட்டி கடலுக்குள் விட்டு விடுவார்கள். கடலிலிருந்து ஆரம்பித்த உயிர் வாழ்க்கை, மீண்டும் அங்கேயே சென்று சேருகிறது என எடுத்துக் கொள்ளலாம். கொண்டுபோன கட்டுச்சோறையும், கத்திரிக்கா கூட்டையும் சாப்பிட்டு விட்டு திரும்பிப் பார்க்காமல் வந்து சேர்வதுண்டு.

என்னதான் கயிறு கட்டி கடலில் விட்டு வந்தாலும், ஊர்ப்பாசம் போகுமா என்ன. வந்து விடுவார்கள். வந்து சும்மாவும் இருப்பதில்லை. சில பெண்களைப் பாடாய்படுத்துவர்கள். அது வேணும், இது வேணும் எனக் கேட்டுத் தொல்லைக் கொடுப்பதும் நடக்கும். முன்னர் வயதானவர்களை விட்டு வைப்பார்கள். தற்போது அறுபது வயது ஆனவரையும் விடுவதில்லை. இவர்களை அடித்து அனுப்புவதில் தப்பில்லைதானே.

அடித்துத்தான் அனுப்புவார்கள். வேப்பிலை அடிக்கு மசியவில்லையெனில் சாட்டையடியும் பொளார், பொளார் என விழும். நினைத்துப் பார்த்தால் ஊரில் பேய் பிடிக்காத பெண்களை விரல் விட்டு எண்ணி விடலாம் போல. பேய்களுக்கும் எளிய சாதி பெண்களைத்தான் பிடிக்கிறது. அமிர்தம் அத்தை இறக்கும் போது எமது அம்மா மடியில் தலை வைத்திருந்தாராம். அவர் அம்மாவைப் பிடித்துவிட்டதாகச் சொல்வார்கள். எமக்கு விவரம் தெரிந்தும் அம்மாவிடமிருந்து இவரை விரட்டிக் கொண்டிருந்தார்கள்.

வெள்ளிக்கிழமைகளில் பத்தி சூடம் ஏற்றி சாமி கும்பிடும் போது மூசுமூசு என சத்தம் வந்தால் வீடு களேபரமாகிவிடும். சட்டென்று ஒரு பயங்கரமான சத்தம் வரும். வந்திருப்பது சாமியா, பேயா என எங்களுக்குள் பேசிக் கொள்வோம். அரற்றும் சத்தத்தில் பக்கத்து வீட்டுக்காரர்களும் வந்து விடுவார்கள். அப்பாவிற்கு வாடா போடா என்ற சொற்களும் தராளமாகக் கிடைக்கும். அமைதியா இருக்கணும் என திருநீரை அள்ளி தலையில் போடுவார். நெற்றியில் திருநீரை வைத்து, கையால் அழுத்திக் கொண்டிருப்பார். சில நேரங்களில் அழுவதும், கீழே விழுவதும் நடக்கும். யாம் பேந்தப் பேந்த விழித்து அம்மாவையே பார்த்துக் கொண்டிருப்போம்.

பேய்களுக்கு செவக்காட்டு பனைமரத்தில் கழிப்பு கழித்துப் போட்டிருப்பார்கள். பேய் பிடித்தவர்கள் முன்னால் ஓட தொடர்ந்து பேய் விரட்டுபவரும் விரட்டி வருவார். இவர்கள் கூடவே பலரும் ஓடி வருவதுண்டு. சில பேர் சிறுவர்களை வரக் கூடாது எனத் தடுப்பார்கள். பேய் தலையை விரித்துப் போட்டு ஆக்ரோஷமாக ஆடி வரும். பனைமரத்தில் பட்டுத் துணியை அடித்து, சட்டைப் பிட்டு, வளையல், கண்ணாடி, சீப்பு போன்றவற்றை வைத்து படையில் வைப்பார்கள். சேவல் காவு கொடுப்பது கட்டாயம் நடக்கும். எலுமிச்சையை வெட்டி குங்குமம் அப்பி வைப்பார்கள். சேவல் கறியை வதக்கிச் சாப்பிடவென்றே ஒரு கூட்டம் இருக்கும். அட்டவணையினர் சுடுகாட்டுப் பனையிலும் இப்படி அடிக்கடி பேய்க்கு கழித்துப்

போட்டிருப்பார்கள். ஒரு சில பேய்கள் என்னென்ன வேண்டும் எனக் கேட்டு வாங்கும் பொருட்கள் மலைப்பாக இருக்கும். கொடுத்தால் விட்டுட்டுப் போய்டுவியா என பேயோட்டி உக்கிரமாகக் கேட்க, போதும் என பேய் படு சாந்தமாகப் பதில் சொல்லும். அழகுத் தேவர் பேயோட்டுவதை சிறுவர்கள் பலமுறை சென்று பார்திருக்கிறோம். செம கூத்தாக இருக்கும். வெள்ளிக் கிழமை இரவுகளில் வரிசையாகப் பேய்கள் வந்து கொண்டேயிருக்கும்.

வீட்டில் திருச்செந்தூர் முருகன், இராமேஸ்வரம் புகைப்படம், இடுக்கண்குடி மாரியம்மன் புகைப்படங்கள் வைத்திருந்தோம். யாம் பரளச்சியில் பத்தாவது படிக்கும் போது சாலையில் வண்ணக் கண்ணாடிகளால் சட்டம் போட்டு உள்ளே பலவிதக் கடவுளர்களின் புகைப்படங்கள் வைத்து விற்றுக் கொண்டிருந்தார்கள். பத்து ரூபாய்க்கு விற்றதாக ஞாபகம். கண்ணன், லட்டு தின்னும் படம் வைத்திருந்த புகைப்படம் எமக்கு பிடித்துப் போய் வீட்டிற்கு வாங்கி வந்தோம். வீட்டில் எல்லோருக்கும் அந்த அழகுக் கண்ணன் பிடித்திருந்தார். தவழ்ந்தவாறு சிரித்துக் கொண்டிருப்பார். இந்தக் கண்ணனை வைப்பதற்காக மரத்தில் சிறு பலகை செய்து சுவற்றில் மாட்டினார்கள். பெரிய திருநீறு டப்பாவும், குங்கும டப்பாவும் பலகையில் இருக்கும்.

பூஜைப் பலகை அருகே, சுவற்றில் இருகட்டைகள் அடித்து அதன்மேல் பலகை வைத்திருந்தார்கள். பலகையின்மேல் பண்ட பாத்திரங்கள் அடுக்கியிருக்கும். அம்மா பலகையில் அழகான கோலங்கள் போட்டிருப்பார். எதிர் சுவற்றிலும் ஒரு பலகை இருந்தது. அதில் பழைய டிரங்பெட்டி, உடைகள், கட்டி வைக்கும் துணிப் பொட்டனங்கள் இருக்கும். வப்பு சுப்பும் இங்கே வைப்பதுண்டு. நடவுக் காசு, களையெடுக்கும் காசுகளை வாங்கி இங்கே வைப்பார்கள்.

தாழ்வாரத்தில் கொத்துவான், செதுக்கி போன்றவை செருகி இருக்கும். சமையலறையான குளியலறையின் முக்கால் சுவற்றில் தேங்காய் எண்ணெய், பவுடர், சோப்பு, சீப்பு இருக்கும். தேங்காய் எண்ணெய்யை பலரும் தேய்ந்து, பவுடரும் போட்டு, கண்ணாடி பார்த்து தலை வாரிச் செல்வார்கள். வெள்ளை நிற பிளாஸ்டிக் எண்ணெய் டப்பா அதிக நாட்கள் இருந்தது. வெட்டிவேர், வெந்தயம் போட்டு வைத்திருப்பார்கள். எம்மை எண்ணெய் வைக்கக் கெஞ்ச வேண்டும். கொஞ்சம் வளர்ந்த பையனாகிய பின்பு, தண்ணீர் எடுத்து முடியில் அப்பி சீவிக் கொள்வோம். எண்ணெய் வைக்காமல் இதென்ன பழக்கம் என்று சத்தம்

போடுவார்கள். யாம் மட்டுமல்ல. பல பையன்களும் தலைக்கு தண்ணீர் தடவியே வாருவார்கள்.

சில வீடுகளில் பூச்செடி வளர்ப்பதைப் பார்த்து, நாங்களும் டப்பாவில் மண்ணைக் கொட்டி தண்டைக் கொண்டு வந்து ஊண்டி வளர்த்தோம். பூச்செடியின் பெயர் நினைவில்லை. குச்சி போன்ற தண்டில் சிறு அரும்புகளாக இலைகள் இருக்கும். வேகமாக வளரும். இளஞ்சிவப்பு, மஞ்சள் நிறத்தில் சிறு பூக்கள் மிக அழகாகப் பூக்கும். மணமிருக்காது. தாழ்வாரத்திற்கு வெளியே இரண்டு இடங்களில் தொங்கவிட்டிருந்தோம்.

கிராமத்தில் கொஞ்சம் வயதான பெண்கள், சட்டை அணியாமல் இருந்தார்கள். மகள் குமரியாகி விட்டால், பெண்களில் பலரும் பூவைக்க மாட்டார்கள். சடை பின்னுவதை நிறுத்தி அள்ளி முடிய ஆரம்பித்து விடுவார்கள். ஏதாவது சண்டை வரும் போது தங்களின் கற்பு பற்றி இது போன்ற விசயங்களைச் சொல்லி பெருமைப்படுவதும் நடக்கும்.

கற்றாழை இழைகளை அறுத்துக் காயவைத்து நார் தயாரிப்பார்கள். இராமலிங்க மாமா அடிக்கடி இவ்வாறு நார் உருட்டி யாம் பார்த்திருக்கிறோம். எங்கள் வீட்டிலும் செய்திருக்கிறார்கள். கட்டையில் வைத்து நார் கற்றாழையை அருவாள் வைத்து சீவி எடுத்தால், சதைப்பகுதி நீங்கி, அழகிய வெள்ளை நார்கள் கிடைக்கும். இதை கயிறாகத் திரித்துப் பயன்படுத்துவது வழக்கம். நன்கு உறுதியாகவும் இருக்கும். இதை வைத்து மாடுகளைக் கட்டுவார்கள்.

எங்கள் கிராமத்தில் கற்றாழை முள்ளைக் குத்தி ஒற்றைத் தலைவலிக்கு முரட்டு வைத்தியம் பார்ப்பதும் நடந்தது. கூரான கற்றாழை முள்ளை வைத்து எந்தப்பக்கம் தலை வலிக்கிறதோ, அந்தப் பகுதியின் மூக்கின் உள்ளே வைத்து மெதுவாகச் சுண்டுவார்கள். சவ்வுப் பகுதியில் முள் குத்தி, மூக்கிலிருந்து இரத்தம் கொட்டும். அசுத்த இரத்தத்தை எடுக்கிறார்களாம். சிலர் அவர்களாகவே குத்திக் கொண்டு மூக்கைத் தொங்கப் போட்டு உட்கார்ந்திருப்பார்கள்.

உடல் சூட்டிற்கு சோற்றுக் கற்றாழையை சாப்பிடுவதும் நடந்தது. கற்றாழைத் துண்டை புளிச் சாணியில் அதாவது புளித்த சோத்துப் பானைத் தண்ணியில் ஊற வைத்து காலையில் எடுத்து அப்படியே விழுங்கி விட்டு தண்ணியையும் குடித்து விடுவார்கள். வேப்பஞ்சாறு குடிப்பதும் அடிக்கடி நடக்கும். யாமும் மூக்கைப் பொத்திக் கொண்டு சில முறை குடித்திருக்கிறோம். இலைகளைப் பறித்து உரலில்

போட்டு இடித்து சாறு பிழிவார்கள். பல சிறுவர்களும் அன்று மாட்டுவார்கள். பெரியவர்கள் லோட்டாக்களில் வாங்கி மடமடவென ஒரே மூச்சாகக் குடித்து விடுவார்கள். வேப்பங்கொழுந்து தின்னும் பையன்களும் இருந்தார்கள். சிலர் பல் துலக்குகிறோம் என்ற பெயரில் வேப்பங்குச்சியை மணிக்கணக்கில் கடித்துக் கொண்டிருப்பதும் கிராமத்தில் சகஜம். யாமும் வேப்பங்குச்சி வைத்து பல் துலக்கியதுதான் அதிக நாள் இருக்கும் எனத் தெரிகிறது.

செவல்காடுகளில் நீளமான விளக்குமாறு குச்சி வளர்ந்திருக்கும். இதன் முனையில் சூகைகள் நிறைந்திருக்கும். வேலை இல்லாத காலங்களில் இந்த சூகைமாறைப் பிடிங்கி வர பெண்கள் போவார்கள். எமது அம்மாவெல்லாம் பெரிய கட்டாகக் கொண்டு வருவார். புதிய விளக்குமாற்றால் கூட்டும் போது இந்த சூகை அதிகமாக உதிரும். இவை ஆடைகளில் ஒட்டிக்கொண்டு உடலிலும் குத்தும்.

தென்னை ஓலைக்குச்சி விளக்குமாறு, களம் கூட்டுபவர்கள் வைத்திருப்பார்கள். சிலர் பருத்திமார்க் குச்சியையும் பயன்படுத்துவார்கள். எமது அப்பா தென்னந்தட்டி, ஓலைத் தட்டி விசிறி பின்னுவதையும் பார்த்திருக்கிறோம். ஓலைக் கொட்டானும் கடகாய்ப் பெட்டியும் பின்னத் தெரியும். வீடுகளுக்குத் தேவையானதை அவரவர்களே பின்னிக் கொள்வார்கள். முறம், கூரைப்பெட்டி பின்னுபவர்களும் ஊருக்கு வந்து முகாம் போடுவார்கள்.

அன்றைக்கு முறத்தில் பிடைக்கத் தெரியாத பெண்ணே இருக்க மாட்டார். சிலருக்கு கற்களை நீக்கத் தெரியாது. எமது அம்மா, மலைக்காரப் பெரியாத்தா போன்றவர்களிடம் கல்லைக் களைஞ்சு குடுங்க எனக் கேட்பார்கள். அம்மா அரிசியில் கல் நீக்குவது அவ்வளவு அழகு, விரைவு. மிகவும் திறமையாக முறத்தில் புடைப்பார். புடைக்கும் போது கையின் ஆட்காட்டி விரல்கள் டக்டக்கென்று ஒவ்வொரு முறையும் முறத்தில் தட்டும். கருப்பரிசியை, கற்களை, அரையாமல் விடுபட்ட நெல்லை கோழி போல் பட்பட்டென்று பிறக்கிவிடுவார். சொளகில் சத்சத்தென்று சத்தம் கேட்டுக் கொண்டேயிருக்கும். அரிசியில் கல் நீக்குகிறார் என தெரிந்தே கோழிகளும் கொர் கொர் என வந்துவிடும். நல்ல வேளையாக கல்லை நீக்குவதற்குப் பெரும்பாடுபட்ட காலமெல்லாம் மலையேறி விட்டது. இன்று சொளகு இல்லாத வீடுகளே அதிகம்.

தென்னையை விட பனைமரம், அன்று பல்வேறு விதங்களில் பயன்பட்டது. தென்னை மரங்களும் மிகக் குறைவாகவே இருந்தன. பெரிய வீட்டில் மேற்குக்

கண்மாய் வடக்கேயிருந்த காட்டில் முதன் முதலாக தென்னந்தோப்பு வைத்தார்கள். கூடவே மாமரங்களும் வளர்ந்து கொண்டிருந்தன. ஒன்றிரண்டு முந்திரிச் செடிகளும் இருந்ததாக ஞாபகம்.

கோடைமழை பெய்து கண்மாய்கள் நிரம்பியும் பார்த்திருக்கிறோம். சில சமயங்களில் கோடைமழை கொட்டித் தீர்த்து விடும். ஐஸ்கட்டி மழையும் விழுவதுண்டு. டம்ளர், கிண்ணங்களில் எடுத்துப் போட்டு தின்று திரிந்த காலங்கள் எவ்வளவு மகிழ்ச்சியானவை. பெரியவர்கள் மழை பெய்யப் போவதை ஓரளவிற்குக் கணித்து விடுவார்கள். மேகம் இருட்டிக் கொண்டு வரும். காற்றும் சுழன்றடிக்கும். சட்சட்டென ஓடுகளில் கேட்கும் சத்தம் காதைப் பிளக்கும். பெரியவர்கள் மழை வருது, விறகெடுத்து வையங்கம்மா என அவசரப்படுத்துவார்கள். சிறுவர்களையும் விறகு எடுத்து வீட்டிற்குள் வைக்குமாறு விரட்டுவார்கள். கோடை மழையில் நனைந்து குதியாட்டம் போடுவது தனி சுகம். இன்று ஒதுங்கி நின்று கையை மட்டும் நனைத்துக் கொள்வது ஏக்கமாக வருகிறது.

பெரியகண்மாய்கரை மதகையொட்டி தேவேந்திரர்களுக்கு நிலங்கள் அதிகமிருந்தன. கண்மாயில் தண்ணீர் இருந்தால் நெல் அறுவடைக்குப் பின் பாசிப்பயிறு பயிர் செய்வது வழக்கம். கோடை மழை பெய்தாலும் உடனே போட்டு விடுவார்கள். பின்வந்த வருடங்களில் இரண்டாம் பருவமாக சீமைப் பருத்தி போட்டதும் உண்டு. நெல் அறுத்த வயல்களில் அறுத்த தூரிலிருந்து பயிர் தழைத்து அதைக் கூட அறுத்ததும் நடந்திருக்கிறது.

இருளப் பெரியப்பா வீட்டிற்குப் பின்பக்கம், நெல் களம் இருந்தது. பலரும் வைக்கோலைப் பரப்பி போட்டிருப்பார்கள். பள்ளிக்கூடம் விட்டு வந்த பின்பு மொத்தச் சிறுவர்களும் அங்குதான் இருப்போம். அதிகமான வைக்கோல் குமித்துக் கிடக்குமென்பதால் மெத்மெத்தென்று இருக்கும். ஒருவரையொருவர் தள்ளி விட்டும், அமுக்கியும், துரத்தியும், புரட்டிப் போட்டும், குதித்தும், பல்டியடித்தும், உருண்டும், சண்டை போட்டும், ஓடிப் பிடித்தும் வைக்கோலைப் படாதபாடு படுத்துவோம். இருட்டும் போதே வீட்டுக்குக் கிளம்புவது. பல பேருக்கும் டிரவுசர் மட்டும் தான் இருக்கும். வீட்டுக்குப் போன பின்புதான் அரிப்பு ஆரம்பமாகும். அது வரை விளையாட்டு மும்முரத்தில் தெரியாது. இரண்டு முறை குளித்தாலும் அரிப்புத் தீராது, முதுகெல்லாம் சுரணையாக இருக்கும். அடுத்த நாள் சில வீட்டில் விடமாட்டார்கள். எப்படியாவது ஒளிந்து வந்து விடுவார்கள்.

ஒருமுறை பாலம்மாள் கிணற்றில் வெகுநேரம் குளித்துவிட்டு சாமி புளியமரத்தில் ஒதக்காயாகத் தின்று விட்டு தாகம் அத்தியப் பிடிக்க அனைவரும் ஓடி வந்தோம். தாகமென்றால் அப்படியொரு தாகம். கிழக்கு கண்மாய் வரைக்கும் வந்துவிட்டோம். அருகேயிருந்த வீடு வரைக்கும் வருவதற்கு முடியவில்லை. கொஞ்சமாகக் கிடந்த அந்த தண்ணீரைக் குடிக்கலாம் என நண்பர்கள் சொன்னார்கள். யாம் இது அசிங்கமான தண்ணி, வீட்டிற்குப் போய் குடித்துக் கொள்கிறோம் என்றோம். ஒரு நண்பர் தாயைக் கழித்தாலும், தண்ணியைக் கழிக்கக் கூடாது எனச் சொல்வார்கள் என்றார். பிறகென்ன. யாமும் அவர்களோடு சேர்ந்து மண்டி போட்டு ஆடு, மாடு போல் தண்ணீரில் வாய்வைத்து வயிறு நிறையக் குடித்தோம்.

கிராமங்களின் அழகையும், சுகாதாரத்தையும் கெடுப்பதில் முக்கிய பங்காற்றுவது திறந்த வெளிக் கழப்பிடங்களே. எங்கள் ஊரும் விலக்கல்ல. எந்தச் சாலையிலும் மனம் ஒப்பிச் செல்ல இயலாது. ஆண்களாவது மறைவான பகுதிகளுக்குச் சென்றுவிடுகிறார்கள். பெண்கள், குழந்தைகள், வயதானவர்கள் எனில் மிகவும் சிரமம். அவர்களுக்கு இரவு நேரங்களில் பாதையில் போய்விடுவதே வசதியாக இருக்கிறது. இவற்றை கண் கொண்டு பார்த்து நடக்கச் சகிக்கவில்லை. ஊரிலுள்ளளவர்கள் இதை இயல்பாக எடுத்துச் கொள்வது மிகவும் ஆச்சரியமானது.

பள்ளியில் மதிய உணவின்போது, மீன் முட்டைகள் கொடுப்பார்கள். இப்போது போல் சில மாதங்களிலேயே பால்குடி மறக்க வைக்க மாட்டார்கள். இரண்டு, மூன்று வயது குழந்தைகளுக்குகூட, பால் கொடுத்து யாம் பார்த்திருக்கிறோம். நான்கு, ஐந்து படித்த பசங்கள் கூட வீட்டிற்கு வந்தவுடன் டிரவுசர், சட்டையைக் கழற்றிக் போட்டுவிட்டு ஹாயாக விளையாடித் திரிவார்கள். ஒருமுறை பலருக்கும் பின்புறத்தில் கட்டி வந்து கிடந்தோம். சில வீடுகளில் சீக்கரம் ஆறும் என சூடு போட்டதும் நடந்தது.

அம்மை தடுப்பூசி போட ஆட்கள் வருகிறார்கள் எனத் தெரிந்தாலே அனைத்து மாணவர்களுக்கும் அடிவயிற்றைக் கலக்கும். அவர்களைப் பார்த்தவுடன் ஆரம்பிக்கும் அழுகை அவர்கள் ஊசிபோட்டு முடிந்து போன பின்பும் நிற்காது. மாணவர்கள் கதவைத் திறந்து கொண்டு ஓட முற்படுவார்கள். எமக்கு ஊசி வேண்டாம் எனக் கத்துவார்கள். வலுக்கட்டாயமாக இழுத்துக் கொண்டுபோய் மிரட்டி ஊசி போட வைப்பார்கள். ஊசிபோடும் முதல் மாணவர் ஓவென்று கத்த

ஆரம்பித்த உடனேயே பலருக்கும் கால் சொக்காய் நனைந்து விடும். ஒரு சில மாணவர்களே அழாதவர்களாக இருப்பார்கள்.

கோடை காலங்களில் வரும் மெட்ராஸ் அய் எனப்படும் கண்வலி பெரியதொரு தொல்லை. கண்வலி பிதுக்கு மருந்தைப் போட்டால் கண்கள் ஒட்டிக் கொள்ளும். அடிபட்ட புண்களுக்கு போரிங்பவுடர் என கடைகளில் கிடைக்கும் மருந்தை வாங்கி அப்பிக் கொள்ளலாம். விரைவில் ஆறிவிடும். வயிற்றுக் கடுப்பு மாத்திரையை வாங்கியும் புண்ணுக்குப் போடுவதுண்டு. அடிபட்ட இடத்தில் மண்ணை அள்ளிப் பூசுவதும் மஞ்சள் வைத்துக் கட்டுவதும் நடக்கும். சிறுவர்கள் நோட்டுத் தாளை கிழித்து எச்சில் வைத்து ஒட்டிக் கொள்வோம். சில நேரங்களில் புண்ணோடு தாள் ஒட்டிக் கொண்டு பிய்க்க வராமல் கத்துவதும் சாதாரணம். புண் வந்தால் தொடையருகில் நெறி கட்டிவிடும். இதை அண்டக்கட்டு என எதற்குச் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை.

வயிற்றுக் கோளாறுகளுக்கு தொக்கம் எடுப்பதை முதல் கடமையாக வைத்திருப்பார்கள். அது போலவே சீரடித்துவிட்டது எனச் சொல்லி தலையில் பத்து போடவும் பிள்ளைகளை தூக்கிச் செல்வார்கள். தொக்கமெடுப்பதற்கென்றே குல்லம்பட்டியிலும், அருப்புக்கோட்டை சிவன் கோவில் அருகேயிருக்கும் வீடுகளிலும் நிறையப் பெண்கள் இருப்பார்கள். எமக்கு முதுநிலையில் வந்த வயிற்றுப் பிரச்சினை சரியாகாமல் தொக்கம் எடுத்துத்தான் பார்க்கலாமே என வீட்டினர் சொன்னதன் பேரில் ஒருமுறை அருப்புக்கோட்டை சென்று தொக்கம் எடுத்து வந்தோம்.

வீட்டு வாசல்களில் செம்பில் தண்ணீர் வைத்துக்கொண்டு அமர்ந்திருப்பார்கள். தொக்கம் எடுக்கணுமா, இங்க வாங்க நல்லா எடுக்கிறோம் எனக் கூப்பிடுவதையும் கவனிக்கலாம். தண்ணீரைக் சிறிது குடிக்க வைத்து, மந்திரத்தை முணு முணுத்தபடி, அவர்கள் வாயிலும் சிறிது தண்ணீர் வைத்துக்கொண்டு, சிறியதொரு குழாயை நமது வாய்க்குள் வைத்து, மெதுவாக உறிஞ்சி கீழே துப்பும் தண்ணீரிலிருந்து சில உருண்டைகளை எடுத்துப் போடுவார்கள். உருண்டைகள் சிறிது கறுத்தும் ஒரேமாதிரியும் இருக்கும். அதிகமான வயிற்று வலிக்கு அதிகளவில் உருண்டைகள் எடுப்பார்கள். கிராமத்தில் வேண்டாதவர்களுக்கு நோய் உண்டாக்கவும், ஒருவரை வசியப்படுத்தவும் மருந்து வைத்துவிட்டார்கள் என்பார்கள். இப்படி வைத்த மருந்து உருண்டைகளையும்

இவர்கள் எடுத்துவிடுவார்கள். தொண்டைக்குழிக்குள்ளேயே மருந்து அவ்வளவு நாட்கள் இருப்பதுதான் அதிசயம். இப்படி உருண்டைகளை எடுத்து விட்டு, பச்சிலை மருந்து கொடுப்பார்கள். எமது வீட்டில் அவர்கள் எடுக்கும் தொக்கம் சும்மா என்றும், பச்சிலை மருந்திற்கே வயிற்றுக்கோளாறு சரியாகிறது என்றும் சொல்வார்கள்.

இப்போதெல்லாம் ஏன் யாருக்கும் சுளுக்குப் பிடிப்பதில்லை என ஆச்சரியமாக இருக்கிறது. முன்பு சுளுக்கு நீவி விடுப்பா என பலரும் விளக்கெண்ணெய்யோடு தர்மர் அண்ணிடம் வந்துவிடுவார்கள். எண்ணெய் தடவி தேய் தேய் எனத் தேய்ப்பார். சுளுக்குப் பிடித்தவர்களின் முனகலும், கத்தலும், பக்கத்தில் வேடிக்கை பார்ப்பவர்களின் அதட்டலும் சிரிப்பாக இருக்கும். அங்கதாப்பே, அங்கதாப்பே என முகத்தை கோணலாக வைத்துக் கொண்டு சுளுக்கோடு மல்லுக்கட்டுவார்கள்.

தர்மர் அண்ணனிடம் மூச்சுக்குத்து, மூச்சுவிட முடியல என வருவார்கள். மற்ற தெரு ஆட்களும் வருவதுண்டு. எங்கள் வீடு அருகாமை என்பதால் சமயங்களில் கிட்ணா செத்த வாய்யா எனக் கூப்பிடுவார். மூச்சுக்குத்து எடுக்க, யாம் பலமுறை இடுப்பில் கம்பை வைத்து நின்றிருக்கிறோம். யாம் நிற்காவிட்டாலும், மூச்சுக் குத்து எடுக்கும் கம்புகள் எப்படி ஒட்டிக்கொள்கின்றன என்பதை ஆராய்ந்து பார்க்கும் ஆவலில் ஓடிப்போய் பார்ப்போம்.

நேராகப் பிரித்த ஒரு பத்தடி நீளமான இரண்டு மூங்கில் குச்சியை வீட்டினுள் பயபக்தியோடு வைத்திருப்பார். மூச்சுக்குத்து பிடித்திருப்பவர்கள் காலை அல்லது மாலை வேளைகளில் வருவார்கள். இரண்டு குச்சிகளையும் இடுப்பின் இருபக்கம் ஒட்டியவாறு கைகளால் பிடித்துக் கொள்ள வேண்டும். அவருக்கு எதிரே இன்னொருவரும் இவ்வாறே இடுப்போடு குச்சிகளை அணைத்து பிடித்துக் கொள்வார். பெண்கள் என்றால் பெண்களே துணைக்குப் பிடிப்பார்கள். எதிரெதிரே நின்று கொண்டு இருவரும் இடுப்போடு பிடித்துக் கொள்ள, இரண்டு பேருக்கும் மையமாக நின்று அண்ணன் குச்சிகளின் மேல் திருநீறு வைத்து குச்சிகளையே பார்த்துக் கொண்டிருப்பார். சற்று மெல்லிய குச்சிகள் என்பதால் கொஞ்சமாக ஆட ஆரம்பிக்கும். மையப்பகுதியில் இரண்டு குச்சிகளும் நெருங்கி வரத் துவங்கும்.

இண்டு குச்சிகளும் விரைவாக ஒட்டி விட்டால் மூச்சுக்குத்து அதிகம் என்று அர்த்தம். சிலருக்கு எவ்வளவு நேரமானாலும் ஒட்டவே ஒட்டாது. அண்ணனும் இரண்டு, மூன்று முறை கூட திருநீறு வைத்துப் பார்ப்பார். கம்பு அசையக் கூடச்

செய்யாது. ஓரிருமுறை யாம் கம்பை ஒட்டவிடக்கூடாது என இடுப்பை விட்டு எதிர்புறமாக நகர்த்தியும் பார்த்திருக்கிறோம். ஆனாலும் கம்பு ஒட்டி விடும்.

கம்பு ஒட்டியபின் மறுபடியும் கம்புக்கு திருநீறு வைத்து பயபக்தியுடன் வீட்டினுள் எடுத்துச் செல்வார். சீக்கிரத்தில் கம்பு ஒட்டியவர்களை மறுபடியும் வந்து மூச்சுக்குத்து எடுக்கச் சொல்வார். இரண்டு மூன்று முறையில் சரியாகிவிடும். எமக்கு ஒன்றிரண்டு தடவை மூச்சுக்குத்தும் பிடித்திருக்கிறோம். மூச்சுக் குத்துக்கு நல்ல வைத்தியம்தான்.

நடவுக் காலங்களில் எமது அம்மா அலுப்பு மருந்து குடித்துப் பார்த்திருக்கிறோம். கடைகளில் விற்பார்கள். கைய் கால் உளையிதே, குத்துதே என்பார்கள். ஒரு வடியா வருது எனவும் கிராமத்தில் சொல்வார்கள். மேல் உலைச்சலாயிருக்கு, ஆகாசமா வருது, என்னமோ போல வருது எனச் சொல்வதும் பொதுவானது.

சிறுவர்களுக்கு மருதாணி வைப்பதென்றால் மிகவும் பிடிக்கும். பேய் கழிக்கும் இடம் அருகே இருந்த செவல்காட்டு ஓடையில், மரங்கள் போன்று மருதாணிச் செடிகள் வளர்ந்திருக்கும். சிறுவர்கள் போய் பறித்து வருவோம். பலருக்கும் கொடுப்பதற்காக அதிகமாகவே பறிப்போம். காய்களையும் சேர்த்து அரைத்தால் இன்னும் அதிகமாகக் சிவக்கும் என்பதால் முள் குத்துவதையும் பொருட்படுத்தாமல், எக்கி எக்கி காய்களையும் பிடுங்குவதுண்டு.

மருதாணிச் செடிகளை அம்மியில் அரைக்கும்போது, எல்லோரும் கேட்டு வருவார்கள். நன்றாகக் சிவக்க வேண்டுமென்பதறகாக் சிறிது கொட்டைப் பாக்கையும் சேர்த்து அரைப்பார்கள். எமக்கு இரு கைகளிலும் நகங்களை முழுதாக மூடி மருதாணி இட வேண்டும். உள்ளங்கையிலும் வட்டவடிவமாக வைக்க வேண்டும். இல்லையெனில் அடம் பிடிப்போம். யாம் தானே பிடுங்கி வந்தோம், எமக்கு முதலில் வைய் என அக்காவிடம் சண்டை போடுவோம். சிலர் போல் சிறிது நேரத்தில் கழுவி விட்டு தூங்க மாட்டோம். காலை வரை விரலில் இருக்க வேண்டும். முன்னெச்சரிக்கையாக சட்டையைக் கழற்றி விடுவோம். பழைய டிரவுசரை தேடிப் பிடித்துப் போட்டுக் கொள்வோம். ஆடையில் மருதாணி அப்பினால் கறை போகாதல்லவா.

இரவு புரண்டு படுப்பதில், மருதாணி எங்கெங்கே ஒட்டியிருக்கும். பாய் முழுவதும் சிதறிக் கிடக்கும். காலையில் எழுந்தவுடன் முதல் வேளையாக

கைகளைத்தான் பார்ப்போம். கொஞ்சம் ஒட்டியிருப்பதைக் கழுவிப் பார்த்தால் அனேகமாக பாதி நகங்கள் வெள்ளையாக இருக்கும். பொருமிப் பொருமி மொக்கையாக வைத்துக் கொள்வதால், படுத்த உடனேயே விழுந்திருக்கும். நகங்கள் மேல் லேசாகத் தடவி வைத்தாலே போதும் என்பதை பெரிய பையனாகியே தெரிந்து கொண்டோம். சிலருக்கு அடர் சிவப்பாக ஒட்டியிருக்கும். பித்தம் உள்ளவர்களுக்கே இது மாதிரி ஒட்டும் என்பார்கள்.

ரெட்டியப்பட்டி ஒத்தக்கடை குரங்குகள் செய்த சேட்டைகளைப் பற்றி பெரியவர்களிடம் கேட்டால் ஏராளமான கதைகள் சொல்வார்கள். எமக்குத் தெரிந்தே ஏகப்பட்ட குரங்குகள் திரிந்தன. மரத்தின் மேல் உட்கார்ந்திருப்பார்கள். பேருந்துகளின் மேற் பகுதியில் போட்டிருக்கும் பழங்களைத் தூக்கிச் சென்று விடும். சில சமயங்களில் பேருந்தினுள்ளும் வந்து பைகளைப் பிடுங்கும். இரண்டு மூன்று சேர்ந்து வந்து மிரட்டுவதும் அடிக்கடி நடக்கும். வாழைத்தார்களை எடுத்து அடிக்கப் பாய்ந்தால் காடுகளுக்குள் ஓடிவிடும். வீட்டிற்கு வாங்கி வரும் வடை, சேவு, மிக்ஸர்களை குரங்குகளிடம் பறி கொடுத்து விட்டு, வெறுங்கையோடு பலர் ஊருக்கு வந்திருக்கிறார்கள். குரங்குகளின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து ஒத்தைக் குரங்கு எனச் சொல்லுமளவுக்கு வந்து பின்பு அதுவும் இல்லையென்றாகிவிட்டது. விருதுநகருக்குப் போகும் வழியிலுள்ள பாலவநத்தம் ஊர் குரங்குகளுக்குப் பெயர் பெற்றது.

உயர்நிலை படிக்கும்போது குரங்கு முகம் இருக்கும் இரு சிறுவர்கள் மைதானத்திலும் சாலையிலும் சுற்றித் திரிவதை அடிக்கடி பார்த்திருக்கிறோம். கர்ப்ப காலத்தில் அவர்களது தந்தை ஒரு குரங்கை அடித்துக் கொன்று விட்டதாகவும், அதனால் பிறந்த குழந்தைகள் குரங்கு போன்றே பிறந்து விட்டதாகவும் நண்பர்கள் பேசிக் கேட்டிருக்கிறோம். சரியாகப் பேச மாட்டார்கள். தலையைச் சொறிவதும் உடல்மொழியும் குரங்கு போலவே இருக்கும்.

மேல்நிலை படிக்கும்போது ஒருமுறை சர்க்கஸ் பார்ப்பதற்கு பள்ளியிலிருந்து கூட்டிச் சென்றார்கள். பள்ளிக்குக் கிழக்கே வயல்கள் ஓரமாக பெரிய கூடாரமாகப் போட்டிருந்தார்கள். அந்தரத்தில் பலரும் தொங்கியது கண்டு அனைவருக்கும் ஆச்சரியம். அதற்கு முன் இப்படியான சர்க்கஸ் பார்த்ததில்லை.

இராஜகோபாலபுரத்தில் ஆதிதிராவிடர்கள் குறைவாகவும் நாயக்கர் சமூகத்தினர் அதிகமாகவும் இருக்கிறார்கள். ஆதிதிராவிடர்களில்

பெரும்பாலானவர்கள் கிறித்தவர்கள். சற்று பெரியதான தென்னிந்திய திருச்சபையும், ஒரு ஓட்டு வீட்டில் பெந்தேகோஸ்த்து சபையும் இருந்தன.

நாடார் ஒருவரும் கடை வைத்திருந்தார். அந்த வீட்டைச் சேர்ந்த மனநலம் பாதிக்கப்பட்ட ஒருவர் மதிய உணவுக்காக எங்கள் பள்ளிக்கு வருவார். அழுக்கான உடையில் இருப்பார். பெரும்பாலும் அமைதியானவராகவே தென்படுவார். சிலநேரங்களில் கையில் சங்கிலி வளையத்தை இணைத்திருப்பார்கள். தட்டைக் கையில் ஏந்தியவாறே நடந்து வருவார். சில நேரங்களில் காலோடும் சங்கிலி பிணைத்திருப்பார்கள். பார்ப்பதற்கே மிகவும் கண்றாவியாக இருக்கும். கொஞ்சம் கூடுதலாகவே அவருக்கு உணவு கொடுப்பார்கள்.

ஆதிதிராவிடர் தெருவிற்குள் இரண்டொருமுறையே சென்றிருப்பதால் இவர்களைப் பற்றி அதிகமாகத் தெரியவில்லை. எங்கள் ஊர் கடைகளுக்கு வருவார்கள். ஆட்களை ஓரளவிற்கு அறிவோமே தவிர பெயர்கள் தெரியவில்லை. ஊரின் வடக்கே தொகுப்பு வீடுகள் கட்டிய போது அப்பா வேலை செய்ததால் யாம் சித்தாளாக சில நாட்கள் வேலை செய்திருக்கிறோம். காவல் பணியிலிருந்த ஒருவரே தொகுப்பு வீடுகள் திட்டத்திற்குப் பெரு முயற்சி எடுத்துக் கொண்டு வந்ததாகச் சொல்வார்கள். ஒரு குடும்பத்தாருக்கு கண்மாயின் உட்பகுதியில் ஒரு தோட்டம் இருந்தது. பலத்த காற்று வீசும் வைகாசி, ஆடி மாதங்களில், கரைமேல் செல்லாமல் இந்த தோட்டம் அருகில் இருந்த வண்டிப் பாதையில் செல்வோம். இந்த வீட்டுப் பையன் முனியசாமி எங்களின் புது வீட்டிற்கு வயரிங் வேலை செய்து கொடுத்தார்.

தற்போது கென்னடி அவர்களே இவர்களில் பெரிய மனிதராக இருக்கிறார் என நினைக்கிறோம். பள்ளியில் எமக்கு ஓரிரு வகுப்பு மூத்தவராக இருந்தார். பள்ளிக்கு சரியாக வராவிட்டாலும் வருகைப் பதிவேட்டில் பெயர் இருக்கும். கோகோ சிறப்பாக விளையாடுவார் என்பதால், பள்ளி சார்பான போட்டிகளில் கலந்து கொண்டார். நன்றாகப் பேசக் கூடியவர். எங்கள் ஊருக்கு வந்து செல்லும் போது எம்மைப் பார்த்தால் நன்றாக இருக்கிறீங்களா எனக் கேட்டு நலம் விசாரிக்கத் தவறமாட்டார். புதிய தமிழகம் கட்சியில் பொறுப்பிலிருப்பதாகத் தெரிகிறது..

தமிழ்நாட்டின் அனேக ஊர்களைப் போன்றே, இங்கும் இரண்டு சமூகத்திற்கும் முட்டல், மோதல்கள், விரோத மனப்பான்மை. விளைவு.. இருக்கும் இரு சமூகத்தவரும் எதிரி போல் இருக்கிறார்கள். முன்பு மிகவும் கலகலப்பான ஊராக

இருந்தது, இன்று கைகலப்பு ஊராக மாறி நிற்கிறது. எந்த அளவிற்கு இவர்களுக்குள் கசப்பு வளர்ந்திருக்கிறதென்பதை ஒரே ஊரில் இரண்டு பள்ளிக் கூடம் இருப்பதை வைத்து அறிந்து கொள்ளலாம். சிறிய ஊர்தான். பாதிப்பேருக்கு மேல் ஊரில் இல்லை. இருந்தும் இரு பள்ளிக் கூடங்கள் இயங்குகின்றன. ஒருவர் பள்ளியில் மற்ற தெரு பையன்களைச் சேர்ப்பதில்லை. நாயக்கர்கள் தனியாகவே ஊருக்கு பள்ளிக் கூடம் கொண்டுவந்து விட்டார்கள். அதற்கு முன் ஆதிதிராவிடர்கள் தெரு அருகேதான் பள்ளி இயங்கி வந்தது.

ஒருவர் வானொலியை தூக்கிக் கொண்டே எங்கள் ஊர் கடைக்கு வந்து செல்வார். வானொலியை விட்டு ஒரு நிமிடம் கூட பிரிந்திருக்க மாட்டார் போல. காதருகே வைத்து பாடல்கள் கேட்டுக் கொண்டே நடந்து வருவார். ஆவடை நாடார் கடையில் சரக்கு வாங்கிக்கொண்டு மறுபடியும் பாடல் கேட்டுக்கொண்டு நடையைக் கட்டி விடுவார்.

இன்னொரு அண்ணன் எம்மைப் பார்த்தால் நல்லா படிக்கிறீர்களா தம்பி என அன்போடு கேட்பார். முடி அதிகம் வைத்திருப்பார். தெருக்காரர்களோடும் நின்று பேசிக் கொண்டிருப்பார். இன்னொருவர் தையல்காரராக இருந்தார். உயரமாக இருப்பார். எம்மோடு பேசியிருக்கிறார்.

ஒருவர் நடக்க முடியாமல் சிரமப்பட்ட போதிலும் தினமும் நடந்து வந்து விடுவார். எமது சிறு வயதுகளில் இந்தத் தெருவைச் சேர்ந்த பலருக்கும் முடி அதிகமாக இருந்து யாம் கவனித்திருக்கிறோம். பலரும் அடர்கருப்பாக இருப்பார்கள். உயரமும் குறைவாகவே இருக்கும். எங்கள் ஊர் ஆதிதிராவிடர்களுக்கும் இவர்களுக்கும் அதிக வேறுபாடு இருந்ததை கவனித்திருக்கிறோம்.

ஊருக்குள் நுழையும் சாலை அருகே நடுகல் போன்ற அமைப்பில் காளியம்மன் தெய்வம் இருந்தது. சூலம் நட்டிருப்பார்கள். சிறிய மரம் வளர்ந்திருந்தது. தற்போது திண்டு வைத்து கோயில் போல் கட்டியிருக்கிறார்கள்.

நாயக்கர்கள் வைகாசிப் பொங்கலை ஒரு வாரம் மிகவும் விமர்சையாகக் கொண்டாடுவார்கள். ஊரின் வடக்கேயிருக்கும் புளிய மரத்திற்கு முளைப்பாரி எடுத்து வருவார்கள். வெகுநேரம் கும்மியடிப்பு தொடரும். ராஜாராம் சார் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்பார்.

பொங்கலுக்கு நாடகம், திரைப்படம் போடுவார்கள். கட்டபொம்மன் நாடகம் பார்க்க ஒரிருமுறை சென்றிருக்கிறோம். ஒருமுறை நாடகம் பார்க்கச் சென்று, கிணறு அருகே இருந்த ஒரு வீட்டுத் திண்ணையில் வெகுநேரம் உட்கார்ந்திருந்தோம். நாடகத்தை எந்த ஊரிலும் சீக்கிரம் ஆரம்பிக்க மாட்டார்கள். அன்று அபூர்வ சகோதரர்கள் படத்தின் அண்ணாத்தே ஒத்திக்கோ பாடலை மறுபடியும் மறுபடியும் போட்டுக் கொண்டே இருந்தார்கள். இன்னொரு சங்கதியையும் நண்பர்கள் பேசிக்கொண்டிருந்தோம்.

ஒருவர் தீபாவளிக்கு வேட்டுப் போடும்போது நாயின் பின்புறத்தில் சீனிவெடியைச் செறுகிவைத்து வெடித்து விட்டாராம். எவ்வளவு குசும்புக்காரர் எனப் பாருங்களேன். வேட்டு வெடித்து நாய்க்கு எப்படி வலித்ததோ, வைத்தவரை கடித்துக் குதறி விட்டது. இத்தனைக்கும் அவர்கள் குடும்பத்திற்கு நல்ல பெயர் இருக்கும். கட்டுப் போட்டுக் கொண்டு மனிதர் வீட்டை விட்டு வெளியே வராமல் கிடந்தார். ஒல்லியாக உயரமாக இருப்பார். அடிக்கடி மிதிவண்டியில் பறந்தபடி திரிவார். தெரு வழியாக வரும்போது சிலர் வேண்டுமென்றே வண்டியை மறித்து நாய்க்கு எந்த இடத்தில் வேட்டு வச்சீங்க நாய்க்கரே எனக் கேட்பார்கள். சிரித்துக் கொண்டே சென்று விடுவார்.

நாயக்கர் தெருவில் வீடுகள் நெருக்கமாக இருக்கும். சில வீடுகள் பெரியதாகவும் அழகாகவும் இருந்தது. பலரும் காரவீடுகளாகக் கட்டி கொண்டிருந்தார்கள். எமது அப்பா அனேக நாட்கள் இங்கு வேலை பார்த்தார். காடுகள் அதிகம் வைத்திருப்பார்கள். குப்பை, ஆட்டுக் கிடாய் போட்டு வயல்களை செழிப்பாகப் பராமரிப்பார்கள். இவர்கள் கரிசல் காடுகளில் நன்றாக விளையும் என பலரும் பேசுவார்கள். ஆடு, மாடுகளும் அதிகம் வைத்திருப்பார்கள். விவசாயத்தில் திறமையானவர்கள் எனச் சொல்லலாம். எமக்குத் தெரிந்து எங்கள் ஊர் காடுகள் விதைப்பிற்கு முன்பே இவர்கள் களையெடுக்க ஆரம்பித்து விடுவார்கள்.

எமது பெற்றோரைத் தேடி வேலை நிமித்தம் நாயக்கர்கள் அடிக்கடி வருவார்கள். அந்த வகையில் பலரது முகமும் எமக்குத் தெரியும். பெயர்கள் தெரியவில்லை. வழிவிட்டான் நாயக்கர் தி.மு.க வில் இருந்தார். கட்சி பற்றி காரசார விவாதங்கள் பேசி பார்த்திருக்கிறோம். இவர்களது வீட்டில் ஒரு அம்மையார் இறந்ததற்கு டெக்கில் படம் போட்டதில் பார்த்ததுதான் கரகாட்டக்காரன். யாம்

பத்தாவது படித்ததாக ஞாபகம். படம் பார்க்க அப்படியொரு கூட்டம். இறந்தவரிடம் ஒருவரையும் காணோம். இறப்பு வீட்டில் சிரித்துக்கொண்டே படம் பார்த்தார்கள்.

கஞ்சநாயக்கர் மகன் ஜெயராம் அவர்கள் எல்லோரிடமும் நட்பு பாராட்டுவார். படித்திருக்கிறார். கிழக்குக் கண்மாய் அருகிலும், அவர்களது ஊரிலிருந்து பொம்பநாயக்கன்பட்டி போகும் பாதையிலும் தோட்டங்கள் இருந்தன. திறமையாக விவசாயம் செய்வார் எனச் சொல்வார்கள். எமது அம்மா முன்னின்று நட்டால்தான் இவருக்கு திருப்தி வரும். முன் கூட்டியே அம்மாவிடம் கேட்டு விட்டுத்தான் தொழியடிப்பார். நடவுக் காலத்தில் கொஞ்சம் முன்னே பின்னேயானால், கேட்டுத்தானே செய்தோம் எனப் பிடித்துக் கொள்வார். கிழக்குக் கண்மாய் தோட்டத்தில் ஒட்டு கொய்யாப் பழங்கள் போட்டியிருந்தார். பெரிய பழங்களாக இருக்கும். மாலை வேலைகளில் மிதிவண்டியில் வந்து விற்பதைப் பார்த்திருக்கிறோம். யாரையும் ஒருமையில் பேசமாட்டார். கருப்பு எனக் கூப்பிடுபவர்கள் ஊரில், வாங்க போங்க எனப் பேசியது பெரிய விசயம்.

ஒருமுறை நாற்றுப் பிடுங்க ஆள் கிடைக்காமல் அண்ணனோடு சேர்ந்து யாமும் இவரது வயலுக்குப் போனோம். நூறு முடிகளுக்கு மேல் பிடுங்கி விட்டோம். நாற்று நட வந்த அம்மா, யாம் சகதியில் மண்டிபோட்டு நாற்றுப் பிடுங்குவதைப் பார்த்துக் கொண்டிருந்தார். பின் என்ன நினைத்தாரோ, கிட்னா, வீட்டுக்குப் போய்யா போதும் எனச் சொல்லிவிட்டார். மோட்டார் பம்பில் குளித்து விட்டு வீடு வந்து சேர்ந்தோம். ஜெயராம் அவர்கள் எம்மீதும் மிகுந்த அன்பும், மரியாதையும் காட்டுவார். அவரது குழந்தைகள் சான்றிதழ்களில் யாம் சான்றொப்பம் இடுவதை நல்ல ராசியென்று கருதுவார். யாம் எப்போது ஊருக்கு வருகிறோம் என அப்பாவிடம் அவ்வப்போது கேட்பாராம்.

அண்ணன் வயது ஆட்கள் மடமடவென நாற்றைப் பிடிங்கி குவித்து விடுவார்கள். எமக்கு நாற்றைப் பிடுங்கி லாவகமாக முடிய வராது. ஒரு கட்டை முடிந்து போடுவதற்குள், அவர்கள் நான்கு கட்டுகள் வீசி விடுவார்கள். நாற்றுக் கட்டை கூடையில் சுமந்து போவதைப் பார்க்கும் போது, முளைப்பாரி தூக்கிப் போவது போல் தெரியும்.

எமது அம்மா நாற்று நடுவதைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். கொத்தனாராக இருந்தாலும் நிறை பிடித்தும் நடுவார். வேகமாக ஊன்றி விடுவார். பிந்தி வருபவராகப் பார்த்து அவர்களுக்கும் நாற்றுப் பதித்து உதவுவார். ஒவ்வொரு

வயலும் எத்தனை குறுக்கம் என்பதை சரியாகத் தெரிந்து வைத்திருப்பார். இரண்டு மூன்று தொகுப்பாகவும் ஆட்களை அனுப்புவார். குறுக்கத்தை மாற்றிச் சொன்னால், அம்மா சரியாகச் சொல்லும்போது பிஞ்சைக்காரர்களே வியந்து விடுவார்கள். பணத்தையும் சரியாக எண்ணி வாங்கி விடுவார். ஒன்றிரண்டு பேர் பணம் தர இழுத்தடிப்பார்கள். அடுத்தவருடம் நடமாட்டோம் எனச் சொல்வதில், அவர்களும் பேசியபடி கொடுத்து விடுவார்கள். பலரும் வீட்டிற்கே வந்து கொடுப்பார்கள். எமது அம்மாவை நினைத்து யாம் பெருமைப்படும் எத்தனையோ நற்குணங்களுள் ஒன்று அவரது நேர்மை. மிகச்சிறிய தொகையைக்கூட அனைவருக்கும் சமமாக வருமாறு பிரிப்பார். அவரது கணக்குப் பிள்ளை யார் எனத் தெரியும்தானே.

நாற்று நடவின்போது பிஞ்சைக்காரர்கள் வெல்லம் தேங்காய் சேர்த்த அரிசி கொடுப்பார்கள். அம்மா வீட்டிற்கும் கொண்டு வருவார். சுவையாக இருக்கும். நடவின்போது அந்தப் பக்கமாகப் போவோர் முன் நாற்று முடியை வைத்தும் குலவையிடுவார்கள்.

எமது சிறுவயதில் ஊருக்குப் போக பணமில்லையெனச் சொல்லி சிலர் தெருவிற்கு வந்திருக்கிறார்கள். அம்மா தெருக்காரர்களிடம் ஆளுக்குக் கொஞ்சமாக வசூலித்து அப்பிவைத்ததும் உண்டு.

அம்மா நல்லதொரு கதை சொல்லியும் கூட. காடுகளில் ஏழுகடல் ஏழுமலை கதை சொல்லிக் கேட்டிருக்கிறோம். நல்லதங்காள் கதையெல்லாம் சொல்வார். பாவைக்கூத்தில் உப கதையாக நல்லதங்காள் கதை சொல்வது நடக்கும். கதை கேட்கும் போது தேம்பித் தேம்பி அழுபவர்களும் இருப்பார்கள்.

யாம் வாயில் ஏதேனும் துரும்பை வைத்து கடித்துக் கொண்டேயிருப்போம். வாய் அசைவதை வைத்து கண்டுபிடித்துவிடுவார்கள். வாயில் துரும்பைக் கடிக்காதே என எத்தனைமுறை சொல்வது என அம்மாவிடமிருந்து பேச்சு வரும்.

மழைக்காலங்களில் சணல் கோணிப் பைகளைப் போட்டுக்கொண்டு நாற்று நடுவதைப் பார்ப்பதற்கு வேடிக்கையாக இருக்கும். ஒன்றுபோல் குனிந்து நிமிர்வார்கள். பின்னால் வந்த வருடங்களில் சருகுத்தாள் கொங்காணி வைத்திருந்தார்கள். குடைகள் எடுத்து காட்டுக்குப் போவது சமீப காலங்களில் தான்.

மழைக்காலங்களில் கொங்காணி போட்டுக் கொண்டு கடைக்குப் போவதை அத்தனை சிறுவர்களும் விரும்புவோம். பாதி வழியிலேயே கொங்காணியை எடுத்து

விட்டு நனையலாமல்லவா. சருகுத்தாள் கொங்காணியில் மழை நீர் விழும் சத்தம் கேட்டு வீட்டிலிருப்பவர்கள் கூட எட்டிப் பார்ப்பார்கள். சாமான் வாங்கி வரும்போது மழைத் தண்ணியை எட்டி உதைத்து கால்சட்டையை நனைத்துக் கொண்டு வருவதும் வழக்கம். சாமானை தண்ணியில் போட்டு அள்ளி வந்து மொத்து வாங்கும் சிறுவர்கள் தனி ரகம். சில நேரங்களில் இரண்டு பேர் சேர்ந்து செல்வதுண்டு. பெரும்பாலும் சிறுவர்கள் ஒன்றாகச் சேர்ந்தே ஒருவீட்டில் இருப்போம். குடை வாங்கியபின் அதைச் சுற்றுவதும், மடக்குவதும், நீட்டுவதுமாக நாங்கள் பண்ணிய அலப்பரை கொஞ்ச நஞ்சமல்ல. பெரிய குடைகளாக இருக்கும். பட்டன் குடைகள் வாயிருந்தால் அழுதே இருக்கும். குடை சரி பார்க்க, பேட்டரி சரிபார்க்க அவ்வப்போது ஆட்களும் வருவார்கள். கிழிந்த குடைகளை தைத்துப் பயன்படுத்துவார்கள்.

பொன்ராம் நாயக்கர் சிறிய உருவத்தில் இருப்பார். மிதிவண்டி வைத்திருந்தார். வீட்டிற்கு வந்தால் வழக்கடித்துத்தான் செல்வார். நாற்று நடப்போகும்போது களையெடுக்க ஆள் வேணும் என வந்து நிற்பார். இந்த நாயக்கர் வந்தா சீக்கரமா போக மாட்டாரே என வீட்டில் பேசுவார்கள். நல்ல மனிதர். இவரது செவல்காட்டு தோட்டத்தில் நண்பர்களோடு சேர்ந்து மிளகாய்க்கு உரம் வைக்கும் வேலை பார்த்திருக்கிறோம். யூரியா வைத்து தண்ணீர் ஊற்ற வேண்டும். மூன்று, நான்கு நாட்கள் தொடர்ந்து செய்தோம்.

மாமா வீட்டோடு ஒரு குடும்பத்தார் மிகவும் நெருக்கமாக இருப்பார்கள். ஊருக்கு வந்து செல்லும் போதெல்லாம் மாமாவோடு பேசாமல் போக மாட்டாகள். பண்டிகைகளுக்கு தவறாமல் கறி கொடுத்து அனுப்புவார்கள்.

பாலச்சாமி நாயக்கர் மளிகைக் கடை வைத்திருந்தார். இவர்களது கடையில் தொலைக்காட்சிப் பெட்டி இருந்தது. பலரும் நின்று பார்த்துக் கொண்டிருப்பார்கள். இந்திரா காந்தி அம்மையாரின் இறுதி ஊர்வலத்தைப் பார்க்க, கூட்டம் அலை மோதியதாகச் சொல்வார்கள். ஆடுகளைத் தோல் உறிக்கும் வேலை செய்யும் ஒருவர் மிதி வண்டியில் வந்து செல்வார். சபாபதி வகுப்பில் காண்டீபன் படித்தார். தற்போது சந்திரா பேருந்தில் பணியாற்றுகிறார்.

ஒற்றுமையாக இருந்த நாயக்கருக்குள் இன்று கட்சி வேறுபாடு தலைதூக்கி திருவிழாவையே இரண்டு தரப்பாகக் கொண்டாடி வருகிறார்கள். தி.மு.க காரர்கள் தனியாகவும், அ.தி.மு.க கட்சியினர் தனியாகவும் திருவிழாக்கள் நடத்துவதாகத்

தெரிகிறது. பக்கத்து ஊர்களிலிருந்து குடிபெயர்ந்த பல நாயக்கர் குடும்பங்கள், ஊரின் வடக்கே தனியாக ஒரு குடியிருப்பினை சமீபகாலத்தில் ஏற்படுத்தி உள்ளார்கள். ஐயர் கண்மாய்க் கரை ஓரமாக வயல்களுக்கு நடுவே பலரும் வீடுகளாகக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

எங்கள் ஊர் காடுகளைப் போலவே, இவர்களது காடுகளும் பண ஆசை காட்டி வாங்கப்பட்டு விட்டன. பலரும் செழிப்பான செவக்காடுகளை ஏக்கர் வெறும் முந்நூறு ரூபாய்க்கு விற்றிருக்கிறார்கள். புத்திசாலியான சமுகத்தைச் சேர்ந்த ஒரு மனிதர் நூற்றுக்கணக்கான ஏக்கர் வாங்கியிருக்கிறார். முருங்கை, மலைநெல்லி, மாமரங்கள் வைத்து பணம் பண்ணுகிறார். ஊர்க்காரர்கள் ஒருவேளை இப்படி ஏமாந்து விட்டோமே என வயற்றெரிச்சலோடு பார்த்துச் சொல்வார்களோ என்னவோ.

சமீபகாலமாகத்தான் இந்த ஊருக்கு அரசுப் பேருந்து செல்கிறது. எங்கள் ஊரிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திலிருப்பதால் எங்கள் ஊரில் தான் பேருந்து ஏறுவதும் இறங்குவதும். முன்பெல்லாம் எங்கள் ஊருக்கு தேநீர் கடை, பலசரக்கு கடை, பேருந்து என நடந்து கொண்டே இருப்பார்கள். இன்று நடை பெருமளவுக்குக் குறைந்து விட்டது. முன்னர் சிறு சரக்குக்குக் கூட நடந்து வந்து விடுவார்கள். பண்டிகைக் காலங்களில் ஆவடை நாடார் கடையில் அலை மோதுவார்கள். பெரிய மூட்டையாகப் பொருள் வாங்கி சுமந்து செல்வார்கள். ஆணும் பொண்ணும் வந்து தெலுங்கில் பேசிக் கொண்டு பொருள் வாங்குவது கலகலப்பாக இருக்கும். பலரும் சத்தமாகப் பேசுவார்கள். இவர்கள் ஓட்டுப் போடுவதற்கு போத்தம்பட்டி செல்ல வேண்டும். அங்குதான் ஓட்டுச் சாவடி இருக்கும். வண்டி மாடுகளில் சென்று வந்தவர்கள் தற்போது டிராக்டர்களில் சென்று வருகிறார்கள்.

வண்ணத்துப் பூச்சிகளை விரட்டித் திரிந்தது வியப்பூட்டும் அனுபவம். முன்புற கருப்பு இறக்கைகளுடன், பின் பகுதியில் சிவப்பு புள்ளிகள் போட்ட வண்ணத்துப் பூச்சிகள் மனதை மயக்கக் கூடியவை. மாலை வேளைகளில் தும்பைப் பூக்களில் ஒட்டி, தேன் சேகரிக்கும். சிறுவர்கள் கண்களில் மாட்டினால் பிடிக்காமல் விடுவதில்லை. சட்டை போட்டிருந்தால் அதைக் கழற்றி எறிவதுண்டு. எங்கு பறந்தாலும் பின்னாடியே விரட்டிக் கொண்டு சென்று விடுவோம். பள்ளிக் கூட மைதானத்தில் அதிகமான வண்ணத்துப் பூச்சிகள் பறந்து திரியும். ஓடைக்கரை, கரிசல்காடுகள் என எங்கு பார்த்தாலும் கையை தூக்கிக் கொண்டு பிடிக்கப் பாய்வது நடக்கும். செவல் காடுகளிலும் அதிகமாகப் பார்த்திருக்கிறோம்.

சில அந்துப் பூச்சிகள் இரவு வெளிச்சத்திற்கு வீட்டு சுவர்களில் ஒட்டிக் கொண்டிருக்கும். தொட்டால் மாவு போன்று ஒட்டும் என்பதால் பிடிப்பதற்குத் தயங்குவார்கள். சிலர் பெரிய அளவுள்ள பூச்சிகளைச் கொண்டு வந்து யாம் பார்த்திருக்கிறோம்.

ஊரில் இன்று கொசுக்கள் மிகப் பெரிய தொல்லையாகி விட்டன. பகலிலும் வந்து கடிக்கின்றன. மாலை வேளைகளில் வெளியே நிற்க முடியாத அளவிற்குப் பல்கிப் பெருகி விட்டன. மின்விசிறி இல்லையெனில் இரவில் தூங்கவே முடிவதில்லை. கூட்டமாக வந்து காதுகளுக்குள் ரீங்காரமிடுகின்றன. மூடாத கழிவுநீர்க் கால்வாயும் ஓடுவதால், கொசுக்களுக்கு நல்ல லாபம். இன்று வெளியே தூங்குவதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

அன்றைக்கு மழைக் காலத்தில் மட்டுமே வீடுகளுக்குள் தூங்குவார்கள். பனிக்காலத்தில் சாமத்திற்குப்பின் எழுந்து வீட்டிற்குள் செல்வார்கள். எங்கள் வீட்டு முற்றத்தில் பாயைப்போட்டு பலரும் வரிசையாகப் படுத்திருப்போம். பக்கத்து வீட்டுக்காரர்கள், நண்பர்களும் வருவதால் பேசிக் கொண்டும், சிரித்துக் கொண்டும் மகிழ்ச்சியாக இரவுகளில் தூங்குவதுண்டு. கொசுக்கள் கடித்ததாக கொஞ்சம் கூட நினைவில்லை. மழைக் காலங்களில் மிகவும் குறைவாக இருக்கும். பெரிய தொந்தரவாக இருந்ததாகத் தெரியவில்லை.

இன்று யார் வீட்டிலும் மூட்டைப் பூச்சிகள் இல்லையென உறுதியாகச் சொல்லலாம். தற்போது கொசுக்கள் அதிகமாகி விட்டதைப் போல் அன்றைக்கு பல வீடுகளிலும் மூட்டைப் பூச்சிகள் பெருகியிருந்தன. எங்கள் வீட்டுச் சுவற்றில் சிறு சிறு பள்ளங்கள் இருக்கும். அதற்குள்ளாகப் போய் ஒளிந்துக் கொண்டிருக்கும். குச்சியை குழிக்குள் நுழைத்து அப்படியே கொன்று விடுவதுண்டு. இரவுகளில் கடித்து வீக்கம் கூட வந்ததாக ஞாபகமிருக்கிறது. எங்கள் வீட்டில் வெள்ளிக்கிழமை பாய்களை அலசிப் போடுவார்கள். சுடுதண்ணீர் வைத்து பாய்களில் ஊற்றுவதும் நடக்கும்.

உயர்நிலை செல்ல ஆரம்பித்தபின் நண்பர்களோடு சேர்ந்து வாத்தியார் வீட்டிலோ, சங்க மடத்திலோ தூங்கச் சென்று விடுவோம். கோடை காலங்களில் வெள்ளைச்சாமி வாத்தியார் வீட்டு மொட்டை மாடிக்கு எல்லா நண்பர்களும் வந்து விடுவார்கள். மாலை வேளைகளில் போய் தண்ணீர் ஊற்றுவதும் நடக்கும். யாராவது நெல் அவித்து காயப் போட்டிருந்தால் அள்ளி வைத்து விடுவோம்.

மழை பெய்து ஓய்ந்த சமயங்களில் மாடியிலிருந்து பார்த்து மலை தெரியுது என குதூகலித்திருக்கிறோம். திருவில்லிப்புத்தூர் மேற்குத்தொடர்ச்சி மலைகளும், மதுரை திருப்பரங்குன்றம் மலைகளும் அழகாகத் தெரியும். பந்தல்குடி ராம்கோ சிமெண்ட் தொழிற்சாலை குமித்துப் போட்டிருக்கும் மண்ணும் பார்ப்பதற்கு மலைகள் போன்றே தெரியும்.

யாம் ஆறாவதோ, ஏழாவதோ படிக்கும் போது திருப்பரங்குன்றம் பகுதியில் ஒரு கல்லூரி கட்டினார்கள். அக்காவும் அப்பாவோடு தங்கி பல மாதங்கள் வேலை பார்த்தார். திருப்பரங்குன்ற மலையைப் பற்றி ஊருக்கு வரும் போதெல்லாம் கதைகள் பேசுவார். ஒருமுறையாவது அந்த மலையின் அருகே சென்ற பார்க்க வேண்டும் என்று விரும்பியிருக்கிறார். கடைசி வரை அவரை மலைக்கு அருகே அழைத்துப் போய் காட்டவில்லையாம். இந்த வாரம் போகலாம், அடுத்த வாரம் போகலாம் என்று சொல்லியே அப்பாவும் மற்றவர்களும் அக்காவை ஏமாற்றினார்களாம். இன்றைக்கும் அந்த மலை ஏக்கம் அவருக்குப் போகவில்லை.

எங்கள் வீட்டின் திண்ணையில் பெரும்பாலும் நெல் காய்ந்து கொண்டிருக்கும். பல நேரங்களில் வீட்டிற்குள் நெல்லைப் பரப்பி அதற்கு மேல் பாய்விரித்தும் படுத்திருக்கிறோம். கூலிக்கு வேலை செய்தே மூட்டைக் கணக்கில் எங்கள் வீட்டில் நெல் சேர்ந்து விடும். யாம் வீட்டில் இருந்தால், காயும் நெல்லை அடிக்கடி கிண்டி விடச் சொல்வார்கள்.

வண்டிப்பாதை வழியாக எராளமான வண்டி மாடுகள் போகும். மாட்டு வண்டிகளைப் பார்த்தால் சிறுவர்களுக்கு ஏகக் குஷி. உள்ளூர் வண்டிகளை விட வெளியூர் வண்டிகளென்றால் இரட்டிப்பு மகிழ்ச்சி. உள்ளூர்க்காரர்கள் வண்டிகளில் ரொம்பத் தொங்கினால் வீடுகளில் வந்து சொல்லிக் கொடுத்து விடுவார்கள். வண்டிகளில் பின்னாடி நீட்டிக் கொண்டிருக்கும் பலகையைப் பிடித்து கீழே உழுது கொண்டே செல்வதில், சிறுவர்களுக்கு இருக்கும் ஆனந்தம் வேறு எதிலும் வராது. பலகைக்கு கீழே இரண்டு இரும்பு வளையங்கள் மாட்டியிருப்பார்கள். ஆளுக்கொரு வளையமாகப் பிடித்துக் தொங்குவோம். ஆவடை நாடார் கடை அருகே பிடித்துத் தொங்கினால் மேற்குக் கண்மாய் வரையிலும் விடுவதில்லை. கிழக்கே சோலைமேடு வரையிலும் சென்று வருவதுண்டு.

ஒரு சிலர் தான் விழுந்திடப் போறீங்கடா எனச் சத்தம் போடுவார்கள். சிலர் தொங்கிட்டாப்பு வர்ற இரு என மாட்டை விரட்டுவார்கள். தொபுக்கடீர் என

விழுவதைப் பார்த்து, அடுத்த வாட்டி வண்டியில தொங்குவியா என நையாண்டி செய்வார்கள். மண் அள்ளிச் செல்லும் வண்டிக்காரர்கள் கட்டிகளைத் தூக்கிப் போடுவதும் நடக்கும். இதற்கெல்லாம் சிறுவர்கள் பயப்படமாட்டார்கள்.

தற்போதைய பள்ளி, கல்லூரி மாணவர்கள் நிற்கும் பேருந்தில் ஏறாமல் சிறிது ஓடவிட்டு ஏறுவது போல், அன்றைக்கு மாட்டு வண்டிகளிலும் நிற்கும் போது ஏறாமல் ஓட விட்டே ஏறுவார்கள். வண்டியை விடுங்க நாங்க ஏறுகிறோம் என நிற்பார்கள். யாமெல்லாம் ஓரே தாவில் ஏறி விடுவோம். வயதானவர்கள், பெண்களென்றால் வண்டிச் சக்கரத்தின் கால்களில் ஏறி உள்ளே வருவார்கள். மாடுகள் பூட்டியிருந்தால் ஆக்ரோசமாக இழுத்துக் கொண்டு நிற்கும். ஏறுங்க என மற்றவர்கள் போடும் சத்தத்தில் சிலர் நீங்க போங்க, நடந்து வாரோம் எனவும் சொல்லி விடுவார்கள்.

மாட்டு வண்டியை ஒட்டுபவர் முகத்தில் அப்படியொரு உற்சாகம் கரைபுரண்டு ஓடும். விமானம் ஓட்டுபவர்களில் கூட சில பேர் தூங்கிக் கொண்டே ஓட்டுவதாகச் கேள்விப்படுகிறோம். வண்டிக்காரர்களோ பாட்டுப் பாடிக்கொண்டும் சீட்டியடித்துக் கொண்டும் பறந்து பறந்து திரிவார்கள். மாட்டு வண்டிகள் சிலமுறை குடை சாய்ந்தும், சகதியில் மாட்டிக் கொண்டு கிடந்ததையும் பார்த்திருக்கிறோம். களங்களிலிருந்து நெல் மூட்டைகளைத் தூக்கி வருவதற்கு, வண்டி மாடுகள் வந்து காத்துக் கிடக்கும். மரக்காலில் நெல்லை அளந்து போட்டு, பெரிய கோணூசியால் சாக்கைத் தைப்பார்கள். ஒரு சிலரே வாடிக்கையாகத் தைப்பார்கள். பதரை, குலுமை செய்பவர் அள்ளிப் போவதுண்டு. பொக்கு நெல்லை தனியாகச் சாக்கில் அள்ளுவார்கள். கூலி கொடுக்கும் போது சில வீடுகளில் பொக்கு நெல்லைக் கொடுத்து விட்டதாக திருப்பிக் கொடுத்ததையும் யாம் பார்த்திருக்கிறோம். சிலர் நல்ல நெல்லோடு பொக்கையும் நைஸாகக் கலந்து விடுவார்கள். களத்திலேயே கூலியை அளந்து கொடுப்பவர்கள் வெகு சிலரே.

அன்று காடுகரையெல்லாம் விசில் சத்தத்தைக் கேட்கலாம். எம்மைப் போன்றவர்கள் மெனக்கெட்டு பழகிக் திரிந்தோம். தங்கப்பாண்டி பிரமாதமாக விசில் அடிக்கக் கூடியவர். சிலர் இரு ஆட்காட்டி விரலையும் வாயினுள் வைத்து சத்தமாக சீட்டி அடிப்பார்கள். எமக்கு விசில் அவ்வளவாக வராது. கையை வைத்து பலமுறை முயற்சி செய்திருக்கிறோம். வெறும் காற்றுதான் வந்ததேயொழிய விசில் சத்தம்

வந்தபாடில்லை. அதிர்ஷ்டவசமாக ஒரிருமுறை கேட்கும் சத்தத்தைக் கேட்டு பெரு மகிழ்ச்சி கொண்டதோடு சரி.

ஆடு மேய்ப்பவாகள் ஒருவருக்கொருவர் சீட்டி மூலமே பேசிக் கொள்வார்கள். சிலர் ஆடுகளை ஒலி மூலமே கட்டுப்படுத்தவும் செய்வார்கள். படங்கள் பார்க்கும்போது தங்கள் அபிமான கதாநாயகன் வரும்போதும், எதிரிகளை அடித்து உதைத்து துவம்சம் பண்ணும் போதும் விசில் தூள் பறக்கும். கிருத்திரியம் பிடிச்சவனுங்க எனப் பெரியவர்கள் திட்டுவார்கள்.

ஒருமுறை தங்கப்பாண்டிக்கும் எமக்கும் வைக்கோல் விளையாட்டில் ஒருவருக்கொருவர் தள்ளிவிடும் போது சண்டை வந்து விட்டது. பல நாட்கள் இருவரும் பேசாமல் இருந்தோம். வேல்முருகனோடு ஓடைக் கல்லை எறித்து பிடிக்கும் விளையாட்டில் கல் நெற்றியில் பட்டு இரத்தம் வழிந்தது. மூன்றோ, நான்கோ படிக்கும் போது, வேல்முருகனிடம் ஐந்து பைசா கடன் வாங்கி மிட்டாய் வாங்கித் தின்று விட்டோம். வீட்டில் எல்லோரும் இருக்கும்போது, கடனா வாங்கின ஐந்து பைசாவைக் கொடு எனக் கேட்டு விட்டார். இந்த வயதிலேயே கடன் வாங்குறாயா எனச் சொல்லி, அப்பா எம்மைக் செமத்தையாக அடித்து வீட்டின் முன் இருந்த தூணில் கட்டி வைத்து விட்டார். யாம் கத்திய கத்தில் ஊரே கூடி விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். வெகு நேரம் கழித்தே கட்டுக்களை அவிழ்த்து விட்டார்கள்.

பெண்கள் பேனெடுக்க உட்கார்ந்தால் அன்றைய பொழுது முடிந்தே போகும். செத்த நேரம் பாரேன் என உட்காருவார்கள். ஈறு, ஒட்டுக்குஞ்சி, பேன் என குத்திக் கொண்டே இருப்பார்கள். பேன்களை குத்திக் கொல்வது சிறுவர்களுக்குப் பிடித்த பொழுதுபோக்கு. தலையிலேயே குத்துவது வேடிக்கையாக இருக்கும். ஈர்கழி வைத்து இழுக்கும் போது, சிறு பிள்ளைகள் அழுது விடுவார்கள். பேனெடுக்கும் ஈர்கழி, சிணுக்கடி பல வீடுகளுக்கும் சென்று வரும். குப்பைமேனி, கரிசலாங்கன்னி இலைகளை அரைத்து, தலைக்குக் குளிப்பார்கள். முடி கருகருவென வளருமாம். எமது அம்மாவின் விரல்கள், இரவில் தூக்கும் போது கூட எமது தலையில் ஊர்ந்து கொண்டிருக்கும்.

மேலையூர் என்ற மேலப்பரளச்சியில் நாயக்கரும் பிள்ளைமாரும் அதிகமாக இருந்தார்கள். சுதந்திரப் போராட்ட தியாகியொருவர் இருந்தார். காங்கிரஸ் குல்லாவும் தாடியும் வைத்து கதர் ஜிப்பாவில் தேசியக் கொடி அணிந்தவாறு

மிதிவண்டியில் பயணிப்பார். அருந்ததியர் தொகுப்பு வீடுகள் தனியாக இருந்தன. ஊரின் வடக்கே பரந்து விரிந்த கரிசல் கண்மாய் உண்டு. அன்று பள்ளிக்கூடம் அருகிலேயே நெல்வயல்கள் நடவு செய்யப்பட்டு பசுமையாகக் காட்சியளிக்கும். இன்று அனைத்தும் வீடுகளாகி விட்டன. முக்கியச் சாலையில் சொற்ப எண்ணிக்கையில் கடைகள் இருக்கின்றன. முக்கியச் சாலையில் இருந்தும் இந்த ஊர் பெரிதாக வளரவில்லை.

பரளச்சியில் தேவேந்திரர்கள் அதிகம். சில தேவர் வீடுகள் இருந்தன. இன்று தேவர்கள் இல்லையெனக் கேள்விப்படுகிறோம். பெரும்பாலும் கிறித்துவர்கள். எமது பள்ளிக்காலத்தில் இரு கோஷ்டியாக இருந்தார்கள். அந்தப் பகுதியின் செல்வாக்கான தேவேந்திரர் குடியிருப்பு எனச் சொல்வார்கள். படித்தவர்கள் அதிகம் இருந்தார்கள். எமது நண்பர்கள் பலரும் அவர்களது அண்ணன், அக்கா வேலையிலிருப்பதாகச் சொல்லிக் கேட்டிருக்கிறோம். படித்து வெளியூர்களில் தங்கி விட்டதால் முன்பு போல் திரண்ட ஊராக இன்று இல்லை. ஊரின் அருகே அழகிய குளம் இருந்தது. மழைக் காலங்களில் பசுமை போர்த்தியது போன்று இந்த ஊர் காட்சியளிக்கும்.

இங்கிருந்து எங்கள் ஊருக்கு வந்து தங்கியவர்கள் குருவுத் தேவர் மற்றும் தங்கத் தேவர். அவர்கள் பங்காளிகளுக்குள் ஏதோ தகராறு வந்து கொலை செய்யுமளவிற்குச் சென்று விட்டது. இவர்களது தங்கையை எங்கள் ஊர் மாயழகுத் தேவருக்கு மணம் செய்திருந்ததால் இங்கே வந்து தங்கி விட்டார்கள். குருவுத் தேவர் ஐயர் கண்மாய் அருகே கிணறு தோண்டி தோட்டம் பாத்தார். இவரது மூத்த பையன் எம்மைப் பார்த்தால் மிகவும் அக்கறையோடு, இன்முகத்தோடு பேசுவார். தங்கத் தேவருக்கு வட்டித் தொழில்.

ஊருக்கு தெற்கே நத்தக்காடு என்னும் வடக்குநத்தம் அமைந்துள்ளது. ஊரின் நுழைவில் குளம் இருக்கும். இங்கு நாயக்கர்கள் அதிகம். அகமுடையார்களும் இருக்கிறார்கள். முழுக்கவே கரிசல்காடுதான். இங்கிருந்து தூத்துக்குடி மாவட்டம் ஆரம்பமாகிறது.

வடக்கு நத்தத்திற்கு சற்று தள்ளி அமைந்திருப்பது தெற்குப்பட்டி என்ற தெற்கு நத்தம். கருவேலக்காடுகளாக இருக்கும். ஜெய்சங்கர் அண்ணன் வீட்டிற்கு இரண்டு முறை சென்றிருக்கிறோம். மிகவும் அன்பாக எம்மை கவனித்துக் கொண்டார்கள். இவரது தந்தை குருசாமி ஐயா, எம்மைக் கண்டால் தம்பி சௌக்யமா என நலம்

விசாரிக்காமல் செல்லமாட்டார். மூத்த அண்ணன் வெளிநாட்டில் இருந்தார். கணேசன் அண்ணன் எங்கள் ஊரில் பூமாலை அவர்கள் மகள் அரசியைக் கட்டியிருந்ததால் எங்கள் ஊருக்கு அடிக்கடி வருவதுண்டு. கணேச அண்ணன் எங்கள் வீட்டோடு மிகுந்த நட்பு பாராட்டுவார். தங்கை சோலையம்மாளை மாரிமுத்து மணம் முடித்திருக்கிறார்.

ஒருமுறை அண்ணன் வீட்டிற்குச் சென்று இரவு தங்கினோம். அன்று மதியத்திலிருந்தே, அவ்வூரைச் சேர்ந்த சற்று மனநிலை சரியில்லாதவர், கையில் அருவாளை எடுத்து எல்லோரையும் மிரட்டிக்கொண்டு திரிந்தார். அவரை ஒருவராலும் கட்டுப்படுத்த இயலவில்லை. இரவெல்லாம் சத்தமிட்டுக் கொண்டேயிருந்தார்.

மாமா பெண் அனந்தம்மாளை இவ்வூரைச் சேர்ந்த இரவி அண்ணன் திருமணம் முடித்திருந்தார். நல்ல குணமுள்ளவர். எமது அம்மா, அப்பா மீது மிகுந்த மரியாதையும் அன்பும் வைத்திருப்பார்.

சுப்பையா அண்ணனும் நல்ல மனிதராக இருப்பார். எமது பெற்றோர் மீது மிகுந்த அன்புள்ளவராக இருப்பார். இவரது பெற்றோரும் பாசமாக இருப்பார்கள்.

தெற்கு நத்தத்தில் எல்லோராலும் மதிக்கக் கூடியவராக மாசிலாமணி ஐயா இருந்தார். சமூக பஞ்சாயத்துகளில் கலந்து கொள்வார். நல்ல மனிதர் என்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம்.

ராணி அக்காவின் அண்ணன்கள் அடிக்கடி ஊருக்கு வருவார்கள். ராணி அக்கா கோபால் அவர்களை திருமணம் செய்திருந்தார். நடராஜ் அண்ணன் சற்று உயரம் குறைவாக இருப்பார். மிதி வண்டியில் வருவார். கருப்புசாமி அண்ணனும் தங்கையைப் பார்க்க வருவதுண்டு. இவர்களெல்லாம் அம்மா மீது பாசமாக இருப்பார்கள். இவர்களது தம்பி ஏசு சற்று மந்தத்தன்மையோடு இருந்தார். எங்கள் ஊரில் மேலத்தெருவில் மாடுகள் மேய்த்தார். பலரும் விளையாட்டுக்கு இவரை கிண்டல் செய்து பேசுவார்கள்.

இந்த ஊரில் அகமுடையார்களின் வீடுகள் சில இருந்தன. தற்போது ஒருவரும் இல்லை எனத் தெரிகிறது. இங்கிருந்து சிவப்புராஜா அவர்கள் எங்கள் தெரு அடிகுழாய் அருகேயிருந்த நிலத்தை மேடாக்கி வீடு கட்டி குடிவந்தார். இவரது பெண்ணைத்தான் டீக்கடை ராஜ் மணமுடித்திருந்தார்.

முன்பு தேவேந்திரர்களில் குறைவானவர்களே கிறித்தவர்களாக இருந்தார்கள். இன்று பலரும் வேதக்காரர்களாக மாறிவிட்டார்கள். ஊரின் மையத்தில் ஒரு தேவாலயம் இருக்கிறது. இங்குதான் பெரும்பாலானவர்களின் பகல் பொழுது போகும் எனச் சொல்வார்கள். இரவுகளிலும் தூங்குவார்கள்.

இன்று இந்து தேவேந்திரர்களும், கிறித்துவ தேவேந்திரர்களும் ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்ளுமளவிற்கு மத ஆவேசம் அதிகரித்துவிட்டது. சமீபத்தில் கூடுதலாக வேறு ஒரு பிரிவினரின் தேவாலயமும் வந்திருப்பதாகத் தெரிகிறது. வரும் காலங்களில் கிறித்துவ தேவேந்திரர்களுக்கிடையே ஆவேசம் வருவதற்கான அறிகுறிகள் அதிகம் தென்படுகின்றன. சில பேருடன் யாம் பேசியதிலிருந்தே இதைச் சொல்கிறோம். மத வியாபாரிகளால் மத ஆவேசம் நீரூற்றி வளர்க்கப்படுகிறது. எங்கள் வீட்டிற்கு வந்த உறவினர் ஒருவர் உங்கள் வீடுகளிளெல்லாம் தண்ணீர் கூட குடிக்கக் கூடாது எனச் சொல்கிறார். வருடா வருடம் குலதெய்வத்திற்கு பூசை போட்டவர்கள் இன்று அதே சாமியை வோறொரு பெயரால் அழைக்கிறார்களெனில் எத்தனை விரைவான மதமாற்றம் என்பதை அறிந்து கொள்ளலாம்.

தெற்குநத்தத்தைச் சுற்றி இருக்கும் ஊர்களில் நாயக்கர் அதிகமிருப்பதால், இரு சமூகத்திற்கும் சில மோதல்கள் வந்து கொலைகள் அளவிற்குச் சென்றுவிட்டது. வரும் காலங்களிலாவது அன்பும், சமாதானமும் உண்டாகட்டும்.

எங்கள் ஊரின் வடக்கே இராமசாமிபட்டி இருக்கிறது. தெலுங்கு செட்டியார்கள் அதிகமிருக்கும் ஊர். ஆட்டுக்கறி வாங்க வாரச்சந்தைக்கு என இவ்வூருக்குச் செல்வார்கள். மழைக் காலங்களில் களையெடுப்பிற்கு இங்கிருந்து அதிகளவிலான ஆட்கள் வெளியூர்களுக்குச் செல்வார்கள்.

திருமலைபுரத்திற்கும், தும்முசினம்பட்டிக்கும் இடையே அமைந்திருக்கும் சிறு ஊர் சேதுபுரம். நாயக்கர்கள் வாழ்கிறார்கள். நிறைய ஆடுகள் வைத்திருப்பார்கள்.

சுத்தமடம் எங்கள் ஊருக்கு தென்மேற்கே உள்ளது. இதற்கு அடுத்து கிருஷ்ணாபுரம். கரிசல் காட்டு வேலைகளுக்கு இவ்வூர்களுக்குச் சென்று வருவார்கள். சுத்தமடத்தில் ரெட்டியார், செட்டியார், பிள்ளைமார் மற்றும் தேவர்கள் இருக்கிறார்கள். இவ்வூருக்குத் தெற்கே நாயக்கர் அதிகம் உள்ள போத்தம்பட்டி இருக்கிறது. இவ்வூர்களிலிருந்து எங்கள் பள்ளியில் படித்த சில நண்பர்களைப் பார்த்தால் யாம் அடையாளம் கண்டு கொள்வோம். எமது அண்ணனோடு படித்த

சுத்தமடம் வாசுதேவன் எம்மோடு நன்கு பேசுவார். இவரது தந்தையும் தம்பி நல்லாப் படிக்கிறியா எனக் கேட்கத் தவறமாட்டார்.

முதுநிலை முடித்த பின் சில மாதங்கள் வரையிலும் அப்பா அம்மாவோடு இருந்த நாட்கள் மகிழ்வானவை. பெரும்பாலும் அக்கா வீட்டில்தான் இருப்போம். அவர்கள் வீட்டின்முன் இருந்த சிறிய திண்ணையில் உட்கார்ந்து கதைகள் பேசிக் கொண்டிருப்போம். தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாததால் அவரவர் வீடுகளின் முற்றத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பார்கள். இரவு தூங்கச் செல்வதற்கு வெகு நேரமாகும். சமயங்களில் அம்மாயியும் எங்களோடு பேசி அமர்ந்திருப்பார்.

அம்மாயி கொஞ்சம் முடியாமால் போவதும், பின்பு உடல் நிலை தேறுவதுமாக இருந்தார். கம்பு ஊன்றி சிறிது தூரம் மட்டுமே நடக்கக் கூடியவராக இருந்தார். தட்டில் தவிடு கொட்டி, வீட்டிற்குள்ளேயே இரண்டுக்குப் போகுமளவிற்குச் கூட சில முறை அல்லலுற்றார். இப்படியான காலத்தில் மாமா வீட்டார் அவரை நன்றாகக் கவனித்தார்கள். குருவுத்தாய் அதிக அக்கறை எடுத்து பார்த்துக் கொண்டார். எட்டாவது முடித்துவிட்டு, ரெட்டியபட்டியில் தையல் பயின்று, பெண்களுக்கு ரவிக்கை தைக்கும் அளவிற்குத் தேறியிருந்தார். எம்மோடு சில நேரங்களில் வழக்கடிப்பதுண்டு. உங்க மகனுக்குத்தான் ஆதரவாப் பேசுவீங்க என அம்மாவிடமும் செல்லமாகக் கோவிப்பார். அன்பான சற்று துடுக்கான பெண்ணாக இருந்தார். ஜெயலெட்சுமியும் அம்மாயியை நன்கு கவனிப்பார். கொஞ்சம் கோவம் வரும். அங்கிட்டுப்போய் பேசுங்க என எங்களையெல்லாம் மடக்கி விடுவார். வீட்டு வேலைகள் நன்கு பார்ப்பார்.

விடுமுறை நாட்களில் ஊருக்கு வரும்போது, அம்மாயியைப் பார்க்கச் சென்றால், கைகளை பிடித்துக் கொண்டு அன்பாகப் பேசுவார். யாம் படிப்பை நிறுத்தாமல், மேலும் மேலும் படித்ததில் அவருக்கு அளவில்லா மகிழ்ச்சி. எப்பப்பே வந்தே என முகத்தை வருடிக் கொடுப்பார். ஊரிலுள்ள எல்லா சாமிகளையும் எமக்கு நல்ல சுகத்தைக் கொடுக்குமாறு வேண்டுவார். ‘‘வாக்குவழி அய்யா, சீலக்காரியாத்தா, சோலையப்பசாமி, எம் பேரனுக்கு கைய், கால் சொகத்தக் கொடு, நல்லா படிப்பக் கொடு, காத்துக் கருப்பு அண்டாமப் பார்த்துக்க, படிச்சவுடனே நல்ல வேலையக் கொடு’’ என இரு கைகளையும் தலைக்கு மேல் தூக்கி கையெடுத்துக் கும்பிடுவதை வழக்கமாகக் கொண்டிருப்பார். அவரைப் பார்க்க வந்தவர்கள் கொடுத்திருக்கும் பணத்தை முந்தானையில் முடிந்து வைத்திருப்பார். அதை எடுத்து

எம்மிடம் கொடுத்து வாங்கிக் கொள்ளுமாறு வற்புறுத்துவார். வேண்டாம் அம்மாயி எனச் சொன்னால், செலவுக்கு வச்சுக்கோப்பே எனக் கெஞ்சுவார். யாம் ஐந்தோ, பத்தோ கொடுத்தாலும் வாங்கிக் கொள்வதற்கு மறுப்பார்.

முனியசாமி அண்ணன் சௌதியிலிருந்து சில மாதங்களுக்கு முன்புதான் ஊருக்குத் திரும்பியிருந்தார். அண்ணன் கொண்டுவந்திருந்த புகைப்படக் கருவியால், அக்கா வீட்டின் திண்ணையில் அம்மாயியை உட்கார வைத்து, போர்வையால் சுவற்றை மறைத்து புகைப்படம் எடுத்தோம்.

அண்ணன் சௌதி செல்வதற்கு மாமாவிடம் கொஞ்சம் பண உதவி கேட்டிருப்பார் போல. மாமா பெண் பிள்ளைகளை வைத்திருந்தால் சற்று யோசித்திருப்பார் எனத் தெரிகிறது. அந்த வருத்ததில் அண்ணன் மாமாவோடு போசாமல் இருந்தார். குடும்பப் பிரச்சினையில் பெரியம்மாவும் மாமா வீட்டிற்கு வந்து விட்டார். அண்ணன் வந்தே சமாதானம் செய்து அழைத்துச் சென்றார்.

சௌதியில் தோட்ட வேலை பார்த்திருக்கிறார். குழந்தைகளைப் பராமரிக்கும் வேலையும் செய்வாராம். சம்பளம் குறைவாகச் கொடுத்து, நிறைய வேலைகள் வாங்கியிருக்கிறார்கள். பல வருடங்கள் அங்கேயே இருந்து விட்டதால், நாட்டிற்கு வரும் போது அவர் பராமரித்த குழந்தைகள் அழுதார்களாம்.

இருக்கன்குடி அருகேயிருக்கும் மேட்டுப்பட்டியைச் சேர்ந்த மகாலெட்சுமி அண்ணியோடு திருமணம் நடைபெற்றது. எமக்கு திருமணத்தன்று போட்டித் தேர்வு இருந்ததால், மாலை திருமலைபுரம் சென்று மணமக்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தோம். அண்ணி அமைதியானவராகத் தெரிந்தார்.

எமக்கு காலையிலும் மாலையிலும் சுத்தமடம் சாலையில் நடப்பதும், ஓடுவதுமாக நாட்கள் சென்றுகொண்டிருந்தன. ஊர்ப்பக்கம் படித்த பையன்கள் பலரும் தரகர்கள் மூலமாக இராணுவப்பணிக்கு முயற்சித்தவண்ணம் இருந்தார்கள். சிலருக்கு வேலையும் கிடைத்தது. அக்கா குழந்தைகளைக் கொஞ்சுவதும், விளையாடுவதுமாக மகிழ்ச்சியாக இருந்தோம். நண்பர்கள் பலரும் கல்வியியல் கல்லூரியில் சேர்ந்திருந்தார்கள். நண்பர்களிடமிருந்து கடிதங்கள் வருவதும், பதில் எழுதுவதுமாகப் பொழுது போய்க் கொண்டிருந்தது.

படிப்பு முடிந்தவுடன் சென்னை சென்று ஏதேனுமொரு வேலைக்குச் செல்ல வேண்டுமென்பது எமது திட்டமாக இருந்தது. சென்னையில் தங்குவதற்கு நண்பரின் அறை இருக்கிறதல்லவா. விவேகானந்தனும் சென்னை வருவதற்குத் தயாராக

இருந்தார். முதுநிலையில், சில பாடங்களில் தேர்ச்சி அடையாமல் இருந்தார் என நினைக்கிறோம். நண்பர் முதுநிலை படிக்கம்போது பொருளாதார ரீதியாக மிகவும் சிரமப்பட்டார். மூன்று பேரும் சேர்ந்து ஒரு டியுசன் மையம் நடத்தலாம் என்ற யோசனையும் இருந்தது. சரவணன் வணிக நிர்வாகவியல் சேர வேண்டுமென விருப்பத்துடன் இருந்தார். யாம் சென்னை வந்து ஆங்கிலத் தாளுக்கு பயிற்சி கொடுக்க வேண்டுமென்றும் அன்புக் கட்டளையிட்டிருந்தார்.

செம்மொழி நத்த வேல்முருகனும் எம்மோடு கடிதத் தொடர்பில் இருந்தார். யாம் முதுநிலை படிக்கும்போது பாம்பேயில் இருந்து கடிதங்கள் எழுதுவார். துபாய் செல்வதற்கு தேர்வு பெற்றிருப்பதாகவும், அங்கு நிறையச் சம்பாதித்து, எமது படிப்பிற்கு உதவுவதாகவும், யாம் மேற்கொண்டும் படிக்க வேண்டும் எனவும் கடிதங்களில் குறிப்பிடுவார். இனிய தோழரின் அன்பிற்கு நன்றி.

சென்னைக்கு வருவதாக நண்பருக்கு கடிதம் அனுப்பிவிட்டு பயணத்திற்கான ஆயத்தப் பணிகளில் யாம் இறங்கி விட்டோம். பெற்றோருக்கு மேலும் மேலும் சிரமம் கொடுக்காமல் இருக்கப் போகிறோம் என்பதே மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. நண்பர் எம்மீது அளவு கடந்த அன்பும், கரிசனமும் வைத்திருந்ததால் அவரது உதவியோடு சென்னை சென்று போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்து, எப்படியாவது ஒரு வேலையை வாங்கி விட முடியும் என்ற நம்பிக்கை எமக்கு அதிகமாகவே இருந்தது.

சில நாட்களாகவே அமமாயி முடியாமல் இருந்தார். நான்கரை மணி பேருந்துக்கு கிளம்பும்முன், அவரைப் பார்த்து சொல்லிவிட்டுக் கிளம்பலாம் என மாமா வீட்டிற்குச் சென்றோம். படுக்கையில் பேச முடியாமல் இருந்தார். யாம் சென்னைக்கு போய்விட்டு வருகிறோம் என்றதற்கு, ஏதோ யோசித்தவராக வேண்டாம் என்பது போல் தலையாட்டினார். யாமோ பெட்டியைக் கொண்டுவந்து அக்கா வீட்டுத் திண்ணையில் வைத்துவிட்டே அவரைப் பார்க்கச் சென்றிருந்தோம். அக்காவும் அம்மாவும் யாம் போய்ட்டு சீக்கிரம் வந்துவிடுவோம் என்றார்கள். ஏதோ ஒரு உள்ளுணர்வு அவருக்கு இருந்திருக்க வேண்டும். சில வார்த்தைகளைப் பேசி, சைகை மொழியில் எம்மை நாளைக்குப் போகட்டும் என்று சொல்லிவிட்டார். அம்மாயிக்காக நாளைக்கு போய்க் கொள்கிறோமென்று வீட்டில் சொல்லி விட்டோம். சிறிது நேரத்திலேயே அம்மாயி இயற்கையெய்தி விட்டார். அம்மாயிக்கு மிகச் சிறப்பான முறையில் நல்லடக்கம் நடைபெற்றது.

அம்மாயி வேண்டிய சாமிகள் எம்மைக் கைவிடவில்லை. சில நாட்களிலேயே தொடர்வண்டி நிலைய உதவி அதிகாரி பணிக்கு சென்னையில் நடந்த எழுத்துத் தேர்வில், யாம் தேர்வு பெற்றிருப்பதாகக் கடிதம் வந்தது. எமக்கும் குடும்பத்தாருக்கும், உறவினர்கள், நண்பர்களுக்கும் எல்லையில்லா ஆனந்தம். குனிந்த தலை நிமிராமல் யாம் நடக்கிறோம் என அம்மாவிடம் மற்ற தெருக்காரர்கள் சொல்லி பெருமைப் படுவார்களாம். எமது வெற்றியால் அம்மாவிற்கு பெருமையும், மகிழ்ச்சியும் பன்மடங்கு கூடியது என்றே சொல்லலாம். பொன்னம்மா மகன் படித்து முடித்தவுடன் வேலைக்கு போயாச்சாமே என காடுகரைகளில் பேசுவதைக் கேட்கும் போது மகனை நினைத்து பெருமையாக இருந்திருக்குமல்லவா.

யாம் எழுத்துத் தேர்வில் மட்டும் வெற்றி பெற்றிருந்தோம். நேர்முகத்தேர்வு மற்றும் உளவியல் தேர்வு என பல நிலைகள் தாண்ட வேண்டியிருந்தது. எனினும் கிராமத்தில் வேலை கிடைத்துவிட்டாகவே நினைத்துவிட்டார்கள். சென்னையில் நேர்காணலும், உளவியல் தேர்வும் நடைபெற இருந்தன. தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையத்தின் நான்காம் பிரிவு பணிக்கும் முதல் கட்டத் தேர்வில் யாம் வெற்றி பெற்றிருந்தோம்.

தொடர்வண்டிப் பரிச்சையில் தேர்வாகியவுடன், பலரும் பலவித ஆலோசனைகள் சொன்னார்கள். பணமும், சிபாரிசும் இருந்தால்தான் வேலைக்குச் செல்லமுடியும் என உறுதியாக நம்பினார்கள். இராஜாராம் சார் அவருக்குத் தெரிந்த ஒருவர், சீர்காழியில் இரயில் நிலைய அதிகாரியாக இருப்பதாகவும், அவரைச் சென்று பார்த்தால் தக்க ஆலோசனையும், வழிகாட்டலும் கிடைக்குமென்றும் சொன்னதால் யாமும் சீர்காழிக்குப் பயணமானோம்.

மதுரையில் அப்போது பழங்காநத்தம், பெரியார், ஆரப்பாளையம், அண்ணாநகர், திருவள்ளுவர் விரைவுப் பேருந்து நிலையம் எனப் பல பேருந்து நிலையங்களிருந்தன. தஞ்சாவூர், புதுக்கோட்டை, கும்பகோணம் பேருந்துகள் அண்ணாநகர் நிலையத்தில் நிற்கும். அருப்புக்கோட்டையிலிருந்து பழங்காநத்தம் சென்று, பின் அங்கிருந்து அண்ணா நகர் செல்ல வேண்டும். மதுரை தெற்கு வாசலில் இறங்கினால் அந்த வழியாக வரும் பேருந்தில் ஏறிக் கொள்ளலாம். தெற்கு வாசல் தள்ளி மேற்கே, ஆலமர நிறுத்தம் இருக்கும். இந்தப் பேருந்து நிறுத்தத்தில் அருப்புக்கோட்டை பயணிகள் நிறைய பேர் பேருந்திலிருந்து

இறங்குவதும் ஏறுவதுமாக இருப்பார்கள். இங்கிருந்து கொஞ்ச தூரத்தில் பெரியார் பேருந்து நிலையமும் விரைவுப் பேருந்து நிலையமும் வரும்.

யாம் அண்ணா நகர் சென்று கும்பகோணம் பேருந்தில் ஏறிக் கொண்டோம். எம்மிடம் எப்போதும் தமிழ்நாடு வரைபடம் இருக்கும். வழியெல்லாம் சரியாகத் தெரிந்து வைத்திருப்போம். பேருந்து மதியம் தஞ்சாவூர் சென்றது. செம்மண்காடுகள் நிறையத் தெரிந்தன. புதிதாகச் செல்வதால் வேடிக்கை பார்த்துக்கொண்டே சென்றோம். கும்பகோணத்தில் இறங்கி பக்கத்திலிருந்த சிறிய கடையில் சாப்பிட்டோம். மகாமகக் குளமெல்லாம் ஞாபகத்திற்கு வந்தது. பக்கத்தில் பெரிய கோபுரங்கள் ஒன்றுமே தெரியக் காணோம். எங்கு பார்த்தாலும் வெற்றிலைக் கட்டுகளாக அழகாக அடுக்கி வைத்திருந்தார்கள்.

அடுத்த பேருந்து ஏறி சீர்காழி சென்று பேருந்து நிலையத்திலிருந்து நடந்தே தொடர்வண்டி நிலையம் சென்று விட்டோம். யாம் பார்க்கச் சென்றவர் அவசரமாகச் சென்னை சென்றுவிட்டதாகவும், ஒரு வாரம் விடுப்பு எடுத்துள்ளதாகவும் அலுவலகத்தில் சொன்னார்கள். ஏமாற்றத்தோடு திரும்பினோம். பேருந்து நிலையம் அருகே சற்றே பெரிய கோபுரத்தோடு சிவன் கோவில் இருந்தது. சுவாமி தரிசனம் முடித்து, உணவருந்தி புதுக்கோட்டை செல்லத் தயாராக இருந்த பேருந்தில் கிளம்பிவிட்டோம்.

புதுக்கோட்டையிலிருந்து மதுரை வந்த பேருந்து புதிது. ஒலி பெருக்கிகள் சிறப்பாக இருந்தன. அரவிந்தசாமி, நீண்ட இடைவெளிக்குப் பின் ஸ்ரீதேவி நடித்த தேவராகம் படத்தின் பாடல்களை பேருந்தில் கேட்டு ரசித்துக் கொண்டே வந்தோம். தம் தனனனம் தன்னானன தம் தனனனம்... யாதவா.... அந்த அதிகாலை நேரத்தில் பாடல்கள் ஒருவித பரவச நிலைக்குக் கொண்டுசென்றதென்றால் மிகை இல்லை. அப்போது அந்தத் திரைப்படம் யாம் பார்த்திருக்கவில்லை. பாடல்கள் ஓட்டுநருக்கும் பிடித்திருக்க வேண்டும். திரும்ப திரும்ப போட்டுக் கொண்டே வந்தார்.

திருமலைபுரம் இரத்தினம் ஐயா அவர்களின் மகனுக்கு மதுரை விமான நிலையம் அருகேயுள்ள சின்ன உடைப்பு கிராமத்தில் பெண் எடுத்திருந்தார்கள். சமீபத்தில் இந்த ஊர் விலக்கில் இருந்த அம்பேத்கார், இம்மானுவேல் சேகரன் சிலைகள் உடைக்கப்பட்டது ஞாபகமிருக்கலாம். இப்போது இருவரும் இரும்பு கூண்டுக்குள் நிற்கிறார்கள். அதே வீட்டில் அருப்புக்கோட்டை நிலைய அதிகாரியாக இருந்த மகாலிங்கம் சாரும் பெண் எடுத்திருந்தார்.

மகாலிங்கம் அவர்களை இரயில் நிலையம் சென்று சந்தித்தோம். அக்கா ஊருக்குச் சென்றிருந்ததால் குழந்தையை பள்ளிக்கு அனுப்பும் அவசரத்திலிருந்தார். தேர்வு செய்தி கேட்டு பாராட்டினார். அவருக்குத் தெரிந்தவர் மதுரை விளாங்குடியில் இருப்பதாகவும், தென்னக ரெயில்வேயில் மண்டல அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றவர் என்றும் எல்லோருக்கும் கைமாறு பாராது உதவிகள் செய்வாரென்றும் சொன்னார்.

கருப்பையா ஐயாவைப் பார்க்க இருவரும் விளாங்குடி சென்றோம். பாத்திமா கல்லூரி நிறுத்தத்தில் இறங்கி கொஞ்ச தூரம் நடந்தோம். அன்புடன் பேசினார். வெற்றி பெறுவது எளிதென்றும், உளவியல் தேர்வில் கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டுமென்றும் ஆலோசனைகள் கூறினார். எமது நேர்காணல் அன்று சென்னை வந்திருந்தார். எழும்பூர் நிலைய ஓய்வு அறையில்தான் வழக்கமாகத் தங்குவார்.

நண்பர் சரவணனின் மூத்த அண்ணன் சண்முகம் அவர்கள் பழைய வண்ணாரப் பேட்டையில் திருமலை டிரேடர்ஸ் எனும் பெயரில் அட்டைக்கடை வைத்திருந்தார். முருகன் அண்ணன் காளிஸ்வரி எலெக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் என்னும் பெயரில் கடை வைத்திருந்தார். கடையில் அவரது தம்பி ரமேஷ் இருப்பார். சரவணன் அட்டைக்கடையில் வேலை பார்த்துக்கொண்டே சென்னைப் பல்கலையில் தொலைதூரக் கல்வி முறையில் இளநிலை வணிக நிர்வாகவியல் படித்துக் கொண்டிருந்தார்.

மூத்த அண்ணனுக்கு மட்டுமே திருமணம் நடந்திருந்தது. மற்றவர்கள் திருத்தங்கல் நாடார் திருமண மண்டபம் அருகே மாடியில் அறை எடுத்துத் தங்கியிருந்தார்கள். அறையின் முன்புறம் நிறைய இடம் கிடக்கும். அட்டைக்கடையில் வேலை பார்த்த பரமக்குடியைச் சேர்ந்த சரவணனின் தாய்மாமா கனகராஜ் மற்றும் அவரது பையன் ராமமூர்த்தி, நெல்லைப் பக்கமிருந்து நாராயணன் தங்கியிருந்தார்கள். நாராயணன் அலுவலகம் ஒன்றில் கணக்காளராக வேலை பார்த்தார். இந்து அறநிலையத் துறை அலுவலக வேலைக்கு முயற்சித்துக்கொண்டிருந்த முருகானந்தம் மற்றும் சிலரும் அறையில் இருந்தார்கள்.

எமது நேர்காணலுக்கு சென்னை சென்று இங்குதான் தங்கியிருந்தோம். பகலில் யாரும் இருக்கமாட்டார்கள். இரவில் நேரம் கழித்தே வருவார்கள். சரவணனும் யாமும் பக்கத்தில் இருந்த கடையில் புது காலணி வாங்கினோம்.

முதன் முதலாக இந்த நேர்காணலின் போதுதான் யாம் முழுகாலணி அணிந்தோம். முதுநிலை படிக்கும்போது சில சுமாரான உடைகளே எம்மிடம் இருந்தன. முழுகாலணி அணிய ஆசையாக இருந்தது. ஒருமுறை நண்பர் ஒருவரின் ஜீன்ஸ் கால்சட்டை அணிந்தது மனதிற்கு சங்கடமாக இருந்தது. குமார் சர்ட்ஸ் துணிக்கடையில் நூறு ரூபாய்க்கு நல்ல சட்டைகள் கிடைக்கும். யாம் அந்தச் சட்டைகளே பெரும்பாலும் அணிந்தோம். அருப்புக்கோட்டையில் பூபதி டெய்லர்ஸ் தையல்காரரிடம்தான் வழக்கமாகத் தைப்போம். புன்சிரிப்புடன் வரவேற்றுப் பேசுவார். குறித்த நேரத்தில் கொடுக்கவும் செய்வார்.

புது பேண்ட், சர்ட், காலணி போட்டுக்கொண்டு நேர்காணலுக்குச் சென்றோம். நேர்காணல் நுங்கம்பாக்கம் தொடர்வண்டி அலுவலகத்தில் நடந்தது. எமது முறை வரும்வரை அமைதியாகக் காத்திருந்தோம். கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சிறப்பாகப் பதில் சொன்னோம். மதியத்திற்குமேல் பக்கத்தில் இருந்த பள்ளிக்கு ஆட்டோவில் சென்று உளவியல் தேர்வு எழுதினோம். தேர்வை நேரக் கட்டுப்பாட்டோடு மிகவும் கறாராக நடத்தினார்கள். எழும்பூர் நிலையம் சென்று ஐயாவுடன் நேர்காணல் குறித்துப் பேசிக் கொண்டிருந்தோம்.

கிளம்பும்போது எமக்கு நேர்காணல் நடத்தியவர்களில் இருவர் பக்கத்து அறையில் நுழைவதைக் கண்ணுற்றோம். ஐயாவிடம் கூறியவுடன் முகத்தில் ஒரே பிரகாசம். உடனே அவர்களது அறைக்குள் சென்று பேசினார். சிறிது நேரம் கழித்து எமது தேர்வு எண்ணையும் தாளில் குறித்துக்கொண்டு சென்றார். ரொம்ப அதிர்ஷ்டக்காரன்யா என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினார். நேர்காணலை யாம் நன்றாகப் பண்ணியிருப்பதாகவும் உளவியல் குறித்து அவர்களிடம் பேசி இருப்பதாகவும் சொன்னார். இரவில் அவர்களை மறுபடியும் சந்தித்து பேசுகிறோம் என்றும் எமக்கு நம்பிக்கையளித்து வாழ்த்துக்களோடு அனுப்பி வைத்தார். வேறு சிலரும் ஐயாவைப் பார்க்க வந்திருந்தார்கள்.

சில நாட்கள் வண்ணாரப்பேட்டையில் இருந்தோம். ஆனந்தனும் அவரது அண்ணன் சோலைராஜாவும் பல்லாவரத்தில் தொடர்வண்டி லெவல் கிராஸ் அருகில் மளிகைக் கடை வைத்திருந்தார்கள். அவரைப் பார்க்கச் சென்றோம். காங்கேயனும் அப்போது எலெக்ட்ரிகல் கடையில் வேலை பார்த்தார். ஆனந்தனைப் பார்க்க கடற்கரை நிலயத்திலிருந்து பல்லாவரம் நிலையம் சென்று அங்கிருந்து நடந்து செல்வோம்.

ஒருமுறை இரவில் பல்லாவரத்திலிருந்து திரும்பும்போது மின்சார தொடர்வண்டிப் பெட்டியில் யாமும் சரவணனும், வேறு சிலரும் மட்டுமே பயணித்தோம். இருவரும் படியருகே நின்று கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டும் பேசிக் கொண்டும் வந்தோம். இந்தப் பயணம் மனதிற்கு மிகவும் பிடிந்திருந்தது. இரவில் சென்னை ரம்மியமானது.

இன்றும் நண்பர்கள் பார்த்தால் எம்மைக் கேலிசெய்து சிரிக்கும் சம்பவம், கடற்கரை நிலையத்தில் ஒருமுறை நடந்தது. நண்பர்களோடு நடைமேடையில் நடந்து வரும்போது, இந்த இரயில் எப்படித் திரும்பும் என்று கேட்டு விட்டோம். இது கூடத் தெரியாத நீயெல்லாம் இரயில்வேயில் வேலை பார்க்கப் போறியா என்று ஒரே கிண்டல், கேலி. நண்பர்கள் மகிழ்ச்சியான மனநிலையில் இருந்தால் யாம் தொலைந்தோம். சொல்லிச் சொல்லி சிரிப்பார்கள். ஏதேனும் பேசினால் முதலில் ரயில் எப்படித் திரும்புமென்று சொல் என்று கலாய்ப்பார்கள்.

இதற்கிடையில், மத்திய தேர்வாணையம் நடத்தும் இந்திய வனப் பணிக்கும் விண்ணப்பித்திருந்தோம். வினாக்கள் எவ்வாறு இருக்குமென்று தெரிந்துகொள்வதற்காக இத்தேர்வு எழுதினோம். நண்பர்கள் இந்திய ஆட்சிப் பணிக்குத் தயார் செய்யுமாறு கூறுவார்கள். யாம் வன அதிகாரியாகி, அழகான கேரளக் குட்டியைக் கட்டிக்கொண்டு நடுக்காட்டிலேயே இருந்து கொள்வோம் எனச் சொல்வதுண்டு.

நாகமலை சௌராஸ்டிரா கல்லூரியில் தேர்வு நடந்தது. யாம் பொது அறிவு, ஆங்கிலம் மட்டுமே எழுதினோம். மறுநாள் நடந்த விருப்பப் பாடம் எழுதவில்லை. கொஞ்சம் முயன்று படித்தால் எளிதில் வெற்றியடையலாமென உறுதியாக நம்பினோம். தொடர்வண்டி வாய்மொழித் தேர்விற்கு சென்று வந்தபின் நண்பர்களைப் பார்ப்பதும் வனப்பணிக்குப் படிப்பதுமாக மகிழ்ச்சியாகக் காலம் போய்க்கொண்டிருந்தது.

நேர்முகத் தேர்விலும், உளவியல் தேர்விலும் யாம் வெற்றியடைந்து விட்டதாக தென்னக இரயில்வேயிலிருந்து எமக்குக் கடிதம் வந்த பின்பு, யாம் மிகுந்த உற்சாகத்தை அடைந்தோம். வேலை வாய்ப்பு செய்தித்தாளில் தேர்வு பெற்றவர்களின் விபரம் வெளியாகியிருப்பதாக கருப்பையா ஐயா எமக்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பினார்.

தொன்னூற்றி ஆறாம் வருடத்தின் டிசம்பர் இறுதி வாரத்தில் சான்றிதழ் சரிபார்ப்பு நடந்தது. மதுரை புகைவண்டி நிலையம் அருகிலிருந்த மண்டல அலுவலகத்தில் சான்றிதழ்கள் சரிபார்த்தார்கள். சரிபார்த்த பெண் அலுவலர், முதுநிலை மதிப்பெண் சான்றிதழில் வெரிபைடு என ஆங்கிலத்தில் பேனாவால் எழுதி அவரது கையெழுத்து சுருக்கத்தையும் எழுதிவிட்டார். எமக்கோ பயங்கர அதிர்ச்சி. மதிப்பெண் சான்றிதழில் பேனாவால் எப்படி எழுதலாம் என வினா எழுப்பினோம். நீங்கதான் ரயில்வேயில சேர்ந்தாச்சே, வேற வேலைக்கா போகப் போறிங்க எனச் சொல்லி சமாளித்து விட்டார். யாம், மத்திய தேர்வாணையப் பணிக்கு முயற்சி செய்வதாகவும், இந்த வேலையில் தொடர்ந்து இருக்கமாட்டோம் எனவும் பெருமையாகச் சொன்னோம். சான்றிதழ் சரிபார்ப்பில் இரண்டு பேர் நண்பர்களானார்கள். மருத்துவ ஆய்வுக்கு பணம் கட்டியதாக நினைவிருக்கிறது. மருத்துவ ஆய்வு ஜனவரி முதல் வாரத்தில் நடக்கும் என்றார்கள். எமக்கு இந்த வருடப் புத்தாண்டு சிறப்பானதாக அமைந்து விட்டதாக கருதிக் கொண்டோம். அந்த உற்சாகத்தில் நண்பர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்து அட்டைகள் அனுப்பி மகிழ்ந்தோம்.

தொன்னூற்றி ஏழாம் வருடம் ஜனவரி முதல்வாரத்தில், அதே அலுவலகம் அருகேயிருந்த தொடர்வண்டி மருத்துவ நிலையத்தில் மருத்துவ சோதனை நடந்தது. காலையில் நேரத்திலேயே மருத்துவமனையில் இருக்க வேண்டுமென்பதால், மதுரை விமான நிலையம் அருகேயிருந்த சின்ன உடைப்பு கிராமத்தில், மகாலிங்கம் சாரின் மாமனார் வீட்டில், இருவரும் தங்கினோம். எம்மை அன்போடு கவனித்தார்கள். அவசரமான வேலை வந்துவிட்டதால், மகாலிங்கம் சார், மருத்துவ பரிசோதனை பற்றி ஒன்றும் கவலைப்பட வேண்டாமென்று சொல்லி எம்மை மட்டும் அனுப்பிவைத்தார். கருப்பையா ஐயா, அவருக்குத் தெரிந்த மருத்துவரிடம் சொல்லி இருப்பதாகவும், எல்லாம் சரியாக நடக்கும் எனவும் மருத்துவப் பரிசோதனை பெயருக்குத்தான் எனக் கூறி, மதியம் மருத்துவமனைக்கு வந்து பார்ப்பதாகக் கூறினார். யாம் பொது தொலைபேசியிலிருந்து அவரது வீட்டிற்குப் பேசுவோம்.

பரிசோதனையில் நிறக்குருடு இருக்கிறதா என்பதை மட்டும் நன்கு சோதிப்பார்கள் எனக் கேள்விப்பட்டிருந்தோம். கல்லூரியில் படிக்கும்போது இச்சோதனையைச் செய்ததில் எமக்கு குறைபாடு இல்லையென்று தெரிந்திருந்த யாம் மகிழ்ச்சியான மனநிலையில் மருத்துவ பரிசோதனைக்குச் சென்றோம்.

பெரியார் நிறுத்தத்தில் இறங்கி, தொடர்வண்டி நிலையத்தில் நுழைந்து, இரும்பு மேம்பாலம் வழியாக நடந்து போனோம். எமக்கு இனிமேல் இது போன்றதொரு புகைவண்டி நிலையத்திலேயே பணி கிடைக்குமென நினைத்தோம். முதலில் ஏதேனும் சிறிய நிலையத்திலேயே பணி கிடைக்குமென்றும், பணி அனுபவம் அதிகரிக்கும்போது பெரிய நிலையங்களில் பணிபுரிய வாய்ப்பு கிடைக்கும் எனவும் எண்ணிக் கொண்டோம்.

மருத்துவமனையில் மற்ற நண்பர்களோடு சேர்ந்து யாமும் வரிசையில் நின்று கொண்டோம். பலப் பல சோதனைகள். ஒவ்வொரு பிரிவாகச் சென்று கொண்டிருந்தோம். கடைசியாக ஒரு மருத்துவர் உடல் பரிசோதனை செய்தார். அனைத்து ஆடைகளையும் களையச் சொன்னார். உள்ளாடை மட்டும் அணிந்து நின்றோம். அதையும் அகற்றச் சொன்னபோது அதிகமான கூச்சம் வந்தது. பின்னர் வாசித்துக் காட்டச் சொன்னார். யாம் பலமுறை வாசித்த பினபும் அவருக்கு திருப்தி வரவில்லை. பேச்சு திக்குமா எனக் கேட்டார். நன்றாகப் பேசுவோமென்றும், சில நேரங்களில் உச்சரிக்க வராது எனவும் கூறினோம். மற்ற சோதனைகள் முடிந்து போகலாம் என எம்மை அனுப்பினார்.

மருத்துவர் மறுபடியும் எம்மை வாசிக்கச் சொல்லும் போதே எமக்கு பதற்றமாகிவிட்டது. ஏதோ தவறு நடக்கிறது என்பதை அறிந்து மனம் பதைக்க ஆரம்பித்துவிட்டது. நண்பர்கள் மகிழ்ச்சியால் நிறைந்திருந்தபோது, எமது முகம் வாடி விட்டது. பரிசோதனையின்போது முன்னாள் இராணுவ வீரர் ஒருவரும் யாமும் நண்பர்களாகிவிட்டிருந்தோம். முக வாட்டத்தைப் பார்த்து ஏன் ஒரு மாதிரியாக இருக்கீங்க என அடிக்கடி கேட்டார். முன்னால் இராணுவத்தினர் தங்குவதற்காக,தொடர்வண்டி நிலையம் அருகே கட்டிடம் இருந்தது. அங்கு சென்று மற்ற நண்பர்களோடு சிறிது நேரம் செலவிட்டோம்.

மதியத்திற்குமேல் எம்மை மட்டும் அழைத்திருந்தார்கள். எங்களையெல்லாம் விட்டு விட்டு, எதற்காக உங்களை மட்டும் வரச் சொன்னார்கள் என நண்பர்கள் கேட்டார்கள். எம்மை எலும்பு மருத்துவரிடம் அனுப்பினார்கள். பின்னர் நரம்பியல் நிபுணரிடம் போகச் சொன்னார்கள். சுத்தியை வைத்து பல இடங்களிலும் அடித்துப் பார்த்தார்கள். நரம்பியல் நிபுணரும் எம்மை வாசித்துக் காட்டச் சொன்னார். யாம் மன தைரியத்தை விடாமல், இம்முறை கவனமாக வாசிக்க வேண்டும் என நினைத்துக் கொண்டோம். வாசித்தல் பலமுறை தொடர்ந்தது.

எந்த எழுத்து தடுமாறுகிறதோ, உச்சரிக்க வரவில்லையோ, அதையே மறுபடியும், மறுபடியும் வாசிக்கச் சொன்னார். உங்களுக்கு திக்குவாய் பிரச்சினை இருப்பதாகவும், அதை உறுதிப்படுத்த எம்மிடம் அனுப்பியிருக்கிறார்கள் என்றும் மருத்துவர் சொன்னார். எம்மால் கண்ணீரை கட்டுப்படுத்த இயலவில்லை. இதுவே எமது வாழ்வின் மோசமான தருணமாக இருந்தது. மருத்துவர் எம்மை மிகவும் தேற்றினார். எமக்கு மிகச் சிறிய அளவிலான உச்சரிப்புக் குறைபாடு இருப்பதாகவும், மருத்துவர்கள் கூடி முடிவெடுக்கும்போது, எமக்கு ஆதரவாகப் பேசுவதாகவும் ஆறுதல் வார்த்தைகள் கூறினார். இடையில் பொங்கல் திருநாள் வந்ததால் அடுத்த வாரம் எம்மை ஆய்வுக்கு வரச்சொல்லியிருந்தார்கள்.

யாம் மூன்றாவதோ, நான்காவதோ படிக்கும் போதுதான் எமக்கு இப்படியொரு பிரச்சினை இருப்பதே தெரிய வந்தது. இயல்பாகப் பேசும்போது திக்காது. கோபமோ, பதற்றமோ வரும்போது உச்சரிப்பு மாறிவிடும். அம்மாவிடம் பேசிக்கொண்டிருக்கும் போதே இடையில் நின்று விடுவோம். வரமாட்டேங்குதும்மா எனச் சொல்வதுண்டு.

சிறுவயிலிருந்தே யாம் கவனமுடன் பேச ஆரம்பித்தது நினைவிருக்கிறது. தேவையில்லாமல் யாருடனும் பேச மாட்டோம். வார்த்தை திக்கும் எனத் தெரிந்தால் பேச்சை நிறுத்தி விடுவோம். ஏதோ பேசிட்டிருந்தியே என நண்பர்கள் கேட்டால், ஒன்றுமில்லை எனச் சொல்லி விடுவோம். யாம் நன்றாகப் படிப்பதால், பேச்சுக் குறை பெரிதாகத் தெரியவில்லை. நெருங்கிய நண்பர்களைத் தவிர ஒருவருக்கும் தெரியாது. மிகவும் சாமர்த்தியமாகப் பேசிவிடுவோம்.

எட்டாம் வகுப்பு படிக்கும்போது, கமல சரஸ்வதி டீச்சரிடம் ஒப்பிப்பது வழக்கமாக நடக்கும். யாம் ஒருமுறை அறிவியல் பாடத்தை ஒப்பிக்கும்போது ஏழாம் வகுப்பில் இருந்த இரண்டு மாணவர்கள் சிரித்துவிட்டார்கள். டீச்சருக்கு செமத்தியான கோபம் வந்துவிட்டது. கிருஷ்ணமூர்த்தி மாதிரி உங்களால முதல் மதிப்பெண் வாங்க முடியுமா, எவ்வளவு நல்ல பையனாக இருக்கிறான் பார்த்தீங்களா எனச் சொல்லி இருவரையும் முட்டிபோட வைத்தார். எமக்கு நிறைய வெட்கமாகி விட்டது. டீச்சர் எம்மை அற்புதமாக உற்சாகப்படுத்தி தொடர்ந்து ஒப்புவிக்கச் செய்தார். அன்றிலிருந்து எம்மீது இன்னும் கூடுதலான கவனம் எடுத்து கொண்டார். அந்த சந்தர்ப்பத்தில் டீச்சர் கொடுத்த உற்சாகமே எம்மை இன்று வரையில் மிகுந்த தன்னம்பிக்கையோடு வைத்திருக்கிறது. டீச்சருக்கு மிகுந்த

நன்றி. நண்பர்கள் இருவரும் பின்னர் எம்மிடம் வந்து விளையாட்டுக்கு சிரித்துவிட்டோம் என வருத்தம் தெரிவித்தார்கள்.

ஆண்டு விழாவில் எம்மை சிறு வேடமாவது போட்டு மேடையேற்ற வேண்டுமென பொன்ராஜ் சாருக்கு மிகுந்த விருப்பம். குறைவான வசனங்களுள்ள ஒரு பாத்திரமாவது செய் என பல முறை வற்புறுத்தியும் யாம் தீர்மானமாக மறுத்துவிட்டோம்.

ஒன்பதாம் வகுப்பில் சேர்ந்த புதிதில் புதிய ஆசிரியர்கள் என்ற சூழலில் சிறிது தடுமாறினோம். வகுப்பறையில் ஒரு சில ஆசிரியர்கள் பாடப்புத்தகத்தை ஒவ்வொரு மாணவராக வாசிக்கச் சொல்வார்கள். இப்படி வாசிப்பது எமக்கு துயரத்தைக் கொடுப்பதாக இருந்தது. இரண்டு மாதங்கள் சென்றிருந்த நிலையில், எம்மை பள்ளியில் கேலி பேசுகிறார்கள், இனிமேல் பள்ளி கூடம் செல்ல மாட்டோம் என வீட்டில் சொல்லி விட்டோம். இரண்டு, மூன்று நாட்கள் போகாமலும் இருந்து விட்டோம். உண்மையில் எம்மை ஒருவரும் கேலி செய்து பேசியதில்லை. பள்ளி, கல்லூரி, ஆராய்ச்சிப் படிப்பு என அனைத்து நிலைகளிலும், எம்மீது மிகுந்த அன்பும், தோழமையும்தான் பாராட்டினார்களே தவிர, ஒரு சிறு அளவிலான கிண்டல் கூட செய்ததில்லை. பல நேரங்களில் எம்மை தேற்றியிருக்கிறார்கள் என்பதே உண்மை. தோழர்கள், தோழிகள் அனைவருக்கும் நன்றி.

எங்கள் வீட்டில் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும், யாம் களையெடுத்து பிழைத்துக் கொள்வோம், எமக்கு படிப்பு வேண்டாம் என மறுத்து விட்டோம். அடித்து பள்ளிக்கு அனுப்பாத தந்தை கிடைத்தது எமது பாக்கியமே. வீட்டினர் சாரிடம் சொல்லிவிட்டார்கள். சாரும், டீச்சரும் கூப்பிடுவதாக ஒரு பையன் வந்து எம்மை அழைத்துச் சென்றார்.

ஆசிரியர்கள் இருவரும் எம்மைத் தேற்றும் விதமாக அன்பு மொழிகள் ஆயிரம் சொன்னார்கள். எம்மை அருகே உட்கார வைத்து, யாம் வாழ்வில் மிக உயர்ந்த நிலைக்கு வருவோமென்றார்கள். யாம் மிகவும் நன்றாகப் பேசுவதாகச் சான்றளித்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவராக இதே ஊருக்கு வருவோமென்று ஆசி கூறினார்கள். என்ன உதவி வேண்டுமென்றாலும் தயங்காமல் வந்து கேள் என வாக்குக் கொடுத்தார்கள். எந்தச் சூழ்நிலையிலும் பள்ளிக்குச் செல்வதை நிறுத்த மாட்டோம் எனவும் உறுதி மொழி கேட்டார்கள். இதோ இன்று வரையிலும் அன்பு ஆசிரியர்களின் சொல் கேட்ட அன்பு மாணவனாகவே யாம் இருக்கிறோம்.

அன்பு ஆசிரியர்களின் ஆலோசனைக்குப் பின், முன்னரை விட அதிக மகிழ்ச்சியாகவும் வேகமாகவும் எமது மிதிவண்டியை ஓட்டிக் கொண்டு பள்ளிக்குச் சென்றோம். காலாண்டுத் தேர்விலேயே யாம் யார் என்பதை நிரூபித்தோம். முதல் இடத்தில் இருப்பவரை எல்லோருக்கும் பிடிக்கும்தானே.

பதினொன்றாம் வகுப்பில் தனலட்சுமி டீச்சர் எம்மை வாசிக்கிறாயா வேண்டாமா எனக் கேட்டார். யாம் வாசிக்க வில்லையெனச் சொல்லிவிட்டோம். டீச்சர் எப்போது வகுப்பிற்கு வந்தாலும், எமது வரிசை வரும்போது எமக்கு அடுத்து அமர்ந்திருக்கும் பையனே வாசிப்பார். பள்ளியில் வருகைப் பதிவின்போது சொல்லும் பிரசன்ட் சார் சில நேரங்களில் மிகுந்த வெறுப்பைக் கொடுக்கும். கல்லூரிகளில் எஸ் சார் எனச் சொல்லிவிடுவோம். சில நேரங்களில் ஆசிரியர் கேட்கும் கேள்விக்கு விடை தெரிந்திருந்தாலும், யாம் சொல்லாமல் அமைதியாக இருந்து விடுவோம். நல்லாப் படிக்கிற பையனே இப்படி படிக்காம இருக்கிறதா என ஆசிரியர்கள் கேட்கும் போது புன்னகைத்துக் கொள்வோம்.

பரிசோதனை முடிந்து மதுரையிலிருந்து கிளம்புவதற்கே நேரமாகி விட்டது. அருப்புக்கோட்டை வந்து சேர்வதற்கு முன்பே ஊருக்குள் செல்லும் கடைசிப் பேருந்து சென்று விட்டது. இனி முக்கிய சாலையில் இறங்கி நடக்க வேண்டும். இரண்டு சிஸ்ஸரும், நெருப்புப் பெட்டியும் வாங்கி சட்டைப் பையில் வைத்துக் கொண்டோம்.

புகைபிடிப்பது இது ஒன்றும் முதல் முறை அல்ல. எஸ்.பி.கே.யில் படிக்கும் போது இறுதிப் பருவத்தின்போது சில நாட்கள் ஒருவருக்கும் தெரியாமல் புகைத்ததுண்டு. இருள் கவிழத் தொடங்கும் நேரத்தில் இரு சிகரெட்கள் வாங்கிக் கொண்டு காந்திபுரம் சுற்றுச் சாலையில் நடந்து, கல்லூரி அருகேயிருக்கும் இருப்புப்பாதை வரை நடந்து திரும்புவோம். போகும்போது ஒன்று. வரும்போது ஒன்று. நல்ல கணக்குத்தான். பேசுவதற்குத் தைரியமில்லாமல் இப்படி புகை விட்டுத் திரிகிறோமே என எம்மை யாமே திட்டி, காதல்களும் கைகூடும், காதலிப்பவர் தகுதி வைத்து, உம் தகுதி உயர்ந்திருந்தால் உலகம் உந்தன் பின்னால் வரும் என கவிதை எழுதி அந்த கவிதை மழையில் புகைவர்த்தித் தணலை உடனேயே அணைத்தும் விட்டோம்.

யோசித்துப் பார்த்தால், யாம் சிறு வயதிலேயே புகை பிடிக்கத் தொடங்கி விட்டோம். நோட்டுத்தாளை சுருட்டி புகைவிட்டு, அம்மாவிடம் திட்டு

வாங்கியிருக்கிறோம். பள்ளி செல்லும் வயதில், பெரியவர்கள் குடித்துப் போட்டிருக்கும் கட்டை பீடிகளை எடுப்பார்கள். எப்படி ஒட்ட ஒட்ட இழுத்துப் போட்டுருக்காங்க என கெட்ட வார்த்தை சேர்த்தும் பெரியவர்களுக்குத் திட்டு விழும். சிறுவர்கள் பெரியவர்களுக்குத் தெரியாமல் கட்டைப் பீடியை எடுப்பதைப் பார்த்தால் வேடிக்கையாக இருக்கும். பீடித் துண்டுகள் பாதையில்தான் பெரும்பாலும் கிடக்கும். நடந்து செல்லும் போதே புகைத்து கீழே போட்டிருப்பார்கள். சிலர் கீழே போட்டு நசுக்கியும் விடுவார்கள். நண்பர்கள் நைசாகக் கீழே உட்கார்ந்து ஒண்ணுக்குப் போவது போலவோ, கல்லெடுப்பது போலவோ பாவ்லா காட்டி சுட்டு விடுவார்கள். ஆட்கள் வருகிறார்களா, யாராவது பார்க்கிறார்களா என வேவு பார்த்தும் நண்பர்கள் நிற்பதுண்டு. வீட்டிற்கு தெரிந்தால், பிரித்து மேய்ந்து விடுவார்களில்லையா.

கட்டைச் சுவர்களுக்குள் மறைவாக உட்கார்ந்து ஆளுக்கொரு இழுவை புகைப்பார்கள். பின் நண்பர்கள் வளர்ந்து கடையில் பீடி வாங்கிக் குடிக்கும்போது, விளையாட்டுக்கு கேட்டால் கூட யாம் நல்ல பையன் எனக் கொடுக்க மாட்டார்கள்.

செட்டிகுளம் விலக்கில் இறங்கி பாதி தூரம் நடப்பதற்குள் இரண்டையும் முடித்துவிட்டோம். கடைசி பேருந்தை தவறவிட்டிருப்போம் என்றும் முக்கியச் சாலையில் இறங்கி நடந்து வருவோமென்றும் பெற்றோர் எமக்காகக் காத்திருந்தார்கள். பதை பதைப்போடு இருந்திருப்பார்கள். இப்படி தனியாக யாம் இரவில் நடந்து வந்ததில்லை. இப்போது போல் திருட்டு பயம் இல்லாவிட்டாலும், காத்து கருப்பு எனப் பயந்திருப்பார்கள். கடந்த ஆண்டு வயலை விற்று நாற்பதாயிரம் ரூபாயோடு கடைசிப் பேருந்தில் இறங்கி ஊருக்கு நடந்து வந்தவரை, பணத்தைப் பிடுங்கிக் கொண்டு கொலையும் செய்துவிட்டார்களெனில் பார்த்துக் கொள்ளுங்களேன்.

என்ன நடந்தது எனக் கேட்ட பெற்றோருக்கு, எல்லாம் நன்றாக நடந்ததாகச் கூறி அமைதியாகப் படுத்துக் கொண்டோம். அடுத்த வாரம் சோதனைகள் தொடர்ந்தன. கருப்பையா ஐயா மருத்துவமனைக்கு வந்தார் என்றே நினைவிருக்கிறது. இறுதியாக எமக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டது. ஏற்கனவே பதற்றமாக இருந்த யாம் திணறினோம். புகைவண்டி நிலையங்களில் செய்தி எவ்வாறு பரிமாறப்படுகிறது என்பதைப் பற்றி விளக்கினார்கள். சிறு தவறும் நடக்க இயலாதென்றும் மருத்துவ சான்றிதழ் கொடுப்பவர்களே பொறுப்பேற்க வேண்டி வருமெனவும் தெரிவித்தார்கள். சிறிய அளவில் பேச்சு குறைபாடு இருப்பது

உண்மைதான் என சான்றிதழ் கொடுப்பதாகவும் யாம் மேற்கொண்டு யாரையேனும் பார்த்து பேசிக்கொள்ளலாம் எனவும் எமக்கு அறிவுறுத்தப்பட்டது. மருத்துவ பரிசோதனை முடிவு வீட்டிற்கு வரும் எனத் தெரிவித்தார்கள். எம்மிடம் இவ்வளவு அக்கறையாகப் பேசியதே பெரிய விசயம் தான்.

யாம் கண்ணீரைத் துடைத்தபடியே அறையிலிருந்து வெளியேறினோம். எதற்காக அழுகிறோம் என மருத்துவமனை ஊழியர்கள் கேட்டார்கள். அதற்குள் தகவல் பரவி விட்டது. மருத்துவப் பரிசோதனையில் யாம் தகுதி பெறவில்லை என்பதைக் கேள்விப்பட்டு, அங்கிருந்த சிலர் எமக்கு ஆறுதல் வார்த்தைகள் சொன்னார்கள். ஒருவர் எம்மை சற்று தனியே அழைத்துப்போய், தேற்றும் விதத்தில் பேசினார். என்ன படித்திருக்கிறீர்கள் எனக் கேட்டதற்கு எம்.எஸ்.ஸி எனச் சொன்னோம். ஆச்சரியம் அடைந்தவராக உங்கள் தகுதிக்கான வேலை இது இல்லை, நிச்சயம் உங்களுக்கு பெரியதொரு வேலை கிடைக்கும், ஆசிரியர் பணிக்கும் முயற்சி செய்யுங்கள் என ஆறுதல் கூறினார். நல்ல உள்ளம் கொண்ட அன்னாருக்கு நன்றி.

பெரியார் நிலையம் அருகில் நடந்து வரும்போதுதான் அந்த எண்ணம் உதித்தது. மீனாட்சி அம்மன் கோவில் எங்கிருக்கிறது என வழிகேட்டு நடக்க ஆரம்பித்தோம். தெற்கு வாசலில் சிறிது நேர காத்திருக்குப்பின் நடை திறந்தது. எதையும் பார்த்து ரசிக்கும் நிலையில் மனம் இல்லை. மீனாட்சி அம்மனை தரிசித்துவிட்டு, சுந்தரேஸ்வரர் சன்னதிக்குச் சென்றோம். ஓரிடத்தில் சரஸ்வதி சிலை இருந்தது. சரஸ்வதிக்கு எதிரேயிருந்த சுவற்றில் சாய்ந்து கொண்டு அவரையே பார்த்து நின்றோம். பின் அப்படியே அமர்ந்து விட்டோம். சரஸ்வதி சபதம் பார்த்திருக்கிறோமல்லவா. மருத்துவ பரிசோதனை முடிவு குறித்து மனதிற்குள் இருந்த வேதனைகளை கொட்டித் தீர்த்தோம். மற்றவர்களிடம் இதை எப்படிச் சொல்வது, எம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்பதே பெருங்கவலையாக இருந்தது. வெகு நேரம் சென்றே சுந்தரேசுவரரை காணச் சென்றோம்.

வழக்கம் போல் தாமதம். கடைசிப் பேருந்து. இரண்டிற்குப் பதிலாக இம்முறை ஒரு டப்பா. சாப்பிட்டு விட்டோம் எனச் சொல்லி தூங்கப் போகும்போது கடித உறை ஒன்று வந்திருப்பதாக அம்மா கொடுத்தார்.

கடிதம் சி.எஸ்.ஐ.ஆரிலிருந்து வந்திருந்தது. கடிதத்தைப் பிரித்து படித்துப் பார்த்தவுடன் யாம் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. தேசிய தகுதித்

தேர்வில், கல்லூரி ஆசிரியர் பணிக்கும், இளம் ஆராய்ச்சியாளராகச் சேர்வதற்கும் யாம் தகுதி பெற்றிருப்பதாகவும், அக்கடிதத்தையே சான்றிதழாக வைத்துக் கொள்ளுமாறும் தெரிவித்திருந்தார்கள்.

கல்லூரி விரிவுரையாளருக்கு யாம் தகுதி பெற்றிருப்பதாக பெற்றோர் அறிந்து மேலும் இன்புற்றார்கள். ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொள்வதற்கு அரசாங்கமே உதவித்தொகை வழங்கும் என்றும் மகிழ்ச்சியாகக் கூறினோம்.

மனம் இலேசானதோடு ஆச்சரியமாகவும் இருந்தது. தேர்வு பெற்றது அதிசயம் போல் இருந்தது. தேர்வு பெறுவது கடினமென்றும் ஒருவர் கூட நம் கல்லூரியிலிருந்து தேர்வு பெற்றதில்லை எனவும் பேராசிரியர்கள் கூறியிருந்தார்கள். யாம் வெற்றி பெறுவோம் என நினைக்கவேயில்லை. தாய் சரஸ்வதிக்கு நன்றி. அம்மை பாதம் பணிகிறோம்.

காலையில் அருப்புக்கோட்டை கல்லூரிக்குச் சென்று பேராசிரியர்களிடம் சான்றிதழைக் காட்டி அனைவரது வாழ்த்துக்களையும் பெற்றோம். பாலு சாருக்கு அளவு கடந்த மகிழ்ச்சி. மத்திய தேர்வாணையத்திற்கு தயார்செய்கிறாயல்லவா என ஞாபகப்படுத்தவும் தவறவில்லை.

தூத்துக்குடி கல்லூரி பேராசிரியர்களுக்கும் மட்டற்ற மகிழ்ச்சி. யாம் சாதித்து விட்டதாகப் பாராட்டினார்கள். சம்பத் சார் மிகவும் மகிழ்ந்தார். மாணவர்கள் அனைவரையும் கூட்டி வைத்து யாம் எவ்வாறு தேர்வு பெற்றோம் என்ற அனுபவத்தை பகிர்ந்துகொள்ளச் செய்தார். சி.எஸ்.ஐ.ஆரில் யாம் எந்தக் கேள்விகளுக்கு எப்படி பதில் எழுதினோம் என்பது குறித்து சிறிதும் பதற்றமில்லாமல் பேசினோம். உண்மையில் இந்தக் கூட்டம் எமது வாழ்வின் மிக முக்கியமான தருணங்களில் ஒன்று, எம்மாலும் பேச முடியும் என்ற தன்னம்பிக்கையைத் தந்ததெனில் மிகையாகாது. பேராசிரியரும் எம்மை அளவு கடந்து உற்சாகப்படுத்தினார். எம்மாலும் ஆசிரியராகப் பணியாற்ற இயலுமோ எனும் நம்பிக்கையை துளிர்க்கச் செய்த நன்னாளாக இந்நாள் அமைந்தது.

ஆராய்ச்சி பற்றியும் பேராசிரியரது ஆராய்ச்சி திட்டங்கள் பற்றியும் எம்மிடம் விளக்கினார். எமக்கு விருப்பமிருப்பின் பேராசிரியரிடமே இளம் ஆராய்ச்சி மாணவராகச் சேர்ந்து முனைவர் பட்டப் படிப்பை மேற்கொள்ளுமாறு ஆலோசனைகள் சொன்னார். முனைவர் பட்டம் பெற்ற பின்னாலும், உடனே வேலை வாய்ப்பு கிடைக்குமென்று உறுதியாகச் சொல்ல முடியாது என்பதையும் யாம்

அறிந்திருந்தோம். யாம் வேலைக்குச் செல்வதையே முதல் குறிக்கோளாக வைத்திருப்பதாகவும், ஆராய்ச்சி படிப்பை நன்முறையில் தொடர விரும்பும் பட்சத்தில் சாரிடமே பதிவு செய்து கொள்வதாகவும் தெரிவித்தோம். அன்று இரவு விடுதியில் தங்கினோம். ரவியும், வேல்முருகனும் விடுதிக்கே வந்துவிட்டார்கள். முதுநிலை மாணவர்கள் விடுதி பராமரிப்பிற்காக பூட்டிக் கிடந்தது. அனைத்து மாணவர்களும் இளநிலை விடுதியிலேயே தங்கியிருந்தார்கள். இரவு மொட்டை மாடியில் பேசிக் கொண்டே படுத்திருந்தோம். இராமலிங்கம் தகுதித் தேர்வு குறித்து ஏராளமான கேள்விகள் கேட்ட வண்ணமிருந்தார். இளைய மாணவர்கள் அன்புடன் கவனித்தார்கள். கோவில்பிள்ளை மிகவும் பிரியமுடன் இருந்தார்.

எமது வாழ்வின் மிக முக்கியமான கட்டத்திலிருப்பதை யாம் உணர்ந்தோம். யாம் சில முடிவுகளை விரைந்து எடுக்க வேண்டியிருந்தது. தொடர் வண்டி வேலை குறித்தே சில மாதங்கள் பேசிக்கொண்டிருந்ததால், வேலை பற்றிய எண்ணங்களே மனதை நிறைத்திருந்தன. கல்லூரி விரிவுரையாளராக உடனே வேலை கிடைக்குமென்றும் உறுதியாகத் தெரியவில்லை. ரஹிம் சார் அப்போதுதான் அரசு கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியில் சேர்ந்திருந்ததால், அரசு கல்லூரி பற்றி ஓரளவிற்கு அறிந்திருந்தோம். எங்கள் பகுதியில் அரசு கல்லூரிகள் பற்றிய அடிப்படை தகவல்கள் கூட தெரியாமல் தான் இருந்தோம். ஆசிரியர் தேர்வு வாரியம் முலம் எழுத்துத் தேர்வும், வாய்மொழித் தேர்வும் நடத்தி, அரசு கல்லூரிகளில் பணியிடம் நிரப்புகிறார்கள் எனத் தெரிந்து கொண்டோம். அரசு உதவி பெறும் கல்லூரிகளில் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் விரிவுரையாளர் பணிக்குச் சேர்ப்பார்கள் எனவும் அறிந்தோம். உதவி பெறும் கல்லூரிகளில் பணம் கொடுத்து விரிவுரையாளர்கள் நியமனம் பெற்றதை எமது அனுபவத்திலிருந்தே புரிந்து வைத்திருந்தோம். ஒரு பேராசிரியர் எம்மிடமே சொல்லியிருந்தார். என்னதான் நன்றாகப் படித்தாலும் பணமில்லாமல் வேலையில் சேர்வது இனி குதிரைக் கொம்புதான் என சில வருடங்களுக்கு முன்பே யாம் கேள்விப்பட்டிருந்தோம்.

மத்திய அரசின் உதவித்தொகை கிடைப்பதால் ஆராய்ச்சி மேற்கொள்ளலாம் எனில் அதிலும் சிக்கல் இருந்தது. என்னதான் ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் வாங்கினாலும், உடனடியாக விரிவுரையாளர் பணி கிடைத்து விடாது என எமக்கு தெரிந்திருந்தது. நாங்களே முனைவர் பட்டம் முடித்து பல வருடங்கள் காத்துக் கிடந்தோம் என்ற பேச்சுக்களைத்தான் யாம் பெரும்பாலும் கேட்க வேண்டியிருந்தது. மிகச் சிறப்பாக ஆராய்ச்சி மேற்கொண்டு புதிய

உண்மைகளைக் கண்டு பிடிப்பது குறித்து ஒருவரும் பேசியதாக நினைவில்லை. முனைவர் பட்டம் பெற்று வேலைக்குச் செல்வது என்ற அளவிலேயே பேச்சுக்கள் இருந்தன.

ஆராய்ச்சி படிப்பை மேற்கொள்வதென்றால் எந்த ஊரில், எந்தப் பல்கலையில் என்பதில் ஒரு தீர்மானமும் எடுக்க இயலவில்லை. உதவித்தொகை கிடைக்குமென்பதால், எந்த முனைவர் பட்ட நெறியாளரும் சேர்த்துக் கொள்வார் என்பது மட்டும் உறுதியாகத் தெரிந்தது. அந்த அளவிற்கு தமிழ் நாட்டிலிருந்து, சி.எஸ்.ஐ ஆரில் மாணவர்கள் தேர்ச்சி அடைந்தார்கள் போலும்.

உயிரி அறிவியலில் தேர்வு பெறுவது கடினம் என்பதை அறிந்திருந்தோம். ஏனெனில் இது ஒரு சமுத்திரம் போன்ற பாடம். விலங்கியல், தாவரவியல் நுண்ணுயிரியல், உயிரி தாவரவியல், உயிரி தொழில்நுட்பவியல், பூச்சியியல், உட்பட உயிரியலின் அனைத்துப் பிரிவு முதுநிலை மாணவர்களும் இந்தியா முழுவதிலிருந்தும் தேர்வெழுதுவார்கள். மேலும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் தான் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதும். எனவேதான் குறைவான மாணவர்களே தமிழ்நாட்டிலிருந்து தேர்வு பெற்றிருக்கிறார்கள். ஜுன் மற்றும் திசம்பர் என வருடத்திற்கு இரு முறை தேர்வுகள் நடத்தினார்கள். கவுன்சில் ஆப் சயின்டிபிக் அண்ட் இண்டஸ்ட்ரியல் ரிசர்ச் எனப்படும் அறிவியல் தொழில் ஆராய்ச்சி கூட்டமைப்பே பல ஆராய்ச்சி கூடங்களை நாடு முழுக்க நிருவியிருந்தது. சென்னை அடையாறில் இருந்த சி.எல்.ஆர்.ஐ எனப்படும் மத்திய தோல் ஆராய்ச்சி மையம், காரைக்குடியில் இருந்த சிக்ரி எனப்படும் மத்திய மின் வேதியியல் ஆராய்ச்சி மையம் போன்றவை சி.எஸ்.ஐ ஆரால் நடத்தப்பட்டன. அமைப்பு பொறியியல் என்ற நிறுவனமும் தரமணி அருகே செயல்பட்டது. ஜே. ஆர். எப் எனப்படும் இளநிலை ஆராய்ச்சி மாணவராகத் தேர்வாகி விட்டால், இந்தியாவிலுள்ள எந்த ஒரு ஆராய்ச்சி நிறுவனத்திலும், பல்கலை மற்றும் கல்லூரியிலும் தகுதியான வழிகாட்டி பேராசிரியர்களின் கீழ் ஆய்வு நிறைவுறு பட்டத்திற்காக எளிதாக சேர்க்கை கிடைக்குமென்ற நிலை இருந்தது. சில ஆராய்ச்சி நிறுவனங்கள், சி.எஸ்.ஐ ஆரில் தேறியிருந்தாலும் தனியாக ஒரு நுழைவு தேர்வையும் வைத்திருந்தன. உயிரி அறிவியல் கடல் போன்ற பாடமாக இருந்தபடியால் அதற்கான ஆராய்ச்சி வாய்ப்புகளும் பரந்து விரிந்திருந்தன.

கருப்பையா ஐயாவை சந்திக்கவும் யாம் தவறவில்லை. இப்படியாகுமென்று நினைத்துக் கூடப் பார்க்க வில்லையென வருத்தமடைந்தார். அவருக்கு தெரிந்த சிலரைப் பார்த்ததாகவும், சாதகமான முடிவு வருவதற்கு தெரிந்த சிலரிடம் பேசியிருப்பதாகவும், எதற்கும் கவலைப்படாமல் தைரியமாக இருக்குமாறும் ஆற்றுப்படுத்தினார். யாம் கல்லூரி விரிவுரையாளருக்கு தகுதி பெற்றிருப்பதாகச் சொன்னோம். அதிக மகிழ்ச்சியடைந்து எம்மை அணைத்துக் கொண்டார்.

விரிவுரையாளர் பணி வரும்போது வரட்டும், நாம் தொடர் வண்டி வேலையையும் முயற்சிப்போம் என்று கலந்து பேசி, மருத்துவ சோதனை குறித்து கடிதம் வந்தவுடன் மீண்டும் சந்திக்கலாம் என முடிவு செய்தோம். ஒரு வேளை தகுதி இன்மை என சான்று வந்தால், மறு மருத்துவ ஆய்வுக்கு விண்ணப்பிக்கவும் நடைமுறை இருப்பதையும் அறிந்து கொண்டோம்.

கல்லூரி விரிவுரையாளருக்கான தேர்வில் வெற்றி பெற்றதை நண்பர்களுக்குத் தெரிவித்தோம். மாதவன் காளையார் கோவிலில் ஒரு தனியார் பள்ளியில் கராத்தே மாஸ்டராக இருந்தார். நூற்றுக்கணக்கான மாணவர்கள் பயில்வதாகச் சொன்னார். முன்னர் மாணவர்களின் ஒரு நிகழ்ச்சிக்கு எம்மை அழைத்திருந்தார். எம்மால் செல்ல இயலவில்லை. முதுநிலை முடிந்தவுடன் எதைப்பற்றியும் கவலைப்படாமல் அவருடனேயே தங்கிக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகோள் விடுத்திருந்தார். பணம் தேவையென்றால் அனுப்புவதாகக் கடிதங்கள் அனுப்பினார். கொஞ்சம் கோவக்காரர் என்பதால் கராத்தே பள்ளியில் தொடர்ந்து இருக்க முடியவில்லை என நினைக்கிறோம். தாய்மாமாக்கள் மலேசியாவில் இருந்ததால், அங்கு செல்வதற்கும் முயற்சிகள் செய்து கொண்டிருந்தார். பாண்டியன் நகரில் நவீன் இல்லம் என்ற பெயரில் சொந்த வீடு வாங்கி குடியேறினார்கள். நவீன் தமிழரசி அக்காவின் பையன். திருமணமான சில மாதங்களியே கருத்து வேறுபாடு வந்து அக்கா இங்குதான் இருந்தார்.

நண்பர் ராஜேஷ் வீட்டினரும் சொக்கலிங்கபுரம் வாடகை வீட்டிலிருந்து மதுரை சாலை மேம்பாலம் அருகே இருக்கும் குடியிருப்பில் புது வீடு கட்டி புதுமனை புகுவிழா நடத்தினார்கள். விருதுநகர் செந்தில்குமார நாடார் கல்லூரியில் முதுநிலை முடித்து, வீட்டின் அருகேயிருந்த ஒரு ஆங்கிலப் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்தார். வீட்டிற்குச் செல்லும் போதெல்லாம் நன்கு உபசரிப்பார்கள். அக்காவிற்கும் ஒரு பையன் பிறந்திருந்தான்.

ரத்தினசபாபதி, கருணாமூர்த்தி, முத்துராமர் போன்றவர்கள் சென்னையை விட்டு கோயம்புத்தூருக்கு செல்ல ஆரம்பித்திருந்தார்கள். குழந்தையம்மாள் அக்காவைப் பற்றி நிறையவே பேசுவார்கள். சந்திரனும் இங்கு ஒரு கம்பெனியில் வேலையில் இருந்தார். கடிதப் போக்குவரத்து இருந்தது. அவரைப்போல் யாம் கஷ்டப்படக் கூடாதென்று கடிதங்கள் எழுதுவார். கோயம்புத்தூரின் சமூக அமைப்பு பற்றியும், தொழில் தெரிந்தவர்களுக்குக் கிடைக்கும் மரியாதை போன்றவற்றையெல்லாம் குறிப்பிடுவார். ராமர் இங்கு வேலை நிமித்தம் இடம் பெயர்ந்ததால் விவேகானந்தனும் சில காலம் கோயம்புத்தூரில் இருந்தார்.

கோயம்புத்தூர் எமது உறவினர்களை அரவணைத்துக் கொண்டது பற்றி அவர்களது பேச்சிலிருந்து நன்றாகத் தெரியும். நகரைப் பற்றி பெருமையாகப் பேசுவார்கள். கடைகள், திரையரங்குகள், வீதிகள், கட்டிடங்கள், தொழற்சாலைகள் பற்றியும் பெருமையடிப்பதுண்டு. மதுரையெல்லாம் ஒரு ஊரா எனக் கேலி பேசுவார்கள். பல மில்களின் பெயர்களையும் அடிக்கடி உச்சரிப்பதுண்டு. கையில் பணப்புழக்கத்தோடு நல்ல ஆடைகளும் அணிவார்கள். எமக்கு தவறாமல் வாழ்த்து அட்டைகள் அனுப்புவார்கள்.

சங்கரன் கோவில் அருகேயிருக்கும் சில்லாகுளம் என்ற ஊரிலிருந்த பள்ளியில் மாரிமுத்து விடுதி பொறுப்பாளராகச் சேர்ந்து, பின் உடற்கல்வி ஆசிரியராக பணிபுரிந்து வந்தார். ஆரம்ப வகுப்புகளோடு தெரு நண்பர்கள் நின்றுவிட்டதால், மேல் நிலை, கல்லூரி படிக்கும் காலங்களில் மாரிமுத்துவும் யாமும் மிகுந்த நட்பாக இருப்போம். படிப்பு சார்ந்து பலவற்றையும் பேசுவதுண்டு. கல்லூரி படிப்பின்போது ஊருக்கு எப்போது போகலாம் என கடிதம் மூலம் பேசிக் கொள்வோம். மாரிமுத்து ஊரில் எல்லோருடனும் நன்றாகப் பேசுவார். நல்ல பொறுமைசாலியான பையனாக இருந்தார்.

சில்லாகுளத்தில் மாணவர்களுக்கு இலவச விடுதி இருந்ததால் கருப்பசாமி, பாலமுருகன் போன்றவர்கள் அங்கு சேர்ந்தார்கள். தெருவில் ஆர்வமாக பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பிய பெற்றோர்கள் இடையில் படித்து என்ன வேலையா கிடைக்கப்போகிறதென்று பிள்ளைகளை அனுப்பாமல் விட்டு விட்டார்கள். பட்டப் படிப்பு முடித்த எங்கள் மூன்று பேருக்குப் பின் பெரிய இடைவெளி வந்து விட்டது. அதனால் இந்த இருவரையும் யாம் உற்சாகப் படுத்துவோம். யாம்

வேலைக்குச் சென்ற பின் எம்மால் முடிந்த உதவிகளைச் செய்வதாகச் சொல்லி ஊக்கப்படுத்துவோம்.

அன்று முதுநிலை பட்டப்படிப்பை, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்ய சென்னை செல்ல வேண்டியிருந்தது. பத்தாவது, பனிரென்டாவதை விருதுநகரில் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிந்திருந்தோம். இதன் போது காத்துக் கிடந்ததும், கூட்டத்தில் திணறியதும் மறக்க முடியாத அனுபவங்கள். இளநிலை பதிவின்போது புதிய கட்டிடத்தில் இயங்கியதாக நினைவிருக்கிறது. சென்னையில் முதுநிலை பதிவுக்கு மைலாப்பூர் சென்று பதிந்தோம். கல்லூரி விரிவுரையாளர் தொழற்படிப்பு என்பதால், பட்டினப்பாக்கம் அருகேயிருந்த வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிந்தோம். அங்கிருந்த பணியாளர், அட்டவணை இனத்தில் சி.எஸ்.ஐ.ஆர் தேர்வாகி பதிந்திருப்பவர்கள் வெகு சிலரே எனவும், உங்களுக்கு விரைவில் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் தபால் வருமென்றும் இன்முகத்தோடு கூறினார். யாம் புன்முறுவல் பூத்துக் கொண்டோம். கிண்டி வளாகத்தில் இருந்த சென்னைப் பல்கலைகழக விலங்கியல் துறைக்குச் சென்று சில பேராசிரியர்களைப் பார்த்தோம்.

விலங்கியல் துறையில் இருந்த இராமசாமி சார் அறைக்குச் சென்று எம்மை அறிமுகப்படுத்திக் கொண்டோம். சான்றிதழ்களை வாங்கிப் பார்த்தவர், வாழ்த்துக்கள் சொன்னதோடு அவரிடம் முனைவர் பட்ட ஆய்விற்கு இடமிருப்பதாகவும், விரும்பினால் அவரிடமே சேர்ந்து கொள்ளலாமென்றம் கூறினார். பின் அவரது ஆய்வு மாணவர்களுக்கு எம்மை அறிமுகப்படுத்தி, ஆய்வுக் கூடத்தை சுற்றிப்பார்க்க அனுமதித்தார். பேராசிரியர் எம்மை மிகவும் அன்போடு நடத்தினார் என்றே சொல்ல வேண்டும். பேராசிரியர் சில வருடங்களுக்கு முன் காரைக்குடி அழகப்பா பல்கலையில் துணைவேந்தராக இருந்து ஓய்வு பெற்றார் என்பது சிறப்புக்குரியது.

இராமசாமி சார், துறைத் தலைவரிடமும் எம்மை அறிமுப்படுத்தினார் என்றே நினைக்கிறோம். அதே போல் மற்றொரு பேராசிரியரையும் யாம் சந்தித்தோம். சந்திப்பு பயனுள்ளதாக அமைந்ததோடு, ஆய்வுக் கூடத்தில் பார்த்த பல ஆய்வக உபகரணங்கள் பிரமிப்பை ஏற்படுத்தின. ஆராய்ச்சி மாணவர்கள் சிலரிடம் பேசியதிலிருந்து தரமணியில் இருந்த ஐ.பி.எம்.எஸ் எனப்படும் அடிப்படை மருத்துவ அறிவியல் மையத்திலும் முனைவர் பட்டத்திற்கு சேரலாம் என்பதும் தெரிந்தது.

அங்கு விடுதியில்லாததால் கிண்டி வளாக விடுதிக்கே வர வேண்டுமென்பதையும் அறிந்தோம்.

சொந்த ஊர் மதுரை பக்கமென்பதால், மதுரை காமராஜர் பல்கலையிலேயே சேர வேண்டியதுதானே என்றும் ஒரு பேச்சு வந்தது. எமது பேராசிரியர்களும் இதைப்பற்றி சொல்லியிருந்தால், மதுரை சென்று ஒரு விசாரிப்பு செய்த பின் மேற்கொண்டு முடிவு பண்ணலாம் எனத் திட்டமிட்டோம். அன்று உயிரியல் ஆய்வுகளுக்கு காமாராஜர் பல்கலைக் கழகம் சிறந்த ஒன்றாகப் பெயரும் வாங்கியிருந்தது.

மாதவன் அப்போது மதுரையில் தொழில் செய்து கொண்டிருந்தார். வாழ்க்கையின் அனுபவப் பாடங்களிலிருந்து பணத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்திருப்பார் போலும். நேதாஜி சாலையில், தள்ளுவண்டி கடையில் எதை எடுத்தாலும் இருபது என விற்கும் கடை நடத்தினார். துணைக்கு இரண்டு ஆட்களையும் வைத்திருந்தார். வியாபாரம் நன்றாக நடைபெற்றது என நினைக்கிறோம். அருகிலேயே ஒரு அறையை வாடகைக்கு எடுத்து பொருட்களை இருப்பு வைக்கும் இடமாகவும், தங்குமிடமாகவும் பயன்படுத்தினார்.

யாம் பலமுறை சென்னைக்கு போய் வந்திருந்தாலும் அனைத்தும் இரவுப் பயணங்களே. இரவில் மதுரையில் ஏறினால் காலையில் சென்னைக்கும், சென்னையில் இரவுப் பேருந்தில் அமர்ந்தால் விடியும்போது மதுரைக்கும் வந்துவிடலாம். ஒன்பதாம் வகுப்பில் சென்னை செல்லும்போதே எமக்கு அனைத்து மலைகளையும் பிடித்திருந்தது. ஒரு பகல் பயணம் செய்து எல்லா மலைகளையும் பார்க்க வேண்டும்போல் விருப்பமாக இருந்தது. இவ்வாறு பயணப்பதில் உள்ள பிரச்சினை, நேரத்தோடு ஊர்வந்து சேர முடியாது என்பதே. கடைசிப் பேருந்தை தவற விட்டால் பேருந்து நிலையத்திலேயே தங்க நேரிடும். காவலர்களுக்கும் பதில் சொல்ல வேண்டும். மதுரையில் மாதவன் இருந்ததால் அவரோடு தங்கிக் கொள்ளலாமென்பதால், காலையிலேயே பாரிஸ் கார்னருக்கு வந்துவிட்டோம்.

சிற்றுண்டு முடித்துவிட்டு, திருவள்ளுவர் விரைவுப் பேருந்து நிலையத்திலிருந்து மதுரை புறப்படத் தயாராக இருந்த பேருந்தில் ஏறிக் கொண்டோம். ஆறுகளையும், ஊர்களையும், மலைகளையும் வேடிக்கை பார்க்கப் போகிறோம் என்பதே மனதிற்கு இதமாக இருந்தது.

அண்ணா சாலையின் உயர்ந்த கட்டிடங்களைப் பார்த்து பிரமித்துக் கொண்டே பயணம் ஆரம்பித்தது. சைதாப்பேட்டை, கிண்டி போன்ற இடங்களில் ஆட்கள் ஏறிக் கொண்டார்கள். கூவத்தின் நாற்றம் சகிக்க வில்லை.

கிண்டி விமான நிலைய எல்லை வந்தால் விமானம் ஏதாவது தெரிகிறதா என ஆந்த ஆந்தப் பார்ப்பதுண்டு. எப்படியும் ஒன்றிரண்டு நின்று கொண்டிருக்கும். பின் இறக்கையையும், மேற்பகுதியையும் ஓரளவிற்குப் பார்க்கலாம். முழு விமானத்தையும் பார்க்கும் காட்சி அரிதாகவே கிடைக்கும். விமானத்தைக் கண்டு களித்த மகிழ்ச்சியோடு பல்லாவரம் மலைகளைப் பார்க்க ஆரம்பித்து விட்டோம். சென்னைக்கு அழகு சேர்க்கும் மலைகள் உயரமாக, பச்சை மரங்களுடன் அருகாமையில் தெரியும். தாம்பரத்தில் சற்று நேரம் நின்ற பின் கூடுதல் பயணிகளோடு பேருந்து புறப்பட்டது. பின்னி மில் நீண்ட தூரத்திற்குக் கூடவே வரும். பழமையான கட்டிடமாகவும், ஆஸ்பெஸ்டாஸ் மேற்கூரையாகவும் இருக்கும். செல்லும் வழியில் இருபக்கமும் மலைகளை ரசித்தபடி செல்வது கண்களுக்கு நல்ல விருந்தாக அமையும். போர்டு தொழிற்சாலையில் நூற்றுக்கணக்கான மகிழ்வுந்துகளை வெட்ட வெளியில் ஒழுங்கான வரிசையில் நிறுத்தியிருப்பார்கள். பார்ப்பதற்கு பிரமிப்பாக இருக்கும். நம் கூடவே தடதடத்து வரும் தொடர்வண்டிகள் நம் சிந்தையை ஈர்க்கும். அவ்வப்போது மறைந்து கொள்ளும். பகல் பேருந்துகள் மெதுவாகவே செல்லும். நன்றாக வேடிக்கை பார்க்கலாம். தூரத்தில் தெரியும் செங்கல்பட்டு ஏரியும் நம்மை கிறங்கடிக்கும். மரங்களும், வீடுகளுமாக நகரமும் நல்ல காட்சியே. செங்கல்பட்டு அருகே செல்லும் போது மலைகளுக்கு வெகு அருகே செல்வதால் கூடுதல் மகிழ்ச்சியை அனுபவிக்கலாம். பாறைகளை வெட்டி எடுத்திருப்பது கச்சிதமாக இருக்கும். சிறிய மலைகளாக இருப்பினும் மரம் செடிகளின் அடர்த்தி அதிகமிருக்கும். செங்கல்பட்டை நெருங்கும் போது சாராய நெடியையும் நுகரலாம்.

மலைகளின் முடிவில் பளபளக்கும் பாலாற்றைப் பார்த்தோம். இன்றைக்கு போல் மோசமான நிலையில் பாலாறு இல்லை. அன்று கொஞ்சமேனும் நீர் வரத்து இருந்தது. துணிகளை துவைத்து காயப்போட்டிருப்பார்கள். ஆங்காங்கே தண்ணீர் தேங்கியிருக்கும். சமீப ஆண்டுகளில் மணல் அள்ளும் இயந்திரங்கள் கொண்டு பாலாற்றைச் சிதைத்து விட்டார்கள். சென்னையின் வளர்ச்சிக்கு பாலாறு பாழாகிவிட்டது.

பால்போல் தண்ணீர் ஓடுமாம். அதனால்தான் பாலாறு என அழைத்தார்களாம். பாலாறு, தென்பெண்ணை, காவிரி, வைகை, தாமிரபரணி என பள்ளியில் படித்த பெரிய ஆறுகளை நேரில் பார்ப்பது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். பள்ளிக் கூட நாட்களில் எமக்கு புவியியல் மேல் அப்படியொரு காதல். இந்திய வரைபடமல்லாது உலக நாடுகளின் வரைபடத்தையும் அப்படியே மனதில் வைத்திருந்தோம். பெரும்பாலான நாடுகளின் தலைநகரங்களை தெரிந்து வைத்திருந்தோம். ஆறுகள், மலைகள், கடல்களை சரியாக அடையாளம் கண்டு சொல்வோம். ஊரில் மண்டலமாணிக்கம், பச்சேரிகளில் ஓடும் வைகை பற்றிப் பேசுவார்கள். அந்த ஊர்க்காரர்கள் மணலாகக் கிடக்கும் வைகையில் ஊற்றுத் தோண்டி நீண்ட கைப்பிடியிள்ள அகப்பையில் அள்ளி துணியால் வடிகட்டி பானைகளில் ஊற்றுவார்களாம். மண்டலமாணிக்கம் ஊர்க்காரர்களை இதைச் சொல்லி தெருவில் கிண்டலடிப்பார்கள். அகப்பைல மோந்து குடிக்கறவங்கதானே நீங்க என எகத்தாளம் பேசுவார்கள். வழி விட்டான், பாண்டி போன்றவர்களை எமது அப்பா இப்படி கேலி பேசுவார்.

பாலாற்றை அடுத்து நெல்வயல்களை அதிகம் காணலாம். கோடையிலும் பயிரிட்டிருப்பார்கள். காலத்தில் சென்றால் பச்சைப் பசேல் வயல்களாக, ரம்மியமாக இருக்கும். இன்றைக்கு திண்டிவனம் தாண்டியும் ரியல் எஸ்டேட் வந்து விட்டது.

மேல்மருவத்தூர் கோவில் வளர்ந்து விட்டிருந்தது. நிறையக் கட்டிடங்கள் முளைத்துக் கொண்டிருந்தன. சிறு வயதில் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தியைப் பற்றி சில படங்கள் பார்த்திருந்தோம். படங்களின் மகிமையால் அம்மனுக்கு புகழ் கூடிக் கொண்டிருந்து. சிவப்பாடை பக்தர்களும் கல்விக் கூடங்களுமாக சாலை நிரம்பிக் கொண்டிருந்தது.

பேருந்து தொடர்ந்து சென்று வளைந்து பின் நேர் பாதை எடுக்கும். அங்கிருந்து ஒரு மலைத் தொடர் ஆரம்பிக்கும். எவ்வளவு பார்த்தாலும் சலிக்காது. வயல்களும், மாமரத் தோட்டங்களும், கொய்யாச் செடிகளுமாக பயணத்தைக் குதூகலிக்கலாம். பெரியதொரு ஆஞ்சனேயர் நின்று கொண்டிருப்பார். இடையிடையே வரும் பள்ளிகள், மாணவர்கள் நம் மனதைப் பறிப்பவை. பழைய நாட்களை அசை போடச் செய்பவை.

பள்ளி நினைவுகளிலிருந்து, திண்டிவனம் இறங்குங்கள் என நடத்ததுனர் போடும் சத்தத்தில் விழித்துக் கொள்ள வேண்டியதுதான். கொய்யா, பலா, தண்ணீர்

பாக்கெட் என பேருந்தில் மொய்ப்பார்கள். பயணிகளை சாலையில் இறக்கி விட்டு பேருந்து போய்க் கொண்டேயிருக்கும். பேருந்து நிலையத்திற்குள் சென்று நிறுத்துவது பழக்கமில்லை போலும்.

சற்றுநேரத்திலேயே விழுப்புரம் வந்து விடும். சிறிய பேருந்து நிலையமாகவே அன்று இருந்தது. சாப்பிடுவதற்கு நிறுத்துவார்கள். பின்னர் வரும் தென்பெண்ணை ஆறு கொள்ளை அழகு. மணல் பொதிந்து கிடக்கும். மாட்டு வண்டிகளும் நிறையத் தென்படும்.

உளுந்தூர் பேட்டையில் பலாப்பழங்கள் குவித்து வைத்திருப்பார்கள். இரவு பயணங்களில் தேநீர் குடிக்க இங்கே நிறுத்துவார்கள். பரோட்டா மணம் மூக்கை துளைக்கும். முட்டைப் பரோட்டா குத்தும் காதுகளில் அதிரும். மக்கள் எளிமையானவர்களாக இருப்பார்கள்.

வேடிக்கை பார்த்துக் கொண்டே திருச்சியை நெருங்கி விடலாம். பேருந்து சமயபுரத்தில் நிற்கும். கடைகளிலிருந்து கேட்கும் எல். ஆர். ஈஸ்வரி அவர்களின் குரலில் சமயபுரம் பாடல்கள் கலக்கலாக இருக்கும். மாரியமமனுக்கும் பக்தர்கள் நிறைந்திருந்தார்கள். கொள்ளிடம் காவேரி ஆற்றில் துணிதுவைப்பவர்கள் நிறைய இருப்பார்கள். வெள்ளை துணிகளாகக் காயப்போட்டிருப்பார்கள். நாணல் புதரும், ஆங்காங்கே தெரியும் நீர்க்குட்டைகளும், கொஞ்சமாக ஓடும் காவிரித் தண்ணீரும் மனதை மயக்குபவை. விளையாடித் திரியும் சிறுவர்களையும் பார்க்கலாம்.

பெருக்கெடுத்து ஓடும் காவேரியாறு கண்கொள்ளாக் காட்சியாக விரியும். நீண்ட காவிரி பாலத்தில் பேருந்து சென்று கொண்டேயிருக்கும். பாய்ந்தோடும் காவிரி நீரால் நம் கண்களும், மனமும் நிறையும். காவிரிப் பெண்ணின் கரையில் வாழ்பவர்கள் கொடுத்து வைத்தவர்கள். உயர்ந்து தெரியும் திருவரங்கம் கோபுரத்தை தூரத்தில் வரும்போதே எட்டி எட்டிப் பார்த்து வருவோம். கோபுர தரிசனம் கோடி புண்ணியமன்றோ. மரங்களால் நிறைந்திருக்கும் அழகிய ஸ்ரீரங்கத்தை திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே சென்று கொண்டிருப்போம்.

மலைக் கோட்டையும் அழகு மிக்கது. அவ்வளவு பெரிய கல்மலை தனித்திருப்பது ஆச்சரியம். வழியில் அழகிய வேலைப்பாடுள்ள, தேவாலயத்தையும் கண்டு களிக்கலாம். தொடர்ந்து செல்லும் பேருந்து நீண்டதொரு தொடர்வண்டி மேம்பாலத்தைத் தாண்டி பேருந்து நிலையம் சென்று சேரும். பாலத்தைக் கடந்து செல்கையில் உள்ள பூந்தோட்டமும், அம்பேத்கார் சிலையும் அழகாக இருக்கும்.

நெருக்கடியான பேருந்து நிலையமாக இருக்கும். எந்நேரமும் ஜனக் கூட்டத்தால் நிரம்பி வழியும்.

திருச்சிராப்பள்ளியிலிருந்து வயல் வெளிகள் ஊடக வேகமெடுக்கும் பேருந்தின் பாதையில் பலவித தொழிற்சாலைகளும் வரும். விராலிமலை முருகனின் வேல் விளக்கு அமைப்பு இரவு நேரத்தில் ஒளிரும் போது அழகாக இருக்கும்.

அருகிலும் தூரத்திலும் தெரியும் மலைகளைப் பார்த்தபடியே கொட்டாம்பட்டி, மேலூர் சென்று விட்டோம். மேலூரை நெருங்கும் போது மாலை நேரம். மலைகளின் தோற்றமும், பசுமையான காட்சிகளும் மனதைக் கொள்ளை கொண்டது. மலை பெய்து முடித்தவுடன் இக்காட்சிகளைப் பார்த்து ரசிப்பது மகா அற்புதம். சொட்டுச் சொட்டாக இலைகளிலிருந்து வழியும் நீரும், ஓடை வெள்ளமும், பூமியின் மணமும் அனுபவித்தவர்களுக்கே புரியும். நல்ல வேளையாக அலைபேசி இல்லாத காலத்தில் யாம் பயணித்தோம். அலைபேசி இருந்திருந்தால் குறுஞ்செய்திகளில் தட்டச்சு செய்வதிலேயே பயணத்தைத் தொலைத்திருப்போம்.

இத்தனை வருடங்களாகியும் மேலூரின் நீண்ட தெரு பெரிதாக ஒன்றும் மாறிவிடவில்லையென்றே தெரிகிறது. சமீபமாகத்தான் மேலூர் செய்தித்தாள்களில் அதிகம் அடிபடுகிறது. ஆனால் அப்போதே மலைகளை அடித்து உடைத்துப் புரட்ட ஆரம்பித்து விட்டிருந்தார்கள். ஒத்தக்கடை ஒட்டியிருக்கும் ஆனைமலை நமக்கு அருகாமையில் தெரியும். யானை போலவா இருக்கிறது என யாம் கண்களை உருட்டி உருட்டிப் பார்ப்பதுண்டு. விவசாய கல்லூரியைப் பார்க்கும் போதெல்லாம் யாம் எழுதிய நுழைவுத்தேர்வு ஞாபகத்திற்கு வரும். நிறைய ஆட்கள் வேலை செய்து கொண்டிருப்பார்கள்.

ஒத்தக்கடை தாண்டிவிட்டாலே மதுரை வந்து சேர்ந்து விட்டோமென்ற நினைப்பு வந்துவிடும். பலரும் இறங்குவதற்குத் தயாராகிவிடுவார்கள். பயணிகளை ஆங்காங்கே இறக்கிவிட்டு, திருவள்ளுவர் நிலையம் வந்து சேரும். எமது பகல் பயணத்தை அற்புதமாக ரசித்தபடியே யாமும் இறங்கிக் கொண்டோம்.

நண்பரோடு அளவளாவி விட்டு மறுநாள் பல்கலைக்கு கிளம்பினோம். காமராஜர் பல்கலைக் கழகம் மலைச் சரிவில், இயற்கைச் சூழலில், பரந்து விரிந்திருக்கும். எங்கும் பசுமையாகத் தெரியும். நேராக உயிரி தொழில்நுட்பவியல் சென்று சில ஆராய்ச்சி மாணவர்களோடு உரையாடினோம். அவர்கள் ஒரு

பேராசிரியையிடம் அழைத்துச் சென்றனர். சிறிது நேரப் பேச்சிலேயே எம்மை சேர்த்துக் கொள்வதற்கு ஒப்புதல் கூறினார். அய்யப்பன் என்ற தோழர் உற்சாகமாகப் பேசினார். பின்னர் நுண்ணியிரி ஆய்வுக் கூடத்திற்கும் சென்று பார்வையிட்டோம். பேராசிரியர் வெளிநாடு சென்றிருப்பதாகச் சொன்னார்கள். காலக் கணக்கை கண்டறியும் உயிரியல் பிரிவான குரோனோபயாலஜி கூடத்திற்கும் சென்றோம். வெளவால்களை வைத்து நிறைய ஆராய்ச்சிகள் செய்ததோடு, மனிதர்களை நேரம் காலம் உணராத வண்ணம் ஒரு அறையில் இருக்கக் செய்து அவர்களது நடத்தை மாற்றங்களை கண்டறியும் சோனைகளும் இங்கு நடந்தன.

இளநிலையில் எம்மோடு படித்த கிரண்குமார் உயிரி தகவலியலில் துறையில் உதவித் தொகையோடு கூடிய பட்டயப் படிப்பு படித்துக் கொண்டிருந்தார். எதேச்சையாக அவரையும் பார்த்தது பல வழிகளிலும் உதவியாக இருந்தது. ஆராய்ச்சி மாணவர்கள் சி.எஸ்.ஐ ஆர் இருப்பதால், வேறு பல சிறப்பான ஆராய்ச்சிக் கூடங்களிலும் சேரலாமே என்ற கருத்துக்களையும் தெரிவித்தார்கள். டெல்லியிலுள்ள எயிம்ஸ் எனப்படும் அனைத்திந்திய மருந்துவ அறிவியல் கழகம், பெங்களூருவின் ஐ.ஐ.எஸ் எனப்படும் இந்திய அறிவியல் கழகம், ஹைதராபாத்திலிருந்த சி.சி.எம்.பி என்று அழைக்கப்பட்ட செல் மற்றும் மூலக்கூறு உயிரியல் மையம் போன்றவை முக்கியமானவைகளாகச் சொல்லப்பட்டன. மாதாமாதம் உதவித் தொகை வருமென்பதால் சமாளித்துக் கொள்ளலாமெனவும் ஊக்கமளித்தார்கள். சிறப்பாக ஆராய்ச்சியை முடிக்கும் மாணவர்களுக்கு வெளிநாட்டு ஆராய்ச்சி நிறுவனங்களில் மிகச் சிறந்த வாய்ப்புகள் உள்ளதாகப் பலரும் சொன்னார்கள். இரண்டு பேப்பர் அதாவது ஆராய்ச்சிக் கட்டுரை இருந்தால் போதும், வெளிநாடு சென்று விடலாம் என பேசிக் கேட்டது ஆச்சரியமாக இருந்தது. பல ஆய்வுக் கூடங்களையும் சுற்றிப் பார்த்ததில் ஒன்று தெளிவாகப் புரிந்தது, அனைத்து ஆய்வுக் கூடங்களிலும் உபகரணங்கள் வைப்பதற்கு இடமில்லாமல் நிறைந்து கிடந்தன. மாணவர்களும் ஆராய்ச்சித் திட்டத்தை முடித்து விட்டு வெளிநாடு செல்வதையே பெருமையாகப் பேசினார்கள்.

தொடர்வண்டி மருத்துவச் சான்றிதழ் வீட்டிற்கு அனுப்புவதாகச் சொன்னவர்கள் அனுப்பவே இல்லை. யாம் அலுவலகம் சென்று கேட்டதற்கும் சரியான பதில் இல்லை. தேர்ச்சிபெற்ற கடிதம் வரவில்லையெனில் நீங்கள் தேர்வு பெறவில்லை எனக் கூறினார்கள். யாம் மருத்துவ பரிசோதனைக்கு உட்பட்ட தேதியைக் குறிப்பிட்டு, முடிவு வராததைப் பற்றி ஒரு விண்ணப்பம் கொடுத்தோம்.

தேர்வு பெற்றவர்களுக்கு பயிற்சி நடந்து கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டே, யாம் இவ்வாறு விண்ணப்பம் கொடுத்தோம். சான்று இல்லாமல் மறு மருத்துவ சோதனைக்கு விண்ணப்பிக்க இயலாதிருந்தது.

ஐயாவின் ஆலோசனைப்படி மறு மருத்துவச் சோதனைக்கு விண்ணப்பித்தோம், வீட்டினருக்கு எதுவும் தெரியாது. வேலைக்கான கடிதம் விரைவில் அனுப்புவார்கள் எனச் சொல்லி சமாளித்திருந்தோம். ஆய்வுக் கூடங்களைச் சுற்றிப் பார்த்தபோது பெரிய விஞ்ஞானியாக வரவேண்டுமென்றிருந்த ஆர்வம், பெற்றோர், அக்கா குடும்பம் இவற்றைப் பார்த்தபோது காணாமல் போய்விட்டது என்பதே உண்மை. சில வருட ஆராய்ச்சிக்குப் பின் வேலை தேடியோ வெளிநாடு சென்றோ பணம் சம்பாதித்து, பெற்றோரைக் காப்பாற்றி, இப்படி யோசிக்க ஆரம்பித்து விட்டோம்.

ஏதேனும் ஒரு அரசு வேலைக்குச் சென்று பகுதி நேரமாகக் கூட முனைவர் பட்ட ஆராய்ச்சியை செய்து கொள்ளலாம் என்பதே நல்ல யோசனையாக இருந்தது. வேலை தேடுவதற்கு சென்னையே சிறந்ததென்பதில் திடமாக இருந்தோம். வேலை கிடைக்கும் வரை செலவுக்கு என்ன பண்ணுவதென்பது அடுத்த கவலையாக இருந்தது. சரவணன் அறையில் தங்கிக் கொள்ளலாம். ஒரு நல்ல வேலை அமையும் வரை அன்றாடச் செலவுக்கு கிடைக்கும் வேலை செய்ய வேண்டும் என்ற திடமான நம்பிக்கையில், மிகுந்த கனவுகளோடு அனைத்துச் சான்றிதழ்களையும் எடுத்துக் கொண்டு சென்னைக்குப் பயணமானோம்.

திருவள்ளுவர் பேருந்து நிலையம் அன்று கூட்டத்தால் நிரம்பி வழியும். சென்னை பயணம் பெரும்பாலும் ஞாயிறாக இருக்குமென்பதால் மக்கள் கூட்டம் கூடுதலாக இருக்கும். சொகுசுப் பேருந்துகளுக்கு சற்று அதிகமான கட்டணம். சாய்வு இருக்கையும், டி.வி.டி யில் படமும் போட ஆரம்பித்திருந்தார்கள். ஐந்து ரூபாய்க்கு முன்பதிவு போன்று ஒரு சீட்டை எடுத்து கொண்டு உட்கார்ந்திருப்போம். எமக்கு சிறு வயதிலிருந்தே வேடிக்கை பார்ப்பது மிகவும் பிடிக்கும். வித விதமான மனிதர்கள். வித விதமான நடத்தைகள். ஆம்னி பேருந்துகளுக்கு நமது கையைப் பிடித்து இழுக்காத குறையாகக் கூப்பிடுவார்கள்.

பேருந்து நிறுத்தங்களில், பயணங்களில் பரிசுச்சீட்டுத் தொல்லை தாங்காது. முகத்திற்கு முன்னால் பரிசு சீட்டுகளை நீட்டியும், ஒவ்வொன்றாகப் புரட்டியும் காண்பித்துக் கொண்டேயிருப்பார்கள். அடுத்த லட்சாதிபதி நீங்கதான் எனும்

அவர்களின் பேச்சில் மயங்காமல் இருப்பது அவ்வளவு சுலபமல்ல. அண்ணே, ஒண்ணே ஒண்ணு வாங்குங்கன்னே என விடாமல் துரத்தவும் செய்வர். அன்று கே.ஏ.எஸ் லாட்டரி சீட்டுக் கடைகள் நிறைய இருந்தன. பின்னர் பல பெயர்களில் பேருந்து நிறுத்தங்கள் அருகே கடைகள் வைத்திருந்தார்கள். எப்போதும் கூட்டம் மொய்த்தப்படியே இருக்கும். சமயங்களில் கிராமங்களுக்கும் வண்டிகளில் வருவார்கள். தீபாவளி, பொங்கல் போன்றவற்றிற்கு ஒருகோடி ரூபாய் பரிசு என எங்கு பார்த்தாலும் விற்றுத் திரிவார்கள். எங்கள் வீட்டிலும் கோடீஸ்வரராக வேண்டுமென்ற பேராசையில் சிலமுறை பரிசு சீட்டு வாங்கியது நினைவுள்ளது. ஒன்றும் விழவில்லை. ஒரு நம்பர்ல போச்சே, ஒரு மூணு நம்பர் முன்னாடி வாங்காமல் போச்சே என அங்கலாய்ப்பார்கள். கட்டு சீட்டுகளைக் கையில் கொடுத்து ஒன்றை எடுத்துக் கொள்ளச் சொல்வார்கள். மக்கள் ஒன்றை எடுப்பதற்குள் தவியோதவி என தவித்து விடுவார்கள். நீங்களே நல்ல சீட்டா ஒண்ண எடுத்துத் தாங்கணே என்பவர்களும் உண்டு. பரிசு சீட்டு வாங்கி வைத்திருப்பதை பலரும் ரகசியமாக வைத்துக் கொள்வார்கள். பரிசு ஒன்றும் விழவில்லையெனில் அசிங்கமல்லவா. ஏப்பே இதுக்கு ஏதாச்சும் விழுந்திருக்காண்ணு பாத்துட்டு வ்ர்றியா என சிலர் எம்மிடம் சீட்டைக் கொடுத்தும் பார்த்திருக்கிறோம். தேநீர்க் கடையில் ஆளாளுக்கு சீட்டை வைத்துக் கொண்டு எண்களை துலாவிக் கொண்டிருப்பார்கள். சிலர் சம்பாதிக்கும் பணத்தில் பெரும்பகுதியை இப்படி பரிசு சீட்டுகள் வாங்கியே வீணடித்தார்கள் என்பதும் உண்மையே. பரிசு சீட்டு வாங்குவதற்கென்றே நகரங்களுக்குச் செல்வார்கள். பரிசுச் சீட்டில் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் ஏராளமானோர். விற்றவர்களோ பெரும் பணக்காரர்களாக ஆனார்கள் என்பதே வரலாறு.

ஒரு இனிய நாளில் சென்னை சென்றடைந்தோம். மேற்கொண்டு அங்கிங்கு என அலையாமல் இராமசாமி சாரைப் பார்த்து இளம் ஆராய்ச்சி மாணவராகச் சேர்ந்து விட்டோம். எமது சேர்க்கையை பல்கலைக் கழக மானியக்குழுவின் ஒரு அங்கமான சி.எஸ்.ஐ.ஆர்க்கு தெரியப்படுத்த வேண்டுமென்பதால், சேர்க்கை கடிதத்தை எமக்கு முன்பு அங்கு சி.எஸ்.ஐ. ஆர் தேர்வாகி, ஆராய்ச்சி மாணவியாக இருந்த கிளாரா குணபூரணி சற்குணர் எழுதிக் கொடுத்தார். யாம் தட்டச்சு செய்து எடுத்து வந்தோம்.

இராமசாமி சார் எம்மை தினமும் ஆய்வகம் வருமாறு கேட்டுக்கொண்டார். யாம் தினமும் வந்து சென்றோம். கிளாரா அன்பானவராக இருப்பார். ஓரிரு

வார்த்தைகள் பேசுவார். வசீகரன் என்பவரும் இருந்தார். பாலசுப்ரமணி எமது வயதில் இருந்ததால், எங்களுக்குள் நல்ல நட்பு உருவாகக் தொடங்கியிருந்தது. இவர்கள் அனைவரும் மும்முரமாக ஆய்வுக் கூடங்களில் வேலைகள் செய்யும் போது யாம் எதையாவது படித்துக் கொண்டிருப்போம்.

ஆய்வுக் கூடத்தினர், காலையில் ஒருமுறை தேநீர் அருந்த கீழே செல்வார்கள். யாமும் கலந்து கொள்வோம். சென்னை பல்கலையின் சிற்றுண்டி, நூலகம் அருகே கீற்றுக் கொட்டகையில் இருந்தது. அருகே நிறைய மரங்களும் இருந்தன. மகிழ்ச்சியாகப் பேசியபடியே மாணவர்கள் தேநீர் அருந்துவார்கள். மதியம் சாப்பாடும் கிடைக்கும்.

யாம் காலையில் வண்ணாரப் பேட்டை அறையிலிருந்து கல்மண்டபம் நிலையத்திற்கு நடந்து வருவோம். பின் அங்கிருந்து அடையார் காந்தி மண்டபம் நிறுத்தத்தில் இறங்கி ஆய்வுக் கூடத்திற்கு வந்து விடுவோம். பெரும்பாலும் காலையில் சாப்பிடுவதில்லை. மதியம் சிற்றுண்டியில் சாப்பாடு. இரவில் தங்கும் அறையருகே உணவருந்திக் கொள்வோம்.

ஏனோ சில விசயங்கள் காரணமாக எமக்கு தொடர்ந்து ஆய்க்கூடத்திற்கு செல்வது சங்கடமாக இருந்தது. ஆய்வுக் கூடத்தில் கண்டிப்பு அதிகமிருந்ததாக உணர்ந்தோம். யாம் சென்னை சென்றதே ஏதேனும் நல்ல வேலைக்குச் செல்ல வேண்டுமென்பதற்காகத்தானே. பேராசிரியர் இடையில் எதன் பொருட்டும் சான்றிதழ்களைக் கொடுக்க மாட்டார் என்றார்கள். யாம் இது குறித்து முதலிலேயே பேசியிருக்கவில்லை. சான்றிதழ்கள் தொடர்பாக பேசியபோது, ஆராய்ச்சியை முடித்து விட்டுத்தான் செல்ல வேண்டுமென்றும் இடையில் போவதாக இருந்தால் இப்போதே விலகிக் கொள்ளலாமென்றும் தெரிவித்தார். யாம் அடுத்த நாளே இளம் ஆராய்ச்சி மாணவர் தகுதி வேண்டாம் எனக் கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு, சான்றிதழ்களை வாங்கிக் கொண்டோம்.

சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டு அடுத்து யாரிடம் சேரலாம் என தேடிக் கொண்டிருந்தோம். மாணவர்களிடம் பேசிக் கொண்டிருந்ததில் உயிரி வேதியியல் துறையில் சிறப்பாக ஆராய்ச்சிகள் நடப்பதாகவும் அங்கு சென்று கேட்கலாம் எனவும் கருத்துகள் கிடைத்தன. கிண்டி வளாகத்திலேயே அழகப்பச் செட்டியார் தொழில்நுட்ப மையம் என அண்ணா பல்கலைக் கழக மாணவர்களுக்கு ஒரு கட்டிடம் நுழைவிலேயே இருந்தது. அழகிய பெரிய கட்டிடமாக இருக்கும். ஏ.சி. டெக்

என அழைப்பார்கள். இதனுள்ளேயே சென்னை பல்கலையின் உயிரி வேதியியல், புவியியல் போன்ற துறைகள் செயல்பட்டு வந்தன.

துறைத் தலைவராக கோவிந்தசாமி சார் இருந்தார். அவருக்கு அடுத்த நிலையில் சியாமளா தேவி மேடம் இருந்தார்கள். இவர்களைத் தொடர்ந்து, நிரஞ்சனா மேடமும், தேவகி மேடமும் பணியாற்றினார்கள். கோவிந்தசாமி சார் பணி நிறைவிற்கு நெருங்கிக் கொண்டிருந்ததால் புதிய மாணவர்களைச் சேர்க்காமல் இருந்தார் என நினைக்கிறோம். யாம் சியாமளா தேவி மேடத்தைப் பார்த்தோம்.

மேடம் சிரித்த முகத்தோடு மிகவும் அன்புடன் பேசினார். அறையில் பல மாணவர்களும் இருந்தார்கள். இதற்கு முன்னர் இருந்த இடம் ஏன் பிடிக்கவில்லை என்றதற்கு, உயிரி வேதியியலில் ஆராய்ச்சி பண்ண விரும்புகிறோம் எனச் சொன்னோம். மேடத்திடம் யாம் தனிப்பட்டு பேச வேண்டும் என்று சொன்னோம். வீட்டு முகவரி பெற்று அவர்களைச் சந்தித்தோம். மாலை வேளையில் சென்றோம்.

வீட்டில் எமக்கு அன்பான உபசரிப்பு கிடைத்தது. யாம் குடும்பத்தைப் பற்றி கூறிவிட்டு சென்னையில் ஆராய்ச்சி செய்ய வந்ததற்கான காரணம், வேலைக்குச் செல்வதன் அவசியம், இராமசாமி சாரிடமிருந்து விலகியது, ஆராய்ச்சி பற்றிய புரிதல் இன்மை போன்ற அனைத்தையும் கூறினோம். போட்டித் தேர்வுகள் எழுதி ஏதேனும் வேலைக்கு செல்வதே முதல் குறிக்கோள் என்றும், தினமும் ஆய்வுக் கூடத்திற்கு வருவதற்கு எமக்குக் கொஞ்சம் தளர்வு வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டோம். யாம் பேசுவதையெல்லாம் மிகவும் பொறுமையோடு கேட்டார்கள். எமக்கு ஆராய்ச்சி பற்றி தைரியம் கொடுக்கும் விதத்தில் பேசினார்கள். கிராமத்தில் ஒரு எளிய வீட்டில் பிறந்த பையன் இத்தனை தூரம் வந்ததே மிகப் பெரிய சாதனை என்று எம்மை பாராட்டவும் தயங்கவில்லை. அனைத்து சான்றிதழ்களையும் பார்த்து திருப்தியடைந்தார்கள்.

தற்போது அவரிடம் ஆராய்ச்சி மாணவருக்கான காலியிடம் இல்லையெனவும், ஜூன் முதல் வாரத்தில் ஒரு மாணவர் முடிப்பதாகவும், அதன் பின்னர் எம்மை சேர்ப்பதாகவும் இசைவு தந்தார்கள். பேராசிரியரின் அப்பா மற்றும் சாரையும் எமக்கு அறிமுகப்படுத்தினார்கள். வீடும் வெள்ளை நிறத்தில் மிகவும் அழகாக இருந்தது. பேராசிரியரின் அன்பையும் அரவணைப்பையும் பார்த்து யாம் மிகவும் மகிழ்ந்தோம். சரியான இடத்திற்குதான் வந்து சேர்ந்திருக்கிறோம் என

மனதில் நினைத்துக் கொண்டோம். யாம் காத்திருப்பதாகவும், ஜூன் முதல் வாரத்தில் வந்து சேர்வதாகவும் சொல்லி விடைபெற்றோம்.

இடையில் இருந்த நாட்களை கன்னிமாரா நூலகம் சென்று பயனுள்ளதாக்கிக் கொண்டோம். போட்டி தேர்வுகளுக்குத் தயாராவதற்கென்றே மாடியில் தனியானதொரு பிரிவை ஆரம்பித்திருந்தார்கள். நல்ல இருக்கை வசதியோடு, கற்றோட்டமாகவும் இருக்கும். நூலகத்திற்கு காலையில் சென்றால் மாலைவரை அங்குதான் இருப்போம். மதியம் சாலைக்கு வந்து சாதப் பொட்டலங்களை வாங்கி சாப்பிட்டுக் கொள்வோம்.

கன்னிமாரா நூலகத்தின் புத்தகங்கள் எம்மை ஆட்கொண்டன என்றே சொல்ல வேண்டும். விதவிதமான புத்தகங்களை எடுத்துப் படிப்போம். புத்தகங்களை தேடிக்கொண்டே இருப்போம். அதன் அமைதியான சூழலே எமக்கு படிக்கும் ஆர்வத்தைத் தூண்டியது.

யாம் அதிக நேரம் செலவிட்டது இந்திய ஆட்சிப்பணி குறித்த புத்தகங்களுக்கே. இது தரைதளத்தில் இருந்தது. வனப்பணி தொடர்பான பழைய கேள்வித் தாள்களையும், அதற்கான பதில்களையும் தேடித் தேடிப் படித்தோம். அவை மகிழ்ச்சியான அனுபவங்கள்.

சென்னைக்கு வந்த புதிதில் காளிஸ்வரி எலெட்ரிகல் கடையில் அதிக நேரம் ரமேஷ் உடன் பேசிக் கொண்டிருப்போம். காங்கேயனும் இருப்பார். நேரம் கிடைக்கும்போது சரவணனோடு செல்வோம். சண்முகம் அவர்கள் இளவயதிலேயே சென்னைக்கு சென்று அட்டைப்பெட்டி வியாபாரம் பார்த்திருக்கிறார். பழைய அட்டை பெட்டிகளை வாங்கி வந்து, அவற்றை ஒட்டி, மறுபடியும் விற்பனை செய்வார்கள்.

அட்டைப் பெட்டிகள் வாங்க மதுபானக் கடைகளுக்குச் செல்வார்கள். வாரத்திற்கு ஒரு முறையோ அல்லது பத்து நாட்களுக்கு ஒரு முறையோ சென்று குமித்துக் கிடக்கும் அட்டைப் பெட்டிகளை தரம் வாரியாகப் பிரித்துக் கொள்வார்கள். மதுபான பாட்டில்கள் அட்டைப் பெட்டிகளில் வைக்கப்பட்டு ஒவ்வொரு பாட்டிலுக்கும் இடையேயும் தடுப்பு அட்டைகள் வைத்து அடைத்திருப்பார்கள். பாட்டில்களை விற்றுவிட்டு மதுபான கடைகளின் குடோனில் அட்டைகளைப் போட்டு வைத்திருப்பார்கள்.

அட்டைப்பெட்டிகளில், கிழியாமல் நல்ல நிலையில் உள்ளதை முதல் ரகமென்றும், குறைவாகக் கிழிந்திருப்பதை இரண்டாம் தரமாகவும், மோசமாக

சேதாரமுள்ளதை கழிவாகவும் பிரிப்பார்கள். பெரும்பாலும் அட்டைப் பெட்டிகளின் மூலை கிழிந்திருக்கும். ஒவ்வொரு ரகத்திற்கும் ஒவ்வொரு விலையென நிர்ணயம் செய்து, கடைகாரர்களிடம் கொடுத்து விடுவார்கள். இப்படிச் சேரும் அட்டையின் மூலமே வாரத்திற்கு ஒரு சில ஆயிரங்களை மாதுபானத்தை ஏலம் எடுத்தவர்கள் பார்த்துவிடுவார்கள். இது போக காலி பாட்டில்களை வாங்குபவர்கள் தனியாக இருப்பார்கள்.

சரவணனும், காங்கேயனும் இப்படி அட்டைப் பெட்டிகள் எடுத்து வந்து, சண்முகம் அவர்கள் கடையில் கூடுதல் லாபத்திற்கு விற்று விடுவார்கள். கிழிந்த அட்டைப் பெட்டிகளை ஒட்டுவதற்கென்று அவர் ஆட்களை வைத்திருந்தார். அவர்களது மாமா இருப்பார். இப்படி ஒட்டி மற்றொருவரிடம் அவர் விற்று விடுவார். இதன் மூலம் அவர்களுக்கு ஓரளவிற்கு லாபம் வந்திருக்கும் என்றே நினைக்கிறோம். அனைவரும் நல்ல உழைப்பாளிகள்.

யாமும் நண்பர்களோடு சேர்ந்து அட்டைப்பெட்டி பிரித்துவைக்கும் வேலைக்குச் சென்றோம். ஆரம்பத்தில் எம்மை கூட்டிச் செல்ல மிகவும் தயங்கினார்கள். டாக்டருக்குப் படிக்கும் நீயெல்லாம் இப்படி வேலை செய்யக் கூடாது எனச் சொல்வார்கள். எமக்கு மிகக் கடுமையான பண நெருக்கடிக் காலங்கள் அவை. வீட்டிலிருந்து வாங்கி வந்திருந்த பணம் தீர்ந்து, மறுபடியும் கொஞ்சம் பணம் அனுப்பக் கேட்டிருந்தோம். ஆரம்பத்தில் அவ்வப்போது சென்று வந்த யாம், பின் அடிக்கடி செல்ல ஆரம்பித்தோம்.

சியாமளா தேவி மேடத்தை சந்தித்து ஜூன் நான்காம் தேதி முறைப்படி ஆராய்ச்சி மாணவராகச் சேர்ந்து கொண்டது மனதிற்கு மிக்க மகிழ்ச்சியை அளித்தது. இரத்த சிவப்பணுவை சூழ்ந்திருக்கும் படலத்தில் ஏற்படக் கூடிய உயிர் வேதியியல் மாற்றங்கள் என்பதே எமது ஆராய்ச்சியின் மையக் கருத்து. எமக்கு எதில் ஆராய்ச்சி செய்வதில் விருப்பம் என்பதை தயார் செய்து வருமாறு மேடம் கூறியிருந்தார். எம்மால் தலைப்பைக் கண்டறிய இயலவில்லை. தலைப்பையும் அவரே தேர்ந்தெடுத்தார். உண்மையில் யாம் கொடுத்து வைத்தவன் என்றே சொல்ல வேண்டும். அம்மா போன்றே எம்மீது அன்பும், அக்கறையும் காட்டினார். யாம் எப்போது அவரை பார்க்கப் போனாலும் சாப்பிட்டாயா என்பதே முதல் வார்த்தையாக இருக்கும். அதன் பின்னரே உட்கார் என்பார். எம்மைப் பற்றி முதலிலேயே கூறியிருந்ததால் எம்மீது கூடுதல் அன்பு பாராட்டினார்கள்.

ஆய்வுக்கூடத்தின் அனைத்து மாணவர்களுமே எம்மீது மிகுந்த பேரன்பு கொண்டிருந்தார்கள். சேர்ந்த குறுகிய காலத்திலேயே துறை எமக்கு மிகவும் பிடித்து விட்டது. சிறந்த நண்பர்கள் கிடைத்தார்கள். சிவக்குமார், சபிதா, வாணி, ஸ்ரீதரன் என மேடத்திடம் இருந்த முனைவர் பட்ட மாணவர்களும், எம்.ஃபில் பயின்ற மகேந்திரன், விஜயமோகன் போன்றவர்களும் நெருங்கிய நண்பர்களானார்கள். மகேந்திரன் எமக்கு அடுத்து மேடத்திடம் முனைவருக்குச் சேர்ந்தார். இருவரும் ஒத்த வயதினர் என்பதால் வெளியே செல்லும்போது சேர்ந்து செல்வதுண்டு. பல்கலை நுலகத்திற்கும் இருவரும் அடிக்கடி செல்வோம்.

தேவகி மேடத்திடம் முனைவர் பட்ட ஆய்வு செய்த ஸ்ரீப்பிரியா, மற்றும் ஆனந்தன் இருவருமே எம்மீது அன்பைப் பொழிவார்கள். முதன்முதலில் உயிர் வேதியியல் துறைக்கு யாம் சென்றபோது பிரியாவைப் பார்த்துத்தான் பேசினோம். அந்த வகையில், எங்கிட்டதானே முதலில் பேசினீர்கள் என சமயங்களில் கலாய்ப்பதுண்டு. பிரியா எப்போதும் சிரித்த முகத்துடன் பழகுவதற்கு இனிமையான தோழியாக இருப்பார். சந்திக்கும் நேரங்களில் நலம் விசாரிக்கத் தவறமாட்டார். பிரியாவின் தந்தை வங்கிப் பணியில் நிர்வாகியாக இருந்தார். புற்று நோயின் காரணமாக வேதியியல் சிகிச்சைக்கு அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். நண்பர்களோடு சென்று பார்த்தோம்.

செலவுக்குப் பணம் இல்லாமல் ஆயிரம் ரூபாய் அனுப்புமாறு மாதவனிம் கேட்டு பெற்றுக் கொண்டோம். முதலிலேயே மேடத்திடம் தினமும் ஆய்வுக் கூடத்திற்கு எம்மால் வர இயலாது எனக் கூறியிருந்ததால், எப்போதாவது தலை காட்டுவதோடு சரி. கன்னிமாரா நூலகம் செல்வதையே வழக்கமாக வைத்திருந்தோம். அவ்வப்போது சரவணனோடும், காங்கேயனோடும் சேர்ந்து அட்டைப் பெட்டி எடுக்கவும் போய் வந்தோம். அட்டைக் கடையில் இரவுவரை இருப்பதுண்டு. அட்டைப் பெட்டிகளை ஒட்டிக் கொண்டே, எப்படி கிருஷ்ணமூர்த்தி இவ்வளவு நல்லா படிச்சே, உன்னோட படிப்ப பத்தி கொஞ்சம் சொல்லு என சண்முக சுந்தரம் அவர்கள் கேட்பதுண்டு. அவர்களது மாமாவுமும் சேர்ந்து கொண்டு காஙகேயனை அதிகமாக கிண்டல் பேசுவார்கள். மகிழ்ச்சியான இரவுகளாக இருக்கும்.

வ.உ.சி கல்லூரியில் சம்பத் சாரிடம் இராமச்சந்திரன் அண்ணன் முனைவருக்கு ஆய்வுகள் செய்து வந்தார். அண்ணன் சென்னையில் திருமணம்

செய்திருந்ததால் சென்னை வரும்போது எம்மை சந்தித்துப் பேசுவார். தேனாம்பேட்டை சிக்னல் அருகேயிருந்த மாமானார் வீட்டிற்கு ஒருமுறை எம்மை அழைத்துச் சென்றார். எம்மை நன்றாகக் கவனித்தார்கள். அண்ணா அறிவாலயம் அருகே மிக உயரமானதொரு கட்டிடத்தை அப்போது கட்டிக் கொண்டிருந்தது நன்றாக நினைவிருக்கிறது.

ஜெய்சங்கர் அண்ணனோடு கடிதத் தொடர்பிலேயே இருந்தோம். அண்ணன் சில காலம் சென்னை அண்ணா நகரில் இருந்த அரசினர் இலவச வேலைவாய்ப்பு பயிற்சி மையத்தில் தங்கியிருந்து, இந்திய ஆட்சிப் பணிக்கு தயாராகி வந்தார். எம்மையும் அந்த ஆய்வு மையத்திற்கு விண்ணப்பிக்குமாறு சொன்னதால் யாமும் விண்ணப்பம் வாங்க ஒரு முறை சென்று வந்தோம்.

அண்ணனுக்கு மண்டலமாணிக்கத்தைச் சேர்ந்த சித்த மருத்துவர் சுந்தர்ராஜன் அவர்களது பெண் வேளாங்கண்ணி அண்ணியை திருமணம் முடித்தார்கள். திருமணம் மண்டலமாணிக்கத்தில் நடைபெற்றது. யாம் சென்றிருந்தோம். சுந்தர்ராஜன் சார் திருமங்கலத்தில் இருந்த அரசினர் குடியிருப்பில் இருக்கவே அண்ணனும் அங்கு தங்கியபடியே வேலை தேட ஆரம்பித்திருந்தார். அருகிலிருந்த ஒரு பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். ஒரு நல்ல வேலைக்குச் செல்ல வேண்டுமென்பதில் மிகுந்த ஆர்வமாக இருந்தார். அண்ணனோடு பேசிக் கொண்டிருப்பது மனதிற்கு மிகவும் ஆறுதலாக இருக்கும்.

ஞாயிற்றுக் கிழமைகளில் அண்ணன் வீட்டிற்குச் செல்வோம். அண்ணியை வேளா என செல்லமாக அழைப்பார். மிகவும் அன்பான தம்பதியராக இருப்பார்கள். யாம் எப்போது சென்றாலும் சாப்பிடாமல் அனுப்ப மாட்டார்கள். அண்ணனும் மிகவும் பாசமாக இருப்பார். எம்மீது அளவு கடந்த அன்பு வைத்திருந்தார். அண்ணி கையால் சாப்பிடுவது வயிற்றுக்கு மட்டுமல்லாது மனதிற்கும் நிறைவாக இருக்கும். அப்படி எம்மை விழுந்து விழுந்து கவனிப்பார்கள். போதும் அண்ணி என்றால் கேட்கவே மாட்டார். இன்னும் கொஞ்சம் இன்னும் கொஞ்சமென்று போட்டுக் கொண்டேயிப்பார். உட்காரவும் மாட்டார். அருகில் கரண்டியோடு நின்று கொண்டேயிருப்பார். அண்ணி போன்று உபசரித்தவரை இன்று வரை யாம் கண்டதில்லை. யாம் பலமுறை சென்றிருக்கிறோம். ஒவ்வொரு முறையும் அண்ணியாரின் கவனிப்பு அதிகரித்ததே தவிர குறையவேயில்லை.

நிஷாந்தி பிறந்ததால் அவர்களின் மகிழ்ச்சி அதிகரித்தது. ஒருமுறை குழந்தையையும் தூக்கிக் கொண்டு தீவுத் திடலில் நடந்த பொருட்காட்சிக்கு சென்றது மகிவும் மகிழ்ச்சியான தருணம். அந்த ஆண்டு ஜஸ்கட்டி மழையில் ஆடுவது அறிமுகமாகியிருந்தது. குழந்தைகள் குதூகலமாக ஆடிக் கொண்டிருந்தார்கள். சென்னையின் மக்கள் அனைவருமே வந்து விட்டார்களோ என நினைக்குமளவிற்கு அவ்வளவு கூட்டம்.

சுந்தர்ராஜன் சாரும் எம்மீது பாசமாக இருப்பார். மருத்துவர் என்பதால் எமது ஆராய்ச்சி குறித்து அக்கறையாக விசாரிப்பார். சிவப்பணுக்களை அதிகரிக்கச் செய்யும் மூலிகைகள் தொடர்பான சில தகவல்களுக்காக யாம் சிலமுறை சித்தா கல்லூரிக்குச் சென்று வந்தோம். சாருக்கு இரண்டு பையன்கள் இருந்தார்கள். இன்னொரு பெண் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். அண்ணா நகரில் புது வீடு கட்டிக் கொண்டிருந்தார்கள்.

கருப்பையா ஐயாவுடன் தொடர்பிலேயே இருந்தோம். சென்னையில் ஆராய்ச்சி மாணவராகச் சேர்ந்ததில் ஐயாவுக்கு மிகுந்த மகிழ்ச்சி. மறு மருத்துவ பரிசோதனை மதுரையில் நடத்தமாட்டார்கள் எனவும், பெரம்பூரில் இருக்கும் தொடர்வண்டி தொழிற்சாலை மருத்துவ மனையில் நடக்கும் எனவும் கடிதம் வந்தது. அந்த மருத்துவ சோதனைக்கான எமது கோப்புகள் மதுரை அலுவலகத்திலிருந்து வர வேண்டியிருந்தது. ஆனால் அவை வந்து சேரவில்லை. எமது கோப்பு வந்துவிட்டதா என பெரம்பூர் மருத்துவமனை அலுவலகத்திற்கு பலமுறை நடந்தோம்.

நேரத்திற்குச் சாப்பிடாதது, சிக்கனமான செலவு, தொடர்வண்டி வேலை அலைச்சல் என வயிற்றுப் பிரச்சினை அதிகரித்துவிட்டது. ஸ்டாலின் மருத்துவமனை சென்று உடல்நலத்தை பரிசோதித்துக் கொண்டோம். ஒன்றுமில்லை சரியாகிவிடும் என்றார்கள்.

பிடிமானம் இல்லாமல் சென்று கொண்டிருந்த சென்னை வாழ்க்கையில், ஒரு நல் வாய்ப்பாக அரசுக் கல்லூரி விரிவுரையாளருக்கான பணியிட அறிவிப்பு வெளியானது. எமக்கோ மிகவும் ஆனந்தம். எப்படியும் தேர்வு பெற்று விடலாம் என்ற மன தைரியம் இருந்தது. அறிவிப்பை பார்த்த உடனே விண்ணப்பித்து விட்டோம்.

ஆகஸ்ட் மாதம் பதினான்காம் தேதி, திருச்சிராப்பள்ளி தேசிய கல்லூரியில் தேர்வு நடைபெறுவதாக அறிவிப்பு சொன்னது. இடையில் ஒரு மாதம் இருந்தது.

மேடத்திடம் யாம் தேர்வுக்குப் படிக்க இருப்பதாகவும், ஆய்வுக்கூடத்திற்கு வர மாட்டோம் என்றும் கூறினோம். எமக்கு ஊக்கமளிக்கும் வார்த்தைகளோடு நல்லாசிகளும் வழங்கினார்கள்.

ஊரிலிருந்தும், இரவியிடமிருந்தும் எமது புத்தகங்களைப் பெற்று கொண்டோம். விஜய மோகன் சில புத்தகங்கள் கொடுத்து உதவினார். பகல் முழுவதும் அறையில் நண்பர்கள் இல்லாதது எமக்கு மிகவும் வசதியாக இருந்தது. குறிப்புகள் எடுப்பதும், புத்தகங்களை கவனமாகப் படிப்பதுமாக முழுவீச்சுடன் தயாராகிக் கொண்டிருந்தோம். இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாதென்பதற்காக, இரவு வெகுநேரம் வரையிலும் படித்துக் கொண்டிருப்போம். மிகுந்த தன்னம்பிக்கையோடு படித்தோம் என்பதே உண்மை.

சென்னையிலிருந்து திருச்சி செல்வதற்கு ஏழு மணி நேரம் ஆகுமென்று கணக்குப் போட்டு, இரவு சற்று தாமதமாகக் கிளப்பினோம். பேருந்து நன்றாகத்தான் போய்கொண்டிருந்து. பின் ஓரிடத்தில் வெகுநேரம் நின்று விட்டது. பேருந்து நகர்வதற்கான அறிகுறியே தென்படவில்லை. தாமதம் ஆக ஆக எமக்கு பதற்றம் அதிகரித்துக் கொண்டே வந்தது. சிறிது தூரம் முன்னேறுவதும், பின் வெகுநேரம் நிற்பதுமாக முன்னும் பின்னும் பேருந்துகள் நெருக்கிக் கொண்டிருந்தன. எதிர் திசையிலும் இதுவே.

இன்றைக்கு தேர்வெழுத முடியாதென்றெண்ணி யாம் கலங்கி விட்டோம். விடிந்து விட்டது. பேருந்து திண்டிவனம் அருகே நின்று கொண்டிருப்பதாக் சொன்னார்கள். அப்போதும் போக்குவரத்து முட்டிக் கொண்டுதான் இருந்தது. நிலைமை அவ்வளவுதான் என நினைக்கும்போது, பேருந்து சற்று வேகமெடுக்க ஆரம்பித்தது. பேருந்து முழுவேகத்தோடு செல்ல ஆரம்பித்த பின்பு சற்று நம்பிக்கை வர ஆரம்பித்தது. குறித்த நேரத்திற்கு தேர்வுமையத்திற்கு செல்ல முடியுமா என மனதிற்குள் அடுத்த போராட்டம் ஆரம்பித்தாயிற்று.

ஓட்டுனரிடம் சென்று யாம் திருச்சியில் தேர்வெழுத குறித்த நேரத்தில் செல்ல வேண்டும், சற்று வேகமாக ஓட்டுங்கள் எனச் சொன்னோம். ஓட்டுனருக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்து விட்டது. எவ்வளவு நெரிசல்ல சிக்கிட்டு இருந்தோம்னு பார்த்தீங்கள்ல, உங்க அவசரத்துக்கு எல்லாம் பேருந்து ஓட்ட முடியாது என வெடுக்கென்று சொல்லி விட்டார். சரி ஆவது ஆகட்டும் என இருக்கையில் வந்து பேசாமல் அமர்ந்து கொண்டோம்.

அநாவசியமாக வழியில் எங்குமே நிற்காமல் பேருந்து சென்று கொண்டேயிருந்தது. ஒவ்வொரு ஊரைக் கடக்கும் போதும் நேரத்திற்கு சென்று சேர்வோமா என்ற தவிப்பு கூடிக்கொண்டே போனது. திருச்சியை நெருங்கி விட்டோம் என்பதறிந்து எமது மகிழ்ச்சி பலமடங்கானது. வண்டி நின்றவுடன் வேகமாக இறங்கி நடக்க ஆரம்பித்தோம். ஓட்டுனர் எம்மை சத்தம் போட்டுக் கூப்பிட்டார். அருகில் வந்தவுடன் அவரது கடிகாரத்தைக் காட்டி குறித்த நேரத்திற்கு வந்துவிட்டோமா என சைகையில் கேட்டார். அப்போதுதான் எம்மீது சற்று கோபமாகப் பேசினாலும், எமக்காகவே விரைவாக வண்டி ஓட்டியிருக்கிறார் எனத் தெரிந்தது. அவருக்கு வாய் கொள்ளாத சிரிப்புடன் நன்றி சார் எனச் சொல்லி விட்டு, தேசிய கல்லூரிக்கு வழி கேட்டு ஓட்டமும் நடையுமாக வந்து சேர்ந்தோம்.

காலையில் கொள்குறி வகைக் கேள்விகளும், மாலையில் கட்டுரை வகைக் கேள்விகளும் இடம் பெற்றிருந்தன. யாம் நன்றாகப் படித்திருந்ததால், ஓரளவிற்கு சிறப்பாகவே தேர்வெழுதினோம். ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்திய இத்தேர்வுக்கு தொன்னூற்றி மூன்றாம் வருடத்திற்கு முன்பாக எம்.்.பில் அல்லது முனைவர் பட்டமும், மாநில தகுதி தேர்ச்சி அல்லது தேசிய தகுதிகாண் தேர்ச்சி போன்றவையே அடிப்படைத் தகுதியாக வரையறுக்கப்பட்டிருந்தது.

தகுதியானோர் அதிகமிருந்ததாக மையத்தில் பேசிக்கொண்டார்கள். தேர்வெழுதவும் அதிகமான பேர் வந்திருப்பதைக் காண முடிந்தது. விலங்கியலுக்கு இருபத்தி ஒன்பது இடங்கள் இருந்தன. ஒன்றுக்கு இரண்டு என்ற விகிதத்தில் ஐம்பத்து எட்டுப் பேர் வாய்மொழித் தேர்வுக்கு தேர்தெடுக்கப்பட இருந்தார்கள். எழுத்துத் தேர்வில் தேர்வு பெற்று விடுவோம் என்ற நம்பிக்கை எமக்கு அதிகமாகவே இருந்தது.

சென்னை வாசம் தொடர்ந்தது. அறையில் காங்கேயனோடு சேர்ந்து சில நாட்கள் சமைத்துச் சாப்பிட்டோம். காங்கேயன் எமக்கு பல வகைகளிலும் உதவிகள் செய்தார். யாம் சோர்ந்து போகும் சமயங்களில் தைரியமூட்டினார். எம்மை அன்பும், அக்கறையோடும் பார்த்துக் கொண்டார். சரவணனோடு சேர்ந்து திருவல்லிக் கேணியில் ஒரு கடையில் பெட்டிகளை அள்ளினோம். எம்மை தனியாக விட்டு விட்டு நண்பர் அடுத்த கடைக்குச் சென்று விடுவார். யாம் அந்தக் கடையில் மட்டும் மூன்று நாட்கள் வேலை பார்த்தோம். அட்டைப் பெட்டிகளை சுத்தம் செய்யும்போது சில

கடைகளில் சாராய நெடி அடிக்கும். யாம் அதைப் பற்றியெல்லாம் கவலைப் படமாட்டோம்.

ஒருமுறை நண்பரோடு சேர்ந்து கோடம்பாக்கத்தில் ஒரு மதுபானக் கடையில் அட்டைப் பெட்டிகளை அள்ளி ஆளுக்கொரு மிதிவண்டியில் கட்டிக் கொண்டோம். சென்னையில் எங்கு சென்றாலும் மிதிவண்டிதான். எமக்கும் ஒரு மிதிவண்டி கொடுத்திருந்தார்கள். காலையில் காளீஸ்வரி எலெக்ரிகல் அருகே ஒரு சாலையோர கடையில் இட்லி சாப்பிட்டு விடுவோம். பக்கத்திலிருந்த ஒரு அம்மன் கோயிலில் எமது தொடர்வண்டி நேர்முகத் தேர்விற்கு செல்லும்போது வழிபட்டது நினைவிருக்கிறது. அங்கிருந்து அட்டைக் கடைக்கு வந்து சேர்வோம். சரவணனும், காங்கேயனும் அவர்களது வீட்டில் உணவருந்தி வந்து விடுவார்கள். மூவரும் கிளம்பி விடுவோம்.

சரவணனும், யாமும் மிதி வண்டியில் பாரத்தை ஏற்றி கொண்டு புறப்பட்டோம். நண்பருக்கு ஏற்கனவே இந்த அனுபவம் இருந்ததால் எளிதாக ஓட்டிச் சென்றார். யாம் சற்று சிரமத்துடனேயே அவரைப் பின் தொடர்ந்தோம். பேசின் பாலம் ஏறும்போது எம்மால் மிதிவண்டியை அழுத்தி ஓட்ட இயலவில்லை. நண்பர் சற்று தூரமாகச் சென்று விட்டார். எமது மிதிவண்டி பின்னோக்கி நகர ஆரம்பித்து விட்டது. பின்னால் வண்டிகள் வந்து கொண்டிருக்கின்றன. யாம் தடுமாறி விட்டோம். நல்ல வேளையாக இரு சக்கர வாகனத்தில் வந்த நல்ல மனம் கொண்ட ஒருவர் வண்டியை நிறுத்தி விட்டு எம்மை மிதிவண்டியோடு தடுத்துக் கொண்டார். இவ்வளவு பாரமா ஏற்றுவது என சற்று கடிந்து கொண்டார். பாலத்தின் உச்சிவரை தள்ளிக் கொண்டே வந்து, பின்னர் ஏறி ஓட்டி வந்தோம். இது தெரிந்து நண்பர் வருத்தப் பட்டார். அதன் பின்னர் எம்மை மிதி வண்டியில் பாரம் ஏற்றி வர மறுத்து விட்டார்.

வீட்டிற்கு செல்லும் சமயங்களில் சரவணனின் அம்மா எம்மை மிகவும் அன்பாகக் கவனிப்பார்கள். கிருஷ்ணமூர்த்தி ஊருக்குப் போனியா, ஊர்ல எல்லோரும் நல்லா இருக்காங்களா என சிரித்த முகமாய் எம்மோடு பேசுவார்கள். சரவணனின் அம்மா ஊடல் நிலை சற்று முடியாமல் இருந்தவர் இறந்து விட்டதாக எலெட்ரிகல் கடையில் வந்து சொன்னார்கள். அவரது இறுதி ஊர்வலம் நல்ல முறையில் முடிந்தது.

மூலக்கடை, காசிமேடு என பல பகுதிகளுக்கும் அட்டை எடுக்கச் சென்றோம். நாட்கள் செல்லச் செல்ல வண்ணாரப்பேட்டை அறையில் இருப்பதை கடினமாக

உணரத் தொடங்கினோம். செலவுக்கு வேண்டுமென்றால் தயங்காமல் கேள் என்று நண்பர் சொல்வார். யாம் பணம் கேட்பதில் தயக்கம் காட்டினோம். வேறு எங்கேனும் தங்கலாம் என்ற யோசனையும் வந்தது.

எங்கள் ஊரின் வேல்முருகன் எங்கிருக்கிறார் என்றே தெரியாமல் இருந்தது. பல ஆண்டுகளாக கடித போக்குவரத்துக் கூட இல்லை. சென்னை நண்பர்கள் மூலமாக ஸ்டான்லி அருகிலிருக்கும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் தண்ணீர் லாரி ஓட்டுனராக இருப்பது தெரிந்தது. நண்பரைச் சென்று சந்தித்தோம். பல ஆண்டுகள் கழித்து நண்பரைச் சந்தித்ததில் இருவருக்குமே மட்டற்ற மகிழ்ச்சி.

பல விசயங்களையும் பேசிவிட்டு தங்குவதற்கு ஏதேனும் இடம் கிடைக்குமா என்று கேட்டோம். அவர் அருகிலிருக்கும் சேரி போன்ற பகுதியில் இருப்பதாகவும், வேறு ஏதேனும் நல்ல இடமாக அவருக்குத் தெரிந்த நண்பர்களிடம் கேட்டுச் சொல்வதாகவும் தெரிவித்தார். ஆய்வு கூடத்திற்குச் செல்லாமல் நண்பரோடு சேர்ந்து சில நாட்கள் தண்ணீர் லாரியில் ஓடினோம். யாம் உதவியாளர் போல் அருகே அமர்ந்து பேசிக் கொண்டு செல்வோம். பல இடங்களுக்கும் சென்ற போது, மக்கள் தண்ணீர் லாரியை எதிர்பார்த்து காத்திருப்பார்கள். நண்பர் பண உதவியும் செய்தார்.

ஆசாரி தெரு கண்ணன் பட்டினப்பாக்கம் வீட்டு வசதி வாரியத்தில் வாடகைக்கு இருப்பது தெரிந்து நண்பர்களோடு அவரை பார்க்கச் சென்றோம். எம்மை மிகவும் அன்போடு வரவேற்றார்கள். அவர்கள் வீட்டிலேயே தங்கிப் படிக்குமாறு உள்ளன்போடு சொன்னார்கள். எமக்கு உதவித்தொகை கிடைக்குமென்றும், அருகில் வேறு வீடு கிடைத்தால் தெரியப்படுத்துமாறும் கேட்டுக் கொண்டோம்.

மாதாமாதம் உதவித் தொகை கிடைக்குமென்றுதான் யாம் நம்பினோம். ஆனால் நான்கைந்து மாதங்களாகியும் வந்தபாடில்லை. பல்கலைக் கழக நிதி நல்கை குழுவிடமிருந்து ஒப்புதல் கிடைத்த பின்னரே உதவித் தொகை கிடைக்குமென்றார்கள். யாம் மிகவும் தர்ம சங்கடமான நிலையிலிருந்தோம்.

அண்ணாத்துரை கொரட்டூரில் ஒரு பள்ளியில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். அவரைப் பார்க்கவும் நண்பர்களோடு ஒருமுறை சென்று வந்தோம். பின்னர் யாம் மட்டும் தனியாக சென்று தங்குவதற்கு இடம் கேட்டோம். அவரது

அறைக்கு அருகிலேயே ஒரு அறை விரைவில் காலியாவதாகவும் அங்கு தங்கலாமெனவும் கூறினார்.

சித்தப்பா பையன் கந்தசாமி மதுரவாயிலில் ஒரு தொழிற்சாலையில் பணிபுரிந்தார். கந்தசாமியை சென்று பார்த்தோம். யாம் தங்குவதற்கு சற்று சிரமமான நிலையில் இருப்பதாகவும், சிறிய அளவிலான ஒரு அறை கிடைத்தால் சிறப்பாக இருக்குமென்றும் தெரிவித்துவிட்டு வந்தோம். அன்று மாங்காட்டில் விழா போல. அம்மன் பக்தர்களால் சாலையே நிரம்பி வழிந்தது.

ஆய்வுக் கூடத்திற்கும், கன்னிமாராவிற்கும் செல்வது தொடர்ந்து கொண்டிருந்தது. மகேந்திரனோடு பல்கலை நூலகம் சென்று உயிரியல் ஆய்வுச் சுருக்கங்கள் பார்த்தோம். இரத்த அணுக்கள் பற்றி குறிப்புகளும் எழுத ஆரம்பித்தோம். விலங்கு அறைக்கும் சென்று பழகிக் கொள்ளச் சொல்லியிருந்ததால் அங்கும் செல்வதுண்டு. பலரும் வெள்ளை எலிகள் வளர்த்தார்கள். எலிகளுக்கு உணவும், தண்ணீரும் கொடுப்பதை ஆச்சரியத்தோடு பார்ப்போம். விலங்குகள் பராமரிப்பு அறை தரை தளத்தில் இருந்ததால் பாம்புகளும் அவ்வப்போது வருமென்று சொல்வார்கள். யார் போனாலும் கவனமாகப் போக வேண்டுமென்று சொல்லி அனுப்புவார்கள்.

ஒருமுறை மகேந்திரனோடு சென்னை பல்கலையின் சேப்பாக்கம் நூலகத்திற்குச் சென்றோம். இதுவும் சிறப்பான நூலகமாக இருந்தது. மகேந்திரன் அவரது ஆராய்ச்சி தொடர்பான குறிப்புகளை அக்கறையாகத் தேடிக் கொண்டிருந்த சமயங்களில், யாம் அங்கிருந்த தலைவர்களின் படங்களைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தோம். திருவல்லிக்கேணியிலிருந்த அவர்களது வீட்டிற்கு எம்மை அழைத்துச் சென்று, தேநீர் கொடுத்து அன்புடன் உபசரித்தார். புத்திசாலியான ஆய்வு மாணவராகவும் அன்பானவராகவும் இருந்தார்.

நாளுக்குநாள் பண நெருக்கடி கூடிக்கொண்டே போனது. நெருக்கடி எந்த அளவிற்கு இருந்ததென்றால், கையில் பைசா இல்லாமல் ஒருநாள் இரவு பட்டினியாகப் படுத்து விட்டோம். நண்பர் நாராயணன் எம்மை கவனித்துக் கொண்டே இருந்திருப்பார் போல. சாப்டீங்களா என்று கேட்டதற்கு ஆம் என்றோம். கீழே சென்று பாத்திரங்களைப் பார்த்து வந்தவர், சமைக்கவே இல்லையே எப்படி சாப்பிட்டிருப்பீர்கள் என்றார். யாம் உணவு விடுதியில் சாப்பிட்டோம் என்றதற்கு இல்லை பொய் சொல்லாதீர்கள் என்று செல்லி, ஐம்பது ரூபாய் பணம் கொடுத்து

சாப்பிட்டு வாருங்கள் என்றார். எமக்கு அழுகையை அடக்க முடியவில்லை. நண்பர் எம்மை மிகவும் தேற்றினார். யாம் அவருக்கு மிகுந்த நன்றி சொல்லி விட்டு உணவருந்தி உறங்கினோம்.

காலையில் சரவணனிடம் சொல்லியிருப்பார் போல. எம்மை மிகவும் கடிந்து கொண்டார். சாப்பாட்டுக்குக்கூட இல்லாமல் இருப்பாய் என நினைத்துக் கூட பார்த்ததில்லையே என மிகவும் வருந்தினார். பணம் நிறையக் கொடுத்து, வாங்க வில்லையெனில் பேசமாட்டோம் என்றார். அன்றிலிருந்து எவ்வளவு தாமதமாக வந்தாலும் யாம் சாப்பிட்டு விட்டோமா எனக் கேட்காமல் நண்பர் தூங்க மாட்டார்.

அறைக்கு அருகில் சில குடித்தனக்காரர்கள் இருந்தார்கள். பொதுவான கழிப்பறை இருக்கும். அடி குழாயிலிருந்து தண்ணீர் எடுத்துச் செல்ல வேண்டும். யாம் வாளியை எடுத்துச் சென்றாலே எமக்கு தண்ணீர் அடிக்க இடம் கொடுப்பார்கள். யாம் ஆராய்ச்சி படிப்பு படித்துக் கொண்டிருப்பதாக கேள்விப்பட்டிருப்பார்கள் என நினைக்கிறோம். நல்ல தண்ணீர் பிடிப்பது வேடிக்கையாக இருக்கும். பெரியதொரு இரப்பர் குழாயை அடிகுழாயோடு இணைத்து அடித்துக் கொண்டிருப்பார்கள். அறையில் குடிப்பதற்கு நல்ல தண்ணீர் எடுத்துக் கொள்வோம். குளிப்பதற்கு தண்ணீர் பிடித்து அறைக்கு கொண்டு வந்து விடுவோம். மாடி ஏறும் இடத்தில் இடம் இருக்கும். அங்கே குளித்துக் கொள்வோம்.

சரவணனின் சித்தி குடும்பத்தார் அருகேயிருந்த ஒரு மருத்துவமனையில் சிற்றுண்டி நடத்தினார்கள். இரண்டு பெண்கள் படித்து கொண்டிருந்தார்கள். சரவணன் இவர்கள் குடும்பத்தினரோடு நெருக்கமாக இருப்பார்.

ஒருமுறை அனைவரும் ரஜினி நடித்த அருணாச்சலம் படம் பார்த்துத் திரும்பினோம். ஆனந்தனைப் பார்க்கவும் அவ்வப்போது செல்வோம். நண்பரும் எங்களை பார்க்க அறைக்கு வருவதுண்டு. அனைவரும் சேர்ந்துவிட்டால் மகிழ்ச்சிக்கு அளவிருக்காது. சோலை ராஜாவுக்கு திருமணம் முடிந்திருந்தது. மண்டல மாணிக்கம் அருகிலிருந்த வளைய பூக்குளத்தில் அவரது அக்கா பெண்ணையை மணம் முடித்தார். வீட்டிற்குச் செல்லும் போதேல்லாம் எங்களுக்கு நன்றாக சமைத்துக் கொடுப்பார்கள். ஜோதி திரையரங்கிற்கு இரண்டாவது ஆட்டம் பார்க்கவும் தவறாமல் செல்வதுண்டு. ஜெயராம் அவரது அப்பாவோடு சிறு பிரச்சினையில் சோலை ராஜா மளிகைக் கடையில் சில காலம் வேலை பார்த்தார். மளிகைக் கடை தவிர செங்குன்றத்தில் அரிசி ஆலையும் எடுத்து நடத்தினார்கள்.

இரண்டிலும் நல்ல வருமானம் வருவதாக பேசிக் கேட்டிருக்கிறோம். ஆனந்தனையும் ஒரு பட்டதாரியாக்க வேண்டுமென்ற சரவணனின் முயற்சியில் அவர் சென்னை பல்கலையின் தொலைதூர கல்வியில் சேர்ந்திருந்தார். தேர்வுகள் சரியாக எழுதாமல் இருந்தார்.

உதவித் தொகை தாமதமாவது குறித்து மேடத்திடம் பேசினோம். அருகிலிருந்த மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் நேரடியாக சி.எஸ்.ஐ.ஆர் மூலமாக நடத்தப்படுவதால் அங்கு மாதாமாதம் உதவித்தொகை வருமென்று நண்பர்கள் கூறினார்கள். அங்கு சென்று சேர்ந்து கொள்கிறாயா என மேடம் கேட்டார்கள். யாம் சரியென்றோம். அங்கிருந்த கௌரி சந்திரகாசன் மேடத்தைச் சென்று சந்தித்தோம். மேடத்திற்கு நன்கு அறிமுகமானவராக இருந்தார். எம்மை அன்போடு வரவேற்றுப் பேசினார். நார் புரதங்கள் குறித்து உயிரி தொழில் நுட்பவியலில் ஆராய்ச்சிகள் செய்தார்கள். சில நாட்கள் இந்த ஆய்வுக் கூடத்தில் இருந்தோம். மாணவர்களின் பெயர்கள் நினைவில்லை. அவர்கள் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும்போது யாம் வேடிக்கை பார்த்து உட்கார்ந்திருப்போம்.

கௌரி மேடத்தையும், ஆய்வுக் கூடத்தையும் பிடித்திருக்கிறதா என மேடம் கேட்டார்கள். யாம் ஆம் என்றதற்கு சிரித்துக் கொண்டார்கள். பின்பு மளமளவென ஒரு தாளில், சியாமளா மேடம் எம்மை கௌரி மேடத்திடம் அனுப்புவதற்கு சம்மதிப்பதாகவும், கௌரி மேடம் ஏற்றுக் கொள்வதற்கு சம்மதிப்பதாகவும் எழுதி, தட்டச்சு செய்து எடுத்து வருமாறு கொடுத்தார்கள். யாம் தட்டச்சுக்கு சென்றோம். அடுத்த நாள் மேடத்திற்கு என்ன தோன்றியதோ கொஞ்ச நாள் இருந்து பாரேன், சரியாகிவிடும் என்றார்கள். அங்கும் உடனே உதவித்தொகை கிடைக்குமா என்பதும் உறுதியாகத் தெரியாததால், மேடத்திடமே தொடர்ந்தோம்.

எமது ஆய்வுத் தலைப்பை பதிவு செய்யும் விண்ணப்பம் வாங்கி, சென்னை பல்கலைக்கு அனுப்பும் முயற்சியில் முழுமனதோடு இறங்கினோம். எமது ஆய்வு தொடர்பான ஆய்வுக் சுருக்கங்கள் வேண்டி எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கு சிலமுறை நண்பர்களோடு சென்று வந்தோம். மெட்லைன் வசதி இருந்ததால் குறிப்பிட்ட வருட இடைவெளிக்குள் என்ன மாதிரியான ஆராய்ச்சிகள் நமது தலைப்பு தொடர்பாக வெளியாகியிருக்கின்றன என்பதை கட்டணம் பெற்றுக் கொண்டு கொடுப்பார்கள். எமது ஆய்வு குறித்து தரமணிக்கும் சிலமுறை சென்று வந்தோம்.

வேல்முருகன் அவருக்குத் தெரிந்த செய்யாறு பகுதியைச் சேர்ந்த ஒரு நண்பரிடம், யாம் தங்குவதற்கு ஒரு அறை தேவைப்படுவதாகச் சொல்லியிருக்கிறார். அந்த நண்பரோ அவருக்குத் தெரிந்த நண்பர் ஒருவரிடம் சொல்லியிருக்கிறார். அந்த நண்பருக்குத் தெரிந்த ஒருவர் மைலாப்பூரில் ஒரு அறையில் தங்கியிருப்பதாகவும், எம்மையும் அவரோடு சேர்த்துக் கொள்ள சம்மதிப்பதாகவும் சொன்னார்கள். எமக்கு அளவில்லா ஆனந்தம். எம்மை அந்த நண்பர் மைலாப்பூர் கூட்டிச் சென்றார்.

திருவள்ளுவர் சிலை பேருந்து நிறுத்தத்தில் இறங்கி சிறிது தூரம் நடந்து சென்றோம். எமது வாழ்வின் மிக முக்கியமான ஒருவரை சந்திக்கப் போகிறோம் எனத் தெரிந்திருக்கவில்லை. தாமரா எக்ஸ்போட்ஸ் நிறுவனத்தில் பணிபுரிந்த கதிர்வேல் சார் நட்பாகப் பேசினார். அவர் தங்கியிருக்கும் இடம் அருகாமையில் இருப்பதாகவும், நாளைக்கே வந்து தங்கிக் கொள்ளலாமென்றும் சொன்னார். எம்மால் தற்போது அறைவாடகை கொடுக்க இயலாதென்றோம். பரவாயில்லை என்று சொன்னதோடு, அவர் கைநிறைய சம்பாதிப்பதாகவும் ஒன்றும் நினைக்க வேண்டாமென்றும் அன்போடு கூறினார். மேலும் யாம் ஆராய்ச்சி மாணவர் என மகிழ்ச்சியும் அடைந்தார்.

வண்ணாரப்பேட்டை நண்பர்களிடம் விடைபெற்று, மைலாப்பூர் பி.என்.கே தெருவில் இருந்த அறைக்கு வந்து விட்டோம். அறை சிறியதாகவே இருந்தது. தங்குவதற்கு ஒரு இடம் கிடைத்ததே என மகிழ்ச்சி மிகுந்திருந்தது. நாங்கள் இருந்த அறை முதல்தளத்தில் இருந்தது. அருகே இரண்டு சிறிய வீடுகள் இருந்தன. கீழ் தளத்தில் வீட்டுக்காரர்கள் இருந்தார்கள். காளியம்மாள் அம்மா மிகவும் அன்பானவராக இருந்தார்கள். மகள் திருமணமாகி இங்கேயே இருந்தார். அவரது பெண் புவனேஸ்வரி சிறு பெண்ணாக இருந்தார். ஐந்தாவது படித்துக் கொண்டிருந்திருந்தார் என நினைக்கிறோம்.

எங்கள் அறைக்கு அருகே செய்யாறு பக்கமிருந்து ரவி இருந்தார். புதிதாக மணமாகியிருந்தது. கதிர்வேல் சாரும் வந்தவாசி பக்கம் ஒரு கிராமம் என்பதால் இருவரும் ஜாலியாக பேசிக் கொள்வார்கள். காளியம்மா அம்மையார் குடும்பமும் காஞ்சிபுரம் பக்கமிருந்து வந்து சென்னையில் குடியேறினார்கள் என்றே தெரிகிறது. அவரது மகனும் இந்த பேச்சு சுவாரஸ்யத்தில் கலந்து கொள்வார். இதே பகுதியைச் சேர்ந்த குமார் என்பவரும் இனனொரு நண்பரும் ரவியோடு சேர்ந்து கொள்வார்கள்.

குமார் கேபிள் தொழில் செய்தார். எம்மோடு மிகவும் மரியாதையாகப் பேசுவார். புத்தகங்கள் படிப்பதில் ஆர்வமாக இருப்பார். பேச்சு இராமதாஸ், திருமாவளவன் என்றெல்லாம் திரும்பும். யாம் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருப்போம். அவர்கள் பேசுவதிலிருந்து கதிர்வேல் சார் ஆதிதிராவிடரென்றும், மற்றவர்கள் வன்னியர்கள் என்றும் யாம் நினைத்துக் கொண்டோம். மரியாதைக் குறைவாக ஒருவருக்கொருவர் பேச மாட்டார்கள். எப்போதாவதுதான் இந்த மாதிரி பேச்சு வரும். மற்றபடி அவரவர் வேலைகளில் கவனமாக இருப்பார்கள். இன்னொரு வீட்டில் நெல்லைக்கார ரவி இருந்தார். துணி வியாபாரம் செய்தார் என நினைக்கிறோம். அவரது குட்டிப்பெண் திவ்யா எல்லோருடனும் நன்றாகப் பேசுவார்.

மைலாப்பூர் வந்தது எமக்குப் பல விதங்களிலும் அனுகூலமாக இருந்தது. கதிர்வேல் சார் எம்மை நன்றாகக் கவனித்துக் கொண்டார். நன்றாகப் படிக்குமாறும், எது வேண்டுமானாலும் அவரிடம் கேட்குமாறும் சொல்லியிருந்தார். காலையில் எமக்கு முன்பாகவே ஸ்கூட்டியில் அலுவலகம் சென்றுவிடுவார். இரவு சாப்பிட்டுவிட்டு வருவார். இரவு யாம் உணவருந்தினோமா என்பதையும் தவறாமல் விசாரிப்பார். யாம் உறவினரோ, உள்ளூர்க்காரரோ, உடன் படித்தவரோ இல்லை. இருப்பினும் எம்மீது பேரன்பு காட்டினாரென்றால் என்னவென்பது. யாம் கொடுத்து வைத்திருக்கிறோம் என்றே சொல்ல வேண்டும்.

எமக்கு வெளி உணவு வயிற்றுக்கு ஒத்துக் கொள்ளவில்லை என ஒருமுறை பேசிக்கொண்டிருந்தோம். நாம் சமைத்துச் சாப்பிடுவோம் எனச் சொல்லி அடுத்த நாளே மண்ணெண்ணெய் அடுப்பு வாங்கி வந்தார். மழைக் காலமென்பதால் ஒரு குடையும் எமக்குக் கொடுத்தார். ஆய்வுச் கூடத்திலிருந்து மாலையில் வந்து இரவுக்கு சமைக்க ஆரம்பித்தோம். இதற்கு முன்னரே சமையல் குறித்து சிறிதளவு அறிந்திருந்ததால் எதையோ சமைத்துச் சாப்பிட்டோம். நேரத்தில் வந்து விட்டால் கதிர்வேல் சார் சமைப்பார். அவரது சமையல் நன்றாக இருக்கும். அருகே காய்கறிகள் கூறுகட்டி வைத்திருப்பார்கள். மண்ணெண்ணெயும் வாங்கி வருவதுண்டு. எம்மை எல்லோரும் வேடிக்கை பார்க்கிறார்களோ என சற்று கூச்சமாக இருக்கும். ஒருமுறை வெண்டைக்காயை வெட்டி தண்ணியில் போட்டு அலசினோமென்றால் யாம் எந்த லட்சணத்தில் சமைத்திருப்போம் என்பதை அறியலாம். கையெல்லாம் ஒரே பிசுபிசுப்பு. புவனா வந்து பார்த்து விட்டு ஊருக்கே சொல்லியாயிற்று. அனைவரிடமும் கேலிப் பேச்சு வாங்கினோம்.

புவனா வீட்டில் எமக்கு பலமுறை சாப்பாடு போட்டிருக்கிறார்கள். புவனா வந்து கண்டிப்பாக வர வேண்டுமென கையைப் பிடித்து அழைத்துச் செல்வார். நல்ல நாட்களுக்கு அனைவரையும் அழைத்து சாப்பாடு போடுவார்கள். புவனா, புவனாவின் அம்மா, காளியம்மா அம்மையார் என அனைவரும் ஆளாளுக்கு எமது இலையில் எடுத்து வைப்பார்கள். யாம் ஆராய்ச்சி படிப்பு படிப்பதால் எம்மீது மிகுந்த நல்லெண்ணம் வைத்திருந்தார்கள். புவனா எங்கள் அறைக்கு வந்து படிப்பதுண்டு. சில நேரங்களில் யாம் சொல்லிக் கொடுத்திருக்கிறோம். சமயங்களில் படித்துக் கொண்டே காய்கறியும் வெட்டிக் கொடுப்பார். அரசு பள்ளிக்கூட சுற்றுச் சுவரோடு சேர்ந்தே வீடு இருந்ததால் பகல் நேரங்களில் இருக்கும்போது மாணவர்களின் சத்தத்தை கேட்கலாம். தீபாவளி சமயத்தில் எங்களது அறையருகே இருந்த வீட்டுக்காரர்கள் ஏராளமான வெடிகள் போட்டார்கள். ஒரு பெண் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். அழகான, அமைதியான பெண்ணாக இருப்பார். இன்னொரு வீட்டில் பால் மாடு வைத்திருந்தார்கள்.

வெள்ளிக் கிழமைகளில் மயிலை கபாலீஸ்வரர் கோவிலுக்குச் சென்று வருவதை வழக்கமாக்கிக் கொண்டோம். கற்பகாம்பாளை வணங்கிவிட்டு கபாலீஸ்வரரைத் தரிசிப்போம். நல்ல கூட்டமாகவே இருக்கும். நவக்கிரகம் அருகிலிருக்கும் சரஸ்வதியம்மனுக்கு நெய் விளக்கேற்றி வழிபடுவோம். கோவிலைச் சுற்றி வந்து முருகனை வணங்கி கொடிமரம் அருகே விழுந்து கும்பிட்டு எதிரேயிருக்கும் கல் மண்டபத்தின் படிக்கட்டில் சாய்ந்து உட்கார்ந்து கொள்வோம். ஜனங்களை வேடிக்கை பார்த்தபடியே வெகு நேரம் உட்கார்ந்திருப்போம். எமக்கு மன அமைதி கிடைத்ததாக உணர்ந்ததால், முடிந்தவரை வெள்ளிக் கிழமைகளில் தவறாது செல்ல ஆரம்பித்தோம். இரவு அருகிலிருக்கும் கடைகளில் சாப்பிட்டு வருவோம்.

தொடர் வண்டி முயற்சியையும் விடவில்லை. மறுமருத்துவப் பரிசோதனைக்கு பெரம்பூர் மருத்துவமனையிலிருந்து வரச் சொல்லி கடிதம் வந்தது. முதல்நாள் மதியம் சென்று அலுவலகத்தில் அதற்குரிய பணம் செலுத்தி வந்தோம். மறுநாள் மகிழ்ச்சியான மனநிலையிலேயே சென்றோம். எம்மைப்போல் மேலும் இரண்டு பேர் மறுசோதனைக்கு வந்திருந்தார்கள். அவர்களுக்கு காசநோய் பிரச்சினை என்று சொன்னதாக ஞாபகம்.

பலவித சோதனைகள். எக்ஸ்ரே, கண்பரிசோதனை என்று நீண்டது. மதியத்திற்குமேல் மறுமருத்துவ சோதனைக்கான தலைமை மருத்துவரைப் பார்த்தோம். அன்புடன் பேசினார். பல கேள்விகளையும் கேட்டார். வாசித்துக் காட்டச் சொன்னார். எமக்கு சிறு அளவில் திக்குவாய் பிரச்சினை இருக்கிறதென்றும் என்ன செய்யலாமென்று யாமே சொல்லுமாறும் கேட்டார். தொடர்வண்டியில் ஆயிரக்கணக்கான பயணிகள் பயணிப்பார்களே, அவர்களது பாதுகாப்பையும் பார்க்க வேண்டுமல்லவா என்றார். எமது ஆராய்ச்சிப் படிப்பை தொடருமாறு ஆலோசனை கூறி, விரைவில் நல்லதொரு வேலை கிடைக்குமென்றும் வாழ்த்தினார். எம்மால் பயணிகளுக்கு எதுவும் ஆகிவிடக் கூடாது என்ற எண்ணமே எமக்கு மேலோங்கியது. மருத்துவ அறிக்கையை யாம் முழுமையாக ஏற்றுக் கொண்டோம்.

தொடர் வண்டி வேலை இத்துடன் முடிந்தது என யாம் நினைத்தாலும் ஐயா விடுவதாக இல்லை. தென்னக தொடர்வண்டி தலைமை அலுவலகத்திற்கு எம்மை அழைத்துச் சென்று அங்குள்ள சிலரிடம் பேசினார். பின் மின்சார வண்டிகள் நிற்கும் இடமருகேயிருந்த பலமாடி கட்டிடத்திற்குள் சென்று சிலரைப் பார்த்தோம். மறுமருத்துவப் பரிசோதனையிலும் தேறாவிட்டால், நிலைய உதவி அதிகாரி பணியிடத்திற்கு மாற்றாக எழுத்தர் போன்ற பணியிடத்திற்குச் சேர்த்துக் கொள்வர்கள் என்பதை அறிந்து, அதற்கான வேலைகளில் இறங்கினோம்.

எமது மருத்துவ சோதனைகளை விளக்கியும் எமது கல்வித் தகுதியைக் குறிப்பிட்டும், தென்னக பொது மேலாளரை சந்திக்கச் சென்றோம். அவரைப் பார்க்க இயலவில்லை. அவருக்கு அடுத்த நிலையில் இருப்பவரை சந்தித்து முறையீடு செய்தோம். அவர் இன்னொருவரிடம் அனுப்பினார். இப்படி அங்குமிங்கும் சுற்றி இறுதியாக பார்த்த அலுவலரிடம் எழுத்தர் பணிக்கு ஆவண செய்கிறோம் என்ற உறுதிமொழியோடு வந்தோம்.

பின்னரும் யாம் பலமுறை சென்று பார்த்தோம். இவ்வாறு செல்லும் போதெல்லாம் அந்த அலுவலகத்தின் வட்ட மேற்கூரையையே வியப்புடன் பார்த்து நிற்போம். ஒரு அலுவலகத்தில் இத்தனை பேர் வேலை பார்ப்பார்களா எனவும் நினைத்துக் கொள்வோம். அங்கே நின்றுகொண்டு அரசு தலைமை மருத்துவமனையையும் சாலையில் செல்லும் வாகனங்களையும் வேடிக்கை பார்த்து நிற்போம். நேராக அலுவலகத்தின் குறிப்பிட்ட பிரிவிற்கு சென்று ஒரு பெண்

அலுவலரைப் பார்ப்போம். ஆய்வுக் கூடத்திலிருந்து மதியம் கிளம்பி மாலை வேலைகளில்தான் அங்கு செல்வோம். அந்த அலுவலர் மிகவும் அன்புடன் எம்மிடம் பேசுவார். அவரால் இயன்ற உதவியை எமக்கு அளிப்பதாகச் சொல்வார். எமது கோப்புகள் வந்து விட்டனவா என்பதை அடுத்த அலுவல் பிரிவுகளுக்குச் சென்றும் கேட்டு வருவார். ஒன்றும் கவலையில்லாமல் போய் வருமாறும், கோப்புகள் வந்தவுடன் தாமதிக்காமல் வேலைக்கான ஆணை வீட்டிற்கு வருமென்றும் கூறுவார். அவர் தாம்பரத்திலிருந்து வருவதாக சொல்லி எமக்கு நினைவுள்ளது. அவருக்கு யாம் மிகுந்த நன்றி சொல்ல வேண்டும்.

மீண்டும் எமக்கு நம்பிக்கை அதிகரிக்க ஆரம்பித்தது. எழுத்தர் பணியாவது கிடைக்கட்டும், பின்னர் வேறு வேலைக்கு முயற்சிக்கலாம் என்ற எண்ணத்தில் இருந்தோம். மைலாப்பூர் முகவரிக்கு வேலைக்கான ஆணையும் வந்து சேர்ந்தது. அதில் எம்மை எழுத்தர் பணிக்கு தேர்ந்தெடுத்திருப்பதாகவும், தட்டச்சு சான்றிதழோடு உடனே பணியில் சேருமாறும் குறிப்பிட்டிருந்தார்கள்.

எம்மால் மகிழ்ச்சியாக இருக்க இயலவில்லை. அருப்புக்கோட்டையில் தட்டச்சு பழகியிருந்தாலும் அதற்கான தேர்வில் யாம் தேர்ச்சியடையவில்லை. மறுபடியும் அலுவலகம் சென்று எமக்கு தட்டச்சு தெரியுமென்றும் சான்றிதழ் இல்லை என்றும் தெரிவித்தோம். இவ்வளவுதான் உதவி செய்ய முடியும், இதற்கு மேல் என்ன செய்ய எனக் கேட்டார்கள். மறுபடியும் தலைமை பொதுமேலாளருக்கு ஒரு கடிதம் எழுதினோம். தட்டச்சு சான்றிதழ் கொடுக்கும்வரை கால நீட்டிப்பு வேண்டுமென்று கேட்டிருந்தோம். அதற்கும் பெரிய மனசு பண்ணி மூன்று மாதங்களுக்குள் தட்டச்சு சான்றோடு பணியில் சேர்ந்து கொள்ளலாம் என ஆணை வழங்கினார்கள். ஏற்கனவே ஓரளவிற்கு தட்டச்சு தெரியுமென்பதால் எப்படியும் தட்டச்சு சான்றிதழோடு பணியில் சேர்ந்து விடலாம் என நினைத்துக் கொண்டோம். வேலை உறுதியாகக் கிடைக்குமென்ற மகிழ்ச்சியும் இருந்தது,

யாம் தங்கியிருந்த இடத்திற்கு சற்று தள்ளி முக்கியச் சாலையொன்றில் இருந்த யமுனா தட்டச்சு மையத்தில் தட்டச்சு பழக ஆரம்பித்தோம். காலையில் எட்டு மணிக்கு தட்டச்சு முடித்து, ஆய்வுக்கூடம் சென்று, மாலையில் திரும்பி. சமைத்து சாப்பிட்டு, நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

சம்பத் சாரிடமிருந்து அவ்வப்போது கடிதங்கள் வருவதும் யாம் பதில் அனுப்புவதுமாக இருந்தோம். சுருக்கமாகவும், அழகான கையெழுத்திலும் சார்

எழுதியிருப்பார். எமது அக்கா வீட்டார் ஓட்டு வீடு கட்ட ஆரம்பித்திருந்தார்கள். சுவர் கட்டிக் கொண்டிருப்பதாக அப்பா கடிதங்கள் எழுதியிருந்தார்.

ஒருமுறை ரவியின் தொடர்வண்டி காவல் துறை பணிக்கான உடற்தகுதி தேர்வு பெரம்பூர் மைதானத்தில் நடந்தது. யாமும் வேடிக்கை பார்த்து ரசித்தோம். இருவரும் மெரினா கடற்கரைக்குச் சென்றது நல்ல அனுபவம். எம்.ஜி.யார் திரைப்பட நகரையும் சுற்றிப் பார்த்தோம். ரவி தூத்துக்குடியிலிருந்த தமிழ்நாடு மீன் வளக் கல்லூரியில் திட்டப் பணியாளராக இருந்தார். முன்னதாக ஆதித்தனார் கல்லூரியில் நடைபெற்ற வேலை வாய்ப்பு பயிற்சி வகுப்பிலும் கலந்து கொண்டார். விடுதியிலேயே தங்கிப் படித்தார்.

ரவியின் மைத்துனரான அசோக்குமார் வொய்.எம்.சி.யே.வில் உடற்கல்வியியல் படித்து வந்தார். இருமுறை அவரைக் காணச் சென்றிருக்கிறோம். அடர்ந்த மரங்களோடும், பல்வேறுவிதமான விளையாட்டு அரங்குகளோடும் வொய்.எம்.சி.யே. மிக அழகானதாக இருக்கும். ரவியின் ஊர்க்காரரான விஜயலட்சுமி தமிழ்நாடு தேர்வாணைய அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்தார். எமது தொகுதி இரண்டு மற்றும் நான்கு தேர்வு முடிவுகள் குறித்தும், அடுத்து வரக்கூடிய தேர்வாணைய அறிவிப்புகள் தொடர்பாகவும் அவரை சந்தித்துப் பேசியிருக்கிறோம்.

ஒருமுறை யாம் அடையாறிலிருந்த மத்திய கைலாஷ் சென்றிருந்தோம். இக்கோயிலைப் பற்றி செய்தித்தாளில் படித்திருந்தோம். அழகான சிறிய கோவில். பாரதியாரை பதின்மூன்றாவது ஆழ்வாராகப் பாவித்து, அவருக்கும் ஒரு சிலை வைத்திருந்தார்கள்.

சென்னையில் இருந்தபோது ஊருக்கு அதிகம் வரவிவ்லை. பேருந்துகளில் முன்பதிவு செய்யாமல் இடம் பிடிக்க சிலமுறை மிகவும் அவதிப்பட்டோம். பின்னர் வந்த காலங்களில் மத்திய பேருந்து நிலைய மாடியில் இயங்கிய முன்பதிவு அலுவலகத்தில் சிரமம் பார்க்காமல் நீண்ட வரிசையில் நின்று முன்பதிவு சீட்டு வாங்கிவிடுவோம்.

ஒருமுறை தொடர்வண்டியில் செல்லலாம் என நினைத்து தெரியாத்தனமாக வைகை விரைவு வண்டிக்கு முன்பதிவு செய்யாத பயணமாகக் கிளம்பினோம். அன்று உண்மையிலேயே நொந்துவிட்டோம். எக்மோரிலிருந்து மதுரை வரையிலும்

தொங்கிக் கொண்டேவா வருவது. மூச்சுக்கூட விடமுடியாத அளவிற்கு அப்படியொரு நெரிசல்.

எக்மோரிலிருந்தே அன்று ஆம்னி பேருந்துகள் இயங்கின. இங்கும் கையைப்பிடித்து இழுக்காத குறையாகக் கூப்பிடுவார்கள். சென்னையின் பரிதாபத்திற்குரிய மக்களில் பலபேர் குழந்தை குட்டிகளோடு இப்பகுதிகளில் படுத்திருப்பதைப் பார்த்திருக்கிறோம். வானொலி கேட்டுக்கொண்டும் பேசி சிரித்துக் கொண்டும் பெற்றோர்கள் படுத்திருக்க பிள்ளைகள் அங்குமிங்கும் ஓடியாடித் திரிவார்கள். சில ஆணும் பெண்ணும் முழுக்க போர்த்திக் கொண்டு காதல் வாழ்க்கை வாழ்வதை சாலையில் செல்பவர்கள் வேடிக்கை பார்த்துச் சிரிப்பதையும் கவனித்திருக்கிறோம்.

டிசம்பர் மாதத்தில் ஒரு நாள் மேடத்தின் அறையில் மாணவர்கள் அனைவரும் இருந்தோம். சி.எஸ்.ஐ.ஆர் தகுதி தேர்விற்கு விளம்பரம் வந்திருப்பதைப் பற்றி பேச்சு வந்தது. யாம் தேர்வாகியிருந்ததால் எம்மிடம் இது குறித்துக் கேட்டார்கள். தேர்வில் தகுதி பெறுவது எளிதென்றும், இப்போழுது எழுதினால் கூட யாம் தேர்வாகி விடுவோம் என்றும் சொன்னோம். இரண்டு முறையெல்லாம் தேர்வாக முடியாது என்று மாணவர்கள் சவால் விட்டார்கள். மேடமும் சற்று ஆச்சரியத்துடனே எம்மைப் பார்த்தார்கள். நீங்கள் சொன்னதற்காக வேண்டுமென்றால், இன்னொரு முறை எழுதி தேர்வாகிக் காட்டுகிறோம் என்றோம்.

யாம் ஏற்கனவே ஆராய்ச்சியாளராக இருந்தபடியால், விரிவுரையாளர் தகுதி மட்டும் என விண்ணப்பதில் குறிப்பிட்டோம். லயோலோ கல்லூரியில் தேர்வு நடந்தது. ஆராய்ச்சி மாணவர்கள் அத்தனை பேரும் தேர்வெழுதினோம். பின்னர் முடிவுகள் வந்தபோது யாம் மட்டுமே தேர்வாகியிருந்தோம்.

சென்னையையும் சினிமாவையும் பிரிக்க முடியுமா. ஆய்வுக் கூடம், கன்னிமாரா நூலகம் எனப் போய்க் கொண்டிருந்த யாம், சினிமா தியேட்டர்கள் பக்கமும் தலைகாட்ட ஆரம்பித்தோம். முதல் காட்சிக்கு வரிசையில் நின்று ஆறு ரூபாய் ஐம்பது பைசா சீட்டு எடுத்துக் கொள்வோம். குறைந்த சீட்டுகளே கொடுப்பார்கள். ஆறு ஐம்பதுக்கு சீட்டு கிடைக்கவில்லையெனில் யாம் திரும்பி விடுவோம். இப்படி முதன் முறையாக தேவி திரையரங்கில் ஒரு ஆங்கிலப் படம் பார்த்தது நன்றாக நினைவிருக்கிறது. ஹாரிசன் போர்டு நடித்தது. அற்புதமான படம். மனம் சற்று வருத்தமடைவது போல் தெரிந்தால் இப்படி படங்களுக்குச் சென்று

வருவதை வாடிக்கையாகக் கொண்டது ஆறுதலான விசயம்தான். தேவி வளாகம், சாந்தி, ஆல்பர்ட், வுட்லேண்ட், கெயிட்டி என்று திரையரங்குகள் நீட்டன. தேவி திரையரங்கின் முதல் வரிசையில் உட்கார்ந்து டைட்டானிக் படம் பார்த்தது சுகமான அனுபவம்.

ஒருமுறை மாலை சாந்தி திரையரங்கம் சுரங்கப் பாதையில் நடந்து வரும்போது, ஒரு பெண் எமது அருகே வந்து இருநூறு ரூபாய்தான் போகலாமா, அருகிலேயே அறை இருக்கு எனக் கேட்டு எம்மை திகைக்கச் செய்தார். சிலர் இப்படி நின்று கொண்டிருப்பதை யாம் ஏற்கனவே கவனித்திருந்தாலும், வருகிறாயா எனக் கூப்பிடுவார்கள் என நினைத்ததில்லை. யாம் ஒன்றுமே சொல்லாமல் அப்பெண்ணைக் கடந்து விட்டோம். மனதிற்குள் பயங்கரமான குறுகுறுப்பு. இப்படியும் பெண்கள் சென்னையில் இருக்கிறார்களா என்பது ஆச்சரியமாக இருந்தது.

புத்தாண்டு வாழ்த்துக்கள், பொங்கல் திருவிழா என நாட்கள் போய்க் கொண்டிருந்தன. ஜனவரி மாதம் எமது எட்டு மாத ஊக்கத் தொகைக்கு புதிதாக விண்ணப்பித்தோம். விரைவிலேயே மொத்தப் பணமும் கிடைக்குமென்று உறுதியளித்தார்கள்.

பிப்ரவரி மாதம் எமக்கு அனைத்து வகையிலும் மகிழ்ச்சியான மாதமாக அமைந்தது. எமது ஊக்கத்தொகை ஒரு மாதத்திற்கு மூன்றாயிரம் என மொத்தமாக வந்தது. யாம் அடைந்த நிம்மதிக்கு அளவேயில்லை. முதல் வேளையாக வீட்டிற்கு பணம் அனுப்பினோம். கடனை அடைத்து விட்டு அக்கா வீடு கட்டுவதற்கும் கொடுத்ததாக அப்பா கடிதம் அனுப்பினார். நண்பர்களிடம் வாங்கிய கடனையெல்லாம் தீர்த்தோம். பிப்ரவரி மாதத்தின் இரட்டிப்பு மகிழ்ச்சியாக, விரிவுரையாளர் எழுத்துத் தேர்விலும் யாம் வென்றுவிட்டோம். ஆய்வுக் கூடத்தில் இருந்தபோது, ஆசிரியர் தேர்வு வாரியத்தில் தேர்வு முடிவுகளை ஒட்டியிருப்பதாக நண்பர்கள் சொன்னார்கள். யாம் தேர்வு பெற்று விடுவோம் என்ற நம்பிக்கை இருந்தாலும் மனதில் படபடப்பாகத்தான் இருந்தது. தகவல் பலகையில் எமது எண் 260648 இருந்ததைப் பார்த்து யாம் எல்லையில்லாத மகிழ்ச்சியும் ஆனந்தமும் அடைந்தோம். அடைந்த சிரமங்கள் அத்தனைக்கும் பலன் கிடைத்தது.

அனைவருக்கும் நன்றிகள் சொன்னோம். அடுத்து நேர்முகத் தேர்வு. இதிலும் வெற்றி பெறுவோம் என்ற தன்னம்பிக்கை இருந்தது. எமமோடு ஆய்வு கூடத்தில்

இருந்த ஸ்ரீதரனும் வென்றிருந்தார். வீட்டினருக்கும் தகவல் சொல்லி அவர்கள் மனதையும் மகிழ்ச்சியாக்கினோம்.

ஊக்கத் தொகை இனி மாதாமாதம் வருமென்பதால் பல்கலை விடுதியில் சேரலாம் என விரும்பினோம். நண்பர்களோடு ஒன்றாக இருக்கலாமல்லவா. எங்கள் துறைக்கு மேலேயிருந்த புவியியல் துறைத் தலைவரே விடுதிக் காப்பாளராக இருந்தார். அவரைப் பார்த்து விடுதியில் சேர்வது குறித்துப் பேசினோம். தற்போது இடமில்லையென்றும், காலியிடம் வரும்போது தெரிவிப்பதாகவும் கூறினார். விடுதியில் உணவு இல்லாமல் அறைவாடகை மட்டும் கொடுத்து தங்கிக் கொள்ளலாம் என விஜய மோகன் தெரிவித்தார். அவரது அறையிலேயே தங்கிக் கொள்ளலாமென்றும் அவரது நண்பர்களும் சம்மதிக்கிறார்கள் என்றும் அன்புடன் சொன்னதால் யாமும் விடுதிக்குச் செல்ல ஆயத்தமானோம்.

விஜயமோகன் எம்மீது மிகுந்த அன்பும் நட்பும் கொண்டிருந்தார். சொந்த ஊர் மன்னார்குடிக்கு அருகில் ஒரு கிராமம் எனச் சொல்லியிருக்கிறார். இருவரும் ஒரே சமூகம் என்பது நாளடைவில் தெரிந்து, ஒருவருக்கொருவர் அன்பு பெருகியது. அவரது உடன் பிறந்தவர்கள் ஆசிரியப் பணியில் இருந்தார்கள். யாம் சிறு வயதில் வடபாதிமங்கலத்தில் இருந்ததையும், வீமன் சாமி பார்த்ததையும் சொன்னதால், எம்மை அவரது ஊர்க்காரர் என அன்போடு குறிப்பிடுவார். ஒரு முறையாவது வீட்டிற்கு யாம் வர வேண்டுமென அன்போடு சொல்வார்.

யாம் விடுதிக்குச் செல்கிறோம் என்பதையறிந்து அனைவரும் கொஞ்சம் வருத்தமடைந்தார்கள். புவனாதான் அதிகமாகவே வருந்தினார். அவரை தவறாமல் வந்து பார்த்துச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார். காளியம்மாள் அம்மையார் எங்களையெல்லாம் மறந்திடாதீங்க என அன்போடு கூறினார். மூன்றாவது மாடி கட்ட ஆரம்பித்திருந்தார்கள். இரண்டு ரவி வீட்டினருக்கும் நன்றி கூறினோம். செய்யாறு ரவி எம்மை சிலமுறை கையைப் பிடித்து அழைத்துச் சென்று சாப்பிட வைத்திருக்கிறார். பிரியமாகவும் இருப்பார். கதிர்வேல் சாரை பிரிவது சிரமமாக இருந்தது. யாம் மிகுந்த சிரமமான காலத்தில் இருந்தபோது எவ்வித பிரதிபலனும் பாராமல் உடன் பிறந்தவர் போல் உதவியவராயிற்றே. கபாலீஸ்வரர் உட்பட அனைவருக்கும் மிகுந்த நன்றி சொல்லிப் புறப்பட்டோம்.

உயிர் வேதியில் துறைக்கு அருகிலேயே விடுதி இருந்தது. மூன்று மாடிகள் கொண்ட கட்டிடத்தில் எங்கள் அறை இரண்டாவதில் இருந்தது. நண்பர்கள் எம்மை

அன்புடன் வரவேற்றார்கள். ஏற்கனவே மூன்று பேர் இருந்த அறையில் யாம் நான்காவதாகச் சேர்ந்து கொண்டோம்.

விஜயமோகன் அறையில் இருந்த பழனிக்குமார் எப்போதும் சிரித்த முகமாய் அன்புடன் பேசுபவராக இருப்பார். எம்.பில் படித்தார். இவரது அக்கா வீட்டிற்கு ஒரு முறை அனைவரும் சென்று உணவருந்தினோம். திருநாவுக்கரசு தரமணியில் முனைவர் பட்ட ஆய்வாளராக இருந்தார். சொந்த ஊர் கடலூர் பக்கம். நன்றாகப் பேசுவார். நண்பர்களோடு அடிக்கடி அரட்டையும் நடக்கும். பக்கத்து அறையில் இயற்பியலில் முனைவர் ஆய்வு செய்த குமரன் சார் இருந்தார். இவர் எங்களது அறை என்றும் அவரது நண்பர்களோடு அடுத்த அறையில் இருக்கிறாரென்றும் பேசினார்கள்.

சிவக்குமார், சிராஜ்தீன் மற்றும் சரவணன் பக்கத்து அறையில் இருந்தார்கள். சிவக்குமார் சார் எப்போதும் புன்னகையோடு இருப்பார். அனைவருக்கும் உதவிகள் செய்வார். எம்மீது தனி அன்பு வைத்திருந்தார். கிச்சு என்று எமது தோள்களை தட்டிக் கொடுப்பார். நேரத்திற்கு சாப்பிட்டோமா என்பதை அடிக்கடி ஞாபகப்படுத்துவார்.

சிராஜீதீன் சார் நிரஞ்சனா மேடத்திடம் ஆய்வு முடித்து பொது வாய்மொழித் தேர்விற்குக் காத்திருந்தார். கிருஷ்ணமூர்த்தி சாப்பிட்டாச்சா என்று அன்போடு கேட்பார். தொழுகை செய்து இவரது நெற்றியில் நிறம் சற்று மாறுபட்டிருக்கும். சரவணன் எம்மீது மிகுந்த அன்பு வைத்திருந்தார். பாரதி மேல் அதிக பற்றுடையவர். இனிது இனிது பாடலை அப்படியே அழுத்தம் திருத்தமாகச் சொல்லக் கேட்டு யாம் வியந்தோம்.

நண்பர்களுக்குள் அவ்வப்போது காரசாரமாக விவாதங்கள் வரும். இரவு உணவிற்குப்பின் சற்று நேரம் அனைவரும் கூடி அரட்டையடித்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்போம். ஆய்வு மாணவர்களென்பதால் தினமும் படிக்க வேண்டியதிருக்காதல்லவா. அரட்டைப் பேச்சும், சிரிப்பும், விளையாட்டும், கேலியும், கிண்டலுமான நாட்கள். யாம் அறைக்குள் நுழையும்போது, மின்விசிறியை அணைங்கப்பா எனக் கலாய்ப்பார்கள். யாம் கொசு போன்று இருப்பதாகவும், விசிறி ஓடினால் கொசு காற்றில் அடித்துச் செல்லப்படும் என்பதற்காக இந்த விளையாட்டு. யாமும் பதிலுக்குக் கலாய்ப்பதுண்டு.

கிண்டி வளாகம் முழுக்கவே மான்கள் சுற்றித் திரியும் என்றாலும், விடுதி அருகே அதிக எண்ணிக்கையில் காணலாம். மீதமாகும் உணவுக்கு வரும்போல. கூட்டமாக வரும். பெரிய அளவுள்ள மான்களை அருகில் பார்த்து மகிழலாம். மான்கள் குதித்து ஓடுவது, முட்டிக் கொண்டு நிற்பது, புல் நுனிகளை மேய்வது, ஒன்றையொன்று விரட்டித் திரிவது போன்றவை புதிதாக வளாகத்திற்கு வரும் ஒருவரை வியப்பிற்குள்ளாக்குபவை. அதிலும் இந்த மான்கள் கூட்டமாகக் கனைக்க ஆரம்பித்து விட்டால் வளாகம் தொலைந்தது.

மார்ச் ஐந்தாம் தேதி எமக்கு நேர்காணல் இருந்தது. விடுதியின் மாடியில் நெடுநேரம் படித்து சிறப்பாகத் தயாரானோம். மிகுந்த தன்னம்பிக்கையோடு எமது நேர்காணலை எதிர்கொண்டோம். யாமே முதலாவது மாணவராக அழைக்கப்பட்டோம். நேர்காணலில் நான்கு பேர் இருந்ததாக நினைவிருக்கிறது. ஒருவர் தாமதமாக வந்ததால் அவரும் வந்து சில கேள்விகள் கேட்கும்வரை நேர்காணல் நடந்து கொண்டிருந்தது.

யாம் எவ்விதப் பதட்டமும் இல்லாமல் அனைத்துக் கேள்விகளுக்கும் பதிலுரைத்தோம். கேள்விகளை தைரியமாக எதிர்கொண்டோம். எம்மை வகுப்பு நடத்தச் சொன்னார்கள். மாவுப் பொருட்கள் குறித்து கரும்பலகையில் எழுதி விளக்கினோம். யாம் ஒற்றைச் சர்க்கரை, கூட்டுச் சர்க்கரை என்று விரிவுரையாற்றிக் கொண்டிருந்தபோது போதும் என்றார்கள். எமது ஆராய்ச்சி குறித்துக் கேட்டார்கள். யாம் இரத்த சிவப்பணு பற்றி விளக்கினோம்.

ஒரு பேராசிரியர் ஈராக்கில் அமெரிக்கா போர் தொடுத்தது சரியா என வினவினார். யாம் சரிதான் என்றோம். உங்கள் வீட்டினுள் மற்றவர்களை அனுமதிப்பீர்களா எனக் கேட்டார். உலகுக்கு நன்மையெனில் சரியே என பதில் சொன்னோம். இருவரிடையேயும் விவாதம் போல் உரையாடல் நடந்து கொண்டிருந்தது.

இன்னொரு பேராசிரியர் நீங்கள் எங்கு வேண்டுமானாலும் வேலை பார்க்கத் தயாரா எனக் கேட்டார். எமக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அப்படியெனில் நமக்கு வேலை உறுதியாகிவிட்டதோ என நினைத்துக் கொண்டோம். தாமதமாக வந்த பேராசிரியரும் ஒன்றிரண்டு கேள்விகள் கேட்டு நேர்காணல் முடிந்தது என்றார்கள். யாம் அனைவருக்கும் நன்றி சொல்லி மன மகிழ்வோடு விடைபெற்றோம். எமக்கு அடுத்து ஸ்ரீனிவாச நாராயணன் சென்றார். சீனிவாசன் விலங்கியல் துறையில்

சி.எஸ்.ஐ.ஆர். ஆராய்ச்சி மாணவராக இருந்தார். எந்த மாதிரி கேள்விகள் கேட்கிறார்கள் என மற்ற நேர்முகத் தேர்வர்கள் எம்மிடம் ஆவலுடன் கேட்டார்கள்.

நேர்முகத் தேர்வு திருப்தியாகச் செய்திருப்பதாகவும், நிச்சயம் விரிவுரையாளர் பணி கிடைக்குமென்றும் அனைவரிடமும் தெரிவித்தோம். எதிர்பார்த்தது போலவே மார்ச் இறுதியில் யாம் கல்லூரி விரிவுரையாளராகத் தேர்வாகிவிட்டோம். மகிழ்ச்சியைச் சொல்லவும் வேண்டுமோ.. ஆசிரியர் தேர்வு வாரியத்தில் எமது பெயரைப் பார்த்து யாம் அடைந்த ஆனந்தத்திற்கு அளவில்லை. கீழே வந்த பின்பும் மறுபடியும் மேலே சென்று எமது எண்ணைப் பார்த்து வந்தோம். நண்பர்களிடம் சொல்லும்முன் நன்றாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமல்லவா.

எல்லோருக்கும் மகிழ்ச்சி. யாம் கல்லூரி விரிவுரையாளர் பணிக்கு நடந்த நேர்முகத் தேர்வில் வெற்றி பெற்றிருப்பதாக ஆசிரியர் தேர்வு வாரியத்திடமிருந்து கடிதம் வந்தது. நாகூர்கனி என்பவர் நீதி மன்றத்தில் தடை ஆணை பெற்றிருந்ததால், எந்த கல்லூரியில் பணி ஒதுக்கீடு என்பது மட்டும் தெரியாமல் இருந்தது. தடை ஆணை விரைவில் தீர்க்கப்பட்டு பணி நியமனம் அனுப்புவார்கள் என நண்பர்கள் கூறினார்கள். கல்லூரி விரிவுரையாளர் பணிக்கு யாம், ஸ்ரீதரன், கிளாரா, ஸ்ரீனிவாசன் என நான்கு பேருமே தேர்வாகியிருந்தோம்.

மேடத்துடைய மாணவர்கள் இருவர் தேர்வாகியிருந்ததில் அவர்களுக்கும் அளவிலா ஆனந்தம். ஆனந்தன் சார் இந்திய வேளாண் ஆராய்சி மையம் நடத்திய விஞ்ஞானி தேர்வில் வெற்றி பெற்று பணி நியமான ஆணையை எதிர் நோக்கிக் காத்திருந்தார். ஆனந்தனும் யாமும் நெருங்கிய நண்பர்களானோம். இருவரும் சேர்ந்தே மதிய உணவிற்குச் செல்வோம். ஆனந்தன் சார் எப்பவும் நல்ல மகிழ்ச்சியான மனநிலையில் இருப்பார். எம்மீது தோழமையும் அன்பும் வைத்திருந்தார். அண்ணா பல்கலை சிற்றுண்டு எங்களது துறையருகே இருந்தது. அங்கு சென்று சாப்பிடுவோம். சற்று தள்ளி பெரியதொரு சிற்றுண்டி சாலையும் அண்ணா பல்கலைக்கு இருந்தது. பின்னர் வந்த நாட்களில் அங்கும் மதிய உணவிற்குச் சென்றோம்.

இப்படி மதிய உணவு, தேநீர் அருந்தச் சென்று வரும் காலங்களில் ஒரு பெண் எம்மையே பார்ப்பதாக ஆனந்தன் சார் சொல்வதுண்டு. யாம் அப்படியெல்லாம் ஒன்று மில்லை என்போம். அழகிய பெண்ணாக இருப்பார். முகம் எப்போதும் புன்னகையால் நிரம்பியிருக்கும். தலையில் அழகிய வண்ணங்களில் பட்டைகள் அணிந்து வருவார்.

சிலமுறைதான் பாத்திருக்கிறோம். விளையாட்டுக்கு ஆனந்தன் சார் சொல்வதாக நினைத்துக் கொண்டோம்.

அண்ணா பல்கலை பாரத ஸ்டேட் வங்கிக் கிளையில் கணக்குத் துவங்கினோம். ஊக்கத்தொகை கிடைத்ததால் இரவு சோறு சாப்பிடுவதற்கு அடையாறுக்கோ, அல்லது தியாகராய நகருக்கோ செல்வோம். தினமும் இரவு சாப்பாட்டிற்கு பேருந்தில் சென்று வருவது மகிழ்ச்சியாகவே இருந்தது. தியாகராய நகருக்கு சாப்பிடப் போனால் மனிதர்களை வேடிக்கை பாத்துவிட்டு சாவகாசமாகவே விடுதிக்குத் திரும்புவோம். விடுதியில் பாயாசம் போன்ற இனிப்புகள் செய்தால் நண்பர்கள் எமக்கும் எடுத்து வருவார்கள். விடுதி ஆண்டு விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது, இசைக் குழுவிற்கு ஏற்ப ஆட்டமும் பாட்டமும் என மாணவர்கள் மகிழ்ச்சியில் திளைத்தார்கள்.

ஒருமுறை விடுதி நண்பர்களோடு மாமல்லபுரம் சென்று வந்தது மிகச் சிறந்த அனுபவம். அழகிய ஊர். அற்புதமான சிற்பங்கள். உயரமான கலங்கரை விளக்கு மேல் நின்று மகாபலிபுரத்தையும் கடல் அழகையும் ரசிப்பது கண்கொள்ளாக் காட்சி. கடற்கரைக் கோவில் காலமாற்றத்திற்குச் சரியான சாட்சி. இன்றும் எவ்வளவு கம்பீரமாக நிற்கிறது. நாங்கள் சென்ற அன்று சிறிய அளவில் படப்பிடிப்பு ஒன்று நிகழ்ந்து கொண்டிருந்தது. சற்று நேரம் வேடிக்கை பார்த்து நின்றோம்.

கடலில் குதியாட்டம் போட்டது அருமையான தருணம். மணலில் விளையாடி சிப்பிகள் சேகரித்து மகிழ்ந்தோம். யாம் கடலினுள் நிந்திச் செல்வதைப் பார்த்து நண்பர்களுக்கு ஆச்சரியம் மற்றும் பயம். போதும் போதும் வந்திருங்க என்று கத்தினார்கள். நண்பர்கள் அனைவரும் கைகளை பிடித்துக் கொண்டு ஆனந்தமாகக் குதியாட்டம் போட்டு அன்றைய பொழுதை அற்புதமாகக் கழித்தோம்.

வேலைதான் கிடைத்து விட்டதே என நினைத்து ஆய்வு தொடர்பாக அதிகமாக ஒன்றும் முயற்சி செய்யவில்லை. பணி நியமனத்திற்கான தடை மாதக்கணக்கில் நீடித்தது. விடுதி வாழ்க்கை மகிழ்ச்சியாகப் போய் கொண்டிருந்தது. உதவித்தொகை வந்தபின் ஆறு ஐம்பது சீட்டுக்குச் செல்வதில்லை. நாற்பது ரூபாய் சீட்டில் உட்கார்ந்து பார்த்த முதல் படம் ரட்சகன். படம் முடிந்து தேவி வளாகத்தின் படிக்கட்டில் இறங்கும்போது நாயகன், நாயகியை படிக்கட்டில் அலேக்காக தூக்கிச் செல்வதை நினைத்துக் கொண்டது அருமையான தருணம்.

எமது எண்ணங்களை மாற்றிய இரண்டு முக்கியமான படங்கள் டென் கமாண்ட்மெண்ட மற்றும் உமர் முக்தர். ஜுலை மாதத்தில் பார்த்ததாக நினைவு. இரண்டு படங்களும் எமது சிந்தனையோட்டத்தில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தின.

விடுதியில் படிப்பதற்கு செய்தித்தாள்களும், வார, மாத இதழ்களும் கிடைக்குமென்பதால் யாம் தவறாமல் இவற்றை படித்துவிடுவதுண்டு. தொன்னூற்றி எட்டாம் வருடம் மாநிலங்களவைக்கான பொதுத் தேர்தல் வந்தது. நீண்ட இழுபறிக்குப்பின் அடல் பிகாரி வாஜ்பாயி அவர்கள் இந்தியாவின் பிரதமரானார்.

இதற்கு முன்னதாக தேர்தல் பிரச்சாரத்தின்போது கோயம்புத்தூரில் குண்டு வெடித்தது. பொக்ரானில் இந்தியா அணுகுண்டு சோதனையை மேற்கொண்டது. குஜராத்தில் மழை வெள்ளம் வந்து அதிக சேதாரமாகியது. கைலாஷ் யாத்திரை சென்ற பக்தர்கள் பலபேர் நிலச் சரிவில் மாண்டார்கள். புகழ் பெற்ற நடிகை ஒருவர் போனதால்தான் நிலச்சரிவு வந்ததாக பத்திரிக்கைகளில் படித்தது நினைவிருக்கிறது.

சம்பத் சார், இரண்டாவது பையன் சரவணனுடைய பொறியியல் கலந்தாய்விற்கு சென்னைக்கு வருவதாக கடிதமெழுதி எங்கள் அறைக்கு வந்து சந்தித்தார். தஞ்சாவூரில் இடம் கிடைத்தது. சாரோடு அருகிலிருந்த குழந்தைகள் பூங்காவிற்குச் சென்று வந்தது நல்ல அனுபவம்.

விடுதிக்கு வந்தபின் ஒருமுறை புவனாவை அழைத்துவந்து சிறுவர் பூங்கா, காந்தி மண்டபம் சுற்றிக் காண்பித்ததில் அவருக்கும் நிரம்ப மகிழ்ச்சி.

கிருஷ்ண ஜெயந்தி கொண்டாட்டங்கள் களைகட்டின. இந்த சமயத்தில் எமது எண்ணங்கள் மாறத் தொடங்கியது. தொடர்ச்சியான எண்ணக் குவியல்கள் மனதில் வந்துகொண்டேயிருந்தன. மனதில் தோன்றிய எண்ணங்கள் இரவு முழுமையும் நீடித்தன. ஆய்வுக் கூடத்திற்குச் செல்லாமல் விடுதியிலேயே இருந்தோம். கிருஷ்ணமூர்த்திக்கு என்னாச்சு என நண்பர்கள் கேட்க ஆரம்பித்தார்கள். இரவில் உறக்கம் வருவது நின்று போய் சிந்தனைகளிலேயே இருந்தோம்.

விநாயகர் சதுர்த்தி வந்தது. விஜயமோகன் எமக்கு சுண்டலும், கொலுக்கட்டையும் கொண்டு வந்து கொடுத்தது நன்றாக நினைவிலுள்ளது.

எண்ணங்கள் தொடர்ந்து கொண்டிருந்தன. யாம் யார் என்பது பற்றி, உலகம் என்பது என்ன, உயிர்கள் ஏன் இருக்கின்றன, இப்படி உலகிலுள்ள அனைத்தும்

எண்ணங்களாவே நீடித்தன. மொழி, பூமி, இறைவன், உடல், எண்கள், உயிர், பிறப்பு, இறப்பு, சடங்குகள், உள்ளம், எழுத்துகள், இப்படி ஒவ்வொன்றைப் பற்றியும் மூளை சிந்தனைகளில் நிறைந்திருந்தது, எமது பிறப்பின் நோக்கம் என்ன, அதை அடைவதற்கான வழிமுறைகள், எதிர்கால உலகம் எப்படியிருக்க வேண்டும், எப்படி இருந்தால் அனைவருக்கும் மகிழ்ச்சியாக இருக்கும் என்பன போன்ற சிந்தனைகள் மனம் முழுதும் நிறைந்திருந்தன.

உலகம் அழியப் போகிறதென்றும் உலகினைக் காப்பதற்கே யாம் பிறந்திருக் கிறோமென்றும் எண்ணங்கள் உண்டாகின.

இச்சமயத்தில் சம்பத் சாரின் அருகாமை வீட்டைச் சேர்ந்தவர்கள் பொறியியல் கவந்தாய்வுக்கு சென்னைக்கு வருவதாகவும், அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யுமாறும் சார் எமக்கு கடிதம் அனுப்பியிருந்தார். தூத்துக்குடியிலிருந்து இளையபெருமாள் அவர்கள் எம்மை விடுதியில் சந்தித்தார். அவரது பெண் கற்பகவள்ளியின் கலந்தாய்வுக்கு யாமே உடன் சென்றோம். கற்பகவள்ளி மேல்நிலை முடித்திருந்தாலும், மிகுந்த மன முதிர்ச்சியோடு இருப்பதாக யாம் உணர்ந்தோம். திரையில் எந்தக் கல்லூரியில் இடம் இருக்கிறதென்று பார்த்துக் கொண்டே இருந்தோம். அரசு ஒதுக்கீட்டில் நல்ல கல்லூரி கிடைக்க வில்லையென்றால் பொறியியல் சேர வேண்டாமென்பதில் அவர் தீர்மானமாக இருந்தார். நாங்கள் உள்ளே சென்றபோது இடங்கள் பெரும்பாலும் நிரம்பி விட்டன. சிறிது தேடலுக்குப்பின் பொறியியல் வேண்டாமென்று தீர்மானமாக முடிவெடுத்து விட்டார். எமக்கு சிறிது வருத்தம்தான். அவரது அப்பா, அம்மாவை சமாதானம் செய்தது எமக்கு வியப்பாக இருந்தது. மளிகைக்கடை வைத்திருப்பதாகவும் ஓரளவிற்கு மேல் செலவு செய்ய இயலாதெனவும் சாமாதானம் அடைந்தார்கள்.

சென்னைக்கு புதிதென்பதால் அவர்களை பேருந்து ஏற்றிவிடும்வரை உடன் இருக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். காந்தி மண்டபம், சிறுவர் பூங்கா பார்த்து விட்டு மெரினா கடற்கரைக்குச் சென்றோம். அன்று பிள்ளையார் ஊர்வலம் இருந்ததால் கடுமையான போக்குவரத்து நெரிசல். கடற்கரையில் அமர்ந்து பெரிய பெரிய பிள்ளையார் சிலைகளை தூக்கி கடலில் போடுவதை வேடிக்கை பார்த்து வியந்தோம். நெடுநேரம் மணலில் அமர்ந்து ஏதேதோ பேசியது பசுமையான அனுபவம். பூக்கடை சரவணபவனில் உணவருந்தி அவர்களை தூத்துக்குடி

பேருந்தில் வழியனுப்பிவிட்டு யாம் விடுதி வந்து சேர்ந்தோம். எண்ணச் சூறாவளியால் கடுமையான மன நெருக்கடியில் இருந்த எமக்கு கற்பகவள்ளி குடும்பத்தாரோடு செலவிட்ட இந்த நாள் மிகுந்த ஆறுதலாக இருந்தது. அவரது அப்பாவும் அம்மாவும் மிகுந்த அன்புடையவர்களாக இருந்தார்கள். அப்பெண்ணின் பேச்சும் நடத்தையும் மிகவும் சிறப்பு. நல்ல புத்திசாலியும் கூட.

யாம் யார் என்ற எண்ணங்கள் தொடர்ந்தன. திருவண்ணாமலை பற்றியும், அதன் தீபத் திருநாள் பற்றியும் சரவணன் பேசியதைக் கேட்டோம். வழியில் இருக்கும் செஞ்சிக்கோட்டை பற்றியும் அதன் சிறப்பு பற்றியும் அவ்வப்போது நண்பர்கள் பேசுவார்கள். திருவண்ணாமலை பற்றி கேட்டததிலிருந்து அங்கு செல்ல வேண்டுமென்ற உந்துதல் தீவிரமாக ஏற்பட்டது.

பூக்கடை அருகேயிருந்த பூம்புகார் கைவினைப் பொருட்கள் கண்காட்சியில் இரண்டு ருத்ராட்சம் வாங்கிக் கொண்டோம். ஆறுமுகங்கள் கொண்ட ருத்ராட்சம் வாங்கினால் நல்லது எனச் சொன்னதால் அதையே வாங்கினோம்.

அன்று ஆகஸ்ட் முப்பத்தி ஒன்று. மதியத்திற்குமேல் இன்றைக்கே திருவண்ணாமலைக்குச் செல்லலாம் என்ற எண்ணம் வந்தது. மாலை நண்பர்களிடம் கூறிவிட்டு கிளம்பி விட்டோம். மறுநாள் சிராஜீதீன் சாரின் முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வு இருக்கிறதென்றும், அதில் பங்கு பெற வேண்டுமென்றும் நண்பர்கள் கூறியதற்கு, யாம் காலையில் சீக்கிரம் வந்து விடுவோம் என்று பதில் சொன்னோம். குமரன் சார் எம்மை சிறிது நேரம் இருக்கும்படி சொல்லிவிட்டு, கீழே சென்று ஒரு டம்ளரில் பால் எடுத்து வந்து கொடுத்தார். யாம் பாலை அருந்தி அவருக்கு நன்றி சொல்லிவிட்டுப் புறப்பட்டோம்.

எமது எண்ணங்கள் முற்றாக மாறியிருந்தன. யாம் எம்மை கடவுளாகவே நினைத்துக் கொள்ளத் துவங்கியிருந்தோம். நேராக மெரினா கடற்கரைக்குச் சென்று கடலுள் இறங்கி நீரை தலையில் தெளித்துக் கொண்டோம். உலகின் பாவங்கள் அனைத்தும் தொலையட்டும் என வேண்டிக் கொண்டோம். எம்.ஜி.ஆர் நினைவிடம் சென்று அவருக்கு நன்றி சொன்னோம். மழை லேசாகத் தூற ஆரம்பித்திருந்தது. அண்ணா சதுக்கம் சென்று அணையாதீபத்தை சுற்றிவரும்போது மேடையில் சற்று ஈரமாக இருந்ததால் அவரவர் பெயர்களை எழுதிவிட்டுச் சென்றிருந்ததைக் கவனித்தோம். ஆங்கிலம் மற்றும் இந்தியிலேயே

அனைத்துப் பெயர்களும் இருந்தன. யாம் தமிழ் என்று பெரியதாக எழுதிவிட்டுக் கிளம்பினோம்.

தமிழ் மீது எமக்கு ஓரளவிற்குப் பற்று இருந்ததேயொழிய மிகத் தீவிரமான விருப்பு இருந்ததாக நினைவில்லை. இந்த ஒரு வார காலத்திற்குள்ளாக தமிழ், தமிழர், தமிழ்நாடு என்று நினைவுகள் பீறிட்டுக் கிளம்பியது எமக்கே ஆச்சரியமாகத் தோன்றியது. தமிழால் மட்டுமே இப்புவியில் அமைதியையும், ஆனந்தத்தையும், அன்பையும் தோற்றுவிக்க இயலும் எனும் நம்பிக்கை அதிகரித்த வண்ணம் இருந்தது. தமிழே இனி உலகை ஆளப்போகிறது என்பதைத் திண்ணமாக உணர்ந்தோம்.

சரவணபவனில் சாப்பிடும் போது சாம்பார், கூட்டு இவற்றில் கடுகு அதிகமாகப் போட்டிருப்பது போல் உணர்ந்தோம். இறந்தோர்க்கு செய்யும் சிறப்பாகக் கருதி அதை உண்டோம். உணவில் கடுகு அதிகமிருப்பது பிடிக்காதிருந்தும் அன்று அப்படியே சாப்பிட்டுக் கிளம்பினோம்.

தூறல் அதிகரித்த வண்ணம் இருந்தது. மணி ஒன்பது ஆகிவிட்டிருந்தது. உணவகத்திலிருந்து, எதிரேயிருந்த பேருந்து நிலையம் வருவதற்குள் நனைந்து விட்டிருந்தோம். திருவண்ணாமலைக்கு ஒரு பேருந்து புறப்படத் தயாராக இருந்தது. அதில் பின்பக்கத்தின் இரண்டாவது வரிசையில் அமர்ந்து கொண்டோம். மூன்று பேர் அமரும் இருக்கையில் யாம் மட்டுமே இருந்தோம்.

பேருந்து நகரும்போது மழை கொட்ட ஆரம்பித்தது. யாம் கண்களை மூடி ஓம் என மனதில் உச்சரிக்க ஆரம்பித்தோம். நேரம் ஆக ஆக இடியும் மின்னலுமாக மழை தீவிரமடைந்தது. எமது ஓம் மந்திரமும் மனதினுள் அதி தீவிரமடைந்த வண்ணம் இருந்தது.

வழியில் சற்று வயதான தோற்றத்தில் இருந்த ஒருவர் ஏறி எமது வரிசைக்கு வந்து ஜன்னல் அருகே அமர்ந்து கொண்டார். அவரது முகம், உடை இவற்றைப் பார்த்து ரமணர் போல் இருக்கிறாரே என நினைத்துக் கொண்டோம். ரமணரது புகைப்படம் மட்டுமே யாம் பார்த்திருக்கிறோமே தவிற வேறு ஒன்றும் அவரைப் பற்றி அறிந்திருக்கவில்லை.

பலத்த மழைக்கு ஊடே பயணமும், ஓம் உச்சாடனமும் தொடர்ந்து கொண்டிருந்தது. இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக இப்படி கண்களை மூடி தியானம் போல் உச்சரித்துக் கொண்டு வந்தோம். இன்று உலகம் அழியப் போகிறது

எனும் எண்ணம் மனதினுள் தீவிரமடைந்தது. ஊழிப் பெருமழைபோல் மழை கொட்டுகிறதே, உலகம் அழிந்து விடுமோ என்ற எண்ணங்கள் மனதில் வரும்போதெல்லாம் உலகைக் காக்க வேண்டுமென்ற எண்ணத்தில் ஓம் உக்கிரமடைந்தது.

சட்டென ஓம் அதி தீவிரமடைந்ததை உணர்ந்தோம். மூச்சுக் காற்று வேகமெடுத்தது. கண்களை இறுக்க மூடிக் கொண்டோம். ஒரு வித பரவச நிலை உடலையும் மனதையும் ஆட்கொண்டது. ஏதோ ஒன்று நடக்கப் போகிறது என்பதை உள்ளுணர்வாக அறிந்தோம்.

பேருந்து நின்று இனியதொரு புல்லாங்குழல் இசை சில வினாடிகள் கேட்டது. உடலெங்கும் மின்காந்த அலை வந்தது போல ஒரு பரவச நிலையை உணர்ந்தோம். கண்ணன் புல்லாங்குழல் இசைப்பது போன்ற ஒரு தோற்றம் மனக் கண்ணில் உண்டானது. பேருந்தின் முன்பகுதியில் அந்தரத்தில் நின்று புல்லாங்குழல் இசைக்கிறார் என்றே நினைத்தோம். அப்படித்தான் தெரிந்தது. உற்சவர் சிலை அளவிற்கே அந்தத் தோற்றம் தெரிந்தது. தெளிவான உருவத்தை யாம் கண்டோம். சில வினாடிகளில் உருவம் மறைந்து கருப்பண் வரார், கருப்பண் வரார் என்ற பாடல் அதிக ஒலியோடு கேட்டது. பாடல் மிக அருகாமையில் ஒலித்தது. எமது உடலைக் கட்டுப்படுத்த இயலவில்லை. சாமியாடுவதுபோல் எமது உடல் துடிக்க ஆரம்பித்தது. மூச்சுக் காற்று புயலென மாறியது. இருபது நொடிகள்வரை இப்படி பாடல் ஒலித்திருக்கும். பாடல் நின்றவுடன் உட்கார்ந்த நிலையிலேயே கைகளை மார்போடு கூப்பி சத்தமாக விரைவாக ஓம் ஓம் ஓம் என்று மூன்று முறை கத்தி முன்னும் பின்னுமாக எமது உடல் போய் வந்தது. இந்த உடலியக்கம் எம்மை அறியாமலேயே நிகழ்ந்ததுபோல், எமது கட்டுப்பாட்டில் உடல் இல்லாததுபோல் நிகழ்ந்தது. முன்னும் பின்னும் உடல் போய் வந்த பின், இருக்கையில் தலை சாய்ந்துவிட்டது. கண்கள் திறந்து கொண்டது.

யாம் ஓம் ஓம் என்று கத்தியதை, சாமியாடியதை யாரும் பார்த்தார்களோ என்ற நினைப்பு வந்து சற்று வெட்கப்பட்டோம். பேருந்திலிருந்து பலரும் கீழே இறங்கிக் கொண்டிருந்ததை வைத்து ஏதோ ஒரு ஊரில் பேருந்து நிற்பதை உணர்ந்தோம். எந்த ஊர் என்பது தெரியவில்லை. எமது அருகில் உட்கார்ந்து வந்தவர் எங்கு இறங்கினார் என்பதே தெரியாமல் இருந்திருக்கிறோம்.

சற்று நேரத்தில் உடல் இறுக்கமும், மூச்சுக் காற்றும் சீராகுவதை உணர்ந்தோம். கீழே இறங்கவில்லை. கண்ணனின் புல்லாகுழலிசையும், அவரது உருவமும் மனதினுள் அப்படியே பதிந்திருந்தது. கருப்பண் வரார் பாடல் எப்படிக் கேட்டது என ஆச்சரியமாக இருந்தது. எங்கள் பேருந்தில் அதுவரை பாடல்கள் ஏதும் ஒலிக்கவில்லை. பனிரெண்டு மணி அளவிற்கு இந்தப் பாடல் எவ்வாறு திடீரென ஒலித்து பின் நின்றது என்பது புதிராக இருந்தது. அனைத்தும் ஆச்சர்யமாக எமக்குத் தோன்றின. உலகத்தை அழிவிலிருந்து காப்பாற்றி விட்டோம் என மகிழ்ந்தோம்.

உலகிற்கு இனி ஒன்றும் ஆகாது என்ற நினைப்பு மனதினுள் மகிழ்ச்சியைக் கொடுத்தது. எமது கடமை முடிந்து விட்டதாக நினைத்து கொண்டோம். அது எந்த ஊர் எனத் தெரிந்துகொள்ளும் ஆவலில், பின் இருக்கையில் இருந்தவரிடம் ஊரைக் கேட்டோம். மாமண்டூர் எனச் சொன்னார். ஊர் பெயர் கேள்விப்பட்டதாகத் தெரியவில்லை. ஊர் பெயரை சொல்லிப் பார்த்தபோது, அதனை மாமண்டு ஊர் என்றும் மாமண் டூர் எனவும் பதம் பிரித்துப் பார்த்தோம். மாமண்டு ஊரைப்பார் என்று அர்த்தமா அல்லது மிகப் பெரிய நிலம், ஊர் சுற்றிப் பார் என்பது அர்த்தமா அல்லது எமது ஊர் மிகப் பெரிய புனிதமான மண்ணா, எங்கள் ஊரேதான் உலகமா என்று பல வகையாக அர்த்தம் பார்க்க ஆரம்பித்தோம்..

மழை சுத்தமாக நின்றிருந்தது. யாம் மனதினுள் ஓம் உச்சரிக்காமல் ஓரளவிற்கு இலகுவான மனநிலையில் வெளியே பார்த்துக்கொண்டு வந்தோம். மழைக்கு மின்சாரம் போய் விட்டது போல. ஊர்களின் தெரு விளக்குகள் தெரியவில்லை. படீரென எங்கள் பேருந்தின் டயர் வெடித்து விட்டது. நல்ல வேளையாக பேருந்து ஓட்டுனரின் கட்டுப்பாட்டில்தான் இருந்தது. டயர் மாற்றும் வரை வெளியில் நின்று கொண்டிருந்தோம். ஓரமாகச் சென்று சிறுநீர் கழித்து வந்தோம்.

ஓரு வாரத்திற்கும்மேல் இருந்த அந்த இறுக்கமான மனநிலையும், விடாத எண்ணங்களும் மாறி, முற்றிலும் இயல்பானதொரு நிலைக்கு வந்திருப்பதை உணர்ந்தோம். இப்படியே சென்னைக்குத் திரும்பி விடலாம் என்ற எண்ணமும் வந்தது. நடு வழியில் பேருந்து நிற்பதால் சென்னை செல்லும் பேருந்தை வழியில் நிறுத்த மாட்டார்கள் என்றும் நினைத்துக் கொண்டோம்.

புதிய டயரோடு பேருந்து புறப்பட்டது. புத்துலகம் பிறந்து விட்டதாக நினைத்துக் கொண்டு யாமும் பயணத்தைத் தொடர்ந்தோம். பேருந்து

திருவண்ணாமலையை அடைந்தது. நிலையத்தில் இறங்கிக் கொண்டோம். மழை தூறிக் கொண்டிருந்தது.

கோவில் எங்கிருக்கிறது எனத் தெரியவில்லை. திருவண்ணாமலை என்னும் மலை மேல் அருணாச்சலேஸ்வரர் பெயர் கொண்ட சிவன் கோவில் இருப்பதாகவே யாம் நினைத்துக் கொண்டிருந்தோம். சட்டெனக் கிளம்பி வந்ததால் ஒன்றும் அறிந்திருக்கவில்லை. மற்றவர்களிடம் கேட்பதற்கும் தயக்கமாக இருந்தது.

மலைமேல் கோவில் இருப்பதாக நினைத்து சுற்று முற்றும் பார்த்தோம். ஒன்றும் தெரியவில்லை. மலை மேல் விளக்கு வெளிச்சம் ஒன்றையும் காணோம். இருட்டில் மலையேற முடியாதென்று எண்ணி விடிந்தபின் செல்லலாமென்று நிலையத்திலேயே உட்கார்ந்திருந்தோம். அருகிலிருந்த கடையில் மகாபாரதம் கூத்து சத்தமாக வைத்திருந்தார்கள். அதன் பாடல்களும் இசையும் மிகவும் வித்தியாசமாக இருந்ததால் அதனைக் கேட்டுக் கொண்டே விடியட்டும் என்று வெகு நேரம் அமர்ந்திருந்தோம். தூறலும் நின்றபாடில்லை.

கூத்தின் இசையிலும், கொத்துப் பரோட்டாவிற்கு தோசைக் கல்லில் போட்ட தாளத்திலும் நேரம் போவதே தெரியாமல் இருந்தோம். நான்கு மணிக்கு மேல் இருக்கும். அங்கிருந்த ஒருவரிடம் அருணாச்சலேஸ்வரர் கோவிலுக்கு எப்படிச் செல்ல வேண்டுமெனக் கேட்டோம். கோயில் அருகிலேயே இருப்பதாகவும், நடந்தே செல்லலாமெனவும் வழி சொன்னார். கோவில் மலைமேல் இல்லையா என ஆச்சரியமாகக் கேட்டோம்.

செப்டம்பர் ஒன்று. அதிகாலை நேரம். கோவிலை நோக்கி விறு விறுவென நடக்க ஆரம்பித்தோம். ஐந்து நிமிட நடை பயணத்திற்குள்ளாகவே வந்துவிட்டோம். ஒருசில பேர்தான் இருந்தார்கள். அருணாச்சலம் படத்தின் அதாண்டா இதாண்டா பாடலில் ஏழு கதவுகளையும் வரிசையாகத் திறப்பது போல கோவில் கதவுகளைத் திறப்பார்கள் எனும் ஆவலில் முக்கியக் கதவு அருகே நின்று கொண்டிருந்தோம்.

குளிக்காமல் கோயிலுக்குள் செல்லக் கூடாதே. குளிப்பதற்கான இடம் தேடினோம். பக்கதிலேயே இருந்தது. சீட்டு கொடுப்பவரைக் காணோம். பின்னர் குளியல் சீட்டு வாங்கிக் கொண்டோம். துண்டு கூட எம்மிடம் இல்லை. கட்டி குளிப்பதற்கும் துவட்டுவதற்கும் பனியனை பயன்படுத்தி அதை அங்கேயே போட்டு விட்டோம். பனியன் இல்லாமல் சட்டையை அணிந்து கொண்டு ஆவலில் மகிழ்ச்சி கரை புரள கோவிலினுள் அடியெடுத்து வைத்தோம்.

வானுயர்ந்த கோபுரத்தைப் பார்க்கும்போதே முழுக் கோயிலின் பிரம்மாண்டம் புரிந்துவிட்டது. மங்கிய வெளிச்சத்தில் மற்ற கோபுரங்கள் சரியாகத் தெரியவில்லை என்றே சொல்ல வேண்டும். தூறலும் மேகமூட்டமும் இருந்ததால் மலை எந்தப்பக்கம் உள்ளதெனவும் தெரியவில்லை.

பெரிய கோபுரத்தைத் திறக்கும் போது நான்கைந்து பேர்தான் அர்ச்சகரோடு இருந்திருப்போம். மூன்றாவது கோபுரத்தின் முன்பாக பசுமாடு வந்து சேர்ந்தது. புதிய அர்ச்சகர்களும், மேலும் சில பக்தர்களும் வந்து சேர்ந்தார்கள். பசுமாட்டிற்கும் கன்றுக்கும் அகத்திக் கீரை கொடுத்தார்கள். சற்று உயரம் குறைவாக இருந்த முக்கிய அர்ச்சகரின் உருவத்தையும், அலங்காரங்களையும் பார்த்து இவர்தான் அகத்தியராக இருந்தாரோ என நினைத்துக் கொண்டோம். இப்படித்தான் மனம் யாரைப் பார்த்தாலும் அவர்களது முந்திய பிறவிகளை நினைத்துக் கொள்ள தொடங்கியிருந்தது.

கொடிமரம் தாண்டியிருந்த வாசல் முன் நெடுநேரம் பூஜைகள் செய்தார்கள். யாம் மற்றவர்களோடு அமர்ந்து பூஜைகளை பார்த்துக் கொண்டிருந்தோம். அடுத்த கதவும் திறந்து பிரம்மாண்டமான சரவிளக்கைக் கண்டு அதிசயித்தோம். பக்தர்கள் பக்திப் பரவசமானார்கள். யாமும் தான்.

துவார பாலகர்கள் கதவு திறந்தது. பின்னர் கருவறை முன்கதவும் திறந்தார்கள். கூட்டம் மிகக் குறைவு. இருந்தாலும் நன்றாகப் பார்க்க வேண்டுமென்ற ஆவலில் முன்னால் போய் நின்று கொண்டோம். கருவறை மறைப்பால் மறைக்கப்பட்டிருந்தது. சிறிது நேரக் காத்திருப்பிற்குப் பின் திறப்பு விலக்கப்பட்டு ஆரத்தியோடு அருணாச்சலத்தை முதன் முதலாகத் தரிசித்தது கண்கொள்ளாக் காட்சி. இந்த முதல் தரிசனம் அற்புதமான காட்சியாக அமைந்தது என்றே கூற வேண்டும்.

கருவறைக்குள் சென்றவர்களோடு சேர்ந்து யாமும் சென்றோம். மிக அருகிலிருந்து சுவாமி தரிசனம் செய்யும் பேறு கிடைத்தது. மீண்டும் ஆரத்தி நடந்தது. உள்ளேயே உட்கார்ந்திருந்தோம். பின் அகத்திய அர்ச்சகரிடம் யாம் கொண்டு வந்திருந்த இரண்டு ருத்ராட்சங்களை அருணாச்சலேஸ்வரரிடம் ஆசி பெற்றுக் கொடுக்குமாறு கொடுத்தோம். அவர் சுவாமி அருகே வைத்து விட்டு மற்றவர்களுக்கு ஆரத்தி காட்ட ஆரம்பித்தார். யாம் இன்னும் சற்று நேரம் சாமியைப் பார்க்கலாமென்று காத்திருந்தோம்.

சற்று நேரத்தில் ருத்ராட்சங்களைக் கேட்டபோது ஒன்றை மட்டும் கொடுத்தார். இரண்டு கொடுத்தோம் என்று சொன்னோம். தேடிப் பார்த்தவர் கண்டுபிடிக்க இயலவில்லை, தேடி எடுத்து வைத்திருக்கிறோம், பின்னர் வந்து வாங்கிக் கொள்ளுங்கள் எனச் சொல்லிவிட்டார். ஒன்று கிடைக்காததில் எமக்கு சற்று வருத்தமே. பின்னே, அது ரஜினிக்குக் கொடுப்பதற்காக வாங்கியதல்லவா. ருத்ராட்சத்தை கோர்ப்பதற்கு வாங்கிய சிவப்பு கயிரை விடுதியிலேயே விட்டு வந்திருப்பதும் தெரிந்தது.

அம்மனை தரிசித்து விட்டு கொடிமரம் அருகே விழுந்து வணங்கி கோபுரங்களை பார்த்துக் கொண்டு நின்றோம். நன்றாக விடிந்து விட்டிருந்தது. மேக மூட்டம் அதிகமாக இருந்தது. மலை தெரியவில்லை என நினைத்து, பின் பக்கம் திரும்பிய அந்த ஒரு நொடியில் பிரம்மாண்டமான அண்ணாமலை கண்களில் தெரிந்து மிகுந்த பரவசமானோம்.

அடர்ந்த மேகங்கள் தவழ்ந்து செல்ல, பசுமை போர்த்தி வெள்ளி மலையென அண்ணாமலையைப் பார்த்தோம். அது கண்கொள்ளாக் காட்சி. பனி போர்த்திய மலை போலவே இருந்தது. இமயமலை இப்படித்தான் இருக்குமோ என நினைத்துக் கொண்டோம். வெகு நேரம் இப்படி மலையையே பார்த்துக் கொண்டிருந்தோம். அப்படியே வாசல் வழியாக மறுபக்கம் சென்று மலைக்கு அருகே நின்றும் வெகு நேரம் ரசித்துக் கொண்டிருந்தோம். அங்கிருந்து வருவதற்கு மனமே வரவில்லை.

பேருந்து நிலையம் அருகே உணவருந்தி சென்னை செல்லும் பேருந்தில் வரும்போது அண்ணாமலையை திரும்பிப் பார்க்கத் தவறிவில்லை. மலையின் அழகும், கம்பீரமும், மேகக் கூட்டங்களும், பச்சை மரங்களும் நெஞ்சை நிறைத்தது என்றால் அது மிகையில்லை.

செஞ்சிக் கோட்டையைப் பற்றி நண்பர்கள் பேசிக் கேட்டிருந்ததால் அது எப்போது வருமென ஆவலுடன் பார்த்துக் கொண்டே வந்தோம். அழகிய கோட்டைகளைக் கண்டு களிப்புற்றோம். கற்களாலான மலைகள் கோட்டைக்கு மேலும் அழகூட்டின என்றே சொல்ல வேண்டும். தேசிங்கு ராஜாவை நினைத்துக் கொண்டோம்.

மூன்று மணியளவில் கிண்டியில் இறங்கி விடுதிக்குச் சென்றோம். வெள்ளைச் சட்டை முழுதும் அழுக்காக இருந்ததால் விறுவிறுவென மாடியில் ஏறி அறைக்குச் சென்று விட்டோம். நண்பர்கள் அழுக்கு உடையில் பார்க்கக் கூடாதல்லவா.

இவ்வளவு வெட்கப்பட்ட யாம், அடுத்த நாள் நண்பர்கள் முன்னிலையில் ஆடைகளைக் களைந்து அம்மணமாகியது பெரும் வியப்பு.

இரவு எமது உடைகளைத் துவைக்கும்போது உலகிலுள்ள அழுக்குகள் எல்லாம் போய்விட்டன என நினைத்துக் கொண்டோம். இரவு உணவிற்கு வெளியில் சென்று வந்தோம். பின் செய்தித்தாள் பார்க்க மாடிக்குச் சென்றோம்.

டைம்ஸ் ஆப் இந்தியா ஆங்கில நாளிதழ் பார்த்துக் கொண்டிருந்தோம். அதன் வாசகர்கள் பகுதியில் டிரிங் டிரிங் என்ற தலைப்பில் ஒருவரது கடிதம் வெளியாகியிருந்தது. ஹரி ஓம் என்று ஆரம்பித்து இன்று ஸ்ரீகிருஷ்ணா பிறந்து விட்டார் என்று எழுதியிருந்தது, இதைக் கண்டு எமக்கு வியப்பும் ஆனந்தமும் ஒரு சேர ஏற்பட்டது. இவ்வுலகினை அடுத்த கட்டத்திற்கு எடுத்து செல்லவே யாம் பிறந்திருக்கிறோம் என்று எமது எண்ண ஓட்டங்கள் இருந்ததற்கேற்பவே இந்தச் செய்தியும் பிரசுரமாகியது கண்டு மிகுந்த ஆச்சரியம் அடைந்தோம். மேலும் விடியும்போது அசசெய்தியினை அனைவரும் அறிந்திருப்பார்கள் என்றும் உலகம் மிகச் சிறந்ததாக ஆகுமெனவும் அவ்வாசகர் குறிப்பிட்டிருந்தார். இறுதியில் ஹரிவோம் என முடிந்திருந்தது. பல முறை அக்கடிதத்தை யாம் படித்துப் பார்த்தோம்.

பத்து நாட்களில் எமது மனதில், எண்ணங்களில் ஏற்பட்ட திடீர் மனமாற்றமும் ஆன்மீக அனுபவங்களும், டைம்ஸ் ஆப் இந்தியாவின் பிரசுரத்தையும் பார்த்து, கலியுகத்தில் கிருஷ்ணர் அவதரிப்பாகச் சொல்லப்பட்ட கல்கி அவதாரம் யாமே என மனம் உறுதியாக நம்ப ஆரம்பித்துவிட்டது. மேலும் கிருஷ்ணர் தெளிவுபடுத்திய அனைத்தும் அவரே என்பது போல் உலகில் தோன்றிய அனைவரும் யாமே என நினைத்துக் கொண்டோம். அனைத்துக் கடவுள்களும், அனைத்து மதங்களும் யாமே என்ற நிலைப்பாட்டிற்கு வந்திருந்தோம்.

எமது எண்ணத்திற்கு வலு சேர்ப்பதுபோல் முன்னர் சில செய்திகளை யாம் நாளேடுகளிலும் வார இதழ்களிலும் படித்திருந்தோம். கல்கி பகவான் பற்றிய செய்திகள் அதிகமாக பிரசுரம் ஆகியிருந்தன. சென்னையில் பிறக்கப் போகும் மாவீரனொருவன், இவ்வுலகை நல்வழிப்படுத்துவான் என்றும், சென்னை மற்றும் தமிழ்நாடே அடுத்த யுகத்திற்கான திறவு கோல் என்றும் வாசித்திருந்தோம். இவையெல்லாம் சேர்ந்துதான் எமது மனதை உறுதியாக நம்பவைத்தது என்றே கூற வேண்டும்.

காலையில் எம்மைப் பற்றி உலகினர் அனைவருக்கும் தெரியப்போகிறது என்ற நினைப்பில் யாம் ஒருவித பரவச மனநிலையில் இருந்தோம் என்றே சொல்ல வேண்டும். வெகு நேரம் அங்கே உட்கார்ந்திருந்தோம். படித்துக் கொண்டிருந்த மாணவர்கள் கீழே போவதும், ஓரிருவர் மேலே வருவதுமாக இருந்தார்கள். ஒரு கட்டத்தில் யாம் மட்டுமே தனித்திருந்தோம். அறைக்கு வந்தபோது நண்பர்கள் உறக்கத்திலிருந்தார்கள்.

எமது நடத்தையில் மெதுவாக மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்தன. பார்க்கும் அனைத்தும் எமக்கு ஆச்சரியமாகத் தோன்றின. மீண்டும் யாம் செய்தித்தாள் அறைக்குச் சென்றோம். சட்டென நான்கைந்து பேர் மேலே வந்து பேசிக் கொண்டும், அரட்டையடித்துக் கொண்டும் படிக்க ஆரம்பித்தார்கள். அவர்களைப் பார்த்தால் மாணவர்கள் போல் தெரியவில்லை. கரடு முரடான உருவத்துடன், பேச்சையும் நடத்தையும் பார்த்து, இவர்கள் அசுரர்களோ என நினைக்க ஆரம்பித்தோம். அசுரர்கள் இருந்தால் இப்படித்தான் இருப்பார்கள் என்ற எண்ணம் உண்டானது. சிறிது நேரத்தில் அனைவரும் சென்று விட்டார்கள்.

மூன்றாவது தளத்தில் யாம் இருப்பதை நிலவில் இருப்பதாக நினைத்துக் கொண்டோம். சில நாட்களாகவே நிலவை எமக்கு மிகவும் பிடித்திருந்தது. நிலவை பெண்ணாகவே நினைக்க ஆரம்பித்திருந்தோம். தலைமுடிக்கு பட்டை வைத்திருக்கும் பெண்களை யாம் நிலவுப் பெண்ணாகவே நினைத்தோம். நிலவில் தேவர்கள் இருப்பார்கள் எனவும் கருதிக் கொண்டோம்.

தண்ணீர் குடிக்க வேண்டும்போல் இருந்தது. சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பிடிக்க கீழ் தளத்திலிருந்த உணவு அறைக்குச் செல்ல வேண்டும். யாம் இவ்வாறு தண்ணீர் பிடித்து வாசிப்பு அறைக்கு வரும்போது, பூமியிலிருந்து நிலவிற்கு தண்ணீர் எடுத்து வருவதாகவும், நிலவில் இனி உயிரினங்கள் செழிக்கும் எனவும் எண்ணிக் கொண்டோம். மேலே செல்லும்போது மகிழ்ச்சியில் இரண்டிரண்டு படிகளாக குதித்து குதித்துச் சென்றோம்.

சிறுநீர் கழிக்கச் செல்லும்போது திடீரென பேய் ஞாபகம் வந்து மனதில் பய உணர்வு பற்றிக் கொண்டது. உடல் சில்லிட்டு தலை பாரமாகி அடுத்து நடக்க இயலாதோ என்ற நிலை வந்துவிட்டது. அப்படியே திரும்பி வாசிப்பு அறைக்கு வந்து விட்டோம். அதுவரையிலும் பேய், பிசாசு பற்றிய எண்ணங்கள் இல்லாமலிருந்த யாம் முதல் முறையாக இந்த உணர்விற்கு ஆட்பட்டோம். உலகில் பேயென்ற ஒன்று

இருக்குமா எனவும் நினைக்க ஆரம்பித்தோம். யாம் தனியாக இருப்பதால் இப்படி பய உணர்வு வருகிறதோ எனவும் நினைத்துக் கொண்டோம்.

இருக்கையில் அமர்ந்திருந்த எம்மை நிறைய கொசுக்கள் கடிப்பதை அப்போதுதான் உணர்ந்தோம். உலகில் கொசுக்களே இருக்கக்கூடதென்று எண்ணினோம். எமக்குள் ரசாயன மாற்றங்கள் ஏற்படுவதாகவும், என்ன மாதிரியான ரசாயன மாற்றங்கள் என்பதை எமது சிறுநீரை ஆராய்ந்தால் தெரிந்து விடுமெனவும் ஒரு எண்ணம் உண்டானது. அறைக்குச் சென்று மாதிரிகள் சேகரிக்க நண்பர்கள் வைத்திருந்த குப்பியை எடுத்து எமது சிறுநீரை சேகரித்து பத்திரப்படுத்திக் கொண்டோம். பிறகு அமைதியாகப் படுத்து விட்டோம். பல நாட்களுக்குப்பின் நிம்மதியாகத் தூங்கினோம் என்றே சொல்ல வேண்டும்.

பொழுது புலர்ந்தது. நண்பர்களுடன் காலை வணக்கம் பரிமாறிக் கொண்டோம். அறைக்கு முன்பிருந்த வராந்தாவில் நின்று மான்களை வேடிக்கை பார்த்து நின்றோம். உலகம் புதியதாகப் பிறந்து விட்டதைப் போல் உணர்ந்தோம். அதுவரை பார்த்த உலகமாக இல்லை. மான்களைப் பார்த்து ஹாய் குட்டிங்களா, நல்லா இருக்கீங்களா என மனதிற்குள் கேட்டுக் கொண்டோம். அருகிலிருந்த கொன்றை மரம் எம்மைப் பார்த்து புன்னகை செய்ததைப் போல் உணர்ந்தோம். உங்கிட்ட சொல்லாமப் போய்ட்டோமா எனக் கொஞ்சினோம்.

மலர்களைப் பார்க்கும்போது ஆச்சரியமாகத் தோன்றியது. ஓரே நாளுக்குள் எங்கிருந்து மரம் கொள்ளாத அளவிற்கு பூக்கள் பூத்துக் குலுங்குகின்றன என வியப்பு ஏற்பட்டது. எமக்காகத்தான் இப்படி பூத்துக் குலுங்குகிறாயா எனக் கேட்டோம். உமக்கு யாம் யார் என்று எப்படித் தெரிந்தது எனவும் வினா எழுப்பினோம். நீளநீளமான காய்களைப் பார்த்து இன்னும் ஆச்சரியம். இரண்டு நாட்களுக்கு முன்புவரை சிறு காய்களை கூடப் பார்க்கவில்லையே, எப்படி அதற்குள் இவ்வளவு நீளக்காய்கள் வந்தன என வியந்தோம். நண்பர்களிடம் இது குறித்துக் கேட்கவும் தவறவில்லை. பதிலுக்கு நீங்க எந்த உலகத்திலே இருங்கீங்க எனக் கேட்டார்கள்.

இப்பரந்த அண்டவெளியில் ஏதோ ஒரு பூமியில் கிருஷ்ணர் பிறந்திருப்பாரோ? அதனால்தான் நமக்கு இதுபோன்ற எண்ணங்கள் உண்டாகின்றனவோ? நம் பூமியைப் போன்றே உயிர் வாழ்க்கை நிரப்பிய வேறு பல கிரகங்களும் இருக்கின்றனவோ? எங்கோ ஓரிடத்தில் காலம் புதிய யுகமாக மலர்ந்திருக்குமோ?

இப்படியான எண்ணங்கள் எம் மனதை துளைத்துக் கொண்டிருக்க, யாம் அன்றாடச் செயல்களையும் செய்து கொண்டிருந்தோம். காலையில் மனிதர்கள் தூங்கி எழும்போது கிருஷ்ணர் பிறந்திருக்கும் செய்தியை அறிந்திருப்பார்கள் என்ற எமது நம்பிக்கை உண்மையாகவில்லையெனத் தெரிந்தது. யாம் மட்டுமே மாறியிருந்தோமே தவிர நண்பர்களிடத்தில் சிறு மாற்றத்தையும் உணரவில்லை. எப்பவும் போல் இயல்பாக இருந்தார்கள். எமக்கு ஏற்பட்ட மனமாற்றம் போல் எல்லோருக்கும் மனமாற்றத்தை ஏற்படுத்துவது எளிதுதானே? அனைத்து சக்திகளும் நிறைந்த கடவுளுக்கு இதெல்லாம் எம்மாத்திரம். பின் ஏன் எம்மை பற்றி ஒருவருக்கும் தெரியவில்லை? மனம் தவித்தது. அடுத்து என்ன நடக்கும்? ஒன்றில் யாம் திடமாக இருந்தோம். யாம் அமைதி காக்க வேண்டும். என்ன நடந்தாலும் யாம் அமைதியை இழக்க கூடாது. இயல்பாக இருக்க வேண்டும்.

ஒரு வேளை வாஜ்யாய் அவர்களுக்குத் தெரிவித்திருப்பார்களா? பிரதமர் என்ற முறையில் இந்தியாவில் கிருஷ்ணர் பிறந்திருப்பதை அவரிடம் தெரிவிப்பார்களோ? எமது மனமாற்ற எண்ணங்களையும், எதிர்கால உலகம், மனிதர்களின் வாழ்க்கை முறை எப்படியிருக்க வேண்டும் என்பது குறித்தான எமது திட்டங்களையும் புத்தகமாக எழுத வேண்டும் என ஆரம்ப நாட்களிலேயே தீர்மானித்து விட்டோம். அதற்கு தலைப்பும் வைத்தாயிற்று. கருப்பாயி மற்றும் வாஜ்பாயி. எமது அம்மாயியையும், வாஜ்பாயியையும் ஒப்பிடுவதல்ல நோக்கம். கிழக்கையும் மேற்கையும், விஞ்ஞானத்தையும் மெய்ஞானத்தையும், ஆணையும் பெண்ணையும், ஆரியத்தையும் திராவிடத்தையும் பேசுவது. இரு பெயர்களும் குறியீடுகள். இந்த உலகையே மாற்றப் போகும் அற்புதமான புத்தகம் தயாராகி விட்டது. முக்கடல் சங்கமிக்கும் குமரியில் இப்புத்தகத்தை எழுதுவோமா அல்லது எமது புண்ணிய பூமியாகிய தொப்பலாக்கரையில் புத்தகத்தை எழுதி முடிப்போமா என்ற அளவிற்குத் திட்டமிட்டு இருந்தோம். புத்தத்திற்கு புதியதோர் உலகம் செய்வோம் என்ற தலைப்பும் பொருத்தமாக இருந்தது. அன்பே சிவம் என ஆரம்பித்து, அறிவே சிவம் எனறு முடிக்க வேண்டும் எனவும் விரும்பினோம். தமிழ் செய்தி வாசிப்பாளர்களில் சிலர் வாஜ்பேயி என்று உச்சரிக்கும்போது எரிச்சலாக வரும். தமிழில் பேயி என்றால் வேறு அர்த்தம் வருமே, இது கூடவாத் தெரியாது என்று நினைத்துக் கொள்வோம்.

ஆய்வுக்கூடத்திற்குக் கிளம்பும்போது, அறையின் சுவற்றில் பெரியதொரு முருகன் படம் ஒட்டியிருப்பதைக் கண்டு ஆச்சரியமுண்டாகியது. முருகன் எப்போது

வந்தார்? முதலிலிருந்தே படம் இருக்கிறதா? யாம் இப்போதுதான் கவனிக்கிறோமா? இதற்கு முன்னர் இப்படத்தை பார்த்ததாகச் சிறிதுகூட நினைவில்லையே. இவ்வளவு நாட்கள் எப்படிக் கவனிக்காமல் இருந்தோம்? திடீரென ஏன் முருகனை ஒட்டினார்கள்? யாம் முருகன் என்பது இவர்களுக்கு எப்படித் தெரியும்?

கேள்வியின் நாயகனே கிருஷ்ணா! கிருஷ்ணா!! யாம் முருகனுமல்லவா. எம் மொழி தமிழல்லவா. எம் மக்கள் தமிழர்களன்றோ.

யாம் தமிழர்களுக்கு முருகன். இந்தியாவிற்கு சிவன். பூவுலகிற்கு கண்ணன். அண்டவெளிக்கு இராமன். தமிழில் அல்லவா உயிர் இருக்கிறது. தமிழால் அல்லவா உலகம் இயங்குகிறது. தமிழென்றால் காதல் என்றல்லவா அர்த்தம். அவரவர் காதல்களைத் தேடித்தானே நாம் பூமிக்கு வருகிறோம். நம்மை மறக்கடிக்கச் செய்வது எது? ஏன்? எப்படி?

மகனும் தந்தையும் யாம்தானே. தீமைகளை அழிக்கவல்லவா யாம் பிறந்திருக்கிறோம். எண்ணும் எழுத்தும், ஒன்றும் பூஜ்யமும், தென்மொழியும் வடமொழியும் எம்மால் உண்டானதல்லவா. ஒன்றிலிருந்து பூஜ்ஜியம் உண்டாகிறது. ஒன்று ஆண். பூஜ்யம் பெண். ஒன்றும் பூஜ்யமும் சேர்ந்தல்லவா உலகை ஆள்கின்றன. உடல்களாய், மின்சாரமாய், கணினியாய் தோன்றக் காரணம் யார்? பிரம்மாவும், சிவனும், விஷ்ணுவும் யாமே. புத்தரும் மகாவீரரும் யார் என்று தெரியுமா? கிறிஸ்துவும், நபியும் யாமேயன்றோ. டார்வினாகவும், காந்தியாகவும் அவதாரமெடுத்ததும் யாம்தான். மனமே இதை ஏற்றுக் கொள்.

மனமே, ஏன் இப்படியான எண்ணங்களை உண்டாக்குகிறாய்? யாம் ஆராய்ச்சி மாணவர். இதெல்லாம் சாத்தியமல்ல. யாம் பரிணாமவாதியும் கூட. உலகம் உண்டாகட்டும் எனச் சொன்னவுடன் உலகம் உண்டாவதையெல்லாம் ஏற்க மாட்டோம். உடலே.. எமது கட்டுப்பாட்டை மீறாதே. மனமே.. எம்மை ஆட்டுவிக்காதே. கண்ணா... எண்ணங்களுக்கு ஓய்வு கொடு. மனதை அமைதியாக்கு.

ஆய்வுக் கூடத்திற்கு தாமதமாகத்தான் சென்றோம். நண்பர்கள் நலம் விசாரித்தார்கள். துறைத் தலைவர் எம்மை கூப்பிடுவதாகச் சொன்னவுடன் எமக்கு மிகுந்த பதற்றமாகி விட்டது. அறையினுள் யாருடனோ பேசிக் கொண்டிருந்தார். வராந்தாவில் நின்று கொண்டிருந்த நிமிடங்கள் இதயத் துடிப்பை அதிகரித்த வண்ணம் இருந்தன. எதற்கு அழைக்கிறார்? எம்மைப் பற்றி ஏதேனும் தகவல்

கிடைத்திருக்குமோ? தொலைபேசியில் பிரதமர் பேசுவாரோ? ஜனாதிபதி கூட பேசினாலும் பேசக்கூடும்.

தொலைபேசி அழைப்பு வருமோ? டிரிங்.. டிரிங்.. மனதில் நினைத்தவுடன் தொலைபேசியும் ஒலிக்கிறதே.. இதோ எமக்கான அழைப்பு வந்துவிட்டது. உலகெங்கும் யாம் யாரெனத் தெரிந்து விட்டது. தேங்க்யூ, கிருஷ்ணா.

உரையாடல் நின்று சற்று நேரத்தில் கதவு திறந்தது. சாரோடு பேசிக் கொண்டிருந்தவர் எம்மை அழைத்தார். தொலைபேசியையே பார்த்துக் கொண்டே சென்றோம். உதவித்தொகை தொடர்பாக ஒரு கடிதம் வந்திருப்பதாக எம்மிடம் கொடுத்தார். தொலைபேசி அழைப்பு எமக்கானதில்லையா? கண்ணா.. இதென்ன விளையாட்டு.

வாடிய முகத்தோடு எமது இடத்திற்குச் சென்றோம். மேடத்திடமிருந்து அடுத்த அழைப்பு. யாம் செல்வதற்குள்ளாகவே மாணவர்கள் பலரும் மேடத்தைச் சுற்றி நின்றிருந்தார்கள். தேவகி மேடமும் ஆனந்தன் சாரும் இருப்பது கண்டு சற்று வியப்படைந்தோம்.

கிருஷ்ணமூர்த்தி நல்லா இருக்கியா. காலைல சாப்டியா. உட்கார். சாப்டேன் மேடம். நண்பர்களின் சிரிப்பு. திருவண்ணாமலைக்கு போய்ட்டு வந்தியா. ஏதாவது வேண்டுதலா. முகத்தில் சந்தோசம் இல்லாமத் தெரியுதே. ஏதாவது வேலையா. உதவித்தொகை மாதாமாதம் வருதில்ல. கொஞ்ச நாளா அறைல சரியாப் பேசாம உம்முனு இருக்கியாமே. ஏதாவது தனிப்பட்ட பிரச்சனையா. நாங்க ஏதாவது உதவி செய்யணுமா. வீட்ல அப்பா, அம்மா எல்லோரும் நல்லா இருக்காங்கல்ல.

நண்பர்கள் திருவண்ணாமலை சென்று வந்ததைச் சொல்லிவிட்டார்கள் போல. யாம் சற்று வெட்கமும் சிரிப்பும் கலந்து, அதெல்லாம் ஒண்ணுமில்ல மேடம் எனப் பதிலுரைத்தோம். கிருஷ்ணமூர்த்தி நல்ல பையனாச்சே. எங்க எல்லோருக்கும் ரொம்ப பிடிக்கும். அமைதியான பையன். தேவகி மேடத்தின் பேச்சு கேட்டு வெட்கம் இன்னும் கூடியது.

கிருஷ்ணமூர்த்தி சார் ஏன் அமைதியா இருக்கார்னு எமக்குத் தெரியும். ஆனந்த் சார் சொன்னவுடன் அனைவர் கவனமும் அவர்பால் சென்றது. கேன்டீன்ல ஒரு பொண்ணு.. ஆனந்த் சார் வேண்டாம். அதெல்லாம் ஒண்ணுமில்ல மேடம். சும்மா விளையாட்டுக்குச் சொல்றார்.

அனைவர் முகத்திலும் பிரகாசம். வாய் கொள்ளாச் சிரிப்பு. கேன்டீன்ல என்ன.. சொல்லுங்க சொல்லுங்க.. எந்த துறை? பேர் என்ன? ஓகோ, இதுக்குத்தான் ரெண்டு பேரும் சேர்ந்தே போறீங்களா? ஆள் எப்படி? ஆழகான பொண்ணா..

மதியம் சிற்றுண்டியில் பார்ப்போம். இவரைப் பார்த்து புன்சிரிப்பு விடும். இவரையே பார்க்கும். இவரும் அப்பப்போ பார்ப்பாரு. இதுவரைக்கும் ரெண்டு பேரும் பேசிக்கிட்ட மாதிரி தெரியல. பேர்.. துறை.. முனைவர் ஆராய்ச்சி செய்றாங்க. தலைல எப்பவும் பல வண்ணங்கள்ல பட்டை மாட்டியிருக்கும். ரொம்பவும் அமைதியா இருக்கும். ரெண்டு பேருக்கும் ஜோடிப் பொருத்தம் அருமை.

பெண் தோழிகளுக்கு கூடுதல் வியப்பு. இன்றைக்கு சிற்றுண்டிக்கு அனைவரும் சேர்ந்துபோய் அப்பெண்ணை பார்த்து விடுவோம் என்று சொன்னார்கள். சற்று நேரத்திற்கெல்லாம் மாணவர்கள் அனைவரும் சென்று விட்டனர். யாம், சியாமளா மேடம், தேவகி மேடம் மட்டுமே. அப்புறம் கிருஷ்ணமூர்த்தி.. சீக்கிரமே வேலைக்கான கடிதம் வந்திடும். எதுக்கும் கவலைப்படாத. நல்லா சாப்பிடு. அந்தப் பொண்ண பிடிச்சிருந்தா வீட்ல சொல்லி கல்யாணம் செய்துக்க. வேலைல சேர்ந்ததுக்கப்றம் வீட்ல பேசு. அப்டியே எங்களையும் மறந்திடாத.

பதில் கூற முடியாமல் இருவரையும் மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்தோம். நீங்கள் இருவரும்தான் எமது அம்மாக்களாக இருந்தீர்களா. எம்மை எப்படியெல்லாம் கவனித்துக் கொண்டீர்கள். தேவகியன்னையே.. எமக்காக எவ்வளவு துன்பங்களை அனுபவித்தீர்கள். யசோதை அம்மா.. எத்தனை எத்தனை குறும்புகள் செய்தோம். கயிற்றால் கட்டியது நீங்கள்தானா.. அன்னையரே நன்றி. உங்களுக்கு யாம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம். இதோ உங்கள் முன் அதே கண்ணன் இருக்கிறோம். எம்மை ஆசிர்வதியுங்கள்.

கிருஷ்ணமூர்த்தி ரொம்ப யோசிக்கக் கூடாது, சரியா.. சரிங்க மேடம். தேவகி மேடம் கிளம்பிவிட்டார்கள். இருவர் மட்டுமே. எதிரெதிராக அமர்ந்திருக்கிறோம். யாம் அன்னையவே பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அழகா இருப்பாளா? உன்னோட நிலாப் பொண்ண மறுபடியும் கண்டுபிடிச்சிட்ட இல்லையா. எம் பையன் மாதிரிதான் உன்ன நினச்சிட்டிருக்கோம். எழுந்திரிந்து எதையோ தேடி பின் மறுபடியும் இருக்கையில் அமர்கிறார்.

இருவரும் புன்சிரிப்போடு ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவரது கண்களில் எமது பார்வை நிலைகொள்கிறது. நெற்றியில் வைத்திருந்த

பொட்டில் இரு கண்களையும் குவிக்கிறோம். பட்டென அவர்களது முகம் நாணுவதைக் காண்கிறோம். பேச்சு குழைந்து கனிவாகிறது. ஏதோ சில வார்த்தைகள் உதிர்க்கிறார். செல்லமான பேச்சாக இருக்கிறது. அம்மாவுக்கு என்னாயிற்று..

மின்னல் வெட்டியது போல் சட்டென சுய நினைவிற்கு வந்துவிட்டார். திடீரென அம்மாவின் பேச்சு ஏன் மாறியது? இதென்ன அதிசயம் கண்ணா.

முடியலைன்னா விடுமுறை எடுத்துக்கோ. ஊருக்குப் போய் ஓய்வு எடுத்துட்டு வாயேன். அக்கா குழந்தைகளோட விளையாடு. நல்லா சாப்பிடு. சீக்கிரமே நல்ல கல்லூரியில வேலை கிடைக்கும். பசங்களுக்கு நல்லா சொல்லிக் கொடு. சரியா கிருஷ்ணமூர்த்தி..

சரிங்க மேடம். தேங்க்யூ மேடம். முடிஞ்சா யாம் ஊருக்குப் போய்ட்டு வாரோம். உங்க உடல் நலத்த பார்த்துங்குங்க மேடம்.

கனத்த இதயத்தோடு விடுதிக்குச் செல்கிறோம். கண்ணீர் முட்டிக் கொண்டு வருகிறது. கண்ணா நீய் ஏமாற்றுக்காரன். எமக்கு என்னவாயிற்று. மனமே இயல்பாய் இரு. அமைதியை இழந்து விடாதே. அம்மா ஏன் திடீரென அப்படிப் பேசினார். மனமே.. மனமே.. கண்டதையும் நினைத்துக் குழம்பாதே. விடுதி அறையில் மனம் தவித்தது.

மதிய உணவிற்கு சிற்றுண்டி நோக்கி நடந்து செல்கிறோம். நிலாப் பெண் வருவாளா? இன்றைக்குப் பார்ப்போமா? இன்றைக்கு வெண்மை நிறத்தில் பட்டை அணிந்திருந்தால் அவள் நிலாப் பெண்தான். மனமே ஏற்றுக் கொள்கிறோம். வானத்தில் நிலா தெரிகிறதா? மதிய வேளையில் எங்காவது நிலா தெரியுமா? தெரியும். பல முறை யாம் பார்த்திருக்கிறோம். நிலாப் பெண்ணே.. இனியவளே.. எங்கிருக்கிறாய். சாலையில் நின்று வானத்தில் தேடுகிறோம்.

எம்மைக் கடந்து மாணவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள். நண்பரிடம் ஒருவர் கேட்கிறார். ஆம்ஸ்ட்ராங் யாருன்னு தெரியுமா? எமக்குத் தெரியும். நிலவில் காலடி வைத்த முதல் மனிதர். உடன் சென்றது ஆல்ரின். எமக்கு எல்லாமே தெரியும். யாம் நிலவை நினைத்துக் கொண்டிருக்கும்போது இவர்கள் ஏன் ஆம்ஸ்ட்ராங் பற்றி பேசுகிறார்கள்?

யாம்தான் ஆம்ஸ்ட்ராங்கா. விடுதியில் ஆம்ஸ்ட்ராங் எனப் பெயரெடுத்திருக்கிறோம் தானே. கையை மடக்க முடியாமல் எத்தனை நண்பர்கள் திணறுவார்கள். எமது ஆம்ஸ் ஸ்ட்ராங் அல்லவா. இதென்ன இப்படியெல்லாம் நினைக்கிறோம். மனம் ஏன் ஸ்ட்ராங்காக இல்லை.

சிற்றுண்டியில் தோழிகள் பார்த்தால், நிலா பெண்ணைப் பார்க்க வந்திருப்பதாக நினைத்து கொள்வார்களோ? நிலாப் பெண்ணிற்கு எமது நினைவுகள் வருமா? எம்மைப் பிடிக்குமா? அந்தச் சிற்றுண்டிதான் செல்ல வேண்டுமா? இதோ இந்தச் சிற்றுண்டிக்குச் செல்வோம். அவள் எமது நிலவுப்பெண் என்றால் இன்று இந்தச் சிற்றுண்டிக்கு வருவாள். ஆம். அது தான் சரி. யாம் ஆராய்ச்சி மாணவர். அறிவை பகுத்தறிபவர்.

ஒரு சாப்பாடு டோக்கன் கொடுங்க. இந்தப் பெண்ணின் முகம் எவ்வளவு அழகாக இருக்கிறது. அவளப் பாரேன். அந்தப் பையனோடு எப்படி சிரித்து சிரித்துப் பேசிக் கொண்டிருக்கிறாள். இந்தப் பெண்ணின் உதடு எத்தனை அழகு. நிலாப் பெண் வருவாளா? இல்லை இல்லை.. அவள் கண்ணனின் நிலாப்பெண். இந்த அம்மா ஏன் வயதான காலத்தில் பாத்திரங்களைக் கழுவிச் சிரமப்படுகிறார்? சிற்றுண்டி வைத்திருக்கிறார்கள் பார். இதெல்லாம் ஒரு சிற்றுண்டு. உட்கார்ந்து சாப்பிடுவதற்கு ஒழுங்கான இருக்கை கூட இல்லை. இதற்குப் போய் எப்படி அனுமதி கொடுத்தார்கள்?

அந்த சிற்றுண்டி நன்றாக இருக்கும். நல்ல பெண். எம்மை போலவே அமைதியான பெண். எமக்காகவே பிறந்தவள். ருக்மணியாக இருப்பாளோ? நாம் மறுபடியும் எப்படிப் பிறந்தோம்? நாம் பிரிவதே இல்லை. ராதாவாக இருப்பாளோ? ஆம். அதுதான் உண்மையாக இருக்கும். கொள்ளை அழகு கொண்டவள் எம் ராதை. எமக்காக ஏங்கித் தவித்தாளாமே. இம்முறை அப்படி விடக் கூடாது.

கண்ணா.. எம்மால் சாப்பிட இயலவில்லை. எம் மனம் எங்கெங்கோ சுற்றுகிறது. எமக்கு ஏதோ ஆகப் போகிறது. எம்மை பார்த்துக் கொண்டுதானே இருக்கிறாய். நிலவிலிருந்து தேர் குதிரையில் எம்மைப் பார்க்க வருவாய்தானே. வந்தாலும் வருவாய். நீய் மாயக்காரன்.

விஜயமோகன் தான் பிரம்மனா? சிவா சார் சிவன். சரவணன் முருகன் போலவே இருக்கிறார். தமிழ் எவ்வளவு அழகாகப் பேசுகிறார். பழனி பிள்ளையார் போலல்லவா இருக்கிறார். சிராஜிதீன் சார் நபியோ. சிகரட் குடிக்கும் இவர் சிவன்.

தொப்பையோடு இருக்கிறார். இவர் பிள்ளையார் அம்சம். எவ்வளவு அழகாக இருக்கிறான். இவன் கண்ணன். தலை முடி நரைத்திருக்கிறதே. இவர் பிரம்மாவாகத்தான் இருக்க வேண்டும். சிரித்த முகமாய்ப் பேசுகிறாள். லட்சுமி. அழகாகத் தெரிகிறாள். பார்வதியோ? நன்றாகப் படிக்கும் பெண்களெல்லாம் சரஸ்வதி. யாரையேனும் விட்டுவிட்டோமா? வள்ளி.. துடுக்காகப் பேசுபவள் வள்ளி. கற்பக வள்ளி துடுக்காகப் பேசவில்லையே. எவ்வளவு அன்பு நிறைந்த பெண்.

கிருஷ்ணமூர்த்தி.. மதிய உணவு முடிந்து தேநீர்க்கு வர ஆரம்பித்து விட்டார்கள். யாம் இன்னுமா இங்கே நின்று கொண்டிருக்கிறோம்? நிலாப் பெண் தேநீர் பருக வருவாரோ. இல்லை. வேண்டாம். கிளம்பலாம்.

விடுதியருகே ஆடுகள். பல்கலைக்குள் இப்படி ஆடுகள் மேய்ப்பதை எவ்வாறு அனுமதிக்கிறார்கள்? என்னங்கடா.. பசிக்குதா.. நல்லா சாப்பிடுங்க. டேய் பையா. என்னடே பார்க்குற.. என்னத் தெரியுமா. பூச்சி ஏதும் இருக்க போகுது. கவனமா மேயிடே.

அழகிய மரமே, எம்மைத் தெரியுமா? தெரியும். எமது தந்தை. யார் பேசியது? ஐயோ, எமது தந்தையென்று யார் சொன்னது? மரம் பேசுமா? இதென்ன அதிசயம், ஆடுகள் பேசவும் கூடுமோ? மரத்தின் மேல் யாரும் இருக்கிறார்களா? சிறு மரம் தானே. ஒருவரும் இல்லையே. அருகில் ஒருவரைக்கூட காணோமே. மரம் எப்படி பேசும்? காதால் கேட்டோமே. தெளிவாகக் கேட்டதே. உண்மையிலேயே கேட்டது கண்ணா.

காகங்கள் பேசுவது யாகவா முனிவருக்குத் தெரியுமாமே. பேட்டிகளில் படித்தது உண்மைதானோ. பறவைகள் மொழி இவருக்கு எப்படித் தெரியுமென்று நம்ப மறுத்தோமே. மரம் பேசுவதை எப்படி நம்புவது. சிவசங்கர் பாபாவுக்கும் இவருக்கும் அப்படியென்ன பிரச்சினை? ஏன் ஓயாமல் சண்டை போடுகிறார்கள்?

அறைக்குச் செல்லும்வரை மரத்தை திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டு சென்றோம். மரம் பேசியது உண்மையா? மரம் எப்படிப் பேச முடியும்? அறையில் எம்மால் இருப்புக் கொள்ள இயலவில்லை. மரத்தை நோக்கித் திரும்பவும் வந்தோம். மரத்தை ஆடுகள் சூழ்ந்திருந்தன. சிறு பையனொருவன் மரத்தின் கிளைகளில் நின்று கொண்டு ஆடுகளுக்கு கொப்புகளை வளைத்துக் கொண்டிருந்தான். சற்றுமுன் பார்த்தபோது இப்பையன் இல்லையே. சிறு மரம்தானே. ஒளிந்திருக்க சாத்தியமில்லையே. அருகாமை இடங்களில் நின்றிருந்துவிட்டு தற்போது வந்து

மரத்தில் ஏறியிருப்பானோ. பையன் பேசியிருந்தாலும் மனதில் நினைத்தற்கு எப்படி பதில் சொல்ல முடியும்? என்ன நடக்கிறது?ஒரே குழப்பமாக இருக்கிறதே..

யாம்தான் கிருஷ்ணாவதாரமா? எம் வாழ்க்கை முன்னமே திட்டமிடப்பட்டதா? அனைத்தும் ஒரு திட்டமிடலில்தான் நடக்கிறதா? எம் வாழ்வில் நிகழும், நிகழ்ந்த அத்துணை செயல்களும் முன்பே தீர்மானிக்கப்பட்டதோ? வாள் ஏந்தி குதிரையில் வருவார் என்றல்லவா சொல்லப்பட்டிருக்கிறது. யாம் எப்படி? யாம் ஆசிரியராகவல்லவா பணி செய்யப் போகிறோம். கண்ணன் அனைத்து உலகங்களையும் காப்பவரல்லவா? பெற்ற பிள்ளைகளை நோக்கி தந்தையே வாளேந்துவாரோ? அப்படியெனில் அவரென்ன தந்தை. பத்தாவது அவதாரம் என்பதே ஒரு மறைபொருள். குறியீடாகச் சொல்லியிருப்பார்கள். ஒவ்வொருவரையும் அன்பும் அறிவுள்ளவராகவும் மாற்றுவதே பத்தாவது அவதாரம். அனைவரையும் பத்தாக்குவது. ஒருவருள் அன்பும் அறிவும் நிறைந்துவிட்டால் உலகம் சொர்க்கமாகிவிடும். ஆம், அகிலத்தை சொர்க்கமாக்குவதற்கே யாம் பிறந்திருக்கிறோம். அதுவே எமது பணி. அகிலத்தில் அறிவை வளர்க்க வேண்டும். உண்மையான அறிவை. உண்மையான அன்பை. இவ்வையகத்தில் சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும், சுதந்திரத்தையும் செழிக்கச் செய்ய வேண்டும். புதியதோர் உலகம் செய்வோம் புத்தகத்தை இக்கணமே எழுத ஆரம்பித்து விட வேண்டும்.

அத்தனை இந்திய ஞானமும் தான் யார் என்பதோடு நின்று விடுகிறதோ? யாம் யார்? கடவுள். உமது அப்பா, அம்மா, உடன்பிறந்தோர் யார்? அவர்களெல்லாம் மனிதர்கள். நீர் மட்டும் எப்படியய்யா கடவுளானீர்? அது யாம் போன போன ஜென்மங்களில் செய்த புண்ணியங்களின் பலன்கள். அப்படியெனில் உம் தாய், தந்தை புண்ணியம் செய்யவில்லை? புண்ணியமில்லாத அவர்கள் வயிற்றில் நீர் ஏனய்யா பிறந்தீர்? நீர் தான் சர்வவல்லமை பொருந்திய கடவுளாயிற்றே. பெற்றோர் இல்லாமலேயே பிறந்திருக்கலாமே.

நீர் கடவுளெனில் உமது தாய் தந்தை உமக்கு முன்பே பிறந்த பெரிய கடவுள்களாகத்தானே இருக்க வேண்டும்? உமது தாத்தா, பாட்டி பெருங்கடவுள்களல்லவா? திருமணம் செய்து கொள்ளாத கடவுள்களை உம்மால் காட்ட இயலுமா? நீர் மட்டும் ஏனய்யா கடவுளானவுடன் கல்யாணத்தை மறுக்கிறீர்? உம்மைப் போல் உலகினர் அனைவரும் தாங்கள் யார் என்ற கேள்விக்குப் பதிலாக

நாங்கள் கடவுளர்கள் பதிலைப் பெற்று திருமண பந்தத்தில் இணையாவிட்டால் உலகம் என்னவாக மாறும் கடவுளய்யா. ஒரு கடவுள் கூட உணவுண்ணாமல் இருப்பதாகத் தெரியவில்லையே. உமக்கு உணவு எங்கிருந்தய்யா வரும்? மந்திரம் போட்டு, மாயஜாலம் காட்டி எதை எதையே எடுக்கும் உம்மைப் போன்ற கடவுள்களுக்கு உணவுத் தட்டை ஏனய்யா உண்டாக்க முடியவில்லை? உங்களுக்கு உல்லாச சேவை செய்ய ஊரையே அல்லவா வளைத்து வைத்திருக்கிறீர்கள். நீங்கள் தங்கத் தட்டில் தான் சாப்பிடுவீர்களில்லையா. படுக்க தங்கக் கட்டில். தங்கப் பல்லக்கு.

உமது பாதம் இம்மண்ணில் படாதோ? நீவிர் கடவுள். இது மண்ணா? மண் யாரென்று தெரியாத, இம்மண்ணின் மகத்துவம் புரியாத நீரெல்லாம் ஒரு கடவுள். இம்மண்ணைவிட நீர் எதிலய்யா சிறந்தவர்? அறிவிலா. உமது அறிவை குப்பைத் தொட்டியில் போடும். நீர் அன்பு நிறைந்தவரோ? உமது தூய இருதய அன்பு உமது சாதிக்காரருக்கும், மதத்துக்காரருக்கும் மட்டும் தானய்யா மழையாகப் பொழிகிறது. உம்மிடம் அன்பு இல்லை. அறிவு இல்லை. உமது சுயலாபத்திற்கு இம்மண்ணையும் அது ஈன்றெடுக்கும் மக்கள் கூட்டத்தையும் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்திக் கொள்கிறீர். அதென்ன கடவுளய்யா.. கடவுளம்மா.. இம்மண்ணின் ஞானத்தைப் பெற்றவுடன், பறந்து பறந்து வெளிநாட்டவர்க்கே உபதேசங்களை அள்ளி விடுகிறீர்கள். நிறைய சொத்துச் சேர்த்து ஊரெங்கும் கல்லூரிகள் கட்டலாமென்றா? நன்றி கடவுள்களே. வளர்க உங்கள் கல்விப் பணி.

புண்ணிய பாரத மண்ணே! நீய் பாராட்டி சீராட்டி வளர்த்த பிள்ளைகளில் ஒருவர் கூடவா நாம் யார் என்ற கேள்வியைக் கேட்கவில்லை? இளமை குன்றாத் தமிழே! யாதும் ஊரே, யாவரும் கேளீர் எனப் பாடிய உம்மைப் பாராட்டுகிறோம்.

தமிழச் செல்வியே! எமது பாராட்டில் உள்ளம் குளிர்ந்து விட்டதா? மாவீரர்களான, மன்னர்களான உம் மைந்தர்கள் பங்காளிகள் மேல் படையெடுத்து பச்சை வயல்களைத்தான் முதலில் பதம் பார்ப்பார்களாமே. பசுக்களை கவர்ந்து செல்வார்கள் அல்லவா. மாதரசிகளை இழுத்துச் செல்லும்போது உம் முகத்தை மறைத்திருப்பாய். இவர்களுக்குள் அப்படி என்ன பகை தாயே? தமிழை அன்பென்பதும், தமிழ் என்றால் குளிர்ச்சி என்பதும் உண்மைதானா அன்னையே? நெல்லை அழித்து புல்லை விதைத்துச் சென்றதாகக் கூறப்படும் இவர்களையா நீய் வீரத்தில் சிறந்தவர்கள் என எழுதி வைத்திருக்கிறாய்?

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று பறை சாற்றியது நீங்கள் தானே. எத்தனை சாதிகள்? எவ்வளவு உள் சாதிகள், பிரிவுகள், குலங்கள், கோத்திரங்கள், கூட்டங்கள், மனைகள், நாடுகள்? அறிவீர்களா அம்மா?

உணர்ச்சி மேலிட ஒருவிதமான பரவச நிலையிலேயே நோட்டை எடுத்து எழுத ஆரம்பித்தோம். பேனா மூடியைத் திறக்காமல் யாராலும் எழுத முடியாதே. கண்ணா நிதானம் கொள். எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.

எழுதுவதற்கு முன் அனைவருக்கும் நன்றி சொல்ல வேண்டுமே. நண்பர்கள் எவ்வளவு உதவிகள் செய்திருக்கிறார்கள். சிவா, சிவா என்று நினைத்தோமே. அருணாச்சலத்தை மறக்கலாமா. ருத்ராட்சம் எங்கே?

ருத்ராட்சத்தை தேடி எடுத்து நூலில் கோர்த்து அணிந்து கொண்டோம். நன்றி அருணாச்சலேஸ்வரா. நீங்கள் அழிக்கும் கடவுள் அல்ல. இவ்வுலகத்தைக் காப்பவர். தீமையை அழிப்பவர். அரியும் அரனும் ஒன்று. இருவரும் இணைந்து உலகினை உயர்த்த வேண்டும்.

நேற்றுத்தான் தமிழ் புத்தம் புதிதாகப் பிறந்தது. தமிழன்னையே.. உனக்கு நன்றி. ஓங்கி உயரட்டும் உனது புகழ். மண் சிறப்பு. அதற்கு ஈடு இணை எதுவுமில்லை. பாரத மண் புண்ணிய பூமி. இந்தியத் தாயே.. உம்மை வணங்குகிறோம். உமது புதல்வனான யாம் புது முயற்சி எடுக்கிறோம். மாதா.. எமக்கு அருளாசி வழங்குங்கள்.

யாம் இப்புவனத்தில் பிறந்த முதல் மனிதனல்லவா. ஆதாமிலிருந்தல்லவா மண்ணுலகம் தழைத்தது. அம்மையும் அப்பனுமல்லவா இப்பூவுலகின் முதல் மனிதர்கள். ஆதாம் ஆடை அணிந்திருக்க மாட்டாரே.

வானத்து தேவர்களை வணங்க வேண்டும். திசைகளை வணங்க வேண்டும். திசைகளை ஆடையாக அணிந்தவர்கள் திகம்பரர்களல்லவா. நிர்வாண துறவிகளாயிற்றே. நீர் மகா வீரன். திசைகளை வணங்கும்போது ஆடைகளைத் துற. ஆம். அதுதான் சரி. வேண்டாம். சற்றுப் பொறு. இல்லை. எமக்கு இனி ஆடைகள் தேவையில்லை. யாம் பரி நிர்வாணமடைந்து விட்டோம்.

நண்பர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே சரசரவென ஆடைகளைக் களைந்து விட்டோம். ஒவ்வொரு திசையாக விழுந்து வணங்கி எழுந்திருக்கிறோம். இடம், பொருள், காலம் முற்றாக மறந்தோம். நண்பர்கள் திகைத்திருப்பார்கள். யாம்

இப்படி நடந்து கொள்வோம் எனச் சிறிதும் நினைத்திருக்க மாட்டார்கள். நண்பர்களுக்கு நன்றி சொல்லக் கிளம்பி விட்டோம்.

ஐயோ கிருஷ்ணமூர்த்தி.. இதென்ன.. விஜய மோகன் கொடியிலிருந்து ஒரு துணியை எடுத்துக் கட்டிவிட்டார். நண்பரே.. எமக்கு எத்தனை உதவிகள் செய்தீர். நன்றி நண்பா.

அத்தனை நண்பர்களும் வந்து விட்டார்கள். எம்மை அன்போடு கவனித்துக் கொண்டார்கள். எமது கோபத்தையும், உணர்ச்சிக் கொத்தளிப்பையும், தடுமாற்றத்தையும், மிகுந்த முதிர்ச்சியோடு கையாண்டார்கள் என்பதே உண்மை. அன்புள்ளத்தோடு ஆறுதல் வார்த்தைகளும் சொல்லி எம்மைப் பேரன்போடு பாதுகாத்த அருயிர் நண்பர்கள் அத்தனை பேருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகள்.

அம்மாவைப் பார்க்க வேண்டும். உடனே எம்மை அழைத்துச் செல்லுங்கள். எமது ஆருயிர் அம்மா அல்லவா. அம்மாவை உடனே பார்க்க வேண்டும். நண்பர்களே அழைத்துச் செல்லுங்கள். இவ்வளவு நாளும் நீங்கள் யாரென்று தெரியாமலேயே இருந்து விட்டோமே. அம்மா.. யசோதை அம்மா.

மேடம் முக்கியமான கூட்டத்துல இருக்காங்க. தொலைபேசி மூலமா தகவல் சொல்லிட்டோம். கூட்டம் முடிஞ்சு நேரா இங்கேயே வர்றதா சொல்லிட்டாங்க. கொஞ்சம் பொறுமையா இருங்க கிருஷ்ணமூர்த்தி. நீங்க சமத்துப் பையன்ல. உங்கள எங்க எல்லோருக்கும் ரொம்பவும் பிடிக்கும். அவங்க பையன்தான் நீங்கன்னு சொல்லச் சொன்னாங்க.

உண்மையிலேயே எம்மை அவங்க பையன்னு சொன்னாங்களா? நன்றி அன்னையே. யாம் என்றென்றும் உங்கள் குழந்தையே.

யாம் ரஜினிகாந்தைப் பார்க்க வேண்டும். எம்மை இப்பொழுதே அழைத்துச் செல்லுங்கள். அவர் யாரென்று எமக்குத் தெரியும். அவரிடம் பேச வேண்டும். நண்பர்களே, யாம் ரஜினியைப் பார்க்க ஏற்பாடு செய்யுங்கள்.

நண்பர்கள் குழம்பியிருப்பார்கள். வேகமாகச் செல்வதும் வருவதும், அவர்களுக்குள் பேசுவதுமாக சுறுசுறுப்பாக காரியங்கள் ஆற்றினார்கள். நல்ல விசயமாக, எம்மோடு பேசிக்கொண்டே இருந்தார்கள். பொறுமையாகப் பதில் சொன்னார்கள். எமக்கு என்ன ஆயிற்று என்றும் நிறையப் படித்து இப்படி ஆகிவிட்டாரோ என்றும கவலைப்பட்டிருப்பார்கள். அனேகமாக மேடத்தோடு

தொடர்பிலேயே இருந்திருப்பார்கள் என்றே எண்ணுகிறோம். மேடத்துடைய ஆலோசனையின் பேரிலேயே அடுத்த கட்ட முயற்சிகள் நடந்திருக்க வேண்டும்.

புத்தகம் எழுதுவதை நிறுத்திவிட்டோமோ? மனதில் தோன்றும் எண்ணங்கள் மறந்து விடும். முதலில் குறிப்புகளாக எழுதி வைத்துக் கொள்வோம். நாட்குறிப்பை எடுத்து செப்படம்பர் ஒன்றாம் தேதியைத் தேடுகிறோம். ஏன் செப்டம்பர் ஒன்றாம் தேதி பிறந்தோம்? செப்டம்பர் எத்தனை எழுத்து? ஆங்கிலத்திற்கு ஒன்பது எழுத்துக்கள் வருகின்றன. மற்ற மாதங்களுக்கு. எண்ணிப் பார்க்கலாமா. செப்டம்பருக்கு மட்டும்தான் ஒன்பது எழுத்துக்கள் வருகின்றன. வேறு ஏதாவது காரணம் இருக்குமா?

தமிழுக்கு இது என்ன மாதம்? எத்தனை தமிழ் எழுத்து வருகிறது? சித்திரையிலிருந்து எத்தனையாவது மாதம்? ஒற்றையா இரட்டையா? இன்று என்ன கிழமை?

செப்டம்பர் ஒன்றாம் தேதியை எங்கே காணோம்? இதோ இங்கிருக்கிறது. பிரம்மன், விஷ்ணு, சிவன் சேர்ந்து இவ்வுலகைக் காப்பார்கள். யாம் விஷ்ணு. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும். பல கோடி சூரியன்கள் சேர்ந்தது உலகம். அனைத்தும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது.

அம்மாவை ஏன் இன்னும் காணோம்? எம்மையாவது அம்மாவிடம் கூட்டிச் செல்லுங்களேன். கூட்டம் முடிந்து மேடம் வந்திட்டே இருக்காங்க. கிருஷ்ணமூர்த்தி சார் இப்போ அமைதியா நல்ல பையனா ஆயிட்டாரு.

ஆட்டோ கீழே நிக்குது. போகலாமா கிருஷ்ணமூர்த்தி. உங்கள அவங்க வீட்டுக்கே கூட்டிட்டு வரச் சொல்றாங்க. ஆடை மாத்திக்கிறீங்களா? பட்டென்று உடைகள் மாற்றிக் கிளம்பி விட்டோம். அம்மாவின் பாதங்களைத் தொட்டு முதலில் வணங்க வேண்டும். ஒரு யுகமாக நாம் எங்கே இருந்தோம்?

அம்மாவைப் பார்க்கத்தானே கூட்டிப் போறீங்க. அம்மாவப் பார்த்துட்டு அப்படியே ரஜினி சார் வீட்டுக்கும் போகலாமா. முதல்ல அம்மாவப் பார்ப்போம். அவங்க என்ன சொல்றங்கன்னு கேட்டு அப்புறம் முடிவு செய்வோம்.

சிவா சார், விஜய மோகன், சரவணனோடு புறப்படுகிறது வண்டி. சார், அம்மாவப் பார்க்கத்தானே போறோம். அடையாறு போகமா இந்த பக்கமா ஆட்டோ போகுது. எங்க கூட்டிட்டுப் போறீங்க.

அம்மா ஒரு இடத்துல இருக்காங்க. உங்கள அங்க கூட்டிட்டு வரச் சொல்றாங்க. உங்களுக்கு கொஞ்சம் முடியாம ஆயிடுச்சில்ல. தொலைபேசியில உங்கள கேட்டுட்டே இருக்காங்க.

எம்மை ஒன்றும் ஏமாத்தலையே? கிருஷ்ணமூர்த்திய ஏமாத்த முடியுமா. கிருஷ்ணமூர்த்தி யாரு? அவரு எவ்ளோ புத்திசாலி? சி.எஸ்.ஐ.ஆர் ரெண்டு வாட்டி பாஸ் பண்றதுன்னா சும்மாவா. முதல்ல கைய் கொடுங்க சார். நண்பர்கள் கைகுலுக்கி, தோளைத் தொட்டு, தலையை வருடி, அன்போடு அழைத்துச் செல்கிறார்கள்.

அடையாறு ஆற்றைக் கடந்து ஆட்டோவில் போய்க் கொண்டிருக்கிறோம். எமக்கு அனைத்தும் ஆச்சரியமாகத் தெரிகிறது. விண்வெளியில் ஏதோ ஒரு புதிய இடத்தில் இருப்பது போல் நினைத்துக் கொள்கிறோம். எதிர் வரும், கடந்து போகும் வண்டிகளைப் பார்த்து சூரியன்கள் என கற்பனை செய்கிறோம். எண் பலகையின் எழுத்துக்களை கூட்டிப் பெருக்கி.. நினைவுகள் ஒரு நிலையில் இல்லை. இடையிடையே எங்கே போகிறோம் என்று வேறு கேட்டுக்கொள்கிறோம்.

நீண்ட பயணத்திற்குப் பின் ஓரிடத்தில் ஆட்டோ நிற்கிறது. அந்த இடம் மருத்துவமனைபோல் தெரியவில்லை. எம்மை அருகிலிருந்த இருக்கையில் அமர வைத்து விட்டு நண்பர்கள் அங்கிருக்கும் பணியாளர்களோடு பேசுகிறார்கள். சற்று நேரத்திலேயே எம்மை மருத்துவமனைக்கு அழைத்து வந்திருப்பதை புரிந்து கொள்கிறோம். அந்த இடம் கோடம்பாக்கம் எனவும், மனநல மருத்துவர் ருத்ரன் அவர்களிடம் எம்மை அழைத்து வந்திருப்பதும் தெரிய வருகிறது.

செய்தித்தாளை புரட்டினால் யாகவா முனிவர், சிவசங்கர் பாபா சண்டை போட்டது பிரதான செய்தியாக இருக்கிறது. சுவரில் மாட்டப்பட்டிருந்த சித்திரங்களைப் பார்த்து இன்னும் குழப்பம். ஏதோ வேற்றுக் கிரகத்திற்கு நம்மை அழைத்து வந்துவிட்டார்களோ? நமக்கு என்ன ஆயிற்று? அமைதியாக உட்கார்ந்து மற்றவர்களைக் கவனிக்கிறோம்.

நண்பர்கள் முதலில் சென்று பேசிய பின் எம்மை உள்ளே அனுப்பினார்கள். மருத்துவரின் அறைக்குள் போனால் இன்னும் ஆச்சரியம். தாடி வைத்து, நெற்றியில் பெரிய செந்தூரத்துடன் ஒரு முனிவர் போன்று அமர்ந்திருந்தவரைப் பார்த்து திகைத்து விட்டோம். அவர் சிவன்போல் இருப்பதாக நினைத்துக் கொண்டோம்.

அறையெங்கும் புரியாத சித்திரங்கள், ஜாடிகள் என வித்தியாசமான சூழலில் மருத்துவர் முன்பு அமர்ந்திருந்தோம். அறையில் வெளிச்சம் மிகவும் குறைவு.

எம்மை பற்றி அறிமுகப்படுத்திக் கொண்டோம். எமக்கு என்ன ஆயிற்று, எதற்காக திடீரென்று திருவண்ணாமலைக்குச் சென்றீர்கள் என வினவினார். யாம் எம்மை கிருஷ்ணராக உணர்வதாகச் சொன்னோம். அப்படியெனில் தாம் யாரென எம்மிடம் கேட்டார். நீங்கள் சிவன் என்ற பதிலைக் கேட்டு சிரித்துக் கொண்டார். சற்று நேர உரையாடலில் யாம் இயல்பாக இருப்பதாகவும். நன்றாக ஒய்வெடுக்குமாறும் அறிவுறுத்தினார். எம்மை அனுப்பிய பின் நண்பர்களை உள்ளே அழைத்துப் பேசினார். மருத்துவருக்கு யாம் மிகுந்த நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

விடுதிக்கு வரும்போது மறுபடியும் வியப்பு, கூட்டல், கழித்தல். எவ்வளவு வித்தியாசமான உலகம். சரவணனுக்கு தகவல் தெரியப்படுத்தி விடுதியில் காத்திருந்தார். என்னவாயிற்று என்று அன்போடு நலம் விசாரித்தார். அப்பாவிற்கு தகவல் சொல்லிவிட்டதாகவும், காலையில் வருவார்கள் எனவும் தெரிந்து யாம் சற்று வருந்தினோம். அப்பாவுக்குத் தெரிந்தால் எம்மை பற்றி என்ன நினைப்பார்?

இரவு இட்லி வாங்கிக் கொடுத்தார்கள். இட்லியை அழகான நிலா என நினைத்துக் கொண்டோம். சிவா சார் அறையில் தூங்கச் சொன்னார்கள். தூக்கம் வருவதாயில்லை. கிருஷ்ணமூர்த்திக்கு பாட்டு பிடிக்கும்ல எனப் பாடல் வைத்தார்கள்.

காற்றில் எந்தன் கீதம் காணாத ஒன்றைத் தேடுதே.. பாடலைக் கேட்டவுடன் மனம் அடைந்த பரவசத்திற்கு அளவில்லை. மனதை உருகச் செய்யும் பாடல். முதன் முதலாகக் கேட்பது போல் ஒரு உணர்வு. எமக்காகப் பாடல்கள் பாடுகின்றனவோ. நில்லென்று சொன்னால் மனம் நின்றால் போதும்.. தமிழே! உமக்காகவே யாம் பிறந்து விட்டோமோ! எம் மனமும் காற்றில் கரைகிறதே.. கண்ணா! இந்தப் பாடலைக் கேட்டிருக்கிறாயா? ஆயிரமாயிரம் எண்ணச் சுழல்களுக்குள் சிக்கிக் கொண்டு யாம் தவிக்கிறோம் தந்தையே..

தைய தைய தையா தையா தக தைய தைய தையா தையா.. கண்களோடு இரு நூறாண்டு, மூக்கின் அழகில் முந்நூறாண்டு, அழகின் கதகதப்பில் ஆண்டு ஐநூறு வாழ வேண்டும் தையா தையா.. மனமே.. எம் மனமே.. எமக்கு இன்னுமா

உயிர் இருக்கிறது? எமது ஆண்டுக் கணக்கு இப்போதே துவங்கட்டும். ஆயிரம் ஆண்டுதானே வருகிறது? கண்ணா.. ஆயிரம் காணாது.

எமது மனம் நிலைகொள்ளவில்லை. எமக்கான பாடல்கள். உயிரை உறைய வைக்கும் வரிகள். இரவின் இனிமை. யுக யுகமாய் தவமிருந்தால்தான் இப்படியான பாடல்களைக் கேட்க இயலும். யாம் என்ன தவம் செய்தோமோ.

யாம் தூங்கினோமா? நினைவில்லை. காலையில் அப்பாவும் அண்ணனும் வந்து விட்டார்கள். எம்மை நினைத்து மிகவும் வருந்தியிருப்பார்கள். விடுதி நண்பர்கள் இருவரையும் அன்போடு நடத்தினார்கள். துறைக்கு சென்று மேடம், மற்ற பேராசிரியர்கள் மற்றும் நண்பர்களோடும் பேசி விட்டு வந்தார்கள்.

ஒர் இரவுக்குள் எமது உடல் நிலை மிகவும் மோசமாகி விட்டது. எமக்கே எம்மை நினைத்து ஆச்சரிமாக இருந்தது. கழுத்தைத் திருப்ப இயலவில்லை. கழுத்துத் தசைகள் பிடித்துக் கொண்டன. பேசுவதற்கு நாவு எழவில்லை. பேச்சு மோசமாகக் குழறுகிறது. கால்களை நேராக வைத்து நடக்க முடியவில்லை. பார்வை ஒரே இடத்தில் நிலை கொள்கிறது. எமது காலம் மெதுவாகச் செல்ல ஆரம்பிக்கின்றதோ?

மாலையில் மருத்துவரிடம் அழைத்துச் சென்றார்கள். எம்மால் பேச இயலவில்லை. மருத்துவமனையில் சேர்க்க வேண்டும் என்று சொன்னதாக ஞாபகம். அண்ணன் ஊருக்கு அழைத்துச் சென்று பார்த்துக் கொள்கிறோம் எனச் சொன்னாராம். ஊசிகள் போட்டார்கள். நிறைய மாத்திரைகள். எதற்கும் மறுநாள் காலையில் வந்து பார்த்து விட்டுச் செல்லுமாறு மருத்துவர் அறிவுறுத்தியிருக்கிறார்.

மாத்திரைகளோடு இரவுத் தூக்கம். மறுநாள் நண்பர்கள் மற்றும் பேராசிரியர்களுக்கு நன்றி சொல்லி விட்டு எம்மை அண்ணனும், அப்பாவும் மருத்துவரிடம் அழைத்து சென்றார்கள். எமது நண்பர்கள் பற்றி இருவருக்கும் பெருமிதம். சிறந்த நண்பர்கள் எனவும், இப்படியான நண்பர்கள் கிடைக்க யாம் கொடுத்து வைத்திருக்க வேண்டும் எனவும் அண்ணன் அடிக்கடி குறிப்பிட்டார். மேடம் எம்மீது மிகுந்த அன்பு வைத்திருப்பதையும் சொல்லத் தவறவில்லை. விஜய மோகன், சிவா சார் போன்றவர்களின் அன்பை நினைத்த நெகிழ்ந்தார்கள். ஸ்ரீபிரியா எம்மீது மிகுந்த நட்பு பாராட்டுவதாகவும், எமது நலன் குறித்து அடிக்கடி கேட்டதாகவும் அண்ணன் குறிப்பிட்டு பெருமைப்பட்டார்.

மருத்துவர் ருத்ரன் அவர்கள் எமக்கு தன்னம்பிக்கை அளிக்கும் விதத்தில் அழகாகப் பேசினார். யாம் விரையில் குணமடைவோம் என்றும், மாத்திரைகளை தவறாமல் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் கூறினார். ஒரு மாதம் கழித்து அவரைச் சந்திக்குமாறு அறிவுறுத்தினார். மூன்று மணி அளவிற்கு மத்திய பேருந்து நிலையம் வந்து சேர்ந்தோம்.

உடனே பேருந்து ஏற முடியாதல்லவா? பின்னர் அருப்புக்கோட்டையில் இரவில் தங்க நேரிடுமே. அதை தவிர்ப்பதற்காக நேரம் ஆகட்டும் என்று காத்திருந்தோம். இரண்டு நாட்களாக அண்ணன் எம்மை நன்றாக கவனித்துக் கொண்டார். உணவு வாங்கி வருவதும், பழச்சாறுகள் வாங்கிக் கொடுப்பதுமாக மிகவும் அன்புடன் பார்த்துக் கொண்டார். ஒன்றும் ஆகாது எனத் தைரியம் ஊட்டினார். மேமாதத்தில் தான் சௌதி அரேபியாவிலிருந்து திரும்பியிருந்தார். முன்னர் எமக்கு அழகியதொரு விஸ்டர் கடிகாரம் பரிசளித்திருந்தார். பேருந்தில் ஏறியது மட்டும் நினைவிருக்கிறது. காலையில் ஊருக்கு வந்து விட்டோம்.

கிட்ணா என அம்மா அழுதது நினைவிருக்கிறது. அக்காவும் அழுதார். உறவினர்கள் வந்துவிட்டார்கள். அண்ணனும் அப்பாவும் பதில் சொல்லிச் சமாளித்தனர். திருவண்ணாமலைக்குப் போய் எமக்கு ஏதோ ஆகிவிட்டதாக நினைத்துக் கொண்டார்கள். அதற்கேற்றாற்போல் திருநீரு போடுவதும், குறி கேட்பதுமாக சில நாட்கள் கடந்தன. எம்மைப் பார்க்க வருபவர்கள் தேங்காய், பழம், பத்தி என வாங்கி வந்ததை நினைத்து எமக்கு பயங்கர ஆச்சரியம். சுகமில்லாதவரைப் பார்க்க வருபவர்கள் இதென்ன புதிதாக இப்படி தேங்காய், பழம் தட்டோடு வருகிறார்கள்? ஒருவேளை யாம் கடவுள் என்பது இவர்களுக்கும் தெரிந்து விட்டதா? எமக்கும் இவர்களுக்கும் என்ன உறவு? கடவுள் எம்மை போல் பிறந்து கஷ்டப்படுவாரா? எமக்குக் கொஞ்சம் மன அமைதி கிடைக்கக் கூடாதா?

அம்மா எம்மை மிகவும் கரிசனத்தோடு கவனித்துக் கொண்டார். அம்மா மடியில் படுத்துக்கொள்வதுதான் எமது ஒரே ஆறுதல். என்னய்யா செய்து என அம்மா கேட்கும் கேள்விக்கு எம்மிடம் பதில் இல்லை. மனசு எங்கிட்ட இல்லம்மா, மனசு எம்மோடதா இல்ல, போன சென்மத்துல யார் யாராவாகவோ இருந்ததாகவெல்லாம் எண்ணம் வருது, எல்லாரையும் புதுசா பார்க்குற மாதிரி தோணுதும்மா. எமது பதிலைக் கேட்டு எப்படி மனம் தவித்தாரோ. மடியில் கிடத்தி கால்களை அமுக்கிவிட ஆரம்பிக்கும் போது யாம் தூங்கியிருப்போம்.

எமது அம்மா தேவகி அம்மாவா? கண்ணா... இல்லை. ஒரு போதும் இல்லை. எமது எண்ணங்கள் தவறு. கண்ணனின் அம்மா இப்படியா இருப்பார்? எறும்புகள் சேர்த்து வைத்திருக்கும் ஒட்டுப் புல்லை வெட்டி எடுத்து உணவுண்ணும் நிலைக்கா கண்ணனின் அம்மா? நிச்சயம் இருக்காது. கிருஷ்ணமூர்த்தி.. தவறாக எண்ணுகிறாய். உனது அம்மா பொன்னம்மா. உமது அப்பா கருப்பையா. உமக்கு கிருஷ்ணமூர்த்தி என்று பெயர் வைத்ததால் நீர் ஸ்ரீகிருஷ்ணராகிவிட முடியாது. உமது தகுதியென்ன என்பதை அறிந்திருக்கிறாயல்லவா? உமது உறவினர்களைப் பார். இந்த ஊரிலா கண்ணன் அவதரிப்பார்?

எமது மனம் ஏன் திடீரென்று மாறியது? எமது மனம் மாறியதுபோல் ஏன் எல்லோர் மனமும் மாறவில்லை? கண்ணனால் அனைவர் மனதையும் மாற்ற முடியாதா? அனைவரின் மனதையும் மாற்றிவிட்டால் உலகில் சண்டை சச்சரவுகளே இருக்காதே. மக்கள் எவ்வளவு இன்பமாக வாழ்வார்கள். அனைவரது முகங்களிலும் மகிழ்ச்சிப் பூக்களல்லவா மலர்ந்திருக்கும். ஆயிரமாயிரம் ஆண்டுகள் தீராத காதல் செய்து களித்திருப்பார்களே. உலகம் இயங்குவது காதலால் அல்லவா. காதல் மட்டும் இல்லையெனில் வாழ்வெனும் இச்சுமையை யாரால் சுமக்க இயலும்? ஏன் காதலை விட்டு காசைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்? இவர்களால் காதலை எப்படி வெறுக்க இயலுகிறது? மனிதர்களே வாருங்கள். காதல் பயிரை செழித்து வளரச் செய்வோம். காதல் வாழ்க! காதல் பயிர் வளர்க!! என்றென்றும்.

பிள்ளையாருக்கு தினமும் காலையில் தண்ணீர் ஊற்றுவது நல்லது என அம்மாவிடம் யாரோ சொல்லியிருப்பார்கள்போல. யாம் தினமும் காலையில் அடிகுழாயிலிருந்து தண்ணீர் அடித்து பிள்ளையார் கோவிலில் வைப்போம். பூசாரி வரத் தாமதமானால் யாம் காத்துக் கொண்டிருப்போம். தனிமையில் கோவிலில் இருக்கும்போது ஏதேதோ நினைவுகள் வரும். யாம் தொப்பலாக்கரை கிருஷ்ணமூர்த்தியாக சிறிது சிறிதாக மாறிக் கொண்டிருந்தோம். வேலைக்குப் போகாமல் கண்ணும் கருத்துமாக எம்மைப் பாதுகாத்த அம்மாவுக்கு கோடான கோடி நன்றிகள்.

மனமும் உடலும் ஓரளவிற்கு தேறிக் கொண்டிருந்த சமயத்தில் அக்டோபர் இரண்டாம் வாரத்தில் எமது பணி ஆணை வந்து சேர்ந்தது. தருமபுரி அரசு கலைக் கல்லூரியில் விலங்கியல் விரிவுரையாளராகப் பணியில் சேருமாறு குறிப்பிட்டிருந்தார்கள். குடும்பத்தினரின் மகிழ்ச்சியைச் சொல்லவும் வேண்டுமோ?

எமக்குத்தான் கொஞ்சம் உதறலாக இருந்தது. உடல்நிலை நன்றாகத் தேற வேண்டுமே. கல்லூரி எப்படி இருக்குமோ? மாணவர்கள் எவ்வாறு நடந்து கொள்வார்களோ? தருமபுரி பற்றி அதிகமாகக் கேள்விப்பட்டதில்லை. பரவாயில்லை, எப்படியும் சமாளித்துக் கொள்ளலாம் என தைரியத்தை வளர்த்துக் கொண்டோம். தருமபுரி கல்லூரியில் அலங்காநல்லூரைச் சேர்ந்த திரு. அழகுச்சாமி என்பவருக்கும் பணி ஒதுக்கீடு கிடைத்திருந்தது. துணைக்கு ஒருவர் இருப்பது நல்லதுதானே.

பணியில் சேரும்போது உடல் தகுதிச் சான்று சமர்ப்பிக்குமாறு கேட்டிருந்தார்கள். அதற்கான விண்ணப்பம் பணி ஆணையோடு இணைக்கப்பட்டிருந்தது. அருப்புக்கோட்டை சென்று ரத்தினம் ஐயாவைச் சந்தித்தோம். யாம் விரிவுரையாளராகத் தேர்வானது குறித்து அவருக்கு மிகுந்த மகிழ்ச்சி. அருப்புகோட்டை அரசு மருத்துவமனைக்குச் சென்று கையொப்பம் வாங்கிக் கொள்ளுமாறு அறிவுறுத்தினார். இது ஒரு சாதாரண நடைமுறை எனவும், எந்த மருத்துவரைக் கேட்டாலும் பரிசோதனை செய்து சான்றொப்பம் இடுவார்கள் எனவும் தெளிவுபடுத்தினார்.

அரசு மருத்துவமனை சென்று பணியிலிருந்த மருத்துவரைச் சந்தித்தோம். எமக்கு வாழ்த்துக்கள் கூறி உயரம், எடை, கண்பார்வை, மற்ற நோய்க்கான அறிகுறி போன்ற விபரங்களை சரிபார்த்து சான்றொப்பம் வழங்கினார். மருத்துவருக்கு நன்றி சொல்ல மறக்கவில்லை.

நவம்பர் ஐந்தாம் தேதிக்குள் சேருமாறு அறிவுறித்தியிருந்ததால் இன்னும் கொஞ்சம் உடல்நிலை தேறட்டும் என ஊரில் இருந்தோம். மேடத்திடம் தகவல் சொல்லி அவர்களது ஆசிர்வாதமும் பெற்றுக் கொண்டோம். யாம் ஆராய்ச்சி மாணவராக இருப்பதால் அதை முடித்துக்கொண்டு மாற்றுச் சான்றிதழ் பெற்றுச் செல்லுமாறு அறிவுறுத்தினார்கள். மேலும் ஆய்வகத்தில் நிலுவை இன்மைச் சான்றும் வாங்க வேண்டியிருந்தது. எனவே சென்னை சென்று இந்த நடைமுறைகளை முடித்துக் கொண்டு மருத்துவரையும் சந்தித்துவிட்டு, தருமபுரி செல்லலாம் என முடிவுசெய்து, அக்டோபர் முப்பதாம் தேதி பணியில் சேரலாம் என்ற அளவில் அப்பாவோடு புறப்பட்டோம். புறப்படும் முன் கருப்பசாமிக்கு சிறப்பு பூஜை செய்து கிளம்பினோம். மறக்காமல் பத்தாயிரம் ரூபாய் கடனாகவும் வாங்கிக்

கொண்டோம். பேருந்து, சாப்பாட்டு செலவுக்கு, வீட்டுக்கு முன்பணம் கொடுக்கப் பணம் வேண்டுமல்லவா.

மேடம், மற்ற பேராசிரியர்கள், நண்பர்கள் அனைவரும் வாழ்த்துக்கள் சொன்னார்கள். ஸ்ரீதருக்கு சிதம்பரம் அரசு கலைக் கல்லூரி, கிளாராவுக்கு மாயவரம் மகளிர் கல்லூரி, நாராயணனுக்கு ஊட்டி அரசு கல்லூரிகளில் பணி ஒதுக்கீடு கிடைத்திருந்தது. ஆனந்தன் சார் கொச்சி தேசிய மீன் வள ஆராய்ச்சி மையத்தில் விஞ்ஞானியாக பணி ஒதுக்கீடு பெற்று ஏற்கனவே பணியில் சேர்ந்திருந்தார். மாற்றுச் சான்று வாங்கி, தருமபுரிக்கு கிளம்ப இருந்தபோது திடீரென உடல்நிலை மோசமாகிவிட்டது. வயிற்றுப் போக்கு. வாந்தி. என்ன செய்வதெனத் தெரியவில்லை. முப்பதாம் தேதி பணியில் சேர முடியாதோ? யாம் மிகவும் சோர்ந்து விட்டோம்.

மேடத்தின் ஆலோசனையின் பேரில் அடையாறில் இருந்த ஸ்வரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டோம். மறுபடியும் நண்பர்கள் உதவினார்கள். விஜயமோகன் கூடவே இருந்தார். இரண்டு நாட்களில் தேறி விட்டோம். பணியிலிருந்த மருத்துவர் ராதா அவர்கள் எம்மை நன்றாக கவனித்துக் கொண்டார். மருத்துவருக்கு நன்றி.

தருமபுரி புதிய ஊர் என்பதால் தருமபுரி பக்கமிருந்து யாரேனும் மாணவர்கள் இருக்கிறார்களா என்பதை மேடம் கேட்டறிந்திருக்கிறார். உயிர் வேதியியலிலேயே லட்சுமிகாந்தன் என்பவர் இருப்பதைக் கண்டறிந்து எமக்கு துணையாக அனுப்புவதாக ஏற்பாடாகியிருந்தது. இது குறித்து ஆனந்தன் சாரும் லட்சுமி காந்தனுக்கு தெரியப்படுத்தி இருந்தார். ஆனால் கடைசி நேரத்தில் லட்சுமி காந்தனால் வர இயலவில்லை. பின்னர் முதுநிலை விலங்கியல் படித்துக் கொண்டிருந்த மகேஷ் என்ற தருமபுரி மாணவரைக் கண்டறிந்து எங்களுக்கு உதவியாக அனுப்பினார்கள்.

மகேஷ் மிகவும் நல்ல பையனாக இருந்தார். கல்லூரி அருகிலேயே அவர்கள் வீடு இருப்பதாகவும். அவர்கள் இருக்கும் பகுதியிலேயே வீடு வாடகைக்குக் கிடைக்கும் என்றும் ஆறுதல் வார்த்தைகள் கூறினார். அவர்கள் வீட்டிற்கு தகவல் சொல்லி விட்டதாகவும் தெரிவித்தார். நவம்பர் ஒன்றாம் தேதி இரவு மத்திய பேருந்து நிலையத்தில் தருமபுரி பேருந்திற்காக காத்திருந்தோம். மகேஷ்தான் பெங்களூர் செல்லும் பேருந்தில் இடம் பிடித்து எங்களை அழைத்துச் சென்றார். இருக்கையில் அமர்ந்தவுடன் மாத்திரைகள் போட்டுவிட்டு கண்ணயர்ந்து விட்டோம். தலையில்

கம்பியொன்று இடித்துக் கொண்டே வந்தது கூட தெரியாமல் பயணித்திருக்கிறோம். இது காயமாகி பல நாட்கள் தொந்தரவு கொடுத்தது தனிக்கதை.

நான்கு மணிக்கு தருமபுரி பேருந்து நிலையம் அடைந்து, அங்கிருந்து ஆட்டோவில் மகேஷ் வீட்டிற்குச் சென்றதாக ஞாபகம். மகேஷின் அப்பா, அம்மா இன்முகத்தோடு எங்களை வரவேற்றார்கள். அறையில் படுத்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். காலையில் தாமதமாகவே எழுந்தோம்.

மகேஷின் தந்தை கந்தசாமி சார் வழக்கறிஞராக இருந்தார். அன்போடு பேசினார். அவரது அம்மா மிகுந்த அன்புள்ளம் கொண்டவராக இருந்தது எங்களது அதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும். இவரது தங்கை சித்ரா, அரசு கல்லூரியிலேயே விலங்கியல் படித்துக் கொண்டிருந்தார். குளிப்பதற்கு வெந்நீர் வைத்து கொடுத்தார்கள். தருமபுரியின் குளிர் எமக்கு வியப்பாக இருந்தது. பின்னர் சூடான இட்லி கொடுத்தார்கள். இட்லி பெரியதாகவும் மெதுமெதுவென்றும் இருந்தது கண்டு வியப்பாக இருந்தது. குஷ்பு இட்லியென்று சொன்னார்கள். அடுத்து கல்லூரிக்கு கிளம்ப வேண்டியதுதான். ஆட்டோ ஏற்பாடு செய்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அருகே இருந்த சகாதேவன் நகரில் மகேஷ் வீடு இருந்தது. நீச்சல் குளம் எதிரே என்றால் சரியாக இருக்கும்.

யாம் முதல் நாள் விலங்கியல் துறைக்கு எப்படிச் சென்றோம் என்பதை அழகுச்சாமி சார் பின்னர் வந்த நாட்களில் மகிழ்ச்சியான தருணங்களில் நடித்துக் காண்பிப்பார். எமது நிலைமை அப்படித்தான் இருந்தது. நண்பர்கள் உதவி செய்தது போலவே, தருமபுரி துறை பேராசிரியர்களும் எம்மீது அன்பும் அக்கறையும் காட்டியது நெகிழ்வானது.

யாம் கிருஷ்ணமூர்த்தி, இங்கு விரிவுரையாளராக சேர்வதற்கு வந்திருக்கிறோம் என்று சொல்வதற்குள் மூச்சுத் திணறிவிட்டது. எம்மைப் பார்த்தவுடனேயே அவர்கள் புரிந்து கொண்டார்கள். எமக்கு என்ன ஆயிற்று எனக் கேட்டு, ஆறுதல் வார்த்தைகள் பேசினார்கள். கிழே முதல்வர் அறைக்கு அழைத்துச் சென்றார்கள். இயற்பியல் துறையைச் சார்ந்த பேராசிரியர் பொறுப்பு முதல்வராக இருந்தார். சான்றிதழ்களை சரிபார்த்தார்கள். எல்லாம் சரியாக இருந்தது.

இன்று பணியில் சேர்வதாக ஒரு கடிதம் கொடுக்கச் சொன்னார்கள். எமக்கு எழுத வரவில்லை. அழகுச்சாமி சார் சேர்க்கை கடிதம் எழுதிக் கொடுக்க, யாம்

கையெழுத்திட்டோம். துறை வருகைப் பதிவேட்டில் கிருஷ்ணமூர்த்தி என்ற பெயருக்கு எதிரே எமது சுருக்கெழுத்தைப் பதிவு செய்தோம்.

அப்பாடா.. ஒரு வழியாக யாம் கல்லூரி பேராசிரியராகிவிட்டோம். எமக்கு கல்வி கற்பித்த அனைத்து ஆசிரியர்களுக்கும் எமது வணக்கங்கள் உரித்தாகட்டும்! அனைவரும் எம்மை ஆசிர்வதிப்பார்களாக! குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்களுக்கும் நன்றிகள். எம்மை பெற்றெடுத்து வளர்த்து பேராசிரியராக்கி அழகு பார்க்கும் எங்கள் ஊருக்கு அனேக நன்றிகள்.

துறைத் தலைவராக அய்யாத்துரை சார் இருந்தார். அன்று மூன்றாமாண்டு மாணவர்களுக்கு மரபியல் குறித்த செய்முறை வகுப்பில் பேராசிரியரோடு யாமும் உடன் சென்றோம். பேராசிரியர் கரும்பலகையில் எழுதிக் கொண்டிருக்கும்போது யாம் உட்கார இயலாதல்லவா. நின்று கொண்டே இருந்தோம். எமக்கு உடல் நிலை சரியில்லை என்பதை பேராசிரியர் கவனிக்கவில்லை. பின்னர் தெரிந்து எம்மை பேராசிரியர்கள் அறையில் சென்று ஓய்வெடுக்குமாறு கேட்டுக் கொண்டார். பேராசிரியருக்கு மிக்க நன்றி.

சேலத்தைச் சேர்ந்த குலசேகரன் சார் அன்புள்ளம் நிறைந்தவராக இருந்தார். மூத்த பேரரிசிரியராக மட்டுமல்லாமல் பழகுவற்கும் இனிமையானவராக இருந்தார். அன்பும், பொறுமையும் நிறைந்த பேராசிரியருக்கு அனேக நன்றி.

சொர்ணலட்சுமி மேடம் நெல்லைக்காரர். எம்மீது மாறா அன்பு நிறைந்தவராக இருந்தார். எம் உடல்நிலை குறித்து மிகுந்த அக்கறை காட்டினார். எம்மால் சிறப்பாக பணியாற்ற முடியும் என அடிக்கடி நம்பிக்கையான வார்த்தைகளைப் பேசி எம்மை உற்சாகப்படுத்திய பேராசிரியருக்கு நெஞ்சார்ந்த நன்றி.

அழகுச்சாமி சார் நல்ல நண்பராக, மூத்த சகோதரராக எம்மை நன்றாக கவனித்துக் கொண்டார். எப்போதும் சிரித்த முகத்துடன், மகிழ்ச்சி நிரம்பியவராக, எல்லோருடனும் கலகலப்பாக பேசக் கூடியவராக இருந்தார். எம்மோடு அடிக்கடி பேசி எமது மனநிலையை கல்லூரி வாழ்க்கை நோக்கி மாற்றிய நண்பருக்கு இதயப்பூர்வ நன்றிகள்.

பேராசிரியர்களின் தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம் சார்பாக பலரும் வாழத்துக்களைப் பரிமாறிக்கொண்டார்கள். கழகத்தின் புதியதோர் உலகம் செய்வோம் குறிக்கோளைப் பார்த்து கூடுதல் மகிழ்ச்சி உண்டானது. எமது

வாழ்வின் உன்னத இலக்கையே ஆசிரியர் கழகமும் நோக்கமாகக் கொண்டிருந்தது விந்தையான ஒற்றுமை.

முதல் நாள் கல்லூரிப் பணி முடிந்தது. எம்மால் கல்லூரி விரிவுரையாளராக தொடர்ந்து சிறப்பாகப் பணிபுரிய முடியும் என்ற நம்பிக்கை வரப்பெற்றோம். முதல் நாளிலேயே எமக்கு நல்ல செய்தி காத்திருந்தது. இரண்டு நாட்களில் நவம்பர் பருவத்திற்கு ஒரு மாதம் வரையிலான விடுமுறை தொடங்க இருப்பதாகத் தெரிந்த செய்தி கேட்டு யாம் மகிழ்வுற்றோம். ஒரு மாத விடுமுறையில் உடல் நிலையை சிறப்பாக முன்னேற்றிவிடலாம் அல்லவா. நல்ல இனிப்பான செய்திதான்.

மற்றொரு மகிழ்வான செய்தியாக ஒரே நாளில் புது வீட்டிற்குப் போகுமளவிற்கு மகேஷின் அம்மா காரியங்களை ஆற்றி இருந்தார். அவர்களது வீட்டிற்கு அருகிலேயே ஒரு வீட்டை வாடகைக்குப் பேசி இருந்தார்கள். ஆயிரத்து ஐறூறு ரூபாய் வாடகை மற்றும் ஐந்து மாத வாடகை முன் பணம். வீடு அழகாக புதியதாக இருந்தது. கேரளத்தைச் சேர்ந்த சந்திரன் அவர்கள் வீட்டுச் சொந்தக்காரராக இருந்தார். எந்த உதவி வேண்டுமென்றாலும் தயங்காமல் கேட்குமாறும், அவர்கள் நிறைவேற்றித் தரத் தயாராக இருப்பதாகவும் அன்பு நிறைந்த வார்த்தைகளைப் பேசினார்கள்.

எமது அப்பா, அதற்குள் பல விசயங்களையும் கற்று கொண்டிருந்தது எமக்கு வியப்பாக இருந்தது. சமையல் பாத்திரங்கள், ஸ்டவ் என சகலத்தையும் நகருக்குச் சென்று வாங்கி வந்திருந்தார். காய் கறிகளை கூறு கூறாக வைத்திருந்தார்களாம். அவருக்கு ஒரே ஆச்சரியம். மக்கள் மிகவும் அன்போடு பேசுகிறார்கள் என்றும் நல்ல ஊருக்குத்தான் வந்திருக்கிறோம் என்றும் மகிழ்ச்சி பொங்கச் சொன்னார். ஏழு ரூபாய்க்கு எவ்வளவு பெரிய ஆப்பிள் என்று காட்டினார். இனிப்பான மாவு ஆப்பிள்கள்.

அப்பா மகிழ்வடைந்தது உண்மைதான். எமக்கும் ஊர் ஒரே நாளில் பிடித்து விட்டது. அன்பான மக்களாக இருந்தார்கள். கல்லூரியும், துறை நண்பர்களும் மிகவும் பிடித்துப் போனது. கல்லூரி தனிமையான இடத்தில் அழகிய இயற்கைக் காட்சிகளோடு பெரிய பரப்பளவில் அமைந்திருந்தது கூடுதல் சிறப்பு. அருகாமையில் தெரிந்த மலைகள் எமக்கு மன மகிழ்ச்சியைக் கொடுத்தன என்றே கூற வேண்டும். துறை பேராசிரியர்களின் அன்பான பேச்சு, அவர்களது உதவிகள்,

ஆறுதல் வார்த்தைகள் ஒரு நல்ல குடும்பத்தில் வந்து சேர்ந்துவிட்டது போன்ற உணர்வைக் கொடுத்தது என்பதே உண்மை.

மாணவர்கள் அன்பு நிறைந்தவர்களாக, மிகுந்த மரியாதை கொடுப்பவர்களாக இருந்ததை யாம் கவனிக்கத் தவறவில்லை. அவர்களைப் போன்றே யாம் உருவத்தில் இருந்ததால் எம்மை ஆச்சரியத்தோடு பார்த்தார்கள். வணக்கம் சார்.. வணக்கம் ஐயா.. என்ற வார்த்தைகளைக் கேட்கும்போது எமது உள்ளம் மிகுந்த மகிழ்வுற்றது என்றே சொல்ல வேண்டும். ஆய்வுக் கூட உதவியாளர்களும் அன்பு நிறைந்தவர்களாக இருந்தார்கள்.

ஒரே நாளில் மற்ற துறைப் பேராசிரியர்களிடமும் நட்பு வளர்ந்து வியப்பிற்குரியது. எங்களது துறை அருகேயிருந்த தாவரவியல், இயற்பியல் பேராசிரியர்கள் இனிமையானவர்களாக இருந்தார்கள். ஜெயக்குமாரராஜ் மதுரை என்பதால் எங்களுக்குள் நல்ல நட்பு மலர்ந்தது. புதிய விரிவுரையாளர்கள் நிறையப் பேர் சேர்ந்திருந்ததால் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிக் கொண்டோம். நல்ல கல்லூரி. அன்பான நண்பர்கள். அருமையான மாணவர்கள். சிறந்த ஊர். அழகிய மலைகள், அருகிலேயே இருக்கும் காவிரிப் பெண். வேறென்ன வேண்டும் இந்த கிருஷ்ணமூர்த்திக்கு.

இரவு மகேஷ் வீட்டில் உணவருந்திவிட்டு சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தோம். இவர்களது அன்பிற்கு என்ன கைமாறு செய்வது? எவ்வளவு நன்றிகள் சொல்வது? நாளை முதல் நாங்களே சமைத்துக் கொள்கிறோம் என்றதற்கு, அவர்களது வீட்டிலேயே தொடர்ந்து சாப்பிடுமாறு வற்புறுத்தினார்கள். வீடு பார்த்துக் கொடுத்ததே பெரிய உதவியென்றும், இனி அவரே சமாளித்துக் கொள்வார் என்றும் அப்பா குறிப்பிட்டார். மறுநாள் புது வீட்டில் பால் காய்ச்சும் வைபவம்.

நாள் 02.11.1998. நேரம் பத்து மணி. புது வீட்டில் புதுப்பாய் புது தலையணையில். நவம்பர் விடுமுறைக்கு ஊருக்குச் சென்று நன்றாக உடல் நிலையைத் தேற்ற வேண்டும், வரும் போது அம்மாவை அழைத்து வர வேண்டும், வீட்டிற்குத் தேவையான பொருள்களை வாங்க வேண்டும், நல்ல ஆசிரியர் என பெயரெடுக்க வேண்டும், உலக வாழ்க்கையை புது மாதிரி மாற்றியமைக்கும் கனவுகளை லட்சியங்களை சாத்தியமாக்கவேண்டும் என்ற எண்ணங்களோடு உறங்க ஆரம்பிக்கிறோம்.

எமக்கு அருகில் அமர்ந்து கால்களை அமுக்கி விடுகிறார் எம் தந்தை. கால்களை அமுக்க வேண்டாம், நீங்க தூங்குங்கப்பா என்று சொல்ல விரும்புகிறோம். எமது தந்தையை பற்றி யாம் பெருமையாக நினைத்துக் கொள்கிறோம். எம் தந்தையை இனி வேலைக்கு அனுப்பக் கூடாது, அக்கா அண்ணன் குடும்பத்தார்க்கு, உறவினர்களுக்கு, நிறைய உதவிகள் செய்ய வேண்டும் என்றெல்லாம் திட்டமிடுகிறோம்.

எமது தந்தையின் எண்ணங்கள் என்னவாக இருந்திருக்கும்? வேலை கிடைத்து விட்டதால் ஒரு நல்ல பெண்ணைப் பார்த்து திருமணம் செய்து வைக்க வேண்டும் என நினைப்பாரோ? ஏற்கனவே சிலமுறை பட்டும் படாமலும் எம்மிடம் பேசியுள்ளார். தூத்துக்குடியில் ஒரு பெரிய இடத்திலிருந்து திருமணத்திற்கு விரும்புகிறார்கள் எனச் சொன்னது நினைவிருக்கிறது. எமக்கு திருமணத்தை விட இவ்வுலகினை நன்முறையில் அடுத்த கட்டத்திற்கு உயர்த்த வேண்டும் என்பதே விருப்பம். திருமணம் செய்யாமல் இருப்பதே கொண்ட கொள்கைக்கு சாலச் சிறந்ததாக இருக்கும் அல்லவா. செப்டம்பர் ஒன்றாம் தேதிக்குப் பின் பெண்கள் பற்றி நினைப்பே வந்ததாகத் தெரியவில்லை.

இதோ ஆண்டுகள் பல கடந்து போய் விட்டன. காலம்தான் எவ்வளவு விரைவாகப் பாய்ந்தோடியவாறு பயணத்தைத் தொடர்கிறது. எம்முள்ளும் எமது ஊரிலும் எத்தனை எத்தனை மாற்றங்கள்.. புதியன புகுதலும் பழையன கழிதலும் என்பதற்கேற்ப, பழைய மனிதர்கள் போயும், புதிய பூக்கள் மலர்ந்தும் எங்கள் ஊர் தனது உயிரோட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

கடந்த நாற்பது வருடங்களாக எமது ஊரோடு உறவாடி வருகிறோம். பத்து வருடங்களைச் சிறார் பருவம் என எடுத்துக் கொண்டாலும், முப்பது வருடங்களாக எங்கள் ஊரினை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டு வருகிறோம். சமீப காலமாக ஊரில் நடப்பவை மெச்சத் தகுந்தவையாக நிச்சயம் இல்லை.

எங்கள் ஊர் எவ்வளவோ மாறியிருக்கிறது. ஊரின் வாழ்க்கை வசதிகள் மாறியிக்கின்றனவேயொழிய, ஒட்டிக் கிடந்த வயிறுகள் உப்பிக் கொண்டு வருகின்றனவே தவிர வாழ்க்கை முறையோ, மக்களின் சிந்தனை முறையோ, சமூகக் கட்டமைபோ மாற்றமடைந்திருப்பதாகத் தெரியவில்லை. நகை, பணத்துக்காக கொலைகள், சாதிச் சண்டைகள், அரசியல் பிணக்குகள், இயற்கைச்

சீரழிவு, சுயநலமான குடும்பச் சூழ்நிலை போன்றவற்றை கருத்தில் கொண்டால் எங்கள் ஊர் வளர்ச்சியடைந்துள்ளதாக நினைக்கத் தோன்றவில்லை.

உலகில் நடைபெறுவதெல்லாம் எங்கள் ஊரிலும் நடைபெறுகிறது என்றால் மிகையாகாது. உலகில் இன்று அரசியல்வாதிகள்தான் ஊரையே வளைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருமுறை பதவிக்கு வந்து விட்டால் ஏழு தலைமுறைக்கும் சொத்துச் சேர்த்துவிட வேண்டும் என்றே பெரும்பாலான அரசியல்வாதிகள் நினைக்கிறார்கள்.

ஊருக்கு நல்லது செய்வது, ஊரை முன்னேற்றுவது, மக்களை நேசிப்பது, ஒரு முன்னுதாரனமாக வாழ்ந்து காட்டுவது, மக்கள் திரளை அடுத்த இலக்கை நோக்கி அழைத்துச் செல்வது, இயற்கையை நேசிக்க கற்றுக் கொடுப்பது, அதனைப் பாதுகாப்பது, தமது பொறுப்பிலுள்ள மக்களை கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொள்வது.. இப்படியெல்லாம் எந்த ஒரு அரசியல் ஆர்வலரும் மக்கள் தொண்டாற்ற வருவது போல் தெரியவில்லை. எங்கள் ஊரும் இதற்கு விதிவிலக்கல்ல. முன்னால் பணக்காரர்கள் மறைந்து அரசியல்வாதிகளே இன்று புதிய பணக்காரர்களாக, பெருநிலமுடையவர்களாக இருக்கின்றனர். ஊரை முன்னிட்டு வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக் கொண்ட பின் அந்த ஊரில்தான் யாரேனும் இருப்பார்களா?

ஊரில் நடந்த நடக்கும் அனைத்தையும் எம்மால் ஆதாரங்களோடு நிரூபிக்க முடியும். இந்திய அரசியல்வாதிகளைப் போல் அண்மைக் காலங்களில் எங்கள் ஊரிலும் ஓட்டுக்குப் பணம் கொடுத்தே பதவிக்கு வந்தார்கள். ஒரு தெருவிற்கு இவ்வளவு பணம், கோவில் கட்டிக் கொடுப்பது, பணத்தை அள்ளி இறைப்பது இங்கும் சாதாரணம். பெண்களுக்கான ஒதுக்கீடு என்றால் தங்கள் வீட்டிலிருந்தே கொண்டு வருவது அனைத்து அரசியல்வாதிகளுக்கம் கைவந்த கலை. ருசியைப் பார்த்தவர்களன்றோ?

நூறு நாள் வேலை கூத்துக்களைச் சொன்னால் ஊரே சிரிக்கும். பளபளக்கும் ஓடையில் எத்தனை முறை தான் மண்ணை அள்ளுவார்களோ. இத்திட்டத்தில் இந்தியாவில் நடக்கும் அத்தனை வித்தைகளும் இங்கும் உண்டு. முக்கியமாக சொந்த வயல்களில் வேலை செய்ய வைப்பது, கூலியை குறைத்துக் கொடுப்பது.. இப்படி பலப் பல. வேலையே செய்யாத மக்கள் பைய் நிறைய சம்பளம் வாங்கிக் கொண்டு எந்த முறைகேட்டை எதிர்த்துக் கேட்பார்கள்?

எங்கள் ஊரை பற்றிக் குறை சொல்கிறோமோ.. மயிலிறகால் தேன் தடவுவது போல் யாம் கூறுகிறோம். எங்கள் ஊராரின் மனம் வருந்தக் கூடாதல்லவா. எங்கள் ஊரில் மட்டுமா இப்படி நடக்கிறது? இந்தியா முழுமையுமே இப்படித்தான். எனவே எங்கள் ஊரிலும் அவ்வாறே. ஒட்டு மொத்த தேசமே மாறினால்தானே எங்கள் ஊரும் மாறும். யாரையும் குறை சொல்வது எமது நோக்கமன்று.

லாரியில் குடிதண்ணீர் வருகிறது. ஒரு குடம் பத்து ரூபாய். கிணற்றுத் தண்ணீரை இப்படி அள்ளி வந்து விற்கிறார்கள். ஊராட்சி மூலம் வழங்கும் தண்ணீர் சப்பென்று இருக்கிறது. தாகம் தணிவதில்லை. யாம் பிறந்த ஊராயிற்றே. எமது ஊராட்சியின் தண்ணீரை எம்மால் ஒதுக்க இயலாதல்லவா. மேலும் எங்கள் புண்ணிய பூமியில் ஊரும் நீரல்லவா. எமது குழந்தைகளை சமாளிப்பதுதான் எமக்கு மிகவும் கடிமையான செயல். உங்கள் ஊர் தண்ணீர் எமக்குப் பிடிக்க வில்லை என்று அடம்பிடிப்பவர்களை என்ன சொல்லிச் சமாளிப்பது? முன்னர் கல்கண்டு போல் இருக்குமாம். யார் கண் பட்டதோ அவ்வளவும் காணாமல் போய்விட்டது. கடைகளில் தண்ணீர் குவளை வாங்கலாமென்றால் ஐந்தாறு மாதங்கள் ஆன குவளைகளாக இருக்கின்றன. கிராமத்தில் யார் உற்பத்தி செய்த நாளை பார்க்கப் போகிறார்கள்?

ஊரின் சில கிணறுகளிலும், ஊருக்கு அருகிலுள்ள சில கிணறுகளிலும் சுவை மிகுந்த நீர் கிடைக்கிறது. பக்கத்திலேயே அருமையான தண்ணீரை வைத்துக் கொண்டு இப்படி சப்பைத் தண்ணீர் குடிக்கிறோமே, ஏன் அங்கிருந்து நமது ஊருக்கு தண்ணீர் கேட்கக் கூடாது என சிலரிடம் யாம் பேசியதுண்டு. காசு போட்டு கிணறு வாங்கினவங்க நமக்கு எப்படிய்யா ஓசியில தண்ணீ கொடுப்பாங்க என்கிறார்கள். அதுவும் சரிதானே. கைக்கெட்டும் தூரத்தில் தேனையொத்த தண்ணீரை வைத்துக் கொண்டு, காவிரியிலிருந்தும், தாமிரபருணியிலிருந்தும் குடிநீர்த் திட்டங்கள் எங்களின் அருமை ஊருக்கு வரப்போவதாகப் பேசிக் கொள்கிறார்கள். பாய்ந்தோடி வரப்போகும் இப்புண்ணிய நதிகளை எதிர்பார்த்து யாமும் காத்திருக்கிறோம்.

ஊரில் எங்கு பார்த்தாலும் பிளாஸ்டிக் பைகள். ஊரார் மனது வைத்தால் ஒரே நாளில் ஊரே சுத்தமாகி விடும். கருவேலக் காடுகளை அழித்தொழிப்பதும் ஊர்க்காரர்களுக்கு ஒரு பொருட்டல்ல. விழிப்புணர்வு இல்லை.

அழகிய ஒரு கண்மாயை சாக்கடையாக்கியாயிற்று. சாக்கடை நாற்றம் வீட்டிற்குள் வருகிறது. எத்தனை எத்தனை விளையாட்டுகள் விளையாடித் திரிந்த

கண்மாய். இயற்கையைச் சீரழித்ததற்குண்டான நேர்சாட்சி இக்கண்மாய். மட்டைப் பந்து விளையாடித் திரிந்த மற்றொரு கண்மாய் மண் அள்ளி குண்டும் குழியுமாகக் கேட்பாரற்றுக் கிடக்கிறது.

முன்பு குளங்களிலும் கிணறுகளிலும் குளிப்பார்கள். முற்றம் தெளிப்பதும், பாத்திரம் துலக்குவதும் மட்டுமே வீடுகளில் நடைபெறும். இன்று குளிப்பது, துணி துவைப்பது என அனைத்துத் தண்ணீரும் தெருவழியாக ஓடி வருகிறது. போதாக் குறைக்கு சிமெண்ட் வேறு. தெரு உள் வழிகளில் நடப்பதற்கே கூச்சமாக இருக்கிறது. அவ்வளவு தண்ணீர் பாய்ந்தோடுகிறது.

இவை அனைத்தையும்விட அதிகமாக கவலை கொள்ள வேண்டியதாக சாதிவெறி தலைவிரித்து ஆடுகிறது. சாதிவெறி மேலோங்குவது எங்களது அழகிய, அன்பு நிறைந்த ஊருக்கு நல்லதல்ல. சமீப ஆண்டுகளில் ஒரு சில சுய நலக்காரர்களால் சாதிவெறி வளர்க்கப்படுகிறது என்பதே உண்மை.

எங்கள் ஊர் என்றில்லை. தமிழகம் முழுக்கவே சாதித் திமிரும், சாதி வெறியும் புற்றுநோய் போல் வேகமாக வளர்ந்து வருகிறது. இது தமிழுக்கும், தமிழர்க்கும், தமிழ்நாட்டிற்கும், உலகிற்கும் நிச்சயம் நன்மையானதாக இருக்காது. அதிக எண்ணிக்கை என்ற பெயரிலும், வீரம் என்ற பெயரிலும் சாதி வெறி ஊக்குவிக்கப்படுகிறது. அண்மையில் ஊரில் ஒரு தேவர் வீட்டு சடங்கு நிகழ்ச்சியில் ஒலிபரப்பப்பட்ட பாடல்களைக் கேட்க வேண்டி வந்தது. மிக மிக மோசமான வார்த்தைகள். உணர்ச்சித் தூண்டல்கள். குறிப்பிட்ட சில பாடல்களை மீண்டும் மீண்டும் போட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். பெரும்பாலான பாடல்கள் கேளுடா, கேளுடி என்றே அழைக்கின்றன.

தேவேந்திரர் அதிகமிருக்கும் ஊர்களில் அவர்கள் பாடல்கள் எப்படியிருக்கும் எனச் தெரியவில்லை. யாம் கேட்டதில்லை. நாயக்கர்கள் என்ன குறைந்தவர்களா? சமீபமாக அவர்கள் வீட்டு நிகழ்ச்சிகளிலும் சாதிப்பாடல்களைப் போடுகிறார்கள். முருகனின் அம்சம் கட்ட பொம்மனாம். வந்து பாருங்கள் என்றே அவர்களும் சவால் விடுகிறார்கள். நாடார், பிள்ளைமார் என்று பட்டியல் நீள்கிறது. பேருந்து பயணங்களில் சாதி, சமுதாயப் பாடல்களை அலைபேசியில் ஒலிபரப்பக் கூடாது என மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் அறிவிப்பு வைக்கப்பட்டுள்ளது. வரும் காலங்களில் நிலைமை இன்னும் மோசமாகலாம்.

தற்போது ஆதிக்க சாதியினரிடையே கீழ்த்தரமான ஒரு போக்கும் நிலவுகிறது. எண்ணிக்கைப் பலத்தைக் காட்டி மற்ற சமூகத்தவரை அச்சுறுத்தி ஊரை விட்டே ஓடும்படிச் செய்வது அதிகரித்து வருகிறது. பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வரும் ஊரைக் காலி செய்து மற்றொரு ஊரில் போய் வாழ்வதென்பது இம்மண்ணின் மைந்தர்கள் உள்நாட்டிலேயே அகதிகளாக ஆவதுதானே. உயிர்ப் பயத்தில் ஊரை, வீட்டை காலி செய்து மூட்டை முடிச்சுகளோடு செல்லும் போது அந்த மக்களின் மனம் எவ்வளவு வேதனையை அனுபவிக்கும்?

திருமலைபுரத்தில் இது போன்ற மிகத்துயரமான சம்பவம் நடைபெற்று. தேவேந்திரர் மக்கள் வீடுகளைக காலி செய்தே போய்விட்டார்கள். பல வீடுகளை அடித்து உடைத்து விட்டார்கள். எமது பெரியம்மா வீடும் ஓடுகள் உடைக்கப்பட்டுக் கிடக்கிறது. வயதான அவர் திரண்டு வரும் கூட்டத்தைக் கண்டு முள் காட்டிற்குள் ஓடி ஒளிந்திருக்கிறார். வீடுகளுக்குள் புகுந்து பொருட்களை உடைத்திருக்கிறார்கள். தேவர் வீட்டுப் பெண்களும் திரளாக வந்து கலலெறிந்திருக்கிறார்கள். ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே. பெண்களைப் போன்றே பள்ளிச் சிறுவர்கள். பள்ளி கூட மாணவர்கள் மூலமாக பல சாதிச் சண்டைகள் ஊர்களில் நடக்கின்றன. இதே ஊர்க்காரர்கள் பேருந்தில் பள்ளிக் கூடம் சென்று வரும் பக்கத்து ஊர் தேவேந்திரர் மாணவர்களை பேருந்துக்குள் வைத்து அடித்திருக்கிறார்கள். வாழ்க மாணவர் சமுதாயம். நல்ல முன்னேற்றமய்யா இது.

சண்டைக்குக் காரணம் தேவேந்திரர் சமூதாயத் தலைவரான தியாகி இம்மானுவேல் அவர்களின் பாடல்களைப் போட்டதுதான். தேவர் சமுதாய திருவிழாவில் ஒரு வாரத்திற்கும் மேல் அவர்கள் பாடல்களைப் போடுகிறார்கள். நாங்கள் போடுவோம், நீங்கள் போடக் கூடாது என்பது என்ன மாதிரியான ஜனநாயகமோ? அதிகமான எண்ணிக்கையுள்ளவர் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்பது எந்த விதத்தில் நியாயம் எனத் தெரியவில்லை. தேவர் புகழ்பாடும், தேவரின பெருமை பேசும் பாடல்களை தேவேந்திரர் காது ஒரு வாரம் கேட்க வேண்டுமாம். ஆனால் தேவேந்திரர் பாடல்களில் ஒன்றுகூட தேவர் காதுகளில் விழக் கூடாதாம். இரண்டு பாடல்கள் பாடுவதற்குள்ளாகவே படையெடுப்பு நிகழ்ந்து விட்டது.

காவல், நீதிமன்றம், சனநாயகம் எல்லாம் இங்கு செல்லுபடியாகாது. முடிந்தால் மோதிப் பார் என்பது தான் விடுக்கப்படும் சவால். ஒரு தேவேந்திரர் இளைஞர் கேட்கிறார்.. நாளைக்கு தேவர்கள் மட்டுமே திருமணம் செய்வோம், நீங்கள் திருமணம் செய்யக் கூடாது என்று சொன்னால் என்ன செய்வது. நியாயமான கேள்வி தானே.

இராமநாதபுரம் மாவட்டத்தில் இதற்கு முன் மிகக் கெடுபிடியான அடக்கு முறைகள் இருந்ததாக யாம் படித்திருக்கிறோம். அட்டவணை சாதியினர் வீடுகளுக்கு வெள்ளை அடிக்கக் கூடாது, தோளில் துண்டு போடக் கூடாது, குடை பிடிக்கக் கூடாது, செருப்பு போடக் கூடாது, நகை போடக் கூடாது என பல கூடாதுகள் போட்டு தீர்மானம் நிறைவேற்றியிருந்தார்களாம். எனவே அந்த இளைஞர் கேட்பதில் நியாயம் இல்லாமல் இல்லை. வரலாறு மீண்டும் திரும்புவதைத்தான் பெரும்பாலானவர்கள் விரும்புகிறார்கள் போலும். மாமேதை அம்பேத்கார் போன்றவர்கள் மிகவும் வலியுறுத்தியதான காலச்சக்கரத்தை பின்னோக்கி நகர்த்திவிட ஒரு போதும் அனுமதிக்காதீர்கள் என்பதெல்லாம் பொய்யாகும் காலம் வருமோ? திருப்பாச்சி அருவாளை தீட்டிக் கொண்டு வரும் இந்த சிங்கம் பெத்த பிள்ளைகள் காலச் சக்கரத்ததை பின்னோக்கி நகர்த்த முயற்சிக்கலாமா?

பிரச்சினை ஆரம்பித்தது பாட்டுப் போட்டதால் அல்ல. தேவேந்திரர்கள் கருப்பசாமி கோவில் கும்பாபிஷேகத்திற்கு நாடகம் போடுவதாய் அச்சடித்துவிட்டார்கள். இவர்கள் எப்படி நாடகம் போடலாம் என்பதும் காரணம். போதாக் குறைக்கு ஆடம்பரமான வண்ண விளக்குகள், அலங்காரங்கள். தேவர் போலவே தேவேந்திரரும் திருவிழாக் கொண்டாடக் கிளம்பினால் எப்படி? இம்மானுவேல் சேகரனுக்கு வைத்த பேனர்களை அகற்றச் சொல்லி முதல்நாளே தகராறு ஆரம்பித்து விட்டது.

பெரியம்மாவைப் பார்க்கச் சென்ற எம்மை காவலர்கள் தடுத்து யாம் எங்கு செல்கிறோம், யாரைப் பார்க்கச் செல்கிறோம் என்று விசாரித்தே ஊருக்குள் செல்ல அனுமதித்தார்கள். மறுநாள் கும்பாபிசேகத்திற்கு யாம் சென்றிருந்தோம். மதியம் போல் திடீரென்று கோவிலிருந்து ஆண்களும் பெண்களும் தகராறு வந்து விட்டதென்று தெருவை நோக்கி ஓடினார்கள். சிறுவனொருவன் அருவாளைத் தூக்கிக் கொண்டு ஓடியதைப் பார்த்த போது எமது நெஞ்சம் பதைபதைத்து விட்டது. தமிழ், தமிழர், தமிழ் மண், தமிழ்ச் சமுதாயம் என்பதன் மீதான எமது நம்பிக்கை

அருவாளெடுத்து ஓடும் அச்சிறுவனைப் பார்த்தபோது நொறுக்கிவிட்டது. நாம் தமிழர்கள்? நமக்கு யாதும் ஊரே யாவரும் கேளிர்? இம்மண் நம்மை ஒரு போதும் மன்னிக்காது.

ஐயர்கள் ஒரு புறம் பறக்கிறார்கள். ஒலி பெருக்கிக்காரர் அவசர அவசரமாக அவர் சாமான்களைக் கழற்றுகிறார். பாதுகாப்பிற்கு நின்றிருக்கும் காவல் துறையினர் சிலையென நிற்கிறார்களேயொழிய சண்டை போடுவதாகச் சொல்லப்படும் இடம் நோக்கி நகரவேயில்லை. சற்று நேரம் கழித்தே தெரிகிறது, யாரோ புரளியைக் கிளப்பியிருக்கிறார்கள்.

இரவு நாடகம் போட காவல் துறையும், அதிகார வர்க்கமும் அனுமதிக்க வில்லை. நாடகக்காரர்களும் வரவில்லை எனத் தெரிகிறது. இரண்டு சமுதாயத்தையும் வைத்து சமாதானக் கூட்டம் நடந்திருக்கிறது. இரண்டு சமுதாயத்தினரும் சாதிப்பாடல்கள் போடக் கூடாது என்று அதிகார வர்க்கம் சொன்னதற்கு தேவர் தரப்பினர் உடன்படவில்லை. நாங்கள் காலங்காலமாகப் போடுகிறோம், இவர்கள் எப்படி இப்போது போடலாம் எனக் கேட்டிருக்கிறார்கள். ஒன்று இரண்டு பேரும் போடக் கூடாது அல்லது இரண்டு பேரும் போடலாம். அதை விடுத்து நாங்கள் போடுவோம், உங்களுக்கு அந்த உரிமை இல்லையென்பது தவறாகத்தான் இருக்க முடியும்.

அன்பிற்கும் சமாதானத்திற்கும் எங்கே மதிப்பிருக்கிறது. தேவர்கள் ஒரு சுபயோக மாலையில் கம்பு, கத்தி, அருவாள், கற்கள், மசால் பொடியோடு தேவேந்திரர் தெருவிற்குள் நுழைந்து விட்டார்கள். தேவர்கள் போல் தேவேந்திரர்கள் வட்டித் தொழில் செய்வதில்லையே. காடு கரைகளுக்குப் போய்விட்டார்கள். பெரும்பாலும் பெண்கள் இருந்திருக்கிறார்கள். தேவேந்திரர் தரப்பிலிருந்து எதிர்க்க ஆள் இல்லாமல், கோபம் வீடுகள் மேல் திரும்பி விட்டது. கற்களை எறிந்தும், தடிகளால் அடித்தும், ஓடுகள், ஆஸ்பெஸ்டாஸ் தகடுகளை நொறுக்கியிருக்கிறார்கள். ஓசியில் கொடுத்த தொலைக்காட்சிப் பெட்டி, பாடுபட்டு சேர்த்து வைத்திருந்த மற்ற பொருட்களும் நொறுங்கிவிட்டன.

அன்று ஆரம்பித்தது இரண்டு சமுதாயத்தினருக்குமான பெரும் பகை. தேவர்கள் தரப்பில் நீதி மன்றங்களுக்கு அலைவதும், தேவேந்திரர் தரப்பில் ஊரில் நிம்மதியாக வாழ முடியாத சூழ்நிலையும் நிலவுகிறது. தேவர் தரப்பிலிருந்து வரும்

சமாதானத்தை தேவேந்திரர் மறுக்கிறார்கள். ஒரு வேளை அந்தச் சண்டையில் யாரேனும் இறந்திருந்தால் என்ன இழப்பைத் தரமுடியும்?

பெண்கள் நீதி மன்றங்களுக்கு அலைவதை தேவர்கள் விரும்பவில்லை எனத் தெரிகிறது. அப்படியெனில் பெண்கள் சண்டைக்கு வந்திருக்கக் கூடாதல்லவா. யாம் தேவேந்திரர் சமுதாயம் என்பதால் ஒரு தரப்பிற்கு ஆதரவாகப் பேசவில்லை. யாம் நடுநிலையோடு இருக்கவே விரும்புகிறோம். என்றைக்கு தேவர்களின் பெரிய மீசைகள், வட்டிப் பணத்தை மிரட்டி வாங்குவதற்குப் பயன்பட்டதோ, அன்றே இம்மண்ணின் வீரம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டு விட்டது. செட்டியார்கள் போல் வட்டித் தொழில் செய்வதற்கா இம்மண் தேவர்களுக்கு வீரத்தை ஊட்டியது? நமது மண் வீரம் விளைந்த மண்ணல்லவா? பிறவியே துக்கம் என்பதற்கு மாறாக பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்வைக் கொண்டாடுவதல்லவா இம்மண்ணின் மரபு.

தேவர்களின் வீரம் இம்மண்ணைக் காக்கவில்லை. எங்கள் பகுதி மண்ணை கமிஷனுக்கு ஆசைப்பட்டு விற்றவர்கள் தேவர்களே. அவர்கள் வீரம் மக்களைக் காக்கவில்லை. மாறாக எளிய மக்களை இம்மண்ணை விட்டு விரட்டுகிறது. இம்மண்ணையும், மக்களையும் யார் பாதுகாக்கிறார்களோ அவர்களே வீரர்கள். அவர்களே உண்மையான தேவர்கள். வீரம் எண்ணிக்கையிலா இருக்கிறது? ஐந்து நூறை வென்ற வரலாறு நமக்குத் தெரியும்தானே? வீரம் உடலிலா உள்ளது? மன உறுதியல்லவோ வீரம்.

திருமலைபுரத்து தேவர்கள் மிக மிக மோசமாக நடந்து கொண்ட ஒன்றாக அவர்கள் காடுகள், வரப்புகள் வழியாக தேவேந்திரர்கள் நடக்கக் கூடாது எனச் சொன்னதைக் குறிப்பிடலாம். இப்படியும் கூடவா மனிதர்களுக்கு சாதிவெறி தலைக்கேறும்? இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் கூட போக்குவரத்து நடக்கிறது. ஒரே ஊர்க்காரர்கள், நட்பாகப் பழகியவர்கள், இப்படியுமா விரோதம் பார்ப்பது? எங்கள் நிலங்கள் வழியாக நடக்கக் கூடாது என்றால் எப்படிப் போய் விவசாயம் செய்வது?

சுற்றுப்புற ஊர்களிலிருக்கும் தேவேந்திரர்கள் அனைவரும் பரளச்சியில் ஒன்றுகூடி இதை எதிர்த்து பெரியதொரு கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறார்கள். அப்படியும் வயல்கள் ஊடாக நடக்க இயலாமல் தேவேந்திரர்கள் தெருவிற்குள்ளேயே முடங்கியிருக்கிறார்கள். வெள்ளாமை எடுக்க இயலாமல் விவசாயி எப்படி கிராமத்தில் வாழ்வது? நம்மை இவ்வூரில் இருக்கவிடக்

கூடாது, விவசாயம் செய்ய விடக்கூடாது என நினைத்துத்தானே இது போன்ற காரியங்களில் தேவர்கள் ஈடுபடுகிறார்கள் என வெதும்பியிருக்கிறார்கள்.

முக்கிய சாலையிலிருந்து ஊருக்கு நடந்து வந்த தேவேந்திரரை மாங்காய் தோப்புக்குள் ஒளிந்திருந்த தேவர்கள் கொலைவெறித் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். இறத்துவிட்டார் என நினைத்திருப்பார்கள் போலும். அடிபட்டவர் சுயநினைவின்றி வெகுநேரம் காட்டுக்குள் கிடந்திருக்கிறார். தேவேந்திரர்கள் என்ன நினைத்தார்களோ. அவரவர்கள் லாரிகளைக் கொண்டு வந்து சாமான்களை அள்ளிக் கொண்டு வெளியூர்களுக்குக் கிளம்பிவிட்டார்கள். இங்கிருந்தால் சண்டை, சச்சரவு என்று தொடர்ந்து கொண்டேயிருக்கும், வெளியூர்களுக்குச் சென்றாவது நிம்மதியான வாழ்க்கை வாழலாம் என படித்த இளைஞர்கள் நினைத்திருப்பார்கள். சில வருடங்களுக்கு முன் அண்ணன் வீட்டார் நான்கு வீடுகள் கட்டினார்கள். இன்று ஒருவரும் ஊரில் இல்லை. எமது அக்கா வீட்டாரும் அருப்புக்கோட்டையில் வாடகை வீடு பிடித்து கிளம்பி விட்டார்கள். ஒரு சில வீட்டார்கள் தவிர அனைவரும் ஊரைக் காலி செய்தது மிகவும் துயரமான சம்பவம்.

கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக காவல் துறையினர் இவ்வூரில் முகாமிட்டிருக்கிறார்கள். இரவு பகலாகக் காவல். ஒரு காவல் துறை வாகனமும், பல காவலர்களும் வீணாய் பொழுதைக் கழிக்கிறார்கள். அரசாங்கம் என்ன செய்யும். பொறுமையும், அறிவுமில்லாத இந்த இரு சமுதாயத்தினரிடம் மாட்டிக்கொண்டு காவல்துறை படாதபாடுபடுகிறது. கொலை, கொள்ளைகளைத் தடுக்க வேண்டியவர்கள் வேலிக் கருவேல மரங்களிலும் தோப்புகளிலும் உட்கார்ந்து செய்தித்தாள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். முக்கிய சாலையிலும் தடுப்பு அமைத்துக் காவல் இருக்கிறார்கள். பேருந்து நிறுத்தத் திண்டுகளில் படுத்துறங்கும் காவலர்கள் தங்கள் நிலையை எண்ணி வருந்தக் கூடும்.

எங்கள் ஊரிலும் சமீபத்தில் ஆட்டைக் காணவில்லையென தேவேந்திரர் ஒருவரை தேவர் குடும்பத்தினர் அடித்து விட்டார்கள். மிதி வண்டியில் சென்றவரை சந்துக்குள் மறைந்திருந்து பின்னாலிருந்து தாக்கியிருக்கிறார்கள். உடனே காவல் துறை குவிக்கப்பட்டுவிட்டது. சாதிச் சண்டையாக மாறிவிடக் கூடாதல்லவா. பல மாதங்களாக காவலர்கள் இரவு பகலாக பேருந்து நிலையத்தில் தங்கியிருக்கிறார்கள். குளித்து உடைமாற்றி, சீருடையணிந்து செய்தித்தாளோடு

உட்கார்ந்து விடுகிறார்கள். போர்வையால் வெயில் படாமல் தங்குமிடத்தை மறைத்திருக்கிறார்கள். காலையில் பணிமாற்ற வரும் காவலர்கள் உணவு எடுத்து வருகிறார்கள். இருக்கும் ஒரு பிளாஸ்டிக் நாற்காலியை ஏட்டய்யாவுக்குக் கொடுத்து விட்டு, கீழே உட்காருவதை மரியாதைக் குறைவாக நினைக்கும் இளமைத் துடிப்பு நிரம்பி வழியும் இளம் காவலர் நின்று கொண்டே செய்தித் தாள் வாசிக்கிறார். அடி வாங்கிய குடும்பம் ஊரைக் காலி செய்துவிட்டது. ஆட்டைக் காணவில்லையெனில் காவல் துறை, நீதி மன்றங்கள் இருக்கின்றனவே.

படித்த பையன்.. கல்லூரியில வேலை பார்க்குறவரு.. இப்படியா அறிவில்லாம இந்த ஊர்ல வீட்டைக் காட்டுவது என எம்மைத் திட்டுகிறார்கள். அருப்புக்கோட்டையில வீடு கட்டக் கூடாதுப்பே எனச் சொல்லாதவர்கள் இல்லை. ஊரு ரொம்ப கெட்டுப் போச்சுப்பே, அடிக்கடி வராதீங்க எனவும் அறிவுரை சொல்கிறார்கள்.

ஏன் தேவரும் தேவேந்திரரும் இந்த அளவிற்குப் பகைமை, விரோதம் பார்க்கிறார்கள்? இரண்டு சாதியினருடைய வாழ்க்கை முறையும் ஏறக்குறைய ஒன்று போல்தான் உள்ளது. பழக்க வழக்கங்கள், சடங்கு முறைகள் பெரும்பாலும் ஒத்திருக்கின்றன. கருப்பசாமியைத்தான் குலதெய்வமாக வழிபடுகிறார்கள். குடி, அடிதடி, பெண் சகவாசம் என எல்லாவற்றிலும் ஒத்துப் போகிறார்கள்.

எமது தந்தை காலத்தில்கூட ஒற்றுமையாகத்தான் இருந்திருக்கிறார்கள். தியாகி இம்மானுவேல் சேகரன் கொலைக்குப் பின்னரே இரு சாதியினரும் அளவுக்கு அதிகமாக ஆக்ரோசம் காட்டுவதாகத் தெரிகிறது. அருமையான இந்த இரண்டு சாதியினரும் மோதிக் கொண்டதால் தமிழ்நாட்டின் தலைவிதியே மாறிப் போனதை இன்னும் இரண்டு சாதியினரும் உணர்ந்தபாடில்லை. தமிழர்களின் இன்றைய அவல நிலைக்கு இந்த இரண்டு சாதியினரைத்தான் குற்றம் சொல்ல வேண்டியதிருக்கிறது. இவர்களோடு நாடாரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். பகையாகவும் எதிரிகள் போன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த மூன்று சாதியினரும் ஒன்று சேர்ந்தால் தமிழர்களின் மண்ணைக் களவாட முடியுமா? நீரை உறிஞ்ச முடியுமா? நிலங்கள் பாழாகியிருக்குமா? கல்வி வியாபாரப் பொருளாகியிருக்குமா? ஆறுகள் பாலையாகிக் கிடக்குமா? சேர, சோழ, பாண்டியர்கள் போலல்லவா இன்னும் பகைமை பாராட்டுகிறார்கள்.

தென்தமிழகத்தில் இவர்கள் என்றால் வடதமிழ் நாட்டில் வன்னியர்களும், ஆதிதிராவிடர்களும்.

தேவர் சாதியினர் வீரமானவர்கள் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் அவ்வீரம் எதற்குப் பயன்படுகிறது என்பதுதான் முக்கியம். பெண்களையும், சிறுவர்களையும் படுகொலை செய்வதற்குப் பெயரா வீரம்? ஓரே ஊரில் ஆண்டாண்டு காலமாய் வாழ்ந்தவர்களை, தம் ஊரில் வசிக்கும் அப்பாவி மக்களை, எங்கோ நடக்கும் சாதிச் சண்டையை மனதில் வைத்து அடித்து விரட்டுவதும். வெட்டிச் சாய்ப்பதும் எந்த விதத்தில் வீரமாக இருக்க முடியும்? நியாயமாக இருக்க முடியும்? சமீப காலமாக இப்படியான கொலைகளும் அரங்கேறுகின்றன. வயதானவர்களை, பெண்களை இப்படி கும்பல் சேர்ந்து கொல்வது அதர்மத்தின் உச்ச கட்டம்.

மக்களையும், எளியவர்களையும், பெண்களையும் காக்க வேண்டியவர்களே அவர்களை படுகொலை செய்வதை என்னவென்று சொல்வது. பல ஊர்களிலும் முன்பு தேவரும், தேவேந்திரரும்தான் காடுகளைக் காவல் காப்பவர்களாக இருப்பார்கள். போர்த் தொழிலைக் கூட ஒரு கலையாக கற்றுத் தேர்ந்தவர்கள் தமிழர்களாம். இப்படியா உணர்ச்சி மேலீட்டில் கொலைகளைச் செய்வது? இவ்விசயத்தில் தேவேந்திரர்களைப் பரவாயில்லை என்றே சொல்லலாம். இம்மண்ணில் இரத்தம் சிந்துவதை தடுப்பவர்களாக இவ்விரு சாதியினரும் மாற வேண்டும்.

சிறுசிறு விசயங்கள் கூட சாதித் தீயாகப் பரவி மக்களைப் பலிகொல்வதற்கு இவ்விரு சாதியினரில் நல்ல தலைமை இல்லாததும் மிக முக்கியமான காரணம் எனலாம். இரு சாதியினரும் அவரவர் சாதியில் தலைமை என ஒருவரை ஏற்பதில்லை. நீர் என்ன எம்மை விடப் பெரியவனா என்றே எண்ணுகிறார்கள். யாம் பல பஞ்சாயத்துக்களில் பார்த்திருக்கிறோம். ஒரு தலைமையின் கீழ் வரவே மாட்டார்கள். அவன்லாம் ஒரு ஆளா, அவனுக்கெல்லாம் என்ன தெரியும் என்பது போன்ற பேச்சுகளை அதிகம் கேட்கலாம். ஓரே தெருவிற்குள் பல பிரிவாக இருப்பார்கள். எமது அனுபவத்தில் சொலவதென்றால் தேவர் சமூகத்தைவிட தேவேந்திரர் சமூகத்தவரிடையே ஒற்றுமைக் குணம் படுமோசம்.

மக்களை வழி நடத்தக் கூடிய அரியதொரு சந்தர்ப்பம் முத்துராமலிங்கத் தேவருக்குக் கிடைத்தது. அவர் தமிழர்க்கான தலைவராக மாறாமல் தமது

சாதியினருக்கான தலைவராகச் செயல்பட்டது தமிழ் நாட்டின் துரதிஷ்டம் என்றே சொல்ல வேண்டும். தேவரைப் பற்றியும், தேவர் சாதியைப் பற்றியும், ஒரு சிறு விமர்சனத்தை கூடத் தாங்கிக் கொள்ள முடியாதவர்களாக தேவர் சாதியினர் ஆக்கப்பட்டு விட்டார்கள் என்பது கசப்பான உண்மை. பெருந்திரளான நாடாரையும் சம எண்ண ஓட்டமுடைய தேவேந்திரர்களையும் அரவணைத்துச் சென்றிருந்திருப்பாரேயானால் தமிழர் வாழ்வு எவ்வளவோ மாறியிருக்கும். தேவரை முன்மாதிரியாகக் கொண்டே தற்போது அச்சாதியினரில் பலரும் அவர்கள் சாதிக்கான தலைவர்களாக மட்டுமே வர விரும்புகிறார்களேயொழிய ஒட்டு மொத்தத் தமிழர்களுக்கும் தலைமைப் பண்பை ஏற்கக் கூடியவராக, மக்கள் திரளை வழிநடத்தக் கூடியவராக கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒரு தேவரையும் காணோம்.

எல்லா அரசியல் கட்சிகளிலும் தேவர் சாதியினரே கோலோச்சுகிறார்கள். பொதுவுடைமைக் கட்சி முதல் அகில இந்தியக் கட்சிகள் வரை அவர்கள்தான். தி.மு.க, அதிமுக, என எந்தக் கட்சியாக இருந்தாலும் மந்திரிகளில் பலமானவர்களாக இவர்கள்தான் இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் எத்தனை சாதிகள் இருந்தென்ன, இன்று தமிழ்நாட்டை ஆண்டு கொண்டிருப்பது முக்குலத்தோர் அல்லவா என தேவரொருவர் ஒரு கடைமுன்பு உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்ததை சமீபத்தில் யாம் கேட்டோம். தேவர்கள் இம்மண்ணை ஆள்வது எப்படி உண்மையோ அதுபோலவே கொலை, கொள்ளை தொடங்கி மணல் கொள்ளை, மலைக் கொள்ளை என அனைத்தும் அதிதீவிரமாக முன்னெடுக்கப்படுகிறது என்பதும் உண்மையே. கூலிக்கு கொலை செய்வதை என்னவென்பது.

கட்சி அரசியலைத் தாண்டி மக்கள் செல்வாக்கான தலைவர்களாக ஒரு தேவரையும் அடையாளம் காண இயலவில்லை. அரசியலைத் தாண்டி இவர்களால் பேசவோ செயல்படவோ முடிவதில்லை. அரசியலுக்கு வந்து பணம் சம்பாதித்து, சொத்துச் சேர்த்து, நிறுவனங்கள் ஆரம்பித்து போதும் என அமைதியாகிவிடுகிறார்கள். தேவர் பெயரைச் சொல்லி அமைப்புகளை ஆரம்பிப்பவர்கள் ஆண்ட பரம்பரை, வீர பரம்பரை என சாதிப் பெருமை பேசி, கலவரங்களை உருவாக்கி, மக்களை பிளவுபடுத்துகிறார்களே தவிர, சமூகம் அமைதியாக, மக்கள் நல்லிணக்கமாக, ஒற்றுமையாக வாழ வேண்டும் என நினைப்பது இல்லை. தமிழ் நாட்டில் அரசியலை வைத்து ஆதாயம் அடைந்து

கொண்டு வருபவர்களில் தேவர் சாதியினரே முன்னணியில் இருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது. அரசியல் மூலமாக அதிகாரமும், காவல் துறை மீதான ஆதிக்கமும் பரவலாக வெளியே தெரிகிறது. பல்வேறு ஒப்பந்தப் பணிகளும் கொடுக்கப்படுவதாகவே தெரிகிறது. பினாமிகளையும் சேர்த்துக்கொள்ளலாம். தேவர் சாதியினரின் ஆடம்பரமான வீடுகளும், பிரம்மாண்ட கார்களுமே இவைகளுக்கு அத்தாட்சியாய் விளங்குகின்றன.

ஒட்டு மொத்தத் தேவர்களையுமே இப்படி வகைப்படுத்த இயலாது. ஆனால் பெரும்பான்மையானவர்கள் சாதிவெறியை விட முடியாதவர்களாக இருக்கிறார்கள் என்பதே உண்மை. திருமலைபுரத்தில் தேவேந்திரக்கெதிரான எந்த நடவடிக்கைகளிலும் பங்கு பெறமாட்டோம் என இருக்கும் தேவர்களும் உண்டு. எமது ஊரிலும் மிக நல்ல உள்ளம் கொண்ட தேவர்கள் இருக்கிறார்கள். நல்லவர்கள் குரல் எங்கே எடுபடுகிறது. சாதிக்கட்டுப்பாடு என வரும்போது ஒருவராலும் ஒன்றும் பேச இயலாது.

இம்மண்ணைப் போற்றக் கூடிய, மக்களை மதிக்கக் கூடிய, மக்கள் திரளை விரும்பக் கூடிய, அன்பும், சகிப்புத் தன்மையும், தியாக குணமும் நிரம்பிய, அனைத்து சாதியினரையும் அரவணைத்துச் செல்லக் கூடிய, மக்களை உணர்ச்சிக் கொந்தளிப்பில் தள்ளி அதன் மூலம் அரசியல் லாபம் அடைய நினையாதவரான, காலத்தைப் பற்றிய ஆழமான புரிதல் கொண்டவரான ஒருவர், இவ்விரு சாதியிலும் உருவாகி தமிழர்கட்கு தலைமை ஏற்க வேண்டும். அப்படியான காலம் நிச்சயம் தமிழகத்தில் பொற்காலமாகவே இருக்கும்.

தேவர், தேவேந்திரர்களுக்கிடையே ஒற்றுமையுணர்வு மேலோங்கி விட்டால், தமிழர்கள் அனைவரும் ஒன்றுபடுவார்கள் என்பது திண்ணம். காலம் இவ்விரு சாதியினரையும் ஒன்றுபடுத்தட்டும். தமிழர் மனங்களில் அமைதி நிலவட்டும்.

தேவர்களைக் குறை கூறி என்ன பயன். தற்போதைய நிலையில் நாடார்களையும் குறை காண வேண்டியதிருக்கிறது. இன்னும் எத்தனை வருடங்களுக்குதான் காமராஜர் புகழையே போற்றிக் கொண்டிருப்பது. அடிமைத் தளையிலிருந்து மீண்டு, கல்வியைக் கையிலெடுத்தவர்கள், இன்று மெல்ல கல்வி வியாபாரிகளாக மாறிக் கொண்டிருக்கிறார்கள் என்பது ஆணித்தரமான உண்மை. கல்வியை சேவையாகக் கொண்டு ஆரம்பித்த நிறுவனங்கள் அதிலிருந்து விலகிக் கொண்டிருக்கின்றன. எம்மால் பல உதாரணங்களைக் கூற இயலும்.

தம்மளவில் நாடார்கள் ஒற்றுமையாக இருக்கிறார்கள். தேவரோடு சற்று அதிக உரசலும் தேவேந்திரரோடு அவ்வப்போது சில முட்டல்களும் உண்டே தவிர சமீபமாக பெரிய அளவிலான பிரச்சினைகளில் இச்சமுதாயம் மாட்டிக் கொள்ளவில்லை. வணிகத்தில் பெருத்த முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள். அரசியல் அதிகாரமும் பெரிதாகவே தெரிகிறது. ஆனால் தமிழர் ஒற்றுமைக்கும், இம்மண்ணின் மைந்தர்களின் நல்வாழ்விற்கும் நாடார்கள் பங்களிப்பு என்ன என்பதை மறக்கலாகாது. ஷத்திரிய குல நாடார்கள் என்று பெருமைப்படுவதற்கேற்றவாறு, சமூகத்தின் கேடுகளுக்கெதிராக நாடார்கள் திரண்டிருக்க வேண்டுமல்லவா?

தேவர்க்கு கூறிய அனைத்துமே இங்கும் பொருந்தும். மண்ணையும், மக்களையும் நேசிக்கக் கூடிய ஒரு தலைமை வர வேண்டும். இம்மண்ணின் மூத்தகுடி என்ற முறையில் உலகில் அன்பையும், சகோதரத்துவத்தையும், சகிப்புத்தன்மையையும் நிலை நாட்டுவதில் நாடார்களுக்கு மிகப் பெரிய கடமை காத்துக் கொண்டிருக்கிறது. தம் சமூகம் என்றில்லாமல் நம் சமூகம் எனத் தமிழர்கள் வெற்றி நடை போட நாடார்கள் கைகோர்ப்பார்கள் என்று நம்புவோம்.

பிள்ளைமார்களுக்கு வருவோமா? பிள்ளைகளின் தமிழ் தொண்டு மிகவும் மெச்சத்தக்கது. தமிழ் நிலம் முன்னேறியிருக்கிறது எனில் பெருமையனைத்தும் பிள்ளைகளுக்கே. தமிழ் மண் பாழ்பட்டுக் கிடக்கிறதெனில் அதற்கும் பிள்ளைகளே பொறுப்பு. அறிவிற் சிறந்த தமிழ் ஆன்றோர்கள் அதைத் தீர்மானிப்பார்களாக.

பிள்ளைமார் அறிவுடைய சமூகமாக இருந்தும், சுயநலமாக சிந்தித்ததால் இன்று இவர்களைப் பின்பற்றி மேலே வரும் அனைத்துச் சாதியினருமே சுய நலமாகவே சிந்திக்கிறார்கள். அறிவில் சிறந்தவர்களெனில் எதில் அறிவானவர்கள் என்பதே கேள்வி. அடித்துக் கொண்டும், வெட்டிக் கொண்டும் சகத் தமிழர்கள் சண்டையிடும் போது, அறிவு கெட்ட தமிழர்களே, நாமெல்லாம் ஒன்றல்லவா, ஒரு தாய் மக்களல்லவா, நமக்குள் பேதங்கள் எதற்கு எனச் சமாதானம் செய்திருந்தால் அறிவானவர்கள் என்று ஏற்றுக் கொள்ளலாம். நமக்கு நல்ல காலம், மூன்று சாதிக்காரர்களும் சண்டைகளில் மூழ்கியிருப்பதால் நம்மைப் பற்றி கவனிக்காமல் இருக்கிறார்கள் எனப் பிள்ளைமார்கள் மகிழ்ச்சியடைவார்களோ? தங்களுக்குள் சண்டையிடுவதன் காரணமாக அல்லவா பிள்ளைகள் வளைத்துப் போட்டிருக்கும் மண்ணைப் பற்றி அறியாமல் இருக்கிறார்கள்? பிள்ளைமாரோடு வெள்ளாளரையும்,

முதலியாரையும் சேர்த்துக் கொள்ளலாம். இவர்களும் முக்குலத்தோராமே. செய்தித்தாள்களில் வரும் சாதி போற்றும் விளம்பரங்கள் அப்படித்தான் சொல்கின்றன. மூன்று பேரும் ஒரே தராசில் வைக்கப்பட வேண்டியவர்களே. தமிழகத்தின் இட ஒதுக்கீட்டால் நல்ல அறுவடை கண்டவர்கள் இவர்களல்லவா?

தமிழகத்தில் தமிழ்க் கல்வி இல்லையாம். இங்கு தமிழே படிக்காமல் ஒருவர் பட்டப்படிப்பு வரை படிக்க முடியுமாம். எங்கு பார்த்தாலும் புற்றீசல் போல் ஆங்கில வழி கல்விக் கூடங்கள் பெருகிவிட்டனவாம். தமிழ் நாட்டில் ஆங்கில வழி கல்விக் கூடங்களை நடத்துபவர்கள் யார்? எந்த அருந்ததியரும், ஆதிதிராவிடரும், தேவேந்திரரும் மலைவாழ் மக்களும், பள்ளிகளை, கல்லூரிகளை நடத்துகிறார்கள்? கல்விக் கொள்ளையர்கள் என இச்சாதியினரைப் பார்த்து யாரேனும் விரல் சுட்ட முடியுமா? தேவர்கள் இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறார்கள். பிள்ளைமார் பிராமணர்களாக மாறிவிட்டால் காலியாகும் இடத்திற்கு தகுதியான இன்னொருவர் வரத்தானே செய்வர். நல்ல முன்னேற்றமய்யா இது. வெள்ளைக்காரர் இடத்தில் பிராமணர். பிராமணர் வாரிசாக பிள்ளை. பிள்ளைவாளைப் பிடித்துக் கொண்டு நாடார். இன்று தேவர். நாளை தேவேந்திரர். ரெட்டியாருக்கும் செட்டியாருக்கும் இடமுண்டு. கவலை வேண்டாம். நாயக்கரை விட்டு விட்டோமோ.

பட்டியல் இனத்தவர் எத்தனை தொழிற்சாலைகளை நடத்துகிறார்கள்? இம்மண்ணையும், காற்று மண்டலத்தையும் மாசுபடுத்துவது எந்தச் சாதிக்காரர்கள் நடத்தும் தொழில் சாலைகள்? தமிழ், தமிழர், தமிழர் பண்பாடு, தமிழர் நாகரிகம், தொல்காப்பியம், உலகின் மூத்த மொழி என்று கூப்பாடு போடுபவர்கள், வடமொழிக்காரர்களோடும், அயல் தேசத்துக்காரர்களோடும் கூட்டாகச் சேர்ந்து இம்மண்ணையும் இம்மக்களையும் சுரண்டுவது உண்மையா இல்லையா? எத்தனை பட்டியல் இனத்து மக்கள் நிலங்கள் வைத்திருக்கிறார்கள்? எத்தனை தலைமுறைகளாக ஆசிரியர்களாகவும், அரசு அதிகாரிகளாகவும் இம்மக்கள் வாழ்க்கை நடத்துகிறார்கள்?

இம்மண்ணில் ஒரு பிடி அரிசியைக் கூட உற்பத்தி செய்யாமல் உண்டு கொழுத்துத் திரிவது யார்? ஒரேயொரு செங்கல் உற்பத்தியில் கூட தங்கள் உழைப்பைத் தராமல் ஊருக்குப் பத்து வீடுகளைச் சொந்தமாக்கி வைத்திருப்பவர்கள் யார்? ஓரிருநாள் தங்குவதற்கு மலை வளத்தைச்

சுரண்டுபவர்கள் யார்? தேயிலை, காப்பித் தோட்டங்களுக்குச் சொந்தக்காரர்கள் யார்?

காப்பி டேக்களிலும், மால்களிலும் இளம் தோழியர் தோழர்கள் தோளில் ஒய்யாரமாகச் சாய்ந்து கொண்டு ஒரு குவளை தேநீரை ஒரு மணி நேரத்திற்கும் மேலாக ரசித்து ருசித்து சுவையான தேநீர் அருந்துபவர்களுக்கு பூச்சித் தொல்லைகளிலும், அட்டைக் கடியிலும், விலங்குகள் துரத்தலிலும், பனியிலும், மழையிலும் கிடந்து உழலும் உழைப்பாளிகள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்றோ, எவ்வளவு கூலி கொடுக்கப்படுகிறது என்பதையோ அறிவார்களா? அவர்கள் வாழும் வீடுகள் எந்த லட்சணத்தில் இருக்கின்றன என்பது தெரியுமா? தேநீருக்குக் கொடுக்கும் பணத்தின் பெரும் பகுதி யாருக்கு லாபமாகச் செல்கிறது? ஆயுள் முழுக்க தேநீர் அருந்துபவர்கள் ஒரே ஒரு நாள் கூட தேயிலைத் தோட்டங்களில் பணிபுரிந்ததாகச் சரித்திரம் இல்லையே. அதுசரி.. அவர்களுக்கென்ன தலையெழுத்தா? இப்படி தேயிலைத் தோட்டங்களில் கிடந்து மடிவதற்கு. அவர்கள் அறிவு ஜீவிகள். உண்ணப் பிறந்தவர்கள். உழைக்கத் தெரியாதவர்கள்.

அட்டவணையினரில் எவ்வளவு பேர் பேருந்து நிறுவனங்கள் வைத்திருக்கிறார்கள்? எத்தனை சதவிகிதம் பேர் சொந்தமான ஆடம்பரக் கார்களில் பவனி வருகிறார்கள்? காற்றை மாசுபடுத்துபவர்கள் யார்? வீட்டிற்கு இரண்டு மூன்று கார்கள் வைத்திருப்பவர்கள் குலம் என்ன? இரண்டு மூன்று கோடிகள் கொடுத்து வீடுகள் வாங்குவது எந்தச் சாதிக்காரர்கள்? பண்ணை வீடுகளை யார் வைத்திருக்கிறார்கள்? தாமும், தம் குடும்ப உறுப்பினர்களும் சுகமாய் வாழ வேண்டுமென்பதற்காக பல பேர் உழைப்பை, பல வேலைக்காரர்களின் வாழ்கையைச் சீரழிப்பது யார்?

நாயை நடைப்பயிற்சி கூட்டிச் செல்ல ஆள் வேண்டும். சமையலுக்கு ஆள். துணி துவைக்க, வீட்டைச் கூட்ட, துடைக்க ஆள். குழந்தையை பார்க்க ஆள். வயதானவர்களை கவனித்துக் கொள்ள ஆள். வாகனம் ஓட்ட, காய்கறி வாங்க, வீட்டுக் காவலுக்கு ஆள் வேண்டும். வீட்டுத் தோட்டத்திற்கும் ஆள் வேண்டும். கணக்கு வழக்குப் பராமரிப்புக்கும் ஆள் வேண்டும். நாயைக் குளிப்பாட்டவும் ஆள் வேண்டும். பசுமாட்டைப் பராமரிக்கவும் ஆள் வேண்டும். இராசயனக் கலப்பில்லாத உணவைக் கொடுக்க தோட்டக்காரர்களும் வேண்டும். இல்லையெனில் சென்னையிலிருப்பவருக்கு பழநி மலைகளில் எப்படி தோட்டங்கள் இருக்கும்?

இப்படி, ஒரு வீடு இன்றி பண்ணை வீடுகள், மலை வீடுகள், கடல் வீடுகள், குளிர் வீடுகள், கோடை வீடுகள், வெளி மாநில வீடுகள், வெளி நாட்டு வீடுகளுக்கும் ஆட்கள் வேண்டும்.

குடும்ப மருத்துவர், குடும்ப வழக்கறிஞர், குடும்பக் கணக்காயர்.. இப்படி ஒரு குடும்பம் சுகமாய் வாழ எத்தனை மனிதர்களின் உழைப்பை, வாழ்க்கையை வீணாக்குகிறீர்கள். கேட்டால் போன ஜென்மத்தில் செய்த புண்ணியத்திற்கு இந்த ஜென்மத்தில் அறுவடை செய்வதாகக் கணக்குச் சொல்வீர்கள். ஏனென்றால் நீங்கள் புத்திசாலிகள். அறிவானவர்கள்.

இப்படி இத்தனை பேர் உழைப்பில் வாழும் உங்கள் வாரிசுகள் மருத்துவராகவோ, பொறியாளராகவோ ஆகி, இம்மக்களுக்கு வைத்தியமோ, சேவையோ பார்ப்பதில்லை. அயல் நாடுகளுக்குச் சென்று அங்குள்ள செல்வந்தர்களுக்கு அல்லவா சேவை செய்கிறார்கள். எவ்வளவு பணத்தைக் கொட்டி ஒரு மருத்துவரை இச்சமூகம் உருவாக்குகிறது? நன்றியில்லாமல் வெளிநாடுகளுக்கு பறந்து விடுவது எந்தச் சாதிக்காரர்கள் என்று தெரியுமல்லவா?

உங்கள் அறிவை நீங்கள் தான் மெச்சிக் கொள்ள வேண்டும். உங்கள் அறிவு உங்கள் சுயநல மேம்பாட்டிற்கா அல்லது சமூக மேம்பாட்டிற்கா? உங்கள் குடும்பம் மடடும் நன்றாக இருந்தால் போதுமா?

அதெப்படி ஏழு தலைமுறைகளாக செடி, கொடிகள் உங்களுக்கு செல்வ வளத்தை அள்ளி அள்ளித் தருகின்றன? ஏழாவது தலைமுறை வைத்தியர் என எவ்வாறு விளம்பரம் செய்ய இயலும்? தொல்பாட்டனார், பெரும்பாட்டனார், முப்பாட்டனார், பாட்டனார், தாத்தா, மகன், பேரன் என இத்தனை தலைமுறைகளாக நோய்களைக் குணப்படுத்தும் மூலிகை ரகசியங்களை வெளிய சொல்லாமல், எப்படி வயித்துப் பிழைப்பிற்குப் பயன்படுத்தி வந்திருக்க முடியும்? சமூக அக்கறையும், மக்கள் மேல் அன்பும் அக்கறையும் இருந்திருந்தால் வாருங்கள், வாருங்கள்.. இந்த மூலிகைச் செடியில் இந்த நோய் குணமாகும் எனக் கூவிக் கூவியல்லவா மக்களிடம் சென்று சேர்த்திருக்க வேண்டும். அவரல்லவோ அறிவானவர்.

அறிவு எப்படி வயிற்றுப்பாட்டிற்குப் பயன்படும்? அப்படிப் பயன்படுவது அறிவா? அதிலும் கொடுக்கும் பணத்திற்கு ஏற்ப மூலிகை வைத்தியம். மூலிகைகளை உண்டாக்கியது யார்? அதனுள் மருத்துவக் குணங்களை நிரப்பியது யார்? கொடுக்கும் பணத்தின் அளவிற்கு ஏற்ப வைத்தியம் செய்ய இயலுமா? இதென்ன

வெட்கக் கேடு. உங்கள் வைத்தியத்தில் தீர்க்க முடியாத பிரச்சினைகளோ, நோய்களோ இல்லவே இல்லை. உங்கள் விளம்பரங்களே சாட்சி. இதில் சண்டைகள் வேறு. தமிழ்நாட்டு இளைஞர்கள் மேல் எவ்வளவு அன்பு. கண்ணே, ராஜா, கேளடா.. ஆகா, ஆகா.. தமிழ் நாட்டு இளைஞர் ஆண்மைத் திமிரோடு வீறுகொண்டு எழுவதில் எவ்வளவு அக்கறை.. ஆனந்தம். இரண்டு, மூன்று படிக்கும் குழந்தைகள் பெற்றோரிடம் வயாக்ரா என்றால் என்ன என்று கேட்கிறார்கள். எந்த தொலைக்காட்சி நிகழ்ச்சியை பார்த்தாலும் இவர்கள் விளம்பரங்கள்தான் கோலோச்சுகின்றன. கண்ணே, ராஜா, தமிழனே, பத்து மணிக்கு மேல் வீறு கொண்டு எழு. தமிழர்கள் இத்தனை ஆண்மையற்றவர்களா? தமிழர்கள் போர்க் கலையிலும், காதல் கலையிலும் சிறந்தவர்களாமே. உண்மைதானா..

ஒரு எடத்த வாங்கிப் போடுங்க.. பின்னாடி எங்கேயோ போய்டுவீங்க. நிலத்தை கூறு போட்டு காசு பார்க்கும் முதலாளிகள் யார்? எந்த சாதிக்காரர்கள்? எங்கும் ரியல் எஸ்டேட்டுகளாகப் பூத்துக் குலுங்குகின்றனவே. யார் இப்படி நிலமங்கையை விற்பது? பூமியெங்கும் கான்கிரீட் காடுகளாக முளைத்துவிட்டனவாம். யாருக்குக் கவலை. புல் கூட முளைக்க முடியாமல் பூமிதேவியை, அம்மையை வஞ்சிப்பது யார்? எந்தச் சாதி? கேள்வி ஒன்றே ஒன்று தான். எத்தனை அட்டவணைக்காரர்கள் ரியல் எஸ்டேட்டில் கொடிகட்டிப் பறக்கிறார்கள்? அறிவுள்ள சமூகமாக இருந்தால் நிலத்தை இவ்வாறு பாழாக்குவார்களா? நானூறு சதுர அடி வீடுகளில் வாழும் மக்கள் யார்? நான்காயிரம் சதுர அடிகளிலும், நாற்பதாயிரம் சதுர அடி வீடுகளிலும் வாழும் மக்கள் எந்த கூட்டத்தைச் சார்ந்தவர்கள்? நூறு கிலோ மீட்டர் தாண்டியும் சென்னை வீங்குவது யாரால்?

பட்டுப்புடவை பின்னாலும், நகைகள் பின்னாலும் மூச்சிரைக்க ஓடிக் கொண்டிருக்கும் சமூகம் எது? எத்தனை அட்டவணை சாதியினர் முப்பது, நாற்பது வகை உணவுப் பண்டங்கள் பரிமாறி திருமணங்கள் செய்கிறார்கள்? வரதட்சணைக்கு யார் காரணம்? எந்த சமூகத்தில் முதிர் கன்னிகள் நிறைந்திருக்கிறார்கள்?

கோடிகளில் புரளும் ஒப்பந்தங்களுக்குச் சொந்தக்காரர்கள் யார்? பெரிய ஒப்பந்ததாரர், அவருக்கு அடுத்த நிலை, அதற்கு அடுத்த நிலை எனக் கடைநிலை வரை ஒப்பந்தங்களுக்குக் காரணம் யார்? கடைநிலை ஒப்பந்தங்கள் வரை

கொடுக்கப்படும் பங்குத் தொகை யாருக்கு செல்கிறது? ஒப்பத்தங்களை வெறுமனே கைமாற்றி விட்டு காசு சம்பாதிப்பவர்கள் யார்?

மருத்துவக் கொள்ளைக்கு யார் காரணம்? ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலும், கல்வியல் கல்லூரிகளிலும் கோடி கோடியாய்ச் சுருட்டியவர்கள் யார்? மூலை முடுக்கெல்லாம் பொறியியல் கல்லூரிகளை கட்டிக் கொண்டு. வெளி மாநிலங்களிலிருந்து மாணவர்களை இறக்குமதி செய்பவர்கள் எந்த சாதிக் காரர்கள்?

ஆண்டுக்கு முந்நூறு சினிமாக்களை தயாரிப்பது எந்தத் தமிழர்கள்? மாணவர்களையும், இளைஞர்களையும் சினிமாப் பைத்தியங்களாக மாற்றியது யார்? தமிழ் நாட்டில் யாருக்கு தெருவுக்குத் தெரு சிலை வைத்திருக்கிறார்கள்? அறிவியல் அறிஞர்களுக்கு, தேசத்திற்காக உழைத்தவர்களுக்கு, சிந்தனை சிற்பிகளுக்கு ஊரெல்லாம் சிலை இருக்கிறதா அல்லது சாதித்தலைவர்களுக்கும், நாடகக்காரர்களுக்கும் ஊரெல்லாம் சிலை இருக்கிறதா?

தமிழை வைத்து பிழைப்பு நடத்துபவர்கள் எந்த சாதிக்காரர்கள்? தமிழ்க் கடையில் கொள்ளை லாபம் பார்த்தவர்கள் யார்? ஆங்கிலத்தை அமோகமாக அறுவடை செய்பவர்கள் யார்? எழுதி, எழுதியே பணமும், பெயரும், புகழும் சம்பாதித்தவர்கள் யார்? ஒருவர் நூற்றுக்கும் மேற்பட்ட புத்தகங்களை எப்படி எழுத முடியும்? எதற்காக வண்டி வண்டியாகப் புத்தகங்களை எழுத வேண்டும்? யாருக்காக இவை எழுதப்படுகின்றன? தமது அறிவை வெளிக்கொணர எழுதப்படுகின்றனவா? அல்லது சமுதாய முன்னேற்றத்திற்காகவா? அல்லது தமிழ் அன்னையின் மகுடத்தில் ஒரு வைரக்கல்லாக வைப்பதற்கு புத்தகங்கள் எழுதப்படுகின்றனவா? ஆதீனங்களையும், மடாதிபதிகளையும் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

அடுக்குமாடிக் குடியிருப்புகள், வணிக வளாகங்கள், துணிக் கடைகள், நகைக் கடைகள், கல்விக் கூடங்கள், தொழிற் சாலைகள், அரசு ஒப்பந்தங்கள், பேருந்து கம்பெனிகள், தொலைக் காட்சிகள், வெளிநாட்டு வாய்ப்புகள், மலைக் காடுகள், பெருங்கோயில்கள், வாடகை இயந்திரங்கள், பின்னலாடை தொழில்கள், ஏற்றுமதி இறக்குமதி, வேலையாட்கள் இறக்குமதி என சகலத்திலும் கோலோச்சிக் கொண்டிருக்கும் சாதி, சாதிகள் எவை? அவர்கள் தமிழ்நாட்டில் எவ்வளவு சதவிகிதம் இருக்கிறார்கள்? அரசியலை விட்டு விட்டோமா?

அந்தணர் என அன்பொழுக தமிழ் மறைகளால் அறியப்படும் பிராமணர்களில் மிக மிகச் சிறிய எண்ணிக்கையினர் மட்டுமே பொது நலன், உலக நன்மை, சமூகத்தின் மீது அன்பு என இருக்கிறார்களே தவிர பெரும்பான்மையினர் அவரவர் வாழ்க்கை வசதிகளைத்தான் முக்கியமாகக் கருதுகிறார்கள். பெரும்பாலும் தன் குடும்பம் எனும் சுயநலத்தோடுதான் சிந்திக்கிறார்கள்.

பிராமணர்கள் தங்களது கல்வியால் இந்தியச் சமூகத்தை வேரோடு மாற்றியிருக்க முடியுமே. சமூகத்தின் கூரையாக இருக்கும் இவர்களைப் பார்த்தல்லவா அனைத்துச் சாதியினரும் மாறிக் கொண்டிருக்கிறார்கள். அறிவாலும் எளிமையாலும், அன்பாலும் இச்சமூகத்தின் உச்சாணிக்கே சென்றவர்கள், இன்று எப்படி வாழ்கிறார்கள்?

அனைத்து வேதங்களும் கற்றறிந்த பிராமணர்கள், நாம் என்றுமே இச்சமூகத்தில் முதன்மையானவர்கள், வேத காலத்தில் புரோகிதர்களாக, பிறகு அரசர்களுக்கு அமைச்சர்களாக, வெள்ளையர்கள் காலத்தில் ஆட்சியாளர்களாக, பின் வழக்கறிஞர்களாக, கணக்காயர்களாக, தற்போது கணினி சார்ந்தவர்களாக.. இப்படி நாம் எப்போதுமே நன்றாகவே வாழ்கிறோம், இனிமேலும் நம் தலைமுறைகள் நன்றாகவே வாழ்வார்கள் என்கிறார்கள். பிராமணர்கள் நன்றாக வாழட்டும்.

ஒரு பெரிய பணக்காரரிடமோ அல்லது பெரியதொரு நிறுவனத்திடமோ கணக்காயராகப் பணிபுரியும் பிராமணர், தமது மனச்சாட்சியை அடகு வைக்காமல் பணியாற்ற இயலுமா? பணம் வைத்திருக்கிறீர்களே, ஒழுங்காக இவ்வளவு வரியைக் கட்டுங்கள் என நேர்மையாகக் கணக்குப் பார்த்துச் சொல்ல முடியுமா? எந்த அளவிற்கு வரி கட்டாமல் அரசாங்கத்தை ஏமாற்றலாம் என புட்டுப் புட்டு வைப்பவர் யார்? ஒரு நிறுவனம் வரி கட்டாமல் ஏய்ப்பதற்கான அத்தனை அம்சங்களையும் அலசி ஆராய்ந்து ஆலோசனைகள் அளிப்பவர்கள் யார்?

வேத அறிவையும், ஆங்கிலக் கல்வியையும் பிராமணர்கள் எந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தினார்கள் மற்றும் பயன்படுத்துகிறார்கள்? நேரிடையான கேள்விதான். வயிற்றுப் பாட்டிற்கா அல்லது ஞானத் தேடல்களுக்கா?

வேதகாலத்திலிருந்து இன்று வரை மக்கள் சொல்லொணாத் துயரில் வாழ்ந்திருக்கிறார்களே? அம்மக்களுக்கு இவர்கள் ஆற்றிய சமூகப் பங்களிப்பு என்னவாக இருக்கிறது? பெருங்கூட்டமான மக்களை ஒதுக்கி வைத்தும், அவர்கள் மீளாத் துயரில் தவித்த போது, தம் அறிவால் அம்மக்களுக்கு உதவாமலும், தாமும்,

தம் குடும்பமும், கூட்டத்தாரும் மட்டுமே சுகமாக வாழ வேண்டும் என்று விரும்பிய வர்கள் பிராமணர்கள் என்றல்லவா சமூகம் இவர்களைப் பழிக்கிறது.

தம் அறிவைத் துணையாகக் கொண்டு ஆயிரமாயிரம் தீமைகளை அகற்றியிருக்கலாமே. மன்னர்களை, மக்களை நல்வழியில் நடத்தியிருக்கலாமே. பெரும் போர்களைத் தவிர்க்கச் செய்திருக்கலாமே. அனைத்து மக்களுக்கும் உணவு கிடைப்பதை உறுதி செய்திருக்கலாமே. மக்களுக்கு முன் மாதிரியாக வாழ்ந்து காட்டியிருக்கலாமே. விரல் விட்டு எண்ணக் கூடிய சிலர் தவிர பெரும்பான்மையான பிராமணர்களின் சமூகப் பங்களிப்பு என்ன? சிலர் மக்களின் மேல், சமுதாயத்தின் மேல் கொண்டிருந்த அன்பும் அக்கறையும் போற்றுதலுக்குரியது.

அந்தணர்களின் எளிமையும், உண்மையும், நேர்மையும், பொதுநல அறிவும் பிராமணர்களிடம் எங்கே போனது? எந்தப் பிராமணர் எளிமையாக இருக்கிறார்? எமது வீட்டருகே இருக்கும் கோவிலுக்கு வெள்ளிக் கிழமைகளில் சென்று பார்த்தால் தெரியும் பிராமணர்களின் எளிமை. எத்தனை ஆடம்பரமான கார்கள். விலையுயர்ந்த பட்டுச் சேலைகள். சரம் சரமான நகைகள். கணினி போன்ற கைபேசிகள். மடத்தின் அதிபதி வந்திருந்தபோது காருக்குள்ளேயே உடை மாற்றி எவ்வளவு எளிமையானவர்களாக வெளியே வருகிறார்கள்? வீடுகளுக்குத் திரும்பும் போது மறுபடியும் காருக்குள் உடை மாற்றுகிறார்கள். கழுத்தில் கிடக்கும் சங்கிலிகளை துண்டால் மறைக்கப் படாதபாடு படுகிறார்கள்.

வேத அறிவை பெருநிலங்களில் முதலீடு செய்தவர்கள் பிராமணர்களல்லவா? பண்பாட்டில், வீரத்தில், கல்வியில் உயர்ந்த நிலையிலிருந்த இத்தேசம் அந்நியருக்கு ஆயிரம் வருடங்களுக்கு மேல் அடிமைப்பட்டுக் கிடந்ததற்கு இவர்களது சுயநல வாழ்க்கையல்லவா முதற்காரணம். நாங்கள் சொல்வதை யார் கேட்பார்கள் என்று சொல்ல முடியாதே. சொல்லிப் பார்த்தீர்களா என்பதே இங்கு கேள்வி. அனைத்தும் விதிப்படியே நடக்கும் என்றும் கடவுள் விருப்பம் அது என்றும் நினையாமல் வேதக் கல்வியால், அறிவால், அன்பால் இம்மாநிலத்தை மாற்றியமைக்க மதியைப் பயன்படத்தியிருக்கலாமே. விதி பெரிதா மதி பெரிதா என்றால் மதியின் பக்கமல்லவா பிராமணர்கள் நின்றிருக்க வேண்டும்.

அனைத்து உயிர்களும், உடல்களும், நாராயணர் வடிவங்களாமே. மற்ற சாதிக்காரர்களுக்கு வேண்டுமானால் இவ்வுண்மை தெரிந்திருக்காது.

பிராமணர்களுக்கு நிச்சயம் தெரிந்திருக்கும். இப்படியா நிறத்தால், சாதியால், மதத்தால், பொருளாதாரத்தால் மக்களை பிளவுபடுத்துவது அல்லது பிளவுபடுத்த அனுமதிப்பது?

யாம் சமீப ஆண்டுகளாக ஸ்ரீரங்கம் அடிக்கடி சென்று வருகிறோம். அது ஸ்ரீரங்கநாதரின் கோவில்லவா.. தம்மைப் பார்க்க வரும் விருந்தினர்களை இப்படியா ஸ்ரீரங்கர் நடத்துவார்? எதற்காக கோவிலுக்கு வந்தோம் என்றல்லவா எளிய மக்கள் புலம்பியபடி செல்கிறார்கள். தர்மதரிசனத்தில் இரும்புக் கூண்டுக்குள் மணிக்கணக்காக மக்கள் அடைந்து கிடக்கிறார்கள். திருவ

ரங்கனைத் தரிசிக்க இப்படியா மக்களை முண்டியடிக்க வைப்பது. அதிகாரம் மிக்கவரோ, அரசியல்வாதியோ, அரசு அதிகாரியோ வந்தால் எவ்வளவு தாங்குகிறார்கள? இறைவன் முன் அனைவரும் சமமா ஆன்றோர்களே.. சுவாமி தரிசனத்திற்கு கட்டணம் கூடாது எனும் முதல் குரல் அந்தணர்களிடமிருந்தல்லவா வரவேண்டும். கட்டணம் வசூலித்தால் நாங்கள் பூஜைகளை நிறுத்துவோம் என்றல்லவா படித்த, அறிவுமிக்க, உலக நன்மை கொண்ட, ஈரேழு உலகங்களிலும் நம்பிக்கையுள்ள அந்தணர்கள் போர்க் கொடி உயர்த்தியிருக்க வேண்டும். எந்த ஒரு கோவிலிலும் இப்படி நடைபெற்றதாக யாம் அறியவில்லையே. தர்ம தரிசனம், சாதா தரிசனம், விரைவு தரிசனம், அதிவிரைவு தரிசனம், விரைவில் புல்லட் தரிசனத் திட்டத்தையும் செயல்படுத்துவார்கள் என எதிர்பார்க்கலாம்.

மூளை ஒழுங்காக இருந்தால் மற்ற அனைத்து உடல் உறுப்புகளும் நன்கு செயல்படும். தலையே சரியில்லையென்றால் மற்றவை எந்த லட்சணத்தில் இருக்கும். அப்படித்தான் இச்சமூகம் சீரழிந்து கிடக்கிறது. மக்களே வாருங்கள்.. இம்மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் எனப் பிராமணர்களல்லவா அறைகூவல் விடுத்திருக்க வேண்டும். எது நடந்தாலும் எமக்கென்ன என்று இருப்பதற்கு அறிவெதற்கு? வேதங்கள் எதற்கு? அட.. தெய்வங்கள்தான் எதற்கு? இம்மண்ணின் தெய்வங்கள் பெருந்தெய்வங்களல்லவா? படைத்தலையும், அழித்தலையும், காத்தலையும் செய்வதற்கு ஆயிரக்கணக்கான பெருந்தெய்வங்கள் இங்குண்டு, ஆனால் மக்களை மகிழ்ச்சியாக வாழவைக்கத்தான் ஒரு தெய்வத்திற்கும் மனமில்லை போலும்.

தேவர், நாடார், பிள்ளைமார், பிராமணர் சாதிகளை விமர்சிக்க எமக்குத் தகுதியிருக்கிறதா? தகுதியைத் தாண்டி அச்சாதியினர் இதனை எவ்வாறு எதிர்

கொள்வார்கள்? தமிழ் நாட்டில் சில சாதிகளை என்னவேண்டுமானாலும் விமர்சிக்கலாம். ஒன்றிரண்டு சாதிகளை எதுவும் சொல்லிவிட முடியாது. யாம் எந்தத் தைரியத்தில் இவ்வாறு விமர்சிக்கிறோம்? சமீப காலமாக அச்சு ஊடகங்களுக்கு எதிராக சாதிகள் எவ்வாறு திரண்டெழுகின்றன என்பதையும் யாம் அறிந்தே வைத்திருக்கிறோம். எமக்குக் கவலையில்லை. எமக்குச் சுயநலமில்லை. எமது நோக்கம் தமிழர்களை சாதி, மதம் கொண்டு பிரிப்பதல்ல. யாம் இம்மண்ணையும் மக்களையும் நம்புகிறோம்.

தமிழ் நாட்டின் மேலும் பல சாதிகளைப் பற்றி எழுத வேண்டும் எனும் பேராவல் இருக்கிறது. முக்கியமாக ஆதிதிராவிடர், வன்னியர், கொங்குவேளாளக் கவுண்டர் சாதிகளைப் பற்றி. இருப்பினும் எமது பகுதி தென் தமிழகம் என்பதால் இச்சாதிகளை விமர்சனம் செய்வது நன்றாக இருக்காது என நினைக்கிறோம். மேலும் செட்டியார், ரெட்டியார், யாதவர், கம்மாளர், கம்பளத்தார் சாதியினர்.. இப்படி பட்டியல் போட்டால் எழுதுவது நிற்காது. சொல்லாமல் விட்ட அனைத்து சாதிகளையும் சேர்த்துக் கொள்க.

வட தமிழ்நாட்டில் பத்து வருடங்கள் வாழ்ந்த அனுபவம் எமக்குண்டு. வன்னியர், முதலியார், ஆதிதிராவிடர் பற்றி யாம் அறிவோம். மேற்கு மண்டலத்தில் கடந்த எட்டு வருடங்களாக இருக்கிறோம். ஓரளவிற்கு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சாதியினரையும் யாம் அறிந்தேயிருக்கிறோம்.

தமிழ் மண்ணின் அனைத்து சாதியினரிலும் மிகவும் வஞ்சிக்கப்பட்ட மக்களாக ஆதி திராவிடர்கள் இருக்கிறார்கள். இம்மக்களை கைதூக்கி விடுவது அனைத்து தமிழர்களின் கடமையென்றே யாம் கருதுகிறோம். வரலாறு நெடுகிலும் இச்சமுதாயம் மிகப் பெரிய உழைப்புச் சுரண்டலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. எமது அனுபவத்தில் இச்சமுதாயத்தினரிடம் தன்னெழுச்சி இல்லையோ என ஐயுற வேண்டியுள்ளது. படித்தவர்களிடம் திறமையும், புத்திசாலித்தனமும் இருக்கிறது. ஆனாலும் ஆண்டாண்டு காலமாகத் தொடரும் ஒடுக்கு முறைக்கு எதிராக இம்மக்களில் ஏன் தன்னெழுச்சி உருவாகவில்லை என்பது விவாதத்திற்குரியது. எளிய மக்கள். கல்வியாலும், கிறித்துவ மதக் கோட்பாடுகளாலும், மேலை நாகரிக எண்ணங்களாலும் இளைஞர்கள் மனம் மாறத் தொடங்கியிருப்பது கண்கூடாகத் தெரிகிறது. சிலரின் செயல்பாடுகளை வைத்து ஒட்டுமொத்தச் சமுதாயத்தையும் தூற்றுவது ஏற்புடையதல்ல. தமது கல்வியால், அறிவால், உழைப்பால்,

உண்மையால் ஒட்டுமொத்த சமுதாயத்தையே மாற்றக்கூடிய வலிமை கொண்டோராக இச்சமுதாய மக்கள் மாற வேண்டும். தமிழ்நாடு முழுதுமல்லாமல் உலகெங்கும் பரவியுள்ள ஆதி திராவிடர்கள், தமிழர்களின் சிந்தனை மாற்றத்தினை முன்னெடுக்கவும் வேண்டும்.

எமது பார்வையில், அனுபவத்தில் வன்னிய சமுதாய மக்கள் அன்பானவர்கள். பெரும்பான்மையினர் ஏழ்மை நிலையில் இருக்கிறார்கள். கல்வியால் சிறப்பாக முன்னேறி வருகிறார்கள். அற்புதமான சமுதாய எழுச்சியைக் கண்டிருக்கிறார்கள். ஆனாலும் சமீப காலச் செயல்பாடுகள் மெச்சத் தகுந்த அளவில் இல்லை. அனைத்து சமுதாய மக்களையும் அரவணைத்துச் செல்வதை விடுத்து, சாதிகளாய்த் தமிழரைப் பிரிப்பது ஏற்புடையதல்ல. காரணம் எதுவாக இருப்பினும் வன்முறைப் பாதை சரியானதல்ல. தெற்கைப் போல் வடக்கும் மாறி வருவது அறிவுடைய செயலன்று.

வடக்காவது பரவாயில்லை என நினைக்கத் தோன்றுகிறது மேற்கு. அன்பிற்கும், அறிவிற்கும், பண்பாட்டிற்கும் பெயர் பெற்ற கொங்கு வேளாளக் கவுண்டர்களில் ஏற்பட்ட இந்த திடீர் மனமாற்றம் திகைக்க வைக்கிறது. இவ்வளவு படித்த, முன்னேறிய சமுதாயம், சாதியை, சாதிவெறியை, வன்முறைப் பாதையை கையிலெடுக்கலாமா? மேற்கிற்கு அழகு அறிவே. வீரமல்ல.

இருநூறு வருடங்களுக்கு முன் மேற்குலகில் ஏற்பட்ட தொழிற்புரட்சி காலகட்ட வேகத்தில் இன்று மேற்கு மாவட்டங்கள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. நிலவுடைமைச் சமுதாயம், ஓரளவிற்கு தன்னிறைவு பெற்று, கல்வியிலும், தொழில்களிலும் முன்மாதிரியாக இருப்பது நல்லதுதான். மேற்குலகின் தொழிற்புரட்சியில் சூழ்நிலையின் பங்கு அறியப்படாமல் இருந்தது. இன்று உலகமே சூழ்நிலை பற்றி கவலை கொள்ளும்போது கொங்கு மண்டலத்தின் சுற்றுச் சூழல் எப்படி சூறையாடப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மிகவும் துயரத்துடன் பார்க்கிறோம்.

மேற்கின் மண்ணும், மலைகளும், ஆறுகளும், காடுகளும் பெருமளவில் சிதைக்கப்பட்டுவிட்டன என்றே யாம் கருதுகிறோம். அமராவதியையும், காவிரியையும் மனம் பேதலிக்காமல் நம்மால் காண இயலவில்லை. கொழுத்த பணக்காரர்கள் ஓரிரு நாள் தங்குவதற்காக ஆண்டாண்டு காலமாய் பேணிப் பராமரித்த தங்கள் தோப்புகளை கவுண்டர்கள் விற்றார்கள் என்பது வரலாற்றில்

பதிவாகிவிட்டது. ஆண்டான் அடிமை உறவாக இருந்த கவுண்டர் அருந்ததியர் உறவிலிருந்து அருந்ததியர் விடுதலை பெற ஆரம்பித்தவுடன், அச்சமுதாயம் மேல் எவ்வளவு காழ்ப்புணர்ச்சி கட்டவிழக்கப்படுகிறது? அவர்களது உழைப்பால், தியாகத்தாலல்லவா விவசாயத்தில் கொங்கு செழித்தது. அம்மக்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியல்லவா பாராட்ட வேண்டும். தென் தமிழகத்திற்கும் கொங்கு நன்றி சொல்ல வேண்டும். பஞ்சு மில்களில் வாடி வதங்கியவர்கள் இவர்கள்தானே. தற்போது வடநாட்டவர்கள் வகையாக மாட்டினார்கள். திருப்பூரை டாலர் சிட்டியாக மாற்றியது யார்? மண்ணின் வளத்தையும், மக்களின் உழைப்பையும் சுரண்டிக் கொழுத்தவர்கள் யார்? வெளிதேசத்தவர் தம் மண்ணை கண்ணை இமை காப்பது போல் காத்துக் கொண்டிருக்க நம் மண்ணை பாழ்படுத்தி, அவர்கள் ஒய்யாரமாக அணியும் பனியன்களை ஏற்றுமதி செய்வது எப்படி அறிவுடைமையாகும்? மண்ணையும் மக்களையும் சூழ்நிலையையும் கெடுப்பவர்கள் அறிவானவர்களாக இருக்க முடியுமா?

நண்பர்களே.. நலம் தானே. தொன்னூற்றி எட்டாமாண்டு எழுத நினைத்த பத்தகம் இது. கொஞ்சம் தாமதித்துவிட்டது. அது அதுக்கு நேரம் காலம் கூடி வரவேண்டும் எனப் பெரியவர்கள் சொல்வார்கள். எமக்கான காலம் இப்போதுதான் கனிந்தது போலும்.

தமிழர்களே.. நாம் யார்? நமது நாடு எது? நம் மக்கள் யாவர்?

நமது வரலாறு என்ன? நமது கலாச்சாரம் எது? நமது பண்பாட்டுக் கூறுகள் எவை? நமது பெருமை யாது? நிறை உளதா? குறை உண்டா?

தமிழர் யார்?

முத்தமிழ் எது? மூவேந்தர் எவர்?

சேரர் யார்? சோழர் யார்?

பாண்டியர் யார்? பல்லவர் யார்?

தேவர் யார்? தேவேந்திரர் யார்?

மல்லர் யார்? மாமல்லர் யார்?

பள்ளி யார்? பள்ளர் யார்? மள்ளர் யார்?

படையாச்சி யார்? வன்னி யார்? ஷத்திரிய குல வன்னியர் யார்?

மூப்பர் யார்? குடும்பர் யார்? பண்ணாடி காலாடி யார்?

கள்ளர் யார்? பிரான்மலைக் கள்ளர் யார்?

மறவர் யார்? குறவர் யார்?

பறையர் யார்? பரதவர் யார்?

நாடார் யார்? சத்திரிய நாடார் யார்? அய்யாவழி நாடார் யார்? கிறித்தவ நாடார் யார்?

திருச்சபை நாடார் யார்?

கோனார் யார்? யாதவர் யார்?

தோடர் யார்? காடர் யார்? இருளர் யார்? குறும்பர் யார்? படுகர் யார்?

இடையர் யார்? உடையர் யார்? ஒட்டர் யார்?

ஐயர் யார்? ஐயங்கார் யார்? பிராமணர் யார்? ஸ்மார்த்தா யார்? மாத்வா யார்?

வைஷ்ணவர் யார்? வைணவர் யார்? ஸ்ரீவைணவர் யார்?

வடகலையாரும் தென்கலையாரும் யார்?

சைவர் யார்? வீர சைவரும் காசுமீர சைவரும் யார்?

காளாமுகர் யார்? களப்பிரர் யார்?

வேளாளர் யார்? வெள்ளாளர் யார்?

பிள்ளை யார்? சைவப் பிள்ளை யார்? சோழியப் பிள்ளை யார்? முதலி யார்? அகமுடையார் யார்? அம்பலக்காரர் யார்? முத்தரையர் யார்?

கவுண்டர் யார்? கொங்கு கவுண்டர் யார்? கொங்கு வேளாளக் கவுண்டர் யார்?

கன்னடர் யார்? மலையாளி யார்? துளுவர் யார்? தெலுங்கர் யார்?

நாயர் யார்? நம்பூதிரி யார்? ஈழவர் யார்? புலையர் யார்? செருமான் யார்? சேரமான் யார்? பணிக்கர் யார்? மேனன் யார்?

நாயக்கர் யார்? நாயுடு யார்? அருந்ததியர் யார்?

ரெட்டியார் யார்? செட்டியார் யார்? நகரத்தார் யார்?

விஸ்வகர்மாக்கள் யார்? குலாளர் யார்?

கடவுள் யார்?

யெகோவா யார்? யூதர் யார்?

கர்த்தர் யார்? இயேசு யார்? மேரி யார்?

தந்தை யார்? மகன் யார்? ஆவி யார்?

அல்லா யார்? நபி யார்?

செரளாஸ்டர் யார்? சுரர் யார்? அசுரர் யார்?

லாவோ யார்? லாமா யார்?

ஆப்ரகாம் யார்? மோசே யார்? மூசா யார்? ஈசா யார்?

மீப்பர் யார்? மேய்ப்பர் யார்?

நோவா யார்? நாபி யார்?

கருப்பசாமி யார்? வெள்ளைச்சாமி யார்?

பதினெட்டாம்படி கருப்பசாமி யார்? வாக்குவழி கருப்பசாமி யார்?

முனியப்பசாமி யார்? முனீஸ்வரன் யார்?

மாடசாமி யார்? சுடலைசாமி யார்?

வேட்டைக்காரன் யார்? பரி யார்? அரி யார்? ஹரி யார்? ஸ்ரீஹரி யார்?

கரி யார்? கார்பன் யார்? கருப்பன் யார்? கருப்பு யார்? காத்து யார்? காப்பு யார்?

கரப்பான் யார்? எறும்பு யார்? கரையான் யார்? ஈசல் யார்? தேனிக்கூட்டம் யார்?

இரும்பு யார்? செம்பு யார்? வெள்ளி யார்? பொன் யார்?

வைரம் யார்? வைடூரியம் யார்? மாணிக்கம் யார்? கோமேதகம் யார்?

முத்து யார்? வித்து யார்? சொத்து யார்?

அயன் யார்? அரன் யார்?

ஆயன் யார்? ஐயன் யார்? ஐயனார் யார்?

சாத்தன் யார்? சாஸ்தா யார்? ஐயப்பன் யார்?

பகவான் யார்? பகவதி யார்?

சூடிக்கொடுத்த சுடர்கொடியாள் யார்? பாவை யார்?

கோதை யார்? ஆண்டாள் யார்?

மீனாட்சி யார்? காமாட்சி யார்? விசாலாட்சி யார்?

மாரி யார்? கருமாரி யார்? முத்துமாரி யார்?

காளி யார்? துர்க்கை யார்? கற்பகாம்பாள் யார்? சாரதாம்பாள் யார்?

பேச்சி யார்? இசக்கி யார்? ஜேஸ்டா தேவி யார்?

அம்பாள் யார்? அம்மன் யார்? அம்பிகை யார்?

பார்வதி யார்? உமை யார்?

சக்தி யார்? பராசக்தி யார்?

ஈஸ்வரி யார்? சௌடேசுவரி யார்? சாமுண்டேசுவரி யார்?

கொற்றவை யார்? கண்ணகி யார்? திரௌபதியம்மன் யார்?

மனோண்மணி யார்? மேகலாத் தெய்வம் யார்?

அலர்மேல் மங்கை யார்? பத்மாவதித் தாயார் யார்?

சிவகாமி யார்? சங்கரி சுந்தரி மனோகரி யார்?

அபிராமி பவானி கல்யாணி காந்திமதி யார்?

ஆனந்தவல்லி மங்களரூபினி யார்?

தெள்ளமுது தேன்மொழி பண்ணமைந்த சொல் யார்?

தீந்தமிழ் சுவை நற்கனி சாறு யார்?

அமுத நாயகி யார்? உயிர் ஓவியம் யார்?

காட்சிக்கினியவள் தையல் நாயகி யார்?

அங்கையற்கன்னி அருந்தவநாயகி ஆடலரசி யார்?

பரமானந்தப்பெருக்கு யார்? கருணை ஊற்று யார்?

மகாமாயை யார்? மகாவித்யை யார்? கோமதி யார்?

மாலினி யார்? விஜயா நிரஞ்சனா யார்?

ஸர்வமங்களை யார்? கமரூபினி யார்? சித்ரமாலா யார்?

சௌபாக்யவதி யார்? வானவர் அமுதம் யார்?

பத்மலோஷனா யார்? சாஸ்த்ரரூபினி யார்?

சுகா யார்? சுபத்ரா சுபதாயை யார்?

பிராம்மை யார்? வாக்தேவி யார்?

சுரதா சந்த்ரிகா சௌம்யா யார்?

வேதநாயகி யார்? ஹிரன்யை யார்?

வைஷ்ணவி யார்?

அம்ருதம் யார்? கமலம் யார்? நலம் யார்?

வேதவதி யார்? ஹரிணி யார்?

செல்வம் யார்? மங்களம் யார்?

சத்யை யார்? சாந்தாயை யார்? நித்யை யார்?

பூரணி யார்? லோகமாதா யார்?

வரலெட்சுமி யார்? ஸ்ரீமகாலெட்சுமி யார்?

மனிதர் யார்? மகான் யார்? யோகி யார்? ஞானி யார்? தெய்வம் யார்?

சாமி யார்? சுவாமி யார்? ஸ்வாமி யார்?

எம்ஜியார் யார்? சிவாஜி யார்? ஜெமினி யார்?

அய்யா யார்? அம்மா யார்?

ஆண் யார்? பெண் யார்?

திராவிடர் யார்? ஆரியர் யார்? இந்தியர் யார்?

சீனர் யார்? ஜைனர் யார்? சமணர் யார்?

ரிஷபதேவர் யார்? பார்ஷ்வநாதர் யார்? வர்த்தமானர் யார்?

சித்தார்த்தன் யார்? புத்தர் யார்? சாக்கிய முனி யார்?

பெரியார் யார்? காமராசர் யார்? அண்ணா யார்?

வைகுந்தர் யார்? வள்ளலார் யார்? நாராயண குரு யார்?

அண்ணாமலையார் யார்? நடராசர் யார்?

ஆழ்வார்கள் யார்? நாயன்மார்கள் யார்?

சங்கரர் யார்? மத்வர் யார்? இராமானுஜர் யார்?

ஆராவமுதன் யார்? நாதமுனி யார்?

ஸ்ரீநிவாஸன் யார்? திருவேங்கடமுடையான் யார்?

வடபத்ரசாயி யார்? பார்த்தசாரதி யார்?

இராமன் யார்? கண்ணன் யார்? பிரம்மன் யார்?

கணபதி யார்? விநாயகன் யார்?

ஆனைமுகன் யார்? ஆறுமுகன் யார்?

அருகன் யார்? முருகன் யார்? மருகன் யார்? சிவபெருமான் யார்?

சேயோன் யார்? மாயோன் யார்?

மால் யார்? மாலன் யார்? மாலவன் யார்? மாலியம் எது?

பெருமால் யார்? திருமால் யார்? பெருமாள் யார்?

முழுமுதல் கடவுள் யார்?

நாராயணன் யார்?

மங்களமானவன் யார்? மங்களங்கள் நிறைந்தவன் யார்?

மங்களங்கள் கொடுப்பவன் யார்? ஸர்வ யார்? சர்வ யார்? சிவ யார்?

பூதாதிர் யார்? பூதக்ருத் யார்? பூதப்ருத் யார்? விஸ்வம் யார்?

நட்சத்திரம் யார்? சூரியன் யார்?

சந்திரன் யார்? இந்திரன் யார்?

வருணன் யார்? வாயு யார்?

நீரும் நெருப்பும் யார்?

ஒலியும் ஒளியும் யார்?

இரவும் பகலும் யார்?

பூமி யார்? வானம் யார்?

புதன் யார்? குரு யார்? சனி யார்?

மெர்குரி யார்? மார்ஸ் யார்? அன்ரமீரா யார்? கேலக்ஸி யார்?

பால்வீதி யார்? விதி யார்? மதி யார்?

தமிழ் யார்? சமஸ்கிருதம் யார்? இங்கிலீஸ் யார்?

வேதங்கள் யார்? திரிவேதி யார்? சதுர்வேதி யார்?

எண் யார்? எழுத்து யார்?

காலம் யார்? நேரம் யார்?

நாள் யார்? மாதம் யார்?

ஆண்டு யார்? வருடம் யார்? வருஷம் யார்? இயர் யார்?

பல்லாண்டு யார்?

மாதங்களில் மார்கழி யார்?

மரங்களுள் அரசம் யார்?

சித்தர்களுள் கபிலர் யார்?

பாண்டவர்களுள் அர்ஜுனன் யார்?

பட்சிகளில் கருடன் யார்?

அனந்தன் யார்? ஆதிஷேசன் யார்?

பார்த்தா யார்? பார்த்தன் யார்?

தேவேந்திரன் யார்? தெய்வேந்திரன் யார்?

மகேந்திரன் யார்? விஜயேந்திரன் யார்? அமரேந்திரன் யார்?

ராஜேந்திரன் யார்? கஜேந்திரன் யார்?

உபேந்திரன் யார்? ஓங்கி உலகளந்த உத்தமன் யார்?

வையமளந்தான் யார்? விக்ரமன் யார்? குறளன் யார்?

அமரர்கள் தலைவன் யார்? இமையவர் கோன் யார்?

அச்சு வெல்லம் யார்? ஆழ்வார்களின் செல்வம் யார்?

திருமருமார்பன் யார்? திருமகள்கேள்வன் யார்?

திருமகள் யார்? திருமகன் யார்?

ஜானகி யார்? இராமச்சந்திரன் யார்? ஜானகிராமச்சந்திரன் யார்?

சீதா யார்? ராமன் யார்? சீதாராமன் யார்?

கோசலை ராமன் யார்? தசரத ராமன் யார்?

ஸ்ரீராமன் யார்? ஜெயராமன் யார்? கோதண்ட ராமன் யார்? ராஜாராமன் யார்?

ராஜா யார்? மகாராஜா யார்? ராஜனுக்கெல்லாம் ராஜன் யார்? ரங்கராஜன் யார்?

ஸ்ரீரங்கன் யார்? ஸ்ரீரங்கநாயகி யார்? திருவரங்கத்தாயார் யார்?

நாயகன் யார்? நாயகி யார்?

தேவன் யார்? தேவி யார்?

தேவாதிதேவன் யார்? தேவதேவி யார்?

தலைவன் யார்? தலைவி யார்?

செல்வன் யார்? செல்வி யார்?

காதலன் யார்? காதலி யார்?

காதல் யார்? காமம் யார்? மன்மதன் யார்?

கண்ணனெனும் கரும்பு யார்? அமுதம் யார்?

குளிர் தென்றல் யார்? கோடையின் வெப்பம் யார்?

வசந்தகாலம் யார்? வைகறை வெளிச்சம் யார்?

காலையும் மாலையும் யார்?

நண்பகல் யார்? நடுச்சாமம் யார்?

முன்னிரவு யார்? முன் பனி யார்? பனிமதி யார்?

உஷை யார்? காயத்ரி யார்?

வேள்வி யார்? அவிசு யார்?

ஹைட்ரசனும் ஆக்ஸிசனும் யார்?

தண்ணீர் யார்? தாமரை யார்?

ரோஜாவும் முல்லையும் மல்லியும் யார்?

பாரிஜாதம் யார்? குவளையின் நிறம் யார்?

மலர்களின் மணம் யார்? பூக்களின் நாற்றம் யார்?

தேனின் தித்திப்பு யார்? வண்ணத்துப் பூச்சி யார்? வண்டு யார்?

நண்டு யார்? நாரை யார்? நத்தை யார்?

கடல் யார்? அலை யார்? மீன்கள் யார்? நீலத் திமிங்கலம் யார்?

சுறா யார்? இறால் யார்? ஈல் யார்? கடல் நட்சத்திரம் யார்? பவளங்கள் யார்?

கடற்குதிரை யார்? வால்ரசு யார்? டால்பின் யார்? கடற் பசு யார்?

மழை யார்? கங்கை யார்? யமுனைத் துறைவன் யார்?

அண்டம் யார்? அகிலம் யார்?

மண் யார்? விண் யார்? காப்பான் யார்?

முனி யார்? நான்முகன் யார்? முக்கண் அப்பன் யார்?

அனந்தபத்மனாபன் யார்? அனந்தராமன் யார்? பலராமன் யார்?

பாண்டுரங்கன் யார்? பண்டரினாதன் யார்?

பத்மநாபன் யார்? பரந்தாமன் யார்?

வராகமூர்த்தி யார்? வாமனமூர்த்தி யார்?

ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி யார்? ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி யார்?

வேய்ங்குழலோன் யார்? வேணுகோபாலன் யார்?

மாதவன் யார்? ஆதவன் யார்? மதுசூதனன் யார்?

கதிரவன் யார்? ஞாயிறு யார்? திங்கள் யார்? கோள் யார்?

நிலா யார்? டைட்டன் யார்? புளூட்டோ யார்?

கோமர் யார்? ரோமர் யார்? ராமர் யார்?

அரிசி யார்? ஒரைசா யார்? ரைஸ் யார்?

கோதுமை யார்? சோளம் யார்? மக்காச்சோளம் யார்?

திணையும் தேன்மாவும் யார்?

குதிராவலி யார்? கேப்பையும் கம்பும் யார்?

கொக்கு யார்? புறா யார்? கிளி யார்? கிவி யார்?

சோமவார் யார்? சோமாஸ்கந்தன் யார்?

வேலன் யார்? வேடன் யார்? காடன் யார்? குறிஞ்சித் தலைவன் யார்?

குறிகாரன் யார்? குமரன் யார்? குமரி யார்? குமாரி யார்? கன்னி யார்?

அழகன் யார்?

குளிர்ந்தவன் யார்? வெக்கையன் யார்? வெம்மையன் யார்?

மனதைக் கவர்பவன் எவன்? மனங்களைக் கொள்ளை கொள்பவன் யார்?

வள்ளியைக் களவாடியவன் யார்? தெய்வானையை மணம் புரிந்தவன் யார்?

மயில் வாகனன் யார்? சேவற் கொடியோன் யார்?

படைத் தளபதி யார்? படைவீடு கொண்டவன் எவன்?

அழகர் யார்?

கள்ளழகர் யார்? கற்பகத்தரு யார்? காமதேனு யார்?

சர்க்கரை யார்? சக்கரைப் பொங்கல் யார்? பால் யார்? தயிர் யார்? பழம் யார்?

திருமாலிருஞ்சோலைமலையில் குடிகொண்டிருப்பவன் யார்?

சுந்தரராஜன் யார்? துவரையன் யார்? மதுரையார் மன்னன் யார்?

மதுரைத் தலைவன் யார்? பரிபாடல் நாயகன் யார்? முல்லைக்குரியவன் யார்?

உயர்வர உயர்நலம் உடையவன் எவன்?

மயர்வர மதிநலம் அருள்பவன் எவன்?

அயர்வறும் அமரர்கள் அதிபதி எவனவன்?

லெட்சுமி நாராயணன் யார்? சத்ய நாராயணன் யார்?

இலக்குமி மணாளன் யார்? ஸ்ரீமந் நாராயணன் யார்?

அச்யுதா யார்?

அஜயா அம்ருத் அபராஜிதா ஆதித்யா யார்?

ஜகத்குரு யார்?

ஜனார்த்தனா ஜகநாதா ஜனநாதா சர்வஜனா யார்?

பிரஜாபதி யார்?

மகேந்திரா ஜெயந்தா சர்வேஸ்வரா சனாதனா யார்?

விஸ்வகர்மா யார்? துவாரகாபதி யார்? விஸ்வமூர்த்தி யார்?

உலகை அளந்தவன் யார்? அளப்பவன் யார்? ஆள்பவன் யார்?

அறிவுக்குள் உறைபவன் எவன்? அறிவுக்குள் அறிவாக இருப்பவன் எவன்?

அறிவும் அறியமுடியாதவன் எவன்? எவனுக்கு அறிவே உடல்?

அறிவையும் உள்ளிருந்து ஆட்டி வைப்பவன் எவன்?

அனைத்தும் அறிந்தவன் யார்? அறிவு யார்? அறிவன் யார்?

பேரறிவாளன் யார்? பேரருளாளன் யார்? பெருந்தேவித் தாயார் யார்?

வரதன் யார்? ஒப்பில்லா அப்பன் யார்?

பாண்டவத் தூதுவன் யார்? ஆண்டவன் யார்?

அல்லிக்கேணி மன்னன் யார்? ஆயர்பாடிக் கண்ணன் யார்?

ஆவினங்கள் மேய்த்தவன் யார்? ஆய்ச்சியரை ஏய்த்தவன் யார்?

ஆதிமுலமே என அழைத்தபோது காத்தவன் யார்?

புள்ளின் நுனி யார்? வேரின் முனை யார்?

துளசித் தளிர் யார்? ஆயர் குலக்கொழுந்து யார்?

விதை யார்? மரம் யார்? விருட்சம் யார்? பூவும் காயும் கனியும் யார்?

முதல் யார்? இடை யார்? முடிவு யார்? அடி யார்? முடி யார்?

அவனி யார்? அடியார் யார்? பசுக்கூட்டம் யார்? கோவிந்தன் யார்?

தரணி யார்? தலைவன் யார்? மங்கையர் கோன் யார்?

புருஷன் யார்? புருடன் யார்? பரமபுருடன் யார்?புருஷோத்தமன் யார்?

உயிர்களைப் படைத்தவன் யார்? காப்பவன் யார்?

எங்கும் பரந்துளன் எவன்? எதிலும் உளன் எவன்?

எங்கும் நிறைந்தவன் யார்? எதிலும் சிறந்தவன் யார்?

ஸ்ரீராமனின் குலதெய்வம் யார்?

நன்மையும் செல்வமும் நிறைந்த சொல் எது?

குலம் தருவது எது? நீள்விசும்பருளுவது எச்சொல்?

பெற்றதாயிதும் ஆயின செய்வது எந்தச் சொல்?

வெல்லும் சொல் எது?

மங்களச் சொல் எது?

நலம் தரும் சொல் எது?

உலகை ஆளும் சொல் எது?

நாராயணா யார்? நாராயணர் யார்?

நாராண நம்பி யார்? நாராயணன் யார்?

நாராயணா என்னும் நாமம் யார்?

பரம் யார்? பரத்வம் யார்? பரன் யார்? பரமன் யார்?

பரம்பொருள் யார்?

பொருள் யார்? கருத்து யார்?

முதல் யார்? மூலம் யார்? ஆதிமூலம் யார்?

சொல்லா? பொருளா?

பொருளா? அலையா?

மேட்டரா மேடரா? மடரா மாடரா? மதரா மாதரா?

தாயா அன்னையா? அம்மாவா ஆத்தாவா?

பிதாவா? மாதாவா? தந்தையா எந்தையா?

அதுவா அவனா? ஆணா பெண்ணா? ஒன்றா இரண்டா? உயிரா உடலா?

மனமா உள்ளமா? உணர்வா உணர்ச்சியா? சிந்தையா?

அவா ஆவா? அகரமா ஆகாரமா? குறிலா நெடிலா?

உயிரா மெய்யா? உயிர்மெய்யா?

மொழியா? ஓசையா? பண்ணா? இசையா? ஏழிசையா?

இனனா? இலனா?

உயிருள்ளதா உயிரற்றதா?

சத்தா அசத்தா?

சித்தா? அசித்தா? ஈச்வரனா?

ஆன்மாவா? ஆத்மாவா? மகாத்மாவா?

ஆத்மனா?

ஜீவாத்மாவா? பரமாத்வாவா?

குறுக்கமா விரிவா? முன்னா பின்னா?

வடிவுடையதா? நீளமா? அகலமா? உயரமா? ஆழமா?

உள்ளா? வெளியா? அகமா? புறமா?

வரம்புள்ளதா? அற்றதா?

எல்லையுள்ளதா? அல்லதா?

ஏகமா? அனேகமா?

வலமா? இடமா?

சுடரா? சோதியா? நாதமா? நாதனா? ஈசனா? பரமீசனா?

அப்பனா அம்மானா மாமாயனா?

உருவினனா? அருவினனா?

சக்தியா? பொருளா? உயிரா? நபரா? மற்றா?

குணமுள்ளவனா குணமற்றவனா?

சகுணமா? நிர்குணமா?

திருக்கலியாண குணங்கள் உண்டா?

புலனா? புலன் அலனா?

அவனா? இவனா? உவனா?

அது இது உது எது?

அவை இவை உவை எவை?

பிரம்மம் எது? பரப்பிரம்மம் எது?

அண்டம் எது? பிண்டம் எது? அண்டப்பிண்டம் யார்?

மண்ணும் விண்ணும் யார்?

வானுளார் பெருமான் யார்?

ஊனில் வாழ் உயிர் யார்?

அலோகம் யார்? உலோகம் யார்? உலகம் யார்? உள் அகம் யார்?

கரிமமும் கனிமமும் யார்?

ஆர்கன் யார்? ஆர்கானிக் யார்? இன்னார்கானிக் யார்?

அணு யார்? மரபணு யார்? பரமணு யார்?

கரு யார்? நிறை யார்? ஆற்றல் யார்? வெளி யார்?

புரோட்டானும் நியூட்ரானும் எலெக்ட்ரானும் யார்?

துகள் யார்? குவார்க்குகள் யார்?

மூலக்கூறு யார்? சேர்மம் யார்? பிணைப்பு யார்?

மின்னாற்றலும் வெப்பாற்றலும் யார்?

காந்தமும் விசையும் யார்?

பூலோக நாயகன் யார்? வைகுந்த வாசன் யார்?

மனங்களில் பள்ளிகொள்பவன் யார்?

இதயத்துல் உறைபவன் யார்?

உடுப்பியில் தவழ்பவன் யார்?

நிரைகள் மேய்த்தவன் யார்?

மூவுலகையும் ஆள்பவன் யார்?

கொந்தார் தண்ணந்துழாயினன் யார்?

அமுதம் ததும்பும் அதரம் கொண்டவன் யார்?

தேனும்பாலும் நெய்யும் கன்னலும் அமுதும் ஒத்தவன் யார்?

ஆழ்வார்களின் பாசுரம் யார்?

அவன் பெயர் என்ன? எந்த ஊர்?

ஸ்ரீரங்கநாதனா?

கரு மாணிக்கமா? மரகத வண்ணனா? கொண்டல் வண்ணனா?

மாதுவாழ் மார்பினனா? சிரீதரனா? அமலனா?

கருமணியா? கார்முகிலா? கண்ணனெனும் கரும்பா?

வான் ஏறா? தலைமகனா? முதல்வனா?

பொன்னனா? ரங்கனா?

ஊரும் பேரும் யார்?

பொன்னிசூழ் அரங்கம் எது?

அரங்கமாநகருளான் யார்?

முதல் தனி வித்து யார்? முழுமுற்று யார்?

நியூக்ளியஸ் யார்? சூழ்ந்திருக்கும் படலம் யார்?

நியூக்ளியோடைடு யார்? ஜீன் யார்?

டிஎன்ஏ ஆர்? ஆர்என்ஏ ஆர்? ஆர் ஆர்? என் ஆர்?

பியூரினும் பிரிமிடினும் யார்? கோடான் யார்?

வரிசை யார்? முதல் யார்? கடைசி யார்? யாரால்? ஏன்?

தூதுவர் யார்? கடத்துனர் யார்? ரிபோசோமர் யார்?

புரதம் யார்? மாவு யார்? கொழுப்பு யார்?

செல் யார்? திரவம் யார்? சுவர் யார்?

உள்ளுறுப்புகள் யார்? குரோமோசோமும் பசுங்கணிகமும் யார்?

வலைப்பின்னல் யார்? சுரப்பது யார்? சேர்ப்பது யார்?

சேருவது யார்? இணைவது யார்? இணைப்பது யார்?

உருவாக்குவது யார்? உடைப்பது யார்? மாற்றுவது யார்?

பெருக்குவது யார்? நீக்குவது யார்? இரட்டிப்பாவது யார்? எப்படி?

முதலாவது யார்? இரண்டாவதும் முன்றாவதும் யார்? இறுதி யார்?

எக்ஸ் ஆர்? ஒய் ஆர்? எகஸ்எக்ஸ் ஆரு? எகஸ்ஒய் ஆராம்?

முட்டை யார்? விந்தணு யார்?

கரு யார்? க்ரு யார்? க்ருஹ யார்? க்ருப்யா யார்? கருப்பை யார்?

கருப்பையா யார்? லோகஸ்வாமி யார்?

முதல் செல் யார்? இரண்டாவது ஏன்? இரண்டாவது எப்போது?

கருக்கோளம் யார்? ஓரடுக்கும் ஈரடுக்கும் மூவடுக்கும் உருவாவது எதனால்?

புறப்படையாகவும் நடுப்படையாகவும் அகப்படையாகவும் அமைவது எவ்வாறு?

உறுப்புக்களைத் தீர்மானிப்பது யார்?

கண்ணும் காதும் நாக்கும் மூக்கும் யார்?

இதயமும் நுரையீரலும் கல்லீரலும் சிறுநீரகமும் யாவர்?

மூளை யார்? பெருமூளை யார்? சிறுமூளை யார்?

முன்மூளையும் நடுமூளையும் பின் மூளையும் யார்?

முன் மடல் சுவர் மடல் பக்க மடல் பிடரி மடல் யார்?

நியூரான் யார்? நரம்பணு யார்?

தோலும் எலும்பும் சதையும் இரத்தமும் நிணநீரும் யார்?

குருதியும் குழாய்களும் யார்? அணுக்கள் யார்?

மூச்சு யார்? பேச்சு யார்? பொறி யார்? புலன் யார்? பூதம் யார்?

பூரகம் யார்? கும்பகம் யார்? ரேசகம் யார்?

உயிர் யார்? மனம் வாக்கு கருமம் யார்?

அது யார்? அகம் யார்? அதியகம் யார்?

உள்மனம் ஆழ்மனம் யார்? நினைவு யார்? கனவு யார்?

உள்ளுணர்வு யார்? மனச்சாட்சி யார்?

கற்றறிவது எது? பகுத்தறிவது எது?

நுண்ணுயிரி யார்? பேருயிர்கள் யார்?

தாவரங்கள் யார்? விலங்குகள் யார்?

மெய் யார்? மெய்யன் யார்?

மால் யார்? நெடுமால் யார்? செங்கண்மால் யார்? நேமி நெடியவன் யார்?

புள்ளூர் கொடியான் யார்? நாகத்து அணையான் யார்?

பரவையேறு பரமபுருடன் யார்?

அறிவை என்னும் அமுதஆறு யார்?

பங்கயக் கண்ணன் யார்? பவளச் செவ்வாயன் யார்?

அஞ்சன வண்ணன் யார்? செங்கதிர் முடியன் யார்?

அம்பரம் யார்? பெரிது யார்? பெரிதினும் பெரிது யார்?

அல் யார்? இல் யார்? இருளா பகலா? பகலிரவா? அல்லும் பகலுமா?

அந்தரம் எது? வான்வெளி எது? ஒன்றா பலவா?

அளவிடற்கரியதா? அளவுள்ளதா? அளவிலாததா? அளவில்லாததா?

ஒளியாண்டு காலம் யாது? தூரம் எவ்வளவு? வேகம் எத்தனை?

விண்ணகத்தான் யார்? மண்ணகத்தான் யார்?

பாருண்டவன் யார்? பாருமிழ்ந்தவன் யார்?

பாரிடந்தவன் யார்? பாரளந்தவன் யார்? பாரிடம் முன் படைத்தவன் எவன்?

திரிவிக்ரமமூர்த்தி யார்? உலகளந்த பெருமாள் யார்?

ஒளிமூர்த்தி யார்? வான நாயகன் யார்?

வானவர்க்கும் வானவன் யார்? தேவர்க்கும் தேவன் யார்?

வானுலாவு தீவளி யார்? மாகடல் மாபொருப்பு யார்?

தானுலாவு வெங்கதிரும் தண்மதியும் மேல்நிலவும் யார்?

கொண்டல் பெயரும் திசையெட்டும் சூழ்ச்சியும் யார்?

உலகமும் ஆழியும் யார்?

ஒண்கேழ் அலர் கதிரும் செந்தீயுமானவன் யார்?

பைம்பொன் முடியான் யார்? படர்செல்வன் யார்?

மனத்துள்ளான் யார்? நீருள்ளான் யார்? மலராள் தணத்துள்ளான் எவன்?

ஆற்றங்கரைக்கிடக்கும் கண்ணன் யார்? கடல் கிடக்கும் மாயன் எவன்?

நிலமகள் கேள்வன் யார்? கோநிரை காத்தவன் யார்?

காலச்சக்கரத்தான் யார்? காவலன் யார்?

பூரணன் யார்? பவித்திரன் யார்? பவளவாய் அரங்கன் யார்?

காவேரி ரங்கன் யார்? கஸ்தூரி ரங்கன் யார்? மதுரம் யார்?

ஆழிவல்லான் யார்? சுடராழியான் யார்? பொன்னாழிக் கையான் யார்?

நீராழி வண்ணன் யார்? இன்பக் கடலாழி யார்?

மனக்கடலில் வாழும் மாயன் யார்? மணாள நம்பி யார்? வானவர் அரசு யார்?

மன்னன் யார்? மன்னர் மன்னன் யார்? மன்னாதி மன்னன் யார்?

அரசன் யார்? பேரரசன் யார்? வேந்தன் யார்? ஏந்தல் யார்?

ஞாலத்தரசர் யார்? மாஞாலத்தரசர் யார்?

சக்ரவர்த்தித் திருமகன் யார்? தெய்வத்துக்கரசு யார்? அரங்கத்தரசு யார்?

இன்னமுதம் யார்? மைதிலி மணவாளன் யார்? கணபுரத்துக் கண்மணி யார்?

இருவிசும்பில் வீற்றிருப்பவன் யார்? இந்திரலோகமாள்பவன் யார்?

தேவரும் முனிவரும் துதிப்பவர் யார்? தெய்வக்கோமான் யார்?

ஆண்டளக்கும் அய்யன் யார்? திருநரையூர் நம்பி யார்? அத்திகிரி யார்?

காதலின்பம் யார்? வீரம் யார்? வெற்றி யார்? பெருந்தமிழன் யார்?

ஐந்திணை யார்? மருதமும் மாருதமும் யார்?

முத்தமிழ் யார்? முப்பால் யார்? முச்சங்கம் யார்?

முக்கனி யார்? முக்கடல் யார்? முக்காலம் யார்?

முக்குணம் எது? முராரி யார்?

பண்ணும் பாட்டும் பரதமும் யார்? நடனமும் நாட்டியமும் யாரால்?

சொல்லும் பொருளும் சீரும் அசையும் பாக்களும் யார்?

புலவரும் பாணரும் கவியும் காப்பியங்களும் யார்?

வள்ளுவனும் இளங்கோவும் கம்பனும் யார்?

எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் எப்போதிருந்து?

அகமென்றும் புறமென்றும் ஆக்கியது யார்?

காதலையும் வீரத்தையும் ஊட்டியது எதற்கு?

உறவென்றும் பகையென்றும் பிரித்தது எப்போது?

பாரியும் காரியும் ஓரியும் ஒளவையும் அதியமும் யார்?

இமயவரம்பன் நேடுஞ்சேரலாதனும் ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியனும் யார்?

கரிகாலப்பெருவளத்தான் யார்? கல்லணை கட்டியதெப்படி?

காட்டைத் திருத்தியது யார்? கழனியாக்கியது யார்? நீரை சோறாக்குவதார்?

பொன்னி யார்? பொம்மி பொற்பாளை கூம்பாளை பூம்பாளை நெடுமூக்கன் யார்?

மூங்கிற்சம்பா கிச்சிலிச்சம்பா கருடன்சம்பா மிளகுச்சம்பா சீரகச்சம்பா யார்?

செங்கார் செம்பாலை சம்யா குடவாழை வெம்பா கவுணி முத்துவிளங்கி யார்?

குறுவை குரும்பை குருவிக்கார் கல்லுண்டை கருஞ்சூரை பள்ளியரன் யார்?

பூங்கார் வாலன் மட்டை காட்டுயாணம் வைகுண்டா திருப்பதிசாரம் யார்?

அன்னமழகி வெள்ளைப்புத்தன் மதிமுனி மரநெல் மணல்வாரி கண்டசாலா யார்?

அரியான் வேலியன் சடைக்கார் துாயமல்லி சித்திரைக்கார் கத்துாரிவாணன் யார்?

அரி யார்? காவேரி கௌரி அம்பை ஆடுதுறை கோவை யார்?

பார் யார்? பாராள்பவர் யார்?

ஏர் யார்? உழவன் யார்? மழவன் யார்? கிழவன் யார்?

நெல் யார்? சொல் யார்? பல் யார்? புல் யார்? வில் யார்? மல் யார்?

நெல் நாகரிகம் யார்? நல் விதைப்பான் யார்? சொல் வளர்ப்பான் யார்?

கனிமொழி பேசுபவன் யார்? தேன்மோழி செப்புபவன் யார்?

மதுரகானம் பொழிபவன் யார்? மதுர மோகன கீதன் யார்?

தாமரை நாதன் யார்? இன்பம் சுரக்கும் நாதமழை யார்?

வண்டு மொழியான் யார்? கெண்டை விழியான் யார்?

கற்கண்டாய் இனிப்பவன் யார்? அமுதம் ததும்பும் சுருதி யார்?

மதுவுண்ட வண்டாய் மயக்கும் மலர்க்கண்ணன் யார்?

காற்றின் இசை யார்? மழைபாடும் பாடல்கள் யார்?

காற்றில் வரும் கீதம் யார்? வானவெளியை நிறைக்கும் லயம் யார்?

விண்ணுறை அமரரும் வியந்திட கானம் இசைக்கும் இசைஞன் யார்?

வருண தேவன் யார்? மாக்கடல் தெய்வம் யார்? நீர்க்கடவுள் யார்?

புன்னை யார்? காயல் யார்? கயல் யார்?

மச்சம் யார்? மகரம் யார்? மீன் யார்? மீனவர் யார்?

அயிரை யார்? ஆரால் உய்யம் உழுவை கசலி கருங்கண்ணி யார்?

கெண்டை கெளிறு குறவை கூனி கோளை மணலி யார்?

மலங்கு யார்? வரால் சாளை தேளி பசலி மடந்தை யார்?

மருதர் யார்? மாமுனி யார்? வானவர் யார்? வசுக்கள் யார்? இரவி யார்?

நன்முனிவர் யார்? தும்புரு நாரதர் யார்?

கின்னரர் கெருடர் கந்தர்வர் யார்?

சாரணரும் இயக்கரும் சித்தரும் யார்?

யாழ்குழல் யார்? முழவம் யார்?

நந்தகோபன் யார்? நவநீதன் யார்? முரளி யார்? முகுந்தன் யார்?

கிரிதரன் யார்? திருவேங்கடமுடையான் யார்?

அருள்மாமலை யார்? கருணைமாமழை யார்?

குன்றமேந்தி குளிர்மழை காத்தவன் யார்?

கோமகன் யார்? குருவாயூரப்பன் யார்? ஆயர்பாடி அழகன் யார்?

முகுந்த நாயகன் யார்? நாவாய் முகுந்தன் யார்? நப்பின்னை நாயகன் யார்?

நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தான் யார்?

தணியமரர் தலைவன் யார்? பணியமரர் கோமான் யார்? அண்டவாணன் யார்?

கொண்டலும் மால்வரையும் யார்?

கூரிருள் யார்? வண்டறாப் பூவை யார்?

காருரு யார்? கண்ணனெனும் பேருரு யார்?

பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற காவிமலரென்றும் தோன்றும் பிரானுரு யார்?

அடர்பொன் முடியானும் ஆயிரம் பேரானும் யார்?

ஆரமார்பன் யார்? நீள்முடியன் யார்? பரமமூர்த்தி யார்?

பொன்னப்பனும் மணியப்பனும் முத்தப்பனும் யார்?

தன்னொப்பார் இல்லப்பன் எவன்?

எவ்வுயிர்க்கும் இறைவன் எவன்?

தர்மங்களுக்கு வேர் யார்?

வான்மழை யார்? புகழ் யார்? வளமை யார்? அருள் யார்? கீர்த்தி யார்?

ஆழ்வார்களின் கீதம் யார்? கோவில் எது? புண்ணியம் யார்?

நல்லெண்ணம் யார்? நற்செயல் யார்? நற்சிந்தனை யார்? நற்காரியம் யார்?

அச்சுதம் கேசவம் இராமநாராயணம் கிருஷ்ணதாமோதரம் வாசுதேவம் யார்?

கருணை மேகமும் காவிரி வெள்ளமும் யார்?

உள்ளத்துள்ளும் கண்ணுள்ளும் நிற்பவன் யார்?

காயாம்பு வண்ணம் கொண்டவன் யார்? முலையுண்ட நம்பி யார்?

குளிரருவி யார்? நாண்மலர் யார்? இளம்பிறை யார்?

தேனிலும் தேன் யார்? பொன்னின் ஒளி யார்?

புகழின் புகழ் யார்? மெய்யின் மெய் யார்?

சிறுக் குட்டன் யார்? முத்தனைய முறுவல் செய்பவன் யார்? மோகனன் யார்?

ஆனந்தம் யார்? வான்உயர் இன்பம் யார்? பேரின்பப் பெருக்கு யார்?

ஞானஇன்பன் யார்? இனியவன் யார்? குளிர்ந்தவன் யார்? நெய்யமுது யார்?

நல்துணை யார்? உறுதுணை யார்? நற்பொருள் யார்?

உய்யும் நாமம் எது? செவிக்கின்பம் ஆகும் நாமம் எது?

மலர் யார்? அலர் யார்? அரும்பு யார்?

முகை யார்? முகிழ் யார்? மொட்டு யார்?

புல்லியும் அல்லியும் யார்? மஞ்சரி யார்?

சூலும் மகரந்தமும் யார்? பூந்தாது யார்?

பொதும்பர் யார்? பொம்மல் யார்?

நறு மணம் யார்? வண்ணத் தோற்றம் யார்?

மென்மை இதழ் யார்? கொள்ளை அழகு யார்?

எழில் யார்? பெண்மை யார்? ப்ளோரா யார்?

வள் இதழ் ஒண் செங் காந்தள் யார்? அனிச்சம் யார்?

குறிஞ்சி வெட்சி தேமா கூவிரம் யார்?

வாகை கருவிளம் காயா ஆவிரை மருதம் விரி பூங் கோங்கம் யார்?

செருந்தி கரந்தை வானி தில்லை பிடவம் கொங்கு முதிர் நறு வாழை யார்?

தளவம் ஞாழல் மௌவல் கோடல் காஞ்சி மணிக்குலை யார்?

இலவம் கொன்றை அடும்பு ஆத்தி அவரை பிண்டி யார்?

வஞ்சி சிந்துவாரம் தும்பை தோன்றி குல்லை நந்தி யார்?

நறவம் பீரம் குருக்கத்தி புன்னை குருந்தம் யார்?

வேங்கை புழகு மனோரஞ்சிதம் அலரி செம்பருத்தி சுகந்தி யார்?

மகிழம் மந்தாரை சம்பங்கி கனகாம்பரம் அரவிந்தம் யார்?

தாழம்பு கதலி சாமந்தி அந்திமந்தாரை வகுளம் பூவரசம் யார்?

பிச்சி நித்தியக்கல்யாணி பவளமல்லி யார்?

செந்தாமரை யார்? வெண்டாமரை யார்?

வெள்ளைப் பூக்கள் யார்? மஞ்சள் பூக்கள் யார்? பூக்களின் தலைவன் யார்?

அர்ச்சனைப் பூக்கள் யார்? கோடிக் கீர்த்தனைகள் யார்?

ஒளிரும் திருமேனியுடையவன் யார்?

கருணை எனும் விழிகொண்டவன் யார்? நீலமேனியன் யார்?

கடல் விளக்கு யார்? கருமேனியம்மான் யார்? செம்பொன் யார்?

அமலனாதிபிரான் யார்? விமலன் யார்?

நிமலனும் நின்மலனும் நீதிவானவனும் யார்?

நீள் மதிளரங்கத்தம்மான் யார்? அரங்கத்தம்மா யார்? அரங்கத்தப்பா யார்?

அரங்க மாநகருளான் யார்? உலகங்கொண்ட கோமான் யார்?

பெரிய மாமேனி யார்? மாமதி யார்? கடலமுது யார்?

பச்சைத் தேன் யார்? பைம்பொன் யார்? மாமுகில் ஒக்கும் நம்பி யார்?

வேதத்தின் சுவைப்பயன் யார்? கோதிலின் கனி யார்?

முத்தொளி மரகதம் யார்? முழங்கொளி முகில்வண்ணன் யார்?

மல்லன் யார்? குடமாடி யார்? குடக்கூத்தன் யார்?

பேராளன் முனியாளன் பாராளன் தேராளன் யார்?

வெள்ளியான் கரியான் ஒள்ளியான் உயர்ந்தான் யார்?

கொழுஞ்சுடர் சிந்தாமணி யார்?

முனிவன் புனிதன் பூவைவண்ணன் புண்ணியன் தணியன் யார்?

ஒளியரங்கம் எது? அணியரங்கம் எது?

புனலரங்கம் எது? பொழிலரங்கம் எது?

எறிநீர்த் திருவரங்கம் எது? வண்திருவரங்கம் எது? செழுநீர்த் திருவரங்கம் எது?

திருவரங்கம் எது? தென்திருவரங்கம் எது?

ஸ்ரீரங்கம் எது?

மறையோர் மந்திரம் யார்? மறையாளன் யார்? மண்ணாளன் யார்? மணவாளன் யார்?

அரங்கத்தரவனைப் பள்ளியான் யார்?

தேவர்கள் வணங்கும் தெய்வம் யார்?

அரிமுகனும் அச்சுதனும் யார்? திருவாளன் யார்?

இரவாளன் பகலாளன் யார்? ஏழுலகப் பெரும் பேராளன் யார்?

இனிதாகத் திருக்கண்கள் வளர்கின்றவன் எவன்?

ஆமையும் ஆழ்கடலும் சூழ்கடலும் கனைகடலும் நான்மறையும் யார்?

எழில்திருமார்பன் யார்? தாமரைத்தாளன் யார்? தேவகி சிங்கம் யார்?

குருவாயூரப்பன் யார்? யமுனை நாயகன் யார்? நான்மறைத் தெய்வம் யார்?

நதிகளின் தெய்வம் யார்? ஆதிகங்கை யார்? ஆகாய கங்கை யார்?

பூபாலன் யார்? பச்சை வண்ணன் யார்? மாயப்பிரான் யார்? கள்ளப்பிரான் யார்?

நீர்வண்ணன் யார்? நீலமுகில் வண்ணன் யார்? நிகரில் முகில்வண்ணன் யார்?

ஆயர்பாடி அழகன் யார்? சுந்தரராஜன் யார்? வீரராகவன் யார்? விஜயராகவன் யார்?

ஓப்பற்றவன் யார்? நற்தவம் யார்? மனமோகனன் யார்?

ஜெகம் யார்? ஜெகந்நாதன் யார்? நந்தா விளக்கு யார்?

அழகிய நம்பி யார்? வைணவ நம்பி யார்? திருக்குறுங்குடி நம்பி யார்?

கூடழலகர் யார்? கோபாலகிருஷ்ணன் யார்? வேங்கட கிருஷ்ணன் யார்?

ஆண்டாள் அழகன் யார்? கோதை கோமான் யார்? ரங்கமன்னார் யார்?

சௌரிராஜன் யார்? சௌந்தராஜன் யார்? தேவராஜன் யார்?

வரதராஜன் யார்? கோவிந்தராஜன் யார்? திருக்குடந்தை வெள்ளைமூர்த்தி யார்?

ஆமருவியப்பனும் திருக்குறளப்பனும் யார்? பாம்பணையப்பன் யார்?

அனந்த சயனன் யார்? வராகப்பெருமாள் யார்? நித்யகல்யாணப் பெருமாள் யார்?

தோள்கள் ஆயிரம் முடிகள் ஆயிரம் துணை மலர்க்கண்கள் ஆயிரம்

தாள்கள் ஆயிரம் பேர்கள் ஆயிரம் கொண்டவர் யார்?

அறிவை என்னும் அமுத ஆறு யார்? அமுத சுரபி யார்?

பாற்கடல் யார்? அமிர்தக்கடல் யார்?

அமிர்தவல்லித் தாயார் யார்? பூர்ணவல்லித் தாயார் யார்?

பவளவல்லி கோமளவல்லி மரகதவல்லி சுந்தரவல்லி யார்?

பரிமளவல்லி புண்டரீகவல்லி கமலவல்லி குமுதவல்லி யார்?

அரவிந்தவல்லி கல்யாணவல்லி சுவேதபுஷ்பவல்லி யார்?

அமுதவல்லி அம்ருதவல்லி அம்ருதகடவல்லி யார்?

மதுரவல்லி நிலமங்கைவல்லி சுதாவல்லி யார்?

அழகியவல்லி மோகனவல்லி கனகவல்லி கற்பகவல்லி யார்?

செங்கமலவல்லி செண்பகவல்லி சௌந்தர்யவல்லி யார்?

வரகுணவல்லி ரமாமணிவல்லி பத்மாசானவல்லி யார்?

வாத்ஸல்யவல்லி அபிஷேகவல்லி அஞ்சிலைவல்லி யார்?

குளந்ததைவல்லி குழைக்காதுவல்லி யார்?

வைகுந்தவல்லித் தாயார் யார்? வேதவல்லித் தாயார் யார்?

மன்னுயிர்க்கெல்லாம் மாதா யார்? நாரங்களுக்கெல்லாம் நற்றாய் யார்?

கடவுள்களுக்கெல்லாம் கடவுள் யார்?

முதுவைய முதல்வன் யார்? முந்தைத் தாய்தந்தை யார்?

முழுவேழுலகுக்கும் நாயகன் யார்? அனைத்துலகுமுடைய அரவிந்தன் யார்?

திருவைகுந்தன் யார்? திருப்பள்ளி கொண்டவன் யார்?

பரமபதம் அருள்பவன் யார்?

பெரிய அப்பன் யார்?

பிரமன் அப்பன் யார்?

உருத்திரன் அப்பன் யார்?

முனிவர்க்கு உரிய அப்பன் யார்?

உலகுக்கு ஓர் தனி அப்பன் யார்?

அந்தமில்லாதவன் யார்? ஆச்சரியமானவன் யார்?

குற்றமில்லாதவன் யார்? உலகம் தோன்றக் காரணமானவன் யார்?

இந்திரியங்களுக்குத் தலைவன் யார்? புகழையுடையவன் யார்?

இளமையுடையவன் யார்? சக்தியுடையவன் யார்?

நேர்மையுடையவன் யார்? பெரிய கண்களையுடையவன் யார்?

போற்றத்தக்கவன் யார்? பரிசுத்தமானவன் யார்?

விண்ணில் உள்ளவர்களுக்குத் தலைவன் யார்?

பூவின்மேல் இருக்கும் பெரிய பிராட்டியின் தலைவன் யார்?

வாசுதேவன் சங்கர்ஷணன் பிரத்தியுமனன் அநிருத்தன் யார்?

வையம் காத்த பெருமாள் யார்?

லோகநாதப் பெருமாள் யார்?

தேவநாதப் பெருமாள் யார்?

விளக்கொளிப் பெருமாள் யார்?

வைத்தமாநிதிப் பெருமாள் யார்?

செல்வநாராயணப்பெருமாள் யார்?

நான்மதியப் பெருமாள் யார்?

தெய்வநாயகப் பெருமாள் யார்?

சத்யமூர்த்திப் பெருமாள் யார்?

சொன்னவண்ணம்செய்த பெருமாள் யார்?

அண்டக்குலத்துக்கு அதிபதி யார்?

நாடும் நகரகமும் நன்கறிந்த நாராயணன் யார்?

பரத்வம் வியூகம் விபவம் அந்தர்யாமித்வம் அர்ச்சாவதாரம் கொண்டிருப்பவர் யார்?

வாத்சல்யம் சுவாமித்துவம் சௌசீல்யம் சௌலப்யம் நிறைந்தவன் எவன்?

வெய்யவாள் தண்டு சங்கு சக்கரம் வில் ஏந்தும் விண்ணோர் முதல் யார்?

தொண்டர்க்கு அமுது யார்? தேவர்க்கு கரு யார்?

அரியான் பெரியான் நல்மேனியன் யார்? வித்தகன் யார்?

கடிகமழ் கொன்றைச் சடையன் யார்?

நான்முகக் கடவுள் யார்?

எண்ணிலாப் பெருமாள் யார்?

முழுமுவுலகு ஆதி யார்?

உலகம் மூன்றுடைய அண்ணல் யார்?

மூவுலகங்களுமாய் அல்லனாய் இருப்பவன் யார்?

வேதியன் யார்? மாநிதி யார்? சேமவைப்பு யார்?

வேதப் பசுந்தமிழ் யார்? பசுந்தமிழானந்தம் யார்? திராவிட வேதம் யார்?

பாரெல்லாம் புகழும் சாரதி யார்?

பாரைப் பிளந்த பரமன் யார்?

பாற்கடலுள் பையத் துயின்ற பரமன் யார்?

அலைகடல் கடைந்த அப்பன் யார்?

பற்ப நாபா யார்? பற்ப பாதா யார்? தாமரைக் கண்ணா யார்?

தர்மம் யார்? கண்ணன் யார்?

கறந்தபால் நெய்யும் நெய்யின் இன்சுவையும் யார்?

கடலினுள் அமுதம் யார்? அமுதின் சுவையும் சுவையின் பயனும் யார்?

சேஷசயனன் யார்? யாண்டும் கூட இருப்பவள் யார்?

லெக்ஷ்மிநாதன் யார்? பரமபதநாதன் யார்? க்ஷீராப்திநாதன் யார்?

ஸ்ரீதேவி பூமிதேவி நீளாதேவியர் யார்? அஷ்டலெட்சுமிகள் யார்?

அழகியமணவாளர் யார்?

பூந்தண் துழாய்முடி நம்பெருமாள் யார்?

எல்லா உலகும் கொண்ட எம்பெருமான் யார்?

காக்கும் கடவுள் எனப் போற்றும் மாதவன் யார்?

அண்டசராசரம் அனைத்தையும் காப்பவன் யார்?

நல்லருள் நாமங்கள் கொண்டவன் யார்?

நாமங்கள் ஆயிரமுடைய நம்பி யார்?

நன்மையாளன் யார்? அன்பைப் பொழிபவன் யார்? ஆக்கும் தெய்வம் யார்?

மலர்மங்கைக்கும் மண்மடந்தைக்கும் கண்ணாளன் யார்?

மங்கலநகர் உறைபவன் யார்? அந்தமில் புகழான் யார்?

திவ்யப்பிரபந்தப் பாசுரங்களின் பாடுபொருள் யார்?

ஆழ்வார்களின் மங்களாசாசனம் யார்?

ஆச்சார்யார்களின் சிம்மாசனம் யார்?

குருபரம்பரை சொத்து யார்?

ஒன்றே எனும் அத்வைதிகளின் அத்வைதம் யார்?

இரண்டு எனும் துவைதிகளின் துவைதம் யார்?

சிறப்புற்றது விசிஷ்டமானது எனும் விசிஷ்டாத்வைதிகளின் விசிஷ்டாத்வைதம் யார்?

பாமன்னு மாறனடிப் பணிந்துய்த்த பல்கலையோர் இராமாநுசனின் பரம்பொருள் யார்?

ஆரியன் தூயவன் இராமாநுச முனியின் பரம்பொருள் யார்?

திருவிளக்கைத் தம் திருவுளத்தே இருத்தும் பெருங்கீர்த்தி இராமாநுசனின் பரம்பொருள் யார்?

தமிழ்த் தலைவன் பொன்னடி போற்றும் இதயத்து இராமாநுசனின் பரம்பொருள் யார்?

சீரரங்கத்து ஐயன் பரன் தாளன்றி ஆதரியா மெய்யன் இராமாநுசனின் பரம்பொருள் யார்?

பல்லாண்டென்று காப்பிடும் பான்மையன்தாள் பேராத உள்ளத்து இராமாநுசனின் பரம்பொருள் யார்?

சூடிக்கொடுத்தவள் தொல்லருளால் வாழ்கின்ற வள்ளல் இராமாநுசனின் பரம்பொருள் யார்?

உயிர்களெல்லாம் உய்தற்கு உதவும் உறுதுணை இராமாநுசனின் பரம்பொருள் யார்?

சீலங்கொள் நாதமுனியை நெஞ்சால் வாரிப் பருகும் ஆரமுதம் இராமாநுசனின் பரம்பொருள் யார்?

செறுகலியால் வருந்திய ஞாலத்தை வன்மையினால் வந்தெடுத்தளித்த அருந்தவன் இராமாநுசனின் பரம்பொருள் யார்?

கீர்த்தி இராமாயணமென்னும் பக்தி வெள்ளம் குடிகொண்ட ஞானத்து இராமாநுசனின் பரம்பொருள் யார்?

பூங்கமலத் தேனதிபாய் வயல் தென்னரங்கன் கழல் சென்னி வைத்துத் தானதில் மன்னும் புகழ் இராமாநுசனின் பரம்பொருள் யார்?

பரிநெடுந் தேர்விடும் கோனை முழுதுணர்ந்த அடியார்க்கமுதம் இராமாநுசனின்

பரம்பொருள் யார்?

அரங்கன் மரலடிக்கு ஆள உற்றவரே தமக்கு உற்றவராகக் கொள்ளும் நற்றவர் இராமாநுசனின் பரம்பொருள் யார்?

ஓதிய வேதத்தின் உட்பொருளை அறியாதுழல்கின்ற தொண்டர் பேதமை தீர்த்த குணந்திகழ் கொண்டல் இராமாநுசனின் பரம்பொருள் யார்?

பரந்தாமனென்னும் திவந்தரும் தீதில் இராமாநுசனின் பரம்பொருள் யார்?

அடியார்கள் உள்ளத்தில் குடியிருக்கும் எந்தை இராமாநுசனின் பரம்பொருள் யார்?

பொங்கிய புகழினையுடைய ஐயன் இராமாநுசனின் பரம்பொருள் யார்?

அற்புதமானவரும் கற்பகமானவரும் கற்றவர் காமுறு பெருஞ்சீலருமான எதிராஜர் நிறுவிய அந்தப் பரம்பொருள் யார்?

பற்பல்லுயிர்களும் பல்லுலகு யாவும் பரனதென்னும் நற்பொருளை நானிலத்தே நாட்டிய எம்பெருமானார் அரங்கன் யார்?

கலியை முடித்த உடையவரின் விசிட்டாத்வைதத்தால் பரம்பொருள் என நிறுவப்பட்ட அரங்கன் யார்?

பாண்டியனின் பொற்கிழி அறுத்து ஸ்ரீமந் நாராயணனே பரம்பொருள் என அறுதியிட்ட விட்டுச்சித்தரின் அரங்கன் யார்?

பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசையார்
ஐயன் அருள் மாறன் சேரலர்கோன் துய்ய பட்ட நாதன்
அன்பர்தாள் தூளி நற்பாணன் நற்கலியன் போற்றிப் புகழ்ந்த புண்ணியனாம் அந்த **அரங்கன் யார்?**

அவனே இறைவன். அவனே ஸ்ரீஹரி. அவனே ஸ்ரீராமன். ஜெயராமனும் அவனே. அவனே நாராயணன். அவனே கண்ணன். வாமனனாய் வந்தவனும் அவனே. ஞாலமும் காலமும் அவனே. அவனே அகிலம். அவனே வையம். மாதவன் அவனே. உடலும் உயிரும் உள்ளமும் அவனே. தெய்வம் அவனே. அவனே ஆண்டவன். கோவிந்தன் அவனே. விழியும் வழியும் ஒளியும் அவனே. மதுரம் அவனே.

ஞாயிறும் திங்களும் அவனே. இளமை அவனே. இன்பம் அவனே. சக்தி அவனே.

தந்தையும் தாயும் அவனே. அன்னமும் மனமும் அவனே. அவனே அருள்.

அன்பு அவனே. அறிவு அவனே. கல்வி அவனே. செல்வம் அவனே. வெற்றி அவனே.

அழகு அவனே. புகழ் அவனே. மேகம் அவனே. காவிரி அவனே. அமுதன் அவனே.

திருமால் எனும் பெயர் கொண்டவன் அவனே.

அருள் தரும் பாதங்கள் கொண்டவனும் அவனே.

அடியார்களை என்றும் காத்தருள்பவன் அவனே.

திருமலையிலும் திருக்குடந்தையிலும் திருவரங்கத்திலும் அருள்பவன் அவனே.

பரந்தாமன் அவனே. பாற்கடலில் பள்ளி கொண்டவனும் அவனே.

திருவிண்ணகரத்தில் எழுந்தருள்பவன் அவனே. பரமபதனும் அவனே.

கனிகள் தரும் மரம் அவனே. பூமியில் பசுமையைப் போர்த்துபவனும் அவனே.

கிளிகள் பேசும் மொழிகள் அவனே. குயில்கள் கூவும் குரலும் அவனே.

கலைகளும் கவிதையும் அவனே. இசைக்குழலும் யாழும் அவனே.

மழையாய்ப் பொழிபவன் அவனே. தென்றலும் குளுமையும் அவனே.

வான் அவனே. அச்சுதன் அவனே. கிருஷ்ணனும் வாசுதேவனும் அவனே.

குணன் அவனே. சீலன் அவனே. சீயம் அவனே. சிந்தை அவனே.

மாயன் அவனே. பரம்பொருள் அவனே. பரத்வம் அவனே.

கேள்வியும் அவனே. பதிலும் அவனே. விஞ்ஞானமும் மெய்ஞானுமும் அவனே.

பங்கயம் அவனே. நன்மைகள் அவனே. ஆனந்தம் அவனே. மங்களம் அவனே.

ஆயிரம் பெயரோன் அவனே. இந்திராபதி அவனே. செங்கணான் அவனே.

உவணமுயர்த்தோன் அவனே. காப்புக் கடவுள் அவனே. நீலமேகன் அவனே.

திருமகள்கொழுநன் அவனே. நிலமளந்தோன் அவனே. பூமிநாயகன் அவனே.

பூதரனும் முத்தனும் அசிதனும் அச்சனும் அவனே. கோகுலனும் அவனே.

பூவைப் பூவண்ணன் அவனே. பெரும் பெயர்த்தெய்வம் அவனே.

அலங்கல் செல்வன் அவனே. ஆயிரநாமன் அவனே. அருணனும் ஆரனும் அவனே.

மன்னுயிர் முதல்வன் அவனே. ஸோமனும் ஸௌமியனும் அவனே.

அவன் தீயினுள் தெறல். பூவினுள் நாற்றம். அறத்தினுள் அன்பு.

வேதத்து மறை அவனே. பூதத்து முதலும் வெஞ்சுடர் ஒளியும் அவனே.

அவனே அனைத்தும். அனைத்தின் உட்பொருளும் அவனே.

பெரியவன் அவனே. ஸ்ரீநிவாசப் பெருமாள் அவனே. விட்டலர் அவனே. பத்ரி அவனே.

நெய்தலும் குவளையும் ஆம்பலும் அவனே. தாமரைப் பூவும் அவனே.

அவனே முனிவரும் தேவரும். முதுமொழி முதல்வனும் அவனே.

அவன் வரம்பறியா மரபினன். எல்லை இல்லான். சர்வன். சர்வ வல்லமையன்.

அவன் பிறை வளர். நிறை மதி. சாம வேதன். காம தேவன். காந்தன். அஞ்சன்.

பக்தியும் கர்மமும் ஞானமும் அவனே. சரணாகதி தத்துவமும் அவனே.

மூலப்பொருள் அவனே. முழுமுதற் கடவுள் அவனே.

அறம் பொருள் இன்பம் வீடு அவனே.

லெட்சுமி வாழும் ஸ்ரீரங்கம் அவனே. ஸ்ரீரங்கநாதன் அவனே.

திருவரங்கச் செல்வனாரும் அவனே. மங்களாசனமும் அவனே.

He is the Greatest of all the Greatest.

He is the Biggest of the Biggest.

He is the Highest of all the Highest.

He is the Richest of the Richest.

He is the Bravest of the Bravest.

He is the Tallest of the Tallest.

He is the Happiest of all the Happiest.

He is the Holliest of all the Holliest.

He is the God of Gods.

He is the King of Kings.

He is the Philosopher of Philosophers.

He is the Teacher of Teachers.

He is the Master of all the Masters.

He is the Father of all the Fathers.

He is the Mother of Mothers.

He is the Superior of Superiors.

He is the World.

He is the Universe.

He is the Father of Universe.

He is the Paradise.

He is the Treasure.

He is the Emperor.

He is the Parent.

He is Legend.

He is Wonder.

He is the Super Hero.

He is the Super Star.

He is the Imperial.

He is the Lord of Lords.

He is All - Father.

He is the Almighty.

He is All Knowing.

He is the First Cause.

He is the Most High.

He is One and All.

He is the Wisdom.

He is the Religion.

He is Supreme.

He is the Beginning.

He is Infinite.

He is Multiple.

He is Permanent.

He is the Ways and Means.

He is Ever and Never.

He is Here and There.

He is the Possiple and Impossiple.

He is All Author Beauty Benefit.

He is the Best Chief Leader Dear.

He is Ever Sweet Teen Fame.

He is Joy Flower Force Form.

He is Good Grand Great Head.

He is Live Bond Kind Mind.

He is New Noble Open Plus.

He is Pure Power Real Year.

He is Vital Wise Upper Potent.

He is the Love Lyric Maker More.

He is Can Xis Zeal Quiz.

He is Top Above Gate Icon.

He is Absolute. He is Eternal Holiness Truth.

He is Immortal. He is Glorious Divine Jubilant.

He is Finest. He is Sacred Supreme Virtue.

He is Prime. He is Fertile Romantic Ultimate.

He is Heroic. He is Victorious Friendly Earthly.

He is Global. He is Historic Total Meter.

He is the Capital. He is Complete General Essential.

He is Inevitable. He is Classic Typical Archaic.

He is Omnipotent. He is Impervious Visual Massive .

He is Precious. He is Marvelous Addition Excess.

He is Special. He is Familiar Famous Peculiar.

He is Modern. He is Fashion Advanced Scientific.

He is Admirable. Always Valuable Principal.

He is Incredible. He is Capable Professional Artistic.

He is Poetic. He is Superb Sovereign Affectionate.

He is Creative. He is Being Blessing Confidential.

He is Decisive. He is Dramatic Exceeding Exciting.

He is Fantastic. He is Social Formative Intimate.

He is Journey. He is Positive Kinetic Lenient.

He is Linkage. He is Masterful Melodic Meritorious.

He is Moral. He is Nature Notable Strong.

He is Nurture. He is Operative Answer Worship.

He is Primary. He is Paramount Spiritual Profound.

He is Psychic. He is Qualitative Radiant Realistic.

He is Scholastic. He is Sensible Significant Static.

He is Thoughtful. He is Unbroken Valiant Vibrant.

He is Youthful. He is Zenith Praise Knowing.

He is Diverse Integrity Unity Whole.

He is Variety Versatile Unlimited

He is Liquid Solid Gas Crystal

He is The Supreme Absolute Truth.

He is the Supreme Personality.

He is the The Supreme Reality.

He is The Most Glorious Lord.

He is the Lord of All Creatures.

He is Supremely Pure .

He is All Witnessing God.

He is the Lord of Knowledge .

He is the Abode of wisdom.

He is the Father of Whole Universe.

He is Excellent Exemplary Amazing Awesome.

He is Cumulative.

He is the Creator of Universe.

He is Ever Victorious.

He is Merciful.

He is Enlighten .

He is Luminous.

He is the Knowledge.

He is Justice.

He is Faith.

He is Promise.

He is Myth.

He is the Liberty.

He is the Liberator.

He is the Healer .

He is the Guardian.

He is the Savior.

He is the Creator.

He is the Conqueror.

He is the Protector.

He is the Gold Silver Diamond .

He is the Pearl.

He is the Flower Fruit Seed.

He is the Tree.

He is the Garden.

He is the Time.

He is the Space.

He is the Light.

He is the Sound.

He is the Day.

He is the Era.

He is the Number.

He is the Letter.

He is the Word.

He is the Book.

He is Name.

He is Water.

He is the Earth.

He is Moon.

He is Sun.

He is Rain.

He is Milk .

He is Biotic.

He is Abiotic.

He is Plants.

He is the Animals.

He is Microscopic.

He is Macroscopic.

He is Telescopic.

He is the Atom.

He is the Particle.

He is the molecule.

He is the Energy.

He is the quantum.

He is the Nano.

He is Micro Macro Mega.

He is the Eternal One

He is the Darling son of mother Yasodha

He is the Abode of Sri

He is the Protector of all beings

He is the Lord of Myth

He is the Speaker of Truth

He is the Lord of all Yogis

He is as Sweet as Nectar

He is the God of Dharma

He is the Lord of Dwarka

He is the Lotus - Eyed God

He is the Lord of Three Worlds

He is the God of Devas

He is the Beautiful Attractive Intelligent God

He is the Handsome Skillful Efficient God

He is the God of Lakshmi

He is Lord of Wealth

He is the God of Medicine

He has Protecting Feet

He is the Giver of Fearlessness

He is the First Lord

He is God from the Beginning

He is the Lord of Joy

He is the Destroyer of Ignorance

He Never grows Old

He is the Shelter of Everyone

He is the Ocean of Bliss

He is the bearer of Sudarshan Chakra

He is The Blue Lord

He is the Protector of Devotees

He is the Son of Devaki

He is the Author of Gita

He is the King of Gopis

He is the Lifter of Govardhan Hill

He is the Lord of Earth

He is the Winner of Hearts

He is the Dark Cloud God

He is Flute God

He is the God of Matchless Limitless Endless

He is the Beloved of Nanda

He is the Lord of Love

He is the Merciful God

He is the Lover of Radha

He is Lord of Ever Happy

He is the Source of Veda

He is the MahaRaja of the World

He is the Universal God

He is the Lord of Vaikunda.

வைகுந்தன் அவனே. திருப்பதியின் நாயகன் அவனே. ஜானகி ரமணன் அவனே.

அவனே மகிழ்ச்சியான வாழ்வு தரும் லட்சுமி மணாளன். திருவின் கணவன்.

அவனே மாரன். மதனன். மீனகேதன். காமவேள். மலர் அம்பன். அவனே கந்தர்வன்.

அவனே மூலத்திற்கு எல்லாம் மூலமான அதிமூலம். உலகின் தொடக்கம் அவனே.

முதன்மைப் பொருள் அவனே. சந்திரனுக்கு ஒளி வழங்குபவனும் அவனே.

கடலளவு கருணை கொண்டவன் அவனே. மூவுலக வடிவினன் அவனே.

அவன் மாய மன்னன். நல் யாழ். தொல் இயல். வலம்புரி வண்ணன்.

அவன் பருதி வலவன். பொரு திறல் மல்லன். பொரு விறல் மள்ளன்.

அவன் தண்மையும் சாயலும் திங்கள் உள.

அவன் சுரத்தலும் வண்மையும் மாரி உள.

அவன் தோற்றமும் அகலமும் நீரின் உள.

அவன் வருதலும் ஒடுக்கமும் மருத்தின் உள.

இவ்வும் உவ்வும் அவ்வும் பிறவும் அவனே.

அவன் தாள் இணையவை அவனினும் சிறந்தவை.

எங்கும் எல்லாமுமாய் நிறைந்திருக்கும் பெருமையன் அவனே.

முடிந்ததும் முடிவதும் முகிழ்ப்பதும் அவனே. அவை கடந்ததும் அவனே.

பங்கஜம் அவனே. அசோகம் மாம்பு அவனே. நீலோத்பலமும் அவனே.

அவன் பதுமம். அல்லியும் சண்பகமும் அவனே. அவனே துளசி.

அவனே கருணாகர கிருஷ்ணா. அவனே முரளிதர கிருஷ்ணா.

மதுராபுரி கிருஷ்ணன் அவனே. மதுசூதன கிருஷ்ணன் அவனே.

புவ்வத் தாமரை புரையும் கண்ணனும் அவனே.

அவனே ராதைகிருஷ்ணன். அவனே நாமவெள்ளம்.

அன்னம் அவன். புரவி அவன். சுரும்பு அவன். கலிமடமா அவனே.

சொல்லும் பொருளும் அவனே. புலவர்களின் புலமை அவனே.

ஞானியரின் ஞானம் அவனே. வேந்தர்களின் வெற்றி அவனே.

ஆண்களின் வீரம் அவனே. பெண்களின் தயை அவனே.

சுவைமை அவன். இசைமை அவன். காலமும் விசும்பும் அவனே.

ஊறும் நீரும் காற்றொடு கனலும் அவனே. அறனும் அவனே.

அவன் இன்உயிர். நல்லோன். கதிரொளி.

அவன் காமவிதை. தேனமர் குழலான். தேன்மொழியான். திருநன்மார்வன்.

அவன் மதிமுகம். மங்கள முழுநிலா. நிறைவளம்.

அஞ்சன ஒளியானும் அலர்மிசை உறைவானும் அவனே.

அமுது எனும் மொழியான் அவன். அயோத்தி வேந்தன் அவன்.

அவன் சுந்தர ராமன். சௌந்தர ராமன்.

அவனியை மயக்கும் அழகுடையவன் அவன்.

அவன் பூத நாயகன். நீர் சூழ்ந்த புரவிக்கு நாயகன்.

அவன் சீதை நாயகன். வேத நாயகன். தெய்வ நாயகன்.

நாளை வாரும் என நல்கிய நாயகனும் அவனே.

உலகம் அவன். உலகு ஆளும் அப்பன் அவனே.

அவன் சந்தனம். அகில். வாசம். அணி. முரசு. மழை. மறிகடல். தமிழ் அமிழ்து.

அவன் பூரண குடம். வயிரம். வீணை. சிங்க ஏறு. அரசு. மழைமுகில். ரகுராமன்.

அவன் வெண்குடை. திண்தேர். நல்நாள். கதிர்மணி. ஆண்மை. புனித மாதவன்.

அருந்தவ முனிவரும் அந்தணரும் போற்றும் கடவுள் அவனே.

மண்ணவரும் விண்ணவரும் மகிழும் சுபமங்களன் அவனே.

அவன் வீரம் எனும் வில்லை ஏந்தும் விஜயராமன்.

வெற்றி என போர் முடிக்கும் ஸ்ரீஜெயராமன்.

அவன் நல்லளின் நல்லன். பெரும்புகழ் சனகியின் மன்னவன். அருந்தவன்.

அவன் உண்ணும் நீரினும் உயிரினும் உவப்பானவன்.

குகனொடு ஐவரானவனும் குன்று சூழ்வான் மகனொடு அறுவரானவனும் அவனே.

அவனே முழை அன்பில் வந்த அகன் அமர் காதல் ஐயனொடு எழுவரானவன்.

அரியனை அனுமன் தாங்க அங்கதன் உடைவாள் ஏந்த

பரதன் வெண்குடை கவிக்க இலக்குவனும் சத்துருக்கனும் கவரி வீச

மணம் கமழும் கூந்தலை உடைய சீதா பிராட்டியார் பெருமிதமாய் விளங்க

வசிட்ட மாமுனியால் மகுடம் சூட்டியவன் அவனே.

கோதை குடியிருக்கும் வீரத் திருமார்பகன் அவனே.

அவனே ஏழுலகு அனைத்திற்கும் ஏகாந்த இறைவன்.

அவன் அறத்தின் மூர்த்தி. ஜகம் புகழும் புண்ணிய மூர்த்தி.

நலம்பல தந்திடும் நாராயணன் அவனே.

உலகுக்கெல்லாம் உய்வண்ணம் அவனே.

உலகம் உய்ய வேண்டி அவதாரம் எடுப்பவன் அவனே.

உம்பரும் உலகும் உய்ய உதித்திடும் உத்தமன் அவனே.

மானுடத்தைக் காத்தருளும் மன்னவன் அவனே.

காதலும் வீரமும் அவனே. ஞானம் அவனே.

அவனே தமிழ். அவனே இலக்கணம். இலக்கியங்கள் அவனே.

அவனே எழுத்து. ஒலியும் வரியும் அவனே.

அவனே சொல். அவனே பொருள். யாப்பும் அணியும் அவனே.

நானிலமும் ஐந்திணையும் அவனே.

உயர்திணையும் அற்றிணையும் அவனே.

அகப்பொருளும் புறப்பொருளும் அவனே. அவனே பொழுது.

அவனே முதற்பொருள். கருப்பொருளும் உரிப்பொருளும் அவனே.

அருவி அவனே. ஆறும் பொய்கையும் அவனே.

அவன் துணிவுடை ஆண்மை. பெரும் படைத் தலைவன்.

அவன் படை ஏர் உழவன். பாடினி வேந்தன்.

வண்தமிழ் அவனே. ஒண்தமிழ் அவனே. தண்தமிழ் அவனே.

செந்தமிழ் அவனே. தெளிதமிழும் அவனே.

தென்தமிழ் அவனே. தெய்வத் தமிழும் அவனே.

தொன்மையும் முன்மையும் இளமையும் வளமையும் அவனே.

செம்மையும் மும்மையும் இனிமையும் பெருமையும் அவனே.

நிலவுதமிழும் தனித்தமிழும் அறிவியல் தமிழும் அவனே.

தொல்பெரும் புலவரும் அருந்தமிழ்ப் புலவர்களும் அவனே.

பெருநூல் படைத்தோரும் பேருரை கண்டோரும் அவனே.

பாரதம் எங்கணும் பைந்தமிழ் பரப்பிய பார்வேந்தரும் அவனே.

உலகெலாம் முதற்கண் ஆக்கியதும் அவனே.

புவனமுழுதையும் அளந்தவனும் அவனே.

ஆயர்கள் மகிழ நாட்டியமாடினவனும் அவனே.

ஆன்ற தமிழ்மறை யாவும் அவனே.

அற்புதன். அனந்தசயனன். ஆதிபூதன் அவனே.

அவன் தென்னர். அவன் சேரலர். அவன் செம்பியன்.

மன்னர் மூவரும் மல்லரும் அவனே.

அவனே தென் நாடு வட நாடு குட நாடு குண நாடு.

அவனே திசையும் திக்குகளும்.

நிலம் நீர் தீய் வளி ஆகாயம் அவனே.

மெய் வாய் கண் மூக்கு செவி அவனே.

அவனே சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்.

அவனே வாக்கு பாணி பாதம் பாயிரு உபத்தம்.

மனோ புத்தி ஆங்கார சித்தம் அவனே.

உயிர் எனும் ஆன்மாவும் அவனே.

ஊனும் உயிரும் உலகெல்லாமும் அவனே.

தேனினும் இனிய முரளிகானமும் அவனே.

ஐம்பெருங்குழுவும் எண்பேர் ஆயமும் அவனே.

காய்க் குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும் அவனே.

பூங்கொடி வல்லியும் கரும்பும் அவனே.

பரந்து பாய் புனலும் தண் வயல் உழவரும் அவனே.

அவனே நீரின் சுவை. வேதங்களின் ஓங்காரம். வானின் ஓசை. மகா மாயை.

அவன் ஞானியருக்குப் பிரியமானவன். அறவாளன். புண்ணிய நல்நீர்

அவன் தருமத்தலைவன். திருவறமூர்த்தி. திருமூர்த்தி. மூன்றுமூர்த்தி.

அவன் நிறைமதி. முழுமதி. வெண்மதி. அவன் புதுமதி.

அவன் தேவர் கோமான். அமராபதி. வான்பதி. தொல்பதி.

அவன் வெண்குடை மன்னவன். இலங்கு நீள்முடி இந்திரன்.

விண்ணவர் தலைவன். அவன் வெந்திறல் மன்னன். வெற்றி வேந்தன்.

அவன் தென்னர் கோன். மறம் கொள் வீரன்.

அவன் நெடுந்தெய்வம். புவிக் காவலன். வையங் காவலன்.

அவன் இன்ப ஆர் அமுது இறைவன். பைம்பூம் போதிப் பகவன்.

அவன் களிக்கயல் நெடுங்கண் கடவுள். விரிகதிர்ச் செல்வன்.

அவன் காதல் மைந்தன். மான்கண் காதலன். களிமகிழ்நன்.

நன்பொருள் அவனே. நல்வினை அவனே.

பல்உயிர் அவனே. அவனே ஞானதீபம்.

மலர்க்குழலி மாதவன் அவனே. நறுமலர்க்கோதை நாயகனும் அவனே.

அவன் புண்டரீகப்பாவை சேரும் மார்பன். பூமி நாதன்.

அவன் தேனுலாவு மென்மலர் மங்கை மன்னிவாழும் மார்பன். விண்ணின் நாதன்.

அவன் புது மலர்ச்சோலை. அவன் பொழில்தரு நறுமலர்.

அவன் இளநகை. அருள்புன்னகை. கருங்கயக்கண்.

அவன் பயன்அறிவு. வளன். வளவன். தணியா இன்பம்.

அவன் மாசுண மகிழ்ச்சி. ஊறில் இன்பம். மழைமுகில் மாரி.

ஆரமும் முத்தும் மணியும் பொன்னும் அவனே.

அவன் அகில நாயகன். பெருந் துணைவன். நலஞ்செய்வோன்.

அவன் மூவரி ஆய். அவர்களுக்கும் முதல்வன் ஆகிய மூர்த்தி.

அவன் நீண்டான். நெடிய மாமுகில். புயல்வண்ணன்.

அவன் கொழுங்குளிர் முகில் வண்ணன். அமரர் பெம்மான்.

அவன் பச்சை ஆல்இலை. சொன்ன நால்வகைச் சுருதி.

அவன் புனமயில். பூங்குயில். பூங்கிளி. பன்னுதமிழ்.

அவன் செந்நெல் குலை. செங்கமல மலர். சொர்ணம்.

அவன் அமுத ஆறு. மகிழ்ச்சிக் கருவூலம்.

அவன் எழிலுடை எழிலிவண்ணன். அருள் குடியிருக்கும் கண்ணன்.

அவன் பாண்டவர் சகாயன். தனஞ்சயன் தோழன். அருச்சுனன் சாரதி.

பேர் படைத்த விசயனுக்கு தேர் ஊர்தற்கு இசைந்த கார் படைத்த நிறத்தோன்.

அவன் பூதலத்து அரசன். ஞாலம் எல்லாம் பூத்தோன். புன்மை யாவும் தீர்த்தோன்.

பூந்தவிசில் பூவைபுணர் மணிமார்பன் அவனே.

அவன் இன்னமுது. இளங்கிளி. நல்நலம். நன்பொன்.

அவன் ஆரணன். அரன். காரணன். கருணாகரன்.

அவன் நாரணன். முனி. ஜிஷ்ணு. சிம்மம்.

அவன் வாரணன். காமன். கமலாசனி. காதலன். காதல் வெள்ளம்.

அவன் காமதேவக் கண்ணன். துவரைக் கண்ணன்.

கருவுடை முகில்வண்ணக் கண்ணன். காயாவண்ணக் கண்ணன்.

கருவிளைபோல் வண்ணக் கண்ணன். கமலவண்ணக் கண்ணன்.

திருவுடைமுகக் கண்ணன். செய்யதாமரைக் கண்ணன்.

கள்ளமாதவக் கண்ணன். ஏலாப்பொய்கள் உரைக்குங் கண்ணன்.

ஓதமாகடல் வண்ணக் கண்ணன். மாமணி வண்ணக் கண்ணன்.

மணிமுடிவேந்தக் கண்ணன். விருந்தாவனக் கண்ணன்.

சுந்தரத் தோளுடையக் கண்ணன். சோலை மலைக் கண்ணன்.

பூமகற் கண்ணன். காமகற் கண்ணன்.

மாமகற் கண்ணன். கோமகற் கண்ணன்.

கற்பூரம் நாறுங் கண்ணன். கமலப்பூ நாறுங் கண்ணன்.

திருப்பவளவாய்க் கண்ணன். தித்தித்திருக்குங் கண்ணன்.

இன்னமுதக் கண்ணன். குழலழகக் கண்ணன்.

வாயழகுக் கண்ணன். கண்ணழகுக் கண்ணன்.

கொப்பூழகுக் கண்ணன். திருவரங்கத்து செல்வக் கண்ணன்.

பொற்கொடி நாச்சியார் கண்ணன். பூங்கோதை நாயகியார் கண்ணன்.

ஆயிரமாயிரம் மலர்கள் மலர்வது அவனுக்காகவே.

ஆயிரம் வெண்ணிலாக்கள் எழுவதும் அவனுக்காகவே.

ஆயிரம் ராகங்களும் ஆயிரம் தாளங்களும் ஆயிரம் கீதங்களும் அவனுக்காகவே.

கோடைமழையும் வான்மேகங்களும் வெள்ளிநிலவும் அவனுக்காகவே.

வசந்தகாலமும் மலைச்சாரலும் காதல் காவியங்களும் அவனுக்காகவே.

நிலா பாடுவதும் தென்றல் நாணுவதும் பூக்கள் காமுறுவதும் அவனுக்காகவே.

சில்வண்டின் ரீங்காரமும் சீம்பாலும் வெண்பனியும் அவனுக்காகவே.

விழி இமையும் இதழின் ஈரமும் முத்தத்தின் மூச்சுக்காற்றும் அவனுக்காகவே.

வான்வெளியின் இசையும் கவிதைகளும் பாடல்களும் அவனுக்காகவே.

கொழும்கயல் கண்ணினாளும் கண்ணாள் காமமும் அவனுக்காகவே.

நாறுகோதையும் ஊறுஅமுதும் அறுநிலத்து அமிர்தமும் அவனுக்காகவே.

நினைவுகளும் கனவுகளும் நனவுகளும் பயணங்களும் அவனுக்காகவே.

அவன் தோற்றங்கள் சுகம். அவன் மாற்றங்கள் சுகம்.

அவன் கேள்விகள் சுகம். அவன் தேடல்கள் சுகம்.

அந்தமில் பேரின்பம் அவனே.

ஆழ்வார்களின் பொக்கிஷம் அவனே.

சிறந்த தெய்வம் அவனே.

யாதும் அவனே. யாவும் வாசுதேவ சொரூபம்.

சென்றதும் நிகழ்வதும் வருவதுமாகிய அனைத்தும் அவனே.

அனந்த கல்யாணக் குணங்கள் கொண்டவன் அவனே.

மும்மூர்த்திகள் அவனே. முத்தேவியர் அவனே

அவன் எல்லாவற்றையும் கடந்து இருப்பவன்.

இடம் பொருள் காலத்தால் அடங்காமல் இருப்பவனும் அவனே.

ஆந்தர்யாமி அவன். காரண காரியன் அவன்.

திவ்ய தேசங்களும் திவ்ய பிரபந்தங்களும் அவனே.

வைகுண்டபதியும் பெரிய பிராட்டியாரும் அவனே.

திருநாடு தருபவன் அவனே.

பரமன் அவன். ஆயிரம் பேரானும் அவன்.

பெரியாழ்வாராலும் நம்மாழ்வாராலும் புகழப்பட்டவர் அவரே.

ஸ்ரீபாஷ்யக்காரரால் பரமாக போற்றப்பட்டவர் அவரே.

ஸ்ரீபராசர பட்டரால் வணங்கப்பட்ட ரங்கநாதப் பெருமாளும் அவரே.

அவர் ஆயிரம் பெயர்கள் உடையவர். ஸஹஸ்ரநாமம் கொண்டவர்.

முடிவில்லாதவரும் ஆயிரம் வடிவுடையவரும் ஆயிரம் அடிகளும், முடிகளும், கண்களும், தொடைகளும், தோள்களும், ஆயிரம் நாமங்கள் உடையவரும் ஆயிரம் கோடி யுகங்களை இயக்குபவரும் அவரே.

எவருக்குப் பூமி பாதங்களாகவும், வானம் நாபியாகவும், வாயு பிராணனாகவும், சந்திரனும் சூரியனும் கண்களாகவும், திக்குகள் காதுகளாகவும், தேவலோகம் தலையாகவும், அக்கினி வாயாகவும், சமுத்திரம் அடிவயிறாகவும் அமைகின்றனவோ, எவருடைய வயிற்றில் தேவர், மனிதர், பறவைகள், மிருகங்கள், நாகர், கந்தர்வர், அசுரர் என விரிந்த உலகு விளையாடிக் களிக்கின்றதோ, அந்த முவ்வுலக வடிவினரும் ஈசருமான அவரே விஷ்ணு.

லெட்சுமிதேவியின் உள்ளத்தைக் கவரும் தாமரைக்கண்ணரான அவரே ஸ்ரீபதி.

யோகிகளின் தியானத்தால் அடையப்படுபவராய் இருக்கும் அவரே ஸ்ரீமஹாவிஷ்ணு.

வெண்மையான ஆடை உடுத்தியவரும் எங்கும் நிறைந்தவரும் நிலவு போன்ற ஒளியுள்ளவரும் நான்கு கைகள் உள்ளவரும் ஆனந்தம் பொங்கும் முகமண்டலத்தை உடையவருமான அவர்

விச்வம் விஷ்ணுர் புருஷோத்தம ப்ரபு ஸ்வயம்பூ பத்மநாபோ விச்வகர்மா

ஈசான ஹிரண்யகர்ப்போ ஈச்வரோ விக்ரம ஸத்ய அம்ருத ஸர்வக வேதோ

லோகாத்யக்ஷ சதுராத்மா வைத்ய மஹாமாயோ மஹாபுத்திர் கோவிந்தோ ப்ரஜாபதி

அம்ருத்யு அஜோ ஸஹஸ்ரமூர்த்தா தரணீதர ஸாதுர் அஸங்க்யேயோ ஸித்தார்த்த

வ்ருஷாஹீ வர்த்தனோ மஹேந்த்ரோ மந்த்ர காமக்ருத் மஹீதர அச்யுத அபாம்நிதி

ஸ்கந்த வரதோ வாஸுதேவோ மஹர்த்திர் மஹாபாகோ வ்யவஸாயோ சுபேக்ஷண

ராமோ தர்மோ வைகுண்ட ஸுதர்சன விஸ்தார மஹாபோகா நக்ஷத்ரி ஸதாங்கதி

ஸுமுக மநோஹரோ வத்ஸரோ தர்மகுப் ஸத்வஸ்த ஆதிதேவோ முகுந்தோ

அஜோ மஹார்ஹ ஆனந்தோ மஹர்ஷி மேதினீபதி பகவான் ஸஹிஷ்ணுர்

த்ரிஸாமா சாந்தித வ்ருஷபாக்ஷோ ஸ்ரீநிவாஸ ஸ்ரீதர ஸத்கீர்த்தி அநிருத்தோ

த்ரிலோககேச தனஞ்ஜய ப்ரஹ்ம மஹாஹவி பூர்ண புண்ய ஸத்கதி

விச்வமூர்த்திர் லோகநாதோ மாதவோ மான்யோ ஸுமேதா வ்யக்ரோ துர்ஜயோ

இந்த்ரகர்மா ஸுந்தர அர்க்கோ ஜயந்த மஹாபூதோ ஸர்வஜ்ஞ ஸஹஸ்ரார்ச்சி

ஸர்வகாமத ஆச்ரம ப்ரியக்ருத் அனந்தோ ஸநாத் ஸ்வஸ்தித வித்வத்தமோ

உத்தாரணோ ரக்ஷண ஜிதமன்யுர் ப்ராணப்ருத் தத்வம் ப்ரபிதாமஹ தேவகீ-நந்தன

அவர் உலகம் அனைத்தும் தாமாயிருப்பவர்.

அவர் உயிர்களுக்குயிராயிருப்பவர்.

அவர் உலகங்களைத் தாங்குகிறவர்.

அவர் உலகத்தை அளப்பவர்.

அவர் அருள் மிகுந்தவர்.

அவர் எல்லோராலும் விரும்பப்படுபவர்.

அவர் எல்லாவற்றையும் நடத்துகிறவர்.

அவர் தாமரையைக் கையில் தரித்திருப்பவர்.

அவர் தாமரை போன்ற கண்களையுடையவர்.

அவர் உள்ளத் தாமரையில் எழுந்தருள்பவர்.

அவர் எல்லாவற்றையும் உண்டாக்குகிறவர்.

அவர் அனைத்தையும் வெல்பவர்.

அவர் வரங்களை அளிப்பவர்.

அவர் என்றும் மங்களமாக இருப்பவர்.

மிக அழகுள்ளதும் புனிதமானதும் தெளிந்த நீரோடும் காவிரியால் சூழப்பட்டதுமான

ஸ்ரீரங்கத்தில் சேவை சாதிக்கும் ஸ்ரீரங்கநாதர் அவரே.

அரங்கமாநகரில் ஆதிஷேசன் மேல் யோக நிலையில் பள்ளிகொண்டிருக்கும்

அரங்கநாதரும் அவரே.

அவர் வலது திருக்கையை மணிமுடியருகே வைத்திருக்கிறார்.

அவர் கருணை நிறைந்த தாமரை போன்ற இடது திருக்கையால் தாமரைப்

பாதங்களைக் காட்டி அனைவரையும் என்றும் காத்தருள்கிறார்.

அவர் அழகான புனசிரிப்பை ஆபரணமாகக் கொண்டுள்ளார்.

அவர் மிக்க அழகுள்ள உதடுகளைப் பெற்றிருக்கிறார்.

அவர் வைரங்கள் பதிக்கப்பட்ட மணிமுடி அணிந்துள்ளார்.

அவரது திருமுகம் தாமரை போன்றுள்ளது.

அவரது திருக்கண்கள் காது வரை நீண்டிருக்கின்றன.

அவர் காவேரியை மாலையாகக் கொண்டவர்.

அவர் பொன்னி சூழ் இன்னமுதர்.

இருமருங்கும் பொங்கும் காவிரிக் கரையில் கண்வளர்பவர்.

பாயும் நீரரங்கந்தன்னுள் பாம்பணைப் பள்ளிகொள்ளும் மாயனார்.

பொங்குநீர் பரந்துபாயும் பூம்பொழில் அரங்கத்து மால் அவர்.

வெள்ளநீர் பரந்துபாயும் விரிபொழில் அரங்கத்து கள்வனாரும் அவரே.

வண்டினம் முரலும் சோலை மயிலினம் ஆலும் சோலை

கொண்டல் மீதணவும் சோலை குயிலினம் கூவும் சோலை

ஆண்டர் கோன் அமரும் சோலை அணிதிருவரங்கத்தில்

கண்வளரும் கடல் வண்ணர் அரங்கரே.

மணிமாட மாளிகைகள் மல்கு செல்வ

மதிளரங்கத் தரவணையில் பள்ளிகொள்ளும்

மணிவண்ணனம்மானும் திருவரங்கரே.

தமிழின் இன்பப் பாவும் வடமொழியும் ஸ்ரீநிதியும் அரங்கத்தம்மாவும் தென்னரங்கரே.

கோதையின் பாடலும் ராதையின் ஊடலும் தழுவும் காவேரியும் அவரே.

அல்லிநாட்டுத் தாமரையின் தரணி அளந்தார் அவரே.

மல்லிநாடாண்ட மடமயில் மணாளரும் அவரே.

அவர் அன்புருவானவர். அருள் மாமழை பொழிபவர். பரமமூர்த்தி.

உயர்ஞானம். பாசுரம். தமிழ்மாலை. செம்மொழி. பாதை. பயணம். அறிவு. அம்புயம்.

ஐயன். அரங்கமால். பச்சைமாமலை. ஆவி. ஆருயிர். அமுது. அப்பா அம்மா.

முப்பத்து முக்கோடி தேவர்கள் சூழ்ந்திருக்கும் நாயகன் அரங்கனே.

முப்பத்து மூவர் அமரர்க்கு முன் செல்லும் முதலும் சீரங்கனே.

சேலார்ந்த நெடுங்கழனி சோலை சூழ்ந்த திருவரங்கத்தில்

காதல்தேவியோடு பள்ளி கொள்ளும் மாலோன் ஸ்ரீரங்கனே.

காவிரி தாலாட்ட கொள்ளிடம் சீராட்ட பூமியெல்லாம் சிறக்க

பூலோக வைகுண்டத்தில் ஆனந்த சயனம் கொள்ளும் அரங்கன் வாழி!

வாழி காவேரி!

நடந்தாய் வாழி காவேரி! அருளே வாழ்க காவேரி!

மழவர் ஓதை வளவன்தன் வளனே வாழி காவேரி!

பரிசுத்தமானவற்றுள் பரிசுத்தமாயும் மங்களமானவற்றுள் மங்களமாயும் நிறையும் நல்நாரணனின் திவ்யதேசங்கள் வாழி! வைணவத் திருத்தலங்களுள் சிறப்புமிக்கதும் முதன்மையானதும் பள்ளிகொண்டதுமான ஸ்ரீரங்கம், நிலத்தில் அமர்ந்து அருளும் காஞ்சி, நின்று அருளும் திருப்பதி, தார்ஷ்யாக்கிரி, சிம்ஹாசலம், ஸ்ரீகூர்மம், ஜகன்னாதம், பத்ரிநாதம், நைமிசாரண்யம், துவாரகை, பிரயாகை, மதுரா, அயோத்தி, கயா, புஷ்கரம், சாளக்கிராமம் வாழி!

வாழி ஸ்ரீஇராமானுஜ முனி! வாழி ஸ்ரீபட்டர்பிரான்!

வாழி! சவுந்தரி வாழி! மலர்த்திரு வாழி! அருந்தமிழ் வாழி!

உலகம் யாவையும் தாமுளவாக்கலும் நிலைபெறுத்தலும் நீட்டலும் நீங்கலா

அலகிலா விளையாட்டுடையவரான ரகுவீர ராமனின் திருவடித் தாமரைகள் சரணம்.

மறையவன் வாழி!

வேத மனுநெறி வாழி!

நன்னூல் முறைசெயும் அரசர், திங்கள் மும்மழை வாழி!

மெய்ம்மை இறையவன் இராமன் வாழி!

அரும் புகழ் அனுமன் வாழி!

வாழியசீர் இராமன்; வாழிய சீதை கோமான்!

ஸ்ரீராமச் சந்திரனுக்கு ஜய மங்களம்!

நல்ல திவ்ய முகச்சந்திரனுக்கு சுப மங்களம்!

அவர் சித்தார்த்தர். கௌதம புத்தர். ததாகதர். போதி சத்துவர். ஆசியாவின் ஒளி.

அவர் நிர்வாண நிலையடைந்தவர். பரிபூரண போதிநிலை எய்தியவர்.

அறிவு மற்றும் நடத்தையில் பூரணமானவர். நன்றாகச் சென்றவர்.

அனைத்து உலகங்களையும் அறிந்தவர்.

அனைத்து மனிதர்களுக்கும் வழிகாட்டுபவர்.

தேவர்கள் மற்றும் மனிதர்களின் ஆசிரியர்.

போதியை உணர்ந்தவர். புனிதமானவர்.

மரியாதைக்குரியவர். வணங்கத் தகுந்தவர்.

மனிதர்கள் அனைவரும் ஒருவரோடு ஒருவர் மனம், மொழி, மெய்யால் நல்லொழுக்கத்தோடும், வாய்மையோடும், அன்போடும், பரிவோடும் நடந்து கொண்டால் உலகின் அமைதி உண்டாகும் என வழிகாட்டியவர்.

ஒவ்வொரு மனிதரும் வாழ்வில் தூய்மை, நேர்மை, நலலொழுக்கம் ஆகிய மூன்றையும் பின்பற்றி நடப்பாராயின் உலகிலுள்ள அனைத்து துன்பங்களுக்கும் ஒரு முடிவு வரும் என்று எடுத்துரைத்தவர்.

புத்தம் சரணம் கச்சாமி!

தம்மம் சரணம் கச்சாமி!

சங்கம் சரணம் கச்சாமி!

புத்த ஞாயிறு தோன்றும் காலை

திங்களும் ஞாயிறும் திங்கு உறா விளங்க

தங்கா நாள் மீன் தகைமையின் நடக்கும்

வானம் பொய்யாது மாநிலம் வளம்படும்

ஊன் உடை உயிர்கள் உறு துயர் காணா

வளி வலம் கொட்டும் மாதிரம் வளப்படும்

ஒளி இரு முந்நீர் நலம் பல தருஉம்

கறவை கன்று ஆர்த்தி கலம் நிறை பொழியும்

பறவை பயன் துய்த்து உறைபதி நீங்கா

விலங்கும் மக்களும் வெருஉம் பகை நீங்கும்

கூனும் குறளும் ஊமும் செவிடும்

மாவும் மருளும் மன் உயிர் பெறாஅ

அந்நாள் பிறந்து அவன் அருளறம் கேட்டோர்

இன்னாப் பிறவி இகந்தோர்.

வாழி மன் உயிர்!

வாழி ஆருயிர் மருந்தாம் அமுதசுரபி!

வாழி பசிப்பிணி தீர்த்தனள்!

நல் அறச்சாலை நண்ணிணள் வாழ்க!

மல்லல் மூதூர் மன் உயிர் முதல்வி வாழ்க!

மூதூர் வாழ்க!

வானம் மும்மாரி பொழிக!

பண்டைத் தமிழகத்தில் பகுத்து அறியப்பட்ட ஐந்து வகைத் தமிழர் நிலத்திணைகளில் ஒன்று மருதம். வயலும் வயல் சார்ந்த இடமுமான மருத நில மக்கள் உழவுத் தொழில் புரிவோர். மருத நிலத்தலைவர்கள் வேந்தன் மகிழ்னன் ஊரன் கிழவன் என்றும், வேளாண்மை செய்யும் பொருட்டு வேளாளர் எனவும் அழைக்கப்பட்டனர். மருத நிலத்தின் கடவுள் இந்திரன்.

வேந்தனுக்கு மங்களம்!

வாழி ஆதன்! வாழி அவினி!

நெல் பல பொலிக! பொன் பெரிது சிறக்க!

விளைக வயலை!

பால் பல ஊறுக!பகடு பல சிறக்க!

பார்ப்பார் ஓதுக!

பசி இல்லாகுக! பிணி சேண் நீங்குக!

வேந்து பகை தணிக! யாண்டு பல நந்துக!

அறம் நனி சிறக்க! அல்லது கெடுக!

அரசு முறை செய்க! களவு இல்லாகுக!

நன்று பெரிது சிறக்க! தீது இல்லாகுக!

மாரி வாய்க்க! வளம் நனி சிறக்க!

ஊரன் வாழ்க! பாணன் வாழ்க!

காக்கும் கடவுளான திருமால் உலகை உய்விக்க, பாரினை உயர்த்த, உயிர்கள் நல்வாழ்வு வாழ அவதாரங்கள் பல எடுத்து பேரருள் புரிகிறார். கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகங்களில் வையத்தை வாழ்வாங்கு வாழ வைத்தது போலே கலியுகத்திலும் அவதாரம் செய்து அகிலத்தை மேன்மையுறச் செய்வார் என்பது ஆழ்வார்கள், ஆச்சார்யார்கள், அடியார்கள் மற்றும் உலகத்தவரின் முடிவு.

மச்ச அவதாரம் சதுர்வேதம் காத்தது.

கூர்ம அவதாரம் அசுரரை வென்றது.

வராக அவதாரம் பூமியைக் காத்தது.

நரசிம்ம அவதாரம் திருநாமம் சேர்த்தது.

வாமன அவதாரம் உலகத்தை அளந்தது.

பரசுராம அவதாரம் பாசத்தில் உறைந்தது.

ஸ்ரீராம அவதாரம் தாரத்தைப் புகழ்ந்தது.

பலராம அவதாரம் யதுகுலம் கண்டது.

கண்ணன் அவதாரம் நெறியினைக் காத்தது.

கல்கி அவதாரம் தர்மமும் நியாயமும் பூமியில் நிலைக்கச் செய்வது.

உலகத்தீரே,

தேவுடைய மீனமாய் ஆமையாய் ஏனமாய்

அரியாய்க் குறளாய் மூவுருவில் இராமனாய்க் கண்ணனாய்

கற்கியாய் முடிப்பான் கோயில் எது தெரியுமா?

முடிப்பவன் ஆர் என அறிவீர்களா?

முடிக்கப்போவது எதை என உணர்வீர்களா?

அவன் பேரும் ஊரும் யாது?

சாதுக்களைக் காத்தற்கும் துஷ்டர்களை அழித்தற்கும்

தருமத்தை நிலைநாட்டுதற்கும் யுகந்தோறும் வந்துதிப்பவர் யார்?

அவர் பத்தாவது அவதாரம் எடுப்பது ஏன்? எதற்கு? எப்போது? எப்படி?

நிலத்தெய்வம் வியப்பு எய்த, நீள்நிலத்தோர் மனம் மகிழ,

மண்ணகம் மருள, வானகம் வியப்ப,

மானிடரெல்லாம் மகிழ, வானவரெல்லாம் புகழ,

அரியென அவதாரமெடுக்கும் ஸ்ரீமந் நாராயணனுக்கு

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு

பலகோடி நூறாயிரம்

மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்

சேவடி செவ்வித் திருக்காப்பு

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு

வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு

வடிவார்சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு

படைபோர் புக்கு முழங்கும் அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே

நீடு வாழ்க! நெடுங்காலம் வாழ்க!

உலகெலாம் பரவுக தமிழ்நலம்!

உலகெலாம் ஒண்மையில் உவந்து வாழியவே!

ஞாலம் நின்வழி ஒழுக!

எங்கு யோகத்திற்கு ஈசுவரரான ஸ்ரீகிருஷ்ண பகவான் இருக்கிறாரோ,

எங்கு வில்லேந்திய அர்ஜுனன் இருக்கிறானோ

அங்கு மங்களமும் வெற்றியும் பெருமையும் நிச்சயமான நீதியும் என்பது முடிவு.

ருக்மிணீ - ஸத்யபாமாப்யாம் ஸஹிதம் க்ருஷ்ணமாச்ரயே!!

விக்ரமயூர்ஜிதசாஸனம்

ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் போற்றி!

ஆச்சார்யார்களின் அருந்தொண்டுகள் போற்றி!

குருபரம்பரை போற்றி!

வைணவப் பெரியோர்கள் போற்றி!

அடியார்கள் போற்றி!

அரங்கநகர் போற்றி!

ஆண்டாள் அம்மா போற்றி!

ஆழிசூழ் உலகு போற்றி!

அண்டரண்ட பகிரண்டங்கள் போற்றி!

உய்யவந்த விண்ணகரப்பெருமாளே போற்றி!